for ever freed from rebirth on earth. 11

5. திருப் பூந்தராய்

ஈரடிமேல் வைப்பு: **காந்தாரபஞ்சமம்**

45. தக்கன் வேள்வி தகர்த்தவன், பூந்தராய்
மிக்க செம்மை விமலன், வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க, மெய்க்கதி--
நன்று அது ஆகிய நம்பன் தானே.

5. TIRUPPŪNTHARĀI

EERAṬIMĒL VAIPPU: **Ghandārapanjamam**

Of Yore, He devastated the *yagna* of Daksha; He who is
the *Vimalan* par excellence abides in Pūntharāi.
If we install His extensive and ankleted feet
in our *chinta*, Siva, the supremely desirable,
will bestow on us the true beatitude. 1

46. புள் இனம் புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளம் தாங்கு விகிர்தன் அடி தொழ,
ஞாலத்தில் உயர்வார், உள்கும் நன்நெறி--
மூலம்ஆய முதலவன் தானே.

He who abides at Pūntharāi extolled by birds,
is the Vikirtan who bears the Ganga on His crest.
If his feet are adored, people will grow lofty; Siva is
the Primal Ens who confers the goodly way. 2

47. வேந்தராய் உலகு ஆள விருப்புஉறின்,
பூந்தராய்நகர் மேயவன் பொன்கழல்
நீதியால் நினைந்து ஏத்தி உள்கிட,
சாதியா, வினைஆன தானே.

If you desire to become the rulers of earth, adore
His auric and ankleted feet; He is entempled
in the urbs of Pūntharāi.
Poised in *niti*, if you meditate Him,
your *karma* will become functus officio. 3

48. பூசுரர் தொழுது ஏத்திய பூந்தராய்
ஈசன் சேவடி ஏத்தி இறைஞ்சிட,
சிந்தை நோய் அவை தீர நல்கிடும்--
இந்து வார்சடை எம் இறையே.

He is the God of Pūntharāi adored by the earthly
Devas; if His divine feet are hailed and adored
He'll annul your mental affliction.
He is our God who sports the crescent on His
matted crest of long hair. 4

49. பொலிந்த என்பு அணி மேனியன்--பூந்தராய்
மலிந்த புந்தியர்ஆகி வணங்கிட,
நும்தம் மேல்வினை ஓட, வீடுசெய்
எந்தைஆய எம் ஈசன்தானே.

His splendorous body is decked with bones; He is
entempled in Pūntharāi; if you adore Him
with all your heart, He our Sire, and God, will
annul your accumulated *karma* altogether.
He will eke bless you with *mukti*. 5

50. பூதம் சூழப் பொலிந்தவன், பூந்தராய்
நாதன், சேவடி நாளும் நவின்றிட,
நல்கும், நாள்தொறும் இன்பம்--நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞகனே.

Surrounded by His *Bhuta*-Hosts, He stands resplendent;
He is the God of Pūntharāi.
If we daily extol His salvific feet, He'll confer joy on us.
He is, indeed, our Pinggnakan who sport on His
matted crest of long hair, the flood— the Ganga. 6

51. புற்றின் நாகம் அணிந்தவன், பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிட,
பாவம் ஆயின தீரப் பணித்திடும்--
சேஅது ஏறிய செல்வன்தானே.

He is adorned with the snake of the ant-hill;
He is the supreme God abiding at Pūntharāi.
If we hail Him in hymn and song and solemn strain,
He, the opulent Rider of the Bull, will cause all our sins to vanish. 7

52. போதகத்துஉரி போர்த்தவன், பூந்தராய்
காதலித்தான்--கழல் விரல் ஒன்றினால்,
அரக்கன் ஆற்றல் அழித்து, அவனுக்கு அருள்
பெருக்கி நின்ற எம் பிஞ்ஞகனே.

He is our Pinggnakan who is mantled in the skin
of a tusker; He willingly abides in Pūntharāi.

Of yore, He crushed with a toe of His ankleted foot
and did away with the puissance of the Asura
and when he rued, He restored it to him. 8

53. மத்தம்ஆன இருவர் மருவு ஒணா
அத்தன் ஆனவன் மேவிய பூந்தராய்,
ஆள் அது ஆக, அடைந்து உய்ம்மின்! நும் வினை
மாளும்ஆறு அருள்செய்யும், தானே.

The Two who were maddened by power, were disabled
to comprehend Him; He is our Sire who is entempled in Pūntharāi.
As His servitors, gain Him and stand redeemed.
He will bless you to quell altogether your *karma*. 9

54. பொருத்தம் இல் சமண்சாக்கியர் பொய் கடிந்து,
இருத்தல்செய்த பிரான்--இமையோர் தொழ,
பூந்தராய்நகர் கோயில்கொண்டு, கை
ஏந்தும் மான்மறி எம் இறையே.

He, our God, undid the falsehoods of the unVedic
Samanas and the Buddhists.
Our God who holds a fawn in His hand, is
entempled in Pūntharāi adored by the Devas. 10

55. புந்தியால் மிக நல்லவர் பூந்தராய்
அந்தம் இல் எம் அடிகளை, ஞானசம்-
பந்தன் மாலைகொண்டு ஏத்தி வாழும்! நும்
பந்தம் ஆர் வினை பாறிடுமே.

On our everlasting God of Pūntharāi where dwell
the pure-hearted, Gnanasambandhan has
composed this garland of hymns.
If you hail Him with this, your *karma*'ll perish. 11

6. திருக் கொள்ளம்பூதூர்

ஈரடிமேல் வைப்பு: காந்தாரபஞ்சமம்

56. கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்
நட்டம்ஆடிய நம்பனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும்ஆறு அருள் நம்பனே!

6.TIRUKKOḶḶAMPŪTHŪR

EERAṬIMĒL VAIPPU: Ghandāra Panjamam

The supremely desirable One doth dance in His
temple at the fragrant Koḷḷampūthūr.
As we meditate Him, let this boat move by itself;
may He bless us to adore Him with all our *chinta*. 1

57. கோட்டகக் கழனிக் கொள்ளம்பூதூர்-
நாட்டுஅகத்து உறை நம்பனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும்ஆறு அருள் நம்பனே!

The supremely desirable One abides at Koḷḷampūthūr
abounding in water-spreads and fields.
As we meditate Him, let this boat move by itself;
may He bless us to adore Him with all our *chinta*. 2

58. குலையின் ஆர் தெங்கு சூழ் கொள்ளம்பூதூர்
விலையில் ஆட்கொண்ட விகிர்தனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

The supremely desirable One abides at Koḷḷampūthūr
girt with conconut trees laden with bunches.
He, the *Vikirtan*, has enslaved me, paying the price therefor.
As we meditate on Him, let this boat move by itself.
May He bless us to adore Him with all our heart. 3

59. குவளை கண்மலரும் கொள்ளம்பூதூர்த்
தவள நீறு அணி தலைவனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

Lilies teem on all sides in the pools of Koḷḷampūthūr
where our God is entempled.
As we meditate on Him, the Chief God, let this
boat move by itself.
May He bless us to adore Him with all our heart. 4

60. கொன்றை பொன் சொரியும் கொள்ளம்பூதூர்
நின்ற புன்சடை நிமலனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

As we meditate on the Nimalan whose
matted hair is ruddy and who is entempled in
Koḷḷampūthūr where kondrai-s shower golden pollen,
let this boat move by itself.
May the supremely desirable One bless us
to adore Him with all our heart. 5

61. ஓடம் வந்து அணையும் கொள்ளம்பூதூர்
ஆடல் பேணிய அடிகளை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

As we contemplate the feet of the Dancer, the Noble
God, the boat will reach Koḷḷampūthūr;
so let it move all by itself.
May the supremely desirable One bless us
to adore Him with all our heart. 6

62. ஆறு வந்து அணையும் கொள்ளம்பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும்ஆறு அருள் நம்பனே!

As we meditate on the Rider of the Bull, we'll reach
Koḷḷampūthūr on the banks of the Muḷḷi river;
so, let the boat move all by itself.
May the supremely desirable One bless us
to adore Him with all our heart. 7

63. குரக்கு இனம் பயிலும் கொள்ளம்பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

As we meditate the Primal Ens who crushed, of yore,
the Asura and as He abides at Koḷḷampūthūr—
the habitat of the monkey clan,
let the boat move all by itself.
May the supremely desirable One, bless us
to adore Him with all our heart. 8

64. பரு வரால் உகளும் கொள்ளம்பூதூர்
இருவர் காண்பு அரியான் கழல் உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும் ஆறு அருள் நம்பனே!

We meditate on the ankleted feet of Him who stood
unbeknown unto the Two; He abides at Koḷḷampūthūr
where roll the adipose *varāl* fishes in its river.
Let this boat move all by itself.
May the supremely desirable One bless us
to adore Him with all our heart. 9

65. நீர் அகக் கழனிக் கொள்ளம்பூதூர்த்
தேர் அமண் செற்ற செல்வனை உள்க,
செல்ல உந்துக--சிந்தையார் தொழ,
நல்கும்ஆறு அருள் நம்பனே!

As we meditate on the opulent One who undid
the Buddhists and the Samanas, and who abides at
Koḻḻampūthūr, rich in well-watered fields,
let this boat move all by itself.
May the supremely desirable One bless us
to adore Him with all our heart. 10

66. கொன்றை சேர் சடையான் கொள்ளம்பூதூர்,
நன்று காழியுள் ஞானசம்பந்தன்
இன்று சொல் மாலைகொண்டு ஏத்த வல்லார், போய்,
என்றும் வானவரோடு இருப்பாரே.

Those that are valiant to hail our God with
the garland of hymns composed by Gnanasambandhan
of Kāzhi, on the God of Koḻḻampūthūr, whose
matted hair is adorned with *kondrai* flowers,
they will ever dwell companied with the supernals. 11

7. திருப் புகலி காந்தாரபஞ்சமம்

67. கண்நுதலானும், வெண்நீற்றினானும், கழல் ஆர்க்கவே
பண் இசை பாட நின்று ஆடினானும், பரஞ்சோதியும்--
புண்ணிய நால்மறையோர்கள் ஏத்தும் புகலி(ந்)நகர்,
பெண்ணின் நல்லாளொடும் வீற்றிருந்த பெருமான் அன்றே!

Is He not the God who sports an eye in His forehead,
the One whose frame is coated with the white ash,
the One that sings in *pann* and dances while
His anklets resonate, the One who is the Supernal
Flame, the One haild by the holy Brahmins,
well-versed in the quartet of Vedas, the One who
abides majestically in the urbs of Pukali
with His Consort—the Woman par excellence? 1

68. சாம்பலோடும் தழல் ஆடினானும், சடையின்மிசைப்
பாம்பினோடும் மதி சூடினானும், பசுஏறியும்--
பூம் படுகல்(ல்) இள வாளை பாயும் புகலி(ந்)நகர்,
காம்பு அன தோளியோடு(ம்) இருந்த கடவுள் அன்றே!

Is He not the One who is ash-bedaubed, the One
who wears on His ruddy matted hair the snake
and the moon, the One who rides the Bull, the One
entempled in the urbs of Pukali where the young
Vālai fish romp and roll in its waters,
the One concorporae with His Woman
whose arms are supple and soft like the bamboo? 2

69. கருப்பு நல் வார் சிலைக் காமன் வேவக் கடைக்கண்டானும்,
மருப்பு நல் ஆனையின் ஈர்உரி போர்த்த மணாளனும்--
பொருப்பு அன மா மணி மாடம் ஓங்கும் புகலி(ந்)நகர்,
விருப்பின் நல்லாளொடும் வீற்றிருந்த விமலன் அன்றே!

Is He not the One that stared to death Manmata—
the wielder of a sugarcane as his well-crafted bow—,
the One who peeled off the skin of the tusked tusker,
and wore it as a mantle, the One who is ever
a Bridegroom, the One that is Vimalan who
abides at Pukali dight with gemmy and hill-like mansions,
the One concorporate with His beloved Woman? 3

70. அங்கை இலங்கு அழல் ஏந்தினானும், அழகு ஆகவே
கங்கையைச் செஞ்சடை சூடினானும், கடலின்(ன்) இடைப்
பொங்கிய நஞ்சு அமுது உண்டவனும்--புகலி(ந்) நகர்
மங்கை நல்லாளொடும் வீற்றிருந்த மணவாளனே.

Is He not the One who holds in His beauteous palm
the fire, the One that wore splendorously on His
ruddy matted crest the Ganga, the One that, of yore,
quaffed the swelling oceanic venom as though
it were ambrosia, the One that is the Bridegroom
of the Woman par excellence, the One that abides
majestically with His Consort in the delubrum of Pukali? 4

71. சாமநல்வேதனும், தக்கன்தன் வேள்வி தகர்த்தானும்,
நாமம் நூறு-ஆயிரம் சொல்லி வானோர் தொழும் நாதனும்--
பூ மல்கு தண்பொழில் மன்னும் அம் தண் புகலி(ந்)நகர்,
கோமளமாதொடும் வீற்றிருந்த குழகன் அன்றே!

Is He not the One who chants the sweet Sāma Veda,
the One that devastated Daksha's *yagna*, the One

that is the Lord-God, hailed with a myriad names
by the Devas, the One that is ever young who
abides at the cool Pukali abounding in
many flowery gardens with His supremely comely Consort? 5

72. இரவுஇடை ஒள்எரி ஆடினானும், இமையோர் தொழச்
செருஇடை முப்புரம் தீ எரித்த சிவலோகனும்,
பொரு விடை ஒன்று உகந்து ஏறினானும்--புகலி(ந்)நகர்,
அரவுஇடை மாதொடும் வீற்றிருந்த அழகன் அன்றே!

Is He not the One dancing in fire during midnight?
Is He not the God of Sivaloka who entreated by the Devas,
burnt the triad of the skyey citadels? Is He not the Rider of the Bull?
Is He not the Handsome One who abides majestically
in the urbs of Pukali with His Consort of serpentine waist? 6

73. சேர்ப்பது திண் சிலை மேவினானும், திகழ் பாலன்மேல்
வேர்ப்பதுசெய்த வெங்கூற்று உதைத்தானும்--வேள்விப்புகை
போர்ப்பதுசெய்து அணி மாடம் ஓங்கும் புகலி(ந்)நகர்,
பார்ப்பதியோடு உடன் வீற்றிருந்த பரமன் அன்றே!

Is He not the One willingly abiding in the mighty
Mount Kailas? Did He not kick the cruel
and wrathful Yama to death when he strode
forth to snatch the life of the lad Markandeya?
Is He not the supreme God who abides majestically
with Pārvati in the urbs of Pukali whose
beautiful mansions are mantled in the smoke
rising from the sacrificial pits? 7

74. கல்-நெடுமால்வரைக்கீழ் அரக்கன்(ன்) இடர் கண்டானும்,
வில்-நெடும் போர் விறல் வேடன் ஆகி விசயற்கு ஒரு
பொன் நெடுங்கோல் கொடுத்தானும்--தண் புகலி(ந்)நகர்,
அன்னம் அன்ன(ந்) நடை மங்கையொடும் அமர்ந்தான் அன்றே!

Is He not the One who under the lofty Mount Kailās,
crushed Ravana causing Him to wail in distress?
Is He not the One who in the martial cynegetic form
fight with Arjuna and eventually gifted
to him the auric Pāsupata weapon?
He, indeed, is the God Siva, who concorporate with
His Consort whose gait is like the pen's,
abides majestically in the urbs of Pukali! 8

75. பொன்நிற நான்முகன், பச்சையான், என்று இவர் புக்குழித்
தன்னை இன்னான் எனக் காண்பு அரிய தழல்சோதியும்--
புன்னை பொன்தாது உதிர் மல்கும் அம் தண் புகலி(ந்)நகர்,
மின்இடை மாதொடும் வீற்றிருந்த விமலன் அன்றே!

Is He not the One who soared up and up as the immense flame,
imperceivable by Brahma, the golden-hued and the emeraldine Vishnu
who went in quest of Him, in vain?
Lo, He is, indeed, the Vimalan, who concorporate with
His fulgurant-waisted Consort, abides majestically
in the cool urbs of the beautiful Pukali
where *Punnai* trees shed their auric pollen aplenty? 9

76. பிண்டியும் போதியும் பேணுவார் பேணைப் பேணாதது ஓர்,
தொண்டரும் காதல்செய், சோதிஆய சுடர்ச்சோதியான்--
புண்டரீ கம்மலர்ப் பொய்கை சூழ்ந்த புகலி(ந்)நகர்,
வண்டு அமர் கோதையொடும்(ம்) இருந்த மணவாளனே.

He is the God who, in love, is adored by His servitors who ignore
the words of those who foster the Asoka and the Peepul trees.
He, indeed, is the radiant flame par excellence.
He is the Bridegroom of Her whose coiffure is decked
with flowers bebuzzed by bees.
With Her, He is entempled in the urbs of Pukali
in whose *poikai-s* team lotus flowers. 10

77. பூங் கமழ் கோதையொடும்(ம்) இருந்தான், புகலி(ந்)நகர்ப்
பாங்கனை, ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் பத்துஇவை,
ஆங்கு அமர்வு எய்திய ஆதி ஆக, இசை வல்லவர்,
ஓங்கு அமராவதியோர் தொழச் செல்வதும் உண்மையே.

On Him the God who abides in the urbs of Pukali
with His Consort whose coiffure is suffused
with the fragrance of flowers, Gnanasambandhan
has sung these Tamil hymns.
They that are valiant to hail and sing tunefully
these psalms, will, adored by the Devas, gain Sivaloka.
This is true and admits of no doubt. 11

8. திருக் கடவூர் வீரட்டம்:

காந்தாரபஞ்சமம்

78. சடை உடையானும், நெய் ஆடலானும், சரி கோவண-
உடை உடையானும், மை ஆர்ந்த ஒண்கண் உமை கேள்வனும்,
கடை உடை நன்நெடு மாடம் ஓங்கும் கடவூர் தனுள்
விடை உடை அண்ணலும்--வீரட்டானத்து அரன் அல்லனே?

8.TIRUKKAṬAVŪR VEERAṬṬAM:

Ghāndārapanjamam

Is He not the One of matted hair, the One who
bathes in ghee, the One who wears the sliding
loin-cloth, the One who is the Consort of Uma whose
eyes are touched with khol, the One who is the Rider of the Bull,
the One who is Hara entempled in Kaṭavūr Veeraṭṭānam
dight with goodly and lofty vestibuled mansions? 1

79. எரிதரு வார்சடையானும்; வெள்ளை எருது ஏறியும்;
புரிதரு மா மலர்க்கொன்றைமாலை புனைந்து, ஏத்தவே,
கரிதரு காலனைச் சாடினானும்--கடவூர் தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டானத்து அரன் அல்லனே?

Is He not the One of long matted hair, the One who is the Rider
of the white Bull, the One that kicked the dark-hued Yama
to death who strode forth to snatch the life of Markandeya
that adored Him with garlands woven of *Konrai-s*
and the One who abides in the delubrum
of the hoary Kaṭavūr Veeraṭṭanam of accescent glory? 2

80. நாதனும், நள்இருள் ஆடினானும், நளிர்போதின்கண்
பாதனும், பாய் புலித்தோலினானும், பசுஏறியும்,
காதலர் தண் கடவூரினானும், கலந்து ஏத்தவே
வேதம் அது ஓதியும்--வீரட்டானத்து அரன் அல்லனே?

Is He not the Chief God who dances during midnight,
the One whose feet are installed in the bosoms of His
devotees, the One who is clad in a tiger-skin, the Rider
of the Bull, the One who is Hara that abides in the cool
Kaṭavūr Veeraṭṭanam where live loving devotees
and the One who is the Author of the Vedas? 3

81. மழு அமர் செல்வனும்; மாசு இலாத பலபூதம் முன்
முழவு, ஒலி யாழ், குழல், மொந்தை கொட்ட, முதுகாட்டுஇடைக்
கழல் வளர் கால் குஞ்சித்து ஆடினானும்--கடவூர்தனுள்
விழவு ஒலி மல்கிய வீரட்டானத்து அரன் அல்லனே?
Is He not the Opulent One who wields the *mazhu*,
the One who gracefully bends His feet fastened with
resonant anklets in the crematory and dances while
His unflawed *Bhutas* play on drums when the yāzh
and the flute are played to the beat of *montai*
and the One who is Hara that is entempled in Kaṭavur
Veeraṭṭāṉam filled with the sounds of fetes and festivities? 4

82. சுடர் மணிச் சுண்ணவெண் நீற்றினானும், கழல்வுஆயது ஓர்
படம் மணி நாகம் அரைக்கு அசைத்த பரமேட்டியும்,
கடம் அணி மா உரித்-தோலினானும், கடவூர் தனுள்
விடம் அணி கண்டனும்--வீரட்டானத்து அரன் அல்லனே?

Is He not the One adorned with *rudrāksha,* like
unto a bright gem, the One coated with the fragrant
ash, the One who is the Supreme Ens who is cinctured
with a hooded cobra, the One who peeled off
the skin of the musty tusker, the One whose throat
holds the venom and the One who is Hara that
abides in the delubrum of Kaṭavūr Veeraṭṭanam? 5

83. பண் பொலி நால்மறை பாடி ஆடி, பலஊர்கள் போய்,
உண் பலி கொண்டு உழல்வானும்; வானின்(ன்) ஒளி மல்கிய,
கண் பொலி நெற்றி, வெண்திங்களானும்; கடவூர்தனுள்
வெண்பொடிப்பூசியும்--வீரட்டானத்து அரன் அல்லனே?

Is He not the One who sings in *pann* the four Vedas, the One
who dances and roams about in many a polis begging
alms, the One whose forehead sports an eye,
the One who wears on His crest the white, skyey moon,
the One who is coated with the white ash and the One
who is Hara that is entempled in Kaṭavūr Veeraṭṭanam? 6

84. செவ் அழல் ஆய், நிலன் ஆகி, நின்ற சிவமூர்த்தியும்;
முவ் அழல், நால்மறை, ஐந்தும், ஆய முனிகேள்வனும்;
கவ்வு அழல் வாய்க் கதநாகம் ஆர்த்தான்--கடவூர்தனுள்
வெவ் அழல் ஏந்து கை வீரட்டானத்து அரன் அல்லனே?

Is He not the One of fire-red hue, the One who is
Sivamūrti on earth, the One who is the triple fire,
the Author of the four Vedas, the One whose name is the mystic
pentad of letters—the kin of seers,
The One who is adorned with the wrathful snake
that spits venom like unto the spreading fire, the One who holds in
His palm the raging fire and the One who is Hara
that is entempled in Kaṭavūr Veeraṭṭanam? 7

85. அடிஇரண்டு, ஓர்உடம்பு, ஐஞ்ஞான்கு-இருபதுதோள், தச-
முடி உடை வேந்தனை மூர்க்கு அழித்த முதல்மூர்த்தியும்;
கடி கமழும் பொழில் சூழும் அம் தண் கடவூர்தனுள்
வெடிதலை ஏந்தியும்--வீரட்டானத்து அரன் அல்லனே?

He, the Primal Ens quelled the obstinate obduracy
of the crowned monarch Ravana whose single body was
endowed with two feet, twenty arms and ten heads.
Hara holds the stinking skull of Brahma.
He abides at Kaṭavūr Veeraṭṭānam which is
cool and beautiful and is also girt with fragrant gardens. 8

86. வரை குடையா மழை தாங்கினானும், வளர் போதின்கண்
புரை கடிந்து ஓங்கிய நான்முகத்தான், புரிந்து ஏத்தவே,
கரை கடல் சூழ் வையம் காக்கின்றானும்--கடவூர்தனுள்
விரை கமழ் பூம்பொழில் வீரட்டானத்து அரன் அல்லனே?

Vishnu lifted up the mountain, used it as an
umbrella and saved the people and the cattle,

from the onslaught of a heavy downpour.
Brahma is seated on the blemishless Lotus.
These realised that Siva alone is the Primal Ens
and adored Him. Indeed Siva is the protector of orbis terrarum.
Lo, He is entempled in Kaṭavūr Veeraṭṭānam
which is girt with fragrant and flowery gardens. 9

87. தேரரும், மாசு கொள் மேனியாரும், தெளியாதது ஓர்
ஆர் அருஞ்சொல்பொருள் ஆகி நின்ற எமது ஆதியான்;
கார் இளங் கொன்றை வெண் திங்களானும்--கடவூர்தனுள்
வீரமும் சேர் கழல் வீரட்டானத்து அரன் அல்லனே?

Our Primal God constitutes the words and their import which are
unintelligible to the Buddhists and the Samanas who are dirty.
Siva wears the fresh flowers of Kondrai which blossom
during the rainy season. The moon adorns His crest.
He wears the heroic anklet. He is the God of Kaṭavūr Veeraṭṭānam. 10

88. வெந்தவெண் நீறு அணி வீரட்டானத்து உறை வேந்தனை,
அந்தணர் தம் கடவூர் உளானை, அணி காழியான்
சந்தம்எல்லாம் அடிச் சாத்த வல்ல மறை ஞானசம்-
பந்தன செந்தமிழ் பாடி ஆட, கெடும், பாவமே.

On the God of Kaṭavūr Veeraṭṭānam who is adorned with the baked
white ash and who is entempled in Kaṭavūr Veeraṭṭānam—
the habitat of Brahmins, the one of ornate Kāzhi
namely Gnanasambandhan, well-versed in the Vedas, has sung
these Tamil hymns compact of *chhandas*.

The sins of those devotees who hail with thes psalms the divine feet
of Siva in love, sing and dance in bhakti, will perish. 11

9. திரு வீழிமிழலை: காந்தாரபஞ்சமம்

89. கேள்வியர், நாள்தொறும் ஓது நல்வேதத்தர்--கேடு இலா
வேள்வி செய் அந்தணர் வேதியர்--வீழிமிழலையார்,
வாழியர்; தோற்றமும் கேடும் வைப்பார், உயிர்கட்கு எலாம்;
ஆழியர்; தம் அடி "போற்றி!" என்பார்கட்கு அணியரே.

9.TIRUVEEZHIMIZHALAI: Ghāndārapanjamam

Siva is entempled in Tiruveezhimizhalai where
dwell goodly Brahmins who are adepts in learning
and who recite the mantras and perform flawlessly
Yagnas in conformity with the Vedic regulations.
These hail Siva—the Vedic God—, who confers on entia
birth and death commensurate with their karma.
He gifted the Disc to Vishnu. He is close to His
bhaktas who hail and adore His feet. 1

90. கல்லின் நன்பாவை ஓர் பாகத்தார், காதலித்து ஏத்திய
மெல் இனத்தார் பக்கல் மேவினர்--வீழிமிழலையார்;
நல் இனத்தார் செய்த வேள்வி செகுத்து, எழு ஞாயிற்றின்
பல் அனைத்தும் தகர்த்தார், அடியார் பாவநாசரே.

Siva is concorporae with the Daughter of Himavant;
He is close to the soft-natured who hail and adore Him willingly.

He is entempled in Veezhimizhalai; He devastated the *yagna* of Daksha
and the participants thereof who were pretenders; He knocked
off the teeth of Surya—a participant. Lo, He is a queller of sins. 2

91. "நஞ்சினை உண்டு இருள் கண்டர், பண்டு அந்தகனைச் செற்ற
வெஞ்சின மூஇலைச்சூலத்தர்--வீழிமிழலையார்;
அஞ்சனக் கண் உமை பங்கினர், கங்கை அங்கு ஆடிய
மஞ்சனச் செஞ்சடையார்" என, வல்வினை மாயுமே.

He darkened His throat by quaffing the venom; of yore,
He, the wielder of the Trident, killed the cruel
and irate Antaka; He abides at Veezhimizhalai.
He is concorporate with Her whose eyes are touched with khol;
ruddy is His matted hair washed by Ganga.
If He is hailed thus, cruel Karma will perish. 3

92. கலை, இலங்கும் மழு, கட்டங்கம், கண்டிகை, குண்டலம்,--
விலை இலங்கும் மணி மாடத்தர் வீழிமிழலையார்--
தலை இலங்கும் பிறை; தாழ்வடம், சூலம், தமருகம்,
அலை இலங்கும் புனல், ஏற்றவர்க்கும்(ம்) அடியார்க்குமே.

He is adorned with an antlered deer, a *mazhu*, a *kattangkam*,
a garland of *rudrāksha* and dangling spherical ear-rings. He abides
at Veezhimizhalai dight with storeyed mansions inlaid with gems.
His crest is decked with the crescent; He holds a spear and a *damaruka*.
He received the wave-tossed Ganga on His matted crest.
It is thus, even thus, He is adored by His devotees. 4

93. பிறை உறு செஞ்சடையார், விடையார்--பிச்சை நச்சியே
வெறி உறு நாள்பலி தேர்ந்து உழல் வீழிமிழலையார்;
முறைமுறையால் இசை பாடுவார், ஆடி, முன்; தொண்டர்கள்-
இறை; உறை வாஞ்சியம் அல்லது, எப்போதும் என் உள்ளமே.

He wears the crescent on His ruddy matted crest;
His Mount is the Bull; He roams about begging alms
willingly; He is entempled in Veezhimizhalai.
His servitors sing in appropriate *panns* and dance;
it is thus they hail Him who is ensouled by them.
My heart will seek none save He. 5

94. வசை அறு மா தவம் கண்டு, வரிசிலை வேடனாய்,
விசையனுக்கு அன்று அருள்செய்தவர்--வீழிமிழலையார்;
இசை வரவிட்டு, இயல் கேட்பித்து, கல்லவடம் இட்டு,
திசை தொழுது ஆடியும் பாடுவார் சிந்தையுள் சேர்வரே.

Of yore, He, the God of Veezhimizhalai, moved by the flawless
tapas of Arjuna manifested before him in the guise of
a hunter wielding a well-crafted bow and graced him.
He abides in the *chinta* of those, who facing His direction, hail Him
aloud in musical hymns of Tamil̲ according with the beat
of kallavatam and dance, witnessed by His servitors. 6

95. சேடர் விண்ணோர்கட்கு, தேவர், நல் மூஇருதொல்-நூலர்,
வீடர், முத்தீயர், நால்வேதத்தர்--வீழிமிழலையார்;
காடு அரங்கா, உமை காண, அண்டத்து இமையோர் தொழ,
நாடகம்ஆடியை ஏத்த வல்லார் வினை நாசமே.

The God of Veezhimizhalai stands distanced from the Devas; He is close
to the goodly Brahmins who are well versed in the six Angas and
who foster the triple fire. He is the bestower of *moksha* to them.
His forum is the crematory where He enacts His
divine dance to the delight of Uma; here the Devas
of all the planets arrive and adore Him.
The karma of those that adore such Siva, will perish. 7

96. எடுத்த வல் மாமலைக்கீழ் இராவணன் வீழ்தர,
விடுத்து அருள்செய்து, இசை கேட்டவர்--வீழிமிழலையார்;
படுத்து வெங்காலனை, பால் வழிபாடுசெய் பாலற்குக்
கொடுத்தனர்,--இன்பம்,--கொடுப்பர், தொழ; குறைவு இல்லையே.

He caused Ravana to get crushed under the great
Kailās which he durst uproot; then when he sang
the Sāma Veda, He relented and blessed him.
Of yore, He kicked Yama to death and blessed the lad Mārkandeya
who bathed Him in milk, with eternal bliss.
He is entempled in Veezhimizhalai.
The blemishes of His adorers'll altogether perish. 8

97. திக்கு அமர் நான்முகன், மால், அண்டம் மண்தலம் தேடிட,
மிக்கு அமர் தீத்திரள் ஆயவர்--வீழிமிழலையார்;
சொக்கம்அது ஆடியும், பாடியும், பாரிடம் சூழ்தரும்
நக்கர் தம் நாமம் நமச்சிவாய என்பார் நல்லரே.

Brahma whose visages face the four directions and Vishnu, in vain,
went in quest of Him who grew into a humongous column of fire.

He abides at Veezhimizhalai. He is the nude God
who sings and dances ecstatically, entirely
encircled by His *Bhuta*-Host. They are
the blessed ones who hail Him with His name NAMASIVAYA. 9

98. துற்று அரை ஆர் துவர் ஆடையர், துப்புரவு ஒன்று இலா
வெற்று அரையார், அறியா நெறி வீழிமிழலையார்--
சொல்-தெரியாப் பொருள், சோதிக்கு அப்பால் நின்ற சோதிதான்--
மற்று அறியா அடியார்கள்தம் சிந்தையுள் மன்னுமே.

He is poised beyond the ken imperceived by the Buddhists
of ochre robe and the nude and dirty Samaṇas.
He is the splendorous God who is the very Light of Grace
and who is beyond the word and its import.
He is of Veezhimizhalai; He is enthroned
in the *chinta* of devotees who know not aught but Him. 10

99. வேதியர் கைதொழு வீழிமிழலை விரும்பிய
ஆதியை, வாழ் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் ஆய்ந்து,
ஓதிய ஒண்தமிழ் பத்துஇவை உற்று உரைசெய்பவர்,
மாது இயல் பங்கன் மலர்அடி சேரவும் வல்லரே.

On the Primal Ens who willingly abides at Veezhimizhalai,
adored by those who are well versed in the Vedas,
Gnanasambandhan of Kāzhi dight with flourishing
gardens, has composed, after due deliberation,
these lustrous Tami̱l hymns, numbering ten.

They that recite these and hail Him will gain
the flower-feet of Him who is concorporate with His Woman. 11

10. திரு இராமேச்சுரம்: காந்தாரபஞ்சமம்

100. அலை, வளர் தண்மதியோடு அயலே அடக்கி, உமை
முலை வளர் பாகம் முயங்க வல்ல முதல்வன்; முனி;
இலை வளர் தாழைகள் விம்மு கானல் இராமேச்சுரம்,
தலை வளர் கோல நல் மாலையன் தான் இருந்து ஆட்சியே.

10. TIRUVIRĀMĒCCHURAM: Ghāndārapanjamam

He keeps under control the wave-tossed Ganga
and the cool crescent on His matted crest;
He, the Primal God, is concorporate with Uma of buxom breasts.
At Irāmēcchuram where flourish fragrant-screw pines
with long spathes in the littoral gardens, Siva,
decked with a goodly garland of skulls, reigns in grace. 1

101. தேவியை வவ்விய தென்இலங்கைத் தசமாமுகன்
பூ இயலும் முடி பொன்றுவித்த பழி போய் அற,
ஏ இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தையினார்கள் தம்மேல் வினை வீடுமே.

Rama did away with Ravana of ten flower-decked
heads, as he abducted Sita.

To expiate the sin of killing him, Rama—the wielder
of the bow and its quiver—, built the shrine of Siva
since yclept Irāmēcchuram.
The afflicting karma, of those that meditate on Him, will cease. 2

102. மான் அன நோக்கி வைதேவிதன்னை ஒரு மாயையால்
கான் அதில் வவ்விய கார்அரக்கன் உயிர் செற்றவன்,
ஏனம் இலாப் புகழ் அண்ணல், செய்த இராமேச்சுரம்
ஞானமும் நன்பொருள் ஆகி நின்றது ஒரு நன்மையே.

The noble Rama of flawless fame did away with
the dark-hued Ravaṇa who by gramarye,
abducted the antelope-eyed Sita.
It is Rama that built the temple for Siva
at Irāmēcchuram and adored Him. This shrine
confers wisdom and welfare on its worshippers. 3

103. உரை உணராதவன், காமம் என்னும்(ம்) உறு வேட்கையான்,
வரை பொரு தோள் இறச் செற்ற வில்லி மகிழ்ந்து ஏத்திய--
விரை மருவும் கடல்ஓதம் மல்கும்--இராமேச்சுரத்து
அரை அரவு ஆட நின்று, ஆடல் பேணும் அம்மான் அல்லனே!

Ignoring the curses of seers, Ravana whose shoulders were hill-like,
borne by lust, abducted Sita. Rama skilled in archery, killed him
and raised in joy a shrine for Siva at Irāmēcchuram near the sea
where prevails the scent of sea, and adored Him.
Lo, Siva indeed is the God who is cinctured
with a serpent in His waist. 4

104. ஊறு உடை வெண்தலை கையில் ஏந்தி, பலஊர்தொறும்,
வீறு உடை மங்கையர் ஐயம் பெய்ய, விறல் ஆர்ந்தது ஓர்
ஏறு உடை வெல் கொடி எந்தை மேய இராமேச்சுரம்
பேறு உடையான் பெயர் ஏத்தும் மாந்தர் பிணி பேருமே.

Holding a skull of Brahma's, He roams about from
place to place and receives alms from comely damsels.
His flag sports the signum of the martial Bull.
He, our Sire, is entempled in Irāmēcchuram.
The maladies of men and women will vanish
altogether who hail His beatitudinous name. 5

105. அணை அலை சூழ் கடல் அன்று அடைத்து வழி செய்தவன்,
பணை இலங்கும் முடிபத்து இறுத்த, பழி போக்கிய--
இணை இலி என்றும் இருந்த கோயில்--இராமேச்சுரம்,
துணை இலி தூ மலர்ப்பாதம் ஏத்த, துயர் நீங்குமே.

Of yore, Rama who built a cause-way over the billowy
sea, cut away the ten mighty heads of Ravana.
Our peerless God abiding at the ever-during Irāmēcchuram
annulled the sin of Rama. Misery will quit them
who hail the non-pareil, pure and flower-soft feet of Siva. 6

106. சனி, புதன், ஞாயிறு, வெள்ளி, திங்கள், பலதீயன,
முனிவது செய்து உகந்தானை வென்று, அவ் வினை முடிட,
"இனி அருள் நல்கிடு!" என்று அண்ணல் செய்த இராமேச்சுரம்,
பனிமதி சூடி நின்று ஆட வல்ல பரமேட்டியே!

Ravana incarcerated Sani, Buda, Surya, Veḷḷi, Chandra
and the other planets, convinced that these nine rulers
were trouble-makers, and rejoiced.
To expiate the sin of killing Ravana and to gain grace,
the great one Rama adored Siva at Irāmēcchuram.
Indeed Siva is the true God who is decked with the moist moon
and is valiant to dance. Lo, He is the Supreme God. 7

107. பெருவரை அன்று எடுத்து ஏந்தினான் தன் பெயர் சாய் கெட,
அரு வரையால் அடர்த்து, அன்று நல்கி, அயன் மால் எனும்
இருவரும் நாடி நின்று ஏத்து கோயில் இராமேச்சுரத்து
ஒருவனுமே பலஆகி நின்றது ஒரு வண்ணமே!

Of yore, He crushed Ravana under His great Mount when
he durst uproot it and denuded him of his glory;
yet when he rued, He did bless Him. When Brahma
and Vishnu realised His supremacy, they sincerely hailed Him.
Lo, He is entempled in Irāmēcchuram.
It is only He who indwells all splendorously. 8

108. The original verse is not traceable. 9

109. சாக்கியர், வன் சமண்கையர்,--மெய்யில்-தடுமாற்றத்தார்--
வாக்கு இயலும்(ம்) உரை பற்று விட்டு, மதி ஒண்மையால்,
ஏக்கு இயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
ஆக்கிய செல்வனை ஏத்தி வாழ்மின்(ன்), அருள் ஆகவே!

Rama, the wielder of sharp and lustrous arrows,
ignored the falsehoods of the Buddhists and the Samanas;
eke did he ignore the words causing befuddlement;
he but hailed Siva entempled in Irāmēcchuram.
May you hail Siva, the opulent and come by wisdom.
By His grace, you will gain weal as well as welfare. 10

110. பகலவன் மீது இயங்காமைக் காத்த பதியோன்தனை
இகல் அழிவித்தவன் ஏத்து கோயில் இராமேச்சுரம்,
புகலியுள் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ், புந்தியால்,
அகலிடம் எங்கும் நின்று, ஏத்த வல்லார்க்கு இல்லை, அல்லலே.

Rama destroyed in the war Ravana, the monarch
of Lanka who forbade the entry of the sun in his realm.
It is Rama who built the shrine at Irāmēcchuram
and adored Siva in intense bhakti.
Troubles will not afflict them that hail, wherever they be,
Siva, with all their will, the hymns of Tamil
composed by Gnānasambandhan of Pukali. 11

11. திருப் புனவாயில் : காந்தாரபஞ்சமம்

111. மின் இயல் செஞ்சடை வெண்பிறையன், விரி நூலினன்,
பன்னிய நால்மறை பாடி ஆடி, பலஊர்கள் போய்,
அன்னம் அன்ன(ந்) நடையாளொடும்(ம்) அமரும்(ம்) இடம்--
புன்னை நல்மாமலர் பொன் உதிர்க்கும் புனவாயிலே.

His ruddy crest is fulgurant; He is adorned with a white crescent;
He is adorned with the sacred thread on His broad chest.
Chanting musically the four Vedas and dancing He visits many a polis.
He is concorporate with Uma whose gait is like the pen's.
Lo, He is enshrined in Puṉavāyil where the great
Punnai flowers shed auric pollen aplenty. 1

112. விண்டவர்தம் புரம்மூன்று எரித்து, விடை ஏறிப் போய்,
வண்டு அமரும் குழல் மங்கையொடும் மகிழ்ந்தான் இடம்--
கண்டலும் ஞாழலும் நின்று, பெருங்கடல் கானல்வாய்ப்
புண்டரீகம்மலர்ப் பொய்கை சூழ்ந்த புனவாயிலே.

Of yore, He gutted with fire the triad of the walled- citadels;
He is a Rider of the Bull. Sharing His body
with His Woman whose tresses are bebuzzed by bees,
He, in joy, abides at Puṉavāyil where fragrant screw-pine
and *gnazhal* thrive in the great foreshore gardens
girt with many *poikais* where burgeon lotus-flowers. 2

113. விடை உடை வெல் கொடி ஏந்தினானும், விறல் பாரிடம்
புடை பட ஆடிய வேடத்தானும், புனவாயிலில்
தொடை நவில் கொன்றை அம்தாரினானும், சுடர் வெண்மழுப்-
படை வலன் ஏந்திய, பால்நெய்ஆடும், பரமன் அன்றே!

His flag sports the signum of His triumphant Bull;
He enacts His dance encircled by His Bhuta-Hosts.

He is entempled in Puṉavāyil; He wears a garland
of *kondrais*; in His right hand He holds a *mazhu*;
He has His ablutious in milk and ghee. He is God
Siva who dispenses grace to His servitors. 3

114. சங்கவெண்தோடு அணி காதினானும், சடை தாழவே
அங்கை இலங்கு அழல் ஏந்தினானும்(ம்), அழகு ஆகவே
பொங்கு அரவம்(ம்) அணி மார்பினானும்--புனவாயிலில்,
பைங்கண் வெள்ஏற்று அண்ணல் ஆகி நின்ற பரமேட்டியே.

He wears in His ear a *todu* wrought of white shell;
His rudly matted hair adangle, He holds in His
beauteous palm the fire; He wears beauteously
in, His chest as a jewel, the raging and dancing snake;
He, the Rider of the fresh-eyed Bull, is the Noble One who,
indeed, is the supreme God who is entempled in Puṉavāyil. 4

115. கலி படு தண்கடல் நஞ்சம் உண்ட கறைக்கண்டனும்,
புலி அதள் பாம்பு அரைச் சுற்றினானும்--புனவாயிலில்,
ஒலிதரு தண்புனலோடு, எருக்கும், மதமத்தமும்,
மெலி தரு வெண்பிறை, சூடி நின்ற விடைஊர்தியே.

His throat is dark as He quaffed the venom that uprose
from the cool sea; His waist is cinctured with
a tiger-skin; He sports on His matted crest the roaring
Ganga, the flowers of *erukku* and *ūmattham*
and the waning crescent; His mount is the Bull.
It is thus, even thus, He is entempled in Puṉavāyil. 5

116. வார் உறு மென்முலை மங்கை பாட நடம்ஆடிப் போய்,
கார் உறு கொன்றை வெண்திங்களானும், கனல் வாயது ஓர்
போர் உறு வெண்மழு ஏந்தினானும்--புனவாயிலில்,
சீர் உறு செல்வம் மல்க(வ்) இருந்த சிவலோகனே.

He dances to the singing of Uma whose delicate breasts are covered by
a breast-band; He wears on His crest the *kondrais* that burgeon
during the rainy season and the white crescent.
He holds in His hand the flame-like martial weapon
which is the white *mazhu*.
He who presides over Sivaloka is indeed entempled
in Puṉavāyil abounding in glorious gardens. 6

117. பெருங்கடல் நஞ்சு அமுதுஉண்டு, உகந்து பெருங்காட்டுஇடைத்
திருந்து இளமென்முலைத் தேவி பாட(ந்) நடம்ஆடிப் போய்,
பொருந்தலர்தம் புரம்மூன்றும் எய்து, புனவாயிலில்
இருந்தவன் தன் கழல் ஏத்துவார்கட்கு இடர் இல்லையே.

He quaffed the great oceanic venom and rejoiced. To the singing of
Uma whose young breasts and buxom, He dances in the great crematory.
Of yore, He gutted with fire the triad of hostile,
walled and skyey citadels.
He is, indeed, entempled in Puṉavāyil.
The troubles of those that hail and adore His
ankleted feet will cease altogether. 7

118. மனம் மிகு வேலன் அவ் வாள் அரக்கன் வலி ஒல்கிட,
வனம் மிகு மால்வரையால் அடர்த்தான் இடம்--மன்னிய
இனம் மிகு தொல்புகழ் பாடல் ஆடல் எழில் மல்கிய,
புனம் மிகு கொன்றை அம் தென்றல் ஆர்ந்த, புனவாயிலே.

He so crushed under His beauteous and glorious Kailās
the prideful Ravana armed with spear, sword and the like,
that his puissance utterly frittered away.
His holy polis is Puṉavāyil where are sung hymns
that celebrate His manifold and hoary glory
and where the splendorous dance is enacted.
Here *kondrais* burgeon in gardens where Notus wafts. 8

119. திரு வளர் தாமரை மேவினானும், திகழ் பாற்கடல்
கருநிறவண்ணனும், காண்பு அரிய கடவுள்(ள்) இடம்--
நரல் சுரிசங்கொடும் இப்பி உந்தி(ந்), நலம் மல்கிய
பொருகடல் வெண்திரை வந்து எறியும் புனவாயிலே.

He was imperceivable by him whose seat is the Lotus
of accrescent divinity and by the dark-hued
Vishnu who slumbers on the milky sea.
Siva's delubrum is at Puṉavāyil where the white
billows of the main carry to the shore the resounding
whorled conches and shells and thus enrich it. 9

120. போதி எனப் பெயர் ஆயினாரும், பொறி இல் சமண்-
சாதி, உரைப்பன கொண்டு, அயர்ந்து, தளர்வு எய்தன்மின்!
போது அவிழ் தண்பொழில் மல்கும் அம் தண் புனவாயிலில்
வேதனை நாள்தொறும் ஏத்துவார்மேல் வினை வீடுமே.

Listen not to the utterances of the Buddhists who
adore the *Bhodi* tree and the senseless Samanas;
their dicta will breed languishment in you.
Our God of the Vedas is entempled in the beautiful
and cool Puṉavāyil in whose gardens flowers blow aplenty.
Karma will not afflict them who hail Him daily. 10

121. பொன்-தொடியாள்உமை பங்கன் மேவும் புனவாயிலை,
கற்றவர் தாம் தொழுது ஏத்த நின்ற கடல் காழியான்--
நல்-தமிழ் ஞானசம்பந்தன்--சொன்ன தமிழ், நன்மையால்
அற்றம் இல் பாடல்பத்து, ஏத்த வல்லார் அருள் சேர்வரே.

That the erudite may duly hail and adore Puṉavāyil
where Siva abides concorporate with Uma, the wearer
of auric bangles, Gnānasambandhan of Kāzhi,
close to the sea—the adept of goodly Tamiḻ--, has
sung these weal-conferring hymns in Tamiḻ.
They that are valiant to hail Him with this flawless
decad of psalms, will gain salvific grace. 11

12. திருக் கோட்டாறு : காந்தாரபஞ்சமம்

122. வேதியன், விண்ணவர் ஏத்த நின்றான், விளங்கும் மறை
ஓதிய ஒண்பொருள் ஆகி நின்றான், ஒளி ஆர் கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்து அழகு ஆர் திருக் கோட்டாற்றுள்
ஆதியையே நினைந்து ஏத்த வல்லார்க்கு அல்லல் இல்லையே.

12. TIRUKKŌṬṬAṞU

: Ghāndārapanjamam

He is the God of the Vedas adored by the supernals;
He is eke the lofty import of the Vedas, He is the Primal
God entempled in the beautiful Tirukkōṭṭāṟu
girt with cool gardens where comely parakeets prattle.
Troubles will not assail them that contemplate and adore Him. 1

123. ஏல மலர்க் குழல் மங்கை நல்லாள், இமவான்மகள்
பால் அமரும் திருமேனி எங்கள் பரமேட்டியும்--
கோல மலர்ப்பொழில் சூழ்ந்து, எழில் ஆர் திருக் கோட்டாற்றுள்,
ஆல நிழல்கீழ் இருந்து, அறம் சொன்ன அழகனே.

She is the Woman par excellence whose coiffure breathes
incense; She is the Daughter of Himavant.
Our God, the Supreme Ens, is concorporate with Her.
He is entempled in the pulchritudinous Tirukkōṭṭāṟu
girt with colourful gardens.
He is, indeed, the Handsome One, who of yore,
inculcated *dharma* seated in the shade of the Banyan tree. 2

124. இலை மல்கு சூலம் ஒன்று ஏந்தினானும், இமையோர் தொழ
மலை மல்கு மங்கை ஓர் பங்கன் ஆய(ம்) மணிகண்டனும்--
குலை மல்கு தண்பொழில் சூழ்ந்து, அழகு ஆர் திருக் கோட்டாற்றுள்,
அலை மல்கு வார்சடை ஏற்று உகந்த அழகன் அன்றே!

He is a wielder of the leafy spear, who is adored
by the celestials; He, the blue-throated One, is
concorporate with the Daughter of Himavant.
He is entempled in the pulchritudinous Tirukkōṭṭāṟu
girt with cool gardens laden with bunches of fruitage.
He is the Handsome One who bore on His matted crest
of long hair the wave-tossed Ganga. 3

125. ஊன் அமரும்(ம்) உடலுள் இருந்த(வ்) உமைபங்கனும்
வான் அமரும் மதி சென்னி வைத்த மறைஓதியும்,
தேன் அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்
தான் அமரும் விடையானும், எங்கள் தலைவன் அன்றே!

He is the Life of the lives that activises the bodies;
He is concorporate with Uma; He wears on His crest
the crescent that sails in the sky; He is the Rider of the Bull.
He is our Chief who is enthroned in Tirukkōṭṭāṟu
girt with gardens rich in melliferous flowers. 4

126. வம்பு அலரும் மலர்க்கோதை பாகம் மகிழ் மைந்தனும்,
செம்பவளத்திருமேனி வெண்நீறு அணி செல்வனும்--
கொம்பு அமரும் மலர் வண்டு கெண்டும் திருக் கோட்டாற்றுள்
நம்பன் எனப் பணிவார்க்கு அருள்செய் எங்கள் நாதனே.

He is the Puissant One who is happily concorporate
with Her whose flower-decked coffiure is fragrant.
He is the Opulent One whose divine body is of the hue
of ruddy coral; He is adorned with the white ash.

He is enthroned in Tirukkōṭṭāṟu where bees kindle
the flowers in the branches.
He is our Master who dispenses grace to those
that adore Him as the supremely desirable One. 5

127. பந்து அமரும் விரல் மங்கை நல்லாள் ஒருபாகமா,
வெந்து அமரும் பொடிப் பூச வல்ல விகிர்தன், மிகும்
கொந்து அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்
அந்தணனை, நினைந்து ஏத்த வல்லார்க்கு இல்லை, அல்லலே.

He is concorporate with His Woman par excellence,
whose fingers sport a ball.
He is Vikirtan who is adored with the baked white ash.
He is the Brahmin who is entempled in Tirukkōṭṭāṟu,
girt with gardens rich in flower-bunches.
They that contemplate Him and adore Him sincerely
get freed from troubles altogether. 6

128. துண்டு அமரும் பிறை சூடி நீடு சுடர்வண்ணனும்,
வண்டு அமரும் குழல் மங்கை நல்லாள் ஒருபங்கனும்--
தெண்திரை நீர் வயல் சூழ்ந்து அழகு ஆர் திருக் கோட்டாற்றுள்,
அண்டமும் எண் திசை ஆகி நின்ற அழகன் அன்றே!

He is adorned, as it were, with a slice of the moon;
His hue is like unto the ever-during flame;
He is concorporate with His Woman par excellence
whose tresses are bebuzzed by bees.

He is enthroned in the pulchritudinous Tirukkōṭṭāṟu
dight with well-watered fields.
He is, indeed, the Handsome One who is all
the planets as well as the eight directions. 7

129. இரவு அமரும் நிறம் பெற்று உடைய இலங்கைக்கு இறை,
கரவு அமரக் கயிலை எடுத்தான், வலி செற்றவன்--
குரவு அமரும் மலர்ச்சோலை சூழ்ந்த திருக் கோட்டாற்றுள்,
அரவு அமரும் சடையான்; அடியார்க்கு அருள் செய்யுமே.

When he, the deceptious one who is dark as night,
durst uproot His Mount Kailās, He crushed
the puissance out of him.
He is entempled in Tirukkōṭṭāṟu girt with
flowery gardens rich in *kura* flowers.
He who wears on His ruddy matted crest an adder
dispenses grace to His devotees. 8

130. ஓங்கிய நாரணன் நான்முகனும் உணரா வகை,
நீங்கிய தீஉரு ஆகி நின்ற நிமலன்--நிழல்
கோங்கு அமரும் பொழில் சூழ்ந்து, எழில் ஆர் திருக் கோட்டாற்றுள்,
ஆங்கு அமரும் பெருமான்; அமரர்க்கு அமரன் அன்றே!

He is the *Nimalan* who stood as a column of fire
beyond the ken of the lofty Vishnu and Brahma.
He is entempled in the eesome Tirukkōṭṭāṟu
girt with gardens where shade-yielding *koṅkus* thrive.
He is, indeed, the God of the immortals. 9

131. கடுக் கொடுத்த துவர்ஆடையர், காட்சி இல்லாதது ஓர்
தடுக்கு இடுக்கிச் சமணே திரிவார்கட்கு, தன் அருள்
கொடுக்ககிலாக் குழகன் அமரும் திருக் கோட்டாற்றுள்,
இடுக்கண் இன்றித் தொழுவார் அமரர்க்கு இறை ஆவரே.

As the ochre-robed Buddhists and the Samanas
who tote small mats, did not seek Him, He,
the ever-young One, did not bestow grace on them.
They that are blessed to adore Him with their wonted
ease, will emerge as the deity of the celestials. 10

132. கொடி உயர் மால்விடை ஊர்தியினான் திருக் கோட்டாற்றுள்,
அடி கழல் ஆர்க்க நின்று ஆட வல்ல அருளாளனை,
கடி கமழும் பொழில் காழியுள் ஞானசம்பந்தன் சொல்-
படி, இவை பாடி நின்று ஆட வல்லார்க்கு இல்லை, பாவமே.

His mount is the Bull; His flag sports the signum
of His Bull; He abides in the temple at Kōṭṭāṟu.
He, the Dancer, with resonating anklets, dispenses grace.
On Him, Gnānasambandhan of Kāzhi girt with
suaveolent gardens, has sung these hymns.
Their sins cease who sing these psalms and dance. 11

13. திருப் பூந்தராய் : காந்தாரபஞ்சமம்

133. மின் அன எயிறு உடை விரவலோர்கள்தம்
துன்னிய புரம் உகச் சுளிந்த தொன்மையர்--
புன்னை அம்பொழில் அணி பூந்தராய் நகர்,
அன்ன அன்ன(ந்) நடை அரிவை பங்கரே.

He who is the Primordial Ens gutted with fire
and reduced to ashes the hostile Asuras whose teeth
were bright like lightning and who occupied
the three skyey and walled-citadels.
He who is concorporate with His Woman whose gait
is like the pen's, is entempled in the ornate polis
of Pūntharāi girt with gardens teeming in *Punnai-s*. 1

134. மூதணி முப்புரத்து எண்ணிலோர்களை,
வேது அணி சரத்தினால், வீட்டினார் அவர்--
போது அணி பொழில் அமர் பூந்தராய்நகர்,
தாது அணி குழல் உமை தலைவர்; காண்மினே!

He smote with His fierce dart the numberless Asuras
who inhabited the triad of the skyey walled-citadels,
He who is concorporate with His Consort whose tresses
are laden with pollen, is entempled in the urbs of
Pūntharāi dight with flowery gardens. 2

135. தருக்கிய திரிபுரத்தவர்கள் தாம் உக,
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்--
பொரு(க்) கடல் புடை தரு பூந்தராய்நகர்,
கரு(க்)கிய குழல் உமை கணவர்; காண்மினே!

He did away with the haughty Asuras of the triad
of the walled-citadels at which the Devas rejoiced.

He is the One whose bow is the Mount Mēru.
He is entempled in the polis of Pūntharāi which is
close to the billowy and raging main.
Behold Him, the Consort of Uma of dark tresses! 3

136. நாகமும் வரையுமே நாணும் வில்லுமா,
மாகம் ஆர் புரங்களை மறித்த மாண்பினர்--
பூகம் ஆர் பொழில் அணி பூந்தராய்நகர்,
பாகு அமர் மொழி உமை பங்கர்; காண்மினே!

With the snake Vāsuki for string and the Mount Mēru
for bow, He smote the triad of the skyey
and walled-citadels of the Asuras. Such is His greatness.
He is entempled in the polis of the ornate Pūntharāi
girt with the groves of areca-nut trees.
He is concorporate with Uma whose words are sweet.
Behold Him! 4

137. வெள்எயிறு உடைய அவ் விரவலார்கள் ஊர்
ஒள்எரியூட்டிய ஒருவனார்--ஒளிர்
புள் அணி புறவினில் பூந்தராய்நகர்,
கள் அணி குழல் உமை கணவர்; காண்மினே!

He gutted with the blazing fire the triad of the walled-
citadels where dwelt the hostile and white-toothed Asuras.
He is entempled in the polis of Pūntharāi where
colourful birds abide aplenty.

He is the Consort of Uma whose tresses are honey-fragrant.
Behold Him! 5

138. துங்கு இயல் தானவர் தோற்றம் மா நகர்
அங்கியில் வீழ்தர ஆய்ந்த அம்பினர்--
பொங்கிய கடல் அணி பூந்தராய்நகர்,
அம் கயல் அன கணி அரிவை பங்கரே.

He sped an arrow and gutted with fire the triad
of the great and walled citadels—humongous and ghost-like.
He is concorporate with Her whose eyes are carp-like.
He abides at Pūntharāi close to the swelling main.
Behold Him! 6

139. அண்டர்கள் உய்ந்திட, அவுணர் மாய்தரக்
கண்டவர்; கடல் விடம் உண்ட கண்டனார்--
புண்டரீக(வ்) வயல் பூந்தராய்நகர்,
வண்டு அமர் குழலிதன் மணாளர்; காண்மினே!

He quaffed the oceanic venom and blued His throat;
He smote the Asuras for the flourishing of the Devas.
He is entempled in the polis of PūntharāI dight
with fields where lotuses blow.
He is the Consort of Her whose tresses are buzzed by bees.
Behold Him! 7

140. மா சின அரக்கனை வரையின் வாட்டிய,
காய்சின எயில்களைக் கறுத்த கண்டனார்--
பூசுரர் பொலிதரு பூந்தராய்நகர்,
காசை செய் குழல் உமை கணவர்; காண்மினே!

He crushed the extremely wrathful Asura under His Mount.
He smote the walled-citadels of the Asuras, who
in fierce ire, caused suffering to others.
He is entempled in the polis of Pūntharāi where
thrive Brahmins—the Devas on earth.
He is the Consort of Uma whose tresses are dark
like the *Kāyāmpu* flower.
Behold Him! 8

141. தாம் முகம் ஆக்கிய அசுரர்தம் பதி
வேம் முகம் ஆக்கிய விகிர்தர்--கண்ணனும்,
பூமகன், அறிகிலா--பூந்தராய்நகர்க்
கோமகன், எழில்பெறும் அரிவை கூறரே.

He is the Vikirtar who devastated the citadels of
the Asuras who wrought troubles at their pleasure.
He is unknown to Krishna and Brahma seated on the Lotus.
He is entempled in the polis of Pūntharāi.
He, the Chief, shares His frame with the comely Uma. 9

142. முத்தர அசுரர்கள் மொய்த்த முப்புரம்
அத் தகும் அழல்இடை வீட்டினார்--அமண்
புத்தரும் அறிவு ஒணாப் பூந்தராய்நகர்,
கொத்து அணி குழல் உமை கூறர்; காண்மினே!

He gutted with fire the triad of the walled-citadels
where dwelt the three groups of Asuras.
He is unknown to the Buddhists and the Samanas.
He is the Consort of Uma whose tresses are adorned with flower bunches.
He abides in the polis of Pūntharāi. Behold Him! 10

143. புரம் எரிசெய்தவர், பூந்தராய்நகர்ப்
பரம் மலி குழல் உமைநங்கை பங்கரைப்
பரவிய பந்தன் மெய்ப் பாடல் வல்லவர்
சிரம் மலி சிவகதி சேர்தல் திண்ணமே.

He burnt the walled-citadels; He abides in the urbs
of Pūntharāi, sharing His body with Uma whose
dense coiffure is compact of long hair.
These are the hymns sung by Gnānasambandhan,
Those that are valiant in these psalms, it is certes,
will gain *Sivagati*—the capital beatitude. 11

14. திருப் பைஞ்ஞீலி : காந்தாரபஞ்சமம்

144. ஆரிடம் பாடலர், அடிகள், காடுஅலால்
ஓர் இடம் குறைவு இலர், உடையர் கோவணம்,
நீர் இடை சடை, விடை ஊர்தி, நித்தலும்
பாரிடம் பணி செயும், பயில் பைஞ்ஞீலியே.

14. TIRUPPAIGNGNEELI : **Ghāndārapanjamam**

He sings the Vedas manifested through the seers; the Great One
resides but in the crematory; He is above wants;
He wears but the loin-cloth; on His matted hair
He sports the Ganga; His mount is the Bull.
He is enthroned in Paigngneeli duly and daily
served by His *Bhūta*-Hosts. 1

145. மருவுஇலார் திரிபுரம் எரிய, மால்வரை
பரு விலாக் குனித்த பைஞ்ஞீலி மேவலான்,
உருஇலான், பெருமையை உளம் கொளாத அத்
திருஇலார் அவர்களைத் தெருட்டல் ஆகுமே?

He bent the Mount Mēru as a bow and gutted with
fire the hostile, skyey and walled-citadels.
His form is irreckonable.
Can we at all clarify the intellect of those who
lacking in divinity, do not comprehend His glory? 2

146. அம் சுரும்பு அணி மலர் அமுதம் மாந்தி, தேன்
பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி மேவலான்--
வெஞ்சுரம் தனில், உமை வெருவ, வந்தது ஓர்
குஞ்சரம் பட,--உரி போர்த்த கொள்கையே!

Our God presides over Paigngneeli where comely bees
imbibe the melis in flowers and hum
in the *pann* of *panjuram*.
Of yore, when a tusker strode forth in the fiercely
hot wilderness at which Uma stood scared,
He peeled off its skin and mantled Himself in it. 3

147. கோடல்கள் புறவு அணி கொல்லை முல்லைமேல்
பாடல் வண்டு இசை முரல் பயில் பைஞ்ஞீலியார்,
பேடு அலர், ஆண் அலர், பெண்ணும் அல்லது, ஓர்
ஆடலை உகந்த எம் அடிகள் அல்லரே!

Even as bees suck the nectar of *kāntal* flowers
and the flowers of *mullai* in the woodland and hum
musically, He is happily entempled in Paigngneeli;
He is neither male nor female and is neither of either.
He, the Noble One, rejoices to enact His dance. 4

148. விழி இலா நகுதலை, விளங்கு இளம்பிறை,
சுழியில் ஆர் வருபுனல் சூழல் தாங்கினான்--
பழிஇலார் பரவு பைஞ்ஞீலி பாடலான்;
கிழிஇலார் கேண்மையைக் கெடுக்கல் ஆகுமே?
He totes the eyeless and smiling skull; He,
our God, is decked with the Ganga abounding in
eddies and the young crescent on His crest.
Hailed in hymns by His blameless servitors,
He annuls the chill penury of His adorers.
Lo, He is entempled in Paigngneeli. 5

149. விடை உடைக் கொடி வலன் ஏந்தி, வெண்மழுப்-
படை உடைக் கடவுள்--பைஞ்ஞீலி மேவலான்;
துடிஇடைக் கலை அல்குலாள் ஓர் பாகமா,
சடைஇடைப் புனல் வைத்த சதுரன் அல்லனே!

He sports in His right hand His flag that sports
the signum of His Bull; He, our God, wields the weapon
of white *mazhu*; He abides at Paigngneeli.
He is concorporate with Her who is adorned with a girdle
in Her waist; Her forelap is covered by a saree.
He is, indeed, the Strategist, who sports on His
matted crest the flood of Ganga. 6

[**Note.** He is described as a Strategist who fosters one woman in His body and another on His head.]

150. தூயவன், தூய வெண்நீறு மேனிமேல்
பாயவன்--பாய பைஞ்ஞீலி கோயிலா
மேயவன்; வேய் புரை தோளி பாகமா
ஏயவன், எனைச் செயும் தன்மை என்கொலோ?

He is absolutely pure; His body is entirely bedaubed
with the pure and white holy ash.
He shares His body with Her whose arms are
like unto bamboo.
He is entempled in Paigngneeli.
What may He be pleased to make of me? 7

151. தொத்தின தோள் முடி உடையவன் தலை-
பத்தினை நெரித்த பைஞ்ஞீலி மேவலான்,
முத்தினை முறுவல்செய்தாள் ஓர்பாகமாப்
பொத்தினன், திருந்து அடி பொருந்தி வாழ்மினே!

The Asura was endowed with twenty arms in a row;
of yore, Siva crushed all his ten heads.
He, our God, presides over Paigngneeli.
He keeps Her in His left half whose teeth are pearly.
May you thrive poising yourselves in His salvific feet. 8

152. நீர் உடைப் போது உறைவானும் மாலும் ஆய்,
சீர் உடைக் கழல்அடி சென்னி காண்கிலர்;
பார் உடைக் கடவுள், பைஞ்ஞீலி மேவிய
தார்உடைக்கொன்றை அம் தலைவர், தன்மையே!

He that is seated on the Lotus thriving in water
and Vishnu went in quest of His crown
and His glorious and ankleted feet, in vain.
He who lords it over the earth is adorned with
a garland of konrai blossoms.
Lo, He is entempled in Paigngneeli. 9

153. பீலியார் பெருமையும், பிடகர் நூன்மையும்,
சாலியாதவர்களைச் சாதியாதது, ஓர்
கோலியா அரு வரை கூட்டி எய்த பைஞ்-
ஞீலியான் கழல்அடி நினைந்து வாழ்மினே!

The glory of the ones that tote the peacocks' feathers
and the erudition of the cultivators of Pitakam
are but pseudo. He minds not their disputations.
He bent the unbendable Mount Mēru into a bow
and smote the hostile walled-citadels.
He presides over Paigngneeli. Do contemplate
and hail His ankleted feet and thrive in weal and welfare. 10

154. கண் புனல் விளைவயல் காழிக் கற்பகம்
நண்பு உணர் அருமறை ஞானசம்பந்தன்
பண்பினர் பரவு பைஞ்ஞீலி பாடுவார்,
உண்பின உலகினில், ஓங்கி வாழ்வரே.

Gnanasambandhan hails from Kāzhi where abound
fields yielding rich harvest. He is like the Karpaka;
He is well versed in the rare Vedas; it is He who sang
these hymns on the God of Paigngneeli which is
hailed by those of sterling qualities.
If they that took birth on earth to undergo
their karmạ, recite these psalms, they'll thrive loftily. 11

15. திரு வெண்காடு : காந்தாரபஞ்சமம்

155. மந்திர மறையவர், வானவரொடும்,
இந்திரன், வழிபட நின்ற எம் இறை;
வெந்தவெண்நீற்றர்--வெண்காடு மேவிய,
அந்தமும் முதல் உடை, அடிகள் அல்லரே!

15. TIRUVEṆKĀṬU : **Ghāndārapanjamam**

Our God is entempled in Veṇkāṭu; He is adored by
the Vedas with their mantras, the Devas and Indira.
He is adorned with the baked, white and holy ash.
Is He not the Great One who is the Omega as well as the Alpha? 1

156. படை உடை மழுவினர், பாய் புலித்தோலின்
உடை விரி கோவணம் உகந்த கொள்கையர்,
விடை உடைக் கொடியர்--வெண்காடு மேவிய,
சடைஇடைப் புனல் வைத்த, சதுரர் அல்லரே!

He wields the weapon *mazhu*; He is clad in the skin of
a leaping tiger; He is happy to be clad in a broad
loin-cloth; His flag sports the signum of His Bull.
He is entempled in Veṇkāṭu. He is the Strategist
who keeps on His matted hair the flood of Ganga. 2

157. பாலொடு நெய், தயிர், பலவும் ஆடுவர்;
தோலொடு நூல்-இழை துதைந்த மார்பினர்--
மேலவர் பரவு வெண்காடு மேவிய,
ஆலம்அது அமர்ந்த, எம் அடிகள் அல்லரே!

He has His ablutions in milk, ghee, curds and the like;
His chest is adorned with the sacred thread
to which is attached a snippet of deer-skin.
He abides in Veṇkāṭu hailed by the lofty ones.
Our noble God is seated in the shade of the Banyan tree. 3

158. ஞாழலும் செருந்தியும் நறுமலர்ப்புன்னையும்
தாழை வெண்குருகு அயல் தயங்கு கானலில்,
வேழம்அது உரித்த, வெண்காடு மேவிய,
யாழினது இசை உடை, இறைவர் அல்லரே!

He is entempled in Veṇkāṭu whose sea-shore
gardens abound in *gnāzhal*, *serunti*, suaveolent
punnai, fragrant screw-pine and *kurukkatthi*.
Our God is ever hailed with the music of *yāzh*. 4

159. பூதங்கள் பல உடைப் புனிதர், புண்ணியர்,
ஏதங்கள்பல இடர் தீர்க்கும் எம் இறை,
வேதங்கள் முதல்வர்--வெண்காடு மேவிய,
பாதங்கள் தொழ நின்ற, பரமர் அல்லரே!

Many are His Bhūta-Hosts; He is the holy One; He is
the sacred One; He annuls the manifold misery
and the troubles of His adorers. He is the supreme God.
He is the Chief God hailed by the Vedas.
He, the God is at Veṇkāṭu whose feet we are blessed to worship. 5

160. மண்ணவர் விண்ணவர் வணங்க, வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம் இறை--
விண் அமர் பொழில் கொள் வெண்காடு மேவிய
அண்ணலை--அடி தொழ, அல்லல் இல்லையே.

Our God is daily hailed and adored by the people on earth,
the celestials and other Devas.
He is entempled in Veṇkāṭu whose gardens brush the heavens.
Troubles of those that adore the Noble One's feet will cease. 6

161. நயந்தவர்க்கு அருள்பல நல்கி, இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்--
வியந்தவர் பரவு வெண்காடு மேவிய,
பயம் தரு மழு உடை, பரமர் அல்லரே!

He confers manifold grace on them that willingly
adore Him; He eke graced Indira's mount--
the white Tusker; He sports an eye in His forehead.
He wields the fearsone *maḻu*.
He, the Noble One, abides at Veṇkāṭu adored by those
who hail His wondrous splendour. 7

162. மலை உடன்எடுத்த வல்அரக்கன் நீள் முடி
தலைஉடன் நெரித்து, அருள் செய்த சங்கரர்;
விலை உடை நீற்றர்--வெண்காடு மேவிய,
அலை உடைப் புனல் வைத்த, அடிகள் அல்லரே!

He is Sankara who crushed the heads adorned with
lofty crowns of the puissant Asura who durst
uproot His Mount; then when he rued, He graced him.
He, our God, wears the holy ash of humongous worth.
He, the Great One, keeps the billowy Ganga on His head.
He, the Great One, indeed, is entempled in Veṇkāṭu. 8

163. ஏடு அவிழ் நறுமலர் அயனும் மாலும்ஆய்த்
தேடவும், தெரிந்து அவர் தேரகிற்கிலார்--
வேதம்அது உடைய வெண்காடு மேவிய,
ஆடலை அமர்ந்த, எம் அடிகள் அல்லரே!

Brahma whose seat is the fragrant-petalled Lotus
and Vishnu went in quest of Him, in vain.
Multitudinous are His *Vetams*, He, the Great One of the Vedas,
who loves to dance, abides at Veṇkāṭu. 9

164. போதியர், பிண்டியர்,--பொருத்தம்இ(ல்)லிகள்--
நீதிகள் சொல்லியும் நினையகிற்கிலார்;
வேதியர் பரவ வெண்காடு மேவிய
ஆதியை அடி தொழ, அல்லல் இல்லையே.

The adorers of *Bhodi* and *Pindi* are unfit persons;
even when *niti* is inculcated, they remain ignoramuses.
He, the Primordial God, abides at Veṇkāṭu,
adored by the Vedic Brahmins.
If His feet are adored, troubles will become non-est. 10

165. நல்லவர் புகலியுள் ஞானசம்பந்தன்,
செல்வன் எம் சிவன் உறை திருவெண்காட்டின்மேல்,
சொல்லிய அருந்தமிழ்பத்தும் வல்லவர்,
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே.

Gnanasambandhan of Pukali where dwell the goodly,
has on our opulent Siva, sung this rare decad
of Tamil̲ hymns on the God of Tiruveṇkāṭu.
The troubles and the cruel karma of those that are
valiant in these psalms will perish.
It is thus I proclaim my fiat. 11

16. திருக் கொள்ளிக்காடு : காந்தாரபஞ்சமம்

166. நிணம் படு சுடலையில், நீறு பூசி நின்று,
இணங்குவர், பேய்களோடு; இடுவர், மாநடம்;
உணங்கல்வெண்தலை தனில் உண்பர்; ஆயினும்,
குணம் பெரிது உடையர்--நம் கொள்ளிக்காடரே.

16. TIRUKKOḶḶIKKĀṬU : Ghāndārapanjamam

He wears the ash of the crematory where corpses
are burnt; it is here He enacts His great dance
companied with His *Bhutas*.
He receives alms in the dried skull of Brahma and eats it.
Yet His gunas are lofty. He is our God who is
entempled in Koḷḷikkāṭu. 1

167. ஆற்ற நல் அடி இணை அலர் கொண்டு ஏத்துவான்,
சாற்றிய அந்தணன் தகுதி கண்ட நாள்,
மாற்றலன் ஆகி முன் அடர்த்து வந்து அணை
கூற்றினை உதைத்தனர்--கொள்ளிக்காடரே.

The God of Koḷḷikkāṭu, of yore, kicked to death Yama
whose onslaught could not be averted by any,
and who strode forth to snatch the life of
the Brahmin-lad that always hailed with flowers
the weal-conferring feet twain of Siva, 2

168. அத்தகு வானவர்க்கு ஆக, மால்விடம்
வைத்தவர், மணி புரை கண்டத்தி(ன்)னுளே;
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்து அலர் கொன்றையர்--கொள்ளிக்காடரே.

For the sake of the agonised Devas, He quaffed
the humongous venom and retained it in His throat
which turned blue like a gem.
He who abides at Koḷḷikkāṭu is adorned with
the flowers of *ūmattham, vanni* and bunchy
konrai, in His matted crest. 3

169. பா வணம் மேவு சொல்மாலையின், பல
நா வணம் கொள்கையின் நவின்ற செய்கையர்;
ஆவணம் கொண்டு எமை ஆள்வர் ஆயினும்,
கோவணம் கொள்கையர்--கொள்ளிக்காடரே.

He has caused His devotee-bards to weave many
garlands of verses which accord perfectly with
prosody and are sweet to recite.
He rules us thanks to our deeds of bondage to Him.
He but wears a loin-cloth and abides at Koḷḷikkāṭu. 4

170. வார் அணி வனமுலை மங்கையாளொடும்
சீர் அணி திருஉருத் திகழ்ந்த சென்னியர்;
நார் அணி சிலைதனால் நணுகலார் எயில்
கூர் எரி கொளுவினர்--கொள்ளிக்காடரே.

He is concorporate with Her whose lovely breasts are
covered by a breast-band. His form is divinely
splendorous; in His forehead is an eye. With His stringed
bow He gutted with fire the walled-citadels of His foes.
Lo, He is entempled in Koḷḷikkāṭu. 5

171. பஞ்சு தோய் மெல் அடிப்பாவையாளொடும்
மஞ்சு தோய் கயிலையுள் மகிழ்வர், நாள்தொறும்;
வெஞ்சின மருப்பொடு விரைய வந்து அடை
குஞ்சரம் உரித்தனர்--கொள்ளிக்காடரே.

He with Her whose soft soles are dyed red with
silk-cotton, dwells at the cloud-capped Kailās,
flourishing daily in delight.
He peeled off the skin of the cruel raging Tusker that rushed to Him.
Lo, He abides at Koḷḷikkāṭu. 6

172. இறை உறு வரி வளை இசைகள் பாடிட,
அறை உறு கழல் அடி ஆர்க்க, ஆடுவர்;
சிறை உறு விரிபுனல் சென்னியின்மிசைக்
குறைஉறு மதியினர்--கொள்ளிக்காடரே.

To the singing of Uma whose forearms are decked with
striped bangles, He dances while His anklets resonate.
On His crest, He is adorned with the wide flood of Ganga
whose descent He arrested and also the waning moon.
Lo, He is entempled in Koḷḷikkāṭu. 7

173. எடுத்தனன் கயிலையை, இயல் வலியினால்,
அடர்த்தனர் திருவிரலால்; அலறிடப்
படுத்தனர்; ஏன்று அவன் பாடல் பாடலும்,
கொடுத்தனர், கொற்றவாள்;--கொள்ளிக்காடரே.

With a toe of His, He crushed Rāvana who durst uproot
with his strength, the Mount Kailās and caused
him to cry aloud in pain; then when he rued
and tunefully hailed Him with the Sāma Vedic hymns
He relented and graced him with a triumphant sword.
Lo, He is entempled in Koḷḷikkāṭu. 8

174. தேடினார், அயன் முடி, மாலும் சேவடி;
நாடினார் அவர் என்றும் நணுககிற்றிலர்;
பாடினார், பரிவொடு; பத்தர் சித்தமும்
கூடினார்க்கு அருள்செய்வர்--கொள்ளிக்காடரே.

Brahma went in quest of His crown and Vishnu,
His salvific feet; but Siva remained inaccessible.
Baktas hymn Him in love; Siva chooses in love
to indwell them and grace them.
Lo, He is entempled in Koḷḷikkāṭu. 9

175. நாடி நின்று, அறிவு இல் நாண்இலிகள், சாக்கியர்,
ஓடி முன் ஓதிய உரைகள் மெய் அல;
பாடுவர், நால்மறை; பயின்ற மாதொடும்
கூடுவர், திருஉரு;-கொள்ளிக்காடரே.

The forceful utterances of the brainless and senseless
Samaṇas and the Bhuddists, are not true at all.
Siva cultivates the four Vedas. He is ever with His devoted Consort.
Lo, He of the divine form, abides at Koḷḷikkāṭu,
(dear to His devotees). 10

176. நல்-தவர் காழியுள் ஞானசம்பந்தன்,
குற்றம் இல் பெரும் புகழ்க் கொள்ளிக்காடரைச்
சொல்-தமிழ் இன்இசைமாலை, சோர்வு இன்றிக்
கற்றவர், கழல்அடி காண வல்லரே.

Gnānasambandhan of Kāzhi where dwell the goodly
tapaswis, has sung these hymns on the immensely
glorious God of Koḷḷikkāṭu.
They that have mastered and unflaggingly hail
this lovely garland of Tamil̲, will be blessed
with the *darshan* of His ankleted feet. 11

17. திரு விசயமங்கை : காந்தாரபஞ்சமம்

177. மரு அமர் குழல் உமை பங்கர், வார்சடை
அரவு அமர் கொள்கை எம் அடிகள், கோயில் ஆம்--
குரவு, அமர் சுரபுனை, கோங்கு, வேங்கைகள்,
விரவிய பொழில் அணி விசயமங்கையே.

17. TIRUVISAYAMAṆKAI : **Ghāndārapanjamam**

He is concorporate with Her of suaveolent tresses;
on His long matted hair He wears an adder;
He, our great God, is entempled in Visayamaṅkai abounding in
gardens of *kura*, *surapunnai* and *vēṅkai* trees. 1

178. கீதம் முன் இசைதரக் கிளரும் வீணையர்,
பூதம் முன் இயல்பு உடைப் புனிதர், பொன் நகர்--
கோதனம் வழிபட, குலவு நால்மறை
வேதியர் தொழுது எழு விசயமங்கையே.

He plays on a splendorous *Veena* when songs are sung;
He is the Holy One encircled by His *Bhutas*; His auric
city is adored by Rishaba Deva, the lord of the clan of kine;
He abides at Visayamaṅkai adored by its dwellers
who are well-versed in the four Vedas. 2

179. அக்கு அரவு அரையினர், அரிவை பாகமாத்
தொக்க நல் விடை உடைச் சோதி, தொல்-நகர்--
தக்க நல் வானவர், தலைவர், நாள்தொறும்
மிக்கவர், தொழுது எழு விசயமங்கையே.

He is adorned with *rudrāksha* beads and a serpent
in His waist; He is concorporate with His Woman.
His mount is the goodly Bull; He who is the God
of Devas, is entempled in Visayamaṅkai;
He is adored daily by them abounding in sterling qualities. 3

180. தொடை மலி இதழியும் துன் எருக்கொடு
புடை மலி சடைமுடி அடிகள் பொன் நகர்--
படை மலி மழுவினர், பைங்கண் மூரி வெள்-
விடை மலி கொடி அணல், விசயமங்கையே.

He is adorned with the garland of konrais as well as
the garland of closely-woven *erukku* flowers.
He is the Great One of matted crest who wields the weapon
of *mazhu*; His flag sports the signum of the white
and fresh-eyed Bull. The Noble One is
entempled in the golden city of Visayamaṅkai. 4

181. தோடு அமர் காதினன், துதைந்த நீற்றினன்,
ஏடு அமர் கோதையோடு இனிது அமர்வுஇடம்--
காடு அமர் மா கரி கதறப் போர்த்தது ஓர்
வேடம்அது உடை அணல்--விசயமங்கையே.

He wears in His left ear a *todu;* He is coated with
the holy ash mixed with water; He peeled off
the skin of the mighty sylvan Tusker that wailed aloud
and mantled Himself with it. The great One abides
happily in Visayamaṅkai with His Woman 5
who is decked with petalled flowers.

182. மைப் புரை கண் உமை பங்கன், வண் தழல்
ஒப்பு உரை மேனி எம் உடையவன், நகர்--
அப்பொடு மலர்கொடு அங்கு இறைஞ்சி, வானவர்
மெய்ப்பட அருள்புரி விசயமங்கையே.

He is concorporate with Her whose eyes are dark like lilies;
His body blazes incarnadine like flame.
He rules us; He is adored by Devas with flowers and water;
Entempled in the urbs of Visayamaṅkai; He doth
dispense grace to the true worshippers. 6

183. இரும் பொனின்மலைவிலின், எரிசரத்தினால்,
வரும் புரங்களைப் பொடிசெய்த மைந்தன் ஊர்--
சுரும்பு அமர் கொன்றையும், தூய மத்தமும்,
விரும்பிய சடை அணல் விசயமங்கையே.

He, the mighty One, sped an arrow tipt with fire
from His bow wrought of the great Mount Mēru
and pulverized the three walled-citadels.
He is the Noble One who willingly adorns Himself with
konrais buzzed by bees and the pure *ūmattham*
flowers on His matted crest.
He, even He, is entempled in Visayamaṅkai. 7

184. உளங்கையில், இருபதோடு ஒருபதும் கொடு, ஆங்கு
அளந்து அரும் வரை எடுத்திடும் அரக்கனை,
தளர்ந்து உடல் நெரிதா, அடர்த்த தன்மையன்
விளங்கிழையொடும் புகும், விசயமங்கையே.

Siva so crushed the haughty, twenty-armed and the-
ten-headed Ravana who with all his strength
durst uproot the Mount Kailās that blocked his
passage, that he grew utterly enfeebled.

He is entempled in Visayamaṅkai with His
Woman adorned with bright ornaments. 8

185. மண்ணினை உண்டவன் மலரின்மேல் உறை
அண்ணல்கள்தமக்கு அளப்பு அரிய அத்தன் ஊர்--
தண்நறுஞ்சாந்தமும் பூவும் நீர்கொடு,
விண்ணவர் தொழுது எழு விசயமங்கையே.

Siva stood beyond the ken of the great Two, namely
Brahma seated on the Lotus and Vishnu who swallowed mud.
Our Sire is entempled in Visayamaṅkai who is
adorned with the suaveolent paste of sandal-
wood, flowers and holy water, by the celestials. 9

186. கஞ்சியும் கவளம் உண் கவணர் கட்டுரை
நஞ்சினும் கொடியன; நமர்கள் தேர்கிலார்;
செஞ்சடைமுடி உடைத் தேவன் நன்நகர்--
விஞ்சையர் தொழுது எழு விசயமங்கையே.

The utterances of the Buddhists who consume *conjee*
and the Samanas who eat alms received in
their gowpens, are more cruel than venom.
The servitors of Siva, dear to us, ignore them.
Our supernal God is entempled in the holy city 10
Visayamaṅkai hailed and adored by Vidyādaras.

187. விண்ணவர் தொழுது எழு விசயமங்கையை,
நண்ணிய புகலியுள் ஞானசம்பந்தன்,
பண்ணிய செந்தமிழ்பத்தும் வல்லவர்,
புண்ணியர்; சிவகதி புகுதல் திண்ணமே.

On the shrine of Visayamaṅkai hailed by Devas,
Gnānasambandhan of Pukali has sung
these hymns in classical Tamiḻ. They that are
valiant in these ten psalms are the holy ones.
It is certes that these will gain *Siva-gati*. 11

18. திரு வைகல்மாடக்கோயில் : காந்தாரபஞ்சமம்

188. துள மதி உடை மறி தோன்று கையினர்,
இளமதி அணி சடை எந்தையார், இடம்--
உளம் மதி உடையவர் வைகல் ஓங்கிய,
வள மதி தடவிய, மாடக்கோயிலே.

18. TIRUVAIKALMĀṬAKKŌYIL : Ghandārapanjamam

He holds in His hand a fawn prone to leap;
He, our Sire, sports on His matted crest the crescent;
He is entempled in the *māṭakkōyil* at Vaikal
whose top brushes the heavens.
It is in this holy place, the Siva-conscious ones dwell. 1

189. மெய் அகம் மிளிரும் வெண்நூலர், வேதியர்,
மைய கண் மலைமகளோடும் வைகு இடம்--
வையகம் மகிழ்தர, வைகல் மேல்-திசை
செய்ய கண்வளவன் முன் செய்த கோயிலே.
He wears on His chest the bright and white, sacred thread;
With Her whose eyes are touched with collyrium--
the Daughter of Himavant, He abides in the west
of Vaikal in His *māṭakkōyil* built by the Chola
of ruddy eyes, to the delight of the dwellers of earth. 2

190. கணி அணி மலர்கொடு, காலை மாலையும்
பணி அணிபவர்க்கு அருள்செய்த பான்மையர்,
தணி அணி உமையொடு தாமும் தங்கு இடம்--
மணி அணி கிளர் வைகல் மாடக்கோயிலே.

He graces His servitors who with comely blossoms
of *vēṇkai* tree, adore Him during morn and eve.
With Uma whose form is like the cool liana, He abides at
the gem-inlaid Vaikal in its lustrous *māṭakkōyil*. 3

191. கொம்பு இயல்கோதை முன் அஞ்ச, குஞ்சரத்-
தும்பி அது உரிசெய்த துங்கர் தங்கு இடம்--
வம்பு இயல் சோலை சூழ் வைகல் மேல்-திசை,
செம்பியன் கோச்செங்கணான் செய் கோயிலே.

Of yore, He peeled off the skin of the Tusker and mantled
Himself therewith, witnessing which His Consort
like unto a flowery liana, stood scared.
He is entempled in the west of Vaikal girt with
fragrant gardens, at His *māṭakkōyil;*
built by Kōcchenkaṇāṉ—the Chola. 4

192. விடம் அடை மிடற்றினர், வேத நாவினர்,
மடமொழி மலைமகளோடும் வைகு இடம்--
மடஅனம் நடை பயில் வைகல் மா நகர்க்
குடதிசை நிலவிய மாடக்கோயிலே.

His throat holds the venom; His lips chant the Vedas;
with Her of bashful words, the Daughter of Himavant,
He abides in Hîs *māṭakkōyil* in the west of Vaikal city
where bashful damsels practise the gait of swans. 5

193. நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவர் உறைவுஇடம்--இலங்கு முளரி
மறையொடு வளர்வு செய்வாணர் வைகலில்,
திறை உடை நிறை செல்வன் செய்த கோயிலே.

On His long matted hair, He bears the Ganga
brimful of water and the crescent.
He abides at Vaikal whose Brahmins foster the triple fire
and the Vedas, in His *māṭakkōyil* built by
the opulent Chola—the receiver of tributes. 6

194. எரிசரம் வரிசிலை வளைய ஏவி, முன்
திரிபுரம் எரிசெய்த செல்வர் சேர்வுஇடம்--
வரிவளையவர் பயில் வைகல் மேல்-திசை,
வரு முகில் அணவிய மாடக்கோயிலே.

Of yore, He bent His well-crafted bow, sped a dart
tipt with fire and burnt the three walled-citadels.
He, our Opulent God, abides in the west of Vaikal
where thrive young damsels,
at *māṭakkōyil* that grazes the floating clouds. 7

195. மலை அன இருபது தோளினான் வலி
தொலைவு செய்து அருள் செய்த சோதியார் இடம்--
மலர் மலி பொழில் அணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலை அன மாடக்கோயிலே.

He denuded the might of Ravana's hill-like
twenty shoulders; then when He rued He graced him.
He who blazes like flame abides at Vaikal girt
with flowery gardens, at His mountain-like
māṭakkōyil circumambulated by its dwellers. 8

196. மாலவன், மலரவன், நேடி மால் கொள,
மால்எரி ஆகிய வரதர் வைகு இடம்--
மாலைகொடு அணி மறைவாணர் வைகலில்,
மால் அன மணி அணி மாடக்கோயிலே.

When Vishnu and Brahma went in quest of Him,
He, the Dancer, grew into an immense column of fire,
thus causing them to get befuddled.
He abides at Vaikal where Brahmins—the reciters
of the Vedas--, adore Him adorning Him with garlands.
His, indeed, is the *māṭakkōyil* inlaid with gems, 9
which in hue, are nimbus-like.

197. கடு உடை வாயினர், கஞ்சி வாயினர்,
பிடகுஉரை பேணிலார் பேணு கோயில்ஆம்--
மடம் உடையவர் பயில் வைகல் மா நகர்,
வடமலை அனைய நல் மாடக்கோயிலே.

The Samanas eat myrobalan and drink *conjee;*
the Buddhists foster pitakas (as scriptures).
Siva's servitors ignore them and foster His temple
which is situate in the great polis of Vaikal,
worshipped by modest women.
His goodly *māṭakkōyil* is very like the Mount Mēru. 10

198. மைந்தனது இடம் வைகல்மாடக்கோயிலை,
சந்து அமர் பொழில் அணி சண்பை ஞானசம்-
பந்தன தமிழ் கெழு பாடல் பத்துஇவை
சிந்தைசெய்பவர், சிவலோகம் சேர்வரே.

On the Vaikal *māṭakkōyil* of the Mighty One,
Gnānasambandhan of Saṇbai girt with sandalwood
gardens, has sung these hymns of Tamil̲.
They that meditate on these psalms'll gain Siva-loka. 11

19. திரு அம்பர்ப் பெருந்திருக்கோயில் : காந்தாரபஞ்சமம்

199. எரிதர அனல் கையில் ஏந்தி, எல்லியில்,
நரி திரி கான்இடை, நட்டம் ஆடுவர்--
அரிசில் அம் பொரு புனல் அம்பர் மா நகர்,
குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே.

19. TIRUAMPARPPERUM TIRUKKŌYIL:

Ghandārapanjamam

He holds in His hand the flaming fire;
He doth dance during night in the crematory where
foxes roam about.

He abides in the temple of the great city of Ampar,
built by the great and ruddy-eyed Chola,
on the banks of the Arisil. 1

200. மைய கண் மலைமகள் பாகம்ஆய், இருள்,
கையது ஓர் கனல்-எரி கனல் ஆடுவர்--
ஐய நன் பொரு புனல் அம்பர், செம்பியர்
செய்யகண்இறை செய்த கோயில் சேர்வரே.

He is concorporate with the Daughter of Himavant
whose eyes are tinct with khol.
With the blazing fire held in His hand, He dances.
He abides in the temple built by the great
and ruddy-eyed Chola at the city of Ampar
on the banks of the roaring Arisil. 2

201. மறை புனை பாடலர், சுடர் கை மல்க, ஓர்
பிறை புனை சடைமுடி பெயர, ஆடுவர்--
அறை புனல் நீறை வயல் அம்பர் மா நகர்,
இறை புனை எழில் வளர் இடம்அது என்பரே.

He sings the Vedas of which He is the Author;
He holds the bright-rayed flame in His hand;
He sports the crescent on His matted hair which
sways as He doth dance.
He abides in the temple of accrescent beauty built by the Chola
at the great city of Ampar on the banks
of the dinsome Arisil that feeds many a field. 3

202. இரவு மல்கு இளமதி சூடி, ஈடு உயர்
பரவ மல்கு அருமறை பாடி, ஆடுவர்--
அரவமோடு உயர் செம்மல் அம்பர், கொம்பு அலர்
மரவம் மல்கு எழில் நகர், மருவி வாழ்வரே.

He is decked with the crescent that is bright during
night; He recites the Vedas that proclaim
His praise of worthy greatness, and dances.
He is the Noble One adorned with serpents.
He abides in His temple at the great and lovely city
of Ampar abounding in gardens where thrive
maravam trees rich in flowery branches. 4

203. சங்கு அணி குழையினர், சாமம் பாடுவர்,
வெங்கனல் கனல்தர வீசி ஆடுவர்--
அங்கு அணி விழவு அமர் அம்பர் மா நகர்,
செங்கண் நல்இறை செய்த கோயில் சேர்வரே.
He wears ear-rings wrought of conch and chank;
He sings the Sāma Veda; He dances in the fierce
fire which scatters sparks.
He abides in the great city of Ampar where lovely
festivals galore are celebrated,
at His temple built by the Chola King Cheṇkaṇāṉ. 5

204. கழல் வளர் காலினர், சுடர் கை மல்க, ஓர்
சுழல் வளர் குளிர்புனல் சூடி, ஆடுவர்--
அழல் வளர் மறையவர் அம்பர், பைம்பொழில்
நிழல் வளர் நெடு நகர், இடம்அது என்பரே.

His feet are decked with anklets; He holds in His hand
the bright-rayed fire; He sports the cool Ganga of
many eddies on His crest and dances.
In the great city of Ampar where dwell Brahmins who
foster the sacrificial fire; here are many green
gardens that provide abundant shade.
He is entempled in Ampar's delubrum. 6

205. இகல் உறு சுடர்எரி இலங்க வீசியே,
பகல் இடம் பலி கொளப் பாடி ஆடுவர்--
அகலிடம் மலி புகழ் அம்பர், வம்பு அவிழ்
புகல்இடம் நெடு நகர் புகுவர்போலுமே.

He holds the mighty and blazing fire which scatters
sparks; thus He goes about during day-time to beg
alms, singing and dancing.
He abides in the world-renowned and extensive city
of Ampar, at His divinely fragrant temple. 7

206. எரி அன மணி முடி இலங்கைக்கோன்தன
கரி அன தடக்கைகள் அடர்த்த காலினர்,
அரியவர்--வள நகர் அம்பர் இன்பொடு
புரியவர், பிரிவு இலாப் பூதம் சூழவே.

He, the rare Ens, with His toe crushed the mighty heads of
the dark-hued Rāvaṇa,--the King of Lanka--,
whose crowns are inlaid with blazing gems.

He abides happily in the uberous city of Ampar where
dwell the rare and great ones, in His temple,
companied with His inseparable *Bhūtas*. 8

207. வெறி கிளர் மலர்மிசையவனும், வெந் தொழில்
பொறி கிளர் அரவு அணைப் புல்கு செல்வனும்,
அறிகில அரியவர்--அம்பர், செம்பியர்
செறி கழல் இறை செய்த கோயில் சேர்வரே.

Our God, the Rare Ens, is unbeholdable unto Brahma
seated on the Lotus suaveolent and the opulent
Vishnu whose bed is the murderous adder.
He abides in the temple at Ampar built by the Chola,
decked with gem-inlaid anklets. 9

208. வழி தலை, பறி தலை, அவர்கள் கட்டிய
மொழிதலைப் பயன் என மொழியல்! வம்மினோ!
அழிது அலை பொரு புனல் அம்பர் மா நகர்,
உழிதலை ஒழிந்து உளர், உமையும் தாமுமே.

Do not deem as worthy the words of the tonsured
Buddhists and the Samaṇas of trichotillomania.
Well, come and behold His great city of Ampar where,
ceasing His roaming and with the Ganga on His matted
crest, He abides with Uma. 10

209. அழகரை, அடிகளை, அம்பர் மேவிய
நிழல் திகழ் சடைமுடி நீலகண்டரை,
உமிழ் திரை உலகினில் ஓதுவீர்! கொண்மின்--
தமிழ் கெழு விரகினன் தமிழ்செய்மாலையே!

He is the Handsome One; He is the Noble One; He is
the blue-throated One whose matted crest is
bright and splendorous. He abides at Ampar.
On Him, Gnānasambandhan, the Adept in Tamil
and the one renowned in the world girt with billowy seas,
has sung this garland of Tamil hymns.
Cultivate his psalms and thrive well. 11

20. திருப் பூவணம் : காந்தாரபஞ்சமம்

210. மாது அமர் மேனியன் ஆகி, வண்டொடு
போது அமர் பொழில் அணி பூவணத்து உறை
வேதனை, விரவலர் அரணம் மூன்று எய்த
நாதனை, அடி தொழ, நன்மை ஆகுமே.

20. TIRUPPŪVAṆAM :Ghandārapanjamam

He is concorporate with His Woman; He is entempled in
Pūvaṇam where over the flowers in gardens bees buzz.
He is the God of the Vedas. He, the Lord-God, of yore, smote
the triad of the hostile Asuras' walled-citadels.
Adoration of His feet confers weal and welfare. 1

211. வான் அணி மதி புல்கு சென்னி, வண்டொடு
தேன் அணி பொழில்-திருப் பூவணத்து உறை,
ஆன நல் அருமறை அங்கம் ஓதிய,
ஞானனை அடி தொழ, நன்மை ஆகுமே.

He abides at Tiruppūvaṇam abounding in gardens that
graze the lovely moon in the sky.
Here bees suck melis from flowers.
Weal will ensue if the feet of the God of Gnosis who is the Author
of the four Vedas and their six Angas, are worshiped. 2

212. வெந்துயர், உறு பிணி, வினைகள், தீர்வது ஓர்
புந்தியர் தொழுது எழு பூவணத்து உறை,
அந்தி வெண்பிறையினோடு ஆறு சூடிய,
நந்தியை அடி தொழ, நன்மை ஆகுமே.

The dwellers of Pūvaṇam who have resolved to get rid
of their cruel misery, afflicting maladies and evil
karma, adore its God and gain relief.
Nandi wears the crepuscular crescent and the Ganga on
His crest: They that hail His feet will flourish in weal. 3

213. வாச நல்மலர் மலி மார்பில் வெண்பொடிப்
பூசனை, பொழில் திகழ் பூவணத்து உறை
ஈசனை, மலர் புனைந்து ஏத்துவார் வினை-
நாசனை, அடி தொழ, நன்மை ஆகுமே.

On His chest adorned with the fragrant flowers, He wears
the white ash. He is the God entempled in Pūvaṇam
girt with gardens. He, indeed is the queller of karma.
They that hail His feet with well-woven flowers are
bound to flourish in weal and welfare. 4

214. குருந்தொடு, மாதவி, கோங்கு, மல்லிகை,
பொருந்திய பொழில்-திருப் பூவணத்து உறை,
அருந் திறல் அவுணர்தம் அரணம் மூன்று எய்த,
பெருந்தகை அடி தொழ, பீடை இல்லையே.

He is entempled in Tiruppūvaṇam girt with gardens
where thrive the trees of *kuruntu, matāvi, kōṅku*
mallikai and the like.
Of yore, He gutted with fire the triad of the walled-
citadels where dwelt the great and adroit Asuras.
If the feet of the Great One are hailed, blemishes'll cease. 5

215. வெறி கமழ் புன்னை, பொன்ஞாழல், விம்மிய--
பொறி அரவு அணி--பொழில் பூவணத்து உறை
கிறிபடும் உடையினன், கேடு இல் கொள்கையன்,
நறுமலர் அடி தொழ, நன்மை ஆகுமே.

He who adorns Himself with a raging and speckled snake,
is entempled in Pūvaṇam in which abound gardens
thick with the trees of fragrant *punnai*, golden gnāzhal
and the like.

He wears but a loin-cloth that provokes laughter.
Lo, He is of blemishless qualities.
They that hail His flower feet are bound to flourish. 6

216. பறை மல்கு முழவொடு பாடல் ஆடலன்,
பொறை மல்கு பொழில் அணி பூவணத்து உறை
மறை மல்கு பாடலன், மாது ஓர் கூறினன்,
அறை மல்கு கழல் தொழ, அல்லல் இல்லையே.

To the beat of drum and *mrudangam,* He, our God,
dances. He is entempled in Pūvaṇam abounding in
gardens heavily laden with fruitage.
He sings the hymns of the Vedas; He is concorporate
with His Woman; troubles will cease if His resounding
ankleted feet are hailed in devotion. 7

217. வரைதனை எடுத்த வல் அரக்கன் நீள்முடி
விரல்தனில் அடர்த்தவன், வெள்ளை நீற்றினன்,
பொரு புனல் புடை அணி பூவணம்தனைப்
பரவிய அடியவர்க்கு இல்லை, பாவமே.

He crushed with His toe the lofty crowns of
the mighty Asura who durst uproot His Mount.
He is adorned with the white holy ash.
He sports the Ganga on a part of His matted crest.
He is entempled in Pūvaṇam. Unto His devotees who
hail this, His shrine, no sin gets attached. 8

218. நீர் மல்கு மலர் உறைவானும், மாலும்ஆய்,
சீர்மல்கு திருந்து அடி சேரகிற்கிலர்;
போர் மல்கு மழுவினன் மேய பூவணம்,
ஏர் மல்கு மலர் புனைந்து, ஏத்தல் இன்பமே.

Brahma who is seated on the Lotus thriving in water
and Vishnu could not gain His glorious salvific feet.
He wields the martial *mazhu;* He abides at Pūvaṇam.
If He is hailed with comely flowers, bliss will ensue. 9

219. மண்டை கொண்டு உழிதரு மதி இல் தேரரும்,
குண்டரும், குணம் அல பேசும் கோலத்தர்;
வண்டு அமர் வளர் பொழில் மல்கு பூவணம்
கண்டவர் அடி தொழுது ஏத்தல் கன்மமே.

The senseless Buddhists who roam about toting
begging-bowls and the obstinate Samaṇās but
articulate worthless words. Ignore them.
Our God is entempled in Pūvaṇam dight with
flourishing gardens where bees abide.
It is our duty to hail Him to come by His *darshan*. 10

220. புண்ணியர் தொழுது எழு பூவணத்து உறை
அண்ணலை அடி தொழுது, அம் தண் காழியுள்
நண்ணிய அருமறை ஞானசம்பந்தன்
பண்ணிய தமிழ் சொல, பறையும் பாவமே.

Our God of Pūvaṇam is adored by the holy ones.
Adoring the feet of the Noble One, Gnānasambandhan
of comely and cool Kāzhi, the Adept of the rare Vedas,
has composed these hymns in Tamil.
If these psalms are duly recited, sins will vanish. 11

21. திருக் கருக்குடி: காந்தாரபஞ்சமம்

221. நனவிலும் கனவிலும், நாளும், தன் ஒளி,
நினைவிலும் எனக்கு வந்து எய்தும் நின்மலன்--
கனை கடல் வையகம் தொழு கருக்குடி,
அனல்-எரி ஆடும் எம் அடிகள்; காண்மினே!

21. TIRUKKARUKKUDI : Ghandārapanjamam

He, the *Nimalan*, as the inly light self-effulgent
manifests when I am awake or during dream.
He is entempled in Karukkudi adored by the people
of the world girt with roaring sea.
Our Noble One dances in fire. Behold Him! 1

222. வேதியன், விடை உடை விமலன், ஒன்னலர்
மூதெயில் எரி எழ முனிந்த முக்கணன்,
காது இயல் குழையினன், கருக்குடி அமர்
ஆதியை, அடி தொழ அல்லல் இல்லையே.
He is the God of the Vedas; He is *Vimalan* whose mount
is the Bull; He is the trinocular One who gutted
with fire the hoary triad of walled-citadels.

He is decked with a *kuzhai* in His ear. He is entempled
in Karukkudi. Troubles will cease when the feet
of Him, the Original Ens, are hailed and adored. 2

223. மஞ்சு உறு பொழில் வளம் மலி கருக்குடி--
நஞ்சு உறு திருமிடறு உடைய--நாதனார்,
அம் சுரும்பு ஆர் குழல் அரிவை அஞ்சவே,
வெஞ்சுரம் தனில் விளையாடல் என்கொலோ?

He is the Lord-God whose divine throat holds the venom;
He abides at Karukkudi where clouds rest on its gardens.
Wherefore does He dance in sport at the crematory
witnessing which, She whose coiffure is buzzed
by comely bees, stands scared? 3

224. ஊன் உடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்!
கான்இடை ஆடலான் பயில் கருக்குடிக்
கோன் உயர் கோயிலை வணங்கி, வைகலும்,
வானவர் தொழு கழல் வாழ்த்தி, வாழ்மினே!

You that long to annul your embodied life, hail His
ankleted feet adored daily by the celestials.
He, the Dancer of the crematory, abides in Karukkudi
the temple of which is lofty and majestic. 4
Do hail it and thrive well.

225. சூடுவர், சடைஇடைக் கங்கைநங்கையை;
கூடுவர், உலகுஇடை ஐயம் கொண்டு; ஒலி
பாடுவர், இசை; பறை கொட்ட, நட்டிருள்
ஆடுவர்; கருக்குடி அண்ணல் வண்ணமே!

He wears on His matted crest the damsel Ganga; He is concorporate with
His Woman; begging alms He sings, To the beat of drums
He dances in the crematory during midnight.
So, even so, is the Noble One that is entempled in Karukkudi. 5

226. இன்புஉடையார், இசை வீணை; பூண் அரா,
என்பு, உடையார்; எழில் மேனிமேல் எரி
முன்பு உடையார்; முதல் ஏத்தும் அன்பருக்கு
அன்புஉடையார்--கருக்குடி எம் அண்ணலே!

He is happy when He sings strumming His *Veena;* He wears on His
beauteous person bones and serpents as ornaments.
He holds in His palm the blazing fire. He pre-dwelt everything;
He is the Primal Ens. He, the Noble One entempled
in Karukkudi loves His loving devotees who hail Him. 6

227. காலமும் ஞாயிறும் தீயும் ஆயவர்;
கோலமும் முடி அரவு அணிந்த கொள்கையர்;
சீலமும் உடையவர்; திருக் கருக்குடி,
சாலவும் இனிது, அவர் உடைய தன்மையே!

He is Time; He is the sun: He is Fire;
He sports splendorously a snake in His crest;

He is glorious; He is entempled in the divine Karukkudi;
His nature is supremely sweet. 7

228. எறிகடல் புடை தழுவு இலங்கை மன்னனை
முறிபட வரைஇடை அடர்த்த மூர்த்தியார்,
கறை படு பொழில் மதி தவழ், கருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர், நன்மையே.

He so crushed Ravaṇa, the monarch of Sri Lanka
surrounded by wave-tossed seas, under His Mount,
that his body well-nigh cracked.
Siva-Mūrti is entempled in Karukkudi teeming with trees in its
imbrowned gardens through which the moon passes.
Lo, He graces them who hail Him with Siva-consciousness. 8

229. பூ மனும் திசைமுகன் தானும், பொற்பு அமர்
வாமனன், அறிகிலா வண்ணம் ஓங்கு எரி-
ஆம் என உயர்ந்தவன் அணி கருக்குடி
நா மனனினில் வர நினைதல் நன்மையே.

He soared up and up as an immense column of fire
unbeholdable by Brahma on the Lotus and Vishnu
who, of yore, assumed the guise of a dwarf.
He is entempled in the ornate Karukkudi.
Hie to His temple pervaded by suaveolence,
contemplate Him in Your *manam* and gain weal. 9

230. சாக்கியர், சமண் படு கையர், பொய்ம்மொழி
ஆக்கிய உரை கொளேல்! அருந் திரு(ந்) நமக்கு
ஆக்கிய அரன் உறை அணி கருக்குடிப்
பூக் கமழ் கோயிலே புடைபட்டு உய்ம்மினே!

Ignore the false utterances of the Buddhists
and the deceitful Samaṇās.
He has blessed us with the great boon of Saivism.
He who is Hara, is entempled in the ornate Karukkudi.
Hie to His shrine pervaded by suaveolence,
adore Him and stand redeemed. 10

231. கானலில் விரைமலர் விம்மு காழியான்,
வானவன் கருக்குடி மைந்தன்தன் ஒளி
ஆன, மெய்ஞ் ஞானசம்பந்தன், சொல்லிய
ஊனம் இல் மொழி வலார்க்கு உயரும், இன்பமே.

Gnanasambandhan hails from Kāzhi close to the foreshore gardens
where fragrant flowers blow. He is blessed with
Siva's own self-effulgent Gnosis. On the divine
and mighty God of Karukkudi he has sung these unflawed hymns.
They that duly chant these will come by accrescent joy. 11

22. பொது

(பஞ்சாக்கரத் திருப்பதிகம்) : காந்தாரபஞ்சமம்

232. துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சு அகம் நைந்து, நினைமின், நாள்தொறும்,
வஞ்சகம் அற்று!--அடி வாழ்த்த, வந்த கூற்று
அஞ்ச உதைத்தன, அஞ்சுஎழுத்துமே.

22. GENERAL

(Panchākshara Decad Divine) : Ghandārapanjamam

While asleep or awake, think on Him daily with your melting heart.
When Yama strode forth to snatch the life of the lad
who without an iota of deception, ever hailed His feet,
it is the mystic pentad of letters that kicked him
who, in dread, collapsed. 1

233. மந்திர நால்மறை ஆகி; வானவர்
சிந்தையுள் நின்று, அவர்தம்மை ஆள்வன--
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம், அஞ்சுஎழுத்துமே.

It is the letters of the mystic pentad, that turn
into the mantras and the Vedas that abide in the *chinta*
of the Devas and rule them.
Unto the righteous Brahmins who foster the ruddy
sacrificial fire, it is the letters of the mystic
pentad that form the mantra to be chanted
during the three junctions of the day. 2

234. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி, ஒண்சுடர்-
ஞானவிளக்கினை ஏற்றி, நன் புலத்து
ஏனை வழி திறந்து, ஏத்துவார்க்கு இடர்-
ஆன கெடுப்பன-அஞ்சுஎழுத்துமே.

It is the letters of the mystic pentad that annul the troubles
of those that control the life-animating breath,
light the Lamp of Gnosis, open the goodly way
blocked by the sense-organs and thus form the adoration of Siva. 3

235. நல்லவர் தீயவர் எனாது, நச்சினர்
செல்லல் கெட, சிவமுத்தி காட்டுவ;
கொல்ல நமன் தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன-அஞ்சுஎழுத்துமே.

Whether they are the holy ones or sinners, if they, in love,
chant the mystic pentad of letters, they could rid
themselves of the troublous *malas* and gain
the *mukti* granted in grace by Siva. It is the letters of
the mystic pentad that free the chanters snatched by
the messagers of Yama and annul all their troubles. 4

236. கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து; அகத்து
அங்கு உள பூதமும் அஞ்ச; ஐம் பொழில்;
தங்கு அரவின் படம் அஞ்சு; தம் உடை
அம் கையில் ஐவிரல்; அஞ்சு, எழுத்துமே.

The arrows of the mighty Manmata are five; the elements
of the cosmos are five; the heavenly gardens
are five; the heads of the great snake are five;
the fingers of the chanters are again five;
the redeeming letters are also five. 5

237. தும்மல் இருமல் தொடர்ந்தபோழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்தபோழ்தினும்,
இம்மை வினை அடர்த்து எய்தும்போழ்தினும்,
அம்மையினும், துணை--அஞ்சுஎழுத்துமே.

Even if my sneeze and cough continue, even if misery
is experienced in inferno and even if *prarabda*
grieves me sore in the current life, due relief 'll be
offered by the mystic pentad of letters which will also
manifest as help in the ensuing birth. 6

238. வீடு பிறப்பை அறுத்து, மெச்சினர்
பீடை கெடுப்பன; பின்னை, நாள்தொறும்
மாடு கொடுப்பன; மன்னு மா நடம்
ஆடி உகப்பன--அஞ்சுஎழுத்துமே.

The letters of the mystic pentad'll averruncate birth
as well as death; they will undo the blemishes
of those that chant them.
When chanted, they will also daily confer opulence. 7
They, indeed are beloved unto the Great Dancer.

239. வண்டு அமர் ஓதி மடந்தை பேணின;
பண்டை இராவணன் பாடி உய்ந்தன;
தொண்டர்கள் கொண்டு துதித்தபின், அவர்க்கு
அண்டம் அளிப்பன--அஞ்சுஎழுத்துமே.

The letters of the mystic pentad are chanted by Uma
whose coiffure is buzzed by bees.
Of yore, Ravana chanted them and stood redeemed.
When servitors hail them, they will confer suzerainty
on them to rule over all the planets. 8

240. கார்வணன், நான்முகன், காணுதற்கு ஒணாச்
சீர் வணச் சேவடி செவ்வி, நாள்தொறும்,
பேர் வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர் வணம் ஆவன--அஞ்சுஎழுத்துமே.

The nimbus-hued Vishnu and the Four-faced Brahma
could not behold the glorious and salvific feet of Siva.
To the God-mad that daily articulate Siva's spelendour,
it is the letters of the mystic pentad that bless
them with enchantment. 9

241. புத்தர், சமண் கழுக் கையர், பொய் கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின;
வித்தக நீறு அணிவார் வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன--அஞ்சுஎழுத்துமே.

It is the letters of the mystic pentad that clarify their
intellects and cause them reject the false utterances of
the Buddhists and the Samaṇās who deserve impalement.
It is these letters which constitute the arrow that will
do away with the inimical karma of those who
are adorned with the wondrous holy ash. 10

242. நல்-தமிழ் ஞானசம்பந்தன்--நால்மறை
கற்றவன், காழியர் மன்னன்--உன்னிய
அற்றம் இல் மாலைஈர்-ஐந்தும், அஞ்சுஎழுத்து
உற்றன, வல்லவர் உம்பர் ஆவரே.

Gnānasambandhan versed in the goodly Tamil̲ and the four
Vedas, the one who is the Prince of Kāzhi, has after
due meditation, composed this flawless garland
comprising these ten hymns on the Panchākshara.
They that are valiant to sing these psalms,
will eventually emerge as the Devas. 11

23. திரு விற்கோலம் : காந்தாரபஞ்சமம்

243. உருவின் ஆர் உமையொடும் ஒன்றி நின்றது ஓர்
திருவினான்; வளர்சடைத் திங்கள் கங்கையான்;
வெருவி வானவர் தொழ, வெகுண்டு நோக்கிய
செருவினான்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

23. TIRUVIṞKŌLAM : **Ghāndārapanjamam**

He is concorporate with Uma who is ineffably beautiful.
He is the divine One, who on His accrescent matted hair
sports the crescent and the Ganga.
He is the martial One who in ire beheld the celestials
that stood scared and adored Him.
He is entempled in Tiruviṟkōlam. 1

244. சிற்றிடை உமை ஒரு பங்கன்; அங்கையில்
உற்றது ஓர் எரியினன்; ஒரு சரத்தினால்,
வெற்றி கொள் அவுணர்கள் புரங்கள் வெந்து அறச்
செற்றவன்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He shares His body with Uma whose waist is small;
He holds in His beauteous palm the fire;
He, with a triumphant dart, gutted with fire
the Asuras' triad of walled-citadels.
He is entempled in Viṟkōlam. 2

245. ஐயன்; நல் அதிசயன்; அயன் விண்ணோர் தொழும்
மை அணி கண்டன்; ஆர் வண்ணம், வண்ணவான்;
பைஅரவு அல்குலாள் பாகம்ஆகவும்,
செய்யவன்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He is venerable One; He is a wonder of splendour;
He is the black-throated God who is adored by Brahma
and other Devas; crimson is His complexion.

He is concorporate with Her whose forelap is like
unto the cobric hood. He abides at Viṟkōlam. 3

246. விதைத்தவன், முனிவருக்கு அறம்; முன் காலனை
உதைத்து அவன் உயிர் இழந்து உருண்டு வீழ்தரப்
புதைத்தவன்; நெடு நகர்ப்-புரங்கள்மூன்றையும்
சிதைத்தவன்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He sowed in the minds of the seers, dharma.
He so kicked Yama that he rolled down and expired.
He reduced to ashes into which were buried
the triad of the Asuras' long and extensive
walled-citadels. He abides in Tiruviṟkōlam. 4

247. முந்தினான், மூவருள் முதல்வன் ஆயினான்,
கொந்து உலாம் மலர்ப்பொழில் கூகம் மேவினான்,
அந்தி வான்பிறையினான், அடியர்மேல் வினை
சிந்துவான், உறைவுஇடம்--திரு விற்கோலமே.
He is the Primal Ens; He is the Chief of the Trinity;
He has as His urbs Kūkam where in its gardens,
flowers blow in bunches; His complexion is
incarnadine; He quells the karma of His devotees. 5
He is entempled in Tiruviṟkōlam.

248. தொகுத்தவன், அருமறை அங்கம்; ஆகமம்
வகுத்தவன்; வளர் பொழில் கூகம் மேவினான்;
மிகுத்தவன்; மிகுத்தவர் புரங்கள் வெந்து அறச்
செகுத்தவன்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He compiled the rare Vedas and their Angas; He is
also the Author of the Āgamas. He dwells in
the ever-flourishing Kūkam; He is above all.
He gutted with fire the walled-citadels of the Asuras
of exceeding pride. He is entempled in Tiruvirkōlam. 6

249. விரித்தவன், அருமறை; விரிசடை வெள்ளம்
தரித்தவன்; தரியலர் புரங்கள் ஆசு அற
எரித்தவன்; இலங்கையர்கோன் இடர் படச்
சிரித்தவன்; உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He authored the rare and extensive Vedas;
on His matted hair He bears the Ganga.
He burnt tracelessly the walled-citadels of His foes.
At the distress of the monarch of Sri Lanka, He laughed.
He is entempled in Tiruvirkōlam. 7

250. This verse is not traceable. 8

251. திரிதரு புரம் எரிசெய்த சேவகன்,
வரி அரவொடு மதி சடையில் வைத்தவன்,
அரியொடு பிரமனது ஆற்றலால் உருத்
தெரியலன், உறைவுஇடம்--திரு விற்கோலமே.

He is the Heroic One who gutted with fire, the three,
winged and walled-citadels that roamed everywhere.
Siva keeps on His matted crest the streaked snake and the moon.

His form lay beyond the ken of Vishnu and Brahma
who trusting to their skill, went in quest of Him.
He is entempled in Tiruvir̲kōlam. 9

252. சீர்மை இல் சமணொடு, சீவரக் கையர்,
நீர்மை இல் உரைகள் கொள்ளாது, நேசர்க்கு
பார் மலி பெருஞ் செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையினான் இடம்--திரு விற்கோலமே.

He is the supremely glorious One who blesses His *bhaktas*
who reject the graceless utterances of the inglorious
Samaṇās and the ochre-robed Buddhists.
On earth, He graciously confers on His devotees immense opulence.
He is entempled in Tiruvir̲kōlam. 10

253. கோடல் வெண்பிறையனை, கூகம் மேவிய
சேடன செழு மதில் திரு விற்கோலத்தை,
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன
பாடல் வல்லார்களுக்கு இல்லை, பாவமே.

Gnānasambandhan is versed in Tamil̲; he
quests after Siva abiding at Kūkam who wears on His
crest the white and curved crescent; he has sung
these hymns on Tiruvir̲kōlam girt with, lofty and mighty walls.
Sins will never afflict them who hail these psalms. 11

24. திருக் கழுமலம் : கொல்லி

254. மண்ணின் நல்ல வண்ணம் வாழல் ஆம், வைகலும்;
எண்ணின் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இலை--
கண்ணின் நல்ல(ஃ)து உறும் கழுமல வள நகர்,
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

24. TIRUKKAL̲UMALAM: Kolli

We can flourish well on this earth; if we contemplate
daily Siva, no blemish can bar our goodly path of deliverance.
Kal̲umalam, indeed, is the uberous city that sweetens our sight.
Lo, it is here the Great God dwells with His supremely good Consort. 1

255. போதை ஆர் பொன் கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்
தாதையார் முனிவுஉற, தான் எனை ஆண்டவன்;
காதை ஆர் குழையினன்; கழுமல வள நகர்,
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே!

When the milk of Gnosis with which I was fed from
the golden goblet by Uma, trickled from my lips,
deeming it bad, my father was wroth with me.
Then, He, my ruler decked with a *kuzhai* in His ear,
manifested; even He the Great God with His bashful
Consort, abides in the uberous city of Kal̲umalam. 2

256. தொண்டு அணைசெய் தொழில்-துயர் அறுத்து உய்யல் ஆம்--
வண்டு அணை கொன்றையான், மதுமலர்ச் சடைமுடி;
கண் துணை நெற்றியான்; கழுமல வள நகர்,
பெண் துணைஆக ஓர் பெருந்தகை இருந்ததே!

You can stand redeemed, freed from the misery
of the hoary karma, by the grace of Grace.
On His matted crest He is adorned with the melliferous
konr̲ai flowers buzzed by bees.
He wears an eye in His forehead. The great God with His
Helpmeet abides in the uberous city of Kal̲umalam. 3

257. "அயர்வு உளோம்!" என்று நீ அசைவு ஒழி, நெஞ்சமே!--
நியர் வளை முன்கையாள் நேரிழை அவளொடும்,
கயல் வயல் குதிகொளும் கழுமல வள நகர்,
பெயர் பல துதிசெய, பெருந்தகை இருந்ததே!

O heart, feel not enervated by life's miseries.
Lo, She is adorned with jewels; Her forearms are decked
with bright bangles. The great God who is hailed
with a myriad names, dwells with Her in the uberous city of Kal̲umalam
in the fields of which, carp aplenty, leap and romp. 4
Do hail and adore Him.

258. "அடைவு இலோம்" என்று நீ அயர்வு ஒழி, நெஞ்சமே!--
விடை அமர் கொடியினான், விண்ணவர் தொழுது எழும்,
கடை உயர் மாடம் ஆர் கழுமல வள நகர்,
பெடை நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே!

O Heart, do not feel debilitated thinking that You have no refuge.
Lo, His flag sports the signum of His mount—the Bull.
Adored by the supernals, the Great God, with His Consort
whose gait is like the pen's, abides in the uberous city
of Kal̲umalam dight with vestibuled mansions. 5

259. மற்று ஒரு பற்று இலை, நெஞ்சமே!--மறைபல
கற்ற நல் வேதியர் கழுமல வள நகர்,
சிற்றிடைப் பேர் அல்குல் திருந்திழை அவளொடும்
பெற்று எனை ஆள்உடைப் பெருந்தகை இருந்ததே!

O heart, there is support none save Siva; He is my Sire and Ruler;
with Her, the bejewelled One whose waist is small
and whose *alkul* is broad, He is entempled in the uberous city
of Kal̲umalam where dwell the goodly Brahmins who have
cultivated well the many Vedas. 6

260. குறை வளைவது மொழி குறைவு ஒழி, நெஞ்சமே!--
நிறை வளை முன்கையாள் நேரிழைஅவளொடும்,
கறை வளர் பொழில் அணி கழுமல வள நகர்,
பிறை வளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே!

O heart, give up the utterances that well up from
your misery. Lo, Her forearms are fully decked
with bangles; She is adorned with ornaments.
With Her, the Great God that wears on His matted crest
the crescent, abides at the uberous city of
Kal̲umalam abounding in imbrowned gardens. 7

261. அரக்கனார்--அரு வரை எடுத்தவன்--அலறிட,
நெருக்கினார், விரலினால்; நீடு யாழ் பாடவே,
கருக்கு வாள் அருள்செய்தான்; கழுமல வள நகர்,
பெருக்கும் நீரவளொடும் பெருந்தகை இருந்ததே!

He crushed the Asura with his toe under His Mount,
who durst uproot it; at this he wailed loud and long
and then hymned Him playing on the *yazh* he made
with his nerves and bones. At this Siva blessed
him with a keen sword.
Lo, the Great God, with Her who showers grace,
abides at the uberous city of Kal̲umalam. 8

262. நெடியவன், பிரமனும், நினைப்பு அரிதுஆய், அவர்
அடியொடு முடி அறியா அழல் உருவினன்;
கடி கமழ் பொழில் அணி கழுமல வள நகர்,
பிடி நடை அவளொடும் பெருந்தகை இருந்ததே!

When the tall Vishnu and Brahma went in quest of Him,
He so soared up and as an immense column of fire
that they could not behold its bottom or top.
The Great God is entempled with Her whose gait
is like the she-elephant's, abides at the uberous
city of Kal̲umalam abounding in fragrant gardens. 9

263. தார் உறு தட்டு உடைச் சமணர் சாக்கியர்கள்தம்
ஆர் உறு சொல் களைந்து, அடிஇணை அடைந்து உய்ம்மின்!--
கார் உறு பொழில் வளர் கழுமல வள நகர்,
பேர் அறத்தாளொடும் பெருந்தகை இருந்ததே!

Listen not to the utterances of the Samaṇās clad in mats
and the Buddhists who talk as they like.
Gain the feet twain of Siva and stand redeemed.
With Her, the Goddess of great dharma, the Great God
is entempled in the uberous city of Kalumalam
girt with imbrowned gardens. 10

264. கருந் தடந் தேன் மல்கு கழுமல வள நகர்ப்
பெருந்தடங்கொங்கையொடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள், போய், விண்ணுலகு ஆள்வரே.

Our God is entempled in the uberous city of
Kalumalam abounding in clayey fields
as well as melis, with His Consort of great and buxom breasts.
On Him Gnānasambandhan has composed these
rare hymns in classical Tamil. They that sing
these psalms in love, will eventually rule the celestial world. 11

25. திருந்துதேவன் குடி : கொல்லி

265. மருந்து, வேண்டில்(ல்) இவை; மந்திரங்கள்(ள்) இவை;
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள்(ள்) இவை--
திருந்துதேவன் குடித் தேவர்தேவு, எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள், வேடங்களே.

The *vetams* of Siva hailed and adored by the rare
and great *tapaswis* are efficacious;
they constitute the needed medicine, the mantras
as well as the episodes of punya which the devotees
long to hear. He indeed, is the God of the Devas,
who is entempled in Tiruntutēvaṉkudi. 1

266. வீதிபோக்கு ஆவன; வினையை வீட்டு(வ்)வன;
ஓதி ஓர்க்கப்படாப் பொருளை ஓர்விப்பன--
தீது இல் தேவன்குடித் தேவர்தேவு, எய்திய
ஆதி அந்தம்(ம்) இலா அடிகள், வேடங்களே.

The *vētams* of the flawless God of the Devas—
the Noble God without beginning or end—, are efficacious.
They constitute the streets trodden by devotees, through
which Siva goes in procession; they annul Karma;
they manifest the correct import of the scriptural
passages unto scholars struggling to construe them. 2
Lo, our God is entempled in Tiruntutēvaṉkudi.

267. மானம் ஆக்கு(வ்)வன, மாசு நீக்கு(வ்)வன;
வானை உள்கச் செலும் வழிகள் காட்டு(வ்)வன--
தேனும் வண்டும்(ம்) இசை பாடும் தேவன்குடி,
ஆன் அஞ்சு ஆடும் முடி அடிகள் வேடங்களே.

The *vētams* of the Noble One who has His ablutions
in the five products of kine and who is entempled
in the honey-fragrant Tiruntutēvaṉkudi where bees
hum in music, are efficacious.
They constitute and foster the honour of the devotees;
they annul all their blemishes and they reveal
the ways leading to deliverance. 3

268. செவிகள் ஆர்விப்பன; சிந்தையுள் சேர்வன;
கவிகள் பாடு(வ்) வன; கண் குளிர்விப்பன--
புவிகள் பொங்கப் புனல் பாயும் தேவன்குடி,
அவிகள் உய்க்கப்படும் அடிகள் வேடங்களே.

The Noble God's *Vētams* sweeten the ears of those who
listen to His glory; they get installed in the *buddhis* of
devotees; they cause the composing of hymns;
they confer coolth on the eyes beholding them.
They receive the sacrificial oblations and cause the lofty thriving
of the entia of the cosmos; they are Siva's own who
is entempled in Tēvaṉkudi fecundated by its wealth of water. 4

269. விண் உலாவும் நெறி; வீடு காட்டும் நெறி;
மண் உலாவும் நெறி; மயக்கம் தீர்க்கும் நெறி--
தெண்நிலாவெண்மதி தீண்டு தேவன்குடி
அண்ணல், ஆன்ஏறு உடை அடிகள், வேடங்களே.

The *Vētams* of Siva, the Rider of the Bull abiding at
Tēvan̲kudi the gardens of which brush the skyey
white moon bright with lucid rays,
reveal the heavenly way and also the way leading
to deliverance. Lo, they annul the earthly tohubohu. 5

270. பங்கம் என்னப் படர் பழிகள் என்னப்படா,
புங்கம் என்னப் படர் புகழ்கள் என்னப்படும்--
திங்கள் தோயும் பொழில் தீண்டு தேவன்குடி,
அங்கம் ஆறும் சொன்ன அடிகள் வேடங்களே.

The *Vētams* of Siva abiding at Tēvan̲kudi whose
gardens are pervaded by the the rays of the moon
are many; they declared the six Angas of the Vedas; they are
not to be regarded as blameworthy or sinful at all.
They are fraught with the ineffably lofty and pervading glory. 6

271. கரைதல் ஒன்றும்(ம்) இலை, கருத வல்லார்தமக்கு;
உரைவில் ஊனம்(ம்) இலை; உலகினில் மன்னுவர்--
திரைகள் பொங்கப் புனல் பாயும் தேவன்குடி,
அரையில் வெண்கோவணத்து அடிகள் வேடங்களே.

The Vētams of Siva whose loin is covered by a white
cloth and who is entempled in Tēvan̲kudi on the banks
of the wave-tossed river, are absolutely flawless;
they that meditate on them will suffer no defect 7
and they will thrive well in this world.

272. உலகம் உட்கும் திறல் உடை அரக்கன் வலி
விலகு பூதக்கணம் வெருட்டும் வேடத்தின--
திலகம் ஆரும் பொழில் சூழ்ந்த தேவன்குடி,
அலர் தயங்கும் முடி அடிகள் வேடங்களே.

The Vētams of Siva whose crest is adorned with
flowers and who is entempled in Tēvaṉkudi girt with
gardens, glorious like *tilaka*, were valiant
to quell Ravana who was so mighty that he held
the whole cosmos under his control; they are encircled by
Siva's Bhutas that could scare away all dreadful troubles. 8

273. துளக்கம் இல்லாதன; தூய தோற்றத்தன;
விளக்கம் ஆக்கு(வ்)வன-வெறி வண்டு ஆரும் பொழில்
திளைக்கும் தேவன்குடி, திசைமுகனோடு மால்
அளக்க ஒண்ணா வண்ணத்து அடிகள் வேடங்களே.

Siva stood beyond the ken of Vishnu and Brahma
and He is entempled in Tēvaṉkudi girt with
fragrant gardens—the habitat of bees.
Lo, His Vētams avert quaking; their forms are pure;
they confer enlightenment. 9

274. செரு மருதம் துவர்த் தேர், அமண் ஆதர்கள்,
உரு மருவப்படாத் தொழும்பர் தம் உரை கொளேல்!
திரு மருவும் பொய்கை சூழ்ந்த தேவன்குடி,
அருமருந்து ஆவன, அடிகள் வேடங்களே!

The Bhuddists wear the cool ochre robes; the Samaṇās
are base; listen not to their utterances at all;
be distanced from them.
Siva's Vētams constitute the rare Catholicon; He is
entempled in Tēvaṉkudi dight with *poikais*
abounding in lotus blossoms. 10

275. சேடர் தேவன்குடித் தேவர்தேவன் தனை,
மாடம் ஓங்கும் பொழில் மல்கு தண் காழியான்--
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன--
பாடல்பத்தும் வல்லார்க்கு இல்லைஆம், பாவமே.

On the God of gods abiding at Tēvaṉkudi where dwell
the lofty ones, Tamil̠ Gnānasambandhan of the cool
Kāzhi dight with storeyed mansions and gardens,
has sung these ten celebratory hymns.
They that hail these ten psalms'll be freed from sins. 11

26. திருக் கானப்பேர்:

கொல்லி

276. பிடி எலாம் பின் செல, பெருங்கைமா மலர் தழீஇ,
விடியலே தடம் மூழ்கி, விதியினால் வழிபடும்
கடி உலாம் பூம்பொழில் கானப்பேர் அண்ணல்! நின்
அடி அலால் அடை சரண் உடையரோ, அடியரே?

26. TIRUKKĀṈAPPĒR : Kolli

Followed by she-elephants, the great-trunked tusker
bathes in the pool during day-break, gathers flowers
and ritually worships the great Siva entempled
in Kāṉappēr dight with fragrant and flowery gardens.
O merciful Siva, other than Your feet twain,
do Your devotees have any refuge at all? 1

277. நுண்இடைப் பேர் அல்குல் நூபுர மெல்அடிப்
பெண்ணின் நல்லாளை ஓர் பாகமாப் பேணினான்,
கண் உடை நெற்றியான், கருதிய கானப்பேர்
விண் இடை வேட்கையார் விரும்புதல் கருமமே.

God Siva is concorporate with His Consort—the Woman,
supremely good—, whose waist is small and
subtle, whose *alkul* is broad and whose soft feet
are decked with *silampu*.
It is at Kāṉappēr Siva whose forehead sports an eye, is entempled.
It behoves His devotees who desire the sovereignty
of Heaven to hail this shrine in true love. 2

278. வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டுஇனம்
காவிவாய்ப் பண்செயும் கானப்பேர் அண்ணலை,
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளும் ஞானநீர்
தூவி, வாய்ப் பெய்து நின்று ஆட்டுவார், தொண்டரே.

At Kāṉappēr, the soft-winged *bees* sip honey from
flowers that blow during day in the pools; eke do
they sip honey from lilies and the like
that blow during night and hum in *pann*.
The servitors of the Noble God perform His ablutions
in holy water treated with musk and sandal paste. 3

279. நிறை உடை நெஞ்சுளும், நீருளும், பூவுளும்,
பறை உடை முழவுளும், பலியுளும், பாட்டுளும்
கறை உடை மிடற்று அண்ணல் கருதிய கானப்பேர்
குறை உடையவர்க்கு அலால், களைகிலார், குற்றமே.

Siva is the blue-throated God; He blesses only those
whose hearts are suffused with well-concentrated
devotion and who, with flowers and water hail Him
and sing hymns to the beat of drums and make
offerings to Him who is entempled in Kāṉappēr.
Will He annul the blemishes of others? 4

280. ஏனப் பூண் மார்பின்மேல் என்பு பூண்டு, ஈறு இலா
ஞானப் பேர் ஆயிரம்பேரினான், நண்ணிய
கானப்பேர்ஊர் தொழும் காதலார் தீது இலர்;
வானப் பேர் ஊர் புகும் வண்ணமும் வல்லரே.

On His chest adorned with the tusk of the Hog,
He wears bones.
His sacred names are a thousand informed by endless Gnosis.

Devotees who hail Him in love with these names
and adore Him at the polis of Kāṉappēr where He is
entempled, stand freed from evil. 5

281. பள்ளமே படர்சடைப் பால் படப் பாய்ந்த நீர்-
வெள்ளமே தாங்கினான், வெண்மதி சூடினான்--
கள்ளமே செய்கிலார் கருதிய--கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்கும், என் உள்ளமே.

On His spreading matted hair having a depression,
He bears the Ganga which descended with its flood;
His crest also sports the white moon.
They that do not know what deception is, adore Him
at Kāṉappēr; my heart adores them, as they ensoul Siva. 6

282. மான மா மடப்பிடி வன் கையால் அலகுஇடக்
கானம் ஆர் கடகரி வழிபடும் கானப்பேர்,
ஊனம் ஆம் உடம்பினில் உறு பிணி கெட எணின்,
ஞானம் ஆம் மலர்கொடு நணுகுதல் நன்மையே.
As the huge and bashful she-elephant sweeps clean the floor with
its mighty trunk, the great and musty tusker of the forest
adores Him in Kāṉappēr where Siva is entempled.
To get rid of the *malas* of the blemished body one should adore
Siva with the divine flowers which will spell weal. 7

283. வாளினான், வேலினான், மால்வரை எடுத்த திண்-
தோளினான், நெடு முடி தொலையவே ஊன்றிய
தாளினான், கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளும் நாள் உயர்வது ஓர் நன்மையைப் பெறுவரே.

He was armed with a sword and a spear; mighty were
his shoulders with which he uprooted Siva's great Mount;
The God of Kāṉappēr crushed Him with His foot.
They that hail Him with their heads will daily
come by the lofty weal ever-crescent. 8

284. சிலையினால் முப்புரம் தீ எழச் செற்றவன்,
நிலை இலா இருவரை நிலைமை கண்டு ஓங்கினான்,
கலையின் ஆர் புறவில்-தேன் கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவம் உடையார்களே.

With His bow He gutted with fire the Tripura. Beholding the pride
of Vishnu and Brahma, He soared up and up beyond
their ken of vision. He is entempled in Kāṉappēr
abounding in fecund and honey-fragrant regions.
When they of spiritual learning adore Him with their
heads, they eventually emerge as tapaswis. 9

285. உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்து, உச்சி
பறித்தலும் போர்த்தலும் பயன் இலை, பாவிகாள்!
மறித் தலை மடப்பிடி வளர் இளங் கொழுங் கொடி
கறித்து, எழு கானப்பேர் கைதொழல் கருமமே.
O Sinners that roam about toting slings, bottle-
gourds and jugs! You indulge in trichotillomania
and loiter shrouded, all in vain.
Cultivate the adoration with your heads, of Siva, abiding in Kāṉappēr
where the bashful and young she-elephant 10
of curved head thrives feeding on sumptuous lianans.

286. காட்டுஅகத்து ஆடலான் கருதிய கானப்பேர்,
கோட்டகத்து இள வரால் குதிகொளும் காழியான்--
நாட்டுஅகத்து ஓங்கு சீர் ஞானசம்பந்தன--
பாட்டுஅகத்து இவை வலார்க்கு இல்லைஆம், பாவமே.

Siva, the Dancer, is willingly entempled in Kāṉappēr.
On Him, Gnānasambandhan whose glory pervades
all the countries, the one of Kāḻi in the pools
of which *varals* leap and sport,
has composed these hymns; the sins of those who
hail Siva with these psalms will cease altogether. 11

27. திருச் சக்கரப்பள்ளி : கொல்லி

287. படையினார், வெண்மழு; பாய் புலித்தோல் அரை
உடையினார்; உமை ஒருகூறனார்; ஊர்வது ஓர்
விடையினார்; வெண்பொடிப் பூசியார்; விரிபுனல்
சடையினார்; உறைவுஇடம்--சக்கரப்பள்ளியே.

27. TIRUCCHAKKARAPPAḶḶI : Kolli

Siva wields the weapon of the white *mazhu*; His waist is
covered with the skin of the leaping tiger.
He is concorporate with Uma; He rides the peerless Bull;
He is bedaubed with the white holy ash; He sports
on His matted crest the extensive flood of the Ganga.
He is entempled in Chakkarappaḷḷi. 1

288. பாடினார், அருமறை; பணிமதி சடைமிசைச்
சூடினார், படுதலை துன் எருக்குஅதனொடும்;
நாடினார், இடு பலி; நண்ணி ஓர் காலனைச்
சாடினார்; வள நகர்--சக்கரப்பள்ளியே.

Siva sings the rare Vedas of which He is the Author;
He wears on His matted crest the moist moon; He is
decked with a garland of skulls and madar flowers.
He goes about begging alms; He kicked to death Yama
who strode forth to snatch the life of Mārkandēya
who was always attached to Siva.
Lo, He is entempled in the uberous city of Chakkarappaḷḷi. 2

289. மின்னின் ஆர் சடைமிசை விரி கதிர் மதியமும்,
பொன்னின் ஆர் கொன்றையும், பொறி கிளர் அரவமும்,
துன்னினார்; உலகுஎலாம் தொழுது எழ நால்மறை-
தன்னினார்; வள நகர்-சக்கரப்பள்ளியே.

On His fulgurant matted crest He wears the bright moon
of pervading rays, golden flowers of *konrai*
and the speckled serpent.
He is the import of the Vedas hailed and adored by the cosmos. 3
He is entempled in the uberous city of Chakkarappaḷḷi.

290. நலம் மலி கொள்கையார், நால்மறை பாடலார்,
வலம் மலி மழுவினார், மகிழும் ஊர்--வண்டு அறை
மலர் மலி சலமொடு வந்து இழி காவிரி
சலசல மணி கொழி சக்கரப்பள்ளியே.

Siva is the doer of good; He, the Author of the four Vedas,
chants them musically.
He holds a *mazhu* in His right hand; He happily
abides in Chakkarappaḷḷi on the banks of the Kāviri
which flows gurgling and rolls laden with flowers
buzzed by bees and shores up many a gem. 4

291. வெந்தவெண்பொடி அணி வேதியர், விரிபுனல்
அந்தம் இல் அணி மலைமங்கையோடு, அமரும் ஊர்--
கந்தம் ஆர் மலரொடு, கார் அகில், பல்மணி,
சந்தினோடு, அணை புனல் சக்கரப்பள்ளியே.

He who authored the Vedas is adorned with the baked
and white ash; He holds the extensive Ganga on
His crest; He is concorporate with His Woman who is
decked with a fadeless garland.
He is entempled in Chakkarappaḷḷi on the banks of
the Kāviri that rolls laden with fragrant flowers,
the dark *akil* wood, the sandal wood and gems galore. 5

292. பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார், வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார், உமை ஒருகூறொடும் ஒலிபுனல்
தாங்கினார், உறைவுஇடம்--சக்கரப்பள்ளியே.

Siva duly bent His fierce bow and devastated
the triad of the walled-citadels.

Hailed and adored by the Devas and the Asuras
He soared up humongously. He who bore
the dinsome Ganga, is entempled in Chakkarappaḷḷi. 6

293. பாரினார் தொழுது எழு பரவு பல்ஆயிரம்-
பேரினார்; பெண் ஒருகூறனார்; பேர்ஒலி-
நீரினார், சடைமுடி; நிரை மலர்க்கொன்றைஅம்-
தாரினார்; வள நகர்--சக்கரப்பள்ளியே.

Siva, hailed and adored by the people on earth, is known
by a myriad names. He shares His body with His Woman.
His matted crest sports the uproarious Ganga. His garland
is woven with the rows of *konrai* flowers. He abides at
the uberous polis of Chakkarappaḷḷi. 7

294. முதிர் இலா வெண்பிறை சூடினார்; முன்ன நாள்
எதிர் இலா முப்புரம் எரிசெய்தார், வரைதனால்;
அதிர் இலா வல் அரக்கன் வலி வாட்டிய
சதிரினார்; வள நகர்--சக்கரப்பள்ளியே.

He wears on His crest the unageing cresent; of yore,
He gutted with fire the well-nigh invincible
triad of the walled-citadels.
He crushed under His Mount the Asura who seldom quaked. 8
Siva is the Adept enshrined in the polis of Chakkarappaḷḷi.

295. துணி படு கோவணம், சுண்ணவெண்பொடியினர்,
பணி படு மார்பினர், பனிமதிச் சடையினர்,
மணிவணன்அவனொடு மலர்மிசையானையும்
தணிவினர், வள நகர்--சக்கரப்பள்ளியே.

He wears a severed loin-cloth; He is adorned with the white
fragrant ash; His crest is adorned with a serpent.
He sports on His matted crest the moist moon.
He qulled the pride of the blue-gem-hued Vishnu
and Brahma. He is entempled in the uberous
polis of Chakkarappaḷḷi. 9

296. உடம்பு போர் சீவரர், ஊண்தொழில் சமணர்கள்,
விடம் படும் உரை அவை மெய் அல; விரிபுனல்
வடம் படு மலர்கொடு வணங்குமின், வைகலும்,
தடம் புனல் சூழ்தரு சக்கரப்பள்ளியே!

The noxious utterances of the ochre-robed Buddhists
and the Samaṇās who eat their alms from their
gowpens, are not at all true.
With abundant holy water and flowers that could be
woven into garlands, adore Him daily at His shrine
at Chakkarappaḷḷi girt with broad pools. 10

297. தண்வயல் புடை அணி சக்கரப்பள்ளி எம்
கண்நுதலவன் அடி, கழுமல வள நகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம்பந்தன் சொல்
பண்ணிய இவை சொல, பறையும், மெய்ப் பாவமே.

The God of Chakkarappaḷḷi girt with cool fields
sports an eye in His forehead.
Tamil̲ Gnānasambandhan of the uberous polis of Kal̲umalam
has sung these hymns hailing His salvific feet.
The bodily sins of those that hail these psalms'll vanish. 11

28. திரு மழபாடி : கொல்லி

298. காலை ஆர் வண்டுஇனம் கிண்டிய, கார் உறும்,
சோலை ஆர் பைங்கிளி சொல் பொருள் பயிலவே,
வேலை ஆர் விடம் அணி வேதியன் விரும்பு இடம்--
மாலை ஆர் மதி தவழ் மா மழபாடியே.

28. TIRUMAL̲APĀDI : Kolli

Siva is willingly entempled in the great Mal̲apādi
over which the crepuscular moon sails; in its gardens
the swarming bees hum in a day-time *pann*
and the beauteous parakeets cultivate the Vedas—rich in import.
Lo, the throat of our God, the Brahmin, wears a patch
of the oceanic venom which He quaffed. 1

299. கறை அணி மிடறு உடைக் கண்ணுதல், நண்ணிய
பிறை அணி செஞ்சடைப் பிஞ்ஞகன், பேணும் ஊர்--
துறை அணி குருகுஇனம் தூ மலர் துதையவே,
மறை அணி நாவினான் மா மழபாடியே.

Siva wears a blue patch in His throat; He who is
Pinggnakan, bears on His ruddy matted crest
the crescent. He is a chanter of the Vedas.

He is entempled in the great Malapādi in whose fords
of water are seen herons which are indistinguishable
from the white flowers. 2

300. அந்தணர் வேள்வியும், அருமறைத் துழனியும்,
செந்தமிழ்க் கீதமும், சீரினால் வளர்தர,
பந்து அணை மெல்விரலாளொடும் பயில்வுஇடம்--
மந்தம் வந்து உலவு சீர் மா மழபாடியே.

Siva is majestically entempled in the great Malapādi where resounds
the chanting of the Vedas during sacrifices performed
by Brahmins and the songs of salvific Tamil.
He abides here with His Consort whose fingers sport
a ball, and it is here the Notus wafts. 3

301. அத்தியின்உரிதனை அழகு உறப் போர்த்தவன்;
முத்தி ஆய் மூவரில் முதல்வனாய் நின்றவன்;
பத்தியால் பாடிட, பரிந்து அவர்க்கு அருள்செயும்
அத்தனார்; உறைவுஇடம்--அணி மழபாடியே.

Siva mantled Himself beautifully with the skin
of the Tusker which He excoriated.
He is the conferrer of *mukti*; He is the Primal God
who is the Lord of the Trinity. He grants grace
to them that sing and hail Him in *bhakti.*
Lo, He is entempled in the ornate Malapādi—
the habitat of Brahmins galore. 4

302. கங்கை ஆர் சடைஇடைக் கதிர் மதி அணிந்தவன்,
வெங் கண் வாள் அரவு உடை வேதியன், தீது இலாச்
செங்கயல்கண் உமையாளொடும் சேர்வுஇடம்--
மங்கைமார் நடம் பயில் மா மழபாடியே.

On His matted hair He bears the Ganga and the radiant moon; He is the God of the Vedas, who is adorned with the fierce-eyed adder. He is concorporate with the blemishless Uma whose *kayal*-like eyes are streaked red. He abides at the great Mal̲apādi where damsels enact their dance. 5

303. பாலனார் ஆர் உயிர் பாங்கினால் உண வரும்
காலனார் உயிர் செகக் காலினால் சாடினான்,
சேலின் ஆர் கண்ணினாள் தன்னொடும் சேர்வுஇடம்--
மாலினார் வழிபடும் மா மழபாடியே.

He kicked with His foot Yama who strode forth to seize the rare life of the lad, to death. He abides with His Consort whose eyes are *cēl*-like at the great Mal̲apādi, adored by the lofty and glorious devotees. 6

304. விண்ணில் ஆர் இமையவர் மெய்ம் மகிழ்ந்து ஏத்தவே,
எண்இலார் முப்புரம் எரியுண, நகைசெய்தார்;
கண்ணினால் காமனைக் கனல் எழக் காய்ந்த எம்
அண்ணலார்; உறைவுஇடம்--அணி மழபாடியே.

Siva is adored by the Devas in delight great;
with His laughter He gutted with fire the triad of
the walled-citadels of the Asuras who thought not of Him.
He smote Manmata with the fire of His third eye.
The Great God is enshrined in the ornate Maḻapādi. 7

305. கரத்தினால் கயிலையை எடுத்த கார் அரக்கன
சிரத்தினை ஊன்றலும், சிவன்அடி சரண் எனா,
இரத்தினால் கைந்நரம்பு எடுத்து இசை பாடலும்,
வரத்தினான் மருவு இடம்--மா மழபாடியே.

With His hands the dark Asura uprooted His Kailās.
When He pressed his heads, he in all humility,
affirmed that the feet of Siva are his refuge, plucked out
his nerves, made them into a veena and tunefully
hymned Him who then blessed him with boons.
He, our God, is entempled in the great Maḻapādi. 8

306. ஏடு உலாம் மலர்மிசை அயன், எழில் மாலும்ஆய்,
நாடினார்க்கு அரிய சீர் நாதனார் உறைவுஇடம்--
பாடுஎலாம் பெண்ணையின் பழம் விழ, பைம்பொழில்
மாடுஎலாம் மல்கு சீர் மா மழபாடியே.
When Brahma seated on the petalled Lotus and Vishnu,
the handsome one sought to behold His crown
and feet, the glorious God soared up, beyond their ken.
He abides at the great Maḻapādi of accrescent glory
where in its sides fall the ripe nuts of palmyra
and where green gardens thrive. 9

307. உறி பிடித்து ஊத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறி பிடித்து, அறிவு இலா நீசர் சொல் கொள்ளன்மின்!
பொறி பிடித்த (அ)ரவு இனம் பூண் எனக் கொண்டு, மான்-
மறி பிடித்தான் இடம் மா மழபாடியே.

The Samaṇās of stinking mouths who tote slings
and the Bhuddhists, are brainless and know not
to pursue the righteous way; do not follow the words
of thses who are base.
Lo, He wears as an ornament the speckled serpent;
He holds in His hand a fawn.
He is entempled in the great Mal̲apādi. 10

308. ஞாலத்து ஆர் ஆதிரை நாளினான், நாள்தொறும்
சீலத்தான், மேவிய திரு மழபாடியை
ஞாலத்தால் மிக்க சீர் ஞானசம்பந்தன் சொல்
கோலத்தால் பாடுவார் குற்றம் அற்றார்களே.

In this world, the day ruled by the Betelgeuse is
sacred to His devotees.
His glorious Tirumal̲apādi is hailed daily.
On Him, Gnānasambandhan who is hailed as the one of
ubiquitous renown by the world, has hymned these verses. 11
They that hail these psalms in splendour'll thrive blemishless.

29. மேலைத் திருக்காட்டுப்பள்ளி : கொல்லி

309. வாரு மன்னும் முலைமங்கை ஓர் பங்கினன்;
ஊரு மன்னும் பலி உண்பதும் வெண்தலை--
காரு மன்னும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி,
நீரு மன்னும் சடை நிமலர்தம் நீர்மையே!

29. MĒLAITTHIRUKKĀṬṬUPPAḶḶI : Kolli

Siva is concorporate with Uma whose breasts are
covered by a breast-band; He begs alms in
every polis in a white skull and eats it.
He is *Nimala* who bears on His matted crest the flood
of Ganga; His nature is supremely great.
He is entempled in Kāṭṭuppaḷḷi girt with gardens
the tops of which graze the clouds. 1

310. நிருத்தனார், நீள்சடை மதியொடு பாம்பு அணி
கருத்தனார்--கடி பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
அருத்தனார்; அழகு அமர் மங்கை ஓர் பாகமாப்
பொருத்தனார், கழல் இணை போற்றுதல் பொருளதே.

On His long matted hair, He, the Dancer, is adorned with
the crescent and a snake.
He abides at Kāṭṭuppaḷḷi girt with fragrant gardens.
He is the import of the scriptures; He is concorporate
with His comely Consort.

Adoration of His ankleted feet twain, informs
the adorer with divine purpose. 2

311. பண்ணின் ஆர் அருமறை பாடினார், நெற்றி ஓர்
கண்ணினார்--கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி,
விண்ணின் ஆர் விரிபுனல் மேவினார், சடைமுடி
அண்ணலார், எம்மை ஆள்உடைய எம் அடிகளே.

He, the Author of the Vedas, sings them in appropriate
panns; He sports an eye in His forehead.
He is entempled in Kāṭṭuppaḷḷi girt with fragrant gardens;
He bears on His matted crest the heavenly Ganga immense.
Our Noble God rules us mercifully. 3

312. பணம் கொள் நாகம் அரைக்கு ஆர்ப்பது; பல்பலி
உணங்கல்ஓடு உண்கலன்; உறைவது காட்டுஇடை--
கணங்கள் கூடித் தொழுது ஏத்து காட்டுப்பள்ளி,
நிணம் கொள் சூலப்படை நிமலர்தம் நீர்மையே!

His waist is cinctured with a hooded serpent.
He begs alms from many places in a dried skull and eats it.
He abides at the crematory; He is entempled in
Kāṭṭuppaḷḷi adored by the Siva-*ganas*.
He is Nimala who wields the weapon of 4
a spear to which flesh is still sticking.His mercy is everduring.

313. வரை உலாம் சந்தொடு வந்து இழி காவிரிக்
கரை உலாம் இடு மணல் சூழ்ந்த காட்டுப்பள்ளி,
திரை உலாம் கங்கையும் திங்களும் சூடி, அங்கு
அரை உலாம் கோவணத்து அடிகள் வேடங்களே!

He, our God, is entempled in Kāṭṭuppaḷḷi on the bank
of the Kaviri which rolls in its current the montane
sandalwood and pushes it to its sandy shores.
He is adorned with the billowy Ganga and the crescent
on His crest. He is the Noble God who is clad in a loin-cloth.
Such are His *Vētams*. 5

314. வேதனார், வெண்மழு ஏந்தினார், அங்கம் முன்
ஓதினார், உமை ஒருகூறனார், ஒண்குழைக்
காதினார்--கடி பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
நாதனார்; திருவடி நாளும் நின்று ஏத்துமே!

He, the God of the Vedas, wields the weapon of *mazhu*
which is white and bright; He is the Author of the Angas.
He shares His body with Uma; He wears a bright
kuzhai in one ear.
He is entempled in Kāṭṭuppaḷḷi girt with suaveolent gardens;
Hail the Lord-God's salvific feet every day. 6

315. மையின் ஆர் மிடறனார், மான் மழு ஏந்திய
கையினார்--கடி பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி,
தையல் ஓர்பாகமாத் தண்மதி சூடிய
ஐயனார்; அடி தொழ, அல்லல் ஒன்று இல்லையே.

His throat sports a dark patch; His hands hold
the antelope and the *mazhu*.
Concorporate with His Consort, He is enshrined in
Kāṭṭuppaḷḷi girt with incense-breathing gardens.
If the feet of the Great One who wears the cool moon,
are hailed and adored, troubles will not afflict. 7

316. சிலைதனால் முப்புரம் செற்றவன், சீரின் ஆர்
மலைதனால் வல்அரக்கன் வலி வாட்டினான்,
கலைதனால் புறவு அணி மல்கு காட்டுப்பள்ளி
தலைதனால் வணங்கிட, தவம் அது ஆகுமே.

He is the Glorious One who devastated the triad of
the walled-citadels with His bow; He quelled the puissance
of the fierce Asura.
He is entempled in Kāṭṭuppaḷḷi of the *mullai* region
where thrive aplenty the antlered deer.
It constitutes *tapas* to adore Him with our heads. 8

317. செங்கண் மால், திகழ்தரு மலர் உறை திசைமுகன்,
தம் கையால்-தொழுது எழ, தழல்உரு ஆயினான்--
கங்கை ஆர் சடையினான்--கருது காட்டுப்பள்ளி
அம் கையால்-தொழுமவர்க்கு, அல்லல் ஒன்று இல்லையே.

When the ruddy-eyed Vishnu and the Four-faced Brahma
whose seat is the splendorous Lotus, hailed Him
with their hands, He soared up and up as a great flame.
He is adorned with the Ganga on His matted crest.

Troubles will not afflict them who adore Him at Kāṭṭuppaḷḷi with
their hands turning beautiful by worship. 9

318. போதியார், பிண்டியார், என்ற அப்பொய்யர்கள்
வாதினால் உரை அவை மெய் அல; வைகலும்,
காரின் ஆர் கடிபொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளி
ஏரினால்-தொழுது எழ, இன்பம் வந்து எய்துமே.

The worshippers of the peepul and the asoka trees
are fibsters; their disputatious utterances are false.
Bliss will ensue if the God of Kāṭṭuppaḷḷi which is
girt with fragrant gardens over which clouds sail,
is hailed daily duly and gloriously. 10

319. பொரு புனல் புடை அணி புறவ நன்நகர் மனன்--
அருமறை அவை வல அணி கொள் சம்பந்தன்--சொல்,
கருமணிமிடற்றினன் கருது காட்டுப்பள்ளி
பரவிய தமிழ் சொல, பறையும், மெய்ப் பாவமே.

Gnānasambandhan, well-versed in the rare Vedas,
the Prince of the goodly city of Kāḻi, known as
Puṟavam abounding in the wealth of water,
has sung these ornate hymns on the God whose
throat is blue like sapphire, and who is entempled in Kāṭṭuppaḷḷi.
The sins of the body of those that hail Siva with these Tamiḻ
psalms, will fritter away altogether. 11

30. திரு அரதைப்பெரும்பாழி :கொல்லி

320. பைத்த பாம்போடு, அரைக் கோவணம், பாய் புலி,
மொய்த்த பேய்கள் முழக்கம் முதுகாட்டுஇடை,
நித்தம்ஆக(ந்) நடம்ஆடி, வெண் நீறு அணி
பித்தர் கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

30. TIRUARATHAIPPERUMPĀḶI :Kolli

Cinctured with a snake of poisonous sacs in His waist,
which He covers with a loin-cloth and the skin of a leapling
tiger and encircled by His dinsome Bhuta-Hosts,
He enacts His quotidian dance divine in the crematory.
The Mad One adorned with the white and holy ash, is
entempled in Arathaipperumpāḻi. 1

321. கயல சேல கருங்கண்ணியர் நாள்தொறும்
பயலை கொள்ள, பலி தேர்ந்து உழல் பான்மையார்;
இயலை, வானோர் நினைந்தோர்களுக்கு, எண்ண(அ)ரும்
பெயரர்; கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

The Handsome One begs alms daily from damsels whose
eyes are like *kayal* and *cēl* and who become impassioned
and pallescent beholding Him. His names are innumerable. 2
He is entempled in Arathaipperumpāḻi.

322. கோடல் சால(வ்) உடையார், கொலை யானையின்
மூடல் சால(வ்) உடையார், முளி கான்இடை
ஆடல் சால(வ்) உடையார், அழகு ஆகிய
பீடர், கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

He takes to much mendicancy; He is mantled with
the derma of the murderous Tusker.
In the loathsome crematory He loves to dance.
He is the glorious and handsome One who is entempled
in Arathaipperumpāli. 3

323. மண்ணர், நீரார், அழலார், மலி காலினார்,
விண்ணர், வேதம் விரித்து ஓதுவார் மெய்ப்பொருள்,
பண்ணர், பாடல் உடையார், ஒருபாகமும்
பெண்ணர், கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

He is earth, water, fire, moving air and ether.
He explicates the true import of the Vedas;
He is hailed in songs cast in *panns*. He is concorporate
with His Woman; He is entempled in Arathaipperumpāli. 4

324. மறையர், வாயின் மொழி; மானொடு, வெண்மழு,
கறைகொள் சூலம்(ம்), உடைக் கையர்; கார் ஆர்தரும்
நறை கொள் கொன்றை நயந்து ஆர்தரும் சென்னிமேல்
பிறையர்; கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

He authored the Vedas compact of sweet vocables;
His hands wield the antelope, the white *mazhu* and the bloody
spear; He loves to get adorned with the *konrai* flowers
that blow during the rainy season.
He wears on His matted crest the crescent;
He is entempled in Arathaipperumpāli. 5

325. புற்று அரவம், புலித்தோல், அரைக் கோவணம்,
தற்று, இரவில் நடம்ஆடுவர்; தாழ்தரு
சுற்று அமர் பாரிடம், தொல்கொடியின்மிசைப்
பெற்றர்; கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

His waist is cinctured with a serpent of the ant-hill;
He wears a tiger-skin and a loin-cloth.
He dances during night; He is encircled by His adoring
Bhuta-Hosts; His flag sports the signum of the Bull.
He is entempled in Arathaipperumpāli. 6

326. துணை இல் துத்தம், சுரிசங்கு, அமர் வெண்பொடி,
இணை இல் ஏற்றை உகந்து ஏறுவரும்(ம்), எரி-
கணையினால் முப்புரம் செற்றவர், கையினில்
பிணையர், கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

He wears in His ear a *kuzhai* wrought of the whorled conch.
He is adorned with the holy ash. He rides in joy
His mount, the Bull.
With a burning dart He destroyed the three walled-citadels.
He sports a fawn in His hand. He is entempled in Arathaipperumpāli. 7

327. சரிவு இலா வல் அரக்கன் தடந்தோள் தலை
நெரிவில் ஆர(வ்) அடர்த்தார், நெறிமென்குழல்
அரிவை பாகம் அமர்ந்தார், அடியாரொடும்
பிரிவு இல் கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

Siva crushed and cracked the mighty heads and the shoulders
of the tireless and fierce Asura.
He is concorporate with His Consort whose coiffure is dense and soft.
He who parts not from His devotees in entempled in Arathaipperumpāli. 8

328. வரி அரா என்பு அணி மார்பினர், நீர் மல்கும்
எரி அராவும் சடைமேல் பிறை ஏற்றவர்,
கரிய மாலோடு அயன் காண்பு அரிது ஆகிய
பெரியர், கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

Siva wears as jewels on His chest the striped snake
and bones; on His matted crest blazing red, He bears
the Ganga and the crescent.
He is the Great One who stood unbeholdable by
the dark-hued Vishnu and Brahma.
He is entempled in Arathaipperumpāli. 9

329. நாண் இலாத சமண்சாக்கியர் நாள்தொறும்
ஏண் இலாத(ம்) மொழிய(வ்), எழில் ஆயவர்;
சேண் உலாம் மும்மதில் தீ எழச் செற்றவர்;
பேணு கோயில்(ல்)--அரதைப்பெரும்பாழியே.

The shameless Samaṇās and the Buddhists articulate
daily inglorious words which He approves not.
He is the Handsome One who gutted with fire the triad
of the walled-citadels.
He fosters the temple in Arathaipperumpāli whereat he abides. 10

330. "நீரின் ஆர் புன்சடை நிமலனுக்கு இடம்" என,
பாரினார் பரவு அரதைப்பெரும்பாழியை,
சீரின் ஆர் காழியுள் ஞானசம்பந்தன் செய்
ஏரின் ஆர் தமிழ் வல்லார்க்கு இல்லைஆம், பாவமே.

He, the *Nimalan* bears on His ruddy matted crest, the Ganga.
He is entempled in Arathaipperumpāḻi hailed
and adored by the people on earth.
On Him, Gnānasambandhan of glorious Kāḻi
has sung these beautiful hymns in Tamiḻ.
The sins of those valiant in these psalms, will vanish. 11

31. திரு மயேந்திரப்பள்ளி : கொல்லி

331. திரை தரு பவளமும், சீர் திகழ் வயிரமும்,
கரைதரும் அகிலொடு கன வளை புகுதரும்,
வரைவிலால் எயில் எய்த, மயேந்திரப்பள்ளியுள்,
அரவு அரை, அழகனை அடி இணை பணிமினே!

31. TIRUMAYĒNTIRAPPAḶḶI : Kolli

The billows of the sea shore up coral, glorious diamond,
akil and conches of great worth at Mayēntirappaḷḷi
where Siva is entempled.
Siva, of yore, with His bow smote the walled-citadels.
Do adore Siva's feet twain in this shrine of His 1
whose waist is cinctured with a serpent.

332. கொண்டல் சேர் கோபுரம், கோலம் ஆர் மாளிகை,
கண்டலும் கைதையும் கமலம் ஆர் வாவியும்,
வண்டு உலாம் பொழில், அணி மயேந்திரப்பள்ளியுள்,
செண்டு சேர் விடையினான் திருந்து அடி பணிமினே!

Siva is entempled in Mayēntirappaḷḷi; it is dight with
splendorous mansions and towers that brush the clouds;
here are gardens buzzed by bees and teeming with
kāntal,kaitai and lotus flowers. Adore the salvific
feet of Siva, the Rider of the Bull, who wields a *centu*. 2

333. கோங்கு இள வேங்கையும், கொழு மலர்ப்புன்னையும்,
தாங்கு தேன் கொன்றையும், தகு மலர்க்குரவமும்,
மாங் கரும்பும், வயல் மயேந்திரப்பள்ளியுள்
ஆங்கு இருந்தவன் கழல்அடி இணை பணிமினே!

Siva is entempled in Mayēntirappaḷḷi where *kōṅku*,
young *vēṅkai, puṉṉai* of lovely flowers, melliferous
koṉṟai and *kuravam* of comely flowers, flourish in its
gardens; in its fields grow mango trees and sweetcanes.
Do adore the ankleted feet twain of Siva in this shrine. 3

334. வங்கம் ஆர் சேண் உயர் வரு குறியால் மிகு
சங்கம் ஆர் ஒலி, அகில் தரு புகை கமழ்தரும்
மங்கை ஓர்பங்கினன், மயேந்திரப்பள்ளியுள்
எங்கள் நாயகன் தனது இணை அடி பணிமினே!

Siva who is entempled in Mayēntirappaḷḷi close to the sea
to which mercantile barks return; to proclaim this,
conches are resounded and the eaglewood is burnt
whose fragrant smoke pervades the lofty sky.
Do adore the feet twain of the God Siva in this shrine. 4

335. நித்திலத்தொகைபல நிரை தரு மலர் எனச்
சித்திரப் புணரி சேர்த்திட, திகழ்ந்து இருந்தவன்,
மைத் திகழ் கண்டன், நல் மயேந்திரப்பள்ளியுள்
கைத்தலம் மழுவனைக் கண்டு, அடி பணிமினே!

As if to adore Siva with serried flowers, the eesome sea
shores up heaps of pearls at Mayēntirappaḷḷi
where He is splendorously entempled.
His throat wears a murky patch; His hand wields a *mazhu*.
Behold Him and pay obeisance to Him. 5

336. சந்திரன், கதிரவன், தகு புகழ் அயனொடும்
இந்திரன், வழிபட இருந்த எம் இறையவன்--
மந்திரமறை வளர் மயேந்திரப்பள்ளியுள்
அந்தம் இல் அழகனை--அடி பணிந்து உய்ம்மினே!

Siva is entempled in Mayēntirappaḷḷi adored by
Chandra, Surya and Brahma of meritorious fame
as well as Indira. Here are chanted the Vedic mantras. 6
His beauty knows no end. Bow at His feet and stand redeemed.

337. சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடம் நவில் புரிவினன், நறவு அணி மலரொடு
படர்சடை மதியினன், மயேந்திரப்பள்ளியுள்
அடல் விடை உடையவன் அடி பணிந்து உய்ம்மினே!

Siva is entempled in Mayēntirappaḷḷi adored by *munis*
of matted hair who come to the shrine with the needed
articles of pūja. He is a Dancer.
On His spreading matted hair, He wears melliferous flowers.
He is the Rider of the martial Bull.
Adore His feet and stand redeemed. 7

338. சிரம்ஒருபதும் உடைச் செரு வலி அரக்கனைக்
கரம்இருபதும் இறக் கனவரை அடர்த்தவன்,
மரவு அமர் பூம்பொழில் மயேந்திரப்பள்ளியுள்
அரவு அமர் சடையனை அடி பணிந்து உய்ம்மினே!

He crushed under His mighty Mount the ten heads and the twenty
arms of the puissant and martial Asura.
He is entempled in Mayēntirappaḷḷi girt with flowery
gardens of *maravam* trees. He sports on His matted crest
an adder. Adore His feet and stand redeemed. 8

339. நாக(அ)ணைத் துயில்பவன், நலம் மிகு மலரவன்,
ஆக (அ)ணைந்து அவர் கழல் அணையவும் பெறுகிலர்;
மாகு அணைந்து அலர்பொழில் மயேந்திரப்பள்ளியுள்
யோகு அணைந்தவன் கழல் உணர்ந்து இருந்து உய்ம்மினே!

Vishnu who slumbers on the *Nāga* Ādisesha and Brahma
seated on the Lotus—the flower par excellence, could not
gain access to Him. He is entempled in Mayēntirappaḷḷi
girt with flowery and sky-vaulting gardens.
Siva is the God of Yoga. Meditate on His ankleted feet,
become Siva-conscious and gain deliverance. 9

340. உடை துறந்தவர்களும், உடை துவர்உடையரும்,--
படு பழி உடையவர்--பகர்வன விடுமின், நீர்!
மடை வளர் வயல் அணி மயேந்திரப்பள்ளியுள்
இடம் உடை ஈசனை இணை அடி பணிமினே!

The unclad Samaṇās and the ochre-robed Buddhists
are utterly blame worthy; reject their utterances.
Siva is entempled in Mayēntirappaḷḷi abounding in
fields as well as sluices. Do adore His feet twain. 10

341. வம்பு உலாம் பொழில் அணி மயேந்திரப்பள்ளியுள்
நம்பனார் கழல்அடி ஞானசம்பந்தன் சொல்,
"நம் பரம் இது" என, நாவினால் நவில்பவர்,
உம்பரார் எதிர்கொள, உயர் பதி அணைவரே.

Siva, the supremely desirable, abides at Mayēntirappaḷḷi
girt with incense-breathing gardens.
Hailing His ankleted feet, Gnānasambandhan has
sung these hymns. They that hail these psalms
with their tongues convinced that it behoves them

to do so, will gain the Empyrean, welcomed by
the supernals who foregather to receive them. 11

32. திரு ஏடகம் : **கொல்லி**

342. வன்னியும் மத்தமும் மதி பொதி சடையினன்,
பொன் இயல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட, அடியவர்
இன்இசைபாடல் ஆர் ஏடகத்து ஒருவனே.

32. TIRUVĒṬAKAM : **Kolli**

On His matted hair He is decked with *vanni, ūmattham*
and the crescent.
Siva is entempled in Ētakam for the adoration of His
auric and holy feet with flowers, by the Vedic Brahmins
and for the worship by devotees to hail them in sweet hymns. 1

343. கொடி நெடுமாளிகை, கோபுரம், குளிர்மதி
வடிவு உற அமைதர, மருவிய ஏடகத்து
அடிகளை அடி பணிந்து அரற்றுமின், அன்பினால்!
இடிபடும் வினைகள் போய் இல்லைஅது ஆகுமே.

Ētakam is cool; it is dight with towered mansions
endowed with flags; the tops of these brush the moon.
Our Noble God is splendorously entempled in Ētakam.
Adore Him and in devotion deep celebrate Him. 2

344. குண்டலம் திகழ்தரு காது உடைக் குழகனை--
வண்டு அலம்பும் மலர்க்கொன்றை, வான்மதி, அணி
செண்டு அலம்பும் விடைச் சேடன்--ஊர்ஏடகம்
கண்டு கைதொழுதலும், கவலைநோய் கழலுமே.

Siva is the ever-young One; in His ear-lobes dangle a pair
of *kundalas*; He is entempled in Ētakam.
He is decked with *konrrai* flowers bebuzzed by bees;
He sports on His crown the skyey moon; His mount
is the Bull decked with resounding bells.
He is the especial One. If you adore Him with
Your hands, your worries and maladies will vanish. 3

345. ஏலம் ஆர் தரு குழல் ஏழையோடு எழில் பெறும்
கோலம் ஆர்தரு விடைக் குழகனார் உறைவுஇடம்--
சால(ம்) மாதவிகளும், சந்தனம், சண்பகம்,
சீலம் ஆர்--ஏடகம் சேர்தல் ஆம், செல்வமே.

Siva is concorporate with Her of perfumed locks; He is
the ever-young One whose mount is the splendorous Bull.
He is entempled in Ētakam abounding in the trees
of banyan, *mātavi*, sandalwood and *shanbakam*. 4
If His glorious shrine is gained, opulence is ours.

346. வரி அணி நயனி நல் மலைமகள் மறுகிட,
கரியினை உரிசெய்த கறை அணி மிடறினன்;
பெரியவன்; பெண்ணிணோடு ஆண் அலி ஆகிய
எரியவன்; உறைவுஇடம்--ஏடகக்கோயிலே.

Siva is concorporate with Her whose eyes are streaked red
and who is the goodly Daughter of Himavant.
He, whose throat retains the venom, peeled off the skin
of the Tusker witnessing which She stood scared.
Siva is male, female and the One sans sex.
His form, indeed, is Flame. He abides at Ētakam. 5

347. பொய்கையின் பொழில் உறு புதுமலர்த் தென்றல் ஆர்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடி பணிந்து, அரற்றுமின்! அடர்தரும்
வெய்ய வன்பிணி கெட, வீடு எளிது ஆகுமே.

On the northern bank of the Vaikai where Notus wafts
with the fragrance of the fresh-blown flowers of the pools
and the gardens, He is entempled in Ētakam.
Adore the feet of Siva and celebrate Him.
Your thronging and fierce maladies will perish;
you will gain deliverance with ease. 6

348. The original Tamil verse is not traceable. 7

349. தடவரை எடுத்தவன் தருக்கு இற, தோள் அடர்-
பட, விரல் ஊன்றியே, பரிந்து அவற்கு அருள்செய்தான்;
மடவரல், எருக்கொடு வன்னியும் மத்தமும்,
இடம் உடைச் சடையினன்--ஏடகத்து இறைவனே.

He quelled the pride of Ravana who durst lift up His great Mount
by pressing it with His toe causing the cracking of

his shoulders; then when he rued, He graced him.
Siva wears on His matted crest the young flowers of madar,
vanni and *ūmattham*. He is entempled in Ētakam. 8

350. பொன்னும், மா மணிகளும், பொருதிரைச் சந்து அகில்
தன்னுள் ஆர் வைகையின் கரைதனில் சமைவுஉற;
அன்னம் ஆம் அயனும், மால், அடி முடி தேடியும்
இன்னஆறு என ஒணான்--ஏடகத்து ஒருவனே.

On the banks of the Vaikai, the dashing waves of which,
shore up gold, great gems, sandalwood and eaglewood,
the Peerless One is entempled in Ētakam.
When Brahma in the form of a swan and Vishnu, as a boar,
burrowed the earth in quest of Him, He soared up and up,
absolutely imperceivable by them. 9

351. குண்டிகைக் கையினர், குணம் இலாத் தேரர்கள்,
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்--
வண்டு இரைக்கும் மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டை சேர்க்கும் சடை ஏடகத்து எந்தையே.

The Samaṇās who tote jugs and the virtueless Buddhists
are sinners who are only interested in filling
their maws; they do not hail Him at all.
Our Sire who is adored with *konrai* flowers buzzed by bees, 10
vanni and *intai*, is entempled in Ētakam.

352. கோடு, சந்தனம், அகில், கொண்டுஇழி வைகைநீர்
ஏடு சென்று அணைதரும் ஏடகத்து ஒருவனை,
நாடு தென்புகலியுள் ஞானசம்பந்தன
பாடல் பத்துஇவை வலார்க்கு இல்லைஆம், பாவமே.

The flood of the Vaikai that rolled with ivory, sandalwood
and eaglewood, caused the divine cadjan leaf to remain
still in Ētakam in which Siva is entempled.
Gnanasambandhan of the pulchritudinous Pukali,
sought by devotees, has sung these hymns.
The sins of those that celebrate these psalms, will perish. 11

33. திரு உசாத்தானம் : **கொல்லி**

353. நீர் இடைத் துயின்றவன், தம்பி, நீள் சாம்புவான்,
போர் உடைச் சுக்கிரீவன், அனுமான், தொழ;
கார் உடை நஞ்சு உண்டு, காத்து; அருள்செய்த எம்
சீர் உடைச் சேடர் வாழ்--திரு உசாத்தானமே.

33. TIRUVUSĀTTHĀ̱NAM : **Kolli**

Our Siva is entempled in Tiruvusātthā̱nam where
the gloriously great ones dwell.
In this shrine He was adored by Rama who as Vishnu
slumbered on the sea, his brother Lakshmana,
Jāmbavān the martial Sugrivan and Hanumān.
Siva quaffed the murky venom and saved the cosmos. 1

354. கொல்லை ஏறு உடையவன், கோவணஆடையன்,
பல்லை ஆர் படுதலைப் பலி கொளும் பரமனார்,
முல்லை ஆர் புறவு அணி முது பதி--நறை கமழ்
தில்லையான் உறைவுஇடம்--திரு உசாத்தானமே.

Siva is the Rider of the Bull of the *Mullai* region; He is
clad in a loincloth; He receives alms in His begging-
bowl, a skull to which teeth are still sticking.
He is the supreme God. He is the God of the hoary and melis-
fragrant Tillai abounding in *mullai* lianans of the *Mullai* region.
He is, indeed, entempled in Tiruvusātthāṉam. 2

355. தாம் அலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார்தம் கனா ஆக்கினான், ஒரு நொடி;
காமனார் உடல் கெடக் காய்ந்த எம் கண்ணுதல்;
சேமமா உறைவுஇடம்--திரு உசாத்தானமே.

Siva devastated the sacrifice of Daksha who treated Him as a stranger
and made it like unto the dream of a dumb person.
He, with His eye in His forehead, in a second, reduced
to cinders the body of Manmata.
To confer weal and welfare He is entempled in Tiruvusātthāṉam. 3

356. மறி தரு கரத்தினான், மால்விடை ஏறியான்,
குறி தரு கோல நல் குணத்தினார் அடி தொழ,
நெறி தரு வேதியர் நித்தலும் நியமம் செய்--
செறி தரு பொழில் அணி--திரு உசாத்தானமே.

He holds a fawn in His hand; He rides the huge Bull.
Adored by the the ideal ones of sterling qualities
and the virtuous Brahmins leading daily the Saivite life,
He abides in Tiruvusātthāṉam thick with stately gardens. 4

357. The original verse is not traceable. 5

358. The original verse is not traceable. 6

359. பண்டு, இரைத்து அயனும் மாலும், பலபத்தர்கள்
தொண்டு இரைத்தும், மலர் தூவித் தோத்திரம் சொல,
கொண்டு இரைக் கொடியொடும் குருகினின் நல் இனம்
தெண்திரைக் கழனி சூழ் திரு உசாத்தானமே.

As of yore, Brahma, Vishnu and Bhaktas galore hail
Him in full-throated ease in sheer servitorship
ecstatically by heaping flowers on Him,
the while chanting the Vedic and Āgamic mantras.
He is entempled in Tiruvusāttāṉam girt with
well-watered fields where the prey-catching crows
as well as goodly herons aplenty, thrive. 7

360. மடவரல்பங்கினன்; மலைதனை மதியாது
சடசட எடுத்தவன் தலைபத்தும் நெரிதர,
அடர்தர ஊன்றி, அங்கே அவற்கு அருள் செய்தான்;
திடம்என உறைவுஇடம்--திரு உசாத்தானமே.

He is concorporae with His bashful Consort.
When Ravana, ignoring His greatness, durst uproot

His mount causing great din, He pressed His toe
and caused the crushing and cracking of His ten heads;
then when he rued, He graced him.
He is firmly entempled in Tiruvusātthāṉam. 8

361. ஆண் அலார், பெண் அலார், அயனொடு மாலுக்கும்
காண ஒணா வண்ணத்தான், கருதுவார் மனத்து உளான்;
பேணுவார் பிணியொடும் பிறப்பு அறுப்பான், இடம்--
சேண் உலாம் மாளிகைத் திரு உசாத்தானமே.

He is neither male nor female; His form was unbeholdable
by Vishnu and Brahma. He abides
in the *manams* of those who always think on Him.
He annuls the maladies and the rebirths of those
who dedicate themselves totally to Him.
He is entempled in Tiruvusātthāṉam dight with
sky-vaulting mansions. 9

362. கானம் ஆர் வாழ்க்கையான், கார் அமண் தேரர் சொல்
ஊனமாக் கொண்டு, நீர் உரைமின், உய்ய எனில்--
வானம் ஆர் மதில், அணி மாளிகை, வளர் பொழில்,
தேன மா மதியம் தோய் திரு உசாத்தானமே!

Siva abides in the crematory.
If you resolve to get redeemed, you should be
convinced of the futility of the utterances of
the dark-souled Samaṇās and the Buddhists.

He is entempled in Tiruvusātthāṉam dight with
sky-high mansions and lofty walls; eke is it
girt with gardens over which the moon
showers its honey-sweet rays. 10

363. வரை திரிந்து இழியும் நீர் வளவயல் புகலி மன்,
திரை திரிந்து எறிகடல்-திரு உசாத்தானரை
உரை தெரிந்து உணரும் சம்பந்தன், ஒண் தமிழ் வல்லார்,
நரை திரை இன்றியே நன்நெறி சேர்வரே.

Gnānasambandhan who is conscious of the import
of the scriptures and who is the Prince of Pukali
rich in fields fed by the water of the montane clouds,
has sung on the God Tiruvusātthāṉam close to
the wave-tossed sea, this garland of splendorous Tamiḻ
hymns. They that are valiant in these psalms
will be freed from the advent of grey hair as well as
the shrinkage of skin, and gain the Heavenly way. 11

34. திரு முதுகுன்றம் : கொல்லி

364. வண்ண மா மலர்கொடு வானவர் வழிபட,
அண்ணலார் ஆயிழையாளொடும் அமர்வுஇடம்--
விண்ணின் மா மழை பொழிந்து இழிய, வெள் அருவி சேர்
திண்ணில் ஆர் புறவு அணி திரு முதுகுன்றமே.

34. TIRUMUTHUKUNRAM :

Kolli

Our Great God is adored by the celestials with flowers
of variform hues; with His bejewelled Consort,
He is entempled in the ornate Tirumuthukunram
situate in the fecund and strong *Mullai* region,
made rich by the rain water that falls
and flows like unto the white waterfalls. 1

365. வெறி உலாம் கொன்றை அம்தாரினான், மேதகு
பொறி உலாம் அரவு அசைத்து ஆடி, ஓர் புண்ணியன்,
மறி உலாம் கையினான், மங்கையோடு அமர்வுஇடம்--
செறியுள் ஆர் புறவு அணி திரு முதுகுன்றமே.

Our God, the Holy One, wears a fragrant garland
woven of *konrais;* in His waist He is cinctured
with a serpent. He holds in His hand a fawn;
with His Consort He is entempled in Muthukunram
rich in gardens of the *Mullai* region. 2

366. ஏறனார், விடைமிசை; இமையவர் தொழ உமை-
கூறனார்; கொல் புலித் தோலினார்; மேனிமேல்
நீறினார்; நிறைபுனல் சடையனார்; நிகழ்வுஇடம்--
தேறல் ஆர் பொழில் அணி திரு முதுகுன்றமே.

His mount is the Bull; He is concorporate with Uma,
adored by the supernals; He is clad in a tiger-skin.

He is bedaubed with the Holy Ash; His matted crest
bears the Ganga brimful of water.
He is entempled in Tirumuthukun̲r̲am girt with
gardens whence seeps out melis. 3

367. உரையின் ஆர் உறு பொருள் ஆயினான், உமையொடும்;
விரையின் ஆர் கொன்றை சேர் சடையினார்; மேவு இடம்--
உரையின் ஆர் ஒலி என ஓங்கு முத்தாறு மெய்த்
திரையின் ஆர் எறி புனல்-திரு முதுகுன்றமே.

Our God is the import of scriptures; He who is
concorporate with Uma is adorned with suaveolent
blossoms of konr̲ai on His matted crest. He is
entempled in Muthukun̲r̲am on the bank of
the Mutthār̲u the waves of which resound like
the chanting of Hara Hara! by bhaktas. 4

368. கடியஆயின குரல் களிற்றினைப் பிளிற, ஓர்
இடிய வெங்குரலினோடு ஆளி சென்றிடு நெறி,
வடிய வாய் மழுவினன் மங்கையோடு அமர்வுஇடம்--
செடிஅது புறவு அணி திரு முதுகுன்றமே.

Siva wields a well-crafted *mazhu*; with His Woman
He is entempled in Tirumuthukun̲r̲am abounding in flora.
Here in the pathways—the tusker trumpets
and the lion roars fiercely like thunder. 5

369. கானம் ஆர் கரியின் ஈர்உரிவையார், பெரியது ஓர்
வானம் ஆர் மதியினோடு அரவர், தாம் மருவு இடம்,
ஊனம் ஆயின பிணி அவை கெடுத்து, உமையொடும்--
தேன் அம் ஆர் பொழில் அணி திரு முதுகுன்றமே.

Our God mantled Himself in the skin of the Tusker that roams
in the jungle; He wears the moon of the extensive sky
and also an adder.
He is entempled with Uma in Tirumuthukun̲r̲am
girt with gardens where blow melliferous blossoms.
He will annul Ānavamala that fetters human beings. 6

370. மஞ்சர்தாம், மலர்கொடு வானவர் வணங்கிட,
வெஞ்சொலார்வேடரோடு ஆடவர் விரும்பவே,
அம்சொலாள் உமையொடும்(ம்) அமர்வுஇடம்--அணி கலைச்
செஞ் சொலார் பயில்தரும் திரு முதுகுன்றமே.

Siva, the Almighty, is adored with flowers by
the celestials; eke is He worshipped by the fierce
cynegetic clan and other men.
With Uma who articulates sweet words, He is
entempled in Tirumuthukun̲r̲am where dwell
the practitioners of sastras compact of salvific words. 7

371. காரினார் அமர்தரும் கயிலை நல்மலையினை
ஏரின் ஆர் முடி இராவணன், எடுத்தான், இற,
வாரின் ஆர் முலையொடும் மண்ணினார் மருவு இடம்--
சீரினார் திகழ்தரும் திரு முதுகுன்றமே.

Siva's grace pours like the seasonal rain. His is the Mount
Kailās; when Ravaṇa of ornate crowns durst
uproot it, Siva crushed out of him his strength.
He is concorporate with Uma whose breasts are covered
by a breast-band. He is entempled in the urbs
of Tirumuthukun̲r̲am that thrives splendorously. 8

372. ஆடினார், கானகத்து; அருமறையின் பொருள்
பாடினார்; பலபுகழ்ப் பரமனார்; இணை அடி
ஏடின் ஆர் மலர்மிசை அயனும், மால், இருவரும்
தேடினார் அறிவு ஒணார்; திரு முதுகுன்றமே.

Siva dances in the crematory; He hymned the rare
Vedas and explicated their import. He is supreme.
The one seated on the Lotus and Vishnu went in quest
of His feet twain, in vain as He stood unbeholdable.
Lo, He is entempled in Muthukun̲r̲am. 9

373. மாசு மெய் தூசு கொண்டு உழல் சமண்சாக்கியர்
பேசு மெய்உள அல; பேணுவீர்! காணுமின்--
வாசம் ஆர்தரு பொழில் வண்டுஇனம்(ம்) இசைசெய,
தேசம் ஆர் புகழ் மிகும் திரு முதுகுன்றமே!
Samaṇā's naked bodies are dirty; the Bhuddhists
wear dirty clothes; their words are not true at all.
Siva is entempled in the ubiquitously renowned
Tirumuthukun̲r̲am girt with fragrant gardens
where chafers hum in music.
Behold Him and adore Him. 10

374. திண்ணின் ஆர் புறவு அணி திரு முதுகுன்றரை
நண்ணினான், காழியுள் ஞானசம்பந்தன், சொல்
எண்ணினார், ஈர்-ஐந்துமாலையும் இயலுமாப்
பண்ணினால் பாடுவார்க்கு இல்லைஆம், பாவமே.

On the God of Tirumuthukun̲r̲am abounding in
stately gardens of the Mullai region, the seeker
of Siva, namely Gnānasambandhan, has
hymned these two times five psalms.
The sins of those that hail these in *pann,* befitting
their capacity, will vamoose. 11

35. திருத் தென்குடித்திட்டை : கொல்லி

375. முன்னை நால்மறை அவை முறைமுறை, குறையொடும்,
தன்ன தாள் தொழுது எழ நின்றவன் தன் இடம்--
மன்னு மா காவிரி வந்து அடி வருட, நல்
செந்நெல் ஆர் வளவயல்-தென்குடித்திட்டையே.

36. TENKUDITTHIṬṬAI : Kolli

Of yore, Siva authored the four Vedas and duly laid down
the ritualistic ways of adoring His feet.
He is entempled in Tenkuditthiṭṭai girt with fecund
fields of *sennel*; it is upon the banks the great 1
perennial Kāviri which gently massages His feet.

376. மகரம் ஆடும் கொடி மன்மதவேள்தனை,
நிகரல் ஆகா நெருப்பு எழ, விழித்தான் இடம்--
பகர வாள்நித்திலம், பல்மகரத்தொடும்,
சிகர மாளிகை தொகும் தென்குடித்திட்டையே.

Siva stared with His peerless and fiery eye in His
forehead, to death Manmata whose waving flag
sports the signum of a fish.
He is entempled in Tenkuditthiṭṭai dight with
towered mansions inlaid with pearls and gems galore. 2

377. கருவினால் அன்றியே கருஎலாம் ஆயவன்,
உருவினால் அன்றியே உருவுசெய்தான், இடம்--
பருவ நாள், விழவொடும் பாடலோடு ஆடலும்
திருவினால் மிகு புகழ்த் தென்குடித்திட்டையே.

Siva never assumed the form of an embryo; yet He
pervades all embryos; He, the formless One, is,
indeed the creator of all forms.
He is entempled in Tenkuditthiṭṭai renowned for its
exceedingly great opulence and is celebrated for its
seasonal fetes and festivals and also song and dance. 3

378. உள்-நிலாவு ஆவிஆய் ஓங்கு தன் தன்மையை
விண்ணிலார் அறிகிலா வேதவேதாந்தன் ஊர்--
எண் இல் ஆர் எழில் மணிக் கனக மாளிகை இளந்
தெண்நிலா விரிதரும் தென்குடித்திட்டையே.

Siva is the inner life of all entia; lofty is His
nature which is unknowable unto the celestials.
He is the God of the Vedas as well as the Upanishads.
He is entempled in Tenkuditthiṭṭai dight with
numberless, beautiful, gemmy and auric mansions
on whose tops the moon sheds its lucent rays. 4

379. வருந்தி வானோர்கள் வந்து அடைய, மா நஞ்சு தான்
அருந்தி, ஆர்அமுது அவர்க்கு அருள்செய்தான் அமரும் ஊர்--
செருந்தி, பூமாதவிப் பந்தர், வண் செண்பகம்,
திருந்து நீள் வளர் பொழில்-தென்குடித்திட்டையே.

As the celestials borne by misery prayed to Him, Siva
quaffed the great venom and blessed them with *amrut*.
He is entempled in Tenkuditthiṭṭai girt with stately
and extensive gardens where abound the flowers
of *serunti, shanbakam* and also *matavis* which form a canopy. 5

380. ஊறினார், ஓசையுள் ஒன்றினார், ஒன்றி மால்
கூறினார், அமர்தரும்--குமரவேள்தாதை--ஊர்--
ஆற்றினார் பொய் அகத்து, ஐஉணர்வு எய்தி மெய்
தேறினார், வழிபடும் தென்குடித்திட்டையே.

Siva activises the sense of touch; so too the sound.
Vishnu is part of Him. He is the Father of Muruka.
He bears the river on His head. He is entempled in
Tenkuditthiṭṭai where dwell those that gave up
pseudo-life to gain Siva consciousness and stand redeemed. 6

381. கான் அலைக்கும்(ம்) அவன் கண் இடந்து அப்ப, நீள்
வான் அலைக்கும் தவத் தேவு வைத்தான் இடம்--
தான் அலைத் தெள் அம் ஊர், தாமரைத் தண்துறை
தேன் அலைக்கும் வயல்,-தென்குடித்திட்டையே.

Tiṇṇan of the harrowing clan of hunters gouged his
eye and applied it on Siva's bleeding eye; then he
came to be hailed as Kannappan, the tapaswi,
who lived like a god companied with Siva.
Our God is entempled in Tenkuditthiṭṭai abounding
in fecund fields and pools of lucid water whence
from the stems of lotus flowers gushes forth honey aplenty. 7

382. மாலொடும் பொரு திறல் வாள் அரக்கன் நெரிந்து,
ஓல்இடும்படி விரல்ஒன்று வைத்தான் இடம்--
காலொடும் கனகமுக்கு உடன்வர, கயல் வரால்
சேலொடும் பாய் வயல்-தென்குடித்திட்டையே.
Siva so crushed with His toe that Ravana, valiant to
fight against Rama—an *avatar* of Vishnu—,
wreathed in pain and cried aloud.
He is entempled in Tenkuditthiṭṭai where water
flowing to the fields runs through channels into
which, the auric nosed *kayal, varāl* and *cēl* leap. 8

383. நாரணன் தன்னொடு நான்முகன் தானும் ஆய்,
காரணன்(ன்) அடி முடி காண ஒண்ணான் இடம்--
ஆரணம்கொண்டு பூசுரர்கள் வந்து அடி தொழ,
சீர் அணங்கும் புகழ்த் தென்குடித்திட்டையே.

Siva, the dominant Cause, stood unbeholdable by Vishnu
and Brahma who went in quest of His head and feet, in vain.
He is entempled in Tenkuditthiṭṭai—great and glorious,
where to adore His feet with Vedic mantras, the Devas
on earth do foregather. 9

384. குண்டிகைக் கை உடைக் குண்டரும், புத்தரும்,
பண்டு உரைத்து ஏயிடும் பற்று விட்டீர், தொழும்--
வண்டு இரைக்கும் பொழில்-தண்டலைக் கொண்டல் ஆர்,
தெண்திரைத் தண்புனல்,-தென்குடித்திட்டையே!

The obstinate and obdurate Samaṇās who tote
water-jugs in their hands and the Buddhists, but
blabber balderdash; ignore them completely.
Siva is entempled in Tenkuditthiṭṭai rich in cool
and wave-tossed pools and gardens where bees hum. 10

385. தேன் நல் ஆர் சோலைசூழ் தென்குடித்திட்டையை,
கானல் ஆர் கடிபொழில் சூழ்தரும் காழியுள்
ஞானம் ஆர் ஞானசம்பந்தன செந்தமிழ்
பால் நல் ஆர் மொழி வலார்க்கு, இல்லைஆம், பாவமே.

On Tenkuditthiṭṭai girt with melliferous gardens,
Gnānasambandhan who, blessed with Gnosis,
and who hails from Kāḻi girt with sea-shore
gardens, has sung these hymns in classical Tamiḻ. 11
Sins of those that hail these milk-sweet psalms, will cease.

36. திருக் காளத்தி : கொல்லி

386. சந்தம், ஆர், அகிலொடு, சாதி, தேக்க(ம்)மரம்,
உந்தும் மா முகலியின் கரையினில், உமையொடும்,
மந்தம் ஆர் பொழில் வளர் மல்கு வண் காளத்தி
எந்தையார் இணைஅடி, என் மனத்து உள்ளவே.

36. TIRUKKĀḶATHI :Kolli

Kāḷatthi is on the bank of the Mukali whose
current rolls with the trees of sandalwood, eaglewood,
nutmeg and teak; eke is it rich in gardens where
wafts the gentle gale.
It is here Siva is entempled with Uma.
The feet twain of my Sire abide in my *manam*. 1

387. ஆலம், மா, மரவமோடு, அமைந்த சீர்ச் சந்தனம்,
சாலம், மா பீலியும், சண்பகம், உந்தியே,
காலம் ஆர் முகலி வந்து அணைதரு காளத்தி,
நீலம் ஆர் கண்டனை நினையுமா நினைவதே!

Kāḷatthi is on the bank of the Mukali whose current
rolls with the trees of banyan, the great *maravam*
and the glorious sandalwood; also is it laden with
the trees of *sāl* and mango as well as peacock-
feathers and shanbakam during the rainy season.
Our blue-throated God is entempled here.
It behoves us to contemplate Him as ordained. 2

388. கோங்கமே, குரவமே, கொன்றை, அம் பாதிரி,
முங்கில், வந்து அணைதரு முகலியின் கரையினில்,
ஆங்கு அமர் காளத்தி அடிகளை அடி தொழ,
வீங்கு வெந்துயர் கெடும்; வீடு எளிது ஆகுமே.

The Noble God is entempled in Kāḷatthi on the bank
of the Mukali the waves of whose current shore up
kongkam, kuravam and the lovely *pātiri*.
If Siva is adored here, the swelling and fierce karma
will perish and deliverance will be gained with ease. 3

389. கரும்பு, தேன், கட்டியும், கதலியின் கனிகளும்,
அரும்பு நீர் முகலியின் கரையினில், அணி மதி
ஒருங்கு வார்சடையினன், காளத்தி ஒருவனை,
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுலகு ஆள்வரே.

Siva is adorned with the moon in His spreading and lofty matted
crest. He is the peerless One who is entempled in
Kāḷatthi on the bank of the Mukali of flowing water
laden with sugarcanes, lumps of sugar, honey combs
as well as the fruits of banana.
They that adore Him with intense devotion are bound
to rule the ethereal world. 4

390. வரை தரும் அகிலொடு மா முத்தம் உந்தியே,
திரை தரு முகலியின் கரையினில்,-தேமலர்
விரை தரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரை தரு கழல்இணை நித்தலும் நினைமினே!

Siva's suaveolent matted hair is decked with melliferous flowers.
He, the God of the Empyrean, is entempled at Kāḷatthi
on the bank of the Mukali whose waves shore up
the montane eaglewood and the great pearls.
Do daily contemplate His feet twain fastened
with anklets filled with precious stones. 5

391. The original verse is not traceable. 6

392. The original verse is not traceable. 7

393. முத்தும், மா மணிகளும், முழுமலர்த்திரள்களும்,
எத்து மா முகலியின் கரையினில், எழில் பெற,
கத்திட அரக்கனைக் கால்விரல் ஊன்றிய
அத்தன் தன் காளத்தி அணைவது கருமமே.

Siva who is our Sire, of yore, pressed His toe on
His Mount and crushed the Asura who wailed aloud.
He is entempled on the beautiful bank of the Mukali
the waves of which shore up pearls, gems
and the whole bunches of blossoms.
It behoves us to reach Kāḷatthi and adore Him. 8

394. மண்ணும், மா வேங்கையும், மருதுகள், பீழ்ந்து உந்தி
நண்ணு மா முகலியின் கரையினில், நன்மை சேர்--
வண்ண மா மலரவன், மால்அவன், காண்கிலா--
அண்ணலார் காளத்தி ஆங்கு அணைந்து உய்ம்மினே!

Siva is entempled on the bank of the Mukali whose
current rolls with the great trees of *vēnkai* and *marutu*,
toally uprooted from their soil.
Siva stood unbeholdable by Brahma seated on
the comely Lotus and Vishnu who went in quest of Him.
The Noble God always does good.
Reach Kāḷatthi, adore Him and stand redeemed. 9

395. வீங்கிய உடலினர், விரிதரு துவர்உடைப்
பாங்குஇலார், சொலை விடும்! பரன்அடி பணியுமின்!
ஓங்கு வண் காளத்தி உள்ளமோடு உணர்தர,
வாங்கிடும், வினைகளை, வானவர்க்கு ஒருவனே.

Adipose are the bodies of the Samaṇās; the Buddhists
wear long ochre-robes.
Their deportment is bad; ignore their utterances
and adore the supreme One.
He is entempled in the lofty and uberous Kāḷatthi.
If you adore Him in single-pointed devotion, He,
the God of the supernals, will annul your evil karma. 10

396. அட்டமாசித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார்சடையனை, வயல் அணி காழியான்--
சிட்ட நால்மறை வல ஞானசம்பந்தன்--சொல்
இட்டமாப்பாடுவார்க்கு இல்லைஆம், பாவமே.

The munificient God of Kāḷatthi confers the octad of
siddhis on His devotees. His is the long, curly, matted crest.

On Him Gnanasambandhan well-versed in
the quartet of the well-composed Vedas, and who hails
from Kāli abounding in fecund fields, has sung these hymns.
Their sins will cease who sing these songs willingly. 11

37. திருப் பிரமபுரம் : கொல்லி

397. கரம்முனம்மலரால், புனல் மலர் தூவியே கலந்து ஏத்துமின்--
பரமன் ஊர் பலபேரினால் பொலி, பத்தர்சித்தர்கள் தாம் பயில்,
வரம் முன்ன(வ்) அருள்செய்ய வல்ல எம் ஐயன் நாள்தொறும் மேய சீர்ப்
பிரமன்ஊர், பிரமாபுரத்து உறை பிஞ்ஞகன்(ன்) அருள் பேணியே!

37. TIRUPPIRAMAPURAM : Kolli

The names of the supreme God's holy places are many;
He is eternally entempled in Brahma's polis known as
Piramāpuram adored by bhaktas and siddhas
to whom He grants the boons sought by them.
With flower-like hands holding holy water and blossoms, adore Him.
It is, indeed, the way to hail the grace of Pinggnakan. 1

398. விண்ணில் ஆர் மதி சூடினான், விரும்பும் மறையவன் தன்தலை
உண்ண நன் பலி பேணினான், உலகத்துள் ஊன்உயிரான், மலைப்--
பெண்ணின் ஆர் திருமேனியான்--பிரமாபுரத்து உறை கோயிலுள்
அண்ணல் ஆர் அருளாளனாய் அமர்கின்ற எம்உடை ஆதியே.

Our God is adorned with the skyey crescent; He holds
a skull of Brahma's—the willing reciter of the Vedas—,

in which He receives the goodly alms and eats it.
In His divine frame He shares the Daughter of Himavant.
He is entempled in Piramāpuram and showers grace.
Lo, He, indeed, is the Primal God! 2

399. எல்லை இல் புகழாளனும்(ம்), இமையோர் கணத்து உடன் கூடியும்,
பல்லைஆர் தலையில் பலி அது கொண்டு உகந்த படிறனும்--
தொல்லைவையகத்து ஏறு தொண்டர்கள் தூ மலர் சொரிந்து ஏத்தவே,
மல்லை அம் பொழில் தேன் பில்கும் பிரமாபுரத்து உறை மைந்தனே.

Our God's glory is endless; He is companied with
the throng of the celestials. He is the cunning One
who delights to receive alms in a skull,
to which teeth are still sticking.
The lofty ones of this earth hail Him with flowers.
He is the Almighty who is entempled in Piramāpuram
girt with fecund and melliferous gardens. 3

400. அடையலார் புரம் சீறி--அந்தணர் ஏத்த, மா மடமாதொடும்,
பெடைஎலாம் கடல் கானல் புல்கும் பிரமாபுரத்து உறை கோயிலான்;
தொடையல் ஆர் நறுங்கொன்றையான் தொழிலே பரவி நின்று ஏத்தினால்,
இடை இலார், சிவலோகம் எய்துதற்கு; ஈது காரணம் காண்மினே!

Our God smote the walled-citadels of the hostile Asuras.
He is entempled with His great and bashful Consort,
in Piramāpuram hailed by its Brahmins.
It is girt with foreshore gardens where female birds
abide joyously with their mates.

Know that the way to gain Siva's world without let or hindrance, is to weave garlands of goodly konṟais for Him, adore and celebrate Him. 4

401. வாய் இடை(ம்) மறை ஓதி, மங்கையர் வந்து இடப் பலி கொண்டு, போய்ப்-
போய் இடம்(ம்) எரிகான்இடைப் புரி நாடகம்(ம்) இனிது ஆடினான்;
பேயொடும் குடிவாழ்வினான்--பிரமாபுரத்து உறை பிஞ்ஞகன்;
“தாய், இடைப் பொருள், தந்தை, ஆகும்” என்று ஓதுவார்க்கு அருள்-தன்மையே!

He chants the Vedas with His lips. He receives alms from women and carries it with Him.
He abides in the crematory where He dances in delight great.
He lives companied with His *Bhuta*-Hosts. He is our Pinggnakan who is entempled in Piramāpuram.
They that know Him as the Pater and the Mater and also all else, and hail Him thus, will gain His grace. 5

402. ஊடினால் இனி யாவது?--என் உயர் நெஞ்சமே!--உறு வல்வினைக்கு
ஓடி நீ உழல்கின்றது என்? “அழல் அன்று தன் கையில் ஏந்தினான்,
பீடு நேர்ந்தது கொள்கையான்--பிரமாபுரத்து உறை வேதியன்,
ஏடு நேர் மதியோடு அரா அணி எந்தை” என்று நின்று ஏத்திடே!

Of what avail is your sulking with me, O my lofty heart?
Wherefore do you roam about only to earn evil karma?
Even, of yore, He held the fire in His palm. Thanks to Him weal and welfare ensued. He is the Vedic God who holds

fast to the right principles. He abides at Piramāpuram.
Adore and hail Him as Sire who is decked with
the flower-like moon and a serpent. 6

403. செய்யன், வெள்ளியன்,--ஒள்ளியார்சிலர் என்றும் ஏத்தி நினைந்திட,--
ஐயன், ஆண்டகை, அந்தணன், அருமாமறைப் பொருள் ஆயினான்;
பெய்யும் மா மழை ஆனவன்; பிரமாபுரம் இடம் பேணிய
வெய்ய வெண்மழு ஏந்தியை(ந்) நினைந்து, ஏத்துமின், வினை வீடவே!

Siva's complexion is incarnadine; He is the God of Kailas
which is yclept the argent Mount. He is the Lord-God
of those who ever think on Him and adore Him.
He, the Brahmin, is the import of the great Vedas.
He is like the seasonal rain. He is entempled in Piramāpuram.
He is the wielder of the fierce and white *mazhu*.
To rid your evil karma, think on Him and adore Him. 7

404. கன்று ஒரு(க்) கையில் ஏந்தி நல்விளவின் கனி பட நூறியும்,
சென்று ஒருக்கிய மாமறைப்பொருள் தேர்ந்த செம்மலரோனும் ஆய்,
அன்று அரக்கனைச் செற்றவன்(ன்) அடியும்முடி அவை காண்கிலார்;
பின் தருக்கிய தண்பொழில் பிரமாபுரத்து அரன் பெற்றியே!

Vishnu who, of yore, with His hands threw the calf
(Vathsasura) and destroyed the wood apple (Kapitthasura),
and Brahma whose seat is the red Lotus and who has
construed the true import of the great Vedas,
went in quest of Siva's feet and crown in vain.
In the past, Siva crushed and quelled Ravana.
Lo, He, the One of great grace and dexterity, is entempled 8
in Piramāpuram abounding in cool gardens.

[*Note.* Two of the episodes occurring in the Bhagavata Purana are referred to in this verse. Wanting to assassinate Krishna, a mere boy, Kamsa deployed two Asuras for this purpose. These were Vathsāsura who assumed the form of a calf and Kapittasura who assumed the form of the wood apple. Krishna did away with these by a single deed.]

Cf. (i) **கன்று குணிலாய் எறிந்தாய் போற்றி!– திருப்பாவை, 24**

(ii) **“கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை”–**

பெரிய திருமொழி, 3:8

405. உண்டு உடுக்கை விட்டார்களும்(ம்), உயர் கஞ்சி மண்டை கொள் தேரரும்,--
பண்டு அடக்கு சொல் பேசும் அப் பரிவு ஒன்று இலார்கள்--சொல்
கொள்ளன்மின்!
தண்டொடு, அக்கு, வன் சூலமும், தழல், மா மழுப்படை, தன் கையில்
கொண்டு ஒடுக்கிய மைந்தன்--எம் பிரமாபுரத்து உறை கூத்தனே.

The Samaṇās forsake clothing but eat well; the Buddhists
tote(montai) begging-bowls, receive conjee and quaft it.
These have no sympathy for the people; they but calumniate
the hoary and lofty Vedas. Listen not to their dicta.
Siva, the Almighty who plays the Veena, wears the garland
of *rudrākshas*, holds the spear, the fire and the great
weapon of *mazhu*. He resolves and evolves the cosmos.
He is the Dancer entempled in Piramāpuram. 9

406. பித்தனை, பிரமாபுரத்து உறை பிஞ்ஞகன், கழல் பேணியே,
மெய்த்தவத்து நின்றோர்களுக்கு உரைசெய்து, நன்பொருள் மேவிட
வைத்த சிந்தையுள் ஞானசம்பந்தன் வாய் நவின்று எழு மாலைகள்,
பொய்த் தவம் பொறி நீங்க, இன்இசை போற்றிசெய்யும், மெய்ம் மாந்தரே!

Siva is the frenzied One; He is Pinggnakan who abides at Piramāpuram.
Adoring His ankleted feet, Gnānasambandhan resolved
to propagate the dicta revealing the way to *moksha*,
unto those poised in true *tapas*. He has sung these hymns.
They that have determined to wipe out the blemishes
begotten by the sense-organs that land one in pseudo-tapas,
must hail these psalms in sweet music.
It is these who are to be reckoned as the true ones. 10

38. திருக் கண்டியூர்வீரட்டம்

வினா உரை : கொல்லி

407. வினவினேன், அறியாமையில்(ல்); உரைசெய்ம்மின், நீர்--அருள்
வேண்டுவீர்!--
கனைவில் ஆர் புனல் காவிரிக் கரை மேய கண்டியூர்வீரட்டன்,
தனம் முனே தனக்கு இன்மையோ--தமர் ஆயினார் அண்டம் ஆள, தான்
வனனில் வாழ்க்கை கொண்டு ஆடிப் பாடி, இவ் வையம் மாப் பலி
தேர்ந்ததே?

38. TIRUKKANDIYŪR VEERAṬṬAM

Interrogatory Verses : Kolli

I query you as I am nescient; answer me to clear
my dubiety; you too pray for grace.
Siva is entempled in Kandiyūr Veeraṭṭam on the bank
of the Kaviri that flows amain with abundant water.
Why has Siva granted the reign of planets to Vishnu
and Brahma who are His kin, and chose to abide
at the crematory to enact His dance and also 1
goes about begging alms in this world?

408. உள்ள ஆறு எனக்கு உரைசெய்ம்மின்(ன்)!-- உயர்வு ஆய மா தவம்
பேணுவீர்!--
கள் அவிழ் பொழில் சூழும் கண்டியூர்வீரட்டத்து உறை காதலான்
பிள்ளைவான்பிறை செஞ்சடை(ம்) மிசை வைத்ததும், பெருநீர்ஒலி-
வெள்ளம் தாங்கியது என்கொலோ, மிகு மங்கையாள் உடன்ஆகவே?

O Ye who practise the great and lofty *tapas*,
answer me truly and faithfully.
Siva abides at Kandiyūr Veeraṭṭam girt with melliferous gardens.
Why does He who, in love, bear the skyey crescent on His
matted crest? Why does He who is concorporate
with His Woman, hold the great and dinsome
flood of Ganga too on His crest? 2

409. அடியர் ஆயினீர்! சொல்லுமின்--அறிகின்றிலேன், அரன் செய்கையை;--
படிஎலாம் தொழுது ஏத்து கண்டியூர்வீரட்டத்து உறை பான்மையான்,
முடிவும்ஆய், முதல்ஆய், இவ் வையம் முழுதும்ஆய், அழகு ஆயது ஓர்
பொடிஅது ஆர் திருமார்பினில் புரிநூலும் பூண்டு, எழு பொற்புஅதே!

O Ye devotees, answer me aright. I cannot understand
the deeds of Siva.
He is entempled in Kandiyūr Veeraṭṭam adored
and hailed by the whole world.
Why is that His divine body is bedaubed with
the beauteous holy ash? Wherefore does He
wear on it the strands of the sacred thread? 3

410. பழைய தொண்டர்கள்! பகருமின்--பல ஆய வேதியன் பாண்மையை!
கழை உலாம் புனல் மல்கு காவிரி மன்னு கண்டியூர்வீரட்டன்
குழை ஓர் காதினில் பெய்து உகந்து, ஒரு குன்றின்மங்கை வெருஉறப்
புழை நெடுங்கை நன்மா உரித்து, அது போர்த்து உகந்த பொலிவுஅதே!

O ye good old devotees, enlighten me about
the manifold nature of Siva, the Vedic God.
Siva is entempled in Kandiyūr Veeraṭṭam on the bank
of the Kaviri that flows laden with sweetcanes.
Why does He wear a *kuzhai* in one ear? Why did He
peel off the skin of the great Tusker with the hollow
trunk and mantle Himself with it and rejoiced
whilst His Consort, the Daughter of Himavant, stood scared? 4

411. விரவு இலாது உமைக் கேட்கின்றேன்; அடி விரும்பி ஆட்செய்வீர்!
விளம்புமின்--
கரவுஎலாம் திரை மண்டு காவிரிக் கண்டியூர் உறை வீரட்டன்
முரவம், மொந்தை, முழா, ஒலிக்க, முழங்கு பேயொடும் கூடிப் போய்,
பரவு வானவர்க்குஆக வார்கடல் நஞ்சம் உண்ட பரிசு அதே!

O ye servitors, you willingly render service to Siva's feet.
As I am not blessed to so serve, I query you. Answer me.
Siva is entempled in Kandiyūr Veeraṭṭam on the bank
of the Kavīri whose waves dash against its shore.
Why is He companied with the Bhūta-Hosts who dinsomely
play on *muravu, montai* and *muzhavam?*
Why did He quaff the spreading oceanic venom, 5
entreated and adored by the celestials?

412. இயலும்ஆறு எனக்கு இயம்புமின்(ன்)--இறைவ(ன்)னும்ஆய் நிறை
செய்கையை!
கயல்நெடுங்கண்ணினார்கள் தாம் பொலி கண்டியூர் உறை வீரட்டன்
புயல் பொழிந்து இழி வான் உளோர்களுக்கு ஆக அன்று, அயன்
பொய்ச் சிரம்
அயல் நக(வ்), அது அரிந்து, மற்று அதில் ஊண் உகந்த அருத்தியே!

O devotees, answer me to the best of your capacity.
Siva is the omnipresent God whose acts are perfect.
He abides at Kandiyūr Veeraṭṭam where flourish women
whose long eyes are like unto the *kayal*.
Why did He, for the sake of the Devas who cause
the nimbi to pour rain, of yore, clip the futile head
of Brahma with His nails causing derision,
and receive alms in that skull and eat it in joy? 6

413. திருந்து தொண்டர்கள்! செப்புமின்--மிகச் செல்வந்த(ன்)னது திறம்எலாம்!
கருந்தடங்கண்ணினார்கள் தாம் தொழு கண்டியூர் உறை வீரட்டன்
இருந்து நால்வரொடு, ஆல்நிழல், அறம் உரைத்ததும், மிகு வெம்மையார்
வருந்த வன் சிலையால் அம் மா மதில்மூன்றும் மாட்டிய வண்ணமே!

O upright servitors, do answer explaining well the manifold
disposition of Siva, the exceedingly Opulent One.
He is entempled in Kandiyūr Veeraṭṭam adored by
the dark-eyed damsels.
Of yore, wherefore did He, seated under the Banyan tree,
inclulcate dharma to the Four?

Why did He, with His mighty bow, devastate the three, great
walled-citadels of the exceedingly fierce ones to grieve sore? 7

414. நா விரித்து அரன் தொல்புகழ்பல பேணுவீர்! இறை நல்குமின்--
காவிரித் தடம் புனல் செய் கண்டியூர் வீரட்டத்து உறை கண்ணுதல்
கோ விரிப் பயன் ஆன் அஞ்சுஆடிய கொள்கையும், கொடி வரை பெற
மா வரைத்தலத்தால் அரக்கனை வலியை வாட்டிய மாண்புஅதே!

O ye servitors of Siva who with your tongues descant
on the hoary glory of Hara, tell me of His Godhead.
He who sports an eye in His forehead is entempled in
Kandiyūr Veeraṭṭam on the bank of the Kāviri.
Why does He have His ablutions in the five products of the kine?
To cause Her, the liana-like Uma, come by serenity,
why did He press His mount with His toe to crush
Ravana and cause his puissance vamoose? 8

415. பெருமையே சரண்ஆக வாழ்வுஉறு மாந்தர்காள்! இறை பேசுமின்--
கருமை ஆர் பொழில் சூழும் தண்வயல் கண்டியூர் உறை வீரட்டன்
ஒருமையால் உயர் மாலும், மற்றை மலரவன், உணர்ந்து ஏத்தவே,
அருமையால் அவருக்கு உயர்ந்து எரி ஆகி நின்ற அத் தன்மையே!

O ye who are poised in the Palladium of refuge in Siva,
do speak to me of His Godhead.
Siva is entempled in Kandiyūr Veeraṭṭam girt with imbrowned gardens.
Why did Siva stand unbeholdable unto Vishnu
and Brahma seated on the Lotus?

Is it to make them realize that Siva-consciousness can be
gained only by the rare and single-pointed meditation? 9

416. நமர் எழுபிறப்பு அறுக்கும் மாந்தர்கள்! நவிலுமின், உமைக்
கேட்கின்றேன்!--
கமர் அழி வயல் சூழும் தண்புனல் கண்டியூர் உறை வீரட்டன்
தமர் அழிந்து எழு சாக்கியச் சமண்ஆதர் ஓதுமது கொளாது,
அமரர்ஆனவர் ஏத்த, அந்தகன்தன்னைச் சூலத்தில் ஆய்ந்ததே!

O ye goodly people who can cause your kin's recurring
cycle of birth to snap! I beseech you. Answer me.
Siva is entempled in Kandiyūr Veeraṭṭam in whose
well-watered fields, fissures can never occur.
The Sākhyas and the Samaṇās are the base ones who
spoil their followers with their atheistic dicta.
The servitors of Siva do not approve of this.
It is Siva who with His spear killed Antakāsura. Why? 10

417. கருத்தனை, பொழில் சூழும் கண்டியூர்வீரட்டத்து உறை கள்வனை,
அருத்தனை, திறம் அடியார்பால் மிகக் கேட்டு உகந்த வினாஉரை--
திருத்தம் ஆம் திகழ் காழி ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழ்--
ஒருத்தர்ஆகிலும், பலர்கள்ஆகிலும், உரைசெய்வார் உயர்ந்தார்களே.

Siva is the Karta; He is furtive One who is entempled
in Kandiyūr Veeraṭṭam girt with gardens.
About Him—the import of the scriptures—; Gnānasambandhan
of Kāḻi—the perfect polis—, queried the devotees

in joy, matters which are cast in the classical Tamil
in the form of hymns hight Interrogatory Verses.
Whoever hails these paslms individually or collectively
will be reckoned as lofty. 11

39. திரு ஆலவாய் : கொல்லி

418. மானின் நேர் விழி மாதராய்! வழுதிக்கு மா பெருந்தேவி! கேள்:
"பால் நல் வாய் ஒரு பாலன் ஈங்கு இவன்" என்று நீ பரிவு எய்திடேல்!
ஆனைமாமலை ஆதி ஆய இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

39. TIRU ĀLAVĀI : Kolli

O the great Queen of the Pāndya! O the one who is
antelope-eyed! Do listen.
Think not that I am but a boy from whose mouth
milk drips, and feel pity for me.
The God of Ālavai stands by me; I am not an easy target
of attack for the base and trouble-making Samaṇās
who dwell in Ānamalai and other places. 1

419. ஆகமத்தொடு மந்திரங்கள் அமைந்த சங்கத பங்கமா,
பாகதத்தொடு இரைத்து உரைத்த சனங்கள் வெட்குஉறு பக்கமா,
மா கதக்கரி போல்-திரிந்து, புரிந்து நின்று உணும் மாசு சேர்
ஆகதர்க்கு எளியேன்அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

The Samaṇās but vociferously articulate in a dinsome
riot the dialect of Pākatham that is the corrupted form
of the Āgamic language and the mantras, witnessing which

the pundits well-versed in the Vedic tongue feel ashamed.
They but loiter about like the wrathful tusker; eke are
they the dirty-bodied who eat standing.
For these I am not an easy target of attack. It is the God
of Ālavāi who stands by me. 2

420. அத் தகு பொருள் உண்டும் இல்லையும் என்று நின்றவர்க்கு அச்சமா,
ஒத்து ஒவ்வாமை மொழிந்து வாதில் அழிந்து, எழுந்த கவிப் பெயர்ச்
சத்திரத்தின் மடிந்து ஒடிந்து, சனங்கள் வெட்குஉற நக்கம் ஏய்,
சித்திரர்க்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

The Samaṇās can neither assert nor deny; they
maintain ‘the concept of ‘is and is not.’
They will be defeated in their disputation; they will flee
away vanquished by my hymns.
They roam about unclad exposing themselves to derision
by the onlookers; their dicta are pseudo.
For these I am no easy target of a track. It is the God
of Ālavāi that stands by me. 3

421. சந்துசேனனும், இந்துசேனனும், தருமசேனனும், கருமை சேர்
கந்துசேனனும், கனகசேனனும், முதல்அது ஆகிய பெயர் கொளா,
மந்தி போல்-திரிந்து, ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்தகர்க்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

Santusēnan, Intusēnan, Dharmasēnan, murky Kantusēnan,
and Kanakasēnan are some of the names of the Samaṇās;
those roam like female monkeys, and these do not benefit by
their knowledge of Tamil̠ and Sanskrit; these are blind.

For these I am not an easy target of attack. It is
the God of Ālavāi who stands by me. 4

422. கூட்டின் ஆர் கிளியின் விருத்தம், உரைத்தது ஓர் ஒலியின் தொழில்,
பாட்டு மெய் சொலி, பக்கமே செலும் எக்கர் தங்களை, பல் அறம்
காட்டியே வரு மாடுஎலாம் கவர் கையரை, கசிவு ஒன்று இலாச்
சேட்டைகட்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

The Samaṇās propagate as true, the works of "Kiliviruttham"
a work named after the caged parrot, and other such
works and deceive people.
Again they show themselves as performers of manifold
dharma and through such display accumulate wealth.
They are the merciless, the debased and the mischievous.
For these I am not an easy target of attack. It is
the God of Ālavāi who stands by me. 5

423. கனகநந்தியும், புட்பநந்தியும், பவணநந்தியும், குமண மா
சுனகநந்தியும், குனகநந்தியும், திவணநந்தியும் மொழி கொளா
அனகநந்தியர், "மது ஒழிந்து அவமே தவம் புரிவோம்" எனும்
சினகருக்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.
The God of Ālavāi stands by me; I am not an easy
target of attack for Samaṇās whose names bear
the suffix Nandi; they bear such names as
Kanakanandi, Pushpanandi, Bhavana nandi, Kumana-
māsunanandi, Kunakanandi, Tivananandi and Nandis galore.
These listen not to the goodly dicta; these avoiding melis, 6
have resolved to perform pseudo-tapas.

424. "பந்தணம்(ம்) அவை ஒன்று இலம்; பரிவு ஒன்று இலம்(ம்)!" என வாசகம்
மந்தணம்பல பேசி, மாசு அறு சீர்மை இன்றி அநாயமே,
அந்தணம்(ம்), அருகந்தணம், மதிபுத்தணம், மதிசிந்தணச்
சிந்தணர்க்கு எளியேன்அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

The Samanas aver that they have neither kin nor attachment;
they speak in secrecy; they follow not the right way;
they are without true glory that can annul blemishes.
The Buddhists proclaim their own ways in which
they claim to be adepts.
I am not an easy target of attack for these, as the God
of Ālavāi stands by me. 7

[**Note.** This verse defies understanding.]

425. "மேல் எனக்கு எதிர் இல்லை" என்ற அரக்கனார் மிகை செற்ற தீப்-
போலியைப் பணிய(க்) கிலாது, ஒரு பொய்த்தவம்கொடு, குண்டிகை
பீலி கைக்கொடு, பாய் இடுக்கி, நடுக்கியே, பிறர் பின் செலும்
சீலிகட்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

Siva did away with the pride of Rāvana who thought
that there was none above him.
Not adoring the flame-like Siva, but assuming
adherence to pseudo-tapas, the Samaṇās carry
water-jugs, bunches of peacock feathers and mats
in their arm-pits, they follow others in dread
(thinking they might cause hurt to insects etc.)
I am not an easy target of attack by these, as
the God of Ālavāi stands by me. 8

426. பூமகற்கும் அரிக்கும் ஓர்வுஅரு புண்ணியன்(ன்) அடி போற்றிலார்,
சாம் அவத்தையினார்கள் போல்-தலையைப் பறித்து, ஒரு பொய்த்தவம்
வேம் அவத்தை செலுத்தி, மெய்ப் பொடி அட்டி, வாய் சகதிக்கு நேர்
ஆம் அவர்க்கு எளியேன் அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.

The Samanas adore not the feet of the Holy One who is
unknowable even by Brahma on the Lotus and Vishnu.
Like the performers of obsequies the Samanas remove their hair
on their heads; their bodies are coated with dust
and they but blabber with their tongues.
They adhere to pseudo-tapas.
I am no easy target of attack for the Samanas, as
the God of Ālavāi stands by me. 9

427. தங்களுக்கும் அச் சாக்கியர்க்கும் தரிப்பு ஒணாத நல் சேவடி
எங்கள் நாயகன் ஏத்து ஒழிந்து, இடுக்கே மடுத்து, ஒரு பொய்த் தவம்
பொங்கு நூல்வழி அன்றியே புலவோர்களைப் பழிக்கும் பொலா
அங்கதர்க்கு எளியேன்அலேன்--திரு ஆலவாய் அரன் நிற்கவே.
Siva whose ruddy and salvific feet are inaccessible
to the Samaṇās and the Sākyas who adore Him not.
Instead of hailing our Lord-God, they, holding in their
arm-pits their mats, perform pseudo-*tapas*;
they follow not the goodly opuses but condemn
the seer-poets; they are the debased ones.
I am not an easy target of attack for them as the God 10
of Ālavāi stands by me.

428. "எக்கர் ஆம் அமண்கையருக்கு எளியேன்அலேன், திரு ஆலவாய்ச்
சொக்கன் என் உள் இருக்கவே", துளங்கும் முடித் தென்னன்முன், இவை
தக்க சீர்ப் புகலிக்கு மன்--தமிழ் நாதன், ஞானசம்பந்தன்--வாய்
ஒக்கவே உரைசெய்த பத்தும் உரைப்பவர்க்கு இடர் இல்லையே.

"As Chokkan, the God of Tiru Ālavāi stands ensouled
by me, I am no easy target for the haughty Samaṇās."
So sang Gnānasambandhan, the master of Tamil,
the one of Pukali whose renown is great,
in the presence of the Pāndya of the splendorous crown.
The troubles of those that sing these ten hymns
harmoniously, will cease. 11

40. பொது

தனித் திரு இருக்குக்குறள்: கொல்லி

(முதல் திருமுறையிற் போலப் பாடல் அடிகள் நான்காகக் கொள்ளப்படும்.)

429. கல்லால் நீழல் அல்லாத் தேவை
நல்லார் பேணார்; அல்லோம், நாமே.

40. GENERAL

Thanitthiru Irukkukkuraḷ : Kolli

Our God is seated under the Kallāl; the good ones do not
adore any other god; so too we adore not any other god. 1

430. கொன்றை சூடி நின்ற தேவை
அன்றி, ஒன்றும் நன்று இலோமே.

Our God wears konrai garlands. We do not cognise
any but Him; He alone confers deliverance. 2

431. கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்,
சொல்லாதாரோடு அல்லோம், நாமே.

Our God abides not in the hearts of those who know not
to adore Him. We mix not with those that hail Him not. 3

432. கூற்று உதைத்த நீற்றினானைப்
போற்றுவார்கள் தோற்றினாரே.

Our Siva kicked Yama to death; He wears the holy ash.
We cognize none but Him and His adorers. 4

433. காட்டுள் ஆடும் பாட்டுஉளானை
நாட்டுஉளாரும் தேட்டுஉளாரே.

He dances in the crematory; He is hailed in hymns;
All country men that adore Him, gain the true wealth. 5

434. தக்கன் வேள்விப் பொக்கம் தீர்த்த
மிக்க தேவர் பக்கத்தோமே.
Siva smote Daksha's pseudo-sacrifice. We will live only
with those devotees who are the great Devas on earth. 6

435. பெண் ஆண் ஆய விண்ணோர்கோவை
நண்ணாதாரை எண்ணோம், நாமே.

Siva is both man and woman; He is the God of gods.
We will not think of those who do not think on Him. 7

436. தூர்த்தன் வீரம் தீர்த்த கோவை,
ஆத்தம் ஆக, ஏத்தினோமே.

Siva did away with the bravado of the debauche.
We will celebrate Him as the ever-friendly One. 8

437. பூவினானும், தாவினானும்,
நாவினாலும் ஓவினாரே.
Brahma on the Lotus and Vishnu who scaled the cosmos, failed
painfully in their quest and then hailed him with their lips. 9

438. மொட்டுஅமணர், கட்டர்தேரர்,--
பிட்டர்--சொல்லை விட்டு உளோமே.

The tonsured Samaṇās and the able-bodied Buddhists
are mad; we reject altogether their utterances. 10

439. அம் தண் காழிப் பந்தன் சொல்லைச்
சிந்தைசெய்வோர் உய்ந்து உளோரே.

They that contemplate these words of Gnānasambandhan
of the cool Kāḻi, stand absolutely redeemed. 11

41. திருக் கச்சி ஏகம்பம்

திரு இருக்குக்குறள்:

கொல்லி

440. "கரு ஆர் கச்சித் திரு ஏகம்பத்து
ஒருவா!" என்ன, மருவா, வினையே.

41. TIRUKKACCHIĒKAMPAM

Thiru Irukkukkuraḷ :

Kolli

The Peerless One of Tiruēkampam is the embryo of all entia.
If He is hailed and adored karma will not get attached. 1

441. மதி ஆர் கச்சி, நதி ஏகம்பம்
விதியால் ஏத்த, பதி ஆவாரே.

They that hail as ordained the God of Ēkampam over which
the moon sails, will become the Chiefs of Siva's Hosts. 2

442. கலி ஆர் கச்சி, மலி ஏகம்பம்
பலியால் போற்ற, நலியா, வினையே.

If the God of the dinsome Kacchi Ēkampam is adored with
the approved offerings, karma will not afflict such adorers. 3

443. வரம் ஆர் கச்சிப்புரம் ஏகம்பம்
பரவா ஏத்த, விரவா, வினையே.

If the boon-giving God of Kacchi Ēkampam is
hailed and adored, karma will cease to afflict. 4

444. "படம் ஆர் கச்சி, இடம் ஏகம்பத்து
உடையாய்!" என்ன, அடையா, வினையே.

If the God of the picturesque Kacchi Ēkampam is hailed
as the Lord-Owner, Karma will not get attached. 5

445. நலம் ஆர் கச்சி, நிலவு ஏகம்பம்
குலவா ஏத்த, கலவா, வினையே.

If the weal-conferring God abiding at Kacchi Ēkampam
is adored in melting devotion, Karma will cease. 6

446. கரியின்உரியன், திரு ஏகம்பன்,
பெரிய புரம்மூன்று எரிசெய்தானே.

The God of Tiruēkampam is mantled in the skin of the Tusker;
eke did He burn the three great walled-citadels. 7

447. இலங்கை அரசைத் துலங்க ஊன்றும்--
நலம் கொள் கம்பன் இலங்கு சரணே.

Our refuge is the weal-conferring God of Ēkampam
who pressed His toe and crushed the King of Lanka. 8

448. மறையோன், அரியும், அறியா அனலன்
நெறி ஏகம்பம் குறியால்-தொழுமே!
Siva is the Flame unperceived by the Vedic Brahma and Vishnu;
the God of Ēkampam is the Way; adore Him to gain *moksha*. 9

449. பறியாத் தேரர் நெறி இல் கச்சிச்
செறிகொள் கம்பம் குறுகுவோமே.

The Teras pluck not their hair like the Samaṇās; Siva shows them
not their Way. Let us gain the God of Ēkampam of accrescent glory. 10

450. கொச்சை வேந்தன் கச்சிக் கம்பம்
மெச்சும் சொல்லை, நச்சும், புகழே.

Renown will accrue to them that hail the hymns of Kacchi
Ēkampam, by Gnānasambandhan, the Prince of Kocchai. 11

42. திருச் சிற்றேமம் : கொல்லிக்கௌவாணம்

451. நிறைவெண் திங்கள்வாள் முக மாதர் பாட, நீள்சடைக்
குறைவெண்திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய கொள்கையான்--
சிறைவண்டு யாழ்செய் பைம்பொழில் பழனம் சூழ் சிற்றேமத்தான்;
"இறைவன்!" என்றே உலகுஎலாம் ஏத்த நின்ற பெருமானே.

43. TIRUCCHIRRĒMAM : Kollikkauvānam

Siva in whose hair rests the crescent dances, whilst His Woman whose
bright visage is like unto the white full moon, sings.
He is entempled in Cirrēmam girt wth fields and green gardens
where the winged bees bombinate musically like the *yāḻ*. 1
He, indeed, is the God hailed and adored by the whole world.

452. மாகத்திங்கள் வாள்முக மாதர் பாட, வார்சடைப்
பாகத்திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய பண்டங்கன்--
மேகத்து ஆடு சோலை சூழ் மிடை சிற்றேமம் மேவினான்;
ஆகத்து ஏர் கொள் ஆமையைப் பூண்ட அண்ணல் அல்லனே!

Siva who sports on a part of His long matted hair
the crescent, enacts the dance of Pandarankam,
whilst His Woman whose bright visage is like unto
the skyey moon, sings. He is entempled in
Cir̲r̲ēmam girt with gardens whose tops graze the clouds.
Is He not the Noble One who is decked with a carapace on His chest? 2

453. நெடு வெண்திங்கள் வாள்முக மாதர் பாட, நீள்சடைக்
கொடுவெண்திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய கொள்கையான்--
படு வண்டு யாழ்செய் பைம்பொழில் பழனம் சூழ் சிற்றேமத்தான்;
கடுவெங்கூற்றைக் காலினால் காய்ந்த கடவுள் அல்லனே!

Siva who sports on His long matted hair the curved
crescent and dances whilst His Woman whose bright
visage is like uno the white and full moon, sings.
He is entempled in Cir̲r̲ēṃam girt with fields and green gardens
where the bees bombilate musically like the *yāl̲*.
Is He not the God who smote with His foot Yama,
the excessively fierce one? 3

454. கதிர் ஆர் திங்கள் வாள்முக மாதர் பாட, கண்ணுதல்,
முதிர் ஆர் திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய முக்கணன்--
எதிர் ஆர் புனல் அம் புன்சடை எழில் ஆரும் சிற்றேமத்தான்;
அதிர் ஆர் பைங்கண் ஏறு உடை ஆதிமூர்த்தி அல்லனே!

The triple-eyed Siva who wears on His chest the young
crescent, enacts His dance, whilst His Woman whose
bright visage is like the radiant moon, sings.
His is the hirsutorufous matted crest which bears
the river of dashing waves.
He is entempled in the pulchritudinous Cirrēmam.
Is He not the Primal God who rides the fresh-eyed Bull
decked with tintinnabulating bells? 4

455. வான் ஆர் திங்கள் வாள்முக மாதர் பாட, வார்சடைக்
கூன் ஆர் திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய கொள்கையான்--
தேன் ஆர் வண்டு பண்செயும் திரு ஆரும் சிற்றேமத்தான்;
மான் ஆர் விழி நல் மாதொடும் மகிழ்ந்த மைந்தன் அல்லனே!

Siva who sports on His matted crest the curved crescent
doth enact His dance whilst His Woman whose bright
visage is like the moon in the heavens, sings.
He is entempled in the uberous Cirrēmam where
bees quaffing nectar, bombilate in *pann*.
Is He not the Puissant One who is concorporate with
the goodly and antelope-eyed Woman? 5

456. பனிவெண்திங்கள் வாள்முக மாதர் பாட, பல்சடைக்
குனிவெண்திங்கள்சூடி, ஓர் ஆடல் மேய கொள்கையான்,
தனி வெள்விடையன்--புள்இனத் தாமம் சூழ் சிற்றேமத்தான்;
முனிவும் மூப்பும் நீங்கிய முக்கண் மூர்த்தி அல்லனே!

Siva who sports on His many-stranded matted crest
the curved crescent, doth dance whilst His Woman whose
bright visage is like unto the moist moon, sings.
He, the Rider of the peerless Bull, is entempled in
Cirrēmam over which, birds forming the formation
of garlands, wing about.
Is He not the triple-eyed God who is wrathless and unaging? 6

457. கிளரும் திங்கள் வாள்முக மாதர் பாட, கேடு இலா
வளரும் திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய மா தவன்--
தளிரும் கொம்பும் மதுவும் ஆர் தாமம் சூழ் சிற்றேமத்தான்;
ஒளிரும் வெண்நூல் மார்பன் என் உள்ளத்து உள்ளான் அல்லனே!

Siva, the great tapaswi, who wears the flawless and splendorous
crescent, enacts His dance whilst His Woman whose bright
visage is like unto the uprising full moon, sings.
He is entempled in Cirrēmam abounding in shoots,
sprays and garlands of melliferous flowers.
Is He not the One adorned on His chest with the blazing
and white and sacred thread, the One that indwells my heart? 7

458. சூழ்ந்த திங்கள்வாள்முக மாதர் பாட, சூழ்சடைப்
போழ்ந்த திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய புண்ணியன்--
தாழ்ந்த வயல் சிற்றேமத்தான்; தடவரையைத் தன் தாளினால்
ஆழ்ந்த அரக்கன் ஒல்க, அன்று அடர்த்த அண்ணல் அல்லனே!

Siva is the One who wears on His spreading matted
hair a slice of the moon; He enacts the dance, whilst

His Woman whose bright visage is like unto the moon
of spreading rays, doth sing.
He abides at Cir̲r̲ēmam abounding in low-lying fields.
Is He not the Noble One, who, of yore, pressed with His toe
His great Mount and crushed Ravana to suffer sorely? 8

459. தணிவெண் திங்கள்வாள்முக மாதர் பாட, தாழ்சடைத்
துணிவெண்திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய தொன்மையான்--
அணி வண்ணச் சிற்றேமத்தான்; அலர்மேல் அந்தணாளனும்,
மணிவண்ணனும், முன் காண்கிலா மழுவாள்செல்வன் அல்லனே!

Siva who wears on His dangling matted hair the crescent
like unto a slice of the moon, dances whilst His
Woman whose bright visage is like unto the white
and non-pareil moon, sings.
He is the hoary One who is entempled in the ornate
and splendorous Cir̲r̲ēmam.
Did He not, the Opulent One, the wielder of the weapon
of *mazhu*, of yore, stand unbeholdable by Brahma
seated on the Lotus and Vishnu yclept Maṇivaṇṇan? 9

460. வெள்ளைத் திங்கள்வாள்முக மாதர் பாட, வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடி, ஓர் ஆடல் மேய பிஞ்ஞகன்--
உள்ளத்து ஆர் சிற்றேமத்தான்; உரு ஆர் புத்தர், ஒப்பு இலாக்
கள்ளத்தாரை, தான் ஆக்கி, உள் கரந்து வைத்தான் அல்லனே!

Siva who is Pinggnakan wears the young moon on His
dangling matted hair and enacts His dance whilst His Woman
whose bright visage is like unto the white moon, sings.

He is entempled in Cirrēmam heartily adored by His devotees.
Is He not the creator of the Buddhists clad in ochre robes
and the peerlessly furtive ones who are the Samaṇās,
who remains concealed from them? 10

461. கல்லில் ஓதம் மல்கு தண்கானல் சூழ்ந்த காழியான்--
நல்ல ஆய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்--
செல்வன் ஊர்சிற்றேமத்தைப் பாடல், சீர் ஆர் நாவினால்,
வல்லார் ஆகி வாழ்த்துவார், அல்லல் இன்றி வாழ்வரே.

Gnānasambandhan who is well versed in sweeṭ Tamil
and who hails from Kāli close to the cool foreshore
gardens the boulders of which are dashed by the waves,
has sung these psalms.
They that have come by the valiancy to sing these psalms
and who hail and adore Siva with these hymns,
will flourish utterly untroubled. 11

43. சீகாழி : கௌசிகம்

462. சந்தம் ஆர் முலையாள் தன கூறனார்,
வெந்த வெண்பொடி ஆடிய மெய்யனார்,
கந்தம் ஆர் பொழில் சூழ்தரு காழியுள்
எந்தையார், அடி என் மனத்து உள்ளவே.

43. SIKĀLI : Kausikam

Siva is concorporate with His Woman whose breasts are
coated with the sandal-paste.
He is the True Ens who is bedaubed with the baked white ash.

He is entempled in Kāli abounding in incense-breathing gardens.
The feet of my Sire are enshrined in my heart. 1

463. மான் இடம்(ம்) உடையார், வளர்செஞ்சடைத்
தேன் இடம் கொளும் கொன்றை அம்தாரினார்,
கான் இடம் கொளும் தண்வயல் காழியார்,
ஊன் இடம் கொண்டு என் உச்சியில் நிற்பரே.

Siva holds in His hand a fawn; on His accrescent
and ruddy matted hair, He is adorned with a chaplet
woven of melliferous konrais. He is entempled in
Kāli Mayānam girt with cool fields.
Indwelling my body, He stands on its top. 2

464. மை கொள் கண்டத்தர், வான்மதிச் சென்னியர்,
பை கொள் வாள்அரவு ஆட்டும் படிறனார்,
கை கொள் மான்மறியார், கடல் காழியுள்
ஐயன், அந்தணர் போற்ற இருக்குமே.

Siva's throat wears a patch of murk; on His crest is the skyey
crescent; He is the One of gramarye who causes the snake of
poisonous sacs to dance; He holds a fawn in His hand.
He, the Sire, is entempled in Kāli close to the sea, 3
adored by the Brahmins.

465. புற்றின் நாகமும் பூளையும் வன்னியும்
கற்றைவார்சடை வைத்தவர், காழியுள்
பொற்றொடியோடு இருந்தவர், பொன்கழல்,
உற்றபோது, உடன்ஏத்தி உணருமே!

Siva wears on His strands of long matted hair the adder
of the ant-hill, the *pūḷai* flowers and the leaves of *vaṇṇi.*
He is entempled in Kāli with His Woman adorned
with jewels of gold.
Adore Him on the right occasion and gain Siva-consciousness. 4

466. நலியும் குற்றமும், நம் உடல் நோய்வினை,
மெலியும் ஆறுஅது வேண்டுதிரேல், வெய்ய
கலி கடிந்த கையார், கடல் காழியுள்
அலை கொள் செஞ்சடையார், அடி போற்றுமே!

If you desire to get rid of the enervating blemishes
and the mala-bred maladies that cause emaciation,
hail and adore the feet of Siva in whose ruddy
matted hair flows the billowy Ganga.
He is entempled in Kāli close to the sea where dwell
Brahmins who set at nought the reign of Kali. 5

467. பெண் ஓர் கூறினர்; பேய் உடன் ஆடுவர்;
பண்ணும் ஏத்து இசை பாடிய வேடத்தர்;
கண்ணும் மூன்று உடையார்--கடல் காழியுள்
அண்ணல்ஆய அடிகள் சரிதையே!

Siva shares His body with His Woman; He dances with the ghouls.
His is the Saivite *Vēṭam*; He sings in lofty *paṇs*.
He has three eyes; He abides in Kāli, close to the sea.
These form part of the annals of the Great and Noble One. 6

468. பற்றும் மானும் மழுவும் அழகுஉற,
முற்றும் ஊர் திரிந்து, பலி முன்னுவர்--
கற்ற மா நல் மறையவர் காழியுள்
பெற்றம்ஏறு அது உகந்தார் பெருமையே!

Siva splendorously wields a fawn and a *mazhu*;
He roams about the urbs to solicit alms.
He abides at Kāli where the great Vedic Brahmins
that have cultivated well the scriptures, dwell.
He willingly rides His Bull. His acts proclaim His glory. 7

469. எடுத்த வல் அரக்கன் முடிதோள் இற
அடர்த்து, உகந்து அருள்செய்தவர்--காழியுள்
கொடித் தயங்கு நன் கோயிலுள், இன்புஉற,
இடத்து மாதொடு தாமும் இருப்பரே.

Siva crushed the heads and the shoulders or Ravaṇa
who durst uproot His Mount; then when he rued
Siva was pleased to grace him.
He abides happily in Kāli's shrine where wafts the flag, 8
with His Woman who occupies His left half.

470. காலன்தன் உயிர் வீட்டு, கழல்அடி,
மாலும் நான்முகன்தானும், வனப்புஉற
, ஓலம் இட்டு, முன்தேடி, உணர்கிலாச்
சீலம் கொண்டவன் ஊர்--திகழ் காழியே.

Siva, of yore, did away with the dear life of Yama.
His feet were unbeholdable by Vishnu and the Four-faced,
maugre their uproarious and splendorous quest.
Such is His greatness who abides in the uberous Kāl̲i. 9

471. உருவம் நீத்தவர் தாமும், உறு துவர்
தரு வல் ஆடையினாரும், தகவு இலர்;
கருமம் வேண்டுதிரேல், கடல் காழியுள்
ஒருவன் சேவடியே அடைந்து, உய்ம்மினே!

The Samaṇās have spoiled their forms; the Buddhists
are clad in ochre robes; these are the unfit ones.
If deliverance is your goal, reach Kal̲i near the sea, gain
the salvific feet of the peerless God and stand redeemed. 10

472. கானல் வந்து உலவும் கடல் காழியுள்
ஈனம்இ(ல்)லி இணைஅடி ஏத்திடும்
ஞானசம்பந்தன் சொல்லிய நல்-தமிழ்,
மானம் ஆக்கும், மகிழ்ந்து உரைசெய்யவே.

Gnānasambandhan of Kāl̲i from whose foreshore gardens
wafts the gentle gale, ever adoring the feet twain
of the Flawless One, has sung these hymns in goodly Tamil̲.
If these are recited in sheer joy, honour stands gained for ever. 11

44. திருக் கழிப்பாலை :

கௌசிகம்

473. வெந்த குங்கிலியப்புகை விம்மவே
கந்தம் நின்று உலவும் கழிப்பாலையார்,
அந்தமும்(ம்) அளவும்(ம்) அறியாதது ஓர்
சந்தமால், அவர் மேவிய சந்தமே.

44. TIRUKKAḺIPPĀLAI :

Kausikam

Siva is entempled in Kaḻippālai pervaded by
the fragrance of the uprising smoke of burning *Kunkiliyam.*
He is athanasic; His stature is immesurable;
Great is His nature; endless is His state of serenity. 1

474. வான் இலங்க விளங்கும் இளம்பிறை-
தான் அலங்கல் உகந்த தலைவனார்--
கான் இலங்க வரும் கழிப்பாலையார்,
மான் நலம் மடநோக்கு உடையாளொடே.

Siva wears the youg moon that brightens the heavens.
He is the Lord-God who wears garlands in delight great.
He abides at Kaḻippālai dight with foreshore gardens,
with His antelope-eyed and bashful Consort. 2

475. கொடி கொள் ஏற்றினார்; கூற்றை உதைத்தனர்;
பொடி கொள் மார்பினில் பூண்டது ஓர் ஆமையர்;
கடி கொள் பூம்பொழில் சூழ் கழிப்பாலையுள்
அடிகள் செய்வன ஆர்க்கு அறிவு ஒண்ணுமே?

Siva's flag sports the signum of His Bull; He kicked Yama.
In His ash-bedaubed chest He wears a carapace. He abides at
Kal̲ippālai girt with fragrant flowery gardens.
The acts of the Noble One defy reckoning. 3

476. பண் நலம் பட வண்டு அறை கொன்றையின்
தண்அலங்கல் உகந்த தலைவனார்--
கண் நலம் கவரும் கழிப்பாலையுள்
அண்ணல்; எம் கடவுள்(ள்) அவன் அல்லனே?

Siva is the Chief who joyously wears the garlands of *konr̲ai*
buzzed by bees which bombinate in *pann*.
He is entempled in the eye-bewitching Kal̲ippālai.
He is the Noble One who, indeed, is our God. 4

477. ஏரின் ஆர் உலகத்து இமையோரொடும்
பாரினார் உடனேபரவப்படும்
காரின் ஆர் பொழில் சூழ், கழிப்பாலை எம்
சீரினார் கழலே சிந்தைசெய்(ம்)மினே!
Siva is hailed and adored by the ethereal Devas
and by those on earth. He abides at Kal̲ippālai
girt with gardens over which the moon sails.
Do contemplate only the ankleted feet of the glorious God. 5

478. துள்ளும் மான்மறி அம் கையில் ஏந்தி, ஊர்,
கொள்வனார், இடு வெண் தலையில் பலி;
கள்வனார்; உறையும் கழிப்பாலையை
உள்ளுவார் வினை ஆயின ஓயுமே.

He holds in His beauteous hand a leaping fawn;
With His begging-bowl, a white skull, He roams about
in all places seeking alms. The karma of those who
hail the Furtive One's Kaḻippālai will cease altogether. 6

479. மண்ணின் ஆர் மலி செல்வமும், வானமும்,
எண்ணி, நீர் இனிது ஏத்துமின்--பாகமும்
பெண்ணினார், பிறை நெற்றியொடு உற்ற முக்-
கண்ணினார், உறையும் கழிப்பாலையே!

Convinced that it is Siva who bestows on His adorers
the wealth of the earth and the Heaven, hail Him.
He whose eyes are three, wears the crescent.
It is in Kaḻippālai, He is entempled with His Consort. 7

480. இலங்கை மன்னனை ஈர்-ஐந்து இரட்டிதோள்
துலங்க ஊன்றிய தூ மழுவாளினார்,
கலங்கள் வந்து உலவும், கழிப்பாலையை
வலம்கொள்வார் வினை ஆயின மாயுமே.

Siva is the wielder of the pure weapon of *mazhu*; He pressed
His toe and crushed the twenty arms of the Lanka's King.
He is entempled in Kaḻippālai abounding in barks. 8
The karma of those that circumambulate it will perish.

481. ஆட்சியால் அலரானொடு மாலும் ஆய்த்
தாட்சியால் அறியாது தளர்ந்தனர்;
காட்சியால் அறியான் கழிப்பாலையை
மாட்சியால்-தொழுவார் வினை மாயுமே.

The creator Brahma and the maintainer Vishnu, owing to
their inability, stood staggered; the God of Kal̲ippālai
is beyond the range of mere knowledge; the sins
of the Siva-conscious adorers will perish altogether. 9

482. செய்ய நுண் துவர் ஆடையினாரொடு,
மெய்யின் மாசு பிறக்கிய வீறு இலாக்
கையர் கேண்மை எனோ? கழிப்பாலை எம்
ஐயன் சேவடியே அடைந்து உய்(ம்)மினே!

Of what avail is your kinship with the wearers of
the soft ochre robes and the inglorious Samaṇas whose
bodies are coated with dirt. Abandon them.
Gain the salvific God of Kal̲ippālai and stand redeemed. 10

483. அம் தண் காழி அருமறை ஞானசம்-
பந்தன், பாய் புனல் சூழ் கழிப்பாலையைச்
சிந்தையால் சொன்ன செந்தமிழ் வல்லவர்,
முந்தி வான்உலகு ஆடல் முறைமையே.

Gnānasambandhan of the beautiful and cool Kāzhi
is well versed in the rare Vedas. He has sung these hymns
on the God of Kal̲ippālai rich in flowing water.
Those versed in these psalms cast in the classical Tamil̲,
will come by precedence to rule the supernal world. 11

45. திரு ஆரூர் :

கௌசிகம்

484. அந்தம்ஆய், உலகு ஆதியும் ஆயினான்,
வெந்தவெண்பொடிப் பூசிய வேதியன்,
சிந்தையே புகுந்தான்--திரு ஆரூர் எம்
எந்தைதான்; எனை ஏன்று கொளும்கொலோ?

45. TIRUVĀRŪR :

Kausikam

Siva is the Omega and the Alpha of the cosmos.
He is the God of the Vedas who wears the white baked ash.
He made His entry into my *chinta*. Will my Sire
entempled in Tiruvārūr be pleased to approve me? 1

485. கருத்தனே! கருதார் புரம்மூன்று எய்த
ஒருத்தனே! உமையாள் ஒருகூறனே!
திருத்தனே! திரு ஆரூர் எம் தீவண்ண!
அருத்த! என், எனை "அஞ்சல்!" என்னாததே?

Siva is the *Karta;* He is concorporate with Uma; He is
the Pure One; He is the flame-hued; He is the import
of the scriptures. He burnt the Asuras' Tiripura. 2
Why does He not assure me saying: "Fear not"?

486. மறையன், மா முனிவன், மருவார் புரம்
இறையின் மாத்திரையில்(ல்) எரியூட்டினான்,
சிறைவண்டு ஆர் பொழில் சூழ் திரு ஆரூர் எம்
இறைவன் தான், எனை ஏன்றுகொளும்கொலோ?

Siva authored the Vedas. He is the Great Sage; in a trice He
burnt the hostile walled-citadels; He is our God entempled
in Tiruvārūr girt with gardens where winged bees bombinate.
Will He be pleased to approve me, even me? 3

487. பல்இல் ஓடு கை ஏந்திப் பலி திரிந்து,
எல்லி வந்து, இடுகாட்டு எரிஆடுவான்--
செல்வம் மல்கிய தென்திரு ஆரூரான்;
அல்லல் தீர்த்து, எனை, "அஞ்சல்!" எனும்கொலோ?
He carries in His hand a toothless skull and seeks alms.
He dances during night in the crematory. He is our God who
is entempled in the opulent Tiruvārūr in the south.
Will He annul my troubles, saying: "Fear not"? 4

488. குருந்தம் ஏறிக் கொடிவிடு மாதவி,
விரிந்து அலர்ந்த விரை கமழ் தேன்கொன்றை,
திருந்து மாடங்கள் சூழ் திரு ஆரூரான்--
வருந்தும்போது--எனை, "வாடல்!" எனும்கொலோ?
Siva is entempled in Tiruvārūr dight with lovely
mansions; in this urbs flourish the lianas of *Mātavi*
that climb the *Kurunta* trees and the trees of
well-blown and melliferous *Konrai* blossoms.
Will He, when I grieve, assure me saying: "Fear not"? 5

489. வார் கொள் மென்முலையாள் ஒருபாகமா,
ஊர்களார் இடு பிச்சை கொள் உத்தமன்--
சீர் கொள் மாடங்கள் சூழ் திரு ஆரூரான்;
ஆர் கணா, எனை, "அஞ்சல்!" எனாததே?

Siva is the lofty One who shares His body with His Consort
who covers with a breast-band, Her delicate breasts.
He receives alms from the dwellers of many a polis.
He is of Tiruvārūr dight with glorious mansions. None else is
my refuge. Why does He not assure me saying: "Fear not"? 6

490. வளைக்கை மங்கை நல்லாளை ஓர்பாகமா,
துளைக்கையானை துயர் படப் போர்த்தவன்--
திளைக்கும் தண்புனல் சூழ் திரு ஆரூரான்;
இளைக்கும்போது, எனை ஏன்றுகொளும் கொலோ?

Siva is concorporate with His goodly and bebangled Woman. He is
mantled in the skin of the hollow trunked tusker that wailed
in pain. He is of Tiruvārūr rich in the wealth of cool water.
When I grieve sore, will He bless and approve me? 7

491. இலங்கை மன்னன் இருபதுதோள் இறக்
கலங்க, கால்விரலால், கடைக் கண்டவன்--
வலம்கொள் மா மதில் சூழ் திரு ஆரூரான்;
அலங்கல் தந்து, எனை, "அஞ்சல்!" எனும்கொலோ?

Siva crushed with His toe the twenty arms of Lanka's King
and caused him to suffer agony and the loss of his strength.
He is of Tiruvārūr engirt with great circumambient walls. 8
Will He gift His garland to me saying: "Fear not"?

492. நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப்
படியவன், பனிமாமதிச் சென்னியான்--
செடிகள் நீக்கிய தென்திருஆரூர் எம்
அடிகள்தான்; எனை, "அஞ்சல்!" எனும்கொலோ?

The tall Vishnu and Brahma could not behold Him.
He wears on His crest the great and moist crescent.
He, the Remover of sins, abides at Tiruvārūr in the south.
Will our Noble God bless me with freedom from fear? 9

493. மாசு மெய்யினர், வண் துவர்ஆடை கொள்
காசை போர்க்கும் கலதிகள், சொல் கொளேல்!
தேசம் மல்கிய தென்திரு ஆரூர் எம்
ஈசன்தான் எனை ஏன்று கொளும்கொலோ?

The Samaṇas of dirty bodies and the Buddhists who wear
ochre-robes, are evil doers. Listen not to them.
Our God resides in the world-renowned Tiruvārūr
in the south. Will He be pleased to approve me? 10

494. வன்னி, கொன்றை, மதியொடு, கூவிளம்,
சென்னி வைத்த பிரான் திரு ஆரூரை,
மன்னு காழியுள் ஞானசம்பந்தன் வாய்ப்
பன்னு பாடல் வல்லார்க்கு இல்லை, பாவமே.

Our God is adorned with *Vanni, Konṟai,* the *crescent* and *Kūviḷam.*
On Him, Gnānasambandhan of the aeviternal Kāzhi
has sung these hymns. The sins of those who
are blessed to sing these *psalms*, will perish. 11

Note: This decad was addressed to the devotees of Tiruvārūr who at the bidding of Siva, came forth to welcome Gnānasambandhan who was to enter Tiruvārūr.

46. திருக் கருகாவூர் :

கௌசிகம்

495. முத்து இலங்கு முறுவல்(ல்) உமை அஞ்சவே,
மத்தயானை மறுக(வ்), உரி வாங்கி, அக்
கத்தை போர்த்த கடவுள்--கருகாவூர் எம்
அத்தர்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

46. TIRUKKARUKĀVŪR :

Kausikam

Uma of pearly smile stood scared when Siva
peeled off the skin of the musty Tusker that grieved sorely
and then He stood mantled in it.
He is entempled in Karukāvur. The complexion of
our Sire is like unto the blazing fire. 1

496. விழுதும் வல்ல சடையான்--வினை உள்குவார்க்கு
அமுதநீழல் அகலாததோர் செல்வம் ஆம்,
க(ம்) முதம் முல்லை கமழ்கின்ற, கருகாவூர்
அமுதர்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

Ecstatic are the acts of Siva of strong matted hair;
Unto those that contemplate Him, the opulence of
getting poised for ever in the nectarean shade of His feet,
ensues. He abides at Karukāvūr pervaded
by the suaveloence of the white and joy-breeding *mullai* flowers.
The ambrosial One's hue is like unto the blazing fire. 2

497. பழக வல்ல சிறுத்தொண்டர், " பா இன் இசைக்
குழகர்!" என்று குழையா, அழையா, வரும்,
கழல் கொள் பாடல் உடையார்--கருகாவூர் எம்
அழகர்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

When the companionable and humble servitors hail Him
meltingly as the ever-young One who is pleased with
sweet music, He responds to their appeal.
He whose ankleted feet are lauded, the One who is handsome,
is entempled in Karukāvur.
His complexion is like unto the blazing fire. 3

498. பொடி மெய் பூசி, மலர் கொய்து, புணர்ந்துஉடன்,
செடியர் அல்லா உள்ளம் நல்கிய செல்வத்தர்--
கடி கொள் முல்லை கமழும் கருகாவூர் எம்
அடிகள்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

Siva, the Opulent, blesses with flawless hearts those
that wear the holy ash, pluck flowers and with them adore
Him. He abides at Karukāvūr fragrant with *mullai* flowers.
The Noble One's complexion is very like the blazing flame. 4

499. மையல் இன்றி, மலர் கொய்து வணங்கிட,
செய்யஉள்ளம் மிக நல்கிய செல்வத்தர்--
கைதல், முல்லை, கமழும் கருகாவூர் எம்
ஐயர்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

Siva, the Opulent, blesses with flawless hearts who
are free from tohubohu and who pluck flowers for Him
and adore Him. He abides at Karukāvūr perfumed by
fragrant-screw-pines and *mullai* blossoms.
The complexion of our Great God is like the blazing fire. 5

500. மாசு இல் தொண்டர் மலர் கொண்டு வணங்கிட,
ஆசை ஆர, அருள் நல்கிய செல்வத்தர்;
காய் சினத்த விடையார்--கருகாவூர் எம்
ஈசர்; வண்ணம்(ம்) எரியும்(ம்) எரிவண்ணமே.

Siva, the Opulent, blesses the flawless servitors who
adore Him with flowers, with wish-fulfilling grace.
The Rider of wrathful Bull abides at Karukāvur.
Our God's complexion is that of the blazing fire. 6

501. வெந்த நீறு மெய் பூசிய வேதியன்,
சிந்தை நின்று அருள் நல்கிய செல்வத்தன்--
கந்தம் மௌவல் கமழும் கருகாவூர் எம்
எந்தை; வண்ணம்(ம்) எரியும்(ம்) எரிவண்ணமே.

Siva bedaubs His body with the baked ash. He, the Opulent,
indwells the *chintas* of adorers and showers grace.
He abides at Karukāvūr pervaded by the fragrance of *mauval.* 7
Our Sire's complexion is that of the blazing fire.

8

502. The original Tamil verse is not traceable.

503. பண்ணின் நேர் மொழியாளை ஓர் பாகனார்,
மண்ணு கோலம்(ம்) உடைய(ம்) மலரானொடும்
கண்ணன் நேட அரியார்--கருகாவூர் எம்
அண்ணல்; வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

Siva is concorporate with Her whose speech is like *pann*;
He stood unbeholdable by Brahma seated on the comely
Lotus and Krishna. He is entempled in Karukāvūr.
The Noble One's complexion is like unto the blazing flame. 9

504. போர்த்த மெய்யினர், போது உழல்வார்கள், சொல்
தீர்த்தம் என்று--தெளிவீர்!--தெளியேன்மின்!
கார்த் தண்முல்லை கமழும் கருகாவூர் எம்
ஆத்தர் வண்ணம்(ம்) அழலும்(ம்) அழல்வண்ணமே.

Ye of clarified intellect, do not hold high the words
of the shrouded ones and of those who are vagabonds.
Siva's Karukāvūr is dight with sky-high gardens of
fragrant *mullai*; His complexion is like the blazing fire. 10

505. கலவமஞ்ஞை உலவும் கருகாவூர்,
நிலவு பாடல் உடையான் தன நீள்கழல்
குலவு ஞானசம்பந்தன செந்தமிழ்
சொல வலார் அவர் தொல்வினை தீருமே.

Karukāvūr is the habitat of splendorous peacocks.
On the long ankleted feet of its God hailed in hymns, the adoring
Gnānasambandhan has sung these psalms in classical Tamil̲.
The hoary Karma of those valiant in these songs, will perish. 11

47. திரு ஆலவாய் :

கௌசிகம்

506. காட்டு மா அது உரித்து, உரி போர்த்து உடல்,
நாட்டம்மூன்று உடையாய்! உரைசெய்வன், நான்;
வேட்டு, வேள்வி செய்யா அமண்கையரை
ஓட்டி வாதுசெயத் திருஉள்ளமே?

47. TIRUVĀLAVĀI :

Kausikam

O God who mantled Yourself in the peeled-off skin
of the musty jungle Tusker! Three are Your eyes.
Do indicate if it is Your divine will that I should
indulge in disputation with the Samaṇās who
do not perform the Vedic sacrifices. 1

507. மத்தயானையின் ஈர்உரி மூடிய
அத்தனே! அணி ஆலவாயாய்! பணி--
பொய்த்த வன் தவவேடத்தர் ஆம் சமண்-
சித்தரை அழிக்கத் திருஉள்ளமே?

O Sire mantled in the peeled-off skin of the musty Tusker!
O God of ornate Ālavāi, bless me with an inkling, if I
should indulge in disputation with the Samaṇas
of pseudo-tapas and vanquish them. 2

508. மண்ணகத்திலும் வானிலும் எங்கும் ஆம்
திண்ணகத் திரு ஆலவாயாய்! அருள்--
பெண் அகத்து எழில் சாக்கியப்பேய், அமண்-
தெண்ணர் கற்பு அழிக்கத் திருஉள்ளமே?

O God of the strong-walled Ālavāi! You are omnipresent.
Please indicate if it is Your divine will that I should
annul the pseudo-learning of the ghouls—the Buddhists
and the stubborn and obdurate Samaṇās. 3

[Note. The meaning of the term **'பெண்ணகத்து'** is not clear.]

509. ஓதி ஓத்து அறியா அமண்ஆதரை
வாதில் வென்று அழிக்கத் திருஉள்ளமே?--
ஆதியே! திரு ஆலவாய் அண்ணலே!-
நீதிஆக நினைந்து, அருள்செய்திடே!

O Primal God, the Noble One of Tiruvālavai!
Is it Your divine will that I should, in disputation,
vanquish the base Samaṇas, unacquainted with the Vedas?
O Siva, poised in *niti,* be pleased to grace me with success. 4

510. வையம் ஆர் புகழாய்! அடியார் தொழும்
செய்கை ஆர் திரு ஆலவாயாய்! செப்பாய்--
கையில் உண்டு உழலும் அமண்கையரைப்
பைய வாதுசெயத் திருஉள்ளமே?

O God of Tiruvālavāi of universal glory! You are ever
adored by Your devotees. Is it Your divine will
that I should gingerly engage myself in the disputation
with the Samaṇas who receive alms in their
gowpens, eat it and roam about? 5

511. நாறு சேர் வயல்-தண்டலை மிண்டிய
தேறல் ஆர் திரு ஆலவாயாய்! செப்பாய்--
வீறு இலாத் தவ மோட்டு அமண்வேடரைச்
சீறி, வாதுசெயத் திருஉள்ளமே?

O God of Tiruvālavāi flourishing in melliferous gardens
and fields of transplanted seedlings! Is it
Your divine will that I should, in righteous
indignation, indulge in disputation with
the unheroic and obdurate Samaṇas of pseudo-tapas? 6

512. பண்டு அடித்தவத்தார் பயில்வால்-தொழும்
தொண்டருக்கு எளியாய்! திரு ஆலவாய்
அண்டனே! அமண் கையரை வாதினில்
செண்டுஅடித்து, உளறத் திருஉள்ளமே?

O cosmic God of Tiruvālavāi! You are of easy access
to the hoary and tralatitious devotees—the adorers
of Your feet. Is it Your divine will that I should, 7
in disputation, squarely rout the Samaṇas?

513. அரக்கன் தான் கிரி ஏற்றவன் தன் முடிச்
செருக்கினைத் தவிர்த்தாய்! திரு ஆலவாய்
பரக்கும் மாண்பு உடையாய்! அமண்பாவரை,
கரக்க, வாதுசெயத் திருஉள்ளமே?

O God of Tiruvālavāi who, of yore, crushed the regal
hauteur of the Asura who durst uproot Your Mount.
Pervading renown is Yours. Is it Your divine will that I
should, in disputation, rout the sinning Samaṇas? 8

514. மாலும் நான்முகனும்(ம்) அறியா நெறி
ஆலவாய் உறையும்(ம்) அண்ணலே! பணி--
மேலைவீடு உணரா வெற்று அரையரைச்
சால வாதுசெயத் திருஉள்ளமே?

O God of Tiruvālavāi, Your ways are unknown to Vishnu
and the Four-faced. You are our Noble Lord. Is it Your
divine will that I should indulge in great disputation
to vanquish the nude Samaṇas who know not of *moksha?* 9

515. கழிக் கரைப் படு மீன் கவர்வார் அமண்-
அழிப்பரை அழிக்கத் திருஉள்ளமே?--
தெழிக்கும் பூம்புனல் சூழ் திரு ஆலவாய்
மழுப்படை உடை மைந்தனே!--நல்கிடே!

O Almighty that wields the *mazhu!* You abide at
Tiruvālavāi on the bank of the noisy and flower-laden river.
The Samaṇas of unclad waists, catch fishes in the creek
and eat them. Is it Your divine will that I should
rout them? Be pleased to tell me what I should do. 10

516. “செந்து எனா முரலும் திரு ஆலவாய்
மைந்தனே!” என்று, வல் அமண், ஆசு அற,
சந்தம் ஆர் தமிழ் கேட்ட மெய்ஞ் ஞானசம்-
பந்தன் சொல் பகரும், பழி நீங்கவே!

Addressing the Almighty of Tiruvālavāi, the habitat of
buzzing bees, Gnānasambandhan blessed with Gnosis,
sought His leave to devastate the hold of the strong Samaṇas
through hymns cast in rhythmic Tamiḻ.
Their blame will quit them that sing these psalms. 11

48. திரு மழபாடி:

கௌசிகம்

517. அங்கை ஆர் அழலன்(ன்), அழகு ஆர் சடைக்
கங்கையான், கடவுள்(ள்), இடம் மேவிய
மங்கையான், உறையும் மழபாடியைத்
தம் கையால்-தொழுவார் தகவாளரே.

Kausikam

48. TIRUMAḺAPĀDI :

Siva bears in His beautiful hand the fire; on His splendorous
matted hair He bears the Ganga; concorporate with Uma, He is
entempled in Maḻapādi. They that adore Him with their
hands, will emerge as worshippers of sterling qualities. 1

518. விதியும் ஆம்; விளைவு ஆம்; ஒளி ஆர்ந்தது ஓர்
கதியும் ஆம்; கசிவு ஆம்; வசி ஆற்றம் ஆம்;
மதியும் ஆம்; வலி ஆம்--மழபாடியுள்
நதியம் தோய் சடை நாதன் நல் பாதமே.

The salvific feet of Siva who bears on His matted crest
the Ganga, constitute one's destiny and its operation.
They melt the *manams* and control them.
They lead to the bright Siva-gati and confer Siva-conscisousness.
He is entempled in the blessed Mal̲apādi. Adore His feet. 2

519. முழவினான், முதுகாடு உறை பேய்க்கணக்-
குழுவினான், குலவும் கையில் ஏந்திய
மழுவினான், உறையும் மழபாடியைத்
தொழுமின், நும் துயர் ஆனவை தீரவே!

Siva plays on *mul̲avu;* He dwells companied with His Bhuta-
Hosts in the crematory. His beauteous hand wields the *mal̲u*.
Adore Him in His delubrum at Mal̲apādi for the total
annulment of your manifold misery. 3

520. கலையினான், மறையான், கதி ஆகிய
மலையினான், மருவார் புரம்மூன்று எய்த
சிலையினான், சேர் திரு மழபாடியைத்
தலையினால் வணங்க, தவம் ஆகுமே.

Siva is hailed by the Sāstrars; He is, indeed, the Vedic God.
Mount Kāilas, the Palladium is His. With His bow, He smote
the three, hostile and walled-citadels. He abides at Mal̲apādi.
Adoring with head this delubrum constitutes *tapas*. 4

521. நல்வினைப் பயன், நால்மறையின் பொருள்,
கல்வி ஆய கருத்தன், உருத்திரன்,
செல்வன், மேய திரு மழபாடியைப்
புல்கி ஏத்துமது புகழ் ஆகுமே.

Siva is the fruit of goodly karma; He is the import of the four
Vedas. He, the Karta is gained through true learning.
He is Mahārudra; the Opulent One abides at Malapādi.
Glory ensues unto them who hail and adore Him. 5

522. நீடினார் உலகுக்கு உயிர்ஆய் நின்றான்;
ஆடினான், எரிகான்இடை மாநடம்;
பாடினார் இசை மா மழபாடியை
நாடினார்க்கு இல்லை, நல்குரவுஆனவே.

Siva animates the extensive cosmos. He enacts His
Great Dance in the burning crematory. His delubrum
at the great Malapādi is hailed in music. They that
adore Him in this shrine are freed from manifold indigence. 6

523. மின்னின் ஆர் இடையாள் ஒரு பாகம்ஆய்
மன்னினான் உறை மா மழபாடியைப்
பன்னினார், இசையால் வழிபாடு செய்து
உன்னினார், வினை ஆயின ஓயுமே.
Siva is concorporate with His Woman of fulgurant waist.
He is semipiternally entempled in the great Malapādi.
All the karmic deeds of those that hail Him with *pann*-pervading 7
hymns and songs, in love, will cease altogether.

524. தென்இலங்கையர் மன்னன் செழு வரை-
தன்னில் அங்க அடர்த்து அருள்செய்தவன்
மன் இலங்கிய மா மழபாடியை
உன்னில், அங்க உறுபிணி இல்லையே.

Siva crushed the monarch of Lanka in the south, under
His splendorous Mount; then when he rued He graced
him; He is entempled in the great Malapādi.
The afflicting maladies of His adorers will get snapped. 8

525. திருவின் நாயகனும், செழுந்தாமரை
மருவினானும், தொழ, தழல் மாண்பு அமர்
உருவினான் உறையும் மழபாடியைப்
பரவினார் வினைப்பற்று அறுப்பார்களே.

Siva soared up majestically as a flame adored by
the consort of Lakshmi, and Brahma seated on the splendorous
Lotus. They that adore His shrine at the great Malapādi
will snap their nexus with karma. 9

526. நலியும், நன்று அறியா, சமண்சாக்கியர்
வலிய சொல்லினும், மா மழபாடியுள்
ஒலிசெய் வார்கழலான் திறம் உள்கவே,
மெலியும், நம் உடல் மேல்வினை ஆனவே.

If we contemplate Siva whose feet are decked with resounding
anklets and who abides at the great Malapādi,
rejecting the harrowing words of the ill-disposed Samaṇas
and the Sākyās, all kārmic consequences that enfeeble us will wilt. 10

527. மந்தம் உந்து பொழில் மழபாடியுள்
எந்தை சந்தம் இனிது உகந்து ஏத்துவான்,
கந்தம் ஆர் கடல் காழியுள் ஞானசம்-
பந்தன் மாலை வல்லார்க்கு இல்லை, பாவமே.

The sins of those that are valiant in the garland of the rhythmic hymns of Gnānasambandhan, hailing from the fragrant Kāzhi, close to the sea, on our Sire of Maḻapādi girt with gardens where Notus wafts, will cease. 11

49. பொது

நமச்சிவாயத் திருப்பதிகம் : கௌசிகம்

528. காதல் ஆகி, கசிந்து, கண்ணீர் மல்கி,
ஓதுவார்தமை நன்நெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது--
நாதன் நாமம் நமச்சிவாயவே.

49. GENERAL

Namacchivāya Tiruppathikam : Kausikam

They melt in love and are tear-bedewed. Thus they adore and hail Siva who is pleased to poise them in the salvific way. Siva's name is Namasivāya; it is the true import of the quartet of the Vedas. 1

529. நம்புவார் அவர் நாவின் நவிற்றினால்,
வம்புநாள் மலர் வார் மது ஒப்பது;
செம்பொன் ஆர் திலகம், உலகுக்கு எலாம்;--
நம்பன் நாமம் நமச்சிவாயவே.

Siva is the ruddy and auric tilak of the cosmos.
He is the supremely desirable. His name is Namasivāya.
If they who firmly believe in Siva, and chant His
name, it is sweet as the seeping melis of
the fragrant and fresh-blown blossoms. 2

530. நெக்கு உள், ஆர்வம் மிகப் பெருகி(ந்) நினைந்து,
அக்குமாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது--
நக்கன் நாமம் நமச்சிவாயவே.

The Nude God's name is Namasivāya. It confers
Devahood on those that melt in immense devotion,
hold the *rosary* of *rudrāksha* beads in their beauteous
hands and meditate on Him as ordained. 3

531. இயமன் தூதரும் அஞ்சுவர், இன்சொலால்
நயம் வந்து ஓத வல்லார் தமை நண்ணினால்;--
நியமம்தான் நினைவார்க்கு இனியான், நெற்றி-
நயனன், நாமம் நமச்சிவாயவே.

The name of the brow-eyed Siva is Namasivāya; He is
dear to them that in love contemplate Him. Yama's messengers
dread even to come near them who are attached
to those that chant His name compact of sweet letters. 4

532. கொல்வாரேனும், குணம் பல நன்மைகள்
இல்லாரேனும், இயம்புவர் ஆயிடின்,
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்--
நல்லான் நாமம் நமச்சிவாயவே.

Though they are killers and are without good qualities
or principles, yet if they chant the name of Siva,
they'll be (gradually) manumitted from all evil.
The goodly God's name is, indeed, Namasivāya. 5

533. மந்தரம்(ம்) அன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்,
சிந்தும் வல்வினை; செல்வமும் மல்குமால்--
நந்தி நாமம் நமச்சிவாயவே.

Even if they are the committers of sins huge as
the Mount Mantara and stand fettered by their evil,
if they chant Namasivāya—the name of Nandi—,
their evil karma'll snap and they'll gain opulence. 6

534. நரகம்ஏழ் புக நாடினார் ஆயினும்,
உரைசெய் வாயினர் ஆயின், உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்--
வரதன் நாமம் நமச்சிவாயவே.
Even if they are to wallow in the seven hells, if
they chant the boon-bestower's name Namasivāya,
it will redeem them and will enable them 7
to live companied with the Hosts of Rudra.

535. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலம் கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்,
மலங்கி, வாய்மொழி செய்தவன் உய் வகை
நலம் கொள் நாமம் நமச்சிவாயவே.

When the king of Lanka durst uproot the Mount Kailas,
Sankara pressed it with His toe and crushed him.
Then when He chanted in devotion the Vedas, it is
the weal-conferring name Namasivāya that redeemed him. 8

536. போதன், போது அன கண்ணனும், அண்ணல்தன்
பாதம் தான் முடி நேடிய பண்பராய்,
ஆதும் காண்பு அரிது ஆகி, அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே.

When Brahma on the Lotus and the lotus-eyed Vishnu
went in quest of Siva's crown and feet they stood wilted
unable to behold Him. Then they chanted Siva's name
'Namasivāya' and gained redemption. 9

537. கஞ்சி மண்டையர், கையில் உண் கையர்கள்,
வெஞ் சொல் மிண்டர் விரவிலர் என்பரால்--
விஞ்சை அண்டர்கள் வேண்ட, அமுதுசெய்
நஞ்சு உள் கண்டன் நமச்சிவாயவே.
Samaṇas quaff *conjee* from *mantais* held in their
hands; Buddhists speak harsh words. They hail not Siva.
As entreated by the artful Devas, Siva quaffed the venom.
The name of the blue-throated God is Namasivāya. 10

538. "நந்தி நாமம் நமச்சிவாய!" எனும்
சந்தையால்,-தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார்எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே.

Tamil̲ Gnānasambandhan sang this rhythmic decad
that declares that Nandi's name is Namasivāya.
They that hail this decad with delighted *chinta-s*
can assuredly snap their fettering bondage. 11

50. திருத் தண்டலை நீணெறி : கௌசிகம்

539. விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே,
கரும்பும் தும்பியும் சூழ் சடையார்க்கு இடம்--
கரும்பும் செந்நெலும் காய் கமுகின் வளம்
நெருங்கும் தண்டலை நீணெறி; காண்மினே!

50. TIRUTTHAṆDALAI NEEḶNER̲I : Kausikam

Behold the uberous Thaṇdalaineeḷner̲i in which is entempled
Siva who bears on His matted hair the lovely crescent
and the swelling Ganga. Here thrive aplenty, 1
sugarcanes, paddy and areca-nut trees.

540. இகழும் காலன் இதயத்தும், என்உளும்,
திகழும் சேவடியான் திருந்தும்(ம்) இடம்--
புகழும் பூமகளும் புணர் பூசுரர்
நிகழும் தண்டலை நீணெறி; காண்மினே!

In Thaṇḍalaineeḷneṟi is entempled Siva whose splendorous
and salvific feet are ensouled by Yama who ignored
Markandēya, and myself. It is here Lakshmi seated
on the red Lotus and the Devas on earth who are Brahmins
hail and adore Him. Behold His delubrum! 2

541. பரந்த நீலப் படர்எரிவல்விடம்
கரந்த கண்டத்தினான் கருதும்(ம்) இடம்--
சுரந்த மேதி துறை படிந்து ஓடையில்
நிரந்த தண்டலை நீணெறி; காண்மினே!

Siva quaffed the cruel venom like unto the spreading
flame and became the blue-throated God.
He is entempled in Thaṇḍalaineeḷneṟi where the buffalo
immersed in a brook pours milk. Behold Siva's delubrum! 3

542. தவந்த என்பும், தவளப்பொடியுமே,
உவந்த மேனியினான் உறையும்(ம்) இடம்--
சிவந்த பொன்னும் செழுந் தரளங்களும்
நிவந்த தண்டலை நீணெறி; காண்மினே!

Siva who joyously coats Himself with the white ash,
eke wears the burnt bones. He is entempled in
Thaṇḍalaineeḷneṟi where abound aplenty
gold and splendorous pearls. Behold Siva's delubrum! 4

543. The Tamil original is not traceable. 5

544. The Tamil original is not traceable. 6

545. The Tamil original is not traceable. 7

546. இலங்கை வேந்தன் இருபதுதோள் இற,
விலங்கலில் அடர்த்தான் விரும்பும்(ம்) இடம்--
சலம் கொள் இப்பி தரளமும் சங்கமும்
நிலம் கொள் தண்டலை நீணெறி; காண்மினே!

Siva who crushed the twenty shoulders of the King of Lanka
who durst uproot His mount. He is willingly entempled
in Thaṇḍalaineeḷne̱ri where shells in water,
pearls and conches are shored up. Behold Siva's shrine! 8

547. கரு வரு உந்தியின் நான்முகன், கண்ணன், என்று
இருவரும் தெரியா ஒருவன்(ன்) இடம்--
செரு வருந்திய செம்பியன் கோச்செங்கண்-
நிருபர் தண்டலை நீணெறி; காண்மினே!

The creator Brahma arose from the navel of Vishnu. Siva who stood
unbeholdable by these two abides at the shrine of Thaṇḍalaineeḷne̱ri 9
built by the martial Kocchenkat Cho̱la. Behold Siva's temple!

548. கலவு சீவரத்தார், கையில் உண்பவர்,
குலவமாட்டாக் குழகன் உறைவுஇடம்--
சுலவு மா மதிலும், சுதை மாடமும்,
நிலவு தண்டலை நீணெறி; காண்மீனே!

Siva is not adored by the ochre-robed and the Samaṇas
who receive alms in their gowpens and eat it. He, the ever-young
One, is entempled in Thaṇdalaineeḷneṟi dight
with great circumambient walls and plastered mansions.
Lo and behold this shrine and stand blessed. 10

549. நீற்றர், தண்டலை நீணெறி நாதனை,
தோற்றும் மேன்மையர் தோணிபுரத்து இறை-
சாற்று ஞானசம்பந்தன்--தமிழ் வலார்
மாற்று இல் செல்வர்; மறப்பர், பிறப்பையே.

On the Lord-God that wears the ash and abides at Thaṇdalaineeḷneṟi,
Gnanasambandhan of Toṇipuram where dwell the lofty
ones, has sung these hymns. Those that are valiant
in these psalms, will, rebirthless, thrive in unending wealth. 11

51. திரு ஆலவாய் : கௌசிகம்

550. செய்யனே! திரு ஆலவாய் மேவிய
ஐயனே! "அஞ்சல்" என்று அருள்செய், எனை;
பொய்யர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பையவே சென்று, பாண்டியற்கு ஆகவே!

51. TIRUĀLAVĀI : Kausikam

O the ruddy-complexioned God of Ālavāi! O Great One!
Do bless me in grace saying: "Fear not!"
Let the fire lit by the false Samaṇas proceed
slowly and afflict the Pāṇdya. 1

551. சித்தனே! திரு ஆலவாய் மேவிய
அத்தனே! "அஞ்சல்!" என்று அருள்செய், எனை;
எத்தர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பத்தி மன், தென்னன், பாண்டியற்கு ஆகவே!

O Siddha! O Sire entempled in Tiruvālavāi!
Be pleased to grace me saying: "Fear Not!"
Let the fire lit by the deceptious Samaṇas seize
the ruler of the Pāṇdya realm in the south, a *bhakta*. 2

552. தக்கன் வேள்வி தகர்த்து அருள் ஆலவாய்ச்
சொக்கனே! "அஞ்சல்!" என்று அருள்செய், எனை;
எக்கர்ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பக்கமே சென்று, பாண்டியற்கு ஆகவே!

O Chokkan of Tiruvālavāi who devastated Daksha's
sacrifice, be pleased to assure me thus: "Fear not!"
Let the fire lit by the haughty Samaṇas proceed
and take hold of the Pāṇdya. 3

553. சிட்டனே! திரு ஆலவாய் மேவிய
அட்டமூர்த்தியனே! "அஞ்சல்!" என்று அருள்;
துட்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பட்டி மன், தென்னன், பாண்டியற்கு ஆகவே!
O the righteous God of Tiruvālavāi, You are, indeed,
the Ashta-Mūrti; bless me with freedom from fear.
Let the fire lit by the evil Samaṇas, afflict
the Pāṇdya, the learned *Tennan*. 4

554. நண்ணலார் புரம்மூன்று எரி ஆலவாய்
அண்ணலே! "அஞ்சல்!" என்று அருள்செய் எனை.
எண் இலா அமணர் கொளுவும் சுடர்,
பண் இயல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே!

O Noble God of Ālavāi who burnt the three, hostile,
walled-citadels! Bless me thus: "Fear not!"
Let the fire lit by the thoughtless Samaṇas seize
the Pāṇdya—the fosterer of Tamil̲ music cast in paṇs. 5

555. "தஞ்சம்!" என்று உன் சரண் புகுந்தேனையும்,
"அஞ்சல்!" என்று அருள், ஆலவாய் அண்ணலே!
வஞ்சம் செய்து அமணர் கொளுவும் சுடர்,
பண் இயல் தமிழ்ப் பாண்டியற்கு ஆகவே!

I surrendered to Your feet, as my refuge.
O God, the noble One of Ālavāi, bless me with freedom
from fear. Let the fire lit by the deceitful Samanas afflict
Tennan hight Pāṇdya the fosterer of the tuneful Tamil̲. 6

556. செங்கண் வெள்விடையாய்! திரு ஆலவாய்
அங்கணா! "அஞ்சல்!" என்று அருள்செய், எனை;
கங்குலார் அமண்கையர் இடும் கனல்,
பங்கம் இல் தென்னன்பாண்டியற்கு ஆகவே!
O Rider of the white and red-eyed Bull, You abide at
Tiruvālavāi! O Merciful One, bless me saying: "Fear not!"
Let the fire lit by the dark-hearted Samaṇas afflict
the Tennan Pāndya without causing serious harm. 7

557. தூர்த்தன் வீரம் தொலைத்து அருள் ஆலவாய்
ஆத்தனே! “அஞ்சல்!” என்று அருள்செய், எனை;
ஏத்து இலா அமணர் கொளுவும் சுடர்,
பார்த்திவன், தென்னன், பாண்டியற்கு ஆகவே!

O God of Ālavāi! You quelled the puissance of the debauche
and then graced him. O Merciful One, bless me with
freedom from fear. Let the fire lit by the ungodly
Samaṇas seize the Pāṇḍya, the King, known as Tennan. 8

558. தாவினான், அயன் தான் அறியா வகை
மேவினாய்! திரு ஆலவாயாய், அருள்!
தூ இலா அமணர் கொளுவும் சுடர்,
பாவினான், தென்னன், பாண்டியற்கு ஆகவே!

You stood imperceivable by him that scaled the earth
and the heavens, and Brahma. O God of Tiruvālavāi,
bless me with freedom from fear. Let the fire
lit by the dirty Samaṇas, pervade the Tennan
yclept Pāṇḍya who caused the arson. 9

559. எண் திசைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்டனே! “அஞ்சல்!” என்று அருள்செய், எனை;
குண்டர் ஆம் அமணர் கொளுவும் சுடர்,
பண்டி மன், தென்னன், பாண்டியற்கு ஆகவே!

O God of Ālavāi renowned in the eight directions!
O Cosmic God, bless me with fearlessness. Let the fire
lit by the adipose and obdurate Samaṇas, seize 10
the King Tennan who is known as the Pāṇḍya.

560. அப்பன்--ஆலவாய் ஆதி--அருளினால்,
வெப்பம் தென்னவன்மேல் உற, மேதினிக்கு
ஒப்ப, ஞானசம்பந்தன் உரைபத்தும்,
செப்ப வல்லவர் தீது இலாச் செல்வரே.

O Pater, the Primal God of Ālavāi! On You by Your
grace, Gnānasambandhan, in accordamce with
the way rife on earth, sang these hymns to afflict
the Pāndya with fever. Those that are valiant in
these ten psalms are truly the opulent ones flawless. 11

52. திரு ஆலவாய்

திருவிராகம் : கௌசிகம்

561. வீடுஅலால் அவாய்இலாஅய், விழுமியார்கள் நின்கழல்
பாடல் ஆலவாய்இலாய்! பரவ நின்ற பண்பனே!
காடுஅலால் அவாய்இலாய்! கபாலி! நீள்கடி(ம்) மதில்
கூடல்ஆலவாயிலாய்!--குலாயது என்ன கொள்கையே?

52. TIRUĀLAVĀI

Tiruvirākam : Kausikam

O God of *moksha*-conferring Ālavāi; You are hymned by
the lofty ones; Your greatness is ever celebrated; You abide
at the crematory, O Kapāli. Wherefore do You dwell in Kūṭal
girt with long and protective walls, at Ālavāi? 1

562. பட்டு இசைந்த அல்குலாள் பாவையாள் ஓர்பாகமா
ஒட்டு இசைந்தது அன்றியும், உசசியாள் ஒருத்தியா,
கொட்டு இசைந்த ஆடலாய்! கூடல்ஆலவாயிலாய்!
எட்டு இசைந்த மூர்த்தியாய்!--இருந்தஆறுஇது என்னையே?

O God of Ālavāi at Kūṭal! You share Your body with Your
Woman whose *alkul* is covered with silk. Yet You bear
on Your head the damsel Ganga. You dance to the beat of drum.
You are Ashta-murti. Who can know of Your nature?
2

563. குற்றம் நீ! குணங்கள் நீ! கூடல்ஆலவாயிலாய்!
சுற்றம் நீ! பிரானும் நீ! தொடர்ந்து இலங்கு சோதி நீ!
கற்ற நூல் கருத்தும் நீ! அருத்தம், இன்பம், என்று இவை
முற்றும் நீ! புகழ்ந்து முன் உரைப்பது என், முக(ம்)மனே?

O God of Kūṭal Ālavāi! You are blemish as well as virtue.
You are our kin and God; You are the aeviternal Flame.
You are the import of the learned opuses; You are the Explicator
of the scriptures. You are, indeed, Bliss. You are
omneity. How can any duly eulogise You?
3

564. முதிரும் நீர்ச் சடைமுடி முதல்வ! நீ முழங்கு அழல்
அதிர வீசி ஆடுவாய்! அழகன் நீ! புயங்கன் நீ!
மதுரன் நீ! மணாளன் நீ! மதுரை ஆலவாயிலாய்!
சதுரன் நீ! சதுர்முகன்கபாலம் ஏந்து சம்புவே!

You are the Primal God who sports on Your matted crest
the hoary Ganga, You dance vibrantly in the crackling fire.
You are the Handsome One. You wear adders. You are sweet.
You are the Bridegroom; You abide at Ālavāi in
Madurai; You are the Strategist; You are Sambu
who carries with You a skull of the Four-faced Brahma.
4

565. கோலம் ஆய நீள்மதிள் கூடல்ஆலவாயிலாய்!
பாலன் ஆய தொண்டு செய்து, பண்டும் இன்றும் உன்னையே,
நீலம் ஆய கண்டனே! நின்னை அன்றி, நித்தலும்,
சீலம் ஆய சிந்தையில்-தேர்வது இல்லை, தேவரே.

O God of Ālavāi girt with long and splendorous walls!
You are, of yore and now, adored by the divine lads.
You are the blue-throated; other than You, the righteous-
minded Devas that daily hail You, will adore none. 5

[**Note:** The divine lads are Markandēyā and Chandeesvarā.]

566. பொன்தயங்கு-இலங்கு ஒளி(ந்) நலம் குளிர்ந்த புன்சடை
பின் தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்புஇலீ!
கொன்றை அம் முடியினாய்! கூடல் ஆலவாயிலாய்!--
நின்று இயங்கி ஆடலே நினைப்பதே நியமமே.

O Siva, You dance as Your cool, ruddy, auric and dangling
matted strands sway on Your back. You are Pinggnakan;
You are the birthless; konṟais deck your lovely head;
You are of Ālavāi. Our ritual is but to think on
Your brilliant dance (which is expiatory). 6

567. ஆதி அந்தம் ஆயினாய்! ஆலவாயில் அண்ணலே!
சோதி அந்தம் ஆயினாய்! சோதியுள் ஓர் சோதியாய்!-
கீதம் வந்த வாய்மையால் கிளர் தருக்கினார்க்கு அல்லால்,
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்து உரைக்கல் ஆகுமே?

O the Great God of Ālavāi, You are the Alpha and the Omega.
You are where the light ends; You are the Light animating
all lights. Save those that are poised in the truth
of hymns that kindle the divinely enlightening
analysis, others who are valiant in book-learnt
skill, cannot cognise and proclaim Your Truth. 7

568. கறை இலங்கு கண்டனே! கருத்து இலாக் கருங்கடல்-
துறை இலங்கை மன்னனைத் தோள் அடர ஊன்றினாய்!
மறை இலங்கு பாடலாய்! மதுரைஆலவாயிலாய்!--
நிறை இலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே.

O God whose throat wears the stain of venom! You pressed
Your toe and crushed the thoughtless King of Lanka upon
the dark sea. O Siva. You are extolled by the Vedic hymns.
You abide at Ālavāi in Madurai. Our ritual is comprised
in thinking on You with our hearts totally pervaded by uprightness. 8

569. தா வண(வ்) விடையினாய்! த்லைமை ஆக, நாள்தொறும்
கோவண(வ்) உடையினாய்! கூடல் ஆலவாயிலாய்!--
தீ வணம் மலர்மிசைத் திசைமுகனும், மாலும், நின்
தூ வணம்(ம்) அளக்கிலார், துளக்கம் எய்துவார்களே.

O Rider of the leaping Bull. "You wear daily as Your
chief clothing a loin-cloth. You are entempled in
Kūtal Ālavāi. Brahma seated on the flame-hued
Lotus and Vishnu could not assess Your true stature; 9
they but stood flabbergasted.

570. தேற்றம் இல் வினைத்தொழில்-தேரரும் சமணரும்
போற்றுஇசைத்து, நின் கழல் புகழ்ந்து புண்ணியம் கொளார்;
கூற்று உதைத்த தாளினாய்! கூடல்ஆலவாயிலாய்!
நால்-திசைக்கும் மூர்த்தி ஆகி நின்றது என்ன நன்மையே?

The Buddhists and the Samaṇas perform but befuddling
acts; they do not hymn and hail Your ankleted feet
to come by holiness.
O Siva, You kicked Yama to death with Your foot.
You are entempled in Kūtal Ālavāi. Do You not, as God,
protect the entia in the four directions? 10

571. போய நீர் வளம் கொளும் பொரு புனல் புகலியான்--
பாய கேள்வி ஞானசம்பந்தன்--நல்ல பண்பினால்,
ஆய சொல்லின்மாலைகொண்டு, ஆலவாயில் அண்ணலைத்
தீய தீர எண்ணுவார்கள் சிந்தை ஆவர், தேவரே.

Gnānasambandhan of Pukali made uberous by its
wealth of flowing water, is well endowed with learning.
With the hymns sung by him prompted by goodly conduct,
they that hail the Great God of Ālavāi, to get freed
from evil, will emerge as good-hearted Devas. 11

53. திரு ஆனைக்கா

திருவிராகம் :

கௌசிகம்

572. வானைக் காவல் வெண்மதி மல்கு புல்கு வார்சடை,
தேனைக் காவில் இன்மொழித் தேவி பாகம்ஆயினான்,
ஆனைக்காவில் அண்ணலை, அபயம்ஆக வாழ்பவர்
ஏனைக் காவல் வேண்டுவார் ஏதும் ஏதம் இல்லையே.

53. TIRUVĀNAIKKA :

Kausikam

Tiruvirākam

Siva bears on His long matted hair, the skyey, white
and radiant moon. He is concorporate with His Consort
whose speech is sweet like melis. He is abiding at Ānaikka.
They that take refuge in the Great One requires no
other safeguard to protect themselves from danger. 1

573. சேறு பட்ட தண்வயல் சென்றுசென்று, சேண் உலாவு
ஆறுபட்ட நுண் துறை ஆனைக்காவில் அண்ணலார்,
நீறு பட்ட மேனியார், நிகர் இல் பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார்; விண்ணில் எண்ண வல்லரே.

Siva is entempled in Ānaikka dight with clayey fields
enriched by the river that flows from afar.
The Great One is ash-bedaubed. They that hail His
peerless feet'll become Siva-conscious and gain the Empyrean. 2

574. தாரம்ஆய மாதராள் தான் ஓர்பாகம் ஆயினான்,
ஈரம் ஆய புன்சடை ஏற்ற திங்கள் சூடினான்,
ஆரம் ஆய மார்பு உடை ஆனைக்காவில் அண்ணலை,
வாரம்ஆய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே.

Siva is concorporate with His Consort; on His moist
and ruddy matted hair, He wears the crescent.
The Great God entempled in Ānaikka wears on His
chest the (Cholā's) chain. The cruel kārmic
deeds of those that adore Him in love, will perish. 3

575. விண்ணில் நண்ணு புல்கிய வீரம்ஆய மால்விடை,
சுண்ணவெண் நீறு ஆடினான்; சூலம் ஏந்து கையினான்;
அண்ணல் கண் ஓர்மூன்றினான்; ஆனைக்காவு கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க்கு ஏதம் ஒன்றும் இல்லையே.

When Siva burnt the three walled-citadels that roamed
in the heavens, Vishnu in the form of a bull served
as His mount. He is bedaubed with the white powder of ash.
He wields a spear; the Great One is trinocular.
No evil will beset them that adore with their hands
in His shrine at Ānaikka. 4

576. வெய்ய பாவம் கைவிட வேண்டுவீர்கள்! ஆண்ட சீர்
மை கொள் கண்டன், வெய்ய தீ மாலை ஆடு காதலான்,
கொய்ய விண்ட நாள்மலர்க்கொன்றை துன்று சென்னி எம்
ஐயன், மேய பொய்கை சூழ் ஆனைக்காவு சேர்மினே!

Siva, the glorious Saviour, wears a dark patch in His throat.
He loves to dance in the fierce fire. He wears a chaplet
woven of plucked konṟais fresh-blown.
If you desire to give up cruel sins, reach the Great One's
shrine of Ānaikka girt with *poikais*, and adore Him. 5

577. நாணும் ஓர்வு, சார்வும், முன் நகையும், உட்கும், நன்மையும்,
பேண்உறாத செல்வமும், பேச நின்ற பெற்றியான்--
ஆணும் பெண்ணும் ஆகிய ஆனைக்காவில் அண்ணலார்--
காணும் கண்ணுமுன்று உடைக் கறை கொள் மிடறன் அல்லனே!

Sense of shame, consciousness, attachment to God,
joyous weal and ignoration of opulence: these mark His
devotees who descant on His nature. The Great God
entempled in Ānaikka is androgynic. Is He not
the triple-eyed One whose throat bears a patch of murk? 6

578. கூடும் மாலை, நண்பகல், கூடி வல்ல தொண்டர்கள்,
பேரும் ஊரும் செல்வமும் பேச நின்ற பெற்றியான்;
பாரும் விண்ணும் கைதொழ, பாயும் கங்கை செஞ்சடை
ஆரம் நீரொடு ஏந்தினான்; ஆனைக்காவு சேர்மினே!

During morn, eve and noon, His devotees trained in service,
foregather and descant on Siva's name, polis, opulence
and nature. He abides at Ānaikka adored with hands
by the terrestrials and the celestials. He bears on His
ruddy matted crest the flowing Ganga of brimful water. 7
Reach His Ānaikka and adore Him.

579. பொன் அம் மல்கு தாமரைப்போது தாது வண்டுஇனம்
அன்னம் மல்கு தண்துறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்ன வல்ல, நால்மறை பாட வல்ல, தன்மையோர்
முன்ன வல்லர், மொய்கழல்; துன்ன வல்லர், விண்ணையே.

Bees revel in the pollen of the beauteous and golden lotuses
in Ānaikka dight with cool fords teeming with swans.
Our God is entempled in this polis. They that are valiant
in the four Vedas hymn His feet fastened to His anklets
filled with gems. They will certainly gain the Empyrean. 8

580. ஊனொடு உண்டல் நன்று என, ஊனொடு உண்டல் தீது என,
ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்;
வானொடு ஒன்று சூடினான்; வாய்மைஆக மன்னி நின்று
ஆனொடுஅஞ்சும் ஆடினான்; ஆனைக்காவு சேர்மினே!

Out of love for Siva, Kaṇṇappar offered meat to Siva
thinking it to be good; Sivagochariār deemed such
offering to be evil. Siva is thus hailed in opposing ways.
He who has His ablutions in the five products of kine,
wears the skyey crescent. Poised in Truth He abides
semipiternally at Ānaikka. Reach His shrine and adore Him. 9

581. கையில் உண்ணும் கையரும் கடுக்கள் தின் கழுக்களும்,
மெய்யைப் போர்க்கும் பொய்யரும், வேதநெறியை அறிகிலார்;
தையல் பாகம்ஆயினான், தழல் அதுஉருவத்தான், எங்கள்
ஐயன், மேய பொய்கை சூழ் ஆனைக்காவு சேர்மினே!

The Samaṇas eat from their gowpens in which they
receive alms; eke are they the consumers
of myrobalan. The false Buddhists shroud themselves.
These know not the Vedic way. Siva is concorporate with His
Woman; He is flame-hued. Our Great God is entempled in
Ānaikka dight with *poikais*. Reach this shrine and adore it. 10

582. ஊழிஊழி வையகத்து உயிர்கள் தோற்றுவானொடும்,
ஆழியானும், காண்கிலா ஆனைக்காவில் அண்ணலை,
காழி ஞானசம்பந்தன் கருதிச் சொன்ன பத்துஇவை
வாழிஆகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே.

On the Great God of Ānaikka who was unbeholdable
by Brahma who creates entia in every aeon
and Vishnu, Gnānasambandhan sang these ten
well-considered hymns. To flourish well, those
that are learned and who cultivate these psalms,
will *shed* their fierce and manifold karma. 11

54. பொது

திருப்பாசுரம் : கௌசிகம்

583. வாழ்க--அந்தணர், வானவர், ஆன்இனம்!
வீழ்க, தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க, தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க! வையகமும் துயர் தீர்கவே!

54.GENERAL

Tiruppāsuram : Kausikam

May Brahmins, Devas and herds of kine flourish!
May cool rain down descend and may the king grow loftily!
May evil perish! May the name Hara engird all! 1
May the miseries on earth too, perish!

584. அரிய காட்சியராய், தமது அங்கை சேர்
எரியர்; ஏறு உகந்து ஏறுவர்; கண்டமும்
கரியர்; காடு உறை வாழ்க்கையர்; ஆயினும்,
பெரியர்; ஆர் அறிவார், அவர் பெற்றியே?

Siva is rarely beholdable; He holds fire in His hand.
He rides the Bull; He is the dark-throated.
Though He dwells in the crematorium,
He is great. Who can ever know of His nature? 2

585. வெந்தசாம்பல் விரை எனப் பூசியே,
தந்தையாரொடு தாய் இலர்; தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்;
எந்தையார் அவர் எவ்வகையார்கொலோ!

Siva bedaubs Himself as perfume, the baked ash.
He has neither Pater nor Mater.
He annuls the karma of those who think on Him when waking up.
What may the nature be of our Siva? 3

586. ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில், அளவு இல்லை; கிளக்க வேண்டா;
கோண்பாலனவும் வினையும் குறுகாமை, எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க, தக்கார்!
Siva graces them ruled by Him; His is the hoary greatness.
If one inquiries into these, they are, indeed, unassessable;
cease talking; evil bred by planets and karma will not
touch them who hearken to His glory and adore His feet. 4

587. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டு உளன், எங்கள் சோதி;
மா துக்கம் நீங்கல்உறுவீர், மனம்பற்றி வாழ்மின்!
சாதுக்கள்மிக்கீர், இறையே வந்து சார்மின்களே!

Subject not Siva to muckle proof by resorting to exempla
and logical dicta; Our Sire is the ever-radiant and true Light.
Ye that desire to annul your sorrow great, hold fast to Him
with all your heart and flourish well.
You abound in serenity; gain at-one-ment with Him. 5

588. ஆடும்(ம்) எனவும், அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும்(ம்) எனவும், புகழ்அல்லது, பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும்(ம்) அறுக்கும்(ம்) எனக் கேட்டிர்ஆகில்,
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது, நாட்டல் ஆமே?

If you ask why Siva dances, why He kicked Yama, why He
hymns the Vedas, and why He snaps evil and re-birth,
it is not for the augmentation of His renown at all.
He dispenses nought but grace to His seekers. 6

589. கடி சேர்ந்த போது மலர் ஆன கைக் கொண்டு, நல்ல
படி சேர்ந்த பால்கொண்டு, அங்கு ஆட்டிட, தாதை பண்டு
முடி சேர்ந்த காலை அற வெட்டிட, முக்கண் மூர்த்தி
அடி சேர்ந்த வண்ணம்(ம்) அறிவார் சொலக் கேட்டும் அன்றே!

When the lad adored Siva with fragrant flowers held in his hand and performed His ablutions with good milk, his father witnessing these, kicked the milk pot. At this the lad axed his feet. Lo, have you not hearkened to the narration of the lad's father gaining the feet of the majestically crowned and triple-eyed Siva? 7

590. வேதமுதல்வன் முதல்ஆக விளங்கி, வையம்
ஏதப்படாமை, உலகத்தவர் ஏத்தல்செய்ய,
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே!

Siva is the Primal God of the Vedas; the people on earth, to thrive unflawed, hail Him. Sūta alive to the grace of the splendorous Creator of entia, composed the rhythmic Puranas, cast in word-garlands. It behoves you to cultivate them. 8

591. பார் ஆழிவட்டம் பகையால் நலிந்து ஆட்ட, வாடி,
பேர் ஆழியானது இடர் கண்டு, அருள்செய்தல் பேணி,
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சுஇடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும் புகழ் உற்றது அன்றே!

Witnessing the sufferings of orbis terrarum, caused by its foes, Vishnu who resolved to provide relief, quit His bed on the main and embosomed Siva. To him Siva gifted His martial Disc. Does this not bespeak the glory of Siva? Is not this glory invested with accrescent renown? 9

592. மால்ஆயவனும் மறைவல்லவன் நான்முகனும்
பால் ஆய தேவர் பகரில், அமுது ஊட்டல் பேணி,
கால் ஆய முந்நீர் கடைந்தார்க்கு அரிதுஆய் எழுந்த
ஆலாலம் உண்டு, அங்கு அமரர்க்கு அருள் செய்ததுஆமே!

When Tirumāl, Brahma and the multitudinous Devas
churned the ocean to come by ambrosia, the deadly
Halāhala rose up; as prayed by these, Siva quaffed
the venom and graced the Devas. 10

593. அற்று அன்றி அம் தண் மதுரைத் தொகை ஆக்கினானும்,
தெற்று என்ற தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்நீர்ப்
பற்று இன்றிப் பாங்கு எதிர்வின் ஊரவும், பண்பு நோக்கில்,
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே!

Moreover, Siva established in the cool and beautiful Madurai
the Tamil̲ Saṅkam. To convince beyond doubt the atheistic
Samaṇas, He caused the leaf dropped in the Vaikai,
to swim against the current. Considering well His
omnipotency it stands well established that Siva who
sports the signum of His Bull in His flag, is the only true God. 11

594. நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன், நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்,
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்,
வல்லார்கள், வானோர்உலகு ஆளவும் வல்லர் அன்றே!

Gnānasambandhan of Pukali where dwell the truly good,
sang these hymns on the God hailed by myriads.
His *pāsuram* is hailed universally. They that are valiant
in these psalms'll be blessed to rule the ethereal worlds. 12

55. திரு வான்மியூர் : கௌசிகம்

595. விரை ஆர் கொன்றையினாய்! விடம் உண்ட மிடற்றினனே!
உரை ஆர் பல்புகழாய்! உமைநங்கை ஓர் பங்கு உடையாய்!
திரை ஆர் தெண்கடல் சூழ் திரு வான்மியூர் உறையும்
அரையா!-உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

55. TIRUVĀN̲MIYŪR : Kausikam

O Siva adorned with fragrant kon̲rais! O One whose throat
bears the stain of venom! Your manifold glory is hailed by
devotees; You are concorporate with the damsel Uma.
O King abiding at Tiruvān̲miyūr upon the wave-tossed
and beautiful main! I seek no refuge other than You. 1

596. இடி ஆர் ஏறு உடையாய்! இமையோர்தம் மணி முடியாய்!
கொடி ஆர் மா மதியோடு, அரவம், மலர்க்கொன்றையினாய்!
செடி ஆர் மாதவி சூழ் திரு வான்மியூர் உறையும்
அடிகேள்!-- உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

Your mount is the thundering Bull; You are seated on the crowned
heads of Devas, You display Your flag, the great moon,
the adder and the garland of kon̲rai blossoms. You abide at

Tiruvāṉmiyūr rich in the plants of Mātavi and the like.
O Noble One, I seek as refuge none save You. 2

597. கை ஆர் வெண்மழுவா! கனல் போல்-திருமேனியனே!
மை ஆர் ஒண்கண் நல்லாள் உமையாள் வளர் மார்பினனே!
செய் ஆர் செங்கயல் பாய் திரு வான்மியூர் உறையும்
ஐயா!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

Your hand wields the white *mazhu*. Your divine body blazes like
flame; Uma, the goodly Woman whose bright eyes are touched
with khol, is embosomed by You. O Great One enshrined
in Tiruvāṉmiyūr girt with fields where ruddy *kayals*
leap and romp! I seek no refuge other than You. 3

598. பொன் போலும் சடைமேல் புனல் தாங்கிய புண்ணியனே!
மின் போலும் புரிநூல், விடை ஏறிய வேதியனே!
தென்பால் வையம்எலாம் திகழும் திரு வான்மிதன்னில்
அன்பா!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

O Holy One! You bear on Your ruddy, auric and matted crest
the Ganga! O Vedic God, You are adorned with the fulgurant
sacred threads; Your mount is the Bull; Your delubrum
is the southern Tiruvāṉmiyūr whose splendour pervades
the entire world. O loving One, I seek no refuge save You. 4

599. கண் ஆரும் நுதலாய்! கதிர் சூழ் ஒளி மேனியின்மேல்
எண் ஆர் வெண்பொடி-நீறு அணிவாய்! எழில் ஆர் பொழில் சூழ்
திண் ஆர் வண் புரிசைத் திரு வான்மியூர் உறையும்
அண்ணா!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

O Siva! Your forehead sports an eye; on Your radiant body
You wear the white powder of ash inviting meditation.
You are enshrined in Tiruvāṉmiyūr girt with eesome
gardens and strong protective walls.
O One inaccessible! I seek refuge none, save You. 5

600. நீதீ! நின்னை அல்லால், நெறியாதும் நினைந்து அறியேன்;
ஓதீ, நால்மறைகள்! மறையோன் தலை ஒன்றினையும்
சேதீ! சேதம் இல்லாத் திரு வான்மியூர் உறையும்
ஆதீ!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

O *Niti!* I think not any way other than Yours.
O Singer of the four Vedas! You clipped a head of Brahma's,
the fosterer of the Vedas. You abide at the flawless
Tiruvānmiyūr. You are, indeed, the Primal God.
I seek not any refuge save You. 6

601. வான் ஆர் மா மதி சேர் சடையாய்! வரை போல வரும்
கான் ஆர் ஆனையின் தோல் உரித்தாய்! கறை மா மிடற்றாய்!
தேன் ஆர் சோலைகள் சூழ் திரு வான்மியூர் உறையும்
ஆனாய்!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

O Siva, You wear on Your matted hair, the great skyey moon.
You peeled off the skin of the jungle Tusker.
Great is Your throat that holds the oceanic venom.
You are enshrined in Tiruvāṉmiyūr girt with
melliferous gardens. You are the Rider of the Bull.
I seek You solely as my Palladium. 7

602. The original Tamil verse is not traceable. 8

603. பொறி வாய் நாக(அ)ணையானொடு, பூமிசை மேயவனும்,
நெறி ஆர் நீள் கழல், மேல்முடி, காண்பு அரிதுஆயவனே!
செறிவு ஆர் மா மதில் சூழ் திரு வான்மியூர் உறையும்
அறிவே!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.

Vishnu whose bed is the fire-spitting adder and Brahma
whose seat is the Lotus, went in quest of Your feet
and crown, in vain. You are unbeholdable by them.
You are enshrined in Tiruvāṉmiyūr protected by
great and strong walls. You are Gnosis.
I seek You solely as my Palladium. 9

604. குண்டாடும் சமணர், கொடுஞ் சாக்கியர், என்று இவர்கள்--
கண்டார் காரணங்கள் கருதாதவர்--பேச நின்றாய்!
திண் தேர் வீதிஅது ஆர் திரு வான்மியூர் உறையும்
அண்டா!--உன்னை அல்லால் அடையாது, எனது ஆதரவே.
The disputatious Samaṇas and the cruel Buddhists
do not consider the right reasons. They speak ill of You.
You are entempled in Tiruvāṉmiyūr dight with
streets where ply well-built chariots. 10
O Cosmic God! I seek You solely as my Palladium.

605. கன்று ஆரும் கமுகின் வயல் சூழ்தரு காழிதனில்
நன்று ஆன புகழான் மிகு ஞானசம்பந்தன் உரை,
சென்றார்தம் இடர் தீர் திரு வான்மியூர் அதன்மேல்,
குன்றாது ஏத்த வல்லார் கொடுவல்வினை போய் அறுமே.

Gnānasambandhan of accrescent glory goodly
of Kāzhi girt with fields and plants of areca-nut,
has sung these hymns on the God of Tiruvāṉmiyūr
that annuls the troubles of those that arrive here
and adore Him. The cruel karma of those that
hail these psalms flawlessly, will snap. 11

56. திருப் பிரமபுரம் : பஞ்சமம்

606. இறைவன், ஈசன், எந்தை, இமையோர் தொழுது ஏத்த நின்ற
கறை அணி கண்டன், வெண்தோடு அணி காதினன், காலத்து அன்று
மறைமொழி வாய்மையினான், மலையாளொடு மன்னு சென்னிப்
பிறை அணி செஞ்சடையான், பிரமாபுரம் பேணுமினே!

56. TIRUPPIRAMAPURAM : Panjamam

Siva is adored by the Devas as their God, Sire and *Eesan*;
His throat wears a patch of stain; He wears a white *todu;*
Of yore, He explicated the import of the Vedas. He is
concorporate with Himavant's Daughter; on His ruddy
matted crest He wears the crescent. He is entempled in
Piramāpuram. Do adore Him. 1

607. சடையினன், சாமவேதன், சரி கோவணவன், மழுவாள்-
படையினன், பாய் புலித்தோல் உடையான், மறை பல்கலைநூல்
உடையவன், ஊனம்இ(ல்)லி, உடன்ஆய் உமைநங்கை என்னும்
பெடையொடும் பேணும் இடம்--பிரமாபுரம்; பேணுமினே!

Siva's hair is matted; He chants the Sama Veda; He wears
a sliding loin-cloth. He wields the weapon of *mazhu*.
He is clad in the skin of a leaping tiger. He is hailed by
scriptures galore. He is flawless. Concorporate with His
Consort Uma, He abides in Piramāpuram. Do adore Him. 2

608. மாணியை நாடு காலன் உயிர் மாய்தரச் செற்று, காளி
காணிய ஆடல் கொண்டான், கலந்து ஊர்வழிச் சென்று, பிச்சை
ஊண் இயல்புஆகக் கொண்டு, அங்கு உடனே உமைநங்கையொடும்
பேணிய கோயில்--மன்னும் பிரமாபுரம்; பேணுமினே!

Siva protected the Bachelor by kicking Yama to death
who came to snatch his life. His dance is witnessed by
Kāḷi; He roams in polises, begs alms and eats it.
Concorporate with Uma, His Consort, He is entempled in
the well-protected Piramāpuram. Do adore Him. 3

609. பார்இடம் விண்ணும் எங்கும் பயில் நஞ்சு பரந்து மிண்ட,
பேர்இடர்த் தேலர்கணம், "பெருமான், இது கா!" எனலும்,
ஓர் இடத்தே கரந்து, அங்கு உமைநங்கையொடும்(ம்) உடனே
பேர்இடம் ஆகக் கொண்ட பிரமாபுரம் பேணுமினே!

The oceanic venom pervaded all the earth and the ethereal realms;
the much-distressed throng of Devas sought refuge in Siva.
Siva quaffed it and concealed it in a part of His throat.
Concorporate with Uma, His Consort, He is
entempled in the grace-abounding Primāpuram. Do adore it. 4

610. நச்சுஅரவச் சடைமேல் நளிர்திங்களும் ஒன்ற வைத்து, அங்கு
அச்சம் எழ விடைமேல் அழகு ஆர் மழு ஏந்தி, நல்ல
இச்சை பகர்ந்து, "மிக இடுமின், பலி!" என்று, நாளும்
பிச்சை கொள் அண்ணல் நண்ணும் பிரமாபுரம் பேணுமினே!

On His matted crest He keeps juxtaposed the cool crescent
and the venomous snake. The Handsome One rides the Bull.
He wields the dreadful *mazhu*. Speaking sweet words
He seeks large measures of alms. He is the Noble One
who is willingly abiding in Piramāpuram. Do adore Him. 5

611. பெற்றவன்; முப்புரங்கள் பிழையா வண்ணம் வாளியினால்
செற்றவன்; செஞ்சடையில்-திகழ் கங்கைதனைத் தரித்திட்டு,
ஒற்றை விடையினன்ஆய், உமைநங்கையொடும் உடனே
பெற்றிமையால் இருந்தான்; பிரமாபுரம் பேணுமினே!

Siva's mount is the Bull; with a dart He smote ineluctably
the three walled-citadels. He sports on His ruddy matted
crest the splendorous Ganga. Concorporate with Uma, His Consort.
He is becomingly entempled in Piramāpuram. Do adore Him. 6

612. வேதம் மலிந்த ஒலி, விழவின்(ன்) ஒலி, வீணை ஒலி,
கீதம் மலிந்து உடனே கிளர, திகழ் பௌவம் அறை
ஓதம் மலிந்து உயர் வான் முகடு ஏற, ஒண் மால்வரையான்
பேதையொடும் இருந்தான் பிரமாபுரம் பேணுமினே!
In Piramāpuram, the sound of the Vedic chanting, the din
of fetes and festivals, the sound of the strumming of *Vinas*
and the sound of music overwhelm the roar of the sea

and soar up and up to the peak—Kailās—, whose God,
concorporate with the bashful Uma, is entempled
in Piramāpuram. Do adore Him.
7

613. இமையவர் அஞ்சி ஓட, எதிர்வார் அவர்தம்மை இன்றி
அமைதரு வல்அரக்கன் அடர்த்து(ம்), மலை அன்று எடுப்ப,
குமைஅதுசெய்து, பாட, கொற்றவாளொடு நாள் கொடுத்திட்டு,
உமையொடு இருந்த பிரான் பிரமாபுரம் உன்னுமினே!

In dread did the Devas flee from the cruel Asura. He ever
remained unopposed; when he durst uproot His Mount Kailās,
Siva crushed him by pressing His toe; then when he rued
and hymned Him meltingly, He gifted to him a triumphant
sword and longevity of life. He is entempled in Piramāpuram.
Him should You contemplate and adore.
8

614. ஞாலம் அளித்தவனும்(ம்) அரியும்(ம்), அடியோடு முடி,
காலம்பல செலவும், கண்டிலாமையினால் கதறி
ஓலம் இட, அருளி, உமைநங்கையொடும்(ம்) உடன்ஆய்
ஏல இருந்த பிரான் பிரமாபுரம் ஏத்துமினே!

When Brahma, the creator of the world and Hari went in
quest of His head and feet over a long time, they began
to wail aloud in agony and prayed to Him. At this,
Siva conferred grace on them. It is He who concorporate
with His Consort Uma, is duly entempled in Piramāpuram.
Do hail and adore Him.
9

615. துவர் உறும் ஆடையினார், தொக்க பீலியர் நக்க(அ)ரையர்,
அவர் அவர் தன்மைகள் கண்டு அணுகேன்மி(ன்), அருள் பெறுவீர்!
கவர்உறு சிந்தை ஒன்றி, கழிகாலம்எல்லாம் படைத்த
இவர் அவர் என்று இறைஞ்சி, பிரமாபுரம் ஏத்துமினே!

The Buddhists are shrouded in ochre-robes and the unclad
Samaṇas tote bunches of peacock-feathers; knowing of their
nature, stand distanced from them.
You who seek Siva's grace with single-pointed concentration,
hail Him who evolves the past; the present and the to-come.
Lo, He is entempled in Piramāpuram. Do adore Him. 10

616. உரை தரு நால்மறையோர் புகழ்ந்து ஏத்த, ஒண் மாதினொடும்
வரை என வீற்றிருந்தான், மலிகின்ற பிரமபுரத்து
அரசினை ஏத்த வல்ல அணி சம்பந்தன் பத்தும் வல்லார்,
விரை தரு விண்ணுலகம் எதிர் கொள்ள விரும்புவரே.

Siva is hailed by the pundits well-versed in the four Vedas.
He, the Sovereign, concorporate with His comely Consort,
is majestically entempled in the hill-like Piramāpuram.
On Him Gnānasambandhan sang these ten ornate
hymns. They that are valiant in these psalms will
gain ascension to the ethereal world welcomed by Devas. 11

57. திரு ஒற்றியூர்

: பஞ்சமம்

617. விடையவன், விண்ணும் மண்ணும் தொழ நின்றவன், வெண்மழுவாள்-
படையவன், பாய் புலித்தோல் உடை, கோவணம், பல்கரந்தைச்
சடையவன், சாமவேதன், சசி தங்கிய சங்கவெண்தோடு
உடையவ(ன்), ஊனம்இ(ல்)லி, உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

57. TIRUOR̲R̲IYŪR

: Panjamam

He rides the Bull; He is adored by the terrestrials
and the celestials. He wields the weapon of *mazhu*.
His clothing is the skin of the leaping tiger.
He wears the garland woven of many *karantai* flowers.
He wears the crescent on His matted crest; He is the Reciter
of the Sāma Veda. He wears a white *todu* in His ear.
He is flawless; He is entempled in Or̲r̲iyūr. 1

618. பாரிடம் பாணிசெய்ய, பறைக்கண் செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடல்ஆடல் இலயம் சிதையாத கொள்கைத்
தார் இடும் போர் விடையவன்; தலைவன்; தலையே கலனா,
ஊர் இடும் பிச்சை கொள்வான்; உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

His Bhūta-Hosts sing; drums are resounded and the drum-
eyed and martial ghouls make unflawed and melodious
music to the beat of time. It is thus Siva dances.
He is the Rider of the garlanded and martial Bull.
He is the Head of gods. Holding a skull of Brahma's as His
begging-bowl, He receives alms from the folks of urbs. 2
He is entempled in Or̲r̲iyūr.

619. விளிதரு நீரும், மண்ணும், விசும்போடு, அனல், காலும், ஆகி;
அளி தரு பேர் அருளான்; அரன் ஆகிய ஆதிமூர்த்தி;
களி தரு வண்டு பண்செய் கமழ்கொன்றையினோடு அணிந்த
ஒளி தரு வெண்பிறையான்;-உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

He is Hara, the Primal Murti, who is the gurgling water, earth, ether, fire
and wind. He is the merciful and great One abounding in grace.
He wears on His matted crest konrai blossoms buzzed
in delight by bees that hum in *paṇ*.
He wears a *todu*; eke is He adorned with the white
and radiant moon. He is entempled in Orriyūr. 3

620. அரவமே கச்சு அதுஆக அசைத்தான்; அலர்கொன்றைஅம்தார்
விரவி, வெண்நூல் கிடந்து விரை ஆர் வரைமார்பன்; எந்தை;
பரவுவார் பாவம்எல்லாம் பறைத்து, படர்புன்சடைமேல்
உரவுநீர் ஏற்ற பெம்மான்; உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.
It is the serpent which is His cingulum with which He is
cinctured. He is adorned with the garland of konrais.
On His hill-like and fragrant chest, He wears the white
strands of sacred thread.
Our Sire, the Prayee, annuls the sins of His prayers.
He, our God, received on His crown the Ganga that descended amain.
Lo, He is entempled in Orriyūr. 4

621. விலகினார் வெய்ய பாவம் விதியால் அருள்செய்து, நல்ல
பலகின் ஆர் மொந்தை தாளம் தகுணிச்சமும் பாணியாலே,
அலகினால் வீசி--நீர் கொண்டு, அடிமேல் அலர் இட்டு, முட்டாது
உலகினார் ஏத்த--நின்றான் உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

Siva duly bestows grace on them who committed cruel sinning.
He is hailed in music maintained with time and orchestrated
by many instruments like *montai*, cymbals,
takuniccham as well as by clap of hands.
He is adored by the people on earth who hail Him with
holy water and flowers, unfailingly.
He is Siva who is entempled in Orriyūr. 5

622. கமையொடு நின்ற சீரான்; கழலும் சிலம்பும் ஒலிப்ப,
சுமையொடு மேலும் வைத்தான், விரிகொன்றையும் சோமனையும்;
அமையொடு நீண்ட திண்தோள் அழகுஆய பொன்-தோடு இலங்க,
உமையொடும் கூடி நின்றான்; உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

Siva, the glorious, abounding in patience, is adorned with
an anklet and a *cilampu;* eke does He bear on His
matted hair the blowing *konrais* and the moon.
His are the well-formed, long and strong arms. He shares His
body with the beautiful Uma who wears the *todu*
that is comely. Lo, He is entempled in Orriyūr. 6

623. நன்றியால் வாழ்வது உள்ளம், உலகுக்கு ஒரு நன்மையாலே,
கன்றினார் மும்மதிலும் கருமால்வரையே சிலையா,--
பொன்றினார் வார் சுடலைப் பொடி-நீறு அணிந்தார்--அழல்அம்பு
ஒன்றினால் எய்த பெம்மான் உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.
To proclaim that the world thrives thanks to gratitude,
Siva with the great Mount Meru as His bow, in wrath,
sped a fire-tipt dart and burnt the three, hostile
and walled-citadels of the Asuras.

Siva who wears the powdered ash of the extensive
crematorium, is entempled in Orriyūr. 7

624. பெற்றியால் பித்தன் ஒப்பான்; பெருமான்; கருமான்உரி-தோல்
சுற்றியான்; சுத்தி, சூலம், சுடர்க்கண் நுதல்மேல் விளங்க,
தெற்றியான் செற்று, அரக்கன்(ன்) உடலைச் செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான்; முற்றும் ஆள்வான்; உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

Siva is inscrutably mad; He mantled Himself in
the skin of the Tusker. He keeps a *sutthi;* He wields
the spear. Bright is the eye in His forehead.
He pressed gently His toe on His splendorous Mount
and crushed the Asura who durst uproot it. He is the sole
Ruler of the cosmos. He is entempled in Orriyūr. 8

625. திருவின் ஆர் போதினாலும் திருமாலும், ஓர் தெய்வம் முன்னி,
தெரிவினால் காணமாட்டார்; திகழ் சேவடி சிந்தைசெய்து,
பரவினார் பாவம்எல்லாம் பறைய, படர் பேர்ஒளியோடு
ஒருவனாய் நின்ற பெம்மான் உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

Brahma seated on the Lotus divine and Vishnu,
contended, in vain, with each other, claiming Godhead.
It is Siva who is the peerless God of humongous flame.
He annuls the sins of those who embosom His sacred
and salvific feet. He is entempled in Orriyūr. 9

626. தோகைஅம்பீலி கொள்வார், துவர்க்கூறைகள் போர்த்து உழல்வார்,
ஆகமசெல்வனாரை அலர் தூற்றுதல் காரணமாக்
கூகை அம் மாக்கள் சொல்லைக் குறிக்கொள்ளன்மின்! ஏழ்உலகும்
ஓகை தந்து ஆள வல்லான் உறையும்(ம்) இடம்--ஒற்றியூரே.

The Samaṇas who tote the bunches of peacock-feathers
and the Buddhists shrouded in ochre-robes, are
the light-shunning owls. They scandalize the God
of the Saivāgamas. Take not into account their utterances.
Siva so rules the seven worlds that they are enabled
to thrive in joy. He is entempled in Orriyūr. 10

627. ஒண்பிறை மல்கு சென்னி இறைவன்(ன்) உறை ஒற்றியூரை,
சண்பையர்தம் தலைவன்--தமிழ் ஞானசம்பந்தன்--சொன்ன
பண் புனை பாடல்பத்தும் பரவிப் பணிந்து ஏத்த வல்லார்,
விண் புனை மேல்உலகம் விருப்பு எய்துவர்; வீடு எளிதே.

Tamil Gnānasambandhan has sung these ten hymns
cast in *paṇ,* on the God of Orriyūr who wears on
His matted crest the bright crescent.
They that, in adoring devotion, hail these psalms, will gain
the ethereal world. For them *moksha* is easy of access. 11

58. திருச் சாத்தமங்கை : பஞ்சமம்

628. திரு மலர்க்கொன்றைமாலை திளைக்கும் மதி சென்னி வைத்தீர்!
இரு மலர்க்கண்ணி தன்னோடு உடன்ஆவதும் ஏற்பது ஒன்றே?--
பெரு மலர்ச்சோலை மேகம் உரிஞ்சும் பெருஞ் சாத்தமங்கை
அரு மலர் ஆதிமூர்த்தி! அயவந்தி அமர்ந்தவனே!

58. TIRUCCHĀTHAMAṄKAI : Panjamam

Siva wears the garland woven of divine konr̲ais; He sports
the moon on His crown; He is concorporate with Uma
whose eyes twain are lily-like. He is the formless and Primal God.
He is entempled in Ayavanti at the great Cātthamaṅkai,
girt with great and flowery gardens the trees
of which brush the clouds. 1

[Note: The Goddess of this shrine is Irumalarkkaṇ Ammai which means the One with two eyes that are flowers.]

629. பொடிதனைப் பூசு மார்பில் புரிநூல் ஒரு பால் பொருந்த,
கொடி அன சாயலாளோடு உடன்ஆவதும் கூடுவதே?--
கடி-மணம் மல்கி, நாளும் கமழும் பொழில் சாத்தமங்கை,
அடிகள் நக்கன் பரவ, அயவந்தி அமர்ந்தவனே!
Siva is bedaubed with the holy ash; on a side of His
chest, He wears the strands of the sacred thread.
He is concorporate with His Consort of lovely mien.
He is entempled in Cātthamaṅkai girt with gardens
where blow daily suaveolent flowers at Ayavanti
adored by Neela Nakka Nāyānār. 2

630. நூல் நலம் தங்கு மார்பில் நுகர் நீறு அணிந்து, ஏறுஅது ஏறி,
மான் அன நோக்கிதன்னோடு உடன்ஆவதும் மாண்பதுவே?-
தான் நலம் கொண்டு மேகம் தவழும் பொழில் சாத்தமங்கை
ஆன் நலம் தோய்ந்த எம்மான்! அயவந்தி அமர்ந்தவனே!

Siva wears on His chest the strands of the sacred thread;
He is the wearer of the holy ash; He is the Rider of His Bull.
He is concorporate with His antelope-eyed Consort.
He is majestically entempled in Cātthamaṅkai
thick with gardens over which the moon sails,
at Ayavanti where His ablutions are made
with the five products of kine. 3

631. மற்ற வில் மால்வரையா மதில் எய்து, வெண்நீறு பூசி,
புற்று அரவு அல்குலாளோடு உடன்ஆவதும் பொற்பதுவே?-
கற்றவர் சாத்தமங்கை நகர் கைதொழ, செய்த பாவம்
அற்றவர் நாளும் ஏத்த, அயவந்தி அமர்ந்தவனே!

Of yore, Siva with the Mount Mēru as His bow, smote
the three walled-citadels; He wears the holy ash.
He is concorporate with His Consort whose *alkuḷ* is
like unto a cobric hood. He majestically abides
in Cātthamaṅkai where dwell the learned who
adore Him with their hands, at Ayavanti. 4
The sins of those that daily hail Him, will perish.

632. வெந்தவெண்நீறு பூசி, விடை ஏறிய வேதகீதன்,
பந்து அணவும் விரலாள் உடன்ஆவதும் பாங்கதுவே?--
சந்தம் ஆறுஅங்கம், வேதம், தரித்தார் தொழும் சாத்தமங்கை,
அந்தம்ஆம் ஆதிஆகி, அயவந்தி அமர்ந்தவனே!

Siva wears the baked ash; He is the Rider of His Bull.
He is the Singer of the Vedas; He is becomingly concorporate
with His Consort whose fingers sport a ball.
He abides in Cātthamaṅkai adored by the reciters of
the Vedas and their Angas including the *Chhandas*,
at Ayavanti. He is the End as well as the Beginning. 5

633. வேதம்ஆய், வேள்விஆகி, விளங்கும் பொருள் வீடுஅதுஆகி,
சோதிஆய், மங்கை பாகம் நிலைதான் சொல்லல்ஆவது ஒன்றே?--
சாதியால் மிக்க சீரால்-தகுவார் தொழும் சாத்தமங்கை
ஆதிஆய் நின்ற பெம்மான்! அயவந்தி அமர்ந்தவனே!

Siva is the Veda and its sacrifice. He is the splendorous
Ens who confers *moksha;* He is the divine Flame.
He is concorporate with His Woman. Is His beatitude
effable at all? He is entempled in Cātthamaṅkai
adored by the glorious ones of great lineage.
He is the Primal God. He is enthroned in Ayavanti. 6

634. இமயம்எல்லாம் இரிய மதில் எய்து, வெண்நீறு பூசி,
உமையை ஓர்பாகம் வைத்த நிலைதான் உன்னல்ஆவது ஒன்றே?--
சமயம், ஆறுஅங்கம், வேதம், தரித்தார் தொழும் சாத்தமங்கை,
அமைய வேறு ஓங்கு சீரான், அயவந்தி அமர்ந்தவனே!

Siva, of yore, so smote the three walled-citadels
that mountains like the Himālayas, quaked.
He wears the holy ash. Is the majesty of His concorporation
with Uma eulogizable and effable at all?
He abides in Cātthamaṅkai adored by the cultivators
of religious opuses, Vedas and their Angas.
He is the lofty and glorious God duly entempled in Ayavanti. 7

635. பண் உலாம் பாடல் வீணை பயில்வான், ஓர் பரமயோகி,
விண் உலாம் மால்வரையான்மகள் பாகமும் வேண்டினையே?--
தண் நிலாவெண்மதியம் தவழும் பொழில் சாத்தமங்கை
அண்ணலாய் நின்ற எம்மான்! அயவந்தி அமர்ந்தவனே!

Siva sings songs cast in *paṇ,* accompanying them
on *Vina*. He loves His concorporation with the Daughter
of the sky-vaulting Himavant. He is of Cātthamaṅkai
rich in gardens over which the cool moon sails.
He, the Great and Noble God, is entempled in Ayavanti. 8

636. பேர் எழில்-தோள் அரக்கன் வலி செற்றதும், பெண் ஓர்பாகம்
ஈர் எழில் கோலம்ஆகி உடன்ஆவதும், ஏற்பது ஒன்றே?--
கார்எழில்வண்ணனோடு, கனகம்(ம்) அனையானும், காணா
ஆர் அழல்வண்ண! மங்கை அயவந்தி அமர்ந்தவனே!

Siva quelled the puissance of the Asura whose arms were
exceedingly shapely. In His twyfold androgynic
form, He is concorporate with His Woman.

He stood as the upsoaring Flame unbeholdable by
the comely and nimbus-hued Vishnu as well as
the golden complexioned Brahma.
He is entempled in Ayavanti at Cātthamaṅkai. 9

637. கங்கை ஓர் வார்சடைமேல் அடைய, புடையே கமழும்
மங்கையோடு ஒன்றி நின்ற(ம்) மதிதான் சொல்லல் ஆவது ஒன்றே?--
சங்கை இல்லா மறையோர் அவர்தாம் தொழு சாத்தமங்கை,
அங்கையில் சென்னி வைத்தாய்! அயவந்தி அமர்ந்தவனே!

Siva holds in His long matted hair the Ganga; He shares
His body with His incense-breathing Consort.
Is His supremely intelligent stature effable at all?
Adored by the Brahmins free from every doubt, He,
the holder of a skull in His lovely hand, is
entempled at Ayavanti in Cātthamaṅkai. 10

638. மறையினார் மல்க காழித் தமிழ் ஞானசம்பந்தன், "மன்னும்
நிறையின் ஆர் நீல நக்கன் நெடு மா நகர்" என்று தொண்டர்
அறையும் ஊர் சாத்தமங்கை அயவந்திமேல் ஆய்ந்த பத்தும்,
முறைமையால் ஏத்த வல்லார், இமையோரிலும் முந்துவரே.

Tamil Gnānasambandhan of Kāzhi where dwell
those that are well versed in the Vedas, has sung
on the God of Ayavanti at Cātthamaṅkai, hailed
as the great city of the steadfast Neela Nakkan,
these ten well thought out hymns.
They that are valiant to duly hail these psalms
are indeed superior to all the Devas. 11

59. திருக் குடமூக்கு

: பஞ்சமம்

639. அர விரி கோடல் நீடல் அணி காவிரியாற்று அயலே,
மர விரி போது, மௌவல், மணமல்லிகை, கள் அவிழும்
குர, விரி சோலை சூழ்ந்த, குழகன், குடமூக்கு இடமா,
இர விரி திங்கள் சூடி இருந்தான்;--அவன் எம் இறையே.

59. TIRUKKUṬAMŪKKU

: Panjamam

In Kuṭamūkku burgeon the flowers of *kāntal* plants
whose stems are snake-like; here are gardens made
fecund by the Kāviri; in these, flourish trees full of
the flowers of *mauvel*, and *mullai* of the liana of fragrant
jasmine and the melliferous *kura* trees.
Our God is Siva, the handsome One who sports on His crest
the moon that is bright during night. He is enshrined
in Kuṭamūkku. Let us adore Him. 1

640. ஓத்து அரவங்களோடும் ஒலி காவிரி ஆர்த்து, அயலே
பூத்து, அரவங்களோடும், புகை கொண்டு அடி போற்றி, நல்ல
கூத்து அரவங்கள் ஓவா, குழகன், குடமூக்கு இடமா,
ஏத்து அரவங்கள் செய்ய, இருந்தான்;-அவன் எம் இறையே.

With the sound of chanted Vedas, joins the sound
of the gushing Kāviri; the flowers in the adjacent gardens
get plucked and strewn on the deity to whom fragrant
smoke and the waving of light are offered; here arises
the sound of mantras during pūja.

In this back drop, the handsome One doth dance divinely.
He is entempled in Kuṭamūkku where the above-referred to
sounds are orchestrated. He, indeed, is our God. 2

641. மயில் பெடை புல்கி ஆல, மணல்மேல் மடஅன்னம் மல்கும்,
பயில் பெடைவண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்பொழில்வாய்,
குயில் பெடையோடு பாடல் உடையான்; குடமூக்கு இடமா,
இயலொடு வானம் ஏத்த, இருந்தான்;-அவன் எம் இறையே.

Peacocks hug their mates and dance; on the sand-dunes
of the Kāviri, cobs emulate the gait of their pens.
Bees bombinate in *pann;* in the adjacent gardens
of the old Kāviri, koels— male and female—,
bill and coo. Such is Kuṭamūkku where Siva
is entempled duly adored by Devas. He is our God. 3

642. மிக்கு அரை தாழ வேங்கைஉரி ஆர்த்து, உமையாள் வெருவ,
அக்கு, அரவு, ஆமை, ஏனமருப்போடு, அவை பூண்டு, அழகு ஆர்
கொக்கரையோடு பாடல் உடையான்; குடமூக்கு இடமா,
எக்கரையாரும் ஏத்த, இருந்தான்;-அவன் எம் இறையே.
Siva wears the dangling tiger-skin in His waist;
He wears bones, a carapace and the tusks of a hog
witnessing which Uma stands scared.
He is the handsome One that dances to the singing
accompanied by the beat of *kokkarai*. He is entempled
in Kuṭamūkku adored by all who gather thither
from all places. He is, indeed, our God. 4

643. வடிவு உடை வாள்-தடங்கண் உமை அஞ்ச, ஓர் வாரணத்தைப்
பொடி அணி மேனிமூட உரிகொண்டவன்; புன்சடையான்;
கொடி நெடுமாடம் ஓங்கும், குழகன், குடமூக்கு இடமா,
இடி படு வானம் ஏத்த இருந்தான்;-அவன் எம் இறையே.

Siva peeled off the skin of the Tusker and His ash-covered
body was mantled therewith at which Uma whose
eyes are large and beautiful, stood scared.
Ruddy is His matted hair. Hailed by the Devas of
the thunder-rumbling upper world He is entempled in
Kuṭamūkku dight great mansions to which poles
are attached whence flags waft. He is, indeed, our God. 5

644. கழை வளர் கவ்வை முத்தம் கமழ் காவிரியாற்று அயலே,
தழை வளர் மாவின், நல்ல பலவின், கனிகள் தயங்கும்
குழை வளர் சோலை சூழ்ந்த, குழகன், குடமூக்கு இடமா,
இழை வளர் மங்கையோடும் இருந்தான்;-அவன் எம்இறையே.

On the banks of the Kāviri fall pearls from bamboos;
close by flourish leafy mango trees and trees of banyan
laden with fruitage.
It is in Kuṭamūkku girt with gardens full of sprays, Siva,
the ever-young, is entempled with His 6
bejewelled Consort. He, indeed, is our God.

645. மலை மலி மங்கை பாகம் மகிழ்ந்தான்; எழில் வையம் உய்யச்
சிலை மலி வெங்கணையால் சிதைத்தான், புரம்மூன்றினையும்;
குலை மலி தண்பலவின் பழம் வீழ் குடமூக்கு இடமா,
இலை மலி சூலம் ஏந்தி இருந்தான்;-அவன் எம் இறையே.

Siva is happily concorporate with the Daughter of Himavant.
With a destructive dart fixed to His bow, He devastated
the triad of walled-citadels.
He is entempled in Kuṭamūkku where the ripe fruits aplenty
of the cool jack trees drop down.
Siva wields a leafy spear. He, indeed, is our God. 7

646. நெடு முடிபத்து உடைய நிகழ் வாள் அரக்கன்(ன்) உடலைப்
படும் இடர் கண்டு அயர, பருமால்வரைக்கீழ் அடர்த்தான்;
கொடு மடல் தங்கு தெங்கு பழம் வீழ் குடமுக்கு இடமா,
இடு மணல்எக்கர் சூழ இருந்தான்;-அவன் எம் இறையே.

Of yore, Siva pressed His toe and crushed the body of the ten,
long, crowned heads of Ravana, under His great Mount,
causing him intense pain and vertigo.
He is entempled in Kuṭamūkku dight with sand-dunes
and is thick with coconut trees of curved spathes
whence fall their ripe nuts aplenty. Siva is, indeed, our God. 8

647. ஆர் எரி ஆழியானும் அலரானும் அளப்பு அரிய
நீர் இரி புன்சடைமேல் நிரம்பா மதி சூடி, நல்ல
கூர் எரி ஆகி நீண்ட குழகன்; குடமுக்கு இடமா,
ஈர்உரி கோவணத்தோடு இருந்தான்;-அவன் எம் இறையே.

The fiercely discigerous Vishnu and Brahma could not
scale Siva's form of flame. He bears on His ruddy
matted crest the uncontrollable Ganga and the young crescent.

Siva, the handsome One, of yore, soared up as the dazzling
flame. He wears a loin-cloth and is clad in skin.
He abides at Kuṭamūkku. He, indeed, is our God. 9

648. மூடிய சீவரத்தார்,--முது மடையர்,--மோட்டு அமணர்;
நாடிய தேவர்எல்லாம் நயந்து ஏத்திய நன்நலத்தான்,
கூடிய குன்றம்எல்லாம் உடையான், குடமூக்கு இடமா,
ஏடு அலர்கொன்றை சூடி இருந்தான்--அவன் எம் இறையே.

The orhre-robed and addle-brained Buddhists
and the haughty Samaṇas cannot comprehend Siva.
He confers boons on the Devas who seek Him for their weal.
He annuls hill-like sins. He wears the petalled konr̲ais.
He abides at Kuṭamūkku. He, indeed, is our God. 10

649. வெண்கொடி மாடம் ஓங்கு விறல் வெங்குரு நன்நகரான்--
நண்பொடு நின்ற சீரான், தமிழ் ஞானசம்பந்தன்--நல்ல
தண் குடமூக்கு அமர்ந்தான் அடி சேர் தமிழ்பத்தும் வல்லார்,
விண் புடை மேல்உலகம் வியப்பு எய்துவர்; வீடு எளிதே.

Tamil̲ Gnānasambandhan, the glorious one of
camaraderie, is the resident of the excellent city
hight Veṅkuru dight with mansions whence white
flags waft. He has sung on the God of Kuṭamūkku
which is cool and serene, these ten hymns
that course their way to the feet of Siva.
They that are valiant in these psalms, will gain the world 11
ethereal. For them *moksha* is easy of access.

60. திரு வக்கரை : பஞ்சமம்

650. கறை அணி மா மிடற்றான், கரிகாடு அரங்கா உடையான்,
பிறை அணி கொன்றையினான், ஒருபாகமும் பெண் அமர்ந்தான்,
மறையவன் தன் தலையில் பலி கொள்பவன்--வக்கரையில்
உறைபவன், எங்கள் பிரான்; ஒலி ஆர் கழல் உள்குதுமே.

60. TIRUVAKKARAI :Panjamam

The great Siva's throat bears a stain. His forum is
the burning crematory.; He is adorned with the crescent
and the *konr̲ai* flowers; He shares His body with His
Consort. He begs alms in the skull of Brahma's.
He is entempled in Vakkarai. Let us meditate on
His feet fastened with resounding anklets. 1

651. பாய்ந்தவன் காலனை முன், பணைத்தோளி ஓர்பாகம் அதா
ஏய்ந்தவன், எண் இறந்த(வ்) இமையோர்கள் தொழுது இறைஞ்ச
வாய்ந்தவன், முப்புரங்கள் எரிசெய்தவன்--வக்கரையில்
தேய்ந்த இளவெண்பிறை சேர் சடையான்; அடி செப்புதுமே.

Siva smote Yama that leaped forth to snatch
the life of Mārkandēya. He is concorporate with
His Consort whose arms are shapely; He stands
adored by Devas without number.
He burnt the three walled-citadels. He who wears
the white waning crescent on His matted crest,
is entempled in Vakkarai. Lo, let us hail His feet. 2

652. "சந்திரசேகரனே, அருளாய்!" என்று, தண் விசும்பில்
இந்திரனும் முதலா இமையோர்கள் தொழுது இறைஞ்ச,
அந்தரமூஎயிலும்(ம்) அனல்ஆய் விழ, ஓர் அம்பினால்,
மந்தரமேரு வில்லா வளைத்தான் இடம்--வக்கரையே.

When the Devas inclusive of Indira who dwell in
the cool heavens, prayed to Him— the wearer
of the moon in His crest—, and adored Him to save
them from the Asuras of the three walled-citadels,
He gutted them with fire by a single dart
fixed to His bow—the Mount Mēru.
Behold Him who is entempled in Vakkarai. 3

653. நெய் அணி சூலமோடு நீறை வெண்மழுவும்(ம்) அரவும்
கை அணி கொள்கையினான்; கனல் மேவிய ஆடலினான்;
மெய் அணி வெண்பொடியான், விரி கோவண ஆடையின், மேல்;
மை அணி மா மிடற்றான்; உறையும்(ம்) இடம்--வக்கரையே.

He wields the well-oiled spear and the white *ma_lu*
as His weapons. His hand is adorned with a snkae—His jewel.
He dances in the fire; He is coated with the white
powder of ash; the extensive Vedas are His loin-cloth.
His great throat is adorned with a patch of murk. 4
Behold Him who is entempled in Vakkarai.

654. ஏனவெண்கொம்பினொடும் இள ஆமையும் பூண்டு, உகந்து,
கூன்இளவெண்பிறையும் குளிர் மத்தமும் சூடி, நல்ல
மான் அன மென் விழியாளொடும் வக்கரை மேவியவன்,
தானவர் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே.

He, in joy, wears the white tusk of the Hog and
the carapace of the young Tortoise; He sports on
His crest, the curved crescent and the cool *ūmattham.*
He is the Chief of gods who gutted with fire the three
walled-citadels of the Asuras.
Concorporate with His soft and antelope-eyed
Consort, He is entempled in Vakkarai. 5

655. கார் மலி கொன்றையொடும் கதிர் மத்தமும் வாள் அரவும்
நீர் மலியும் சடைமேல் நிரம்பா மதிசூடி, நல்ல
வார்மலிமென்முலையாளொடும் வக்கரை மேவியவன்,
பார் மலி வெண்தலையில் பலி கொண்டு உழல் பான்மையனே.

On His matted crest, Siva is adorned with konṟais that
blow during the rainy season, *ūmattham* flowers,
the bright snake and the moon of a few digits.
Concorporate with His Consort of delicate breasts covered
by a band, He is entempled in Vakkarai.
His receiving alms in a white skull and roaming about
in this world are characteristic of His nature. 6

656. கான் அணவும் மறிமான் ஒரு கையது, ஓர் கை மழுவாள்,
தேன் அணவும் குழலாள்உமை சேர் திருமேனியினான்--
வான் அணவும் பொழில் சூழ் திருவக்கரை மேவியவன்;
ஊன் அணவும் தலையில் பலி கொண்டு உழல் உத்தமனே.

Siva holds a sylvan fawn in His hand; in another
hand He wields the weapon of *maḻu.*

He shares His body with His Consort whose coiffure
is buzzed by bees. He is entempled in Tiruvakkarai
girt with sky-vaulting gardens. He, the lofty one roams about
receiving alms in a skull to which flesh is still sticking. 7

657. இலங்கையர் மன்னன் ஆகி எழில் பெற்ற இராவணனைக்
கலங்க, ஓர்கால்விரலால், கதிர் போல் முடிபத்து அலற,
நலம் கெழு சிந்தையனாய் அருள் போற்றலும், நன்கு அளித்த
வலம் கெழு மூஇலைவேல் உடையான் இடம்--வக்கரையே.

Siva with His toe so crushed the handsome king of
Lanka, whose ten crowns are auric and radiant,
that his ten mouths wailed aloud in agonised
distress; then when he rued and hailed Siva
sincerely with all his heart, he came by goodly
guerdons thanks to the grace of Grace.
Lo, Siva who wields in His right hand the trident,
is entempled in Vakkarai. 8

658. காமனை ஈடு அழித்திட்டு, அவன்காதலி சென்று இரப்ப,
"சேமமே, உன்தனக்கு!" என்று அருள்செய்தவன்; தேவர்பிரான்;
சாம வெண் தாமரைமேல் அயனும், தரணி அளந்த
வாமனனும்(ம்), அறியா வகையான்; இடம்--வக்கரையே.

Siva did away with Manmata. At this when his
beloved wife prayed to Siva for redressal,
He blessed her with grace enabling her alone
to behold the revived form of her husband.

Siva is the God of gods. (Yet) Brahma, the reciter
of the Sāma Veda ensconsed on the Lotus and Vishnu
who manifested as Vāmana and turned into
Tiruvikrama, and scaled the earth, could not
behold Siva at all. He is entempled in Vakkarai. 9

659. மூடிய சீவரத்தர், முதிர் பிண்டியர், என்று இவர்கள்
தேடிய, தேவர் தம்மால் இறைஞ்சப்படும் தேவர்பிரான்;
பாடிய நால்மறையன்; பலிக்கு என்று பலவீதிதொறும்
வாடிய வெண்தலை கொண்டு உழல்வான்; இடம்--வக்கரையே.

The Buddhists shrouded in the ochre-robes and the Samaṇas
that adore the hoary *pindi*, cannot behold Him.
Siva is the God of gods adored by Devas who quest
after Him. Siva is the Singer of the four Vedas.
He roams about in all the streets receiving alms
in a faded and white skull. Lo, He is entempled in Vakkarai. 10

660. தண்புனலும்(ம்) அரவும் சடைமேல் உடையான், பிறை தோய்
வண் பொழில் சூழ்ந்து அழகு ஆர் இறைவன்(ன்), உறை வக்கரையை,
சண்பையர் தம் தலைவன்--தமிழ் ஞானசம்பந்தன்--சொன்ன
பண் புனை பாடல் வல்லார்அவர் தம் வினை பற்று அறுமே.

The Handsome One bears on His matted crest, the cool
Ganga and a snake. He abides at Vakkarai
girt with uberous gardens that graze the crescent.
Tamiḻ Gnānasambandhan, the Chief of Saṇpai,
has hailed this holy polis in goodly hymns.

The karma of those that are valiant in these psalms
cast in *paṇ*, will snap altogether. 11

61. திரு வெண்டுறை : பஞ்சமம்

661. ஆதியன், ஆதிரையன், அனல் ஆடிய ஆர் அழகன்,
பாதி ஓர் மாதினொடும் பயிலும் பரமாபரமன்,
போது இயலும் முடிமேல் புனலோடு அரவம் புனைந்த
வேதியன், மாதிமையால் விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

61. TIRUVEṆṬURAI : Panjamam

Siva is the Primal God. The Betelguese is dear to Him.
He is the handsome One par excellence, that dances in the fire.
In His left half is His Consort; He, the God, is absolutely
superior and supreme. He is the Vedic God whose
crest is adorned with flowers, the Ganga and a snake.
It is in intense love, He is entempled in Veṇṭurai. 1

662. காலனை ஓர் உதையில் உயிர் வீடுசெய் வார்கழலான்;
பாலொடு நெய் தயிரும் பயின்று ஆடிய பண்டரங்கன்;
மாலை மதியொடு, நீர், அரவம், புனை வார்சடையான்;
வேல் அன கண்ணியொடும், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

By His ankleted foot, Siva kicked Yama to death.
He who enacts the dance of *paṇḍaraṅkam*, has His
ablutions in milk, ghee and curds.

He is decked with the crepuscular moon, Ganga
and a snake on His extensive matted crest.
Concorporate with His Consort whose eyes are spear-like,
He is willingly entempled in Veṇṭurai. 2

663. படை நவில் வெண்மழுவான், பலபூதப்படை உடையான்,
கடை நவில் மும்மதிலும்(ம்) எரியூட்டிய கண்நுதலான்,
உடை நவிலும் புலித்தோல் உடை ஆடையினான், கடிய
விடை நவிலும் கொடியான், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

Siva wields as weapon the white *maḻu;* many many
are His Bhūta-Hosts. He who sports an eye in His forehead,
burnt the triad of the vestibuled and walled-citadels.
He is clad in a tiger-skin; He sports the signum
of His mount, the swift Bull, in His flag.
He is willingly entempled in Veṇṭurai. 3

664. பண் அமர் வீணையினான், பரவிப் பணி தொண்டர்கள் தம்
எண் அமர் சிந்தையினான், இமையோர்க்கும் அறிவு அரியான்,
பெண் அமர் கூறு உடையான், பிரமன் தலையில் பலியான்,
விண்ணவர்தம் பெருமான், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

Siva plays on His tuneful Vina; He abides in
the chinta-s of those who hail and adore Him.
He is unknowable by even the Devas. He is concorporate
with His Consort. He is the God of gods.
He begs alms and receives it in the skull of Brahma's.
Veṇṭurai is His beloved shrine. 5

665. பார் இயலும் பலியான்; படி யார்க்கும் அறிவு அரியான்;
சீர் இயலும் மலையாள் ஒருபாகமும் சேர வைத்தான்;
போர் இயலும் புரம்மூன்றுஉடன், பொன்மலையே சிலையா,
வீரியம் நின்று செய்தான்; விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

All the offerings of the terrestrials reach Siva. He is
unknowable by the terrestrials.
He is concorporate with the glorious Daughter of Himavant.
With the golden Mount Mēru as His bow, He devastated
heroically, the martial triad of the walled-citadels.
Veṇṭurai is, indeed, His beloved delubrum. 5

666. ஊழிகள்ஆய், உலகுஆய், ஒருவர்க்கும் உணர்வு அரியான்;
போழ்இளவெண்மதியும் புனலும்(ம்) அணி புன்சடையான்;
யாழின் மொழி உமையாள் வெருவ(வ்), எழில் வெண்மருப்பின்
வேழம் உரித்த பிரான்; விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

Siva is the Evolver of the cosmos and its Resolver.
He is unknowable by any one.
He is adorned with a slice of the white moon and the Ganga,
on His ruddy, matted and ornate crest.
He stood mantled in the skin of the beautifully
white-tusked mammoth witnessing which,
His Consort whose words are tuneful like the yāḻ's, 6
stood scared. At Veṇṭurai is His beloved temple.

667. கன்றிய காலனையும் உருளக் கனல் வாய் அலறிப்
பொன்ற முனிந்த பிரான், பொடிஆடிய மேனியினான்,
சென்று இமையோர் பரவும் திகழ்சேவடியான், புலன்கள்
வென்றவன், எம் இறைவன், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

Siva so kicked the wrathful Yama, that he cried aloud
with his fiery lips, rolled down and perished.
His body is bedaubed with the powder of ash.
Devas, gaining access, hail and adore His salvific feet.
Our God is ever the conqueror of the senses five.
Venṭurai is His beloved delubrum. 7

668. கரம்இரு-பத்தினாலும் கடுவெஞ்சினம்ஆய் எடுத்த
சிரம்ஒருபத்தும் உடை அரக்கன் வலி செற்று உகந்தான்,
பரவ வல்லார் வினைகள் அறுப்பான், ஒருபாகமும் பெண்
விரவிய வேடத்தினான், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

Siva crushed the puissance of the ten-headed Asura
who in his raging and obdurate wrath durst uproot,
with his twenty arms the Mount Kailās, and rejoiced.
Siva annuls the sinful deeds of His adorers. His form
sports His concorporation with His Consort.
Venṭurai is His beloved temple. 8

669. கோல மலர் அயனும், குளிர்கொண்டல் நிறத்தவனும்,
சீலம் அறிவு அரிதுஆய்த் திகழ்ந்து ஓங்கிய செந்தழலான்;
மூலம்அதுஆகி நின்றான்; முதிர்புன்சடை வெண்பிறையான்;
வேலைவிடமிடற்றான்; விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.
Siva's greatness remained unknowable by Brahma
whose seat is the splendorous Lotus and Vishnu whose
complexion is like that of the cool nimbus, when these two
went in quest of Him, He soared up and up splendorously
as the ruddy and mighty Flame.

He, indeed, is the Primal Ens. He sports the white crescent
on His hoary and ruddy matted hair. He quaffed
and retained in His throat the oceanic venom.
Veṇṭurai is His beloved shrine.
9

670. நக்கஉருஆயவரும், துவர் ஆடை நயந்து உடை ஆம்
பொக்கர்கள், தம் உரைகள்(ள்) அவை பொய் என, எம் இறைவன்,
திக்கு நிறை புகழ் ஆர்தரு தேவர்பிரான், கனகம்
மிக்கு உயர் சோதிஅவன், விரும்பும்(ம்) இடம்--வெண்டுறையே.

The naked Samaṇas and the Buddhists who are
joyously enshrouded in ochre robes do not know
Siva at all. The utterances of these fibsters are false.
Siva stands renowned in all the directions. He is
the God of gods. His form is that of the lofty and auric flame.
Veṇṭurai is His beloved shrine. 10

671. திண் அமரும் புரிசைத் திரு வெண்டுறை மேயவனை,
தண் அமரும் பொழில் சூழ்தரு சண்பையர்தம் தலைவன்--
எண் அமர் பல்கலையான், இசை ஞானசம்பந்தன்--சொன்ன
பண் அமர் பாடல் வல்லார் வினை ஆயின பற்று அறுமே.

On the God of Tiruveṇṭurai girt with impregnable walls,
Gnānasambandhan, the Chief of Saṇpai girt with
cool gardens, the one, a polymath, well versed in all
the memorable scriptures, has sung these hymns
cast in *paṇ*. The sins of those that are valiant 11
in these psalms will perish altogether.

62. திருப் பனந்தாள் : பஞ்சமம்

672. கண் பொலி நெற்றியினான், திகழ் கையில் ஓர் வெண்மழுவான்,
பெண் புணர் கூறு உடையான், மிகு பீடு உடை மால்விடையான்,
விண் பொலி மா மதி சேர்தரு செஞ்சடை வேதியன், ஊர்--
தண்பொழில் சூழ் பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

62. TIRUPPAṈANTĀḶ : Panjamam

Siva bears a bright eye in His forehead; His hand
wields a splendorous white *maḻu*.
He is concorporate with His Consort. The majestic Vishnu
is His riding Bull. He, the Vedic God, bears on His ruddy
matted hair the bright and great moon of the sky.
He is entempled in Paṉanthāḷ girt with cool gardens,
at Thāṭakai Eecchuram. 1

673. விரித்தவன், நால்மறையை; மிக்க விண்ணவர் வந்து இறைஞ்ச
எரித்தவன், முப்புரங்கள்(ள்); இயல் ஏழ்உலகில் உயிரும்
பிரித்தவன்; செஞ்சடைமேல் நிறை பேர் ஒலி வெள்ளம்தன்னைத்
தரித்தவன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Siva explicated the four Vedas; beseeched by Devas
He gutted with fire the three walled-citadels.
During the cosmic Dissolution He caused the entia
of the seven worlds to become disembodied.
He received on His hirsutorufous matted crest
the Ganga that uproariously descended amain.
His polis is Paṉanthāḷ at Thaṭakai Eecchuram. 2

674. உடுத்தவன், மான்உரி-தோல்; கழல் உள்க வல்லார் வினைகள்
கெடுத்து அருள்செய்ய வல்லான்; கிளர் கீதம் ஓர் நால்மறையான்;
மடுத்தவன், நஞ்சு அமுதா; மிக்க மா தவர் வேள்வியை முன்
தடுத்தவன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Siva is clad in the deer-skin; He annuls the evil
deeds of those that meditate Him. Eke doth
He grant them grace.
He is the Author of the ecstatic Vedas four.
He quaffed the venom as though it were ambrosia.
He devastated the Daksha's sacrifice of pseudo *tapas*.
His polis is Pananthāḷ at Thaṭakai Eecchuram. 3

675. சூழ் தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல், மிக ஏத்துமின்--பாய்புனலும்,
போழ்இளவெண்மதியும்(ம்), அனல் பொங்கு அரவும், புனைந்த
தாழ்சடையான் பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே!

If you seek after the annulment of the engirding
and cruel karma as also many a bodily ailment
hail and adore Siva exceedingly.
He is adorned with a slice of the white moon on His
dangling matted hair where also abides a snake
which, in rage, spits fire. He is entempled in
Pananthāḷ at Thaṭakai Eecchuram. 4

676. விடம் படு கண்டத்தினான், இருள் வெள்வளை மங்கையொடும்
நடம்புரி கொள்கையினான்அவன், எம் இறை, சேரும் இடம்--
படம் புரி நாகமொடு திரை பல்மணியும் கொணரும்
தடம் புனல் சூழ் பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Siva's throat sports a patch of venom; at dead of
night, He doth dance, witnessed by His Consort
who wears white bangles. He, indeed, is our God.
He is entempled on the bank of the Man̲n̲i river in whose
current roll gems spat by cobras, and other gems too.
He abides in Pan̲anthāḷ at Thāṭakai Eecchuram. 5

677. விடை உயர் வெல்கொடியான்; அடி விண்ணொடு மண்ணும் எல்லாம்
புடைபட ஆடல்வல்லான்; மிகு பூதம் ஆர் பல்படையான்;
தொடை நவில் கொன்றையொடு, வன்னி, துன் எருக்கும், அணிந்த
சடையவன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Siva's flag sports the signum of His triumphant Bull.
He, the pervader of the earth and the heavens, is a dancer.
His martial hosts comprise many Bhūtas.
On His matted hair, He is adorned with kon̲rais which
blow like garlands, *vanni* and erukku of dense foliage.
He abides in Pan̲anthāḷ at Thāṭakai Eecchuram. 6

678. மலையவன் முன் பயந்த மடமாதை ஓர் கூறு உடையான்;
சிலை மலி வெங்கணையால் புரம்மூன்று அவை செற்று உகந்தான்;
அலை மலி தண்புனலும், மதி, ஆடு அரவும்(ம்), அணிந்த
தலையவன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Siva is concorporate with the Daughter of Himavant.
He sped a sharp dart from His Mountain-bow and in
joy, devastated the triad of the walled-citadels.
He is the Chief of gods who is adorned with the cool
and wave-tossed Ganga, the crescent and a dancing
snake. He is entempled in Paṉanthāḷ at Thāṭakai Eecchuram. 7

679. செற்று, அரக்கன் வலியை, திருமெல்விரலால் அடர்த்து,
முற்றும் வெண்நீறு அணிந்த திருமேனியன்; மும்மையினான்:
புற்று அரவம், புலியின்(ன்) உரி-தோலொடு, கோவணமும்,
தற்றவன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

With His soft and divine toe, He pressed and crushed
the Asura's puissance. He, our God, is coated
with the white ash cap a pie.
He is the past, the present and the to-come.
He is adorned with a snake of the ant-hill; He is clad
in the tiger-skin and a loin-cloth. He is entempled
in Paṉanthāḷ Thaṭakai Eecchuram. 8

680. வில் மலை, நாண் அரவம், மிகு வெங்கனல் அம்பு, அதனால்,
புன்மை செய் தானவர்தம் புரம் பொன்றுவித்தான்; புனிதன்;
நல் மலர்மேல் அயனும், நண்ணு நாரணனும்(ம்), அறியாத்
தன்மையன்; ஊர்--பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.
With the Mount Mēru as His bow, the string thereof
Vasuki, the serpent, and the Agni-tipt dart,
Siva, the Holy One, devastated the triad of the evil
Asuras' walled-citadels.

He was unknowable by Brahma on the Lotus and Vishnu.
He abides at the urbs of Pananthāḷ at Thaṭakai Eecchuram. 9

681. ஆதர்சமணரொடும்(ம்), அண்ட ஐ(ந்)துகில் போர்த்து உழலும்
நீதர், உரைக்கும் மொழிஅவை கொள்ளன்மின்! நின்மலன் ஊர்--
போது அவிழ் பொய்கைதனுள்-திகழ் புள் இரிய, பொழில்வாய்த்
தாது அவிழும் பனந்தாள்-திருத் தாடகையீச்சுரமே.

Listen not to the words of the futile Samaṇas and the base
Buddhists who are shrouded in well-woven robes.
Pananthāḷ is dight with *poikais* where burgeon flowers,
and gardens damasked with pollen,
through which birds wing their course.
It is here in Thāṭakai Eecchuram the *Nimalan* abides. 10

682. தண்வயல் சூழ் பனந்தாள்-திருத் தாடகையீச்சுரத்துக்
கண் அயலே பிறையான் அவன் தன்னை, முன் காழியார்கோன்--
நண்ணிய செந்தமிழால் மிகு ஞானசம்பந்தன்--நல்ல
பண் இயல் பாடல் வல்லார் அவர் தம் வினை பற்று அறுமே.

Siva sports a vertical eye and close to it, is His crest
adorned with the crescent. He abides in Pananthāḷ
girt with fields, at Thāṭakai Eecchuram.
On Him, Gnānasambandhan, the Prince of Kāḻi,
who is rich in abounding knowledge and well versed
in the classical Tamiḻ, has sung these hymns cast
in *paṇ*. The karma of those who are valiant
in these psalms, will snap altogether. 11

63. திருச் செங்காட்டங்குடி

: பஞ்சமம்

683. பைங்கோட்டு மலர்ப் புன்னைப் பறவைகாள்! பயப்பு ஊர,
சங்குஆட்டம் தவிர்த்து, என்னைத் தவிரா நோய் தந்தானே--
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டன் பணி செய்ய,
வெங்காட்டுள் அனல் ஏந்தி விளையாடும் பெருமானே.

63. TIRUCCHEṄKĀṬṬAṄKUṬI

: Panjamam

Ye birds seated on the green punnai trees—ramiferous
and flower-laden! My beloved Lover Siva who
freed me from other troubles has quit me investing
me with the irremovable sallow hue.
He is served well by Cirutthoṇdan of Cheṅkāṭṭaṅkudi.
Holding fire in His hand, He sports in the burning crematory.
(Apprise Him of my agony.) 1

684. பொன் அம் பூங் கழிக் கானல் புணர்துணையோடு உடன்வாழும்
அன்னங்காள்! அன்றில்காள்! அகன்றும் போய் வருவீர்காள்!--
கல்-நவில் தோள் சிறுத்தொண்டன் கணபதீச்சுரம் மேய
இன்அமுதன் இணை அடிக்கீழ் எனது அல்லல் உரையீரே!
In the foreshore gardens where the flowers of *punnai* trees
shower pollen, you swans and *andrils* dwell with your mates.
Though you leave your habitat you return to it in time.
Served by Cirutthoṇdan whose shoulders are rock-hard,
Siva is entempled in Cheṅkāṭṭaṅkudi.
Reach the feet of the sweet and nectarean God 2
and narrate to Him my angst and agony.

685. குட்டத்தும், குழிக் கரையும், குளிர்பொய்கைத் தடத்துஅகத்தும்,
இட்டத்தால் இரை தேரும், இருஞ் சிறகின் மடநாராய்!
சிட்டன் சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
வட்டவார்சடையார்க்கு என் வருத்தம், சென்று, உரையாயே!

O young heron of large wings twain, you willingly wing
toward small pools, pits and *poikai* in search of prey.
My beloved God is served by the glorious Ciṟutthoṇdaṉ
of righteous deportment, at Cheṅkāṭṭaṅkudi.
Call on Him of matted tresses and apprise Him
of my angst and agony. 3

686. கான் அருகும், வயல் அருகும், கழி அருகும், கடல் அருகும்,
மீன் இரிய, வருபுனலில் இரை தேர் வண் மடநாராய்!
தேன் அமர் தார்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
வான் அமரும் சடையார்க்கு என் வருத்தம், சென்று, உரையாயே!
O white and youg heron, you wing towards foreshore
gardens, fields, creeks and main in quest of
your prey—the finny drove.
He, my Lover, is well served by Ciṟutthoṇdaṉ, the wearer
of melis-laden garland, at Changkāttankudi.
Call on Him whose complexion is incarnadine like
the crepuscular sky and apprise Him of my agonizing ailment. 4

687. ஆரல் ஆம் சுறவம் மேய்ந்து, அகன் கழனிச் சிறகு உலர்த்தும்,
பாரல் வாய்ச் சிறு குருகே! பயில் தூவி மடநாராய்!--
சீர் உலாம் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
நீர் உலாம் சடையார்க்கு என் நிலைமை, சென்று, உரையீரே!

O long-beaked and comely stork, you dry your feathers
in the broad fields into which *āral* and *suravam*
leap and gambol! O young heron of dense feathers!
My beoved Lover is served by the renowned Cirutthoṇdan̲,
at Cheṅkāṭṭaṅkudi. Reach Him in whose matted
crest the Ganga courses and apprise Him of my ailment. 5

688. குறைக் கொண்டார் இடர் தீர்த்தல் கடன் அன்றே? குளிர்பொய்கைத்
துறைக் கெண்டை கவர் குருகே! துணை பிரியா மடநாராய்!
கறைக்கண்டன், பிறைச்சென்னி, கணபதீச்சுரம் மேய
சிறுத்தொண்டன்பெருமான் சீர் அருள் ஒரு நாள் பெறல் ஆமே?

Is it not the duty of the great to redress the grievances of sufferers?
O heron catching *kendai* close to the bund of the cool
poikai! You, O heron, part not from your mate.
My Lover whose throat is murky and who wears the crescent
on His crest, is entempled in Gaṇapati Eecchuram
hailed and served by Cirutthoṇdan̲.
Ye birds, fly to Him as my messengers and enable me 6
to come by His glorious grace.

689. கரு அடிய பசுங் கால் வெண்குருகே! ஒண் கழி நாராய்!
"ஒரு அடியாள் இரந்தாள்" என்று, ஒரு நாள் சென்று, உரையீரே!--
செரு வடி தோள் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
திருவடிதன் திருஅருளே பெறல்ஆமோ, திறத்தவர்க்கே?

O white stork, with your strong feet you wade in the black
clayey fields! O heron that frequents the comely creek!

Tell me if fit and proper persons who adore the feet
of Siva of Cheṅkāṭṭaṅkudi, hailed and adored
by Ciṟutthoṇḍaṉ endowed with strong and martial
shoulders, come by His divine grace.
Plese ask Him one day if I, His devotee who prays
to Him abounding in great grace, will come by His grace? 7

690. சூர் ஆரல் இரை தேர்ந்து, குளம் உலவி, வயல் வாழும்
தாராவே! மடநாராய்! தமியேற்கு ஒன்று உரையீரே!--
சீராளன், சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
பேராளன், பெருமான்தன் அருள் ஒரு நாள் பெறல் ஆமே?

O *tāra* that with your sharp beak catches *āral!*
You dwell in pools and fields. O young heron! Please
tell me something to sustain me.
Siva is the grace-abounding God abiding at
Cheṅkāṭṭaṅkudi, hailed by the glorious Ciṟutthoṇḍaṉ.
Can I ever gain His grace? 8

691. நறப் பொலி பூங் கழிக் கானல் நவில் குருகே! உலகுஎல்லாம்
அறப் பலி தேர்ந்து உழல்வார்க்கு என் அலர் கோடல் அழகியதே?
சிறப்பு உலவான் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடி மேய
பிறப்புஇலி பேர் பிதற்றி நின்று, இழக்கோ, என் பெரு நலமே?

O stork frequenting the flowery and melliferous gardens
abutting the creek! Siva receives alms throughout
the world to cause the flourishing of dharma.

He is entempled in Cheṅkāṭṭaṅkudi adored and served
by the glorious Ciṟutthoṇdaṉ.
Does it become Him to permit my getting rumoured about?
Am I alas, fated to celebrate the names of the birthless
God only to lose my great muliebrity? 9

692. செந்தண் பூம் புனல் பரந்த செங்காட்டங்குடி மேய,
வெந்தநீறு அணி மார்பன், சிறுத்தொண்டன்அவன் வேண்ட,
அம் தண் பூங் கலிக் காழி அடிகளையே அடி பரவும்
சந்தம் கொள் சம்பந்தன் தமிழ் உரைப்போர் தக்கோரே.

Siva's chest is bedaubed by the baked ash.
He is entempled in Cheṅkāṭṭaṅkudi and adored
regularly by Ciṟutthoṇdaṉ.
On Him, Gnānasambandhan, the adorer of the feet
of the God of the beautiful and dinsome
Kāḻi, has sung these rhythmic hymns.
Those that are valiant in these, will gain the purpose of their life. 10

[Note. I give hereinbelow the message received by me from Pandita Vidwan T.V.Gopala Iyer. The decad of Sambandhar on Tirucchenkāṭṭaṅkudi is cast in Akam genre, mutatis mutandis. This genre is peculiar to Tamil only. When Sambandhar's hymns are cast in this genre, on occasions, he does not adhere to his regular pattern which deals with Ravana, Brahma and Vishnu as also Samaṇas and Buddhists. This decad exemplifies the above mentioned fact.]

64. திருப் பெருவேளூர் : பஞ்சமம்

693. அண்ணாவும் கழுக்குன்றும் ஆய மலை அவை வாழ்வார்,
விண்ணோரும் மண்ணோரும் வியந்து ஏத்த அருள்செய்வார்,
கண் ஆவார், உலகுக்குக் கருத்து ஆனார், புரம் எரித்த
பெண்ஆண் ஆம் பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

64. TIRUPPERUVĒḶŪR :Panjamam

Siva is entempled in Aṇṇāmalai, Kal̲ukkun̲ru and other
mountains to bless His adorers with weal and welfare.
He blesses the celestials and the terrestrials who hail
Him in wondrous splendour.
He is the eye of the cosmos; eke is He its *Karta*.
He that gutted with fire the three walled-citadels, is
androgynic. He parts not from Peruvēḷūr. 1

694. கருமானின்உரி உடையர், கரிகாடர், இமவானார்-
மருமானார், இவர் என்றும் மடவாளோடு உடன்ஆவர்,
பொரு மான விடை ஊர்வது உடையார், வெண்பொடிப் பூசும்
பெருமானார், பிஞ்ஞகனார்--பெருவேளூர் பிரியாரே.

He is mantled in the peeled off skin of the Tusker. He abides
at the crematory; He is hailed as the son-in-law of Himavant
with whose Daughter He is concorporate.
He is the Rider of the great and martial Bull. He, the God, who is
coated with the white ash is, Pinggnakan
who parts not from Peruvēḷūr. 2

695. குணக்கும் தென் திசைக்கண்ணும் குடபாலும் வடபாலும்
கணக்கு என்ன அருள்செய்வார், கழிந்தோர்க்கும் ஒழிந்தோர்க்கும்;
வணக்கம்செய் மனத்தாராய் வணங்காதார் தமக்கு என்றும்
பிணக்கம்செய் பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

Siva grants grace to those that live in the east, south,
west and north, in appropriate measure.
He abides in the *manams* of those freed from karma
and those who descant on His glory.
Unto them that adore Him not, He causes troubles
(to make them realise their folly).
He, our God, parts not from Peruvēḷūr. 3

696. இறைக் கண்ட வளையாளோடு இரு கூறுஆய் ஒருகூறு
மறைக் கண்டத்து இறை நாவர், மதில் எய்த சிலை வலவர்,
கறைக் கொண்ட மிடறு உடையர், கனல் கிளரும் சடைமுடிமேல்
பிறைக் கொண்ட பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

One half of His body is Uma's whose hand is bebangled.
His right half is His. His single form is, indeed, dual.
He is the Singer of the Vedas in full-throated ease.
With His bow, He smote the walled-citadels.
His throat wears a patch of venom; on His flame-bright
matted crest, He sports the crescent. 4
He, our God, parts not from Peruvēḷūr.

697. விழையாதார், விழைவார் போல் விகிர்தங்கள்பல பேசி;
குழையாதார், குழைவார் போல் குணம்நல்லபல கூறி;
அழையாவும் அரற்றாவும் அடி வீழ்வார் தமக்கு என்றும்
பிழையாத பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

Siva is truly desireless; He speaks of manifold
wonder as if borne by desire.
When those that melt not, and yet descant on His
goodly *gunas* as if melting in love, extol
His manifold glory and appeal to Him, falling at His
feet, suffer no harm from Him.
He, our God, parts not from Peruvēḷūr. 5

[Note. Siva is not out of bounds even for pseudo-bhaktas.]

698. விரித்தார், நால்மறைப் பொருளை; உமை அஞ்ச, விறல் வேழம்
உரித்தார், ஆம் உரி போர்த்து; மதில் மூன்றும் ஒரு கணையால்
எரித்தார்ஆம், இமைப்பு அளவில்; இமையோர்கள் தொழுது இறைஞ்சப்
பெருத்தார்; எம்பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

Siva explicated the import of the Vedas.
He peeled off the skin of the mighty Tusker and mantled
Himself in it, at which Uma stood scared.
With a single peerless dart He burnt in all celerity,
the triad of the walled-citadel before one's eyes could wink.
When He waxed cosmically, the celestials adored
Him, in sheer dread.
He is our God who parts not from Peruvēḷūr. 6

699. மறப்பு இலா அடிமைக்கண் மனம் வைப்பார்; தமக்கு எல்லாம்
சிறப்புஇலார் மதில் எய்த சிலை வல்லார், ஒரு கணையால்;
இறப்பு இலார்; பிணி இல்லார்; தமக்கு என்றும் கேடு இலார்;
பிறப்பு இலாப் பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

He minds with care those who are poised in
unforgetting servitorship.
With a single dart released by His mighty bow,
He burnt the walled-citadels of the worthless Asuras.
He is athanasic, maladyless and blemishless. He is
the birthless God who parts not from Peruvēḷūr. 7

700. எரி ஆர் வேல் கடல்-தானை இலங்கைக் கோன்தனை வீழ,
முரி ஆர்ந்த தடந்தோள்கள் அடர்த்து, உகந்த முதலாளர்;
வரி ஆர் வெஞ்சிலை பிடித்து, மடவாளை ஒருபாகம்
பிரியாத பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

He caused the fall of Ravana endowed with a sea of
soldiers who wield the flame-bright spears, and rejoiced
to crush his puissant and broad shoulders.
He is the wielder of the well-crafted and death-dealing bow.
He is concorporate inseparably with His bashful Consort. 8
He, indeed, is the Primal God who parts not from Peruvēḷūr.

701. சேண் இயலும் நெடுமாலும் திசைமுகனும் செரு எய்தி,
காண் இயல்பை அறிவு இலராய், கனல்வண்ணர் அடிஇணைக்கீழ்
நாணி அவர் தொழுது ஏத்த, நாணாமே அருள்செய்து,
பேணிய எம்பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

The sky-vaulting Vishnu and the Four-faced Brahma
contended with one another for supremacy; Siva
stood unbeholdable by them. Feeling ashamed
they hailed the feet twain of Siva who did away with
their shame and blessed them.
Siva is our God who parts not from Peruvēḷūr. 9

702. புற்று ஏறி உணங்குவார், புகை ஆர்ந்த துகில் போர்ப்பார்,
சொல்-தேற வேண்டா, நீர்! தொழுமின்கள், சுடர்வண்ணம்!
மல்-தேரும் பரிமாவும் மதகளிறும் இவை ஒழிய,
பெற்றேறும் பெருமானார்--பெருவேளூர் பிரியாரே.

The Samanas could remain in *samāti* while their
bodies are covered by ant-hills; the Buddhists
wear robes dyed in ochre. Do not listen to their words.
Adore Siva, the flame-hued.
Not choosing chariot, horse or the musty elephant,
Siva rides the Bull—His mount.
He, our God, parts not from Peruvēḷūr. 10

703. பைம்பொன் சீர் மணி வாரி பலவும் சேர் கனி உந்தி,
அம் பொன் செய் மடவரலார் அணி மல்கு பெருவேளூர்
நம்பன்தன் கழல் பரவி, நவில்கின்ற மறை ஞான-
சம்பந்தன் தமிழ் வல்லார்க்கு, அருவினைநோய் சாராவே.

The river Kāviri carries in its current fresh gold,
great gems and many types of fruitage.
Here bathe bashful damsels adorned with jewels of gold.

On Him, the supremely desirable One who is entempled
in Peruvēḷūr, Gnānasambandhan well versed
in the Vedas, adoring Siva's ankleted feet, has sung
these hymns. Evil karma will not get attached
to them that are valiant in these Tami̱l psalms. 11

65. திருக் கச்சி நெறிக்காரைக்காடு : பஞ்சமம்

704. வார் அணவு முலை மங்கை பங்கினராய், அம் கையினில்
போர் அணவு மழு ஒன்று அங்கு ஏந்தி, வெண்பொடி அணிவர்--
கார் அணவு மணி மாடம் கடை நவின்ற கலிக் கச்சி,
நீர் அணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக்காட்டாரே.

65. TIRUKKACCHINERI̱KKĀRAIKKAṬU : Panjamam

Siva is concorporate with Uma whose delicate breasts
are covered by a band.
He wields in His comely hand the martial weapon of *ma̱lu.*
He is adorned with the white powder of ash. He is enshrined
in the dinsome Kacchineri̱kkāraikkāṭu, dight
with vestibuled mansions whose tops brush
the clouds, as also with *poikais* brimful of water 1
whence blow blossoms galore.

705. கார் ஊரும் மணிமிடற்றார், கரிகாடர் உடைதலை கொண்டு
ஊர்ஊரன் பலிக்கு உழல்வார், உழைமானின்உரி-அதளர்--
தேர் ஊரும் நெடுவீதிச் செழுங் கச்சிமாநகர்வாய்,
நீர் ஊரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக்காட்டாரே.

Siva sports in His gem-like throat a patch of nimbus-like murk;
He abides in the crematorium; He roams about toting
a skull of Brahma's soliciting alms in all places.
He is clad in a deer-skin; He is enshrined in the great
city of the splendorous Kacchi in whose long streets
chariots ply at Neṟikkāraikkāṭu dight with
poikais whence blow blossoms aplenty. 2

706. கூறு அணிந்தார், கொடியிடையை; குளிர்சடைமேல் இளமதியோடு
ஆறு அணிந்தார்; ஆடுஅரவம் பூண்டு உகந்தார்; ஆன்வெள்ளை-
ஏறு அணிந்தார், கொடி அதன்மேல்; என்பு அணிந்தார்,--வரைமார்பில்,--
நீறு அணிந்தார்--கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டாரே.

Siva is concorporate with His liana-waisted Consort.
On His cool matted hair He is lovelily adorned with
the waning moon, the Ganga and the dancing snake.
His flag sports the signum of His white Bull; He is
the wearer of bones on His hill-like chest which
He bedaubs with ash. He is entempled in
the dinsome Kacchineṟikkāraikkāṭu. 3

707. பிறை நவின்ற செஞ்சடைகள் பின் தாழ, பூதங்கள்
மறை நவின்ற பாடலோடு ஆடலராய், மழு ஏந்தி,--
சிறை நவின்ற வண்டுஇனங்கள் தீம்கனிவாய்த் தேன் கதுவும்--
நிறை நவின்ற கலிக் கச்சி நெறிக்காரைக்காட்டாரே.

On His ruddy strands of matted hair adangle, He wears
the crescent. To the singing of the Vedic hymns by
His *Bhūtas* He enacts His dance. He wields the *maḻu*.
In the dinsome Kacchineṟikkāraikkāṭu whose denizens
the Chief of Sirapuram which annuls all evil qualities of
its adorers, has sung this garland of ten hymns in apposite Tamil.
They that are valiant in these psalms will become
Rudras, and abide at Siva-loka and their great glory
will never part from them. 11

72. திரு மாகறல்

திருவிராகம்

சாதாரி

782. விங்கு விளை கழனி, மிகு கடைசியர்கள் பாடல் விளையாடல் அரவம்,
மங்குலொடு நீள்கொடிகள் மாடம் மலி, நீடு பொழில், மாகறல் உளான்--
கொங்கு விரிகொன்றையொடு, கங்கை, வளர் திங்கள், அணி
செஞ்சடையினான்;
செங்கண் விடை அண்ணல்--அடி சேர்பவர்கள் தீவினைகள் தீரும், உடனே.

72. TIRUMĀKAR̲AL

Tiruvirakam

Sāthāri

Siva is entempled in Mākar̲al dight with extensive gardens
and storeyed mansions whose flags brush the clouds.
On His ruddy matted crest He wears the Ganga, the moon
and the pollen-laden kon̲rai blossoms.
Here abounds the din of farmwives in the fields of ginger
and those that sing and dance in delight.
The evil deeds of those that adore the Rider of the red-eyed
Bull, get annulled altogether forthwith. 1

783. கலையின் ஒலி, மங்கையர்கள் பாடல் ஒலி, ஆடல், கவின் எய்தி,
அழகு ஆர்
மலையின் நிகர் மாடம், உயர் நீள்கொடிகள் வீசும் மலி மாகறல் உளான்--
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன் ஏந்தி, எரிபுன்சடையினுள்
அலை கொள் புனல் ஏந்து பெருமான்--அடியை ஏத்த, வினை அகலும்,
மிகவே.

Siva is entempled in the beautiful and opulent Mākar̲al
dight with hill-like, lofty and storeyed mansions
the flags of which waft in the sky.
In this urbs, the chanting voice of the cultivators of
the scriptures and the voice of women that sing
and dance, are delightfully orchestrated.
Siva wields in His right hand the well-crafted,
sharp-tipt and three-leaved spear.
He bears on His ruddy, matted and blazing crest
the wave-tossed Ganga. If His sacred feet are duly hailed
karma gets annulled altogether. 2

784. காலையொடு துந்துபிகள், சங்கு, குழல், யாழ், முழவு, காமருவு சீர்
மாலை வழிபாடு செய்து, மாதவர்கள் ஏத்தி மகிழ் மாகறல் உளான்--
தோலை உடை பேணி, அதன் மேல் ஓர் சுடர் நாகம் அசையா, அழகிதாப்
பாலை அன நீறு புனைவான்-- அடியை ஏத்த, வினை பறையும், உடனே.

Siva is enshrined in Mākar̲al where during morn and eve
the orchestrated sounds of *tuntupi*, chank, flute, *yāl̲*
and *mrutangam* prevail; *munis* adore Him in bliss.
He is joyously clad in a tiger-skin and He cinctures
His waist with a bright serpent.

He blazes with the milk-white holy ash.
If He is adored in bhakti, karma will vamoose at once. 3

785. இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள் உந்தி, எழில் மெய்யுள் உடனே,
மங்கையரும் மைந்தர்களும் மன்னு புனல்ஆடி, மகிழ் மாகறல் உளான்--
கொங்கு, வளர் கொன்றை, குளிர்திங்கள், அணி செஞ்சடையினான்--
அடியையே
நுங்கள் வினை தீர, மிக ஏத்தி, வழிபாடு நுகரா, எழுமினே!

Siva is entempled in Mākaṟal where pretty women
bathe, in joy, with their respective husbands in
the ever-flowing river which carries in its current
radiant pearls, gold and gems.
Do adore the feet of Siva whose ruddy matted crest
is adorned with the pollen-laden konṟais and the cool
moon, in intense bhakti to rid your karma. 4

786. துஞ்சு நறுநீலம், இருள் நீங்க, ஒளி தோன்றும் மது வார் கழனிவாய்,
மஞ்சு மலி பூம்பொழிலில், மயில்கள் நடம்ஆடல் மலி மாகறல் உளான்--
வஞ்ச மதயானை உரி போர்த்து மகிழ்வான், ஓர் மழுவாளன், வளரும்
நஞ்சம் இருள்கண்டம் உடை நாதன்--அடியாரை நலியா, வினைகளே.
The blue lilies are dark during night; when day dawns
they look bright in the fields where they plentifully
shed their melis therein.
Siva is entempled in Mākaṟal dight with flowery
gardens over whose tops the moon doth rest.
Siva is mantled joyously in the peeled off skin
of the deceptious Tusker. He is armed with a *maḻu.*

He is the Lord-God whose throat wears a patch
of the venom He quaffed.
Karma canst not afflict the adorers of His feet. 5

787. மன்னும் மறையோர்களொடு பல்படிம மா தவர்கள் கூடி உடன் ஆய்
இன்ன வகையால் இனிது இறைஞ்சி, இமையோரில் எழு மாகறல்
உளான்--
மின்னை விரி புன்சடையின்மேல் மலர்கள் கங்கையொடு திங்கள்
எனவே--
உன்னுமவர், தொல்வினைகள் ஒல்க, உயர் வான் உலகம் ஏறல் எளிதே.

Siva is entempled in Mākaṟal where the practitioners
of the aeviternal Vedas and the multitudinous
tapaswis who are the true Devas, adore Him duly.
He is to be contemplated in bhakti as the God of
spreading, fulgurant and ruddy matted crest.
He is adorned with soft flowers, the Ganga and the moon.
The ancient karma of His adorers will quit; for them
the ascension to the ethereal world is made easy. 6

788. வெய்ய வினை நெறிகள் செல, வந்து அணையும் மேல்வினைகள்
வீட்டல் உறுவீர்!
மை கொள் விரி கானல், மது வார் கழனி மாகறல் உளான்--எழில் அது ஆர்
கைய கரி கால்வரையில் மேலது உரி-தோல் உடைய மேனி அழகு ஆர்
ஐயன்--அடி சேர்பவரை அஞ்சி அடையா, வினைகள்; அகலும், மிகவே.

O ye who are resolved to annul your past karma and will
to forefend the Āgamiya, adore in tense bhakti

Siva entempled in Makaṟal dight with fields
to which the flowers of the cloud-capped gardens
close to the foreshore, seep melis.
The handsome Siva is clad in the peeled off skin
of the Tusker. He alone is the true God.
Karma will feel scared and flee away from them
that have gained His feet.
7

789. தூசு துகில் நீள்கொடிகள் மேகமொடு தோய்வன, பொன் மாடமிசையே,
மாசு படு செய்கை மிக, மாதவர்கள் ஓதி மலி மாகறல் உளான்;
"பாசுபத! இச்சை வரிநச்சுஅரவுகச்சை உடை பேணி, அழகு ஆர்
பூசு பொடி ஈசன்!" என ஏத்த, வினை நிற்றல்இல, போகும், உடனே.

Adored by the tapaswis, the chanters of the Vedas,
Siva is entempled in the splendorous Mākaṟal
dight with auric and storeyed mansions on whose
tops are poles from which flags waft and brush
the white clouds. It is only this stain that prevails here.
Siva, in love, assumes the habit of the *pāsupata* faith.
He is the Handsome One whose waist is cinctured
with a serpent. He is ash-bedaubed.
If He is sincerely hailed as the Supreme God,
Karma flees away at once.
8

790. தூய விரிதாமரைகள், நெய்தல், கழுநீர், குவளை, தோன்ற, மது உண்
பாய வரிவண்டு பலபண் முரலும் ஓசை பயில் மாகறல் உளான்--
சாய விரல் ஊன்றிய இராவணன் தன்மை கெட நின்ற பெருமான்--
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள் வினை ஆயினவும் அகல்வது எளிதே.

The lotus pure, *neythal*, *kaḻuneer*, lilies and the like
unfold their petals; the speckled bees sip melis
from these and hum in *pann*. Such is Mākaral where
God Siva is entempled.
Of yore, He pressed with His hallux Ravana beneath
His Mount and did away with his might.
The karma of His devotees who hail His ankleted
and glorious feet vanishes at once. 9

791. காலின் நல பைங்கழல்கள் நீள் முடியின்மேல் உணர்வு காமுறவினார்,
மாலும் மலரானும், அறியாமை எரி ஆகி, உயர் மாகறல் உளான்--
நாலும் எரி, தோலும் உரி, மா மணிய நாகமொடு கூடி உடன்ஆய்,
ஆலும் விடைஊர்தி உடை அடிகள்--அடியாரை அடையா, வினைகளே.
Borne by the longing to behold Siva's auric
and ankleted feet and His spreading matted crest,
Brahma and Vishnu pursued their quest in vain,
as Siva stood as a lofty flame that soared
up and up, unbeholdable by them.
It is He who is entempled Mākaṟal. In His third
eye, derisive smile, hand and body, fire blazes.
He is cinctured with a serpent which spits a gem
after sloughing. His mount is the Bull of wobbling gait.
Twyfold karma will not get attached to His devotees. 10

792. கடை கொள் நெடுமாடம் மிக ஓங்கு கமழ் வீதி மலி காழியவர்கோன்--
அடையும் வகையால் பரவி அரனை அடி கூடு சம்பந்தன்--உரையால்,
மடை கொள் புனலோடு வயல் கூடு பொழில் மாகறல் உளான் அடியையே
உடைய தமிழ்பத்தும் உணர்வார் அவர்கள் தொல்வினைகள் ஒல்கும், உடனே.

The Prince of Kāḻi dight with vestibuled, lofty and storeyed
mansions and streets of pervading suaveolence,
pursuing the gain of at-one-ment with Siva,
has sung these ten Tamiḻ hymns on the feet of
the God of Mākaṟal dight with fields fed by the water
of the sluiced channels and with dense gardens.
The hoary karma of those that cognize the import
of these psalms and chant them, will quit them instantaneously. 11

73. திருப் பட்டீச்சுரம்

திரு விராகம்

சாதாரி

793. பாடல் மறை, சூடல் மதி, பல்வளை ஓர்பாகம்--மதில்மூன்று ஓர் கணையால்
கூட எரியூட்டி, எழில் காட்டி, நிழல் கூட்டு பொழில் சூழ் பழையையுள்
மாட மழபாடி உறை பட்டிசுரம் மேய, கடி கட்டு அரவினார்;
வேடம் நிலை கொண்டவரை வீடுநெறி காட்டி, வினை வீடுமவரே.

73. TIRUPPAṬṬEECCHURAM

Tiruvirākam

Sāthari

Siva is the Author of the Vedas which are tunefully chanted;
He wears the crescent; He is concorporate with His
Consort who wears many bangles.
He, with a single dart, gutted with fire, the triad
of the walled-citadels.

He, the handsome One is the hero par excellence.
He is of Malapādi. He is entempled in Palayārai
girt with tenebrous gardens at Paṭṭeecchuram.
He is cinctured with a serpent in His waist.
He reveals the way to deliverance and annuls the karma
of those that are poised in the Saivite habit and way. 1

794. நீரின் மலி புன்சடையர்; நீள் அரவு, கச்சைஅது; நச்சு இலையது ஓர்
சூரின் மலி சூலம்அது ஏந்தி; உடை கோவணமும், மானின்உரி-தோல்;
காரின் மலி கொன்றைவிரிதார் கடவுள்; காதல்செய்து மேய நகர்தான்,
பாரின் மலி சீர் பழைசை பட்டிசுரம்; ஏத்த, வினை பற்று அழியுமே.

Siva bears the Ganga on His ruddy and matted crest.
He is cinctured with a serpent in His waist.
He wields a sharp and murderous spear whose top is
like a leaf. He wears a loin-cloth and is clad
in the deer-skin. He wears the konrai blossoms
that blow in the rainy season.
He is entempled in Palayārai, well-renowned on earth,
at Paṭṭeecchuram. Our karma will altogether
perish if we sincerely adore Him. 2

795. காலை மடவார்கள் புனல்ஆடுவது கௌவை, கடி ஆர் மறுகுஎலாம்
மாலை மணம் நாறு பழையாறை மழபாடி--அழகுஆய மலி சீர்ப்
பாலை அன நீறு புனை மார்பன் உறை--பட்டிசுரமே பரவுவார்,
மேலை ஒரு மால்கடல்கள் போல் பெருகி, விண்ணுலகம் ஆளுமவரே.

Siva, the God of Maḻapādi, is entempled in Paḻayāṟai
where during morn bashful damsels bathe
dinsomely and where its streets are pervaded by fragrance
during eve when *puja* takes place at Paṭṭeecchuram.
His beautiful chest is adorned with the milk-white ash.
His adorers who hail Him, gain wealth vast as the seas
and eventually gain the sovereignty of the ethereal world. 3

796. கண்ணின்மிசை நண்ணி இழிவிப்ப, முகம் ஏத்து கமழ் செஞ்சடையினான்,
பண்ணின்மிசை நின்று பலபாணி பட ஆட வல பால்மதியினான்,
மண்ணின்மிசை நேர் இல் மழபாடி மலி பட்டிசுரமே மருவுவார்
விண்ணின்மிசை வாழும் இமையோரொடு உடன்ஆதல் அது மேவல் எளிதே.

When Uma, in sport, closed Siva's eyes, her hands
sudated and the flood of sweat got carried to the Ganga
on His ruddy matted crest.
He sings hymns cast in *pann* and doth dance.
He wears the milk-white crescent on His crest.
He, the God of Maḻapadi, is enshrined in Paṭṭeecchuram.
It is easy for His adorers to gain ascension and live
companied with Devas. 4

797. மருவ முழவு அதிர, மழபாடி மலி மத்த விழவு ஆர்க்க, வரை ஆர்
பருவ மழை பண் கவர்செய் பட்டிசுரம் மேய படர்புன்சடையினான்;
வெருவ மதயானை உரி போர்த்து, உமையை அஞ்ச வரு
வெள்விடையினான்;
உருவம் எரி; கழல்கள் தொழ உள்ளம் உடையாரை அடையா, வினைகளே.

Siva's Ma*l*apādi is made dinsome by the resounding of
*mu*l*avam* and other instruments during fetes
and festivities. He is the God of spreading and ruddy
matted hair, who is entempled in the enchanting
Paṭṭeecchuram made uberous by the seasonal rains.
He peeled off the skin of the musty Tusker and mantled
Himself in it at which Uma stood scared.
He rides the white-hued Bull. His body blazes like fire.
Karma will not get attached to those that sincerely
adore and hail Him in bhakti. 5

798. மறையின் ஒலி கீதமொடு பாடுவன பூதம் அடி மருவி, விரவு ஆர்
பறையின் ஒலி பெருக நிகழ் நட்டம் அமர் பட்டிசுரம் மேய--பனி கூர்
பிறையினொடு, மருவியது ஓர் சடையின்இடை, ஏற்ற புனல்,
தோற்றம் நிலைஆம்--
இறைவன் அடி முறைமுறையின் ஏத்துமவர் தீத்தொழில்கள் இல்லர்,
மிகவே.

The sound of the Vedic chanting, the sound of hymn and song
and solemn strain, the sound of the loud adoration
of the Bhūtas seated beneath His feet and the drumming
sound: these get orchestrated when Siva dances.
He who wears the moist moon and the Ganga on His matted
crest is entempled in Paṭṭeecchuram.
His splendour is ever-during.
They that adore and duly hail His feet,
will stand totally free from their karma. 6

799. பிறவி, பிணி, மூப்பினொடு நீங்கி, இமையோர்உலகு பேணல் உறுவார்—
துறவி எனும் உள்ளம் உடையார்கள், கொடி வீதி அழகுஆய தொகு சீர்
இறைவன் உறை பட்டிசுரம் ஏத்தி எழுவார்கள், வினைஏதும் இலஆய்,
நறவ விரையாலும் மொழியாலும் வழிபாடு மறவாத அவரே.

Siva is adored by the Devas who are freed from birth,
illth and dotage. He is entempled in Paṭṭeecchuram
dight with streets in which waft streamers.
Here dwell seers who have completely forsaken their
attachment to things phenomenal.
Those that rise up (from their beds) in the morn hailing
Him, will be freed from karma; these fail not to adore
Him with melliferous flowers fragrant,
all the while chanting hymns. 7

800. நேசம் மிகு தோள் வலவன்ஆகி, இறைவன் மலையை நீக்கியிடலும்,
நீசன் விறல்வாட்டி,--வரை உற்றது உணராத, நிரம்பா மதியினான்,
ஈசன்--உறை பட்டிசுரம் ஏத்தி எழுவார்கள் வினைஏதும் இலஆய்
நாசம் அற வேண்டுதலின், நண்ணல் எளிதுஆம், அமரர் விண்ணுலகமே.

Muckle proud of the puissance of his arms, Ravaṇa
durst uproot the Mount Kailās; at this, Siva
utterly quelled the base Asura's valour.
Siva's greatness and nature are beyond one's ken
of comprehension. He who wears the crescent on His
matted crest is entempled in Paṭṭeecchuram.
The karma of those that hail and adore Him will vanish.
Gaining Siva-consciousness, these will flourish 8
athanasically in Siva-loka.

801. தூய மலரானும் நெடியானும் அறியார், அவன் தோற்றம்; நிலையின்
ஏய வகையான் அதனை யார் அது அறிவார்? அணி கொள் மார்பின்
அகலம்
பாய நல நீறுஅது அணிவான், உமைதனோடும் உறை பட்டிசுரமே
மேயவனது ஈர் அடியும் ஏத்த, எளிது ஆகும், நல மேல்உலகமே.

If even Brahma seated on the Lotus and the tall Vishnu
canst not comprehend the stature and the manifold
nature of Siva, who can know of them at all?
His broad chest is adorned with the holy ash. He is
concorporate with Uma and is entempled in Paṭṭeecchuram.
If His urbs is gained and His feet twain are hailed
in devotion deep, ascension as well as abidance in
the Empyrean, is come by with ease. 9

802. தடுக்கினை இடுக்கி--மடவார்கள் இடு பிண்டம்அது உண்டு--
உழல்தரும்
கடுப்பொடி, உடல் கவசர், கத்து மொழி காதல் செய்திடாது, கமழ் சேர்
மடைக் கயல் வயல் கொள் மழபாடிநகர் நீடு பழையாறை அதனுள்,
படைக்கு ஒரு கரத்தன் மிகு பட்டிசுரம் ஏத்த, வினை பற்று அறுதலே.
Toting mats in their arm-pits, the Samaṇas eat
the alms received from women and roam about; these
are consumers of myrobalon; the Buddhists are
shrouded in robes. Listen not to the false dicta of these.
Siva is the God of Maḻapādi, the urbs forming part of
Paḻayāṟai girt with sluices and fields where *kayals*
leap about and gambol.

It is here at the splendorous Paṭṭeecchuram, Siva who
wields the weapon of *malu,* is entempled.
If He is hailed in bhakti, one's karma snaps forthwith. 10

803. மந்தம் மலி சோலை மழபாடிநகர் நீடு பழையாறைஅதனுள்,
பந்தம் உயர் வீடு நல பட்டிசுரம் மேய படர்புன்சடையனை,
அம் தண் மறையோர் இனிது வாழ் புகலி ஞானசம்பந்தன் அணி ஆர்
செந்தமிழ்கள்கொண்டு இனிது செப்ப வல தொண்டர்வினை நிற்பது இலவே.

At the extensive Palayārai is situate Malapādi in
whose gardens Notus wafts. It is in the goodly
Paṭṭeecchuram,Siva, the conferrer of bondage
as well as supreme deliverance, is entempled.
On Him of spreading and ruddy matted hair,
Gnānasambandhan of Pukali where flourish
the serene Vedic Brahmins, has sung these
hymns cast in classical Tamil.
The karma of the servitors, who are the dulcet singers
of these psalms, will cease altogether. 11

74. திருத் தேவூர்

திருவிராகம்

சாதாரி

804. காடு பயில் வீடு, முடைஓடு கலன், மூடும் உடைஆடை புலிதோல்
தேடு பலி ஊன் அது உடை வேடம் மிகு வேதியர் திருந்து பதிதான்--
நாடகம்அது ஆட ம(ஞ்)ஞை, பாட அரி, கோடல் கைம் மறிப்ப, நலம் ஆர்
சேடு மிகு பேடைஅனம் ஊடி மகிழ் மாடம் மிடை தேவூர் அதுவே.

74. TIRUTTHĒVŪR

Tiruvirākam

Sāthāri

Siva abides in the crematory; a malodorous skull is
His begging-bowl; He is clad in tiger-skin; His food
is the alms He secures by begging. Such, indeed is He.
He is entempled in Thēvūr where dwell the practitioners
of the Vedas. In its gardens, peacocks dance;
speckled bees bombilate; *kāntaḷ* flowers with
their hand-like leaves clap and keep time.
Eke thrive here bashful women whose gait is like unto
the gait of pen's; these women dwell in mansions, indulge
in bouderie and then rejoice in conjugal felicity. 1

805. கோள் அரவு, கொன்றை, நகுவெண்தலை, எருக்கு, வனி, கொக்கு இறகொடும்,
வாள் அரவு, தண்சலமகள், குலவு செஞ்சடை வரத்து இறைவன் ஊர்--
வேன் அரவு கொங்கை இள மங்கையர்கள் குங்குமம் விரைக்கும் மணம் ஆர்
தேள் அரவு தென்றல் தெரு எங்கும் நிறைவு ஒன்றி வரு தேவூர் அதுவே.

Siva who wears on His crest—matted and hirsutorufous—,
the murderous and bright snakes, the flowers of *konṟai*
and *erukku*, the leaves of *vaṉṉi*, the feather of
the Heron and the cool Ganga, is entempled in Thēvūr.
Here wafts the Notus that stings like a scorpion, the women
of buxom breasts, parted from their husbands;

the self-same Notus carries the perfume of the saffron-
coated breasts which enchant even Manmata,
and pervades everywhere.

2

806. பண் தடவு சொல்லின் மலைவல்லி உமை பங்கன், எமை ஆளும் இறைவன்,
எண் தடவு வானவர் இறைஞ்சு கழலோன். இனிது இருந்த இடம்ஆம்--
விண் தடவு வார் பொழில் உகுத்த நறவுஆடி, மலர் சூடி, விரை ஆர்
செண் தடவும் மாளிகை செறிந்து, திரு ஒன்றி வளர் தேவூர் அதுவே.

Siva is concorporate with Uma—the Daughter of Himavant—,
whose words are dulcet like *paṇ*. The feet of Him that
governs us, are hailed and adored by countless Devas.
He is entempled in the divine Thēvūr of accrescent glory,
dight with the lofty sky-vaulting mansions and also
sky-high gardens which shed fragrant and melliferous
flowers with which women dwelling here, deck themselves. 3

807. மாசு இல் மனம் நேசர் தமது ஆசை வளர் சூலதரன், மேலை இமையோர்-
ஈசன், மறைஓதி, எரிஆடி, மிகு பாசுபதன், மேவு பதிதான்--
வாசமலர் கோது குயில் வாசகமும், மாதர் அவர் பூவை மொழியும்,
தேச ஒலி, வீணையொடு கீதம்அது, வீதி நிறை தேவூர்அதுவே.

Siva causes the *bhakti* of those of unflawed *manam*,
to thrive accrescently; He wields the weapon of spear.
He is the God of the ethereal Devas; He is the Author as well as
the chanter of the Vedas; He dances holding fire.
His is the ever-triumphant *Pāsupata Astra*.

He is entempled in Thēvūr dight with gardens where
koels, with their beaks, explore fragrant flowers and coo.
In its streets dwell women who articulate words which
are sweet like the babbling of the starling. This sound
and the sound of devotees celebrating Siva, and also
the sound of the strummed *Vinas* together with
the sound of songs get orchestrated in this urbs. 4

808. கானம் உறு மான்மறியன்; ஆனைஉரிபோர்வை; கனல்ஆடல் புரிவோன்;
ஏனஎயிறு, ஆமை, இள நாகம், வளர் மார்பின் இமையோர் தலைவன்;
ஊர்--
வான் அணவு சூதம், இள வாழை, மகிழ், மாதவி, பலா, நிலவி, வார்
தேன் அமுது உண்டு, வரிவண்டு மருள் பாடி வரு தேவூர் அதுவே.

Siva holds a sylvan fawn in His hand; He is mantled
in the peeled-off skin of the Tusker. He dances holding fire.
He is adorned on His chest with the Hog's tusk, the carapace
of the Turtle and a young adder. He is the God of gods.
He is entempled in Thēvūr where flourish sky-vaulting
mango trees, banana trees, *makil* trees, *mātavi* lianas,
jack-fruit trees and the like. Here are speckled chafers
which inebriate with melis, hum in delight. 5

809. ஆறினொடு கீறுமதி ஏறு சடை, ஏறன்; அடையார் நகர்கள்தான்,
சீறுமவை, வேறுபட நீறுசெய்த நீறன்; நமை ஆளும் அரன்; ஊர்--
வீறு மலர் ஊறும் மது ஏறி, வளர்ஆய விளைகின்ற கழனிச்
சேறு படு செங்கயல் விளிப்ப, இள வாளை வரு தேவூர்அதுவே.

Siva is adorned with the Ganga and the crescent.
He, the Rider of the Bull, burnt and reduced to cinders
the triad of the walled-citadels of the Asuras,
who in wrath, caused suffering to the Devas.
He is bedaubed with the holy ash. He redeems us.
He is entempled in Thēvūr where the oozing honey
from the splendorous flowers seeps into
the fields and makes them miry
where the *ruddy kayals* beckon *vālais* to play with them. 6

810. கன்றி எழ வென்றி நிகழ் துன்று புரம், அன்று, அவிய, நின்று நகைசெய்
என் தனது சென்றுநிலை; எந்தைதன தந்தை; அமர் இன்ப நகர் தான்--
முன்றில்மிசை நின்ற பலவின் கனிகள் நின்று, கறவைக்குருளைகள்
சென்று, இசைய நின்று துளி, ஒன்ற விளையாடி, வளர் தேவூர்அதுவே.

In wrath, the Asuras rose up and successfully ruined the world.
Siva baked their triad of walled-citadels in fire by His
mere smile. He is the Palladium sought and reached by me.
He is the Father of my forefathers too.
He is willingly entempled in the sweet Thēvūr where
the calves of milch-cows duly approach and feast
on the drupels of the jack-fruit growing near
the foreyard and, in delight, leap and gambol. 7

811. ஓதம் மலிகின்ற தென்இலங்கை அரையன் மலி புயங்கள் நெரிய,
பாதம் மலிகின்ற விரல்ஒன்றினில் அடர்த்த பரமன் தனது இடம்--
போதம் மலிகின்ற மடவார்கள் நடம்ஆடலொடு பொங்கும் முரவம்,
சேதம் மலிகின்ற கரம் வென்றி தொழிலாளர் புரி தேவூர் அதுவே.

Siva, of yore, pressed His toe on His Mount and crushed
and cracked the mighty arms of the sovereign of the southern
Lanka girt with the billowy seas.
Siva is entempled in Tēvūr where the artful women dance
and drums resound.
Here with miry hands, the husbandmen foster agriculture
with great success and thrive well. 8

812. வண்ணம் முகில் அன்ன எழில் அண்ணலொடு, சுண்ணம் மலி வண்ணம் மலர்மேல்
நண் அவனும, எண் அரிய விண்ணவர்கள் கண்ணவன் நலம் கொள் பதிதான்--
வண்ண வன நுண்இடையின், எண் அரிய, அன்னநடை, இன் மொழியினார்
திண்ண வண மாளிகை செறிந்த இசை யாழ் மருவு தேவூர்அதுவே.

The nimbus-hued and handsome Vishnu, Brahma
seated on the pollen-laden Lotus and Devas
without number, wondered how they could know of Siva at all.
Thus, Siva soared up and up as the transcendental Flame.
He is entempled in Thēvūr where dwell the beautifully-
complexioned women whose waists are slender, whose gait
is like unto the pen's and who speak sweet words aplenty
and who play on the *yā_l_* in their well-built mansions. 9

813. பொச்சம் அமர் பிச்சை பயில் அச் சமணும், எச்சம் அறு போதியரும், ஆம்
மொச்சை பயில் இச்சை கடி பிச்சன், மிகு நச்சுஅரவன், மொச்ச நகர்தான்--
மைச் சில்முகில் வைச்ச பொழில் . . . .

The Samaṇas assume the form of pseudo-tapaswis
and go abegging; the Buddhists are infamous.
Siva totally ignores the utterances made by these in penchant.
He is hailed as the frenzied One whose ornament is
a venomous snake. He is entempled in Thēvūr where
His devotees gather; in its gardens rest the black clouds. 10
[The original Tamil verse is incomplete.]

814. துங்கம் மிகு பொங்கு அரவு தங்கு சடை நங்கள் இறை--துன்று குழல் ஆர்
செங்கயல்கண் மங்கை உமைநங்கை ஒருபங்கன்--அமர் தேவூர் அதன் மேல்,
பைங்கமலம் அங்கு அணி கொள் திண் புகலி ஞானசம்பந்தன், உரைசெய்
சங்கம் மலி செந்தமிழ்கள் பத்தும்இவை வல்லவர்கள், சங்கை இலரே.

Siva sports on His crest—ruddy and hirsutorufous—,
the snake that grows long and displays a blazing hood.
He is our God who is concorporate with Uma of dense coiffure
and Her eyes are like uto the ruddy *kayal*.
Adoring His Thēvūr, Gnānasambandhan of Pukali which
is impregnable, and dight with comely lotus-pools,
has sung these hymns in classical Tamil.
They that are valiant in these are ever free from doubts. 11

75. திருச் சண்பைநகர்

திருவிராகம்

சாதாரி

815. "எம் தமது சிந்தை பிரியாத பெருமான்!" என இறைஞ்சி இமையோர்
வந்து துதிசெய்ய, வளர் தூபமொடு தீபம் மலி வாய்மைஅதனால்,
அந்தி அமர் சந்தி பலஅர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்,
சந்தம் மலி குந்தளம் நல் மாதினொடு, மேவு பதி--சண்பைநகரே.

75. TIRUCCHAṆBAINAKAR

Tiruvirākam

Sāthāri

Hailing the handsome Siva as the God that parts not
from their *chinta*-s, the Devas during the junctions
of the day, duly perform *Puja* to Him, waving holy
light and burning incense in His presence,
chanting mantras, ever true.
Lo, He who is concorporate with Uma whose coffiure
breathes fragrance, is *entempled* in the city of Saṇbai. 1

816. அங்கம் விரி துத்தி அரவு, ஆமை, விரவு ஆரம் அமர் மார்பில் அழகன்,
பங்கயமுகத்து அரிவையோடு பிரியாது, பயில்கின்ற பதிதான்--
பொங்கு பரவைத் திரை கொணர்ந்து பவளத்திரள் பொலிந்த அயலே,
சங்கு புரி இப்பி தரளத்திரள் பிறங்கு ஒளி கொள் சண்பைநகரே.

The handsome Siva willingly wears on His chest
the garland of speckled snakes and the carapace of the Turtle.
He is entempled in the Saṇbai city, never parting
from Uma whose visage is like the lotus flower.

Here the raging billows of the sea shore up heaps
of coral beside which the right-whorled
chanks and pearls aplenty yielded by shells
coruscate with extraordinary brilliance.
2

817. போழும் மதி, தாழும் நதி, பொங்கு அரவு, தங்கு புரிபுன்சடையினன்,
யாழ்இன்மொழி, மாழைவிழி, ஏழைஇளமாதினொடு இருந்த பதிதான்--
வாழை, வளர் ஞாழல், மகிழ், மன்னு புனை, துன்னு பொழில் மாடு,
மடல் ஆர்
தாழை முகிழ் வேழம் மிகு தந்தம் என, உந்து தகு சண்பைநகரே.

Siva is adorned with a slice of the moon, the down-
flowing Ganga and the raging serpants on His
ruddy and twisted strands of matted hair.
He is concorporate with His Consort whose words are
tuneful like the *yāl̲* and whose eyes are
like the two symmetrically slit slices of a tender mango.
He is entempled in the Saṇbai city in whose gardens
thick with the trees of bananas, *gnāl̲al*, *makil̲*
and *punnai* by the side of which abound
the spatheceous fragrant-screw-pines whose
buds are like unto the broken tusks of
a tusker and are therefore not worn by women.
3

818. கொட்ட முழவு, இட்ட அடி வட்டணைகள் கட்ட, நடம்ஆடி, குலவும்
பட்டம் நுதல், கட்டு மலர் மட்டு மலி, பாவையொடு மேவு பதிதான்--
வட்டமதி தட்டு பொழிலுள்,-தமது வாய்மை வழுவாத மொழியார்
சட்ட கலைஎட்டுமருவுஎட்டும் வளர் தத்தை பயில் சண்பைநகரே.

To the orchestrated sound of *mul̲avu* and other instruments, Siva
dances in circles. He wears a band on His forehead.
He is entempled with His doll-like Consort whose garlands of
flowers breathe incense, in the Saṇbai city.
Here, the words of the ever-truthful ones well versed in
the sixty four arts, are iterated by the parakeets. 4

819. பண் அங்கு எழுவு பாடலினொடு ஆடல் பிரியாத பரமேட்டி, பகவன்,
அணங்கு எழுவு பாகம் உடை ஆகம் உடை அன்பர்பெருமானது இடம்
ஆம்--
இணங்கு எழுவி ஆடு கொடி மாடம் மதில், நீடு விரை ஆர் புறவுஎலாம்,
தணம் கெழுவி ஏடு அலர் கொள் தாமரையில் அன்னம் வளர் சண்பைநகரே.

Siva, the supreme God, is ever hailed in hymns cast
in *pann* and in dance. He is, indeed the Deity who shares
in His half, His Woman. He dispenses grace.
He is entempled in the Saṇbai city dight with mansions
from whose well planted poles, streamers waft.
Eke is this urbs girt with walls as well as cool pools
teeming full with petalled lotuses where cobs and pens
are ensconced in delight great. 5

820. பாலன் உயிர்மேல் அணவு காலன் உயிர் பாற உதைசெய்த பரமன்,
ஆலும் மயில் போல் இயலி ஆயிழைதனோடும், அமர்வு எய்தும் இடம்
ஆம்--
ஏலம் மலி சோலை இனவண்டு மலர் கெண்டி, நறவு உண்டு இசைசெய,
சாலி வயல் கோலம் மலி சேல் உகள, நீலம் வளர் சண்பைநகரே.

Our God Siva kicked Yama to death who strode forth
to snatch the life of the lad Mārkandēya.
He is concorporate with Uma whose mien, is like unto
the peafowl's and who wears choice jewels.
He is entempled in the Saṇbai city dight with gardens
where grow cardamom plants and the like; here
bees kindle flowers, sip their nectar,
get inebriated and bombilate in delight great.
In the paddy fields of this polis thrive blue lilies
over which *cēls* leap and sport. 6

821. விண் பொய் அதனால் மழை விழாதொழியினும், விளைவுதான் மிக
உடை
மண் பொய் அதனால் வளம் இலாதொழியினும், தமது வண்மை வழுவார்,
உண்ப கரவார், உலகின் ஊழிபலதோறும் நிலைஆன பதிதான்--
சண்பைநகர்; ஈசன் அடி தாழும் அடியார் தமது தன்மை அதுவே.

Even if rains fail and the much-yielding fields
turn dry forfeiting uberty, there are munificent
patrons that feed the world, without fail.
Such altruistic people thrive in the Saṇbai city
which thrives from aeon to aeon, entempling Siva.
The adorers of this shrine are blessed with such felicity. 7

822. வரைக்குலமகட்கு ஒரு மறுக்கம் வருவித்த, மதி இல், வலி உடை
அரக்கனது உரக் கரசிரத்து உற அடர்த்து, அருள்புரிந்த அழகன்
இருக்கைஅது--அருக்கன் முதலான இமையோர் குழுமி ஏழ் விழவினில்,
தருக்குலம் நெருக்கும் மலி தண்பொழில்கள் கொண்டல் அன சண்பை நகரே.

Siva crushed and cracked beneath His Mount the bosom,
hands and heads of the addle-brained but puissant
Ravaṇa who put to fright the Daughter of Himavant,
by his daring uprooting of the Mount Kailās.
Then, when he rued, He blessed him.
Siva, the handsome, is entempled in the Saṇbai city
where during the seventh day festival, Sūrya
and other Devas hail and adore Him here.
This urbs is dight with cool and uberous gardens which
brush the clouds that sail over the ethereal Karpaka garden. 8

823. நீலவரை போல நிகழ் கேழல்உரு, நீள் பறவை நேர் உருவம், ஆம்
மாலும் மலரானும், அறியாமை வளர் தீஉருவம் ஆன வரதன்,
சேலும் இன வேலும் அன கண்ணியொடு நண்ணு பதி--சூழ் புறவுஎலாம்
சாலி மலி, சோலை குயில்புள்ளினொடு கிள்ளை பயில், சண்பைநகரே.

Vishnu assuming the form of a hog huge as the blue
mountain and Brahma the form of a great swan,
went in quest of Siva who soared up and up
as the Flame, unbeholdable by them.
He, the boon-giver, is entempled in the Saṇbai city,
concorporate with Uma whose eyes are like unto
the *cēl* and the spear.
In this urbs, abound paddy crops; its gardens are
the habitat of koels and other birds as also parakeets. 9

824. போதியர்கள், பிண்டியர்கள், போது வழுவாத வகை உண்டு, பலபொய்
ஓதி, அவர் கொண்டு செய்வது ஒன்று இலை; நன்றுஅது உணர்வீர்! உரைமினோ--
ஆதி, எமை ஆள் உடைய அரிவையொடு பிரிவுஇலி, அமர்ந்த பதிதான்,
சாதிமணி தெண்திரை கொணர்ந்து வயல் புக எறிகொள் சண்பைநகரே!

Buddhists adore the *bodhi* tree and the Samaṇas
the asoka tree. These consume punctually their food
during the hours ordained; these but propagate
false dogmas and do nothing good.
Ye devotees, be assured of their futility and do proclaim
thus: "Siva, the Primal God who rules us, is
inseparably concorporate with His Consort; it is
in the Saṇbai city, He is entempled. The lucid waves
of the sea carry to the fields here situate, the gems
of the purest ray serene."
It is thus He is to be hailed and adored.

825. வாரின் மலி கொங்கை உமைநங்கையொடு சங்கரன் மகிழ்ந்து அமரும் ஊர்,

சாரின் முரல் தெண்கடல் விசும்பு உற முழங்கு ஒலி கொள் சண்பை நகர்மேல்,

பாரின் மலிகின்ற புகழ் நின்ற தமிழ் ஞானசம்பந்தன், உரைசெய்
சீரின் மலி செந்தமிழ்கள் செப்புமவர், சேர்வர், சிவலோக நெறியே.

Concorporate with Uma of buxom breasts covered by
a band, Siva happily abides at the Saṇbai city,
whence soars up like the roar of the sea and the festive din
that reach the ethereal world.
On its God, Tami̲l Gnānasambandhan, the one whose
renown is ubiquitous, has sung these ten hymns,
in excellent and classical Tami̲l. They that duly
recite these psalms will gain the way to Siva-loka. 11

76. திரு வேதவனம்

திருவிராகம் சாதாரி

826. கல் பொலி சுரத்தின் எரிகானின்இடை மாநடம்அது ஆடி, மடவார்
இல் பலி கொளப் புகுதும் எநதைபெருமானது இடம் என்பர்-- புலிமேல்
மல் பொலி கலிக் கடல் மலைக்குவடு எனத் திரை கொழித்த மணியை
வில் பொலி நுதல், கொடிஇடை, கணிகைமார் கவரும் வேதவனமே.

76. TIRUVĒDAVA̲NAM

Tiruvirākam Sāthāri

Siva dances in the crematory which is hot like the desert
abounding in pebbles; He, our Sire, begs alms in houses.
He is entempled in Vēdava̲nam to whose shore, the raging
billows which rise up like the peaks of mountain,
dash gems that are gathered by Rudra Ganikas whose
foreheads are bow-like and waists are liana-like. 1

827. பண்டு இரை பயப்புணரியில் கனகமால்வரையை நட்டு, அரவினைக்
கொண்டு கயிறின் கடைய, வந்த விடம் உண்ட குழகன்தன் இடம்ஆம்-
வண்டு இரை நிழல் பொழிலின் மாதவியின்மீது அணவு தென்றல் வெறி ஆர்
வெண்திரைகள் செம்பவளம் உந்து கடல் வந்த மொழி வேதவனமே.

Of yore, when with the auric mountain as the churning
stick whose string was the snake Vāsuki, the milky
main of resounding waves, was churned, uprose
the Halāhala venom which the ever-young Siva
quaffed, as though it were ambrosia.
He is entempled in Vēdavaṉam dight with the tenebrous
gardens where bees hum and Notus wafts fragrantly.
Unto the shore of this urbs, the white waves push amain
the crimson coral aplenty. 2

828. கார் இயல் மெல்ஓதி நதிமாதை முடி வார்சடையில் வைத்து, மலையார்-
நாரி ஒருபால் மகிழும் நம்பர் உறைவு என்பர்--நெடுமாடம் மறுகில்
தேர் இயல் விழாவின் ஒலி திண் பணிலம், ஒண் படகம், நாளும் இசையால்,
வேரி மலி வார்குழல் நல் மாதர் இசை பாடல், ஒலி வேதவனமே.

Siva bears on His long matted crest Ganga whose
coiffure is nimbus-like; He is concorporate, in joy,
with the Daughter of Himavant.
He is entempled in Vēdavaṉam where in its streets
chariots ply. Here are the lofty mansions where the sound
of festivities in the urbs and the sound of the drummed
patakams quotidian abound.
The women, here, of perfumed and dangling hair sweetly
sing accompanied by the musical instruments. 3

829. நீறு திருமேனியின் மிசைத்து ஒளி பெறத் தடவி, வந்து, இடபமே
ஏறி, உலகங்கள் தொறும் பிச்சை நுகர் இச்சையர் இருந்த பதிஆம்--
ஊறு பொருள் இன்தமிழ் இயல் கிளவி தேரும் மடமாதர்உடன்ஆர்
வேறு திசை ஆடவர்கள் கூற, இசை தேரும் எழில் வேதவனமே.

Siva is becomingly bedaubed with the bright holy ash.
Riding His Bull, He willingly begs alms in all places.
He is entempled in the famous and beautiful Vēdavanam
where bashful damsels, with well-chosen vocables
of the classical Tamil, articulate their speech.
Here abound merchants speaking in different tongues. 4

830. கத்திரிகை, துத்திரி, கறங்கு துடி, தக்கையொடு, இடக்கை, படகம்,
எத்தனை உலப்பு இல் கருவித்திரள் அலம்ப, இமையோர்கள் பரச,
ஒத்து அற மிதித்து, நடம்இட்ட ஒருவர்க்கு இடம்அது என்பர்--உலகில்
மெய்த் தகைய பத்தரொடு சித்தர்கள் மிடைந்து உகளும் வேதவனமே.

Siva dances defty moving His steps, in harmony with the musical
notes of *Katthirikai, tutthiri,* resounding *udukkai,*
takkai, idakkai and patakam, adored by the Devas.
He is entempled in Vēdavanam where foregather the true
bhaktas and the siddhas from all the directions
to hail and adore Him in delight great. 5

831. மாலை மதி, வாள் அரவு, கொன்றைமலர் துன்று சடை நின்று சுழல,
காலையில் எழுந்த கதிர் தாரகை மடங்க, அனல்ஆடும் அரன் ஊர்--
சோலையின் மரங்கள் தொறும் மிண்டி, இனவண்டு, மது உண்டு இசைசெய;
வேலை ஒலிசங்கு, திரை, வங்க சுறவம், கொணரும் வேதவனமே.

Siva who wears on His dense matted strands of hair,
the crepuscular crescent and the bright serpent
and the Konṟai flowers, so dances that His dangling
matted hair swirls and swirls.
The brilliance of His body who dances in the fire
causes pallescent the twinkling stars and the rays
of the pre-dawn sun.
Siva who holds the fire in His hand, is entempled in
Vēdavaṉam where in its gardens bees suck melis from
all the flowers of the trees and loud bombilate.
Here the waves of the main shore up the resounding
chanks and the bark-breaking sharks. 6

832. வஞ்சக மனத்து அவுணர் வல்அரணம் அன்று அவிய வார் சிலை
வளைத்து,
அஞ்சு அகம் அவித்த அமரர்க்கு அமரன், ஆதிபெருமானது இடம்ஆம்—
கிஞ்சுகஇதழ்க்கனிகள் ஊறிய செவ்வாயவர்கள் பாடல் பயில,
விஞ்சு அக இயக்கர் முனிவக்கணம் நிறைந்து மிடை வேதவனமே.

Of yore, Siva bent His well-crafted bow and devastated
the triad of the deceptious Asuras' walled-citadels.
He, the pulchritudinous God of the cosmos, is the God of gods.
He, the sole Primal God, is entempled in Vēdavaṉam
where dwell the damsels whose ruddy lips are *kinjuka*-like,
and who hymn His praise. In His delubrum
throng the wondrously splendorous *Yakshas* 7
and the *Siddhas* to adore Him duly.

833. முடித் தலைகள்பத்து உடை முருட்டு உரு அரக்கனை நெருக்கி விரலால்,
அடித்தலம் முன் வைத்து, அலமர, கருணை வைத்தவன் இடம்--பலதுயர்
கெடுத்தலை நினைத்து, அறம் இயற்றுதல் கிளர்ந்து, புலவாணர் வறுமை
விடுத்தலை மதித்து, நீதி நல்குமவர் மல்கு பதிவே தவனமே.

Of yore, Siva pressed with His toe the Mount Kailās
and cracked the ten crowned heads of the obdurate
Asura beneath the Mount. Then when he rued, He blessed him.
He is entempled in Vēdavan̲am where thrive the practitioners
of *dharma* to annul the many types of troubles,
and who do away with the indigence of the bards
by their munificent gifts. 8

834. வாசமலர் மேவி உறைவானும் நெடுமாலும் அறியாத, நெறியைக்
கூசுதல்செயாத அமண் ஆதரொடு தேரர் குறுகாத, அரன் ஊர்--
காசு, மணி, வார் கனகம், நீடுகடல் ஓடு திரை வார் துவலைமேல்
வீசு வலைவாணர் அவை வாரி, விலை பேசும் எழில் வேதவணமே.

Brahma ensconced on the Lotus and the tall Vishnu
could not comprehend Him. The Samaṇas and the Buddhists
that shamelessly dispraise Siva, live futilely and gain Him not.
He is entempled in Vēdavan̲am which is beautiful to behold,
where the piscators cast their broad nets on
the waves of the main, catch the finny drove,
bring them ashore and vend them. 9

835. The Tamil original is not traceable. 10

836. மந்த முரவம் கடல் வளம் கெழுவு காழிபதி மன்னு கவுணி,
வெந்தபொடி-நீறு அணியும் வேதவனம் மேவு சிவன் இன்அருளினால்,
சந்தம்இவை தண்தமிழின் இன்இசை எனப் பரவு பாடல் உலகில்,
பந்தன் உரை கொண்டு மொழிவார்கள் பயில்வார்கள், உயர் வான் உலகமே.

Gnānasambandhan of Kāḻi where is heard mildly
the noise of the sea, is of the *Kaundinya gotra*.
By the sweet grace of the God of Vēdavaṉam who is
bedaubed with the baked ash, he has sung these hymns, in *chhandas*.
They that duly hail these psalms cast in cool Tamiḻ music,
will gain ascension to the lofty Siva-loka. 11

77. திரு மாணிகுழி

திருவிராகம்

சாதாரி

837. பொன் இயல் பொருப்புஅரையன்மங்கை ஒருபங்கர், புனல் தங்கு சடைமேல்
வன்னியொடு மத்தமலர் வைத்த விறல் வித்தகர், மகிழ்ந்து உறைவு இடம்--
கன்னிஇளவாளை குதிகொள்ள, இள வள்ளை படர் அள்ளல் வயல்வாய்
மன்னி இள மேதிகள் படிந்து, மனை சேர் உதவிமாணிகுழியே.

77. TIRUMĀṆIKUḺI

Tiruvirākam

Sāthāri

Siva is concorporate with the Daughter of the auric
Himavant; He bears the Ganga, the leaves of *vanni*
and the *ūmattham* flowers on His matted crest.
He is an adroit *Vittaka* par excellence.

He is happily entempled in Māṇikul̲i, well-watered
and uberous; in its miry fields lie immersed young buffaloes
which repair to their mangers having revelled in coolth;
on the ridges of the fields thrive young *vaḷḷai* lianas
onto which *vāḷais* leap. 1

838. சோதி மிகு நீறு அது மெய் பூசி, ஒரு தோல்உடை புனைந்து, தெருவே
மாதர் மனைதோறும் இசை பாடி, வசி பேசும் அரனார் மகிழ்வுஇடம்--
தாது மலி தாமரை மணம் கமழ், வண்டு முரல் தண்பழனம் மிக்கு,
ஓதம் மலி வேலை புடை சூழ் உலகில் நீடு உதவிமாணிகுழியே.

Siva is bedaubed with the white and bright ash; He is
clad in skin; He visits every house, sings and enchants
with sweet words the women (to beg alms from them).
He is happily entempled in Māṇikul̲i where is heard
aloud the roar of the main.
In its pools suaveolence rises from pollen-laden flowers
of lotus, and in its cool pools bees do buzz. 2

839. அம்பு அனைய கண் உமைமடந்தை அவள் அஞ்சி வெருவ, சினம் உடைக்
கம்ப மதயானை உரிசெய்த அரனார் கருதி மேய இடம்ஆம்--
வம்பு மலி சோலை புடை சூழ, மணி மாடம் அது நீடி, அழகு ஆர்
உம்பரவர்கோன் நகரம் என்ன, மிக மன் உதவிமாணிகுழியே.

Hara peeled off the skin of the musty Tusker that strode
forth, causing tremor on earth, and mantled
Himself in it, at which Uma whose eyes are dart-like, stood scared.

His beloved shrine is in Māṇikuḻi girt with
fragrant gardens and dight with gemmy and ever during
mansions like unto those of the beauteous *Indra loka.* 3

840. நித்தம் நியமத் தொழிலன்ஆகி, நெடுமால் குறளன் ஆகி, மிகவும்
சித்தம்அது ஒருக்கி வழிபாடு செய நின்ற சிவலோகன் இடம்ஆம்--
கொத்துஅலர் மலர்ப்பொழிலில் நீடு குலமஞ்ஞை நடம்ஆடல்அது கண்டு,
ஒத்த வரிவண்டுகள் உலாவி, இசை பாடு உதவிமாணிகுழியே.

Vishnu in his form of the dwarfish Brahmachāri that
quotidian performs the ordained rites and rituals,
with single-point concentration, adores in this
shrine the God of Sivaloka. It is, indeed, Māṇikuḻi
dight with gardens where blossoms burgeon in
bunches and where the peacocks of good pedigree, dance
and the striped bees buzz in harmony. 4

841. மாசு இல் மதி சூடு சடைமாமுடியர், வல்அசுரர் தொல்-நகரம் முன்
நாசம்அது செய்து, நல வானவர்களுக்கு அருள்செய் நம்பன் இடம்ஆம்-
வாசம் மலி மென்குழல் மடந்தையர்கள் மாளிகையில் மன்னி, அழகு ஆர்
ஊசல்மிசை ஏறி, இனிதுஆக, இசை பாடு உதவிமாணிகுழியே.

Of yore, Siva who wears on His great matted crest
the flawless crescent, devastated the hoary walled-citadels
of the Asuras, and thus blessed the Devas.
He, the supremely desirable One, is entempled in Māṇikuḻi
dight with mansions where soft-haired damsels
sit on swings which sway to and fro, sing songs and then
descend to the floor where they enact their dance. 5

842. மந்த மலர் கொண்டு வழிபாடு செயும் மாணி உயிர் வவ்வ மனம்ஆய்
வந்த ஒரு காலன் உயிர் மாள உதைசெய்த மணிகண்டன் இடம்ஆம்--
சந்தினொடு கார் அகில் சுமந்து, தட மா மலர்கள் கொண்டு, கெடிலம்
உந்து புனல் வந்து வயல் பாயும் மணம் ஆர் உதவிமாணிகுழியே.

When Yama strode forth to snatch the life of the lad Mārkandēya—
the adorer of the blue-throated Siva—, Siva kicked Death to death.
He is entempled in the fragrant Māṇikuḻi on the banks
of the Gedilam which carries in its current the sandal-
wood and the black eaglewood and the great flowers;
its water runs through channels and feeds the fields. 6

843. எண் பெரிய வானவர்கள் நின்று துதிசெய்ய, இறையே கருணைஆய்,
உண்பு அரிய நஞ்சு அதனை உண்டு, உலகம் உய்ய அருள் உத்தமன்
இடம்--
பண் பயிலும் வண்டுபல கெண்டி, மது உண்டு, நிறை பைம்பொழிலின்வாய்,
ஒண் பலவின் இன்கனி சொரிந்து, மணம் நாறு உதவிமாணிகுழியே.

When the Devas in all their strength hailed and adored
Him, the infinitely merciful Siva quaffed
the mortal venom and saved the world.
The supremely lofty God is entempled in Māṇikuḻi
girt with green gardens where bees kindle blossoms
galore and suck nectar. Here seeps out melis
from the drupels of the jack-fruit trees. 7

844. எண்ணம்அது இன்றி, எழில் ஆர் கைலைமாமலை எடுத்த திறல் ஆர்
திண்ணிய அரக்கனை நெரித்து, அருள் புரிந்த சிவலோகன் இடம்ஆம்--
பண் அமரும் மென்மொழியினார், பணைமுலைப் பவளவாய் அழகுஅது ஆர்
ஒண்நுதல் மடந்தையர், குடைந்து புனல்ஆடு உதவிமாணிகுழியே.

Of yore, Siva cracked the mighty and crafty Ravaṇa,
who blind to the greatness of Siva, durst uproot His
great and beautiful Mount; then when he rued, He blessed him.
The God of Sivaloka is entempled in Māṇikuḻi in
whose pool the women whose words are tuneful like
paṇ, whose breasts are buxom, whose lips are
coralline and whose foreheads are bright,
plunge again and again in water and thus bathe. 8

845. நேடும் அயனோடு திருமாலும் உணரா வகை நிமிர்ந்து, முடிமேல்
ஏடு உலவு திங்கள், மதமத்தம், இதழிச் சடை எம் ஈசன் இடம்ஆம்--
மாடு உலவு மல்லிகை, குருந்து, கொடிமாதவி, செருந்தி, குரவின்
ஊடு உலவு புன்னை, விரி தாது மலி சேர் உதவிமாணிகுழியே.

When Brahma and Vishnu went in quest of Him, Siva
soared up and up as the unbeholdable Flame.
On His matted crest He sports the crescent white like
the lotus-petal and the flowers of *ūmattham* and *koṉrai.*
Our God is entempled in Māṇikuḻi abounding in
the fragrant flowers of pollen-laden *mallikai, kuruntu,* 9
mātavi, serunti, kuravam and *puṉṉai.*

846. மொட்டை அமண்ஆதர், முது தேரர்,-- மதிஇ(ல்)லிகள்--முயன்றன படும்
முட்டைகள் மொழிந்த மொழிகொண்டு அருள்செய்யாத முதல்வன் தன்
இடம் ஆம்--
மட்டை மலி தாழைஇளநீர் முதிய வாழையில் விழுந்த அதரில்,
ஒட்ட மலி பூசம்திரை தாறு உதிர, ஏறு உதவிமாணிகுழியே.

The bald-headed Samaṇas and the nescient Buddhists affirm that deeds
wrought with effort, yield results, all by themselves
and that no God is required for causing their fruition.
Like empty eggs, these are addle-brained; these
are not at all graced by Siva.
Siva is entempled in Māṇikuḻi, where from the spathaceous
coconut trees fall coconuts full of water, on
the banana and areca-nut trees the bunchy fruits
of which get scattered. 10

847. உந்தி வரு தண்கெடிலம் ஓடு புனல் சூழ் உதவிமாணிகுழிமேல்,
அந்தி மதி சூடிய எம்மானை அடி சேரும் அணி காழி நகரான்--
சந்தம் நிறை தண்தமிழ் தெரிந்து உணரும் ஞானசம்பந்தனது--சொல்
முந்தி இசைசெய்து மொழிவார்கள் உடையார்கள், நெடுவானநிலனே.

On the God of Māṇikuḻi on the banks of the Gedilam
which flows rolling in its current things aplenty,
Gnānasambandhan of Kāḻi, adoring its God that sports
on His crest the crepuscular crescent,
has sung these hymns in serene Tamiḻ and in *chhandas*.

They that, inter alia, prefer to recite, duly and musically,
these psalms and do perform so, are bound
to gain the extensive Empyrean. 11

78. திரு வேதிகுடி

திருவிராகம்

சாதாரி

848. நீறு, வரி ஆடுஅரவொடு, ஆமை, மனவு, என்பு, நிரை பூண்பர்; இடபம்
ஏறுவர்; யாவரும் இறைஞ்சு கழல் ஆதியர்; இருந்த இடம்ஆம்--
தாறு விரி பூகம் மலி வாழை விரை நாற, இணைவாளை மடுவில்
வேறு பிரியாது விளையாட, வளம் ஆரும் வயல் வேதிகுடியே.

78. TIRUVĒDIKUDI

Tiruvirākam

Sāthāri

Siva wears the holy ash, the striped serpent, the carapace,
the rudrāksha beads and a garland of bones.
He rides the Bull. He is the Primal God adored by all.
He is entempled in Vēdikudi rich in fields and dight
with gardens teeming in spathaceous arecanut trees
and banana trees of ripe fruitage whence wafts
a gentle gale. In its pools, *vāḷais*, male 1
and female, ever inseparable, leap and sport.

849. சொல் பிரிவு இலாத மறை பாடி நடம்ஆடுவர், தொல் ஆனைஉரிவை
மல் புரி புயத்து இனிது மேவுவர், எந்நாளும் வளர் வானவர் தொழத்
துய்ப்பு அரிய நஞ்சம் அமுதுஆக முன் அயின்றவர், இயன்ற தொகு சீர்
வெற்புஅரையன் மங்கை ஒருபங்கர், நகர் என்பர்--திரு வேதிகுடியே.

Siva sings the Vedas the import of which parts not from
their vocables, and dances.
He peeled off the skin of the well-grown Tusker
and wore it on His shoulders ever triumphant in boxing.
Of yore, He quaffed the mortal venom as though it
were ambrosia, and is therefore hailed daily by Devas.
Concorporate with the Daughter of Himavant whose glory
is multifoliate, He is entempled in Tiruvēdikudi. 2

850. போழும் மதி, பூண் அரவு, கொன்றைமலர், துன்று சடை வென்றி புக மேல்
வாழும் நதி தாழும் அருளாளர்; இருள் ஆர் மிடறர்; மாதர் இமையோர்
சூழும் இரவாளர்; திருமார்பில் விரி நூலர்; வரிதோலர்; உடைமேல்
வேழஉரி போர்வையினர்; மேவு பதி என்பர்--திருவேதிகுடியே.

Siva wears a slice of the moon, a snake and konr̲ais
on His matted crest; He, in mercy, to favour Bagirata,
caused the Ganga flow down to the earth.
His throat is dark as it retains the venom He quaffed.
Devas and Apsarases appeal to Him and are blessed with redressal.
He wears on His beautiful chest covered by the skin
of the Tusker, the sacred threads.
Lo, He is entempled in Tiruvēdikudi. 3

851. காடர், கரி காலர், கனல் கையர், அனல் மெய்யர், உடல் செய்யர்,
செவியில்-
தோடர், தெரி கீளர், சரி கோவணவர், ஆவணவர் தொல்லை நகர்தான்--
பாடல் உடையார்கள் அடியார்கள், மலரோடு புனல் கொண்டு பணிவார்,
வேடம் ஒளிஆன பொடி பூசி, இசை மேவு திரு வேதிகுடியே.

Siva abides in the crematory; He did away with the Tusker
in whose skin He is mantled; He holds fire in His hand.
His ruddy and pure body blazes like flame.
He wears a *todu* in one ear. His loin is covered by a cloth
to which is attached a *keeḷ*. His mount is
the Bull; He is entempled in the hoary Tiruvēdikudi where
thrive devotees who hail Him in hymns, carry water
for His ablutions, do puja with flowers and are
adorned with the bright holy ash—an indicant of the Saiva *Vētam*. 4

852. சொக்கர்; துணை மிக்க எயில் உக்கு அற முனிந்து, தொழும் மூவர் மகிழத்
தக்க அருள் பக்கம் உற வைத்த அரனார்; இனிது தங்கும் நகர்தான்--
கொக்கு அரவம் உற்ற பொழில் வெற்றி நிழல் பற்றி வரிவண்டு இசை குலா,
மிக்கு அமரர் மெச்சி இனிது, அச்சம் இடர் போக நல்கு, வேதிகுடியே.

Siva is enchantingly handsome; when in wrath,
He smote the three, hostile, walled-citadels of the Asuras,
He spared the three who ever adored Him
and keeps them with Him in joy.
He is entempled in Tiruvēdikudi where in its gardens
of mango trees, damsels sport dinsomely;
their complexion excels the hue of the mango buds.
which the speckled bees celebrate in their bombilation.
This shrine rids the dread and the troubles of its adorers 5
and blesses them with weal as well as welfare.

853. செய்ய திருமேனிமிசை வெண்பொடி அணிந்து, கருமான் உரிவை போர்த்து,
“ஐயம் இடும்!” என்று மடமங்கையொடு அகம் திரியும் அண்ணல்
இடம்ஆம்--
வையம் விலை மாறிடினும், ஏறு புகழ் மிக்கு இழிவு இலாத வகையார்,
வெய்ய மொழி தண்புலவருக்கு உரைசெயாதஅவர், வேதிகுடியே.

Siva's ruddy body is bedaubed with the white ash; He is
mantled in the skin of the dark Tusker; He is concorporate
with His Woman. He roams about soliciting alms.
He, the noble God, is entempled in Tiruvēdikudi, where
even when the cost of living rises high owing to famine,
the patrons of great glory and sterling qualities,
speak sweet words and munificently offer gifts
to the bards of true excellence. 6

854. உன்னி இருபோதும் அடி பேணும் அடியார்தம் இடர் ஒல்க அருளி,
துன்னி ஒருநால்வருடன் ஆல்நிழல் இருந்த துணைவன்தன் இடம்ஆம்--
கன்னியரொடு ஆடவர்கள் மா மணம் விரும்பி, அரு மங்கலம் மிக,
மின் இயலும் நுண்இடை நல் மங்கையர் இயற்று பதி வேதிகுடியே.

Siva does away with the troubles of those that adore Him
sincerely during morn and eve. He inculcated dharma,
seated in the shade of the Banyan tree, to the four saints.
He is the support of all the entia.
He is entempled in Vēdikudi where on the great day
auspicious, when virgins—the goodly ones who are
fulgurant-waisted, wed their beloved grooms,
feeling ecstatic to undergo the wedding ceremonies. 7

855. உரக் கரம் நெருப்பு எழ நெருக்கி வரை பற்றிய ஒருத்தன் முடிதோள்
அரக்கனை அடர்த்தவன், இசைக்கு இனிது நல்கி அருள் அங்கணன், இடம்-
முருக்குஇதழ் மடக்கொடிமடந்தையரும் ஆடவரும் மொய்த்த கலவை
விரைக் குழல் மிகக் கமழ, விண் இசை உலாவு திரு வேதிகுடியே.

Of yore, Siva cracked the heads and the shoulders of the Asura
beneath His Mount, who durst uproot it and underwent
fierce pain. Then when he rued and hymned
the Sāma Veda, Siva blessed him.
The Noble God Siva is entempled in Tiruvēdikudi where
damsels whose waists are liana-like and whose lips
are ruddy like the *murukku*, apply sandal paste to their
coiffures with the aid of their mates, as a result of which
their suaveolence pervades the heavens. 8

856. பூவின்மிசை அந்தணனொடு ஆழி பொலி அங்கையனும் நேட, எரிஆய்,
“தேவும் இவர் அல்லர், இனி யாவர்?” என, நின்று திகழ்கின்றவர்இடம்-
பாவலர்கள் ஓசை இயல் கேள்விஅது அறாத கொடையாளர் பயில்வு ஆம்,
மேவு அரிய செல்வம் நெடுமாடம் வளர் வீதி நிகழ் வேதிகுடியே.
When the Brahmin Brahma ensconced on the Lotus
and Vishnu whose beauteous hand wields the procket wheel,
went in quest of Him, Siva soared up and as the humongous
Flame, after which Siva and not any other god,
is hailed as the only true God. He abides at Vēdikudi
dight with storeyed mansions and streets where bards
explicate the dulcet opuses of Eyal Tamil̲ listened to
by the patrons of inexhaustible wealth, well-trained 9
in the art of listening.

857. வஞ்ச(அ)மணர், தேரர்,--மதிகேடர், தம் மனத்து அறிவுஇலாதவர்--
மொழி
தஞ்சம் என என்றும் உணராத அடியார் கருது சைவன் இடம்ஆம்--
அஞ்சுபுலன் வென்று, அறுவகைப்பொருள் தெரிந்து, எழுஇசைக் கிளவியால்,
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி நிகழ்கின்ற திரு வேதிகுடியே.

Siva is ever meditated upon by His devotees who
know, for sure, that the Samaṇas are deceitful
and the Buddhists are of evil intellect and that the dicta
of these offer support none.
He is entempled in Tiruvēdikudi where reside the recipients
of the grace of Grace, who having conquered
the pentad of senses, have come by the mastery of
the sestet of faiths as well as the mastery of the sevenfold
Tamil̲ *isai* and are poised in tranquillity, having
absolutely done away with anger. 10

858. கந்தம் மலி தண்பொழில் நல் மாடம் மிடை காழி வளர் ஞானம் உணர் சம்-
பந்தன் மலி செந்தமிழின் மாலைகொடு, வேதிகுடி ஆதி கழலே
சிந்தைசெய வல்லவர்கள், நல்லவர்கள் என்ன நிகழ்வு எய்தி, இமையோர்
அந்த உலகு எய்தி அரசு ஆளுமதுவே சரதம்; ஆணை நமதே.

Gnānasambandhan of Kāl̲i girt with cool and fragrant
gardens and dight with beautiful mansions,
has sung these hymn-garlands in classical Tamil̲.

Valiant in these, they that contemplate the ankleted
feet of the Primal God Siva entempled in Vēdikudi,
will thrive splendidly and eventually be blessed
to reign in the Deva-loka. Lo, this is our fiat. 11

79. திருக் கோகரணம்

திருவிராகம்

சாதாரி

859. என்றும் அரியான், அயலவர்க்கு; இயல் இசைப்பொருள்கள் ஆகி எனது உள்-
நன்றும் ஒளியான்; ஒளி சிறந்த பொன் முடிக் கடவுள்; நண்ணும்
இடம்ஆம்--
ஒன்றிய மனத்து அடியர் கூடி, இமையோர் பரவும் நீடு அரவம் ஆர்
குன்றுகள் நெருங்கி, விரி தண்டலை மிடைந்து, வளர் கோகரணமே.

79. TIRUKKŌKARAṆAM

Tiruvirākam

Sāthāri

Siva is inaccessible to them that are not His devotees.
He abides in me as *Tamiḻ Iyal* and *Tamiḻ Isai*
and shines inly with great and radiant light.
His matted crest dazzles like gold; He is entempled
in the ever-crescent Kōkaraṇam dight with hills
and gardens where devotees with single-pointed concentration 1
adore Him companied with the Devas.

860. பேதைமடமங்கை ஒருபங்கு இடம் மிகுத்து, இடபம் ஏறி, அமரர்
வாதைபட வண்கடல் எழுந்த விடம் உண்ட சிவன் வாழும் இடம்ஆம்--
மாதரொடும் ஆடவர்கள் வந்து அடி இறைஞ்சி, நிறை மா மலர்கள் தூய்,
கோதை வரிவண்டு இசை கொள் கீதம் முரல்கின்ற வளர் கோகரணமே.

Siva is concorporate with His young and bashful Consort;
He rides the Bull; He is the God who quaffed the oceanic venom
and saved the Devas, plunged in misery deep.
He is entempled in the exceedingly glorious and accrescent
Kōkaraṇam, where women and men foregather, strew
great flowers and adore Siva's feet twain.
Speckled bees swarm His garlands and hum in delight. 2

861. முறைத் திறம் உறப் பொருள் தெரிந்து முனிவர்க்கு அருளி, ஆலநிழல்வாய்,
மறைத் திறம் அறத்தொகுதி கண்டு, சமயங்களை வகுத்தவன் இடம்--
துறைத்துறை மிகுத்து அருவி தூ மலர் சுமந்து, வரை உந்தி, மதகைக்
குறைத்து, அறையிடக் கரி புரிந்து, இடறு சாரல் மலி கோகரணமே.

Seated in the shade of the Banyan tree, Siva duly explicated
to the munis the quartet of the goals of life.
He is the Author of the Vedas as well as the sestet of
the Vedic faiths that are poised in dharma.
He is entempled in Kōkaraṇam dight with slopes where
elephants roam about trumpeting. Here descends
in the fords the water of the cataracts laden with
flowers, breaking in the process the sluices. 3

862. இலைத் தலை மிகுந்த படை எண்கரம் விளங்க, எரி வீசி, முடிமேல்
அலைத் தலை தொகுத்த புனல் செஞ்சடையில் வைத்த அழகன்தன்
இடம்ஆம்--
மலைத்தலை வகுத்த முழைதோறும் உழை, வாள் அரிகள், கேழல், களிறு,
கொலைத்தலை மடிப்பிடிகள், கூடி விளையாடி நிகழ் கோகரணமே.

Siva wields a spear whose tip is leaf-like. He has
an octad of arms. Holding fire in His hands, He dances
causing the swaying of His eight shoulders.
He bears on His crest—matted and hirsutorufous—,
the wave-tossed Ganga.
Siva, the handsome One, is entempled in Kōkaraṇam
dight with caverns where dwell bright lions, hogs,
tuskers, antelopes and murderous she-elephants;
when these assemble they sport and gambol. 4

863. தொடைத்தலை மலைத்து, இதழி, துன்னிய எருக்கு, அலரி, வன்னி, முடியின்
சடைத்தலை மிலைச்சிய தபோதனன்; எம் ஆதி; பயில்கின்ற பதிஆம்--
படைத்தலை பிடித்து மறவாளரொடு வேடர்கள் பயின்று குழுமி,
குடைத்து அலை நதிப் படிய நின்று, பழி தீர நல்கு கோகரணமே.

Siva wears a garland of skulls; on His matted crest, He is
adorned with the flowers of *konṟai, erukku, alari*
and the leaves of *vaṉṉi*.
He is in Kōkaraṇam where flourish the hunters
in camaraderie with the heroes wielding triumphant swords.
These bathe in the wave-tossed river and adore Him
who annuls their sins and blame. 5

864. நீறு திருமேனிமிசை ஆடி, நிறை வார் கழல் சிலம்பு ஒலிசெய,
ஏறு விளையாட விசைகொண்டு இடு பலிக்கு வரும் ஈசன் இடம்ஆம்--
ஆறுசமயங்களும் விரும்பி அடி பேணி அரன் ஆகமம் மிகக்
கூறு, வனம் ஏறு இரதி வந்து, அடியர், கம்பம் வரு, கோகரணமே.

Siva's divine body is bedaubed with the holy ash;
He wears on His foot the resounding *cilampu;*
He rides His Bull, proceeds singing, to beg alms.
He is entempled in Kōkaraṇam where flourish
the adherents of the six faiths who hail Him following
the Āgamic rules and whose bosoms are filled with divine
joy; these do experience the mystic tremendum. 6

865. கல்லவடம், மொந்தை, குழல், தாளம், மலி கொக்கரையர்; அங்கு அரைமிசை
பல்ல படநாகம் விரி கோவணவர்; ஆளும் நகர் என்பர்--அயலே
நல்ல மடமாதர் அரன்நாமமும் நவிற்றிய திருத்தம் முழுக,
கொல்ல விடநோய் அகல்தர, புகல் கொடுத்து அருளு கோகரணமே.

Siva dances to the orchestrated sounds of *kallavatam*,
montai, flute, cymbals and the right-whorled chanks.
He wears in His waist bones and on His loin-cloth, He is
decked with the hooded serpent whose fangs are venomous.
He is entempled in Kōkaraṇam where thrive women
of sterling qualities and excellent deeds; these
chant His names and bathe in the water thanks to which
their fatal maladies with their karma get annulled;
eke they gain success in their undertakings. 7

866. வரைத்தலம் நெருக்கிய முருட்டு இருள் நிறத்தவன வாய்கள் அலற,
விரல்-தலைஉகிர்ச் சிறிது வைத்த பெருமான் இனிது மேவும் இடம்ஆம்-
புரைத் தலை கெடுத்த முனிவாணர் பொலிவுஆகி, வினை தீர, அதன்மேல்
குரைத்து அலை கழல் பணிய, ஓமம் விலகும் புகைசெய் கோகரணமே.

Siva, of yore, so pressed the nail of His hallux on His
Mount that the ten mouths of the obstinately obdurate
Asura caught under the Mount, wailed aloud.
He is entempled in Kōkaraṇam where munis well-versed
in the Vedas, to rid their karma, bow at His ankleted feet,
chant His name and perform sacrifices
whence the smoke arises and spreads. 8

867. வில்லிமையினால் விறல் அரக்கன் உயிர் செற்றவனும், வேதமுதலோன்,
இல்லை உளது என்று இகலி நேட, எரி ஆகி, உயர்கின்ற பரன் ஊர்--
எல்லை இல் வரைத்த கடல்வட்டமும் இறைஞ்சி நிறை, வாசம் உருவக்
கொல்லையில் இருங் குறவர் தம் மயிர் புலர்த்தி வளர், கோகரணமே.

Vishnu by his mastery in archery did away with
the puissant Ravaṇa, and Brahma, the reciter of
the Vedas, grew contentious and quested, in vain,
after the Flame that was Siva, asserting the while,
that it is and is not assessable.
Siva is entempled in Kōkaraṇam adored by the terrestrials
of orbis terrarum, and the supernals.
Here, in its woodland, young huntresses dry their 9
palpably fragrant and dangling hair.

868. நேசம் இல் மனச் சமணர், தேரர்கள், நிரந்த மொழி பொய்கள் அகல்வித்து,
ஆசை கொள் மனத்தை அடியார் அவர்தமக்கு அருளும் அங்கணன் இடம்--
பாசம்அது அறுத்து, அவனியில் பெயர்கள்பத்து உடைய மன்னன் அவனை,
கூச வகை கண்டு, பின் அவற்கு அருள்கள் நல்க வல கோகரணமே.

Siva graces the devotees who love Him sincerely and who reject
the false dicta of the loveless Samaṇas and the Buddhists.
Siva whose beauteous eyes abound in mercy, is entempled in Kōkaraṇam.
Siva, in the past, fought with Arjuna known by ten names,
put him to shame and eventually graced him
whereby he became detached from phenomenality. 10

869. கோடல் அரவு ஈனும் விரி சாரல்முன் நெருங்கி வளர் கோகரணமே
ஈடம் இனிதுஆக உறைவான் அடிகள் பேணி அணி காழி நகரான்--
நாடிய தமிழ்க்கிளவி இன்இசைசெய் ஞானசம்பந்தன்--மொழிகள்
பாட வல பத்தர் அவர் எத்திசையும் ஆள்வர்; பரலோகம் எளிதே.

Hailing and adoring the sacred feet of Siva who presides over
the uberous Kōkaraṇam in whose broad slopes,
the flowers of *kāntal* buregeon like the hood of a serpent.
Gnānasambandhan of Kāli has sung these tuneful
and dulcet hymns on the God of Kōkaraṇam.
The bhaktas who are valiant in these psalms, will rule
every direction and with ease gain Siva-loka. 11

80. திரு வீழிமிழலை

திருவிராகம்

சாதாரி

870. சீர் மருவு தேசினொடு தேசம் மலி செல்வ மறையோர்கள் பணிய,
தார் மருவு கொன்றை அணி தாழ்சடையினான் அமர் சயம் கொள்
பதிதான்--
பார் மருவு பங்கயம் உயர்ந்த வயல் சூழ் பழனம் நீட, அருகே
கார் மருவு வெண்களப மாளிகை கவின் பெருகு வீழிநகரே.

80. TIRUVEEḺIMIḺALAI

Tiruvirākam

Sāthāri

Siva dazzles with extraordinary brilliance; He is
the Opulent One ubiquitously renowned; He, the One
of dangling matted hair who is adorned with the garland
of konṟais, is worshipped by the Brahmins.
He is entempled in the triumphant Veeḻimiḻalai of
ever-crescent pulchritude. It is girt with the fields
teeming in blowing lotuses and is dight with
auric mansions plastered white, whose tops are cloud-capped. 1

871. பட்ட முழவு, இட்ட பணிலத்தினொடு, பல்மறைகள் ஓது பணி நல்
சிட்டர்கள் சயத்துதிகள் செய்ய, அருள்செய் தழல் கொள் மேனியவன் ஊர்-
மட்டு உலவு செங்கமல வேலி வயல் செந்நெல் வளர், மன்னு பொழில்வாய்
விட்டு உலவு தென்றல் விரை நாறு, பதி வேதியர்கள் வீழிநகரே.

The sound of drums, of blowing chanks and the hailing
sound of the chanting of the Vedas by the Brahmins
versed in the many Vedas, stand orchestrated in
Veeḻi city where the flame-complexioned Siva is entempled
and blesses the adoring devotees of singular excellence.
Here the rows of the ruddy and melliferous lotuses fence
the fields where abound *sennel* paddy crops; eke are
here the ever-green gardens whence the Notus wafts breathing
incense. This is the holy polis where Brahmins flourish. 2

872. மண் இழி சுரர்க்கு வளம் மிக்க பதி--மற்றும் உள மன்உயிர்களுக்கு
எண் இழிவு இல் இன்பம் நிகழ்வு எய்த, எழில் ஆர் பொழில் இலங்கு அறுபதம்
பண் இழிவு இலாத வகை பாட, மடமஞ்ஞை நடம்ஆட, அழகு ஆர்
விண்இழிவிமானம் உடை விண்ணவர்பிரான் மருவு வீழிநகரே.

This urbs, rich in foison, is coveted by the visiting celestials;
    eke does it confer multifoliate joy on the terrestrials.
In its splendorous gardens bees bombilate as if emulating
    flawlessly the *paṇs*. Here dance in joy young peacocks.
Siva, the God of gods, is entempled beneath the heaven-descended
    Vimāna at *Veeḻi*. 3

873. செந்தமிழர் தெய்வமறை நாவர், செழு நன்கலை தெரிந்தஅவரோடு
அந்தம் இல் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரன் ஊர்--
கொந்து அலர் பொழில் பழன வேலி குளிர்-தண்புனல் வளம் பெருகவே,
வெந் திறல் விளங்கி வளர் வேதியர் விரும்பு பதி வீழிநகரே.

Singers of hymns in chaste Tamiḻ, the practitioners of
    the divine Vedas, they that are well versed in the splendorous
    arts as also the sastras, and the endless doers of good:
    these perform pujas to Hara who is entempled in the city
    of Veeḻi where are gardens the flowers of which blow in
    bunches; here the fields are duly fenced and the water-
    sources are cool and uberous.
Here dwell willingly the experts in the Vedas who perform
    sacrifices and chase *Kali* away. 4

874. பூதபதி ஆகிய புராணமுனி புண்ணியநல்மாதை மருவி,
பேதம்அது இலாத வகை பாகம் மிக வைத்த பெருமானது இடம்ஆம்--
மாதவர்கள் அன்ன மறையாளர்கள் வளர்த்த மலி வேள்வி அதனால்
ஏதம்அது இலாத வகை இன்பம் அமர்கின்ற எழில் வீழிநகரே.

Siva is the evolver of the elements inclusive of earth;
He is the most ancient of the tapaswis.
He is the Consort of the great and holy Woman with whom
He is concorporate annulling differentiation.
He is entempled in the beautifully-walled city of Veeli.
Here the Vedic Brahmins like unto great tapaswis, perform
sacrifices, chase *Kali* away and usher in happiness. 5

875. மண்ணில் மறையோர் மருவு வைதிகமும், மா தவமும், மற்றும் உலகத்து
எண் இல் பொருள் ஆயவை படைத்த இமையோர்கள்பெருமானது
இடம்ஆம்--
நண்ணி வரு நாவலர்கள் நாள்தொறும் வளர்க்க நிகழ்கின்ற புகழ் சேர்
விண் உலவு மாளிகை நெருங்கி வளர் நீள்புரிசை வீழிநகரே.

Siva is the evolver of the Vedic dharma adhered to by
the Brahmins, the tapaswic paths pursued by the great
saints and the numberless rules governing
the weal of the phenomenal world.
He, the God of gods, is entempled in the extensively
walled-city of Veeli which is endowed with accrescent
glory, fostered by the bards who effectively
engage themselves, in this cause. 6
Eke is it dight with the opulent and sky-vaulting mansions.

876. மந்திர நால்மறையினோடு வளர் வேள்விமிசை மிக்க புகை போய்,
அந்தர-விசும்பு அணவி, அற்புதம் எனப் படரும் ஆழி இருள்வாய்,
மந்தர நல் மாளிகை நிலாவு மணி நீடு கதிர்விட்ட ஒளிபோய்,
வெந்தழல் விளக்கு என விரும்பினர் திருந்து பதி--வீழிநகரே.

Siva is entempled in the city of Veeli where the smoke
rising from the sacrificial pits, fostered with the Vedic
mantras, soars up and pervades the heavens.
Lo, the beauteous mansions of this urbs, are huge as
the Mount Mantara with which was churned the main
that yielded the pervading murk which concealed the day-light.
The gems with which the mansions of this city are inlaid
act as well-lit lamps and chase away by their
radiance the smoke rising from the sacrificial pits.
Here dwell people willingly with absolute contentment. 7

877. ஆன வலியின் தசமுகன் தலை அரங்க, அணி ஆழிவிரலால்,
ஊன் அமர் உயர்ந்த குருதிப்புனலில் வீழ்தர உணர்ந்த பரன் ஊர்--
தேன் அமர் திருந்து பொழில், செங்கனக மாளிகை, திகழ்ந்த மதிலோடு,
ஆன திரு உற்று வளர், அந்தணர் நிறைந்த அணி வீழிநகரே.

Of yore, Siva crushed the ten heads of Ravaṇa
who, with hauteur, durst uproot the Mount Kailas,
by pressing His toe on the Mount beneath which,
the profusely bleeding Asura was trapped.
Siva is entempled in the divinely radiant and ornate
city of Veeli girt with melliferous gardens,
and dight with mansions of ruddy gold; lofty walls
encircle this city where flourish the Vedic Brahmins
with accrescent spiritual opulence. 8

878. ஏனஉரு ஆகி மண் இடந்த இமையோனும், எழில் அன்னஉருவம்
ஆனவனும், ஆதியினொடு அந்தம் அறியாத அழல்மேனியவன் ஊர்--
வான் அணவும் மா மதில் மருங்கு அலர் நெருங்கிய வளம் கொள் பொழில்வாய்
வேனல் அமர்வு எய்திட, விளங்கு ஒளியின் மிக்க புகழ் வீழிநகரே.

When assuming the form of a hog, Vishnu burrowed deep
into the earth and Brahma metamorphosed into a swan
and winged aloft, in quest of Siva, He soared up and up
as the cosmic Flame whose top and base stood imperceivable.
The handsome and flame-hued Siva is entempled in
the renowned Veel̲i which is girt with huge and sky-vaulting
walls close to which are gardens where burgeon
densely, flowers galore. Here rest its residents during summer. 9

879. குண்டுஅமணர் ஆகி, ஒரு கோலம் மிகு பீலியொடு குண்டிகை பிடித்து,
எண்திசையும் இல்லது ஒரு தெய்வம் உளது என்பர்; அது என்ன பொருள் ஆம்?
பண்டை அயன் அன்னவர்கள் பாவனை விரும்பு பரன் மேவு பதி--சீர்
வெண்தரளவாள்நகை நல் மாதர்கள் விளங்கும் எழில் வீழிநகரே.

The obdurate Samaṇas tote jugs and pretty peacock-
feathers, roam about in all the eight directions
asserting: “Of what avail is the alleged omnipresence
of God?” (Ignore them.)
Siva is entempled in the beautiful city of Veel̲i
where Brahmins great as Brahma, adore our
God with Siva-consciousness. In this polis flourish 10
the blessed damozels of pearl-white teeth.

880. மத்தம் மலி கொன்றை வளர்வார்சடையில் வைத்த பரன், வீழிநகர் சேர்
வித்தகனை, வெங்குருவில் வேதியன் விரும்பு தமிழ்மாலைகள் வலார்,
சித்திர விமானம் அமர் செல்வம் மலிகின்ற சிவலோகம் மருவி,
அத்தகு குணத்தவர்கள் ஆகி, அனுபோகமொடு யோகு அவரதே.

Siva wears on His long matted hair in the flowers of
ūmattham and konṟai. On Him, the Brahmin of
Veṅkuru, well-versed in the Vedas, has sung
these garlands of hymns in Tamiḻ.
They that are valiant in these psalms, will gain ascension
to the opulent Sivaloka where Siva is enthroned beneath
the picturesque Vimāna. Coming by the Saivite
virtue, they will remain poised in the blissful Siva Yoga. 11

81. திருத் தோணிபுரம்

திருவிராகம் சாதாரி

881. சங்கு அமரும் முன்கை மடமாதை ஒருபால் உடன்விரும்பி,
அங்கம் உடல்மேல் உற அணிந்து, பிணி தீர அருள்செய்யும்
எங்கள் பெருமான் இடம் எனத் தகும்--முனைக் கடலின் முத்தம்,
துங்க மணி, இப்பிகள், கரைக்கு வரு தோணிபுரம்ஆமே.

81. TIRUTTHŌṆIPURAM

Tiruvirākam Sāthāri

Siva is concorporate with His bashful Consort
whose forearms are decked with chank bangles.
He becomingly wears on His person, the bones. He confers
grace on His sincere adorers and annuls their maladies—
physical as well as spiritual.

He is entempled in Tōṇipuram to whose shore pearls,
gems and chanks are pushed by the waves of the main. 1

882. சல்லரி(யி), யாழ், முழவம், மொந்தை, குழல், தாளம்அது, இயம்ப,
கல் அரிய மாமலையர்பாவை ஒருபாகம் நிலைசெய்து,
அல் எரி கை ஏந்தி, நடம்ஆடு சடை அண்ணல் இடம் என்பர்--
சொல்ல(அ)ரிய தொண்டர் துதிசெய்ய, வளர் தோணிபுரம் ஆமே.

Siva is inseparably concorporate with the Daughter of the great
Himavant; He is hailed with the orchestrated organs
of *sallari, mul̲avam, montai, kul̲al,* cymbals and the like.
He, holding fire in His hand, dances during night.
He is the great God who is entempled in Tōṇipuram of
accrescent renown, where His ineffably glorious
servitors hail and adore Him. 2

883. வண்டு அரவு கொன்றை வளர் புன்சடையின்மேல் மதியம் வைத்து,
பண்டு அரவு தன் அரையில் ஆர்த்த பரமேட்டி; பழி தீரக்
கண்டு அரவ ஒண் கடலின் நஞ்சம் அமுதுஉண்ட கடவுள்; ஊர்--
தொண்டர்அவர் மிண்டி, வழிபாடு மல்கு தோணிபுரம் ஆமே.

Siva is adorned with the garland of konr̲ais buzzed by bees.
He wears on His ever-crescent, ruddy, matted hair
the crescent. He is cinctured with a snake in His waist.
He is, indeed, the God of the Empyrean.
He is an annuller of blames; He quaffed the venom that uprose
from the main bright, as though it were ambrosia.

He is entempled in Tōṇipuram where His thronging servitors
vie with each other to adore Him. 3

884. கொல்லை விடைஏறு உடைய கோவணவன், நா அணவும் மாலை
ஒல்லை உடையான், அடையலார் அரணம் ஒள்அழல் விளைத்த
வில்லை உடையான், மிக விரும்பு பதி--மேவி வளர் தொண்டர்
சொல்லை அடைவுஆக இடர் தீர்த்து, அருள்செய் தோணிபுரம்ஆமே.

Siva's mount is the Bull of the *Mullai* region. He is clad
in a loin-cloth. His devotees hail Him in hymn
and song and solemn strain. His names resound ubiquitously.
He wields the mountain-bow that reduced to cinders
the hostile triad of the walled-citadels.
He is entempled in Tōṇipuram willingly where reside His
servitors abounding in love. He is mindful of their prayers
and annuls their troubles. 4

885. தேயும் மதியம் சடை இலங்கிட, விலங்கல் மலி கானில்
காயும் அடு திண் கரியின் ஈர்உரிவை போர்த்தவன்; நினைப்பார்
தாய் என நிறைந்தது ஒரு தன்மையினர்; நன்மையொடு வாழ்வு--
தூய மறையாளர் முறை ஓதி நிறை தோணிபுரம்ஆமே.

The waning crescent on His beautiful, matted crest, shines
in splendour; He peeled off the skin of the murderous Tusker
that roamed in the wood and mantled Himself in it.
Mother-like He fosters them that ever contemplate Him.
He is entempled in Tōṇipuram where the pure ones pursue
the Vedic and the weal-conferring way and hail Him duly. 5

886. பற்றலர்தம் முப்புரம் எரித்து, அடி பணிந்தவர்கள் மேலைக்
குற்றம்அது ஒழித்து, அருளு கொள்கையினன்; வெள்ளில் முதுகானில்
பற்றவன்; இசைக்கிளவி பாரிடம்அது ஏத்த நடம்ஆடும்
துற்ற சடை அத்தன்; உறைகின்ற பதி--தோணிபுரம்ஆமே.

Siva gutted with fire the hostile triad of the walled-citadels.
He forgives the offences of those that sincerely adore
His feet twain, and graces them.
He loves to abide in the crematory abounding in biers.
He dances to the singing of His Bhūta-Hosts.
He is our Sire and His matted hair is long.
He is, indeed, entempled in Tōṇipuram. 6

887. பண் அமரும் நால்மறையர், நூல் முறை பயின்ற திருமார்பில்
பெண் அமரும் மேனியினர், தம் பெருமை பேசும் அடியார் மெய்த்
திண் அமரும் வல்வினைகள் தீர அருள்செய்தல் உடையான், ஊர்--
துண்ணென விரும்பு சரியைத் தொழிலர் தோணிபுரம்ஆமே.

Siva is the Author of the Vedas four, cast in *paṇ*;
He is the explicator of the scriptures; divine is His chest.
He is concorporate with His Woman; He rids the well-nigh
impossible to annul cruel karma of His devotees
who descant on His multifoliate glory, and graces them.
He is entempled in Tōṇipuram where thrive well
the practitioners of charya and the like, with promptitude. 7

888. தென் திசை இலங்கை அரையன் திசைகள் வீரம் விளைவித்து
வென்றி செய் புயங்களை அடர்த்து அருளும் வித்தகன்இடம்--சீர்
ஒன்று இசை இயல்கிளவி பாட, மயில் ஆட, வளர் சோலை
துன்றுசெய வண்டு மலி தும்பி முரல் தோணிபுரம்ஆமே.

Ravaṇa, the ruler of Lanka in the south, invaded all the eight directions
and established the puissance of his invincible arms.
Siva, the *Vittaka*, crushed his arms and then when he
rued, He did grace him.
He is entemped in Tōṇipuram in the gardens of which
koels coo musically and peacocks dance.
Here do bees bombilate and dragonflies melodiously
rustle their wings. 8

889. நாற்றம் மிகு மா மலரின்மேல் அயனும், நாரணனும், நாடி,
ஆற்றல்அதனால் மிக அளப்பு அரிய வண்ணம், எரி ஆகி,
ஊற்றம் மிகு கீழ்உலகும் மேல்உலகும் ஓங்கி எழு தன்மைத்
தோற்றம் மிக, நாளும் அரியான் உறைவு--தோணிபுரம்ஆமே.

When Brahma ensconced on the fragrant Lotus and Vishnu
pursued their quest after Siva, Siva so grew into
a blazing Flame pervading the nether and the higher
worlds that He stood beyond their ken of comprehension.
Lo, He is entempled in Tōṇipuram. 9

890. மூடு துவர்ஆடையினர், வேடம் நிலை காட்டும் அமண்ஆதர்,
கேடுபல சொல்லிடுவர்; அம் மொழி கெடுத்து, அடைவினான், அக்
காடு பதி ஆக நடம்ஆடி, மடமாதொடு இரு காதில்-
தோடு குழை பெய்தவர் தமக்கு உறைவு--தோணிபுரம்ஆமே.

The Buddhists are shrouded in ochre-robes;
the base Samaṇas roam about unclad.
These but propogate manifold evil. Siva listens
not to their calumniating utterances.
He abides in the crematory where He enacts His dance.
He is concorporate with His bashful Consort.
This, His androgynic form, is decked with a *todu* in
one ear and a *kulai* in the other.
He is entempled in Tōṇipuram. 10

891. துஞ்சு இருளில் நின்று நடம்ஆடி மிகு தோணிபுரம் மேய
மஞ்சனை வணங்கு திரு ஞானசம்பந்தன சொல்மாலை,
தஞ்சம் என நின்று இசை மொழிந்த அடியார்கள், தடுமாற்றம்
வஞ்சம் இலர்; நெஞ்சு இருளும் நீங்கி, அருள் பெற்று வளர்வாரே.

Siva resolves the whole cosmos and dances in the ensuing
murk. His delubrum is in Tōṇipuram of exceeding renown.
Adoring Him, Gnānasambandhan has sung these
garlands of Tamil hymns.
They that hold these psalms as their sole support and duly
sing them, will not deviate from the Godly way.
They are free of tohu bohu; they know not of deception;
their bosoms remain uncontaminated by the stain
of murky nescience; blessed with beatitude, 11
they will flourish for ever.

82. திரு அவள் இவள் நல்லூர்

திருவிராகம்

சாதாரி

892. கொம்பு இரிய வண்டு உலவு கொன்றை, புரிநூலொடு குலாவி,
தம் பரிசினோடு சுடுநீறு தடவந்து, இடபம் ஏறி,
கம்பு அரிய செம்பொன் நெடுமாட மதில், கல்வரை வில்ஆக,
அம்பு எரிய எய்த பெருமான் உறைவது--அவளிவணலூரே.

82. TIRU AVAḶ IVAḶ NALLŪR

Tiruvirākam

Sāthāri

Siva is adorned with the garland of konṟais buzzed by bees.
On His chest He wears the sacred threads. He is
bedaubed with the holy ash. His mount is the Bull.
With His Mountain-bow, He gutted with fire, the triad
of citadels whose walls were wrought of gold, silver and iron.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 1

893. ஓமையன, கள்ளியன, வாகையன, கூகை முரல் ஓசை,
ஈமம் எரி, சூழ் சுடலை வாசம்; முதுகாடு நடம்ஆடி;
தூய்மை உடை அக்கொடு அரவம் விரவி, மிக்கு ஒளி துளங்க,
ஆமையொடு பூணும் அடிகள்(ள்); உறைவது--அவளிவணலூரே.

Siva dances in the crematory which is thick with
the trees of *ōmai*, *kaḷḷi, vākai* and the like.
He resides in the crematory where owls hoot
and where pyres burn. He dances in the crematory.
He is adorned with the pure bones and the bright snakes.
His ornament is a carapace. He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 2

894. நீறு உடைய மார்பில் இமவான்மகள் ஓர் பாகம் நிலைசெய்து,
சூறு உடைய வேடமொடு கூடி, அழகு ஆயது ஒரு கோலம்
ஏறு உடையரேனும், இடுகாடு, இரவில் நின்று, நடம்ஆடும்
ஆறு உடைய வார்சடையினான் உறைவது--அவளிவணலூரே.

Siva's chest is coated with the holy ash. He is
concorporate with the Daughter of Himavant;
splendorous is His androgynic form. He rides the Bull.
He enacts His dance in the crematory.
On His spreading matted hair, He holds the Ganga.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 3

895. "பிணியும் இலர், கேடும் இலர், தோற்றம் இலர்" என்று உலகு பேணிப்
பணியும் அடியார்களன பாவம் அற இன்அருள் பயந்து,
துணி உடைய தோலும், உடையகோவணமும், நாகம், உடல் தொங்க
அணியும் அழகுஆக உடையான் உறைவது--அவளிவணலூரே.
Siva is hailed by the world as the maladyless,
birthless and deathless God. He annuls altogether
the sins of those that sincerely adore Him; eke
does He bestow on them sweet grace.
He is clad in the peeled-off skin. He wears a loin-cloth.
His ornaments are the dangling adders. 4
He is beautifully entempled in Avaḷ Ivaḷ Nallūr.

896. குழலின் வரிவண்டு முரல் மெல்லியனபொன்மலர்கள் கொண்டு,
"கழலின்மிசை இண்டை புனைவார் கடவுள்" என்று அமரர் சூடித்
தொழலும் வழிபாடும் உடையார்; துயரும் நோயும் இலர்ஆவர்;
அழலும் மழு ஏந்து கையினான்; உறைவது--அவளிவணலூரே.

Devas that assemble in their strength, weave the garland
of *intai* with soft and comely blossoms in which
bees bombilate fluten melody and place it
on His sacred feet and hail Him as the one
and only God. He causes them thrive freed of
sorrow and malady.
It is thus, even thus, He blesses His devotees.
He wields a *maḻu* blazing like fire.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 5

897. துஞ்சல் இலராய் அமரர் நின்று தொழுது ஏத்த, அருள்செய்து,
நஞ்சு மிடறு உண்டு, கரிதுஆய வெளிதுஆகி ஒரு நம்பன்;
மஞ்சு உற நிமிர்ந்து, உமை நடுங்க, அகலத்தொடு அளாவி,
அஞ்ச, மதவேழ உரியான்; உறைவது--அவளிவணலூரே.

The Devas stood before Him and appealed to Him
non-stop; they neither slept nor took rest.
At this, He quaffed the oceanic venom which
darkened His throat while His body remained
like unto the white crystal. He is the supremely desirable One.
He peeled off the skin of the musty Tusker which stood sky-high,
and mantled Himself in it at which Uma stood scared.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 6

898. கூடு அரவம் மொந்தை, குழல், யாழ், முழவினோடும் இசைசெய்ய,
பீடு அரவம் ஆகு படர் அம்பு செய்து, பேர்இடபமோடும்
காடு அரவம் ஆகு கனல் கொண்டு, இரவில் நின்று, நடம்ஆடி,
ஆடுஅரவம் ஆர்த்த பெருமான் உறைவது--அவளிவணலூரே.

When Siva dances to the orchestration of *montai,*
kuḻal, yāḻ and the like, his arms sway;
the fire in His hand crackles and Ganga's water splashes.
He whose mount is the huge Bull, dances during night in the crematory.
He is cinctured with a hooded adder in His waist.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr.
7

899. "ஒருவரையும் மேல் வலி கொடேன்" என எழுந்த விறலோன், "இப்
பெருவரையின்மேல் ஓர் பெருமானும் உளனோ?" என வெகுண்ட
கருவரையும் ஆழ்கடலும் அன்ன திறல் கைகள் உடையோனை,
அரு வரையில் ஊன்றி அடர்த்தான் உறைவது--அவளிவணலூரே.

Ravaṇa asserting that he would suffer none
to excel his puissance, shouted thus in wrath:
"Is there the God on the Mount Kailās?"
Then he who was like a mountain and whose strength
was like unto the deep main, durst uproot the Mount.
At this, Siva pressed His toe on His Mount and crushed him
who stood beneath it.
He is entempled in Avaḷ Ivaḷ Nallūr.
8

900. பொறி வரிய நாகம் உயர் பொங்கு அணை அணைந்த புகழோனும்,
வெறி வரிய வண்டு அறைய விண்ட மலர்மேல் விழுமியோனும்,
செறிவு அரிய தோற்றமொடு ஆற்றல் மிக நின்று, சிறிதேயும்
அறிவு அரியன் ஆய பெருமான் உறைவது--அவளிவணலூரே.

When the famed Vishnu whose lofty bed is
the speckled and immense snake and Brahma
who is ensconced on the Lotus whose petals were
unfolded by the bees familiar with suaveolence,
assuming such forms impossible to come by others,
with all their adroitness went in quest of Siva,
they could not even glimpse His nature and stature.
Lo, He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 9

901. கழி அருக பள்ளி இடம்ஆக அடும் மீன்கள் கவர்வாரும்,
வழி அருகு சார வெயில் நின்று அடிசில் உள்கி வருவாரும்,--
பழி அருகினார்--ஒழிக! பான்மையொடு நின்று தொழுது ஏத்தும்
அழி அருவி தோய்ந்த பெருமான் உறைவது--அவளிவணலூரே.

Samaṇas abide close to a creek and catch fishes
for food; Buddhists during the hot noon roam about
begging alms. These indulge in sins and blameworthy
deeds. Truly speaking, Siva has His ablutions
in the tears which fall like cataracts
from the eyes of His hailing and adoring devotees.
Lo, He is entempled in Avaḷ Ivaḷ Nallūr. 10

902. ஆன மொழிஆன திறலோர் பரவும் அவளிவணலூர்மேல்,
போன மொழி நல் மொழிகள் ஆய புகழ் தோணிபுரஊரன்--
ஞானமொழிமாலைபல நாடு புகழ் ஞானசம்பந்தன்--
தேனமொழிமாலை புகழ்வார், துயர்கள் தீயது இலர், தாமே.

The universally-praised Gnānasambandhan of Toṇipuram
that is hailed in all the directions, has sung on
the God of Avaḷ Ivaḷ Nallūr adored by the truly wise
who hail it with the glorious vocables of Gnosis.
His hymns born of Siva-consciousness constitute
a garland, laden with melis.
They that hail Siva with these psalms will be freed
from misery. Evil will never touch them. 11

83. திரு நல்லூர்

திருவிராகம்

சாதாரி

903. வண்டு இரிய விண்ட மலர் மல்கு சடை தாழ, விடை ஏறி,
பண்டு எரி கை கொண்ட பரமன் பதிஅது என்பர்--அதன் அயலே
நண்டு இரிய, நாரை இரை தேர, வரைமேல் அருவி முத்தம்
தெண் திரைகள் மோத, விரி போது கமழும் திரு நலூரே.

83. TIRUNALLŪR

Tiruvirākam

Sāthāri

On His dangling matted hair Siva wears flowers which
unpetal when bees sit on them.
He rides the Bull—His mount. As of yore, He holds
the fire in His hand.
He is entempled in the incense-breathing Tirunallūr
where the crabs thrive, in search of which
herons wing to come by their prey.
Here the cataracts that roll with pearls, heap them. 1
Here do dash waves against buds that blossom lovelily.

904. பல் வளரும் நாகம் அரை யாத்து, வரைமங்கை ஒருபாகம்
மல் வளர் புயத்தில் அணைவித்து, மகிழும் பரமன் இடம்ஆம்--
சொல் வளர் இசைக்கிளவி பாடி மடவார் நடம்அது ஆட,
செல்வ மறையோர்கள் முறை ஏத்த, வளரும் திரு நலூரே.

Siva's waist is cinctured with a serpent of venomous fangs.
In His left half abides the Daughter of Himavant.
Mighty are His arms. He is entempled in the ever-crescent
Tirunallūr where bashful damsels sing songs
packed with great import and enact their dance.
Here the Vedic Brahmins adore Him as duly ordained. 2

905. நீடுவரைமேரு வில் அதுஆக, நிகழ் நாகம், அழல் அம்பால்
கூடலர்கள் மூஎயில் எரித்த குழகன்; குலவுசடைமேல்
ஏடு உலவு கொன்றை புனல் நின்று திகழும் நிமலன்; இடம்ஆம்--
சேடு உலவு தாமரைகள் நீடு வயல் ஆர் திரு நலூரே.

Of yore, with the Mount Meru as His bow to which was
fastened the snake Vāsuki as its string, Siva
sped the Agni-tipt dart and smote the triad of
the hostile walled-citadels.
The ever-young Siva sports on His matted crest the petalled
konṟais and the splendorous Ganga.
He, the Nimalan, is entempled in Tirunallūr abounding
in extensive fields where blow glorious lotus flowers. 3

906. கருகு புரி மிடறர், கரிகாடர், எரி கைஅதனில் ஏந்தி,
அருகு வரு கரியின் உரி-அதளர், படஅரவர், இடம் வினவில்--
முருகு விரி பொழிலின் மணம் நாற, மயில் ஆல, மரம் ஏறித்
திருகு சின மந்தி கனி சிந்த, மது வார் திரு நலூரே.

Siva's throat wears a patch of murk. Holding in His
palm the fire, He dances in the crematory.
He peeled off the skin of the musty Tusker that strode
forth towards Him, and mantled Himself in it.
He is entempled in the nectarean Tirunallūr in whose melliferous
gardens peacocks dance and the female monkey, grown angry,
climbs the tree and causes the fall of fruitage. 4

907. பொடி கொள் திரு மார்பர்; புரிநூலர்; புனல் பொங்கு அரவு தங்கும்
முடி கொள் சடை தாழ, விடை ஏறு முதலாளர் அவர்; இடம்ஆம்--
இடி கொள் முழவு ஓசை எழில் ஆர் செய்தொழிலாளர் விழ மல்க,
செடி கொள் வினை அகல, மனம் இனியவர்கள் சேர் திரு நலூரே.

On His beautiful chest coated with the holy ash
He wears the sacred threads.
On His dangling matted hair He bears the Ganga and the snake.
He is the Primordial Ens whose mount is the Bull.
He is entempled in Tirunallūr where dwell people of sweet mental
disposition. Here abound the resounding *mu*l*avam* like unto
the rumbling of thunder winged with lightning.
The handiwork of craftsmen makes splendorous the fetes,
the adoration of which causes karma flee away. 5

908. புற்று அரவர்; நெற்றி ஓர் கண்; ஒற்றை விடை ஊர்வர்;--அடையாளம்--
சுற்றும் இருள் பற்றிய பல்பூதம் இசை பாட, நசையாலே
கற்ற மறை உற்று உணர்வர்; பற்றலர்கள் முற்றும் எயில் மாளச்
செற்றவர்; இருப்புஇடம்--நெருக்கு புனல் ஆர் திரு நலூரே.

Siva wears the snake of the ant-hill He has an eye in His forehead.
His mount is the Bull. It is, indeed, these that identify Him.
He dances in the dense darkness when nothing is
visible, to the singing of His Bhūtas.
He is adored by the Vedic Brahmins who are Siva-conscious.
He, in ire, set fire to the triad of the hostile Asuras' walled-citadels.
He is entempled in Tirunallūr abounding in the wealth of water. 6

909. பொங்கு அரவர், அங்கம் உடல்மேல் அணிவர்; ஞாலம் இடு பிச்சை,
தம் கரவம்ஆக உழிதந்து, மெய் துலங்கிய வெண்நீற்றர்;
கங்கை, அரவம், விரவு திங்கள், சடை அடிகள்; இடம் வினவில்--
செங்கயல் வதிக் குதிகொளும் புனல்அது ஆர் திரு நலூரே.

Siva wears the hooded snake that dances in rage. He wears bones
on His body. Toting a skull of Brahma's He roams about
dinsomely soliciting alms from the people on earth.
He is splendorously bedaubed with the white ash.
He holds the Ganga, the snake and the crescent on His matted crest.
He is entempled in Tirunallūr in whose watery fields
the ruddy *kayals* leap and sport. 7

910. ஏறு புகழ் பெற்ற தென்இலங்கையவர்கோனை அரு வரையில்
சீறி, அவனுக்கு அருளும் எங்கள் சிவலோகன் இடம் ஆகும்--
கூறும் அடியார்கள் இசை பாடி, வலம்வந்து, அயரும் அருவிச்
சேறு கமர் ஆன அழியத் திகழ்தரும் திரு நலூரே.

Siva, in wrath, crushed Ravaṇa of mounting glory,
the ruler of the southern Lanka, beneath His Mount and then
when he rued, He blessed him in mercy.
The God of Sivaloka is entempled in Tirunallūr, adored
in dulcet hymns and circumambulated by His devotees
whose tears of joy fall down like a cataract and flows
into fissures which metamorphose into miry glebe. 8

911. மாலும் மலர்மேல் அயனும் நேடி அறியாமை எரி ஆய
கோலம் உடையான், உணர்வு கோது இல் புகழான், இடம்அது ஆகும்--
நாலுமறை, அங்கம் முதல் ஆறும், எரி மூன்றுதழல் ஓம்பும்
சீலம் உடையார்கள் நெடுமாடம் வளரும் திரு நலூரே.

When Vishnu and Brahma whose seat is the Lotus, went in
quest of Siva, He soared up and up as the humongous
flame imperceivable by them.
He is the splendorous God of ulflawed glory. He is entempled in
Tirunallūr where dwell in its storeyed mansions the great Brahmins
well versed in the four Vedas and their six Angas 9
and who foster with care, the triad of the ritual fire.

912. கீறும் உடை கோவணம் இலாமையில் உலோவிய தவத்தர்,
பாறும் உடல் மூடு துவர் ஆடையர்கள், வேடம்அவை பாரேல்!
ஏறு மடவாளொடு இனிது ஏறி; முன் இருந்த இடம் என்பர்--
தேறும் மன வாரம் உடையார் குடிசெயும் திரு நலூரே.

The Samaṇas do not even wear the rags or *kovanam* and know not
what fulling is; these are pseudo-tapaswis. The Buddhists are
shrouded in ochre robes and foster their death-bound bodies.
Do not take into account their modes of living, at all.
Siva joyously rides His Bull with His bashful Consort.
He is entempled in the hoary Tirunallūr where dwell His
loving devotees blessed with entelechy. 10

913. திரைகள் இருகரையும் வரு பொன்னி நிலவும் திரு நலூர்மேல்
பரசுதருபாணியை, நலம் திகழ்செய் தோணிபுர நாதன்--
உரைசெய் தமிழ் ஞானசம்பந்தன்--இசைமாலை மொழிவார், போய்,
விரை செய் மலர் தூவ, விதி பேணு கதிபேறு பெறுவாரே.

Tirunallūr is situate on the banks of the Kāviri.
Its God wields an axe in His hand.
On Him, Tamil̲ Gnānasambandhan, the Chief of
Tōṇipuram abounding in fecund fields, has sung
this garland of musical hymns.
They that are valiant in these psalms, will be welcomed
by Brahma who will strew on them fragrant flowers.
These will thrive in everlasting beatitude. 11

84. திருப் புறவம்

திருவிராகம்

சாதாரி

914. பெண் இயல் உருவினர், பெருகிய புனல் விரவிய பிறைக்-
கண்ணியர், கடு நடை விடையினர், கழல் தொழும் அடியவர்
நண்ணிய பிணி கெட அருள்புரிபவர், நணுகு உயர் பதி--
புண்ணிய மறையவர் நிறை புகழ் ஒலி மலி புறவமே.

84. TIRUPPUṞAVAM

Tiruvirākam

Sāthāri

Siva's form is androgynic; He bears on His matted crest
the Ganga that flows with abundant water, the crescent
and a garland of skulls. He rides the Bull of swift gait.
He annuls the maladies of His devotees and blesses them.
He is entempled in the lofty Puṟavam where dwell Brahmins galore
who chant the holy Vedas and hail aloud Siva's glory. 1

915. கொக்குஉடை இறகொடு பிறையொடு குளிர்சடைமுடியினர்,
அக்குஉடைவடமும் ஓர் அரவமும் அலர் அரைமிசையினில்
திக்குஉடை மருவிய உருவினர், திகழ் மலைமகளொடும்
புக்கு உடன்உறைவது--புதுமலர் விரை கமழ் புறவமே.

On His cool matted hair He wears the feather of the stork
and the cool crescent. He is decked with a garland of bones.
He is cinctured with a serpent in His waist; His habiliments
are, indeed, the eight directions. Concorporate splendorously
with the Daughter of Himavant. He is entempled in
Puṟavam where fresh flowers blow and breathe incense. 2

916. கொங்கு இயல் சுரிகுழல், வரிவளை, இளமுலை, உமை ஒரு-
பங்கு இயல் திருஉரு உடையவர்; பரசுவொடு இரலை மெய்
தங்கிய கரதலம் உடையவர்; விடையவர்; உறைபதி--
பொங்கிய பொருகடல் கொள, அதன்மிசை உயர் புறவமே.

Siva is concorporate with Uma of fragrant curls, striped
bangles and young and buxom breasts; androgynic is
His form; His hands hold an axe and an antelope.
His mount is the Bull. He is entempled in Puravam which floats on
the Deluge of Dissolution in which the oceans are submerged. 3

917. மாதவம் உடை மறையவன் உயிர் கொள வரு மறலியை,
மேதகு திருவடி இறை உற, உயிர்அது விலகினார்;
சாதகஉரு இயல் சுரன்இடை, உமை வெருஉற, வரு
போதகஉரி-அதள் மருவினர்; உறை பதி--புறவமே.

When Yama strode forth to snatch the life of the Brahmin lad—
a tapaswi par excellence—, Siva's divine and exalted foot
just brushed him and caused him to fall dead.
In the jungle where ghouls roam about , He peeled off the skin
of the Tusker and mantled Himself in it at which
Uma stood scared. Lo, He is entempled in Puravam. 4

918. காமனை அழல் கொள விழிசெய்து கருதலர் கடிமதில்
தூமம்அது உற விறல் சுடர் கொளுவிய இறை தொகு பதி--
ஓமமொடு உயர்மறை, பிற இயவகைதனொடு, ஒளி, கெழு
பூமகள், அலரொடு, புனல்கொடு, வழிபடு புறவமே.

With His fiery eye, Siva stared Kāma to death. He gutted
with fire the well-guarded and walled-citadels of the hostile
Asuras, which was involved in smoky ruin.
He is entempled in Puṟavam where sacrifices are performed,
the mantras of the Vedas are chanted, the musical instruments
are orchestrated and the lamps are lit. Here did
Brahma do his *pūja* with flowers and holy water to Siva. 5

919. சொல்-நயம் உடையவர், சுருதிகள் கருதிய தொழிலினர்,
பின்னையர், நடு உணர் பெருமையர், திருவடி பேணிட,
முன்னைய முதல்வினை அற அருளினர் உறை முது பதி--
புன்னையின் முகை நெதி பொதி அவிழ் பொழில் அணி புறவமே.

Here abound the devotees that wield nice and wise vocables,
the performers of the Vedic Karma-Kānda rituals to come by
what they covet, the adherents of the Gnāna Kānda of
the Vedas and also the famous seers who know, for certain,
the central import of the Vedas.
By His grace, Siva annuls their hoary *Āṇava* mala as also their
Karma and *Māya malas*.
Siva is entempled in the ornate Puṟavam where in its
gardens, the auric buds of *puṉṉai* blow and from 6
the blossoms pollen aplenty gets spilt.

920. வரி தரு புலி அதள் உடையினர், மழு எறி படையினர்,
பிரிதரு நகுதலைவடம் முடிமிசை அணி பெருமையர்,
எரிதரும் உருவினர், இமையவர் தொழுவது ஓர் இயல்பினர்,
புரிதரு குழல் உமையொடும் இனிது உறை பதி--புறவமே.

Siva is clad in the striped skin of a tiger; He wields
a throwing *malu*; He wears on His crest a smiling
skull as a garland; He is the One of unquestionable fame.
His ruddy body blazes like fire; He is hailed and adored
by the Devas. He is sweetly entempled in Puṟavam
with Uma whose tresses are plaited beautifully. 7

921. வசி தரும் உருவொடு மலர்தலை உலகினை வலிசெயும்
நிசிசரன் உடலொடு நெடு முடிஒருபதும் நெரிவுஉற
ஒசிதர ஒருவிரல் நிறுவினர், ஒளி வளர் வெளிபொடி
பொசிதரு திருஉரு உடையவர், உறைபதி--புறவமே.

Siva pressed His toe on His Mount and crushed beneath it
the puissant Ravana who armed with his sword, sorely
distressed the dwellers of this extensive earth. Siva cracked
his body and his ten huge heads causing him to wilt.
Siva is bedaubed with the white and dazzling holy ash.
Such, indeed, is His splendorous form.
Lo, He is entempled in Puṟavam. 8

922. தேன் அகம் மருவிய செறிதரு முளரிசெய்தவிசினில்
ஊன் அகம் மருவிய புலன் நுகர்வு உணர்வு உடை ஒருவனும்,
வானகம் வரைஅகம் மறிகடல் நிலன் எனும் எழுவகைப்
போனகம் மருவினன், அறிவு அரியவர் பதி--புறவமே.

Brahma is ensconced on the melliferous and densely-
petalled Lotus. As commanded by Siva, he evolves
for entia their bodies, limbs, worlds and experience.

Of yore, Vishnu devoured the septet of worlds inclusive of
the heavens, the mountains, the oceans and the earth.
Siva is, indeed, beyond the ken of comprehension of these two.
He, even He, is entempled in Pur̲avam.
9

923. கோசரம் நுகர்பவர், கொழுகிய துவர் அன துகிலினர்,--
பாசுர வினை தரு பளகர்கள், பழி தரு மொழியினர்--
நீசரை விடும், இனி! நினைவுஉறும்--நிமலர்தம் உறைபதி,
பூசுரர் மறை பயில் நிறை புகழ் ஒலி மலி, புறவமே!

The Samaṇas eat fishes that thrive in water;
the Buddhists are shrouded in ochre robes; these sing
songs bereft of sense; these are sinners; eke are
they the scandal-mongers.
Be distanced from these and do contemplate the *Ninmala*.
He is entempled in Pur̲avam where Brahmins—the Devas
on earth—, cultivate the Vedas and hail aloud
the polyphiloprogenitive glory of Siva.
10

924. போது இயல் பொழில் அணி புறவ நன்நகர் உறை புனிதனை,
வேதியர்அதிபதி--மிகு தலை தமிழ் கெழு விரகினன்--
ஓதிய ஒருபதும் உரியதுஓர் இசை கொள உரைசெயும்
நீதியர் அவர், இரு நிலன்இடை நிகழ்தரு பிறவியே.

Hailing the Holy One of the goodly city of Pur̲avam girt with
flowery gardens, Gnānasambandhan, the Chief of
Brahmins, the adroit master of the capital tongue that is Tamil,
has sung these hymns, ten in number.

They that fail not to recite duly these psalms in their *paṇs,* will be
exempt from rebirth on this immense and extensive earth. 11

85. திரு வீழிமிழலை

திருவிராகம் சாதாரி

925. மட்டு ஒளி விரிதரு மலர் நிறை சுரிகுழல் மடவரல்--
பட்டு ஒளி மணி அல்குல் உமை--அமை உரு ஒருபாகமா,
கட்டு ஒளிர்புனலொடு கடிஅரவு உடன்உறை முடிமிசை
விட்டு ஒளி உதிர் பிதிர் மதியவர் பதி--விழிமிழலையே.

85. TIRUVEELIMILALAI

Tiruvirākam Sāthāri

Bashful Uma's curly coiffure is decked with melliferous
and blowing fragrant flowers.
On Her garment of silken drift that covers Her *alkul*, She is
cinctured with a gem-inlaid cingulum.
Siva is concorporate with Her.
On His matted crest, Siva bears the Ganga, a stinging snake
and the crescent of coruscating rays.
He is entempled in the polis of Veelimilalai. 1

926. எண் நிற வரி வளை, நெறிகுழல், எழில் மொழி, இளமுலைப்-
பெண் உறும் உடலினர்; பெருகிய கடல்விடம் மிடறினர்;
கண் உறு நுதலினர்; கடியது ஓர் விடையினர்; கனலினர்;
விண் உறு பிறை அணி சடையினர்; பதி--விழிமிழலையே.

Siva is concorporate with His Woman whose hands are
decked with striped bangles galore; comely is Her
dense coiffure; Her speech is splendorously enchanting
and young are Her buxom breasts.
Siva holds in His throat the venom that spread ubiquitously
and which uprose from the main.
His forehead sports an eye.
His mount is the Bull of swift gait. He holds fire in His palm.
On His matted crest rests the skyey crescent.
He is, indeed, entempled in the polis of Veelimilalai. 2

927. மைத் தரு மதர் விழி மலைமகள்உரு ஒருபாகமா
வைத்தவர், மதகரி உரிவைசெய்தவர், தமை மருவினார்
தெத்தென இசை முரல் சரிதையர், திகழ்தரும் அரவினர்,
வித்தக நகுதலை உடையவர், இடம்--விழிமிழலையே.

Siva is concorporate with the Daughter of Himavant
and Her bewitching eyes are touched with khol.
He peeled off the skin of the musty Tusker; He is adored by
His devotees who hail Him in dulcet hymns, keeping time.
He is adorned with an adder; He holds a wondrous skull
that seems to smile. 3
Lo, He is entempled in the urbs of Veelimillalai.

928. செவ் அழல் என நனி பெருகிய உருவினர், செறிதரு
கவ்வு அழல்அரவினர்; கதிர் முதிர் மழுவினர்; தொழு இலா
முவ்அழல் நிசிசரர் விறல் அவை அழிதர, முது மதில்
வெவ்அழல் கொள, நனி முனிபவர்; பதி--விழிமிழலையே.

Siva's incarnadine body blazes like ruddy fire;
He is cinctured with a serpent of fiery poison and which
can seize its prey on a sudden.
His *malu* blazes with brilliance. His wrath gutted with
fire the hoary triad of the walled-citadels of the irate
and hostile Asuras who would not adore Him.
He is entempled in the polis of Veelimilalai. 4

929. பைங்கணது ஒரு பெரு மழலை வெள் ஏற்றினர்; பலி எனா
எங்கணும் உழிதர்வர்; இமையவர் தொழுது எழும் இயல்பினர்;
அங்கணர்; அமரர்கள் அடிஇணை தொழுது எழ, ஆரமா
வெங் கண அரவினர்; உறைதரு பதி--விழிமிழலையே.

Siva's mount is the white Bull whose eyes are ever fresh
and whose mooing is mildly thunderous.
He roams about begging alms in all places; He is ever
adored by the Devas; eke is He worshipped by the Brahmins
of merciful eyes, who are the Devas on earth.
He is adorned with a fierce-eyed adder.
In love is He entempled in the polis of Veelimilalai. 5

930. பொன் அன புரிதரு சடையினர், பொடி அணி வடிவினர்,
உன்னினர் வினை அவை களைதலை மருவிய ஒருவனார்,
தென்னென இசை முரல் சரிதையர், திகழ்தரும் மார்பினில்
மின் என மிளிர்வது ஓர் அரவினர், பதி--விழிமிழலையே.

The twisted strands of Siva's matted crest glister like gold;
His body is bedaubed with the powder of the holy ash.

He is the Peerless One who weeds out the karma of those
who ever contemplate Him adoringly.
His annals are hailed is dulcet music.
On His splendorous chest, He sports a fulgurant serpent.
His delubrum is the polis of Veelimilalai. 6

931. அக்கினொடு, அரவு,--அரை--அணி திகழ் ஒளியது ஓர் ஆமை, பூண்டு
இக்கு உக, மலி தலை கலன் என இடு பலி ஏகுவர்;
கொக்கரை, குழல், முழ, விழவொடும் இசைவது ஓர் சரிதையர்;
மிக்கவர்; உறைவது--விரை கமழ் பொழில் விழிமிழலையே.

Siva wears on His waist bones and a serpent; He is adorned
with a bright carapace on His chest.
He wields words sweet like the juice of sugarcane.
He receives alms in His begging-bowl—a skull.
He rejoices in the celebration of festivals held in His honour
where the musical instruments of *kokkarai, kulal,*
mulavam and the like are orchestrated.
He is the Almighty who is enshrined in the polis of
Veelimilalai girt with fragrant gardens. 7

932. பாதம் ஓர்விரல் உற, மலை அடர் பலதலை நெரிதர,
பூதமொடு அடியவர் புனை கழல் தொழுது எழு புகழினர்;
ஓதமொடு ஒலிதிரை படு கடல் விடம் உடை மிடறினர்;
வேதமொடு உறு தொழில் மதியவர்; பதி--விழிமிழலையே.

Siva pressed His toe on His Mount and crushed
Ravaṇa beneath it and cracked His ten heads.

His Bhūtas and His servitors hail and adore His
ankleted feet and celebrate His glory.
He quaffed the venom that uprose from the main of
dinsome waves and retained it in His throat.
He is entempled in Veelimilalai where dwell the wise
Brahmins who chant the Vedas and duly perform
the sestet of their duties. 8

933. நீர் அணி மலர்மிசை உறைபவன், நிறை கடல் உறு துயில்
நாரணன், என இவர்இருவரும்--நறுமலர் அடி முடி
ஓர் உணர்வினர்--செலல்உறல் அரும் உருவினொடு ஒளி திகழ்
வீர(அ)ணர் உறைவது--வெறி கமழ் பொழில் விழிமிழலையே.

When Brahma who is ensconced on the Lotus that thrives
in water and Vishnu who slumbers on the main abounding
in water, borne by the penchant to behold His crown
decked with flowers and His suaveolent and flower-like
feet, Siva soared up and up as an immense column
of flame, unbeholdable by them.
Siva, the Hero par excellence, is entempled in the polis
of Veelimilalai girt wth gardens where
incense-breathing flowers aplenty burgeon. 9

934. இச்சையர், இனிது என இடு பலி; படுதலை மகிழ்வது ஓர்
பிச்சையர்; பெருமையை இறைபொழுது அறிவு என உணர்வு இலர்
மொச்சைய அமணரும், முடை படு துகிலரும், அழிவது ஓர்
விச்சையர்; உறைவது--விரை கமழ் பொழில் விழிமிழலையே.

The Samaṇas know not a whit of Siva's glory who
willingly receives alms in His begging-bowl—the skull
of Brahma's; the stinking Samaṇas are the unwashed;
the Buddhists do not full their robes they wear.
Siva causes the degradation of these.
He is entempled in Veelimilalai girt with gardens
abounding in fragrant flowers. 10

935. உன்னிய அருமறை ஒலியினை முறை மிகு பாடல்செய்
இன்இசையவர் உறை எழில் திகழ் பொழில் விழிமிழலையை,
மன்னிய புகலியுள் ஞானசம்பந்தன வண்தமிழ்
சொன்னவர் துயர் இலர்; வியன்உலகு உறு கதி பெறுவரே.

Gnānasambandhan of the aeviternal Pukali, has
sung these weal-conferring hymns on the shrine of
Veelimilalai where dwell the Brahmins who duly
chant the Vedas in *chhandas* and where abound
many splendorous gardens.
They that duly chant these psalms will lead trouble- free
lives on earth and eventually gain *moksha*. 11

86. திருச் சேறை

திருவிராகம்

சாதாரி

936. முறி உறு நிறம் மல்கு முகிழ்முலை மலைமகள் வெருவ, முன்,
வெறி உறு மதகரி அதள்பட உரிசெய்த விறலினர்;
நறி உறும் இதழியின்மலரொடு, நதி, மதி, நகுதலை,
செறிஉறு சடைமுடி அடிகள்தம் வள நகர்--சேறையே.

86.TIRUCCHĒR̲AI

Tiruvirākam

Sāthāri

Siva, the Puissant One, peeled off the derma of the raging
and musty Tusker at which Uma, the Daughter of Himavant
endowed with the splendorous complexion, spray-like,
and budding breasts, stood scared.
He is the Noble God who bears on His dense matted crest
the fragrant and petalled konr̲ais, the Ganga
and a skull that seems to smile.
He is entempled in the uberous city of Chēr̲ai. 1

937. புனம் உடை நறுமலர்பலகொடு தொழுவது ஓர் புரிவினர்--
மனம் உடை அடியவர்--படு துயர் களைவது ஓர் வாய்மையர்,
இனம் உடை மணியினொடு அரசுஇலை ஒளிபெற மிளிர்வது ஓர்
சினம் முதிர் விடை உடை அடிகள்தம் வள நகர்--சேறையே.

Siva truly annuls the sorrows of those devotees who
pluck many fragrant flowers from the woodland,
strew them on His feet and thus adore Him,
and of those who with their steadfast *manams* meditate
on Him. His mount is the irate Bull decked with
a chain of tintinnabula on its neck and is
adorned with a splendorous and bright
ornament like unto the leaf of a *pepal* tree.
The Noble One is entempled in Chēr̲ai—the city of foison. 2

938. புரிதரு சடையினர்; புலிஅதள் அரையினர்; பொடி புல்கும்
எரி தரும் உருவினர்; இடபம்அது ஏறுவர்; ஈடு உலா
வரி தரு வளையினர் அவர்அவர் மகிழ்தர, மனைதொறும்
திரிதரு சரிதையர்; உறைதரு வள நகர்--சேறையே.

Siva's crest is abounding in the twisted strands of matted hair;
His waist is clad in the skin of a tiger; His complexion
is like fire covered by the powder of the holy ash.
His mount is the Bull. He solicits alms in all the homes
from the rejoicing women whose bangles slide beholding Him.
He is entempled in the prosperous polis of Chērai. 3

939. துடி படும் இடை உடை மடவரல்உடன் ஒரு பாகமா,
இடிபடு குரல் உடை விடையினர்; படம் உடை அரவினர்;
பொடி படும் உருவினர்; புலி உரி பொலிதரும் அரையினர்;
செடி படு சடைமுடி அடிகள்தம் வள நகர்--சேறையே.

Siva is concorporate with His bashful Consort whose slender
waist is like unto a *tudi*; His mount is the Bull
whose voice is like that of the rumbling thunder.
He is adorned with a hooded adder; His form is coated
with the holy ash.
His waist is splendorously clad in the skin of a tiger.
Dense matted hair constitutes His crest. 4
He is entempled in the prosperous polis of Chērai.

940. அந்தரம் உழிதரு திரிபுரம், ஒரு நொடிஅளவினில்
மந்தரவரிசிலை அதன்இடை அரவு அரிவாளியால்,
வெந்து அழிதர எய்த விடலையர்; விடம் அணி மிடறினர்;
செந்தழல் நிறம் உடை அடிகள்தம் வள நகர்--சேறையே.

With the Mountain as His well-crafted bow the string
of which was the snake Vāsuki, He, the Hero par excellence,
sped the Agni-tipt arrow and in a trice, gutted
with fire the triad of the Asuras' walled-citadels
which roamed freely in the heavens.
His throat bears a patch of the oceanic venom.
The Noble One whose complexion is incarnadine like
the ruddy fire, is entempled in the uberous city of Chērai. 5

941. மந்தரம் உறு திறல் மறவர்தம் வடிவுகொடு, உருவு உடைப்
பத்துஒருபெயர் உடை விசயனை அசைவு செய் பரிசினால்,
அத்திரம் அருளும் நம் அடிகளது அணி கிளர் மணி அணி
சித்திர வள நகர்--செறி பொழில் தழுவிய சேறையே.

Assuming the form of a hunter—impregnable as the Mantara
Mountain—, Siva fought with Arjuna whose names are ten,
and caused him to wilt and then blessed Him with the *Pāsupata*
Astra. He, our Noble God, is entempled in the dazzlingly
picturesque, ornate and gemmy city of uberty,
namely Chērai girt with dense gardens. 6

942. பாடினர், அருமறை முறைமுறை; பொருள் என அருநடம்-
ஆடினர்; உலகுஇடை அலர்கொடும் அடியவர் துதிசெய,
வாடின படுதலை இடு பலிஅதுகொடு மகிழ்தரும்
சேடர்தம் வள நகர்--செறி பொழில் தழுவிய சேறையே.

Siva duly sings the catena of the Vedas. He enacts
the purpose-oriented dance.
He blesses His devotees of this world who hail Him with flowers.
He is pleased to receive alms in the faded skull of Brahma's.
He, the singularly great One, is entempled in
the prosperous polis of Chē̱rai girt with serried gardens. 7

943. கட்டு உரம்அதுகொடு கயிலை நல் மலை நலி கரம் உடை
நிட்டுரன் உடலொடு நெடு முடிஒருபதும் நெரிசெய்தார்,
மட்டு உரம் மலர் அடி அடியவர் தொழுது எழ அருள்செயும்
சிட்டர்தம் வள நகர்--செறி பொழில் தழுவிய சேறையே.

When Ravaṇa, with the puissance of his well-built body,
durst uproot the Mount Kailas with his many hands, Siva crushed
the evil one's body with its ten long and crowned heads.
He graces His devotees who prostrate in His presence
to adore His fragrant and flower-soft feet twain
and rise up beseeching His benediction.
He, the singularly great One, is entempled in the prosperous 8
polis of Chē̱rai girt with serried gardens.

944. பன்றியர், பறவையர், பரிசு உடை வடிவொடு படர்தர,
அன்றிய அவர்அவர், அடியொடு முடி அவை அறிகிலார்,
நின்று இரு புடை பட, நெடுஎரி நடுவெ ஓர் நிகழ்தரச்
சென்று, உயர் வெளி பட அருளியஅவர் நகர்--சேறையே.

When Vishnu as a boar and Brahma as a swan went in quest of Him, Siva soared up and up as an immense column of flame, the base and the top of which were unbeholdable by them. It is thus He made manifest gracefully His inaccessible loftiness.
He is entempled in prosperous polis of Chēṟai. 9

945. துகள் துறு விரி துகில் உடையவர், அமண் எனும் வடிவினர்,
விகடம்அது உறு சிறுமொழிஅவை நலம் இல; வினவிடல்!
முகிழ்தரும் இளமதி அரவொடும் அழகுஉற, முதுநதி
திகழ்தரு சடைமுடி அடிகள்தம் வள நகர்--சேறையே.

The Buddhists are shrouded in their dirty robes; the Samaṇas are clad in their skin only. The mischievous small talk in which they indulge is absolutely futile. Listen not to them. Siva wears on His splendorous matted crest the bud-like crescent, the snake and the hoary Ganga.
He is entempled in the prosperous polis of Chēṟai. 10

946. கற்ற நல்மறை பயில் அடியவர் அடி தொழு கவின் உறு ·
சிற்றிடையவளொடும் இடம் என உறைவது ஓர் சேறைமேல்,
குற்றம் இல் புகலியுள் இகல் அறு ஞானசம்பந்தன
சொல்,-தகவு உற மொழிபவர் அழிவு இலர்; துயர் தீருமே.

The ever-friendly Gnānasambandhan of the unflawed Pukali,
has sung these hymns on the God of Chēṟai who is
concorporate with His comely and willowy-waisted Consort.
His feet are hailed and adored by them that are
well versed in the goodly quartet of the Vedas.
They that duly cultivate and sing these psalms will be free from
all troubles; eke will they be blessed with athanasy. 11

87. திரு நள்ளாறு

திருவிராகம்

சாதாரி

947. தளிர் இள வளர் ஒளி தனது எழில் தரு திகழ் மலைமகள்
குளிர் இள வளர் ஒளி வனமுலை இணை அவை குலவலின்,
நளிர் இள வளர் ஒளி மருவும் நள்ளாறர்தம் நாமமே,
மிளிர் இள வளர்எரி இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

87. TIRUNAḶḶĀṞU

Tiruvirākam

Sāthāri

Like the leaf-bud growing green day by day, the splendorous
grace of the Daughter of Himavant grows accrescent;
Siva embraces Her whose comely breasts twain are cool
and delicate; even so is the ever-fresh glory of the God
of Naḷḷāṟu's name that is cool with accrescent lustre.
If the leaves embodying His name are consigned to the raging
fire, they will but dazzle like His divine body, 1
and truly thrive undamaged.

[Note. The leaves consigned to the fire, in the ordeal by fire, opened thus: "Bhogamārttha pū ṇ Mulaiyaḷ." The raging fire but added lustre to the leaves containing the decad which came to be known as "Pacchai-p-Patikam (the ever green and fresh decad.]

948. போது அமர்தரு புரிகுழல் எழில் மலைமகள் பூண் அணி
சீதம் அது அணிதரு முகிழ்இளவனமுலை செறிதலின்,
நாதம் அது எழில் உரு அனைய நள்ளாறர்தம் நாமமே,
மீ தமது எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The coffiure of the comely Daughter of Himavant is decked
with flowers; Her bud-like young breasts are bejewelled
and are coated with the cool and fragrant paste; these
are embraced by Siva.
As the leaves are inscribed with the sacred name of Siva,
poised in *para-Nātham*, even when they are consigned
to the fire, they dazzle like His body; they will,
in truth, thrive undamaged. 2

949. இட்டு உறும் மணி அணி இணர் புணர் வளர் ஒளி எழில் வடம்
கட்டுஉறு கதிர் இளவனமுலைஇணையொடு கலவலின்,
நட்டு உறு செறி வயல் மருவு நள்ளாறர்தம் நாமமே,
இட்டு உறும் எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

Uma wears the chain inlaid with well-set gems; it is
very like a garland of burgeoning blossoms; Her lustrous
and tender breasts are embraced by Siva, the God of
Naḷḷāṟu girt with fields where grow thick the crops.

As the leaves contain the divine decad celebrating His
glorious name, even when they are consigned to the fire
they will, without doubt, flourish undamaged. 3

950. மைச்சு அணி வரி அரிநயனி தொல்மலைமகள் பயன் உறு
கச்சு அணி கதிர் இளவனமுலை அவையொடு கலவலின்,
நச்சு அணி மிடறு உடை அடிகள் நள்ளாறர்தம் நாமமே,
விண் இயல் எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The eyes of the Daughter of Himavant are streaked red
and are tinct with khol; Her young and bright breasts
covered by a breast-band are embraced by the Noble
One, the God of Naḷḷāṟu who quaffed the oceanic venom
and retained it in His throat.
The leaves celebrating His sacred name when consigned
to the fire, will, in truth, thrive undamaged. 4

951. பண் இயல் மலைமகள் கதிர்விடு பரு மணி அணி நிறக்
கண் இயல் கலசம்அது அன முலைஇணையொடு கலவலின்,
நண்ணிய குளிர்புனல் புகுதும் நள்ளாறர்தம் நாமமே,
விண் இயல் எரியினில் இடில், இவை பழுதுஇலை; மெய்ம்மையே!

The words of the Daughter of Himavant are tuneful
like *paṇ*; She is adorned with gems of purest ray serene.
Her breasts are like the enchanting golden goblets.
These are embraced by Siva, the God of Naḷḷāṟu
made fecund by he cool and flowing water.

The hymns of these leaves celebrate Him. So, ever if
    they are consigned to the fire that soars up sky-high,
    they will, in truth, flourish absolutely undamaged. 5

952. போது உறு புரிகுழல் மலைமகள் இள வளர் பொன் அணி
சூது உறு தளிர் நிற வனமுலை அவையொடு துதைதலின்,
தாது உறு நிறம் உடை அடிகள் நள்ளாறர்தம் நாமமே,
மீது உறும் எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The Daughter of Himavant is endowed with plaited hair
    decked with flowers; She is the bejewelled belle.
Her leaf-bud-hued and comely and close-set breasts
    like unto dice, are embraced by Siva, the golden-hued
    and Noble God of Naḷḷāṟu.
As these leaves of hymns celebrate His sacred name,
    even if they are consigned to the fire that rises up and up,
    they will flourish absolutely undamaged. 6

953. கார் மலி நெறிபுரிசுரிகுழல் மலைமகள் கவின் உறு
சீர் மலிதரும் மணி அணி முலை திகழ்வொடு செறிதலின்,
தார் மலி நகுதலை உடைய நள்ளாறர்தம் நாமமே,
ஏர் மலி எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The Daughter of Himavant is endowed with the nimbus-hued
    tresses. Her close-set breasts adorned with jewels
    inlaid with splendorous gems are embraced by Siva
    who wears the garland of a skull that seems to smile.

He, indeed, is the God of Naḷḷāṟu.
As these leaves of hymns celebrate His name, even if
they are consigned to the upsoaring fire, they will,
in truth, thrive absolutely undamaged.
7

954. மன்னிய வளர் ஒளி மலைமகள் தளிர்நிறம் மதம் மிகு
பொன் இயல் மணி அணி கலசம்அது அன முலை புணர்தலின்,
தன் இயல் தசமுகன் நெறிய, நள்ளாறர்தம் நாமமே,
மின் இயல் எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The complexion of the Daughter of Himavant is like
a leaf-bud. Her accrescent lustre is sempiternal;
She is coated with musk. Her jewels are gem-inlaid;
Her twin breasts are like a pair of golden goblets which
are embraced by Siva.
Of yore, Siva crushed beneath His Mount Ravaṇa who was
full of himself. Siva is, indeed, the God of Naḷḷāṟu.
As these leaves of hymns eulogise His sacred name,
even if they are consigned to the fulgurant fire,
they will flourish absolutely without damage.
8

955. கான் முக மயில்இயல் மலைமகள் கதிர்விடு கனம் மிகு
பால் முகம் அயல் பணைஇணைமுலை துணையொடு பயிறலின்,
நான்முகன் அரி அறிவு அரிய நள்ளாறர்தம் நாமமே,
மேல் முக எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!
The mien of the Daughter of Himavant is like unto the sylvan
peacock's. Her bright breasts are abundantly lactiferous
and they are embraced by Siva who is inaccessible to

Brahma as well as Vishnu.
As these leaves of hymns celebrate the name of the God
of Naḷḷāṟu, even if they are consigned to the upsoaring
fire, they will flourish absolutely undamaged. 9

956. அத்திரநயனி தொல்மலைமகள் பயன் உறும் அதிசயச்
சித்திர மணி அணி திகழ் முலைஇணையொடு செறிதலின்,
புத்தரொடு அமணர் பொய் பெயரும் நள்ளாறர்தம் நாமமே,
மெய்த் திரள் எரியினில் இடில், இவை பழுது இலை; மெய்ம்மையே!

The eyes of the Daughter of Himavant are sharp like
an arrow. Her deeds are fraught with the wonder
of splendour. Her beautiful breasts are adorned with
jewels and gems. Siva embraces Her in love.
The Buddhists and the Samaṇas know nought of Him
who is the God of Naḷḷāṟu. Falsehood flees away from Him.
As these leaves of hymns hail His name, even when they
are consigned to the fire that soars up densely,
they will thrive absolutely, undamaged. 10

957. சிற்றிடை அரிவைதன் வனமுலைஇணையொடு செறிதரும்
நல்-திறம் உறு, கழுமலநகர் ஞானசம்பந்தன
கொற்றவன் எதிர்இடை எரியினில் இட, இவை கூறிய
சொல்-தெரி ஒருபதும் அறிபவர் துயர் இலர்; தூயரே.

Gnānasambandhan of the weal-conferring Kaḻumalam,
has sung these hymns on the God of Naḷḷāṟu who is
ever companied with the willowy-waisted Uma of
beautiful breasts, in the presence of the Pāndya

and dropped these into the fire.

They that hail these ten psalms, will be freed from misery.
Lo, they will ever be poised in sheer purity.

11

88. திரு விளமர்

திரு விராகம்

சாதாரி

958. மத்தகம் அணி பெற மலர்வது ஓர் மதி புரை நுதல், கரம்
ஒத்து, அகம் நக, மணி மிளிர்வது ஓர் அரவினர்; ஒளி கிளர்
அத் தகவு அடி தொழ, அருள் பெறு கணனொடும் உமையவள்-
வித்தகர்; உறைவது--விரி பொழில் வள நகர்--விளமரே.

88. TIRUVIḶAMAR

Tiruvirākam

Sāthāri

Siva's forehead is like the splendorous crescent He wears
on His head. His bright bracelet, like unto His nails, is
the five-headed snake whose gems are lustrous;
such indeed, is His beautiful form.
Siva, the *Vikirta*, concorporate with Uma whose eyes are
suffused with grace, is entempled in the prosperous polis
of Viḷamar girt with extensive gardens.
He is so enshrined that we could adore His feet twain 1
and stand blessed.

959. பட்டு இலகிய முலை அரிவையர் உலகினில் இடு பலி
ஒட்டு இலகு இணைமரவடியினர், உமை உறு வடிவினர்,
சிட்டு இலகு அழகிய பொடியினர், விடைமிசை சேர்வது ஓர்
விட்டு இலகு அழகு ஒளி பெயரவர், உறைவது--விளமரே.

Siva whose feet are fastened with the footwear wrought of
wood, goes about singing soliciting alms from the women
of this earth whose breasts are covered by silk.
He is concorporate with Uma. He is bedaubed with
the especially holy ash, the indicant of pure Gnosis.
He rides the Bull; His gait is supremely enchanting.
He is entempled in Viḷamar. 2

960. அம் கதிர் ஒளியினர்; அரைஇடை மிளிர்வது ஓர் அரவொடு,
செங்கதிர் அள நிறம், அனையது ஓர் செழு மணி மார்பினர்;
சங்கு, அதிர் பறை, குழல், முழவினொடு, இசைதரு சரிதையர்;
வெங்கதிர் உறும் மழு உடையவர்; இடம் எனில்--விளமரே.

His form is splendorously radiant; He is cinctured with
a serpent in His waist. His hue is ruddy like the sun.
His chest is adorned with bright jewels inlaid with gems.
He dances to the orchestrated and musical sound of
chank, drum, flute and *mrudangam*.
He is armed with the weapon of *malu* blazing white.
He is entempled in Viḷamar. 3

961. மாடம்அது என வளர் மதில்அவை எரிசெய்வர், விரவு சீர்ப்
பீடு என அருமறை உரைசெய்வர், பெரிய பல்சரிதைகள்
பாடலர், ஆடிய சுடலையில் இடம் உற நடம் நவில்
வேடம்அது உடையவர், வியல் நகர் அது சொலில்--விளமரே.

Siva gutted with fire the triad of the walled-citadels
which were like the lofty and storeyed mansions.

He is the Author of the Vedas which hymn His glory and grandeur.
His many and variform annals are ecstatically sung
by His devotees. He is the splendorous Dancer whose
forum is the crematorium.
He is entempled in the extensive polis of Viḷamar. 4

962. பண்தலை மழலைசெய் யாழ்எனமொழிஉமை பாகமாக்
கொண்டு, அலை குரைகழல் அடி தொழுமவர் வினை குறுகிலர்--
விண்தலை அமரர்கள் துதிசெய--அருள்புரி விறலினர்;
வெண்தலை பலி கொளும் விமலர்தம் வள நகர்--விளமரே.

Siva is concorporate with *Uma* whose words are
dulcet and tuneful like the *yāl*.
Karma will not get attached to them who worship His
resounding, vibrating and beckoning ankleted feet.
He is the Almighty who blesses with grace,
the ethereal Devas who hail and adore Him.
He is the *Vimala* who receives alms in a skull.
He is entempled in the uberous Viḷamar. 5

963. மனைகள்தொறு இடு பலிஅது கொள்வர், மதி பொதி சடையினர்,
கனைகடல் அடு விடம் அமுதுசெய் கறை அணி மிடறினர்,
முனை கெட வரு மதில் எரிசெய்தஅவர், கழல் பரவுவார்
வினை கெட அருள்புரி தொழிலினர், செழு நகர்--விளமரே.

Siva receives alms from every house; His matted crest
bears the crescent; He quaffed the venom of the roaring main
as though it were ambrosia and retained it in His throat
that stands stained.

He gutted with fire the triad of the walled-citadels of
the belligerent Asuras. He annuls, in grace, the karma
of those that adore His ankleted feet.
He is entempled in Viḷamar. 6

964. நெறி கமழ்தரும் உரை உணர்வினர், புணர்வுஉறு மடவரல்
செறி கமழ்தரு உரு உடையவர், படைபல பயில்பவர்,
பொறி கமழ்தரு படஅரவினர், விரவிய சடைமிசை
வெறி கமழ்தரு மலர் அடைபவர், இடம் எனில்--விளமரே.

Siva is the preceptor of the way to *moksha*; concorporate
is He with His bashful Consort. He is an Adept in
wielding weapons galore.
He is adorned with the speckled and hooded adder.
On His extensive matted hair, He sports the Ganga,
the crescent, the snake and the incense-breathing blossoms.
He is, indeed, entempled in Viḷamar. 7

965. தெண்கடல் புடை அணி நெடுமதில் இலங்கையர் தலைவனைப்
பண் பட வரை தனில் அடர்செய்த பைங்கழல் வடிவினர்,
திண் கடல் அடை புனல் திகழ்சடை புகுவது ஓர் சேர்வினார்,
விண் கடல்விடம் மலி அடிகள்தம் வள நகர்--விளமரே.

Siva whose feet are fastened with the ever-fresh anklets
crushed beneath His Mount the sovereign of Lanka girt
with clear-watered seas, and tamed him.
He wears on His crest the Ganga whose destination is the sea.

He quaffed and retained in His throat the venom that uprose
from the celestial sea of milk.
He is entempled in Viḷamar—the city of foison. 8

966. தொண்டு அசைவுஉற வரு துயர் உறு காலனை மாள்வுஉற
அண்டல்செய்து, இருவரை வெருஉற ஆர் அழல் ஆயினார்;
கொண்டல் செய்தரு திருமிடறினர்; இடம் எனில்--அளிஇனம்
விண்டு இசைஉறு மலர் நறு மது விரி பொழில் விளமரே.

Siva smote Yama who strode forth to snatch the life
of Mārkandēya and thus upset his service to Siva.
He soared up and up as an immense flame seeing which
Vishnu and Brahma were affrighted.
His throat wears a nimbus-hued dark patch.
He is entempled in Viḷamar girt with extensive gardens
where bees so buzz the melliferous blossoms that they burgeon. 9

967. ஒள்ளியர் தொழுது எழ, உலகினில் உரைசெயும் மொழிபல;
கொள்ளிய களவினர் குண்டிகையவர்--தவம் அறிகிலார்--
பள்ளியை மெய் எனக் கருதன்மின்! பரிவொடு பேணுவீர்,
வெள்ளிய பிறை அணி சடையினர் வள நகர்விளமரே!

There are many faiths in the world adhered to by the wise.
There are also languages compact of lofty concepts.
The Samaṇas are like the ash-covered fire who tote
water jugs. These and the Buddhists steal the great
thoughts of others and declare them as their own.

These know not what true *tapas* is. Be distanced from their habitats.
Siva wears on His crest the argent crescent.
He is entempled in the prosperous polis of Viḷamar.
Do serve Him with devotion deep. 10

968. வெந்தவெண்பொடி அணி அடிகளை, விளமருள் விகிர்தரை,
சிந்தையுள் இடைபெற உரைசெய்த தமிழ்இவை--செழுவிய
அந்தணர் புகலியுள் அழகு அமர் அருமறை ஞானசம்-
பந்தன மொழிஇவை--உரைசெயுமவர் வினை பறையுமே.

Gnānasambandhan well versed in the rare Vedas
beautiful, hails from Pukali where dwell Brahmins.
On the Noble God of Viḷamar who is a *Vikirta* coated
with the powder of the white ash, he has composed
these hymns installing Siva in his bosom firmly.
The karma of those that cultivate these psalms, will perish. 11

89. திருக் கொச்சைவயம் சாதாரி

969. திருந்து மா களிற்று இள மருப்பொடு திரள் மணிச் சந்தம் உந்தி,
குருந்து மா குரவமும் குடசமும் பீலியும் சுமந்து கொண்டு,
நிரந்து மா வயல் புகு நீடு கோட்டாறு சூழ் கொச்சை மேவிப்
பொருந்தினர் திருந்து அடி போற்றி வாழ், நெஞ்சமே! புகல் அது ஆமே.

89. TIRUKKOCHAIVAYAM Sathāri

The Kāviri, the banks of which are large and long, flows
carrying in its current the beautiful ivory tusks of young
tuskers, heaps of gems and sandalwood trees.

It also bears the trees of *kuruntu, mango, kuravam, kutasam*
and the like along with the feathers of peacocks, and spreads.
Through its channels it feeds the fields.
Kocchaivayam is on the banks of this river where
Siva is entempled willingly.
O heart, hail and adore His sacred feet which alone
constitute our sole Palladium.
1

970. ஏலம் ஆர் இலவமோடு இனமலர்த்தொகுதிஆய் எங்கும் நுந்தி,
கோல மா மிளகொடு கொழுங் கனி கொன்றையும் கொண்டு, கோட்டாறு
ஆலியா, வயல் புகும் அணிதரு கொச்சையே நச்சி மேவும்
நீலம் ஆர் கண்டனை நினை, மட நெஞ்சமே! அஞ்சல், நீயே!

The Kāviri, the banks of which are long and large,
carries in its waves the fragrant cardamom, *ilavaṅkam*,
along with suaveolent flowers, the comely lianas of pepper,
the ripe fruit and konṟai flowers; so it is dinsome;
it feeds the fields with its channels.
The ornate Kocchaivayam is on the banks of this river, where
Siva, the blue-throated God, is willingly enshrined. 2
O fond heart, do not fear. Do contemplate Him.

971. பொன்னும் மா மணி கொழித்து, எறி புனல், கரைகள்வாய் நுரைகள் உந்தி,

கன்னிமார் முலைநலம் கவர வந்து ஏறு கோட்டாறு சூழ
மன்னினார் மாதொடும் மருவு இடம்கொச்சையே மருவின், நாளும்
முன்னைநோய் தொடரும்ஆறு இல்லைகாண், நெஞ்சமே! அஞ்சல், நீயே!

The Kāviri, the banks of which are long and large, flows
with foam and shores up gold and great gems. It removes
from the breasts of bathing virgins the paste
of sandalwood and other unguents.
Kocchaivayam is on the banks of this river, where Siva who is
for ever concorporate with His Consort is willingly entempled.
O heart, fear not; may you always dwell here. Your redemption
will be gained with ease, if the feet of our Sire are contemplated. 3

972. கந்தம் ஆர் கேதகைச் சந்தனக்காடு சூழ் கதலிமாடே
வந்து, மா வள்ளையின் பவர் அளிக் குவளையைச் சாடி ஓட,
கொந்து வார்குழலினார் குதிகொள் கோட்டாறு சூழ் கொச்சை மேய
எந்தையார் அடி நினைந்து, உய்யல் ஆம், நெஞ்சமே! அஞ்சல், நீயே!

The Kāviri, the banks of which are long and large,
flows encirching the garden where thrive the fragrant-
screw-pine and trees of sandalwood and passes the nearby
banana gardens, carrying in its current the bunches of *vallai* lianas.
Kocchaivayam is on the banks of this river where
our Sire is willingly entempled.
In its pools plunge women whose tresses are decked with
the bunches of flowers and cause the bees buzzing
the lily flowers, to wing away.
O heart, fear not. Redemption is gained by contemplating
the sacred feet of our Sire. 4

973. மறை கொளும் திறலினார் ஆகுதிப் புகைகள் வான் அண்ட மிண்டி,
சிறைகொளும் புனல் அணி செழு மதி திகழ் மதில் கொச்சைதன்பால்,
உறைவுஇடம் என மனம்அது கொளும், பிரமனார்சிரம் அறுத்த,
இறைவனது அடிஇணை இறைஞ்சி வாழ், நெஞ்சமே! அஞ்சல், நீயே!

The practitioners of the Vedas perform sacrifices here;
the smoke rising from the fire-pits into which offerings
are made, soars up sky-high and causes the rain-fall.
The pools are thus filled with water and fecundate the fields.
The walled-Kocchaivayam is girt with pools and fields
and it is in His delubrum here, Siva abides.
O heart, fear not. Contemplate the feet twain of our God who
sliced away a head of Brahma's. You will, for sure, flourish. 5

974. சுற்றமும் மக்களும் தொக்க அத் தக்கனைச்சாடி, அன்றே,
உற்ற மால்வரை உமை நங்கையைப் பங்கமா உள்கினான், ஓர்
குற்றம் இல் அடியவர் குழுமிய வீதி சூழ் கொச்சை மேவி
நல்-தவம் அருள்புரி நம்பனை நம்பிடாய், நாளும், நெஞ்சே!

Siva devastated the sacrifice of Daksha and punished
his kith and kin and others that participated in it.
Then, His Consort came to be born as the Daughter of Himavant,
with whom He is concorporate.
He is entempled in Kocchaivayam where dwell in their strength
His unflawed devotees.
He is the supremely desirable God who blesses His adorers
with *tapas*. O heart, do not fear at all. Do ever 6
trust Him with utmost firmness.

975. கொண்டலார் வந்திட, கோல வார் பொழில்களில் கூடி, மந்தி
கண்ட வார்கழை பிடித்து ஏறி, மா முகில்தனைக் கதுவு கொச்சை,
அண்ட வானவர்களும் அமரரும் முனிவரும் பணிய, ஆலம்
உண்ட மா கண்டனார் தம்மையே உள்கு, நீ! அஞ்சல், நெஞ்சே!

When clouds gather, the monkeys of the extensive
and beautiful garden, assemble, ascend the bamboos
standing before them and essay to seize the clouds.
This is Kocchaivayam where Siva is entempled.
It was He who saved the imploring supernals, Devas
and *munis* by quaffing the oceanic venom
and retained it in His throat.
O heart, fear not. Do contemplate Him always. 7

976. அடல் எயிற்று அரக்கனார் நெருக்கி, மாமலை எடுத்து, ஆர்த்த வாய்கள்
உடல் கெட, திருவிரல் ஊன்றினார் உறைவுஇடம்--ஒளிகொள் வெள்ளி
மடல்இடைப் பவளமும் முத்தமும் தொத்து வண் புன்னைமாடே,
பெடையொடும் குருகுஇனம் பெருகு--தண் கொச்சையே பேணு, நெஞ்சே!

When Ravaṇa, the Asura, endowed with puissant teeth,
durst uproariously uproot His Mount, Siva pressed His toe
on the Mount and crushed him beneath it and cracked
his body and his mouths.
He is entempled in Kocchaivayam girt with gardens where
amidst the flowers of bright and argent petals,
thrive ruddy flowers like unto coral in hue, along with

margaritaceous buds as well as bunches of blossoms
of the splendorous punnai trees close to which herons
with their mates nestle and flourish.
O heart, do adore and hail Siva.
8

977. அரவினில்-துயில்தரும் அரியும், நல் பிரமனும் அன்று, அயர்ந்து,
குரைகழல், திருமுடி, அளவு இட அரியவர்--கோங்கு செம்பொன்
விரி பொழில்இடை மிகு மலைமகள் மகிழ்தர வீற்றிருந்த
கரிய நல் மிடறு உடைக் கடவுளார்--கொச்சையே கருது, நெஞ்சே!

Vishnu that slumbers on his snake-bed and the goodly
Brahma went in quest of Siva but stood fatigued;
these could not behold His resonating ankleted feet
or His sacred crown.
He is entempled in Kocchaivayam girt with gardens
where fall on the ground pollen, ruddy and auric,
companied with the Daughter of Himavant, in joy.
He is, indeed, the great God whose weal-conferring throat
is dark. O heart, do but contemplate Him. 9

978. கடு மலி உடல் உடை அமணரும், கஞ்சி உண் சாக்கியரும்,
இடும் அறஉரைதனை இகழ்பவர் கருதும் நம் ஈசர்; வானோர்
நடு உறை நம்பனை; நால்மறையவர் பணிந்து ஏத்த, ஞாலம்
உடையவன்; கொச்சையே உள்கி வாழ், நெஞ்சமே! அஞ்சல், நீயே!
The stinking Samaṇas consume myrobalan and the Buddhists
quaff conjee; devotees that reject their words of
pseudo-wisdom, are dear to Siva—the supremely
desirable One—, who is adored by Devas who surround Him.

He is hailed by them well-versed in the four Vedas.
He is entempled in Kocchaivayam.
O heart, fear not; contemplate His delubrum and thrive. 10

979. காய்ந்து தம் காலினால் காலனைச் செற்றவர், கடி கொள் கொச்சை
ஆய்ந்து கொண்டு இடம் என இருந்த நல் அடிகளை, ஆதரித்தே
ஏய்ந்த தொல்புகழ் மிகும் எழில்மறை ஞானசம்பந்தன் சொன்ன
வாய்ந்த இம் மாலைகள் வல்லவர் நல்லர், வான்உலகின்மேலே.

In wrath did Siva kick with His foot Yama to death.
He chose the well-protected Kocchaivayam for His entemplement.
On Him, the Noble God, Gnānasambandhan, well versed in
the ancient, glorious and beautiful Vedas, has, in bhakti,
sung these garlands of hymns in befitting words.
They that are valiant in these psalms are truly the excellent
ones who are destined to abide in the supernal world. 11

90. திருத் துருத்தியும் திரு வேள்விக்குடியும் சாதாரி

980. ஓங்கி மேல் உழி தரும் ஒலி புனல் கங்கையை ஒரு சடைமேல்
தாங்கினார், இடு பலி தலை கலனாக் கொண்ட தம் அடிகள்,
பாங்கினால் உமையொடும் பகல்இடம் புகல்இடம், பைம்பொழில் சூழ்
வீங்கு நீர்த் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Siva bore on a strand of His matted crest, the Ganga
which down descended amain, dinsomely and crashingly.
The Noble God receives alms in a skull. He duly sojourns
diurnally with His Consort in Thurutthi girt with
green gardens and thriving in the wealth of water,
and nocturnally at Veḷvikkudi. 1

981. தூறு சேர் சுடலையில் சுடர்எரி ஆடுவர், துளங்கு ஒளி சேர்
நீறு சாந்து என உகந்து அணிவர், வெண்பிறை மல்கு சடைமுடியார்,
நாறுசாந்து இளமுலை அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
வீறு சேர் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Holding fire in His hand, Siva dances in the crematory
abounding in dense bushes.
He, in joy, wears the splendorous ash as His sandal paste.
He sports in His matted crest, the crescent.
With His Consort whose young breasts are coated with
sandal paste, He, our God, stays during day at Thurutthi
which thrives in valour, and at Veḷvikkudi during night. 2

982. மழை வளர் இளமதி மலரொடு தலை புல்கு வார்சடைமேல்
கழை வளர் புனல் புகக் கண்ட எம் கண்ணுதல், கபாலியார்தாம்,
இழை வளர் துகில் அல்குல் அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
விழை வளர் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Siva wears on His long matted hair the young and cool crescent,
the flowers of konṟai and *ūmattham* as also a white skull.
The Ganga that fosters sugarcanes and other crops, is also
held in His crest. He is the fierce triple-eyed God who totes
a skull of Brahma's.
He who is concorporate with His Consort whose *alkul* is
covered by a woven cloth, stays during the day time
in the very desirable Thurutthi and Veḷvikkudi during night. 3

983. கரும்பு அன வரிசிலைப் பெருந்தகைக் காமனைக் கவின் அழித்த
சுரும்பொடு தேன் மல்கு தூ மலர்க்கொன்றை அம் சுடர்ச்சடையார்,
அரும்பு அன வனமுலை அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
விரும்பு இடம் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Siva smote the handsome body of the lordly Manmata—
the wielder of a sugarcane-bow.
Our God is adorned with the pure and melliferous konṟai blossoms
buzzed by bees, on His splendorous matted crest.
He with His Consort whose breasts are like the buds of lotus,
abides during day in His beloved Thurutthi and in
Veḷvikkudi during night. 4

984. வளம் கிளர் மதியமும் பொன்மலர்க்கொன்றையும் வாள்அரவும்
களம் கொளச் சடைஇடை வைத்த எம் கண்ணுதல், கபாலியார்தாம்,
துளங்கு நூல் மார்பினர், அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
விளங்கு நீர்த் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.
Siva wears on His spacious matted crest, the splendorous
crescent, the golden konṟais and a dazzling snake.

Our triple-eyed God carries with Him a skull of Brahma's.
His chest is adorned with the charming sacred threads.
Concorporate with His Consort, He abides during day
at Thurutthi rich in lucid waters and at Veḷvikkudi during night. 5

985. பொறி உலாம் அடு புலி உரிவையர், வரிஅராப் பூண்டு இலங்கும்
நெறி உலாம் பலி கொளும் நீர்மையர், சீர்மையை நினைப்பு அரியார்,
மறி உலாம் கையினர், மங்கையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
வெறி உலாம் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Siva is clad in the striped skin of a murderous tiger;
He is adorned with a long and speckled serpent.
He who is compact of compassion, has taken to mendicancy.
His singular glory is ineffable. He holds a fawn in His hand.
He who is concorporate with His Consort stays during day
in the suaveolent Thurutthi and Veḷvikkudi during night. 6

986. புரிதரு சடையினர், புலிஉரி அரையினர், பொடி அணிந்து
திரிதரும் இயல்பினர், திரி புரம்மூன்றையும் தீ வளைத்தார்,
வரி தரு வனமுலை மங்கையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
விரிதரு துருத்தியார்; இரவு இடத்து உறைவர், வேள்விக்குடியே.
Twisted are the strands of Siva's matted hair. He is clad
in the skin of a tiger. He goes about adorned with the white ash.
He gutted with fire the three walled-citadels that roamed
about freely in the heavens.
Concorporate with His Consort whose breasts are adorned
with the stripes of sandalpaste, He stays during day 7
in the extensive Thurutthi and Veḷvikkudi during night.

987. நீண்டு இலங்கு-அவிர்ஒளி நெடு முடி அரக்கன்--"இந் நீள்வரையைக்
கீண்டு இடந்திடுவன்" என்று எழுந்தவன்--ஆள்வினை கீழ்ப்படுத்தார்,
பூண்ட நூல் மார்பினர், அரிவையோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
வேண்டு இடம் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

His crown-jewels blazed even distantly; He, the Asura,
rose up in all hauteur, resolved to uproot the Mount Kailās
and place it elsewhere.
Siva caused his valorous effort to get stultified.
Sacred threads adorn the chest of Siva. With His Woman
our God Siva stays during day at the coveted Thurutthi
and at Veḷvikkudi during night. 8

988. கரைகடல் அரவு அணைக் கடவுளும், தாமரை நான்முகனும்,
குரைகழல்அடி தொழ, கூர் எரி என நிறம் கொண்ட பிரான்,
வரை கெழு மகளொடும் பகல்இடம் புகல்இடம், வண்பொழில் சூழ்
விரை கமழ் துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

Vishnu, the god that slumbers in his bed on the resounding sea
and the Four-faced whose seat is the Lotus, went in
quest of His tinkling ankleted feet (and crown);
at this, our God soared up and up as a blazing
column of flame, unbeholdable by them.
Siva with His Consort, the Daughter of Himavant, stays
during day in Tirutthurutthi girt with uberous
and fragrant gardens, and Veḷvikkudi during night. 9

989. அயம் முகம் வெயில் நிலை அமணரும், குண்டரும், சாக்கியரும்,
நயம் முக உரையினர்; நகுவன சரிதைகள் செய்து உழல்வார்;
கயல் அன வரிநெடுங்கண்ணியோடு ஒரு பகல் அமர்ந்த பிரான்,
வியல் நகர்த்துருத்தியார்; இரவுஇடத்து உறைவர், வேள்விக்குடியே.

The obstinate Samaṇas stand in the sun hot as the burning
steel (deeming this as *tapas*). The Buddhists with smiling
visages articulate seemingly sweet words. Their proclamations
are but risible (and are not to be listened to).
With Her whose long *kayal*-like eyes are streaked red, our God
stays during day in the extensive polis of Thurutthi
and Veḷvikkudi during night. 10

990. விண் உலாம் விரி பொழில் விரை மணல்-துருத்தி, வேள்விக்குடியும்,--
ஒண் உலாம் ஒலிகழல் ஆடுவார் அரிவையோடு உறை பதியை--
நண் உலாம் புகலியுள் அருமறை ஞானசம்பந்தன் சொன்ன
பண் உலாம் அருந்தமிழ் பாடுவார் ஆடுவார்; பழி இலரே.

Thurutthi and Veḷvikkudi are girt with sky-high and extensive
gardens, and abound in spreading and fragrant sand.
Our God who dances fastened with resonating and radiant
anklets, abides in these shrines with His Consort.
On these shrines, Gnānasambandhan of Pukali which is
adored by all, the one versed in the Vedas rare, has sung
these Tamil̲ hymns cast in *paṇ*.
They that sing these excellent psalms and do dance 11
in rapturous harmony, will be ever free from blame.

91. திரு வடகுரங்காடுதுறை

சாதாரி

991. கோங்கமே, குரவமே, கொழு மலர்ப் புன்னையே, கொகுடி, முல்லை,
வேங்கையே, ஞாழலே, விம்மு பாதிரிகளே, விரவி எங்கும்
ஓங்கு மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
வீங்குநீர்ச் சடைமுடி அடிகளார் இடம் என விரும்பினாரே.

91. TIRUVAṬAKURAṄKĀṬUTHUṞAI

Sāthāri

Our Noble God whose matted crest holds the swelling flood
of the Ganga, is entempled in Kuraṅkāṭuthuṟai,
on the northern bank of the great and extensive Kāviri
which carries in its current, the trees of kōṅku, *kuravam*,
puṇṇai rich in flowers, *vēṅkai gnāḻal* and *pātiris*
as well as the lianas of *kokuti* and *mullai*. 1

992. மந்தம்ஆய் இழி மதக்களிற்று இள மருப்பொடு பொருப்பின் நல்ல
சந்தம் ஆர் அகிலொடு சாதியின் பலங்களும் தகைய மோதி,
உந்து மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
எந்தையார் இணை அடி இமையவர் தொழுது எழும் இயல்பினாரே.

On the northern bank of the Kāviri that carries in its
dashing current the tusks of the must-oozing tuskers,
the goodly montane trees of sandalwood and eaglewood
and the nut-yielding nutmeg trees, is entempled our Sire,
in Kuraṅkāṭuthuṟai —His feet twain hailed
and adored by the immortal Devas. 2

993. முத்தும் மா மணியொடு முழை வளர் ஆரமும் முகந்து நுந்தி,
எத்து மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
மத்தமாமலரொடு மதி பொதி சடைமுடி அடிகள்தம்மேல்
சித்தம்ஆம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணம்அன்றே.

The Kāviri which carries in its current pearls, great gems,
and sandalwood growing near caverns and pushes these amain.
Our Noble God who bears on His matted crest the great flowers
of *ūmattham* and the crescent, is entempled on
the northern bank of this river, in Kuraṅkāṭuthuṟai.
It is certain that the devotees who adore Him with all
their heart, will gain *Siva-gati*. 3

994. கறியும் மா மிளகொடு கதலியின் பலங்களும் கலந்து நுந்தி,
எறியும் மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
மறி உலாம் கையினர் மலர் அடி தொழுது எழ மருவும் உள்ளக்
குறியினார் அவர் மிகக் கூடுவார், நீடுவான்உலகின்ஊடே.

The Kāviri carries in its current the great plants of
hot pepper and banana trees and throw them up.
On its northern bank is Kuraṅkāṭuthuṟai where Siva
whose hand holds a fawn, is entempled.
They that adore His flower feet, in melting love, will gain ascension
to the ever-during ethereal world and thrive there loftily. 4

995. கோடுஇடைச் சொரிந்த தேன் அதனொடும் கொண்டல் வாய்விண்ட முன் நீர்
காடு உடைப் பீலியும் கடறு உடைப் பண்டமும் கலந்து நுந்தி,
ஓடு உடைக் காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
பீடு உடைச் சடைமுடி அடிகளார் இடம் எனப் பேணினாரே.

The Kāviri that flows augmented by rainfall, carries in its flood
melis that drips from branches, the feathers of the sylvan
peacocks and the products of the montane slopes.
It is on the northern bank of this river, our glorious
and noble Siva whose majestic crest is matted, is willingly
entempled in Kuraṅkāṭuthuṟai. 5

996. கோல மா மலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார், திருந்து மாங்கனிகள் உந்தி
ஆலும் மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை
நீலமாமணிமிடற்று அடிகளை, நினைய, வல்வினைகள் வீடே.

With fragrant flowers, incense that burns and the paste
of sandalwood, Vāli adored Siva entempled in
Kuraṅkāṭuthuṟai on the northern bank of the Kāviri
which carries ripe mangoes that sway getting pushed.
The evil karma of those who hail and adore Siva whose
throat is sapphirine, will perish. 6

997. The original Tamil verse is not traceable. 7

998. நீலமாமணி நிறத்து அரக்கனை இருபதுகரத்தொடு ஒல்க
வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்--
ஏலமோடு, இலை இலவங்கமே, இஞ்சியே, மஞ்சள், உந்தி,
ஆலியா வருபுனல் வடகரை அடை குரங்காடுதுறையே.

Vāli with his tail so fettered the Asura, dark like
the great blue gem, that his twenty arms wilted.
Vāli worshipped Siva sempiternally entempled in
Kuraṅkāṭuthuṟai on the northern bank of the Kāviri
that flows dinsomely, rolling in its current
cardamom, *pacchilai*, cinnoman, ginger and turmeric. 8

999. பொரும் திறல் பெருங்கைமா உரித்து, உமை அஞ்சவே, ஒருங்கி நோக்கி,
பெருந் திறந்து அநங்கனை அநங்கமா விழித்ததும் பெருமைபோலும்--
வருந் திறல் காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
அருந்திறத்து இருவரை அல்லல் கண்டு ஓங்கிய அடிகளாரே!

Siva peeled off the skin of the great-trunked Tusker
and mantled Himself in it at which Uma stood scared.
His stare did away with all the limbs of Manmata of
great dexterity. This attests to His glory.
When the two, namely the adroit Vishnu and Brahma,
went in quest of Him, Siva soared up and up,
beyond the ken of their comprehension.
He is enshrined on the northern bank of the Kāviri in Kuraṅkāṭuthuṟai. 9

1000. கட்டு அமண் தேரரும், கடுக்கள் தின் கழுக்களும், கசிவு ஒன்று இல்லாப்
பிட்டர்தம் அறஉரை கொள்ளலும்! பெரு வரைப் பண்டம் உந்தி
எட்டும் மா காவிரி வடகரை அடை குரங்காடுதுறைச்
சிட்டனார் அடி தொழ, சிவகதி பெறுவது திண்ணம்ஆமே.

The Samaṇas who consume myrobalan deserve impalement;
they are obdurate and obstinate; like these the Buddhists
are wholly without compassion. Listen not to the words
of these that preach pseudo-dharma. These merit exile.
They that adore in bhakti, the feet twain of Siva of especial excellence
who is entempled on the northern bank of the Kāviri in
Kuraṅkāṭuthuṟai, in all certainty, will gain *Sivagati*. 10

1001. தாழ் இளங் காவிரி வடகரை அடை குரங்காடுதுறை,
போழ் இளமதி பொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனை,
காழியான்--அருமறை ஞானசம்பந்தன--கருது பாடல்
கோழையா அழைப்பினும், கூடுவார், நீடுவான்உலகின்ஊடே.

On Siva, the Holy God, who wears the crescent on His crest
of twisted and matted strands of hair, and who
presides over Kuraṅkāṭuthuṟai on the northern bank
of the Kāviri, Gnānasambandhan of Kāḻi, well versed
in the rare Vedas has sung these worthy hymns.
Even if devotees whose throats are blocked by phlegm,
sing these psalms sincerely, they will thrive
well in the athanasic and ethereal world. 11

92. திரு நெல்வேலி

சாதாரி

1002. மருந்து அவை; மந்திரம், மறுமை நன்நெறி அவை; மற்றும் எல்லாம்;
அருந்துயர் கெடும்; அவர் நாமமே சிந்தைசெய், நன்நெஞ்சமே!--
பொருந்து தண்புறவினில் கொன்றை பொன் சொரிதர, துன்று பைம்பூஞ்-
செருந்தி செம்பொன்மலர் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

92. TIRUNELVĒLI

Sāthāri

O goodly heart, contemplate the names of Siva! They constitute
the remedies for maladies, the mantras that strengthen
and the virtues to be actualized in the ensuing birth.
The Opulent One is entempled in Tirunelvēli girt with
cool gardens where konrais shed their pollen and the green
and beautiful *serunti* trees close by burgeon with
blossoms of crimson gold. 1

1003. "என்றும் ஓர் இயல்பினர்" என நினைவு அரியவர்; ஏறுஅது ஏறிச்
சென்று தாம், செடிச்சியர் மனைதொறும், பலிகொளும் இயல்புஅதுவே--
துன்று தண்பொழில் நுழைந்து எழுவிய கேதகைப்போது அளைந்து,
தென்றல் வந்து உலவிய திரு நெல்வேலி உறை செல்வர் தாமே.

It canst not be averred that the Opulent One enshrined in
Tirunelvēli where the southerly enters the cool and dense
gardens, embraces the fragrant-screw-pines and wafts,
is of uniform nature.
Siva rides His Bull, visits the houses of the low-born women
and receives alms from them also. 2
(It is thus He graces all kinds of people.)

1004. பொறி கிளர் அரவமும், போழ்இளமதியமும், கங்கை என்னும்
நெறி படு குழலியைச் சடைமிசைச் சுலவி, வெண்நீறு பூசி,
கிறிபட நடந்து, நல் கிளிமொழியவர் மனம் கவர்வர்போலும்--
செறி பொழில் தழுவிய திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

The Opulent One entempled in Tirunelvēli girt with dense
gardens, bears on His matted crest a radiantly speckled
serpent, a slice of the moon and Ganga of curly coiffure.
He wears the white ash, walks forth gingerly and enchants
women who babble like the parakeet. 3

1005. காண் தரு மலைமகள் கதிர் நிலாமுறுவல்செய்து அருளவேயும்,
பூண்ட நாகம் புறங்காடு அரங்கா நடம்ஆடல்பேணி--
ஈண்டு மா மாடங்கள், மாளிகை, மீது எழு கொடி மதியம்
தீண்டி வந்து உலவிய திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

The Opulent One is entempled in Tirunelvēli dight densely
with storeyed houses and mansions to the poles of which
are fastened the sky-vaulting flags.
He is companied with the Daughter of Himavant, of enchanting
smile, lovely like the rays of the moon.
He is adorned with a serpent.
He dances in the crematory—, His forum—, situate without the urbs. 4

1006. ஏனவெண்கொம்பொடும், எழில் திகழ் மத்தமும், இள அரவும்,
கூனல்வெண்பிறை தவழ் சடையினர்; கொல் புலித் தோல்உடையார்;
ஆனின்நல்ஐந்து உகந்து ஆடுவர்; பாடுவர், அருமறைகள்;--
தேனில் வண்டு அமர் பொழில்-திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

The Opulent One is entempled in Tirunelvēli girt with gardens
the melliferous flowers of which are bebuzzed by bees.
He is adorned with the white tusk of the Boar and the curved
and white crescent, on His matted crest.
He is clad in the skin of a murderous tiger. He rejoices
in the ablutions of the five products of kine.
He is the Author of the Vedas. (Do adore Him.) 5

1007. வெடிதருதலையினர்; வேனல் வெள்ஏற்றினர்; விரிசடையர்;
பொடி அணி மார்பினர்; புலிஅதள்ஆடையர்; பொங்கு அரவர்;
வடிவு உடை மங்கை ஓர் பங்கினர்; மாதரை மையல் செய்வார்--
செடிபடு பொழில் அணி திரு நெல்வேலி உறை செல்வர் தாமே.

The Opulent One is enshrined in Tirunelvēli girt with
gardens abounding in plants. He wears the garland
of a skull. He rides the raging Bull.
His is the spreading matted hair; He is bedaubed with
the powder of ash; He is clad in the skin of a tiger; He is
decked with an irascible serpent. He is concorporate
with His beauteous Woman; He enchants women. 6
(Do adore Him.)

1008. அக்கு உலாம் அரையினர்; திரை உலாம் முடியினர்; அடிகள்; அன்று,
தக்கனார் வேள்வியைச் சாடிய சதுரனார்; கதிர் கொள் செம்மை
புக்கது ஓர் புரிவினர்--வரி தரு வண்டு பண் முரலும் சோலைத்
திக்கு எலாம் புகழ் உறும் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

Siva wears a chain of bones in His waist; His crest holds
the billowy Ganga.
Of yore, He, the Noble Adept, devastated Daksha's sacrifice.
His matted crest is incarnadine and hirsutorufous.
He is entempled in Tirunelvēli renowned in all directions.
His delubrum is girt with gardens where bees bombinate in *paṇ*.
(Do adore Him.) 7

1009. முந்தி மா விலங்கல் அன்று எடுத்தவன் முடிகள்தோள் நெரிதரவே
உந்தி, மா மலர்அடி ஒருவிரல் உகிர்நுதியால் அடர்த்தார்--
கந்தம் ஆர் தரு பொழில் மந்திகள் பாய்தர, மதுத் திவலை
சிந்துபூந்துறை கமழ் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

Of yore, when Ravana durst uproot His Mount Kailās,
Siva pressed with the nail of the toe of His flower-foot,
the Mount beneath which the Asura was crushed
and his heads and shoulders were cracked.
He, the Opulent One, is entempled in Tirunelvēli in the gardens
of which female monkeys leap about causing
the splash of melis into the ford abounding in flowers.
(Do adore Him.) 8

1010. பைங்கண்வாள் அரவு அணையவனொடு பனி மலரோனும் காணாது,
"அங்கணா! அருள்!" என அவர் அவர் முறைமுறை இறைஞ்ச நின்றார்--
சங்க நால்மறையவர் நிறைதர, அரிவையர் ஆடல் பேண,
திங்கள் நாள் விழ மல்கு திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

Vishnu whose bed is the snake the eyes of which are fresh
and bright and Brahma whose seat is the cool Lotus
went in search of Siva in vain. At this they appealed
to Him thus: "O God of beautiful and merciful eyne,
do bless us with grace." It is even so, devotees
hail Him in their light.
The Opulent One is entempled in Tirunelvēli where the Brahmins,
in unison, recite melodiously the four Vedas.
The women of this polis dance rapturously. The holy polis
abounds in quotidian fetes and monthly festivals.
(Do adore Him.) 9

1011. துவர் உறு விரி துகில்ஆடையர், வேடம் இல் சமணர், என்னும்
அவர் உறு சிறுசொலை அவம் என நினையும் எம் அண்ணலார்தாம்--
கவர் உறு கொடி மல்கு மாளிகைச் சூளிகை மயில்கள் ஆல,
திவர் உறு மதி தவழ் திரு நெல்வேலி உறை செல்வர்தாமே.

The Buddhists are shrouded in long ochre robes; the Samaṇas
are a nude fraternity. Be convinced that their worthless
words are absolutely futile.
Our God Siva is enshrined in Tirunelvēli which fascinates
the beholders. Here abound storeyed houses and mansions
that sport streamers.
On the top floors bathed by the rays of the moon, peacocks
dance to witness which Devas descend down. 10
(Do adore Him.)

1012. பெருந் தண் மா மலர்மிசை அயன்அவன் அனையவர், பேணு கல்வித்
திருந்து மா மறையவர், திரு நெல்வேலி உறை செல்வர்தம்மை,
பொருந்து நீர்த்தடம் மல்கு புகலியுள் ஞானசம்பந்தன் சொன்ன
அருந்தமிழ்மாலைகள் பாடி ஆட, கெடும், அருவினையே.

Tirunelvēli where the Opulent One is entempled, abounds in
Brahmins who are the cultivators and practitioners
of the Vedas. These are like unto Brahma who is seated
on the great and cool Lotus.
Hailing Him, Gnānasambandhan of Pukali dight with
pools, has sung these garlands of rare Tamiḻ hymns.
The well-nigh irremovable karma of those that sing
these psalms and dance, will perish. 11

93. திரு அம்பர்மாகாளம் சாதாரி

1013. படியுள் ஆர் விடையினர், பாய் புலித்தோலினர், பாவநாசர்,
பொடி கொள் மா மேனியர், பூதம் ஆர் படையினர், பூணநூலர்,
கடி கொள் மா மலர் இடும் அடியினர், பிடி நடை மங்கையோடும்
அடிகளார் அருள்புரிந்து இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.

93. TIRUAMPARMĀKĀḶAM Sāthāri

Siva's mount is the Bull that thrives in this world; He is
clad in the skin of a leaping tiger; He annuls the sins
of entia; His great body is bedaubed with ash.
His Hosts are the *Bhūtas;* He is adorned with the sacred threads.

His devotees perform pūja to His feet with great and fragrant
flowers. He is concorporate with His Woman whose gait
is like unto the she-elephant's. He is the dispenser of grace.
Lo, he is entempled in Amparmākāḷam.
1

1014. கையில் மான் மழுவினர், கடுவிடம் உண்ட எம் காளகண்டர்,
செய்ய மா மேனியர், ஊன் அமர் உடைதலைப் பலி திரிவார்,
வையம் ஆர் பொதுவினில் மறையவர் தொழுது எழ, நடம்அதுஆடும்
ஐயன், மா தேவியோடு இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.

He wields the great *malu* in His hand. He quaffed the fierce
venom and retains it in His darkened throat.
His complexion is ruddy. He roams about begging alms
which He receives in His begging-bowl—the broken
skull to which flesh is still sticking.
He dances in the forum at Tillai—the centre of the cosmos—,
adored by the Vedic Brahmins who prostrate in
His presence in bhakti and rise up (blessed).
He, our Sire, is entempled in Amparmākāḷam with His great Consort. 2

1015. பரவின அடியவர் படு துயர் கெடுப்பவர், பரிவுஇலார்பால்
கரவினர், கனல் அன உருவினர், படுதலைப் பலிகொடு ஏகும்
இரவினர், பகல் எரிகான்இடை ஆடிய வேடர், பூணும்
அரவினர், அரிவையோடு இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.
He annuls the troubles of His devotees who hail Him;
He remains concealed unto those that do not foster love for Him.
His body blazes like fire, He roams about soliciting alms,
carrying with Him a skull of Brahma's.

Holding fire He dances in the crematory hot like the sun in noon.
A snake forms part of His paraphernalia.
He is entempled in Amparmākāḷam with His Consort. 3

1016. நீற்றினர், நீண்ட வார்சடையினர், படையினர், நிமலர், வெள்ளை-
ஏற்றினர், எரி புரி கரத்தினர், புரத்துஉளார் உயிரை வவ்வும்
கூற்றினர், கொடியிடை முனிவுஉற நனி வரும் குலவு கங்கை-
ஆற்றினர், அரிவையோடு இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.

Siva is coated with ash; His long matter hair is adangle.
He has His martial Hosts. He is *Nimala*; His mount is the white Bull.
He holds fire in His palm. He, like Yama, snatched the lives
of the Asuras of the three walled-citadels.
He bears in joy on His matted crest Ganga which caused
the willowy-waisted Uma to rage in ire.
With Uma, He is entempled in Amparmākāḷam. 4

1017. புறத்தினர், அகத்து உளர், போற்றி நின்று அழுது எழும் அன்பர் சிந்தைத்
திறத்தினர், அறிவு இலாச் செதுமதித் தக்கன்தன் வேள்வி செற்ற
மறத்தினர், மாதவர் நால்வருக்கு ஆலின்கீழ் அருள்புரிந்த
அறத்தினர், அரிவையோடு இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.

His presence pervades externally as well as internally.
He is palpably present in the *chinta-s* of those who, in melting love,
adore Him with tear-bedewed eyes.
He, the One of prowess, smote the sacrifice of the nescient
Daksha whose *buddhi* led him to destruction.

Unto the four great tapaswis He inculcated dharma, seated
in the shade of the banyan tree. His form is compact of dharma.
With His Woman, He is entempled in Amparmākāḷam. 5

1018. பழக மா மலர் பறித்து, இண்டை கொண்டு, இறைஞ்சுவார்பால் செறிந்த
குழகனார், குணம் புகழ்ந்து ஏத்துவார் அவர்பலர் கூட நின்ற
கழகனார், கரி உரித்து ஆடு கங்காளர், நம் காளி ஏத்தும்
அழகனார், அரிவையோடு இருப்புஇடம்--அம்பர் மாகாளம்தானே.

Siva, the ever-young, parts not from them who daily
pluck flowers, weave them into *intai* and adorn Him with it.
He is in the assembly of devotees who eulogize Him.
Mantled in the skin of the Tusker, He doth dance.
He is Gangāla—the wearer of the skeletons of Vishnu
and Brahma. He is the handsome One adored by Kāḷi.
Concorporate with His Woman, He abides in Amparmākāḷam. 6

1019. சங்க வார்குழையினர், தழல் அன உருவினர், தமது அருளே
எங்கும்ஆய் இருந்தவர், அருந்தவ முனிவருக்கு அளித்து உகந்தார்,
பொங்கு மா புனல் பரந்து அரிசிலின் வடகரை திருத்தம் பேணி
அங்கம்ஆறு ஓதுவார், இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.

Siva wears the ear-rings wrought of chank. His body blazes
ruddy like fire; His grace pervades ubiquitously.
To the rare tapaswis, He gives Himself as a gift and rejoices.
The Arisil which swells and spreads, serves as His holy water.
He is the explicator of the six Angas. He is entempled in Amparmākāḷam.7

1020. பொரு சிலை மதனனைப் பொடிபட விழித்தவர், பொழில் இலங்கைக்
குரிசிலைக் குலவரைக்கீழ் உற அடர்த்தவர், கோயில் கூறில்--
பெரு சிலை, நல மணி, பீலியோடு, ஏலமும், பெருக நுந்தும்
அரசிலின் வடகரை அழகு அமர் அம்பர்மாகாளம்தானே.

Siva pulverized Manmata, the wielder of a martial bow.
He crushed under His Mount the sovereign of Lanka girt
with gardens. He is entempled on the northern bank
of the Arisil whose spreading current carries with it
the goodly montane gems, the feathers of peacocks,
cardamom and the like, at Amparmākāḷam. 8

1021. வரிஅரா அதன்மிசைத் துயின்றவன்தானும், மா மலர்உளானும்,
எரியரா, அணி கழல் ஏத்த ஒண்ணா வகை உயர்ந்து, பின்னும்
பிரியர்ஆம் அடியவர்க்கு அணியராய், பணிவுஇலாதவருக்கு என்றும்
அரியராய், அரிவையோடு இருப்புஇடம்--அம்பர்மாகாளம்தானே.
Siva soared up and up as a column of fire unbeholdable
by Vishnu who slumbers on the bed of the striped snake
and Brahma whose seat is the great Lotus flower.
He is easy of access to His loving devotees; He is beyond
the reach of those that adore Him not in humility.
Concorporate with His Woman, He abides in Amparmākāḷam. 9

1022. சாக்கியக்கயவர், வன் தலை பறிக்கையரும், பொய்யினால் நூல்
ஆக்கிய மொழிஅவை பிழையவை; ஆதலில், வழிபடுவீர்!
வீக்கிய அரவு உடைக் கச்சையான், இச்சை ஆனவர்கட்கு எல்லாம்
ஆக்கிய அரன், உறை அம்பர்மாகாளமே அடைமின், நீரே!

The base Sākyas and the Samaṇas who are trichotillomaniacs
have authored pseudo-opuses abounding in falsehoods.
Ignore them. Siva wears a serpent in His waist as a cingulum.
He graces them that adore Him in bhakti.
Reach and adore Him in Amparmākāḷam—His delubrum. 10

1023. செம்பொன் மா மணி கொழித்து எழு திரை வருபுனல் அரிசில் சூழ்ந்த
அம்பர்மாகாளமே கோயிலா அணங்கினோடு இருந்த கோனை,
கம்பின் ஆர் நெடுமதில் காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன
நம்பி, நாள் மொழிபவர்க்கு இல்லைஆம், வினை; நலம் பெறுவர், தாமே.

Siva, the Sovereign who is concorporate with His Woman,
is the God of Amparmākāḷam situate on the banks
of the Arisil which rolls in its current ruddy gold
and gems of great worth.
On Him, Gnānasambandhan of Kāḻi, girt with lofty
walls plastered with *chunam*, has sung these hymns.
The karma of those who quotidian recite these psalms
in bhakti, will cease; they will thrive in weal and welfare. 11

94. திரு வெங்குரு

சாதாரி

திருமுக்கால்

1024. விண்ணவர் தொழுது எழு வெங்குரு மேவிய
சுண்ணவெண்பொடி அணிவீரே;
சுண்ணவெண் பொடி அணிவீர்! உம தொழு கழல்
எண்ண வல்லார் இடர் இலரே.

94. TIRUVEṄKURU

Tirumukkāl

Sāthāri

O God who is coated with the powder of ash white like
chunam, You are entempled in Veṅkuru hailed
and adored by the supernals.
They that can meditate on You who are coated with the powder
of ash like *chunam*, will be freed from troubles. 1

1025. வேதியர் தொழுது எழு வெங்குரு மேவிய
ஆதிய அருமறையீரே;
ஆதிய அருமறையீர்! உமை அலர்கொடு
ஓதியர் உணர்வு உடையோரே.

O Primal God who is the Author of the rare Vedas, You abide at
Veṅkuru, hailed by the practitioners of the Vedas.
They that adore You who are the import of the Vedas, with
flowers, will come by Siva-consciousness. 2

1026. விளங்கு தண்பொழில் அணி வெங்குரு மேவிய
இளம்பிறை அணி சடையீரே;
இளம்பிறை அணி சடையீர்! உமது இணை அடி
உளம் கொள, உறு பிணி இலரே.

O God, You wear on Your matted crest the young crescent; You abide
in Veṅkuru girt with splendorous and cool gardens.
They that ensoul the twain feet of Yours who wear on Your matted
crest the young crescent, will be cured of all their maladies. 3

1027. விண்டு அலர் பொழில் அணி வெங்குரு மேவிய
வண்டு அமர் வளர்சடையீரே;
வண்டு அமர் வளர்சடையீர்! உமை வாழ்த்தும் அத்
தொண்டர்கள் துயர், பிணி, இலரே.

O God, You wear on Your accrescent matted hair flowers buzzed
by bees. You abide at Veṅkuru girt with gardens of burgeoning blossoms.
O God of accrescent matted hair wearing flowers buzzed by bees!
They that hail and adore You, will thrive sans misery and trouble. 4

1028. மிக்கவர் தொழுது எழு வெங்குரு மேவிய
அக்கினொடு அரவு அசைத்தீரே;
அக்கினொடு அரவு அசைத்தீர்! உமது அடிஇணை
தக்கவர் உறுவது தவமே.

O God adored by devotees abounding in love, You are
entempled in Veṅkuru. You are decked with bones and snakes.
They that adore You decked with bones and snakes and hail
Your feet twain, stand blessed with *tapas*. 5

1029. வெந்தவெண்பொடி அணி வெங்குரு மேவிய
அந்தம் இல் பெருமையினீரே;
அந்தம் இல் பெருமையினீர்! உமை அலர்கொடு
சிந்தைசெய்வோர் வினை சிதைவே.

O God of infinite mercy, You who are coated with the powder
of the baked ash, are entempled in Veṅkuru.
The karma of those who adore You whose glory is infinite, 6
with flowers, will perish altogether.

1030. விழ மல்கு பொழில் அணி வெங்குரு மேவிய
அழல் மல்கும் அங்கையினீரே;
அழல் மல்கும் அங்கையினீர்! உமை அலர்கொடு
தொழ, அல்லல் கெடுவது துணிவே.

O God whose beauteous palm holds the fire! You abide
at Veṅkuru girt with gardens and abounding in festivals.
Adoring You with flowers whose beauteous hand holds the fire,
assures the annulment of the troubles of Your adorers. 7

1031. வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்தநல்மலர் புனைவீரே;
மத்தநல்மலர் புனைவீர்! உமது அடி தொழும்
சித்தம்அது உடையவர் திருவே!
O God decked with the goodly flowers of *ūmattham*, You abide
in Veṅkuru where thrive the splendorous Vedic Brahmins.
They who with all their heart, hail You who wear the goodly
flowers of *ūmattham*, will gain limitless wealth. 8

1032. மேலவர் தொழுது எழு வெங்குரு மேவிய
ஆல நல் மணிமிடற்றீரே;
ஆல நல் மணிமிடற்றீர்! உமது அடி தொழும்
சீலம்அது உடையவர் திருவே!

O God whose throat is like the blue gem, retains Halāhala.
You abide at Veṅkuru, adored by the lofty ones.
The virtuous ones who hail You of the emeraldine throat
that holds the Halāhala, will be blessed with divine opulence. 9

1033. விரை மல்கு பொழல் அணி வெங்குரு மேவிய
அரை மல்கு புலிஅதளீரே;
அலை மல்கு புலி அதளீர்! உமது அடிஇணை
உரை மல்கு புகழவர் உயர்வே!

O God whose waist is clad in a tiger-skin, You are
entempled in Veṅkuru girt with fragrant gardens.
They that descant on Your feet twain, whose waist is clad
in a tiger-skin, will gain loftiness par excellence. 10

1034. The Tamil original is not traceable. 11

95. திரு இன்னம்பர்

திருமுக்கால்

சாதாரி

1035. எண் திசைக்கும் புகழ் இன்னம்பர் மேவிய
வண்டு இசைக்கும் சடையீரே;
வண்டு இசைக்கும் சடையீர்! உமை வாழ்த்துவார்
தொண்டு இசைக்கும் தொழிலாரே.

95. TIRUIN̲N̲AMPAR

Tirumukkāl

Sāthāri

Our God whose matted crest is decked with flowers buzzed by bees,
You abide at In̲n̲ampar renowned in all the directions.
They that hail You whose matted crest is decked with flowers
bebuzzed by bees, are truly poised in servitorship. 1

1036. யாழ்நரம்பின்(ன்) இசை இன்னம்பர் மேவிய
தாழ்தரு சடைமுடியீரே;
தாழ்தரு சடைமுடியீர்! உமைச் சார்பவர்
ஆழ்துயர் அருவினை இலரே.

O God whose matted strands of hair are adangle, You are
of In̲n̲ampar where melodic *yāl̲s* are ever strummed.
The rare karma of those that are attached to You
whose matted strands of hair are adangle, will cease. 2

1037. இளமதி நுதலியொடு இன்னம்பர் மேவிய
வள மதி வளர்சடையீரே;
வள மதி வளர்சடையீர்! உமை வாழ்த்துவார்
உளம் மதி மிக உடையாரே.

O God of In̲n̲ampar, You are ever with Her whose forehead is like
a crescent; You sport the cool crescent on Your growing matted hair.
O One that sports the cool crescent on Your growing matted hair!
They that hail and adore You, stand blessed with great entelechy. 3

1038. இடி குரல் இசை முரல் இன்னம்பர் மேவிய
கடி கமழ் சடைமுடியீரே;
கடி கமழ் சடைமுடியீர்! உம கழல் தொழும்
அடியவர் அருவினை இலரே.
O God of In̲n̲ampar where drums rumble like thunder,
fragrant is Your matted crest.
Fragrant, indeed, is Your matted crest. They that adore Your
ankleted feet twain, stand freed of their rare karma. 4

1039. இமையவர் தொழுது எழும் இன்னம்பர் மேவிய
உமை ஒருகூறு உடையீரே;
உமை ஒருகூறு உடையீர்! உமை உள்குவார்
அமைகிலர் ஆகிலர், அன்பே.

O God of In̲n̲ampar adored by the celestials, You are concorporate
with Your Consort Uma.
They that hail You concorporate with Uma and contemplate You,
are not at all the ones who do not foster love for You. 5

1040. எண் அரும் புகழ் உடை இன்னம்பர் மேவிய
தண் அருஞ் சடைமுடியீரே;
தண் அருஞ் சடைமுடியீர்! உமைச் சார்பவர்
விண்ணவர் அடைவு உடையோரே.
O God entempled in In̲n̲ampar of limitless renown,
Your matted crest is, indeed, cool.
They that are attached to You whose matted crest is cool,
do gain the beatitude of the supernals. 6

1041. எழில் திகழும் பொழில் இன்னம்பர் மேவிய
நிழல் திகழ் மேனியினீரே;
நிழல் திகழ் மேனியினீர்! உமை நினைபவர்
குழறிய கொடுவினை இலரே.

Lustrous, indeed, is Your body; You are entempled in
In̲n̲ampar girt with splendorous gardens.
They that meditate on You whose body is lustrous,
will be rid of their cruel and troublous karma. 7

1042. ஏத்த(அ)ரும் புகழ் அணி இன்னம்பர் மேவிய
தூர்த்தனைத் தொலைவு செய்தீரே;
தூர்த்தனைத் தொலைவு செய்தீர்! உமைத் தொழுபவர்
சூர்த்த நல் குணம் உடையோரே.

O God entempled in Innampar of ineffable glory,
You caused the debauche Ravaṇa lose his puissance.
They that adore You who caused the debauche Ravaṇa lose his
puissance, are endowed with virtues par excellence. 8

1043. இயல்உளோர் தொழுது எழும் இன்னம்பர் மேவிய
அயனும் மால் அறிவு அரியீரே;
அயனும் மால் அறிவு அரியீர்! உமது அடி தொழும்
இயல்உளார் மறுபிறப்பு இலரே.
O God of Innampar hailed and adored by the good-natured,
You are beyond the ken of comprehension of Vishnu and Brahma.
The good-natured that adore Your feet unebeheld by
Vishnu and Brahma, are freed from re-birth. 9

1044. ஏர் அமர் பொழில் அணி இன்னம்பர் மேவிய
தேர் அமண் சிதைவு செய்தீரே;
தேர் அமண் சிதைவு செய்தீர்! உமைச் சேர்பவர்
ஆர் துயர், அருவினை, இலரே.
O God of Innampar girt with lovely gardens, You caused
the faiths of the Buddhists and the Jains to languish.
They that are attached to You that caused the languishment
of the faiths of Buddhism and Jainism are freed from
their rare and cruel karma. 10

1045. ஏடு அமர் பொழில் அணி இன்னம்பர் ஈசனை,
நாடு அமர் ஞானசம்பந்தன்
நாடு அமர் ஞானசம்பந்தன நல்-தமிழ்,
பாட வல்லார் பழி இலரே.

Gnānasambandhan, dear to all, has hymned the glory
of the God of Innampar girt with gardens of petalled flowers.
They that are valiant in these psalms of Gnānasambandhan,
dear to all, will stand freed from blame. 11

96. திரு நெல்வெண்ணெய்

திருமுக்கால்

சாதாரி

1046. நல் வெணெய் விழுது பெய்து ஆடுதிர், நாள்தொறும்,
நெல்வெணெய் மேவிய நீரே;
நெல்வெணெய் மேவிய நீர்! உமை நாள்தொறும்
சொல் வணம் இடுவது சொல்லே.

96. TIRUNELVEṆṆAI

Tirumukkāl

Sāthāri

O God, You have Your ablutions daily in the goodly butter
unmelted. You are entempled in Nelveṇṇai.
Only the words daily offered in Your praise who are having Your
ablutions in the goodly unmelted butter are words used aright. 1

1047. நிச்சலும் அடியவர் தொழுது எழு நெல்வெணெய்க்
கச்சு இள அரவு அசைத்தீரே;
கச்சு இள அரவு அசைத்தீர்! உமைக் காண்பவர்
அச்சமொடு அருவினை இலரே.

O God Nelveṇṇai! You who wear as Your cingulum
the snake, are daily adored by Your devotees.
You have as Your cingulum a snake. Only they who
have your *darshan* daily are free from dread and karma. 2

1048. நிரை விரி தொல்புகழ் நெல்வெண்ணெய் மேவிய
அரை விரி கோவணத்தீரே;
அரை விரி கோவணத்தீர்! உமை அலர்கொடு
உரை விரிப்போர் உயர்ந்தோரே.

O God Nelveṇṇai of hoary and spreading fame!
Your waist is clad in a broad loin-cloth.
They that hymn You with flowers who are clad in Your waist
by a broad loin-cloth, are truly the lofty ones. 3

1049. நீர் மல்கு தொல்புகழ் நெல்வெண்ணெய் மேவிய
ஊர் மல்கி உறைய வல்லீரே;
ஊர் மல்கி உறைய வல்லீர்! உமை உள்குதல்
பார் மல்கு புகழவர் பண்பே!

O God of Nelveṇṇai of hoary fame that thrives with the wealth of
water, You are entempled here splendorously. They that
contemplate You in this aeviternal delubrum, will
gain ubiquitous fame and divine culture. 4

1050. நீடு இளம் பொழில் அணி நெல்வெண்ணெய் மேவிய
ஆடு இளம் பாப்பு அசைத்தீரே!
ஆடு இளம் பாப்பு அசைத்தீர்! உமை அன்பொடு
பாடு உளம் உடையவர் பண்பே!

O God of Nelveṇṇai girt with ever-during and extensive
gardens, You wear a dancing snake as Your cingulum.
They that, with all their heart, hymn You cinctured with
a dancing snake, stand blessed with divine culture.
5

1051. நெற்றி ஓர் கண் உடை நெல்வெணெய் மேவிய
பெற்றி கொள் பிறைநுதலீரே;
பெற்றி கொள் பிறைநுதலீர்! உமைப் பேணுதல்
கற்று அறிவோர்கள்தம் கடனே.

O God of Nelveṇṇai who sports in Your forehead, an eye and who wears
the crescent on Your crown, it is indeed the duty
of the learned to adore You in deep devotion, the One
who wears fittingly on Your crown the crescent. 6

1052. நிறையவர் தொழுது எழு நெல்வெணெய் மேவிய
கறை அணி மிடறு உடையீரே;
கறை அணி மிடறு உடையீர்! உமைக் காண்பவர்
உறைவதும் உம் அடிக்கீழே.

O God of Nelveṇṇai who bears a patch of murk on Your
throat, You are adored by those of perfect deportment.
They that are blessed with Your *darshan* whose throat is dark, 7
will, for ever, abide beneath Your feet.

1053. நெருக்கிய பொழில் அணி நெல்வெணெய் மேவி அன்று
அரக்கனை அசைவு செய்தீரே;
அரக்கனை அசைவு செய்தீர்! உமை அன்பு செய்து,
இருக்க வல்லார் இடர் இலரே.

O God of Nelveṇṇai girt with dense gardens, of yore,
You caused the Asura to languish under Your Mount.
They that love you who caused the languishment
of the Asura, will thrive freed of troubles. 8

1054. நிரை விரி சடைமுடி நெல்வெணெய் மேவி அன்று
இருவரை இடர்கள் செய்தீரே;
இருவரை இடர்கள் செய்தீர்! உமை இசைவொடு
பரவ வல்லார் பழி இலரே.

O God of Nelveṇṇai, the rows of matted strands constitute Your crest.
You caused the Two to suffer misery.
They that willingly adore You who caused the Two to suffer
misery, will stand freed from blame. 9

1055. நீக்கிய புனல் அணி நெல்வெணெய் மேவிய
சாக்கியச் சமண் கெடுத்தீரே;
சாக்கியச் சமண் கெடுத்தீர்! உமைச் சார்வது
பாக்கியம் உடையவர் பண்பே.

O God of the well-watered Nelveṇṇai, You who annul the evil
senses, caused the Jains and the Buddhists to wilt.
They that are attached to You who caused the Jains and Buddhists
to wilt, stand blessed with divine virtues. 10

1056. நிலம் மல்கு தொல்புகழ் நெல்வெணெய் ஈசனை,
நலம் மல்கு ஞானசம்பந்தன்
நலம் மல்கு ஞானசம்பந்தன செந்தமிழ்,
சொல மல்குவார் துயர் இலரே.

On the God of Nelveṇṇai of hoary and ubiquitous renown,
Gnānasambandhan abounding in spiritual weal, has sung
hymns in classical Tamiḻ. They that are valiant in these
psalms of Gnāsambandhan, stand freed from misery. 11

97. திருச் சிறுகுடி

திருமுக்கால்

சாதாரி

1057. திடம் மலி மதில் அணி சிறுகுடி மேவிய
படம் மலி அரவு உடையீரே;
படம் மலி அரவு உடையீர்! உமைப் பணிபவர்
அடைவதும், அமருலகுஅதுவே.

97. TIRUCCHIṞUKUDI

Tirumukkāl

Sāthāri

O God of the strong-walled Siṟukudi, You are adorned
with a hooded dancing snake.
They that adore You adorned with a hooded dancing snake
will gain ascension to the ethereal world. 1

1058. சிற்றிடைஉடன் மகிழ் சிறுகுடி மேவிய
சுற்றிய சடைமுடியீரே;
சுற்றிய சடைமுடியீர்! உம தொழு கழல்
உற்றவர் உறு பிணி இலரே.

O God of Siṟukudi whose matted hair encircles Your crest, You are
happily concorporate with Your willowy-waisted Consort.
They that adore You whose crest is encircled by Your matted hair,
are, for sure, freed from malady. 2

1059. தெள்ளிய புனல் அணி சிறுகுடி மேவிய
துள்ளிய மான் உடையீரே;
துள்ளிய மான் உடையீர்! உம தொழு கழல்
உள்ளுதல்செய, நலம் உறுமே.

O God of the clear-watered Sir̲ukudi, You do sport
a leaping fawn in Your hand.
O One who sports a leaping fawn in Your hand! Praise be.
They that contemplate Your ankleted feet will be blessed with weal. 3

1060. செந்நெல வயல் அணி சிறுகுடி மேவிய
ஒன்னலர் புரம் எரித்தீரே;
ஒன்னலர் புரம் எரித்தீர்! உமை உள்குவார்
சொல்-நலம் உடையவர், தொண்டே.

O God of Sir̲ukudi girt with *sennel* fields! Of yore, You
gutted with fire the three, hostile, walled-citadels.
The servitors who meditate on You who burnt the three hostile citadels,
will be blessed to articulate words befitting Your glory. 4

1061. செற்றினில் மலி புனல் சிறுகுடி மேவிய
பெற்றி கொள் பிறை முடியீரே;
பெற்றி கொள் பிறை முடியீர்! உமைப் பேணி நஞ்சு
அற்றவர் அருவினை இலரே.
O God of Sir̲ukudi the divided parts of whose fields are well-
watered. You becomingly wear the crescent on Your crest.
They, the unwordly, melt in love for You, the wearer of the crescent
on Your crest. These stand relieved from their cruel karma. 5

1062. செங்கயல் புனல் அணி சிறுகுடி மேவிய
மங்கையை இடம் உடையீரே;
மங்கையை இடம் உடையீர்! உமை வாழ்த்துவார்
சங்கைஅது இலர்; நலர், தவமே.

O God of Sirukudi girt with pools of ruddy *kayals!*
In Your left half abides Your Woman.
They that hail and adore You in whose left half abides
Your Woman, are poised in goodly *tapas*, freed from dubiety. 6

1063. செறி பொழில் தழுவிய சிறுகுடி மேவிய
வெறி கமழ் சடைமுடியீரே;
வெறி கமழ் சடைமுடியீர்! உமை விரும்பி மெய்ந்-
நெறி உணர்வோர் உயர்ந்தோரே.

O God of Sirukudi girt with dense gardens;
suaveolent, indeed, is Your matted crest.
Desiring to gain You of suaveolent matted crest, they that tread
the godly way, are truly the lofty ones. 7

1064. திசையவர் தொழுது எழு சிறுகுடி மேவிய
தசமுகன் உரம் நெரித்தீரே;
தசமுகன் உரம் நெரித்தீர்! உமைச் சார்பவர்
வசைஅறுமது வழிபாடே.

O God of Sirukudi adored by them in all the directions,
You crushed the puissance of the ten-headed Ravaṇa.
They that are attached to You who crushed Ravaṇa's puissance,
hail and adore You; these are Your unflawed worshippers. 8

1065. செரு வரை வயல் அமர் சிறுகுடி மேவிய
இருவரை அசைவு செய்தீரே;
இருவரை அசைவு செய்தீர்! உமை ஏத்துவார்
அருவினையொடு துயர் இலரே.

O God of Sirukudi rich in fecund fields, You caused
the languishment of the Two, namely Vishnu and Brahma.
They that adore You who caused the languishment of the Two,
are rid of their cruel karma as well as misery. 9

1066. செய்த்தலைப் புனல் அணி சிறுகுடி மேவிய
புத்தரொடு அமண் புறத்தீரே;
புத்தரொடு அமண் புறத்தீர்! உமைப் போற்றுதல்
பத்தர்கள்தம் உடைப் பரிசே.

O God of Sirukudi whose fields are well fed by water,
You are inaccessible to the Samaṇas and the Buddhists.
The adoration of You inaccessible to the Samaṇas and the Buddhists,
constitutes the beatitude of Your bhaktas. 10

1067. தேன் அமர் பொழில் அணி சிறுகுடி மேவிய
மான் அமர் கரம் உடையீரே;
மான் அமர் கரம் உடையீர்! உமை வாழ்த்திய
ஞானசம்பந்தன தமிழே.

O God of Sirukudi girt with melliferous gardens,
Your palm holds a fawn.
These hymns of Gnānasambandhan, O Siva, celebrate
You whose palm holds a fawn. 11

98. திரு வீழிமிழலை

திருமுக்கால்

சாதாரி

1068. வெண்மதி தவழ் மதில் மிழலை உளீர், சடை
ஒண்மதி அணி உடையீரே;
ஒண்மதி அணி உடையீர்! உமை உணர்பவர்
கண் மதி மிகுவது கடனே.

98. TIRUVEEḺIMIḺALAI

Tirumukkāl

Sāthāri

O God of Miḻalai whose walls brush the white moon,
You wear on Your matted crest the bright moon.
They that could cognise You who are adorned with the white
moon are bound to abound in godly knowledge. 1

1069. விதிவழி மறையவர் மிழலை உளீர், நடம்
சதிவழி வருவது ஓர் சதிரே;
சதிவழி வருவது ஓர் சதிர் உடையீர்! உமை
அதிகுணர் புகழ்வதும் அழகே.

O God of Miḻalai where dwell as ordained the Vedic Brahmins!
You dance adroitly keeping time.
It becomes the abundantly virtuous ones who glorify You
who dance adroitly keeping time. 2

1070. விரை மலி பொழில் அணி மிழலை உளீர், ஒரு
வரைமிசை உறைவதும் வலதே;
வரைமிசை உறைவது ஓர் வலது உடையீர்! உமை
உரைசெயுமவை மறைஒலியே.

O God of Mil̲alai girt with fragrant gardens!
Your dwelling on the Mount Kailās becomes You.
It is the Vedas that descant on You who dwell
becomingly on the Mount Kailās. 3

1071. விட்டு எழில் பெறு புகழ் மிழலை உளீர், கையில்
இட்டு எழில் பெறுகிறது எரியே;
இட்டு எழில் பெறுகிறது எரி உடையீர்! புரம்
அட்டது வரைசிலையாலே.

O God of Mil̲alai that thrives in splendorous renown,
Your comely palm holds the fire.
O God whose comely palm holds the fire! You smote
the three walled-citadels with Your Mountain-bow. 4

1072. வேல் நிகர் கண்ணியர் மிழலை உளீர், நல
பால் நிகர் உரு உடையீரே;
பால் நிகர் உரு உடையீர்! உமதுஉடன் உமை
தான் மிக உறைவது தவமே.
O God of Mil̲alai where dwell women whose eyes are
sharp as the spear, milk-white is Your form.
The concorporation of Uma with You of milk-white form
constitutes *tapas* par excellence. 5

1073. விரை மலி பொழில் அணி மிழலை உளீர், செனி
நிரை உற அணிவது நெறியே;
நிரை உற அணிவது ஓர் நெறி உடையீர்! உமது
அரை உற அணிவன, அரவே.

O God of Milalai girt with fragrant gardens,
Your chaplet on Your crest is woven of flowers in rows.
O God who wears the chaplet of flowers in rows,
Your waist and loins are cinctured with serpents.
6

1074. விசை உறு புனல் வயல் மிழலை உளீர், அரவு
அசைவுஉற அணி உடையீரே;
அசைவுஉற அணி உடையீர்! உமை அறிபவர்
நசை உறும் நாவினர்தாமே.

O God of Milalai whose fields are fed by the swift-running
water, You are adorned with a swaying serpent.
They that cognise You adorned with a swaying serpent,
stand blessed with tongues that hail You in love. 7

1075. விலங்கல் ஒண்மதில் அணி மிழலை உளீர், அன்று
இலங்கை மன் இடர் கெடுத்தீரே;
இலங்கை மன் இடர் கெடுத்தீர்! உமை ஏத்துவார்
புலன்களை முனிவது பொருளே.
O God of Milalai whose rocky walls are sky-high, of yore,
You crushed Ravana and later when he rued, You blessed him.
They that hail You who crushed Ravana and later blessed him, 8
are truly the vanquishers of their sense-organs.

1076. வெற்பு அமர் பொழில் அணி மிழலை உளீர், உமை
அற்புதன் அயன் அறியானே;
அற்புதன் அயன் அறியா வகை நின்றவன்
நல் பதம் அறிவது நயமே.

O God of Mil̲alai whose gardens are hill-like,
the wondrous Brahma (and Vishnu) know not of You.
To comprehend this wonder wrought by You imperceivable
by the wondrous Brahma, spells Your beatitude. 9

1077. வித்தக மறையவர் மிழலை உளீர், அன்று
புத்தரொடு அமண் அழித்தீரே;
புத்தரொடு அமண் அழித்தீர்! உமைப் போற்றுவார்
பத்திசெய் மனம் உடையவரே.

O God of Mil̲alai where thrive Brahmins well versed in the Vedas,
You caused Jainism and Buddhism to languish.
They that glorify You who caused Jainism and Buddhism to wilt,
are blessed with *manams* suffused with *bhakti*. 10

1078. விண் பயில் பொழில் அணி மிழலையுள் ஈசனை,
சண்பையுள் ஞானசம்பந்தன்
சண்பையுள் ஞானசம்பந்தன தமிழ்இவை,
ஒண் பொருள் உணர்வதும் உணர்வே.

The God of Mil̲alai girt with sky-high gardens is hailed
by Gnānasambandhan of Saṇpai. Comprehending the true
import of the Tamil̲ hymns of Saṇpai's Gnān̲asambandhan̲,
constitutes Siva-consciousness. 11

[Note. The pattern of the verses of Tirumukkāl, is staccato and disjointed. Any translation of these verses, is a taxing task.]

99. திரு முதுகுன்றம்

திருமுக்கால்

சாதாரி

1079. முரசு அதிர்ந்து எழுதரு முதுகுன்றம் மேவிய
பரசு அமர் படை உடையீரே;
பரசு அமர் படை உடையீர்! உமைப் பரவுவார்
அரசர்கள் உலகில் ஆவாரே.

99. TIRUMUTHUKUṈṞAM

Tirumukkāl

Sāthāri

O God of Muthukuṉṟam where drums resound,
You wield the weapon of an axe.
They that laud You armed with an axe,
will become the rulers of this world. 1

1080. மொய்குழலாளொடு முதுகுன்றம் மேவிய
பைஅரவம் அசைத்தீரே;
பைஅரவம் அசைத்தீர்! உமைப் பாடுவார்
நைவு இலர்; நாள்தொறும் நலமே.

O God abiding in Muthukuṉṟam with Your Consort of dense
tresses, You cause the snake of venomous sacs to dance.
They that hymn You who cause the snake of venomous sacs
to dance, will never wilt; they will thrive daily in weal. 2

1081. முழவு அமர் பொழில் அணி முதுகுன்றம் மேவிய
மழ விடைஅது உடையீரே;
மழ விடை அது உடையீர்! உமை வாழ்த்துவார்
பழியொடு பகை இலர்தாமே.

O God of Muthukunram girt with gardens, drums resound
in Your shrine. Your mount is the young Bull.
They that laud You whose mount is the young Bull,
stand freed from blame and hostility. 3

1082. முருகு அமர் பொழில் அணி முதுகுன்றம் மேவிய
உரு அமர் சடைமுடியீரே;
உரு அமர் சடைமுடியீர்! உமை ஓதுவார்
திருவொடு தேசினர்தாமே.

O God of Muthukunram girt with beautiful gardens!
Splendorous is Your matted crest.
They that laud You whose matted crest is beautiful,
stand blessed with wealth and radiance. 4

1083. The original Tamil verse is not traceable. 5

1084. The original Tamil verse is not traceable. 6

1085. The original Tamil verse is not traceable. 7

1086. முத்தி தரும் உயர் முதுகுன்றம் மேவிய
பத்துமுடி அடர்த்தீரே;
பத்துமுடி அடர்த்தீர்! உமைப் பாடுவார்
சித்தம் நல்ல(வ்) அடியாரே.
O God of Muthukunru that confers the lofty moksha,
You crushed the ten heads of Ravaṇa.
They that hymn You who crushed Ravaṇa's ten heads,
stand endowed with goodly *chitta*. 8

1087. முயன்றவர் அருள் பெறு முதுகுன்றம் மேவி, அன்று
இயன்றவர் அறிவு அரியீரே;
இயன்றவர் அறிவு அரியீர்! உமை ஏத்துவார்
பயன்தலை நிற்பவர் தாமே.

O God of Muthukuṉṟam who graces them that work for their
salvation, You stood unbeholdable by Vishnu and Brahma.
They that hail You who stood unbeholdable by Vishnu
and Brahma, will come by the spiritual gain they were after. 9

1088. மொட்டு அலர் பொழில் அணி முதுகுன்றம் மேவிய
கட்டுஅமண் தேரைக் காய்ந்தீரே;
கட்டுஅமண்தேரைக் காய்ந்தீர்! உமைக் கருதுவார்
சிட்டர்கள் சீர் பெறுவாரே.

O God of Muthukuṉṟam in whose gardens bloom blossoms,
You caused the bonded Samaṇas and the Buddhists to wither.
They that meditate on You who caused the withering of the Samaṇas
and the Buddhists, will emerge as great and glorious ones. 10

1089. மூடிய சோலை சூழ் முதுகுன்றத்து ஈசனை
நாடிய ஞானசம்பந்தன்
நாடிய ஞானசம்பந்தன செந்தமிழ்
பாடிய அவர் பழி இலரே.

O God of Muthukuṉṟam girt with embrowning gardens, You
are hailed with the longing hymns of Gnānasambandhan.
They that sing the psalms of Gnānasambandhan who sought
after You, will stand freed from blame. 11

100. திருத் தோணிபுரம்

பழம்பஞ்சுரம்

1090. கரும்பு அமர் வில்லியைக் காய்ந்து, காதல் காரிகைமாட்டு அருளி,
அரும்புஅமர் கொங்கை ஓர்பால் மகிழ்ந்த அற்புதம் செப்ப(அ)ரிதால்;
பெரும் பகலே வந்து, என் பெண்மை கொண்டு, பேர்ந்தவர் சேர்ந்த இடம்--
கரும்பு அமர் சோலைகள் சூழ்ந்த செம்மைத் தோணிபுரம்தானே.

100. TIRUTTHŌṆIPURAM

Palampanjuram

Siva stared to death Manmata whose bow is the sweetcane;
when his loving wife implored Him, He so blessed
her that Manmata was visible to her eyes only.
His concorporation with His Consort Uma is ineffably mirific.
He came in broad day light, committed larceny
of my muliebrity and reached the splendorous
Tōṇipuram girt with gardens bebuzzed by bees. 1

1091. கொங்கு இயல் பூங்குழல் கொவ்வைச்செவ்வாய்க் கோமளமாது உமையாள்
பங்கு இயலும் திருமேனி எங்கும் பால்வெள்ளைநீறு அணிந்து,
சங்கு இயல் வெள்வளை சோர வந்து, என் சாயல் கொண்டார்தமது ஊர்--
துங்கு இயல் மாளிகை சூழ்ந்த செம்மைத் தோணிபுரம்தானே.

Siva shares His body with the comely Uma whose tresses
are decked with fragrant flowers and whose lips
are ruddy like the *kovvai* fruit.
His divine body is bedaubed with the milk-white ash.

He called on me and caused the sliding of my white
bangles of chank and filched my mien.
Lo, He is entempled in the splendorous Tōṇipuram
dight with lofty mansions.
2

1092. மத்தக்களிற்று உரி போர்க்கக் கண்டு, மாதுஉமை பேதுஉறலும்,
சித்தம் தெளிய நின்று ஆடி, ஏறு ஊர் தீவண்ணர், சில்பலிக்கு என்று,
ஒத்தபடி வந்து, என் உள்ளம் கொண்ட ஒருவருக்கு இடம்போலும்--
துத்தம் நல் இன்இசை வண்டு பாடும் தோணிபுரம்தானே.

Siva peeled off the skin of the musty Tusker and mantled
Himself in it. At this, His Consort Uma stood scared.
To pacify Her troubled *chitta*, He enacted His dance.
His mount is the Bull and His divine body blazes like fire.
He, the Bikshātana, begging alms came to me and stole my heart.
He is entempled in Tōṇipuram where bees bombilate the note of *tuttham.* 3

1093. The Tamil original is not traceable. 4
1094. The Tamil original is not traceable. 5
1095. The Tamil original is not traceable. 6
1096. The Tamil original is not traceable. 7

1097. "வள்ளல் இருந்த மலைஅதனை வலம்செய்தல் வாய்மை" என
உள்ளம் கொள்ளாது, கொதித்து எழுந்து, அன்று, எடுத்தோன் உரம் நெரிய,
மெள்ள விரல் வைத்து, என் உள்ளம் கொண்டார் மேவும் இடம் போலும்--
துள் ஒலி வெள்ளத்தின்மேல் மிதந்த தோணிபுரம்தானே.

Ravaṇa, in his hauteur, ignored his duty to circumambulate
the Mount Kailās where the Lord-Patron abides.
When in mounting *ire*, he durst uproot it, Siva softly
pressed it with His toe and crushed his puissance.
It is He who committed the theft of my heart.
He is entempled in Tōṇipuram which floated intact,
on the raging and dinsome flood of the great Dissolution. 8

1098. வெல் பறவைக் கொடி மாலும், மற்றை விரைமலர்மேல் அயனும்,
பல் பறவைப்படி ஆய் உயர்ந்தும், பன்றிஅதுஆய்ப் பணிந்தும்,
செலவு அற நீண்டு எம் சிந்தை கொண்ட செல்வர் இடம்போலும்--
தொல் பறவை சுமந்து ஓங்கு செம்மைத் தோணிபுரம்தானே.

Vishnu whose flag sports the signum of the triumphant
Garuda and Brahma ensconced on the fragrant Lotus,
respectively as a boar burrowed deep the earth
and as a swan endowed with the power of many a bird,
flew up. At this Siva soared up and up as a limitless
column of blazing flame unbeholdable by them.
It is Siva who purloined my *chinta*.
He, the Opulent One, is entempled in the splendorous Tōṇipuram,
which, of yore, was borne by birds. 9

1099. குண்டிகை பீலி தட்டோடு நின்று கோசரம் கொள்ளியரும்,
மண்டை கை ஏந்தி மனம் கொள் கஞ்சிஊணரும், வாய் மடிய,
இண்டை புனைந்து, எருது ஏறி வந்து, என் எழில் கவர்ந்தார் இடம்ஆம்--
தொண்டு இசை பாடல் அறாத தொன்மைத் தோணிபுரம்தானே.

Samaṇas who tote water-jugs, feathers of peacock
and mats, and Buddhists who receive in *mantais*
conjee and quaff it, were silenced by Siva.
Lo, He decked with *intai*, rode His Bull and burgled my pulchritude.
He is entempled in the hoary Tōṇipuram where the singing
of hymns by His servitors never ceases.
10

1100. தூ மரு மாளிகை மாடம் நீடு தோணிபுரத்து இறையை,
மாமறைநான்கினொடு அங்கம்ஆறும் வல்லவன்--வாய்மையினால்
நா மரு கேள்வி நலம் திகழும் ஞானசம்பந்தன்--சொன்ன
பா மரு பாடல்கள்பத்தும் வல்லார் பார் முழுது ஆள்பவரே.

On the God of Tōṇipuram dight with storeyed mansions
plastered white, Gnānasambandhan, well versed
in the four Vedas and their six Angas, the one who is
endowed with the learning passed from ear to ear
and sweetening the lips of utterers and who is
poised in truth, has sung these hymns.
They that are valiant in these prosodic psalms,
will, for sure, rule the entire world.
11

101. திரு இராமேச்சுரம்

பழம்பஞ்சுரம்

1101. திரிதரு மா மணி நாகம் ஆடத் திளைத்து, ஒரு தீ-அழல்வாய்,
நரி கதிக்க எரி, ஏந்தி ஆடும் நலமே தெரிந்து உணர்வார்--
எரி கதிர் முத்தம் இலங்கு கானல் இராமேச்சுரம் மேய,
விரி கதிர் வெண்பிறை மல்கு சென்னி, விமலர்; செயும் செயலே!

101. TIRUIRĀMĒCCHURAM

Pal̲ampanjuram

On Siva's person dances a snake that could spit
the great gem; in the raging pyre of the crematory
where foxes bay, He enacts His dance; only the blessed
could comprehend His weal-conferring act.
He is entempled in Irāmēcchuram in whose foreshore region
abound radiantly blazing pearls galore.
He wears on His crest the white crescent of spreading rays.
The acts of the *Vimala* are mirabile dictu. 1

1102. பொறி கிளர் பாம்பு அரை ஆர்த்து, அயலே புரிவோடு உமை பாட,
தெறி கிளரப் பெயர்ந்து, எல்லி ஆடும் திறமே தெரிந்து உணர்வார்--
எறி கிளர் வெண்திரை வந்து பேரும் இராமேச்சுரம் மேய,
மறி கிளர் மான் மழுப் புல்கு கை, எம் மணாளர்; செயும் செயலே!

Siva is cinctured with a sparkling snake in His waist;
close to Him stands Uma and renders dulcet songs,
accompanied by musical instruments; with apt
footwork Siva enacts His dance during night.
He is entempled in Irāmēcchuram at which arrive dashing,
the leaping and foamy white waves.
He holds in His hands a fawn and a *mal̲u*.
Only the Siva-conscious are alive to the greatness of
our Siva—the eternal Bridegroom. 2

1103. அலை வளர் தண்புனல் வார்சடைமேல் அடக்கி, ஒருபாகம்
மலை வளர் காதலி பாட, ஆடி மயக்கா வரு மாட்சி--
இலை வளர் தாழை முகிழ் விரியும் இராமேச்சுரம் மேயார்,
தலை வளர் கோல நல் மாலை சூடும் தலைவர், செயும் செயலே!

Siva contains on His matted crest the cool and billowy Ganga.
He is concorporate witht the Daughter of Himavant—His
beloved Consort who sings for His dance.
Bewitching, indeed, is His majesty.
He is entempled in Irāmēcchuram where the petalled
fragrant-screwpine unfolds its buds.
He is the Chief of gods who wears on His crest
the splendorous and lovely chaplet.
His deeds defy reckoning by any. 3

1104. மா தன நேர் இழை ஏர் தடங்கண் மலையான்மகள் பாட,
தேது எரி அங்கையில் ஏந்தி ஆடும் திறமே தெரிந்து உணர்வார்--
ஏதம்இலார் தொழுது ஏத்தி வாழ்த்தும் இராமேச்சுரம் மேயார்;
போது வெண்திங்கள் பைங்கொன்றை சூடும் புனிதர் செயும் செயலே!

The eyes of the Daughter of Himavant, are large; Her breasts
are buxom. She is beautifully bejewelled. As She sings,
Siva who holds in His beauteous palm the bright fire, dances.
He is entempled in Irāmēcchuram, hailed and adored
by His blemishless devotees.
He, the holy One wears on His crest, the white crescent
and the fresh *konṟai* flowers.
His deeds can be construed only by them that are blessed by Him. 4

1105. சூலமோடு ஒண்மழு நின்று இலங்க, சுடுகாடு இடம்ஆக,
கோல நல் மாது உடன்பாட, ஆடும் குணமே குறித்து உணர்வார்--
ஏல நறும்பொழில் வண்டு பாடும் இராமேச்சுரம் மேய,
நீலம் ஆர் கண்டம் உடைய, எங்கள் நிமலர்; செயும் செயலே!

Siva is armed with a spear and a bright *mal̲u*;
the crematory is His theatre; here His splendorous
and goodly Consort sings, as He dances.
He, our *Nirmala*, whose throat bears a blue patch,
is entempled in Irāmēcchuram—girt with
fragrant gardens where thrive the plants of cardamom
and the like and where bees bombilate.
His virtuous deeds are disclosed to them that are blessed by Him. 5

1106. கணை பிணை வெஞ்சிலை கையில் ஏந்தி; காமனைக் காய்ந்தவர்தாம்--
இணை பிணைநோக்கி நல்லாளொடு ஆடும் இயல்பினர்ஆகி, நல்ல
இணைமலர்மேல் அனம் வைகு கானல் இராமேச்சுரம் மேயார்;
அணை பிணை புல்கு கரந்தை சூடும் அடிகள் செயும் செயலே!

Siva stared to death Manmata who fixed to his fierce
bow the pentad of flower-arrows to shoot Him.
He loves to dance with His goodly Consort whose
eyes are like unto the antelope's.
He is entempled in Irāmēcchuram in whose foreshore
pool, cob and pen lie cradled in the lotus flower.
He is the Noble One who wears the well-woven *karantai* garland.
His divine deeds are mirabile dictu. 6

1107. நீரின் ஆர் புன்சடை பின்பு தாழ, நெடு வெண்மதி சூடி,
ஊரினார் துஞ்சு இருள் பாடி ஆடும் உவகை தெரிந்து உணர்வார்--
ஏரின் ஆர் பைம்பொழில் வண்டு பாடும் இராமேச்சுரம் மேய,
காரின் ஆர் கொன்றை வெண்திங்கள் சூடும், கடவுள்; செயும் செயலே!

Siva's ruddy and matted hair on which He bears
the flood of Ganga, dangles below His back; He is
decked with a long white crescent. He sings and dances
rapturously during the night when the dwellers of
the urbs, are fast asleep.
He is entempled in Irāmēcchuram girt with fresh
and beautiful gardens where bees bombinate.
He is our God who wears on His chest the *konṟais*
of the rainy season and the white crescent.
His deeds are comprehended only by the blessed ones. 7

1108. பொன் திகழ் சுண்ணவெண்நீறு பூசி, புலித்தோல் உடைஆக,
மின் திகழ் சோதியர், பாடல்ஆடல் மிக்கார், வரு மாட்சி--
என்றும் நல்லோர்கள் பரவி ஏத்தும் இராமேச்சுரம் மேயார்,
குன்றினால் அன்று அரக்கன் தடந்தோள் அடர்த்தார், கொளும்
கொள்கையே!

Siva is bedaubed with the auric, fragrant and white ash.
He is clad in the skin of a tiger; He blazes fulgurantly.
He goes forth majestically, singing and dancing.
He who is entempled in Irāmēcchuram, is hailed and adored
by the goodly ones.
Of yore, He crushed the strong shoulders of the Asura, by pressing
His Mount which he durst uproot. 8
Divine, indeed, are His deeds.

1109. கோவலன் நான்முகன் நோக்க ஒணாத குழகன், அழகுஆய
மேவலன், ஒள்எரி ஏந்தி ஆடும் இமையோர்இறை, மெய்ம்மை
ஏ வலனார் புகழ்ந்து ஏத்தி வாழ்த்தும் இராமேச்சுரம் மேய-
சே வல வெல் கொடி ஏந்து கொள்கை--எம் இறைவர், செயும் செயலே!

Siva, the ever-youthful and handsome One was unbeholdable
by Vishnu and Brahma.
He dances holding the bright fire in His palm. He is the God of gods.
He is entempled in Irāmēcchuram hailed by Rama—
the adept in archery.
His triumphant flag sports the signum of His Bull.
Divine, indeed, are His deeds. 9

1110. பின்னொடு முன் இடு தட்டைச் சாத்திப் பிரட்டே திரிவாரும்,
பொன் நெடுஞ் சீவரப் போர்வையார்கள், புறம்கூறல் கேளாதே,
இன் நெடுஞ் சோலை வண்டு யாழ்முரலும் இராமேச்சுரம் மேய,
பல்-நெடு வெண்தலை கொண்டு உழலும், பரமர் செயும் செயலே!

The Samaṇas tote their mats on their chests and backs;
they loiter aimlessly; the Buddhists are shrouded
in long and auric robes. Listen not to these back-biters.
Siva is entempled in Irāmēcchuram girt with long
and lovely gardens where bees hum tunefully like *yāḻ*.
Siva roams about begging alms in a large skull
to which teeth are still sticking.
Divine, indeed, are His deeds. 10

1111. தேவியை வவ்விய தென் இலங்கை அரையன் திறல் வாட்டி,
ஏ இயல் வெஞ்சிலை அண்ணல் நண்ணும் இராமேச்சுரத்தாரை,
நா இயல் ஞானசம்பந்தன் நல்ல மொழியால் நவின்று ஏத்தும்
பா இயல் மாலை வல்லார் அவர்தம் வினைஆயின பற்றுஅறுமே.

Siva did away with the puissance of the sovereign
of the southern Lanka, who abducted Sita Devi.
He is entempled in Irāmēcchuram adored by Rama—
the wielder of the fierce bow and arrows.
On Him, Gnānasambandhan, the eloquent wielder
of words, has sung in classical Tamiḻ these hymns.
The karma of those that are valiant in these prosodic
psalms, will snap altogether. 11

102. திரு நாரையூர் பழம்பஞ்சுரம்

1112. காம்பினை வென்ற மென்தோளி பாகம் கலந்தான்--நலம் தாங்கு
தேம் புனல் சூழ் திகழ் மா மடுவின் திரு நாரையூர் மேய,
பூம் புனல் சேர், புரிபுன்சடையான்; புலியின்(ன்)உரி-தோல்மேல்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே.

102. TIRU NĀRAIYŪR Paḻampanjuram

Siva is concorporate with His Consort whose arms
are lovelier than the young and fresh bamboo.
He is entempled in Tirunāraiyūr girt with weal-
conferring, sweet and great, fragrant pools.
On His matted crest of twisted and ruddy strands,
He sports the flowery Ganga.

His waist, clad in the skin of a tiger, is cinctured
with a snake. He enacts the dance of Pandaraṅkam.
Let us pay obeisance to His sacred feet. 1

1113. தீவினை ஆயின தீர்க்க நின்றான்--திரு நாரையூர் மேயான்;
பூவினை மேவு சடைமுடியான், புடை சூழப் பலபூதம்,
ஆவினில்ஐந்தும் கொண்டு ஆட்டு உகந்தான், அடங்கார் மதில்மூன்றும்
ஏவினை எய்து அழித்தான், கழலே பரவா எழுவோமே.

Siva annuls the evil karma of His worshippers.
He is entempled in Tirunāraiyūr; His matted crest
is decked with the garlands of flowers.
He is ever surrounded by His Bhūta-Hosts.
He rejoices to have His ablutions made up of
the five products of the kine.
He with His dart smote the three, hostile, walled-citadels.
Let us hail and adore His ankleted feet. 2

1114. மாயவன், சேயவன், வெள்ளியவன், விடம் சேரும் மைமிடற்றன்
ஆயவன், ஆகி ஓர் அந்தரமும்(ம்) அவன் என்று, வரை ஆகம்
தீ அவன், நீர் அவன், பூமி அவன், திரு நாரையூர்தன்னில்
மேயவனைத் தொழுவார் அவர் மேல் வினைஆயின வீடுமே.

He, the ruddy One, is Vishnu, Rudra as well as Brahma
who is ensconced on the argent Lotus.
His throat bears a murky patch of venom. He is omneity.
Space, mountains and the like constitute His body.

He, the Ashta-Mūrti, is fire, water, earth and the like.
He is entempled in Tirunāraiyūr. The karma
of those that adore Him, will snap altogether. 3

1115. துஞ்சு இருள் ஆடுவர்: தூ முறுவல் துளங்கும் உடம்பினராய்,
அம் சுடர் ஆர்எரிஆடுவர்; ஆர் அழல் ஆர் விழிக்கண்,
நஞ்சு உமிழ் நாகம் அரைக்கு அசைப்பர்; நலன் ஓங்கு நாரையூர்
எம் சிவனார்க்கு அடிமைப்படுவார்க்கு இனி இல்லை, ஏதமே.

He dances during night which veils all eyes;
divine is His smile; so too is His body.
He, the Handsome One, dances in the blazing fire.
His third eye is fiery. He is cinctured in His waist
with a snake that spits poison.
He is entempled in Nāraiyūr abounding in weal.
The bonded slaves of Siva, will no longer,
suffer from their karma. 4

1116. பொங்கு இளங் கொன்றையினார், கடலில் விடம் உண்டு இமையோர்கள்-
தங்களை ஆர் இடர் தீர நின்ற தலைவர், சடைமேல் ஓர்
திங்களை வைத்து அனல்ஆடலினார், திரு நாரையூர் மேய
வெங்கனல் வெண்நீறு அணிய வல்லார் அவரே விழுமியரே.

Siva wears the tender konrais that blossom splendorously.
He annulled the troubles of the Devas by quaffing
the oceanic venom. He is the God of gods.
He sports on His matted crest, the crescent.

He dances in the fire. He who wears the baked white
ash, is entempled in Tirunāraiyūr.
He, indeed, is the lofty One par excellence. 5

1117. பார் உறு வாய்மையினார் பரவும் பரமேட்டி, பைங்கொன்றைத்-
தார் உறு மார்பு உடையான், மலையின் தலைவன், மலைமகளைச்
சீர் உறும்--மா மறுகின் சிறைவண்டு அறையும் திரு நாரை-
யூர் உறை--எம் இறைவர்க்கு இவை ஒன்றொடு ஒன்று ஒவ்வாவே.

Siva is hailed and adored by the world-renowned
servitors who are poised in Truth.
He is the God of the Empyrean.
His chest is decked with the garlands of fresh *konrai*
flowers. He is the God of Mount Kailās.
He is concorporate with the great Daughter of Himavant.
He is entempled in Tirunāraiyūr in whose glorious
streets, the winged chafers bombinate.
He does lord it over things discordant. 6

1118. கள்ளி இடுதலை ஏந்து கையர், கரிகாடர், கண்நுதலார்,
வெள்ளிய கோவணஆடைதன்மேல் மிளிர் ஆடுஅரவு ஆர்த்து,
நள்இருள் நட்டம்அது ஆடுவர், நன்நலன் ஓங்கு நாரையூர்
உள்ளியபோழ்தில், எம்மேல் வரு வல்வினை ஆயின ஓடுமே.

Siva holds a skull of the crematory where cacti abound.
He abides in the crematory; He has an eye in
His forehead. On His argent loin-cloth He is
cinctured with a dazzling and dancing snake.

He is entempled in Nāraiyūr that abounds in
uberous weal and welfare.
When He is duly contemplated, all the invading
evil karma will flee far away from us.
7

1119. நாமம் எனைப்பலவும்(ம்) உடையான், நலன் ஓங்கு நாரையூர்--
தாம் ஓம்மெனப் பறை, யாழ், குழல், தாள் ஆர் கழல், பயில,
ஈமவிளக்கு எரி சூழ், சுடலை இயம்பும்(ம்) இடுகாட்டில்,
சாமம் உரைக்க நின்று ஆடுவானும்--தழல்ஆய சங்கரனே.

Siva is hailed with a myriad names.
The orchestrated music of drum, *yāl,* flute and the like
spell the word Om in accord with which, the anklets
fastened to Siva's feet resonate.
In the crematory lit with the light of the pyre,
are sung the hymns of the Sama Veda to the tune
of which Siva enacts His dance.
He is Sankara whose form is flame-like.
He is entempled in Nāraiyūr of accrescent foison.
8

1120. ஊன் உடை வெண்தலை கொண்டு உழல்வான், ஒளிர்புன்சடைமேல் ஓர்
வான் இடை வெண்மதி வைத்து உகந்தான், வரிவண்டு யாழ்முரலத்
தேன் உடை மா மலர் அன்னம் வைகும் திரு நாரையூர் மேய
ஆன்இடைஐந்து உகந்தான், அடியே பரவா, அடைவோமே.
Siva bears a skull to which flesh is still sticking, as His
begging-bowl; He roams about pursuing mendicancy.
He, in joy, sports the white crescent of the heavens
on His bright and ruddy matted crest.

He is entempled in Tirunāraiyūr where striped bees
bombilate tunefully like *yāḻ;* here swans
abide in the great and melliferous lotus flowers.
Siva rejoices in His ablutions made up of the five
products of the kine.
Let us adore His feet and come by the godly way. 9

1121. தூசு புனை துவர்ஆடை மேவும் தொழிலார், உடம்பினில் உள்
மாசு புனைந்து உடை நீத்தவர்கள், மயல்நீர்மை கேளாதே,--
தேசு உடையீர்கள்!--தெளிந்து அடைமின், திரு நாரையூர் தன்னில்
பூசு பொடித் தலைவர் அடியார் அடியே பொருத்தமே!

The Buddhists are shrouded in dirty ochre-robes;
the dirty Samaṇas roam about naked. Do not listen
to these whose utterances are involved in tohu-bohu.
You are endowed with divine lustre; gain clarity and reach
Tirunāraiyūr where Siva is entempled. It becomes
you to hail and adore His servitors and gain
at-one-ment with the feet of Siva who is the God of gods. 10

1122. தண்மதி தாழ் பொழில் சூழ் புகலித் தமிழ் ஞானசம்பந்தன்,
ஒண்மதி சேர் சடையான் உறையும் திரு நாரையூர் தன்மேல்,
பண் மதியால் சொன்ன பாடல்பத்தும் பயின்றார், வினை போகி,
மண் மதியாது போய், வான் புகுவர், வானோர் எதிர்கொளவே.
Tamiḻ Gnānasambandhan of Pukali girt with gardens
whose tops brush the cool moon, has sung these hymns
on Tirunāraiyūr whose God bears on His crest
the radiant moon suffused with coolth.

These ten hymns are cast in *pann*. The cultivators of
these psalms will quit their attachment to this world
and gain the ethereal world, welcomed by the Devas. 11

103. திரு வலம்புரம்

பழம்பஞ்சுரம்

1123. கொடி உடை மும்மதில்ஊடு உருவக் குனிவெஞ்சிலை தாங்கி
இடிபட எய்த அமரர்பிரான், அடியார் இசைந்து ஏத்தத்
துடிஇடையாளை ஓர் பாகம் ஆகத் துதைந்தார், இடம்போலும்--
வடிவு உடை மேதி வயல் படியும் வலம்புர நன்நகரே.

103. TIRUVALAMPURAM

Palampanjuram

Siva bent the Mount Meru as His bow and sped His dart
that rumbled like thunder and devastated the three
walled-citadels decked with flags. He is the God of gods.
He is concorporate with His Consort whose waist is like unto
a *tudi*, adored by His devotees with all their heart.
He is entempled in the goodly city of Valampuram girt with
fields where shapely buffaloes lie immersed in fields. 1

1124. கோத்த கல்லாடையும், கோவணமும், கொடுகொட்டி கொண்டு ஒரு கை,
தேய்த்து அன்று அநங்கனைத் தேசு அழித்து, திசையார் தொழுது ஏத்த,
காய்த்த கல்லால் அதன்கீழ் இருந்த கடவுள் இடம்போலும்--
வாய்த்த முத்தீத் தொழில் நால்மறையோர் வலம்புர நன் நகரே.

Siva is clad in *kāvi*. He wears a loin-cloth. He holds
koṭukotti in His hand and plays on it.

He stared the splendorous Manmata to death.
He is adored by the people in all the directions.
He is seated beneath the Kallāla tree rich in fruitage.
He is, indeed the God entempled in the goodly city of
Valampuram where dwell the Brahmins—the fosterers
of the triple fire and well versed in the four Vedas. 2

1125. நொய்யது ஓர் மான்மறி கைவிரலின் நுனைமேல் நிலை ஆக்கி,
மெய் எரிமேனி வெண்நீறு பூசி, விரிபுன்சடை தாழ,
மை இருஞ் சோலை மணம் கமழ இருந்தார் இடம்போலும்--
வைகலும் மா முழவம்(ம்) அதிரும் வலம்புர நன்நகரே.

Siva caused the fragile fawn stand on the top of His
finger. His blazing body is coated with the white ash.
His spreading and matted hair is adangle.
He is entempled in the goodly city of Valampuram where
the quotidian pūja is performed with the zeal of
a festival where drums resound.
He is entempled in the goodly city of Valampuram girt
with the fragrant and embrowning gardens. 3

1126. ஊன் அமர் ஆக்கை உடம்புதன்னை உணரின் பொருள் அன்று;
தேன் அமர் கொன்றையினான் அடிக்கே சிறுகாலை ஏத்துமினோ!
ஆன் அமர்ஐந்தும்கொண்டு ஆட்டு உகந்த அடிகள் இடம்போலும்--
வானவர் நாள்தொறும் வந்து இறைஞ்சும் வலம்புர நன்நகரே.

Be convinced that the human body is but ephemeral.
From infancy adore and foster in intense love the feet
of Siva who wears the melliferous konrai flowers.

He is the Noble God who rejoices in the ablutions
of the five products of the kine.
He is entempled in the goodly city of Valampuram,
hailed daily by the Devas.
4

1127. செற்று எறியும் திரை ஆர் கலுழிச் செழுநீர் கிளர் செஞ்சடைமேல்
அற்று அறியாது, அனல்ஆடு நட்டம், அணி ஆர் தடங்கண்ணி
பெற்று அறிவார், எருது ஏற வல்ல பெருமான், இடம்போலும்--
வற்று அறியாப் புனல் வாய்ப்பு உடைய வலம்புர நன்நகரே.

On His auric matted crest, Siva bears inseparably,
the Ganga whose fecundating waves dash against the shore.
Holding the fire in His palm He doth dance. He is concorporate
with Uma the eyes of whom are large and lovely.
He is the God whose mount is the Bull. He is entempled
in the goodly city of Valampuram whose wealth of
water suffers no diminution at all.
5

1128. உண்ண வண்ணத்து ஒளி நஞ்சம் உண்டு, உமையோடு உடன்ஆகி,
சுண்ணவண்ணப்பொடி மேனி பூசிச் சுடர்ச் சோதி நின்று இலங்க,
பண்ண வண்ணத்தன பாணிசெய்ய, பயின்றார் இடம்போலும்--
வண்ண வண்ணப் பறை பாணி அறா வலம்புர நன்நகரே.

Siva quaffed the venom of palpable murk, so that
the Devas could consume ambrosia.
He is concorporate with Uma; He is bedaubed with
the fragrant and argent ash.

He stands as the radiant flame. He is hymned
in many *panns* by His Bhūta-Hosts as He dances.
He is entempled in the goodly city of Valampuram
where the resounding of many drums and the like cease not. 6

1129. புரிதரு புன்சடை பொன்தயங்க, புரிநூல் புரண்டு இலங்க,
விரைதரு வேழத்தின் ஏர்உரி-தோல் மேல்மூடி, வேய் புரை தோள்
அரை தரு பூந்துகில் ஆர் அணங்கை அமர்ந்தார் இடம்போலும்--
வரை தரு தொல்புகழ் வாழ்க்கை அறா வலம்புர நன்நகரே.

Siva's twisted and ruddy strands of matted hair are
auric and bright; the three strands of the sacred thread
roll on His chest. He peeled off the skin of the swift
Tusker and mantled Himself in it.
He is concorporate with His Consort whose waist
is covered by a flower-soft garment. He is entempled
in the goodly city of Valampuram where dwell residents of
well-renowned and holy lineage, praised by bards. 7

1130. தண்டு அணை தோள்இருபத்தினொடும் தலைபத்து உடையானை,
ஒண்டு அணை மாதுஉமைதான் நடுங்க, ஒருகால்விரல் ஊன்றி,
மிண்டு அது தீர்த்து அருள்செய்ய வல்ல விகிர்தர்க்கு இடம்போலும்--
வண்டு இணைதன்னொடு வைகு பொழில் வலம்புர நன்நகரே.

When the ten-headed and twenty-shouldered Ravaṇa adorned
with a club and other weapons, durst
uproot His Mount, at which His Helpmeet stood
scared, Siva pressed His Mount with His toe

and did away with his hauteur; then when
he rued and hailed Him, He blessed him.
He is the *Vikirta* who is entempled in the goodly city of
Valampuram girt with gardens where the chafers—
male and female—, thrive in paradisal love.
8

1131. தார் உறு தாமரைமேல் அயனும், தரணி அளந்தானும்,
தேர்வு அறியா வகையால் இகலித் திகைத்துத் திரிந்து ஏத்த,
பேர்வு அறியா வகையால் நிமிர்ந்த பெருமான் இடம்போலும்--
வார் உறு சோலை மணம் கமழும் வலம்புர நன் நகரே.

When Brahma seated on the Lotus that could be woven
into a garland and Vishnu who scaled the cosmos,
contended with each other for supremacy and went in
quest of the base and the top of the humongous flame—
the form of Siva—, they stood flabbergasted
and ceased their search.
He is, indeed, entempled in the goodly city of Valampuram
girt with extensive and suaveolent gardens.
9

1132. காவிய நல்-துவர் ஆடையினார், கடு நோன்பு மேற்கொள்ளும்
பாவிகள், சொல்லைப் பயின்று அறியாப் பழந்தொண்டர் உள் உருக,
ஆவியுள் நின்று அருள்செய்ய வல்ல அழகர் இடம்போலும்--
வாவியின் நீர் வயல் வாய்ப்பு உடைய வலம்புர நன்நகரே.

The Buddhists are shrouded in the enduring ochre-robes;
the Samaṇas take to the performance of painstaking *nōnpus.*

These are sinners. The devotees of Siva pursue their
hoary tradition, ignoring the ways of these sinners.
As the devotees of Siva melt in devotion, the Handsome One
abides in their souls and graces them.
He is entempled in the goodly city of Valampuram
girt with pools which fecundate its fields. 10

1133. நல் இயல் நால்மறையோர் புகலித் தமிழ் ஞானசம்பந்தன்,
வல்லியந்தோல் உடை ஆடையினான் வலம்புர நன்நகரைச்
சொல்லிய பாடல்கள்பத்தும் சொல்ல வல்லவர், தொல்வினை போய்,
செல்வன சேவடி சென்று அணுகி, சிவலோகம் சேர்வாரே.

Tamil Gnānasambandhan of Pukali where dwell Brahmins of
exemplary deportment, well versed in the four Vedas,
has sung these ten hymns on the God who is clad in
the skin of a tiger and abides in the goodly city of Valampuram.
They that are valiant in these psalms, will be freed from their
hoary karma. Eke will they gain the salvific feet
of the Opulent One and thrive sempiternally in Sivaloka. 11

104. திருப் பரிதிநியமம் பழம்பஞ்சுரம்

1134. விண் கொண்ட தூ மதி சூடி நீடுவிரிபுன்சடை தாழ,
பெண் கொண்ட மார்பில் வெண்நீறு பூசி, பேண் ஆர் பலி தேர்ந்து,
கண் கொண்ட சாயலொடு ஏர் கவர்ந்த கள்வர்க்கு இடம்போலும்—
பண் கொண்ட வண்டுஇனம் பாடி ஆடும் பரிதி(ந்) நியமமே.

104. TIRUPPARITINIYAMAM

Palampanjuram

Siva wears on His spreading, ruddy, matted and dangling
hair, the pure crescent.
In the chest of Siva who is concorporate with His Consort,
He is coated with the white ash.
He goes about begging which is unbecoming of Him; with His
charming eyes and splendorous form, He did filch
my pulchritude. He is entempled in
Paritiniyamam where bees bombilate and dance. 1

1135. அரவு ஒலி, வில்ஒலி, அம்பின் ஒலி, அடங்கார் புரம்மூன்றும்
நிரவ வல்லார், நிமிர்புன்சடைமேல் நிரம்பா மதி சூடி,
இரவு இல் புகுந்து, என் எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்--
பரவ வல்லார் வினை பாழ்படுக்கும் பரிதி(ந்)நியமமே.

With the roar of His Mountain-bow and its string as also
the darts, He smote the three, hostile, walled-citadels.
He wears on His ruddy matted crest the moon of
a few digits only. He is God Siva who visited me
during night and purloined my splendorous muliebrity.
He who does away with the karma of His earnest devotees
in entempled in Partiniyamam. 2

1136. வாள்முக, வார்குழல், வாள்நெடுங்கண், வளைத் தோள், மாது அஞ்ச,
நீள் முகம் ஆகிய பைங்களிற்றின் உரி மேல் நிகழ்வித்து,
நாண் முகம் காட்டி, நலம் கவர்ந்த நாதர்க்கு இடம்போலும்--
பாண் முக வண்டுஇனம் பாடி ஆடும் பரிதி(ந்) நியமமே.

He peeled off the skin of the long-trunked Tusker and mantled
Himself in it at which His Consort of bright visage,
the One whose hair is long, whose large eyes are
sharp and lustrous and whose arms are soft as
the bamboo, stood scared.
As I stood bashful, He, the Lord-God, committed
the larceny of my womanly virtues. He is entempled in
Paritiniyamam where bees sweetly bombilate and dance. 3

1137. வெஞ்சுரம் சேர் விளையாடல் பேணி, விரிபுன்சடை தாழ,
துஞ்சு இருள் மாலையும் நண்பகலும், துணையார், பலி தேர்ந்து,
அம் கரும்பு ஆர் குழல் சோர, உள்ளம் கவர்ந்தார்க்கு இடம்போலும்--
பஞ்சுரம் பாடி வண்டு யாழ்முரலும் பரிதி(ந்) நியமமே.

He dances in the crematory fierce like the wild wilderness.
With His spreading, ruddy, matted hair adangle,
He pursues mendicancy during night when people
sleep, and also during eventide and noon,
companied with His Bhūta Hosts. Even as my coiffure
buzzed by bees began to slide He stole my heart.
He is entempled in Paritiniyamam where swarming bees bombinate
in the *pann* of panjuram, like a melodious *yā*l. 4

1138. நீர் புல்கு புன்சடை நின்று இலங்க, நெடு வெண்மதி சூடி,
தார் புல்கு மார்பில் வெண்நீறு அணிந்து, தலை ஆர் பலி தேர்வார்,
ஏர் புல்கு சாயல் எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்--
பார் புல்கு தொல்புகழால் விளங்கும் பரிதி(ந்) நியமமே.

Siva sports splendorously on His ruddy matted hair
the Ganga and the long white crescent.
His garlanded chest is bedaubed with the white holy ash.
He totes a skull as His begging bowl into which He receives alms.
Alas, He looted my charming and lovely mien. He is entempled in
Paritiniyamam whose hoary renown pervades ubiquitously. 5

1139. வெங்கடுங்காட்டு அகத்து ஆடல் பேணி, விரிபுன்சடை தாழ,
திங்கள் திருமுடிமேல் விளங்க, திசை ஆர் பலி தேர்வார்,
சங்கொடு சாயல் எழில் கவர்ந்த சைவர்க்கு இடம்போலும்--
பைங்கொடிமுல்லை படர் புறவின் பரிதி(ந்) நியமமே.

Siva dances in the exceedingly hot crematory; On His spreading,
ruddy matted hair adangle, He bears the crescent.
He roams about in all the directions soliciting alms.
He caused the chank-bangles worn by me to slide
and filched my mien and my pulchritude.
He, the Saivite, is entempled in Paritiniyamam
where abound the green *mullai* lianas. 6

1140. பிறை வளர் செஞ்சடை பின் தயங்க, பெரிய மழு ஏந்தி,
மறை ஒலி பாடி, வெண்நீறு பூசி, மனைகள் பலி தேர்வார்,
இறை வளை சோர எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்--
பறை ஒலி சங்குஒலியால் விளங்கும் பரிதி(ந்)நியமமே.

Siva sports on His ruddy mattled hair which
dangles on His back, the crescent. He wields a huge *malu.*

Bedaubed with the white ash, He sings the Vedic hymns,
and roams about begging alms from every house.
He, my God, caused the sliding of the bangles worn in
my forearm and filched my splendorous muliebrity.
He is entempled in Paritiniyamam where drums
resound and chanks are blown. 7

1141. ஆசு அடை வானவர் தானவரோடு அடியார் அமர்ந்து ஏத்த,
மாசு அடையாத வெண்நீறு பூசி, மனைகள் பலி தேர்வார்,
காசு அடை மேகலை சோர உள்ளம் கவர்ந்தார்க்கு இடம்போலும்--
பாசடைத் தாமரை வைகு பொய்கைப் பரிதி(ந்) நியமமே.

Siva, the Palladium unto all, is hailed and adored by the Devas,
the Vidyātaras and the devotees who contemplate Him, seated.
Coated with the white ash that averruncates sins, He solicits alms
from every house. Causing my cingulum
decked with gems to slide, He looted my heart.
He is entempled in Paritiniyamam dight with pools where
thrive the green-leaved and multifoliate lotus flowers. 8

1142. நாடினார் காண்கிலர் நான்முகனும் திருமால் நயந்து ஏத்த,
கூடலர் ஆடலர்ஆகி, நாளும் குழகர் பலி தேர்வார்,
ஏடு அலர் சோர எழில் கவர்ந்த இறைவர்க்கு இடம்போலும்--
பாடலர் ஆடலராய் வணங்கும் பரிதி(ந்)நியமமே.

He stood unbeholdable by the Four-faced and Vishnu
who went in quest of Him.
Lo, He deigned to sport and gambol with me.

He, the ever-young One, daily goes about soliciting alms.
He caused my visage like unto the petalled lotus,
grow languorous and purloined my beauty.
He is entempled in Paritiniyamam where bhaktas
hail Him in hymns and dance rapturously. 9

1143. கல் வளர் ஆடையர், கையில் உண்ணும் கழுக்கள், இழுக்குஆன
சொல் வளம்ஆக நினைக்க வேண்டா: சுடுநீறு அதுஆடி,
நல் வளை சோர நலம் கவர்ந்த நாதர்க்கு இடம்போலும்--
பல் வளர் முல்லைஅம்கொல்லை வேலிப் பரிதி(ந்) நியமமே.

The Buddhists are shrouded in ochre-robes; the Samaṇas who deserve
impalement, stand eating food received in their gowpens.
Do not take into account theirblemished utterances.
Siva, the Lord-God, adorned with the baked ash,
caused the sliding of my goodly bangles
and committed theft of my womanly virtue.
He is entempled in Paritiniyamam fenced with
the *mullai* plants teeming with dense buds,
very like the rows of women's teeth. 10

1144. பைஅரவம் விரி காந்தள் விம்மு பரிதி(ந்) நியமத்துத்
தையல் ஓர்பாகம் அமர்ந்தவனைத் தமிழ் ஞானசம்பந்தன்
பொய்இலி மாலை புனைந்த பத்தும் பரவிப் புகழ்ந்து ஏத்த,
ஐயுறவு இல்லை, பிறப்பு அறுத்தல்; அவலம் அடையாவே.

In Paritiniyamam abound the plants of *kāntal* whose
unfolding flowers are like the hoods of serpents.

Here is entempled Siva concorporate with His Consort.
On Him, Tamil̲ Gnānasambandhan has truly
and in abounding faith, sung these ten garlands of verse.
They that hymn these and laud Siva, will, without
doubt, be manumitted from embodiment.
They will also flourish untouched by misery. 11

105. திருக் கலிக்காமூர் பழம்பஞ்சுரம்

1145. மடல் வரை இல் மது விம்மு சோலை வயல் சூழ்ந்து, அழகு ஆரும்,
கடல் வரை ஓதம் கலந்து முத்தம் சொரியும் கலிக்காமூர்,
உடல் வரையின் உயிர் வாழ்க்கைஆய ஒருவன் கழல் ஏத்த,
இடர் தொடரா; வினைஆன சிந்தும்; இறைவன்(ன்) அருள் ஆமே.

105. TIRUKKALIKKĀMŪR Pal̲ampanjuram

Siva is entempled in Kalikkāmūr girt with gardens
abounding in petalled amd melliferous flowers and fields.
The mountainous billows of the main shore up here pearls aplenty.
Siva is the Peerless One who is the Life of lives.
Adoration of His ankleted feet will annul karma;
eke will it cause adorers come by the grace of Grace. 1

1146. மைவரை போல்-திரையோடு கூடிப் புடையே மலிந்து ஓதம்
கை வரையால் வளர் சங்கம் எங்கும் மிகுக்கும் கலிக்காமூர்,
மெய் வரையான்மகள் பாகன் தன்னை விரும்ப, உடல் வாழும்
ஐவரை ஆசு அறுத்து ஆளும் என்பர்; அதுவும் சரதமே.

Siva who is concorporate with the Daughter of Himavant,
is entempled in Kalikkāmūr where the mountainous
billows of the main brush the clouds, shore up
aplenty everywhere the heaps of adipose chanks.
If He is gained, He will quell the blemished pentad
of sense-organs of His devotees and rule over them.
This is absolutely true.
2

1147. தூவிய நீர் மலர் ஏந்தி வையத்தவர்கள் தொழுது ஏத்த,
காவியின் நேர் விழி மாதர் என்றும் கவின் ஆர் கலிக்காமூர்
மேவிய ஈசனை, எம்பிரானை, விரும்பி வழிபட்டால்,
ஆவியுள் நீங்கலன்--ஆதிமூர்த்தி, அமரர்பெருமானே.

Siva is entempled in the splendorous Kalikkāmūr
where adorers carry for His ablutions, pure and holy
water, and flowers for His pūja.
Here thrive women whose eyes are like blue lilies
and who hail and adore Him.
If we worship Him with all our heart, our God,
the Primal Ens who is the God of gods, will
sempiternally abide in our souls inseparably. 3

1148. குன்றுகள் போல்-திரை உந்தி, அம் தண் மணி ஆர்தர, மேதி
கன்றுஉடன் புல்கி, ஆயம் மனை சூழ் கவின் ஆர் கலிக்காமூர்,
என்று உணர் ஊழியும் வாழும் எந்தைபெருமான் அடி ஏத்தி
நின்று உணர்வாரை நினையகில்லார், நீசர் நமன்தமரே.

Siva is entempled in the splendorous Kalikkāmūr at which are
shored up by the hill-like billows, cool and comely pearls.
Here the herds of buffaloes with their calves return,
well-appeased, to their respective mangers.
They that do not contemplate and adore the servitors
of Siva who are poised in the adoration of Siva—
our Sire—, who flourishes even during the Great
Dissolution, are the base—the victims of Yama. 4

1149. வான்இடை வாள்மதி மாடம் தீண்ட, மருங்கே கடல்ஓதம்
கான்இடை நீழலில் கண்டல் வாழும் கழி சூழ் கலிக்காமூர்
ஆன்இடை ஐந்து உகந்து ஆடினானை அமரர் தொழுது ஏத்த,
நான் அடைவு ஆம் வணம் அன்பு தந்த நலமே நினைவோமே.

Siva is entempled in Kalikkāmūr dight with lofty mansions which
brush the skyey moon; in its sides, the waves of
the sea do dash; this urbs is dight with gardens in
whose umbrage flourish well the fragrant-screw-pines.
This place is also girt with creeks. In this delubrum Siva
who rejoices in the ablutions of the five products
of kine, abides hailed by the adoring Devas.
Siva blesses His devoees with such weal which is not
the lot of the Devas.
We will ever cherish this with gratitude. 5

1150. துறை வளர் கேதகைமீது வாசம் சூழ்வான் மலி தென்றல்
கறை வளரும் கடல்ஓதம் என்றும் கலிக்கும் கலிக்காமூர்,
மறை வளரும் பொருள் ஆயினானை மனத்தால் நினைந்து ஏத்த,
நிறை வளரும் புகழ் எய்தும்; வாதை நினையா; வினை போமே.

Siva is entempled in Kalikkāmūr where the southerly
wafts with the perfume of the fragrant-screw-pine
flowers which grow in the sea-shore. Here the murky
waves of the main resound for ever.
If Siva who is the import of the four Vedas is contemplated
with all our *manam* then will ensue deathless glory.
Troubles will cease and karma will perish.
6

1151. கோல நல் மேனியின் மாதர் மைந்தர் கொணர் மங்கலியத்தில்,
காலமும் பொய்க்கினும், தாம் வழுவாது இயற்றும் கலிக்காமூர்,
ஞாலமும், தீ, வளி, ஞாயிறு, ஆய நம்பன் கழல் ஏத்தி,
ஓலம் இடாதவர் ஊழி என்றும் உணர்வைத் துறந்தாரே.

Siva is entempled in Kalikkāmūr where women of
goodly and splendorous forms and men carry with them,
without fail, the auspicious articles for puja and have it
performed even when the seasonal rains fail.
They that do not adore the ankleted feet of the Ashta-Mūrti,
the supremely desirable God and vociferously hail
Him in love, will not come by the Godly knowledge
even if they exist till the advent of the Great Dissolution. 7

[**Note**. The five elements, the sun, the moon and the soul constitute the
Ashta- Mūrti.]

1152. ஊர் அரவம் தலை நீள் முடியான் ஒலிநீர் உலகு ஆண்டு,
கார் அரவக்கடல் சூழ வாழும் பதிஆம் கலிக்காமூர்
தேர் அரவு அல்குல் அம் பேதை அஞ்சத் திருந்து வரை பேர்த்தான்
ஆர் அரவம்பட வைத்த பாதம் உடையான் இடம்ஆமே.

Siva who is decked with a crawling snake on His
long hair, is entempled in Kalikkāmūr.
He is the Ruler of orbis terrarum girt with dark and dinsome seas.
Siva pressed His toe on His Mount and crushed Ravaṇa
who durst uproot His Mount and then wailed aloud,
at which Siva's Consort whose *alkul* is rotund like
unto the wheel of a chariot, stood scared. 8

1153. அரு வரை ஏந்திய மாலும், மற்றை அலர்மேல் உறைவானும்,
இருவரும் அஞ்ச, எரிஉருஆய் எழுந்தான் கலிக்காமூர்,
ஒரு வரையான்மகள் பாகன்தன்னை உணர்வால்-தொழுது ஏத்த,
திரு மருவும்; சிதைவு இல்லை; செம்மைத் தேசு உண்டு, அவர்பாலே.

Siva soared up and up as a limitless column of
flame witnessing which Vishnu, who of yore, lifted up the Mount
Govardana and Brahma ensconced on the Lotus, stood
flabbergasted in dread as their quest failed.
Siva who is concorporate with the Daughter of Himavant,
is entempled in Kalikkāmūr.
They that adore Him with Siva-consciousness will gain
(spiritual) opulence; eke will they remain unflawed.
Salvific effulgence is truly theirs. 9

1154. மாசு பிறக்கிய மேனியாரும், மருவும் துவர் ஆடை
மீசு பிறக்கிய மெய்யினாரும், அறியார், அவர் தோற்றம்;
காசினி நீர்த்திரள் மண்டி, எங்கும் வளம் ஆர் கலிக்காமூர்
ஈசனை--எந்தைபிரானை--ஏத்தி, நினைவார் வினை போமே.

The dirty-bodied Samaṇas and the Buddhists shrouded
in ochre-robes know not a whit of Siva's glory.
Lo, He is entempled in Kalikkāmūr endowed with
the wealth of water and abounding in fecund fields.
They that contemplate Siva, our Sire, and hail Him,
will be freed from their karma. 10

1155. ஆழியுள் நஞ்சு அமுதுஆரஉண்டு, அன்று அமரர்க்கு அமுது உண்ண
ஊழிதொறும்(ம்) உளரா அளித்தான், உலகத்து உயர்கின்ற
காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன தமிழால், கலிக்காமூர்
வாழி எம்மானை வணங்கி ஏத்த, மருவா, பிணிதானே.

Siva, of yore, quaffed the oceanic venom as though
it were ambrosia and blessed the Devas with elixir.
It is thanks to Siva that the cosmos thrives during aeons.
Gnānasambandhan of Kāli has hymned in Tamil
the great Kalikkāmūr.
They that laud and adore Siva, our Sire, with these psalms,
will be, for ever, free from the onslaught of maladies. 11

106. திரு வலஞ்சுழி

பழம்பஞ்சுரம்

1156. "பள்ளம்அது ஆய படர்சடைமேல் பயிலும் திரைக் கங்கை
வெள்ளம்அது ஆர விரும்பி நின்ற விகிர்தன், விடை ஏறும்
வள்ளல்--வலஞ்சுழிவாணன்" என்று மருவி நினைந்து ஏத்தி,
உள்ளம் உருக, உணருமின்கள்! உறு நோய் அடையாவே.

107. TIRUVALANCHUḺI

Paḻampanjuram

Siva's spreading matted crest has a depression in which
He bears the flood of the billowy Ganga.
He, the *Vikirta*, rides His Bull. He is the Lord-Patron
who is entempled in Valanchuḻi.
Gain access to Him, meditate on Him and hail Him,
with Your melting heart. Become Siva-conscious.
Afflicting maladies will not assail you at all. 1

1157. கார் அணி வெள்ளை மதியம் சூடி, கமழ் புன்சடைதன்மேல்
தார் அணி கொன்றையும் தண் எருக்கும் தழையும் நுழைவித்து,
வார் அணி கொங்கை நல்லாள்தனோடும் வலஞ்சுழி மேவியவர்,
ஊர் அணி பெய் பலி கொண்டு உகந்த உவகை அறியோமே!

The white moon wading through nimbi is worn by Him.
On His fragrant, ruddy and matted crest, He is densely
decked with *koṉrai* garlands and the cool wreath of madar flowers.
With His goodly Woman whose breasts are covered
by a band, He abides in Valanchuḻi.
He receives alms from all towns and feels ecstatic.
We know not what may the reason be for this. 2

1158. பொன் இயலும் திருமேனிதன் மேல் புரிநூல் பொலிவித்து,
மின் இயலும் சடை தாழ, வேழஉரி போர்த்து, அரவு ஆட,
மன்னிய மா மறையோர்கள் போற்றும் வலஞ்சுழிவாணர்தம்மேல்
உன்னிய சிந்தையில் நீங்ககில்லார்க்கு உயர்வு ஆம்; பிணி போமே.

Siva wears on His auric and divine body
the splendorous strands of sacred thread.
His fulgurant matted hair is adangle. He is mantled
in the skin of the Tusker; a dancing snake adorns Him.
He is entempled in Valanchuli hailed by
the practitioners of the great and eternal Vedas.
They that, without interruption, think on Him, will gain
loftiness; their maladies will quit them. 3

1159. விடை, ஒரு பால்; ஒருபால் விரும்பு மெல்லியல்; புல்கியது ஓர்
சடை, ஒருபால்; ஒருபால் இடம் கொள் தாழ்குழல் போற்றுஇசைப்ப,
நடை, ஒருபால்; ஒருபால் சிலம்பு; நாளும் வலஞ்சுழி சேர்
அடை, ஒருபால்; அடையாத செய்யும் செய்கை அறியோமே!

On one side is His Bull; on another is Ganga
of soft mien; on His head is His extensive
and spreading matted hair; on His left half abides
His adoring Consort whose hair dangles down.
Great gait marks His feet; on one foot He wears a *cilampu.*
Such, indeed, is Siva who is entempled in Valanchuli.
Adore Him daily. We know not of any one matching 4
His description mentioned above.

1160. கை அமரும் மழு, நாகம், வீணை, கலைமான்மறி, ஏந்தி;
மெய் அமரும் பொடிப் பூசி; வீசும் குழை ஆர்தரு தோடும்
பை அமரும்(ம்) அரவு ஆட, ஆடும் படர்சடையார்க்கு இடம்ஆம்--
மை அமரும் பொழில் சூழும் வேலி வலஞ்சுழி மாநகரே.

Siva holds in His hands a *malu*, a snake, a *vina*
and an antlered fawn.
His body is bedaubed with the holy ash; His ears are adorned with
a *kulai* and a *todu* which sway in effulgence.
Adorned with a dancing serpent, He doth dance.
Spreading is His matted hair. He is entempled
in the great city of Valanchuli fenced on all sides
with embrowning gardens. 5

1161. தண்டொடு சூலம் தழைய ஏந்தி, தையல் ஒருபாகம்
கண்டு, இடுபெய் பலி பேணி நாணார், கரியின்உரி-தோலர்,
வண்டு இடு மொய் பொழில் சூழ்ந்த மாட வலஞ்சுழி மன்னியவர்,
தொண்டொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பைத் தொடர்வோமே.

Siva wields a club and a spear splendorously. He is
concorporate with His Woman; He feels no shame in
receiving alms; He is mantled in the Tusker's skin.
He is eternally entempled in Valanchuli girt with gardens
where bees swarm and hum; eke is it dight
with storeyed mansions galore.
He is closely associated with His servants and graces them.
Let us continue to foster this nexus. 6

1162. கல் இயலும் மலை அம் கை நீங்க வளைத்து, வளையாதார்
சொல் இயலும் மதில்மூன்றும் செற்ற சுடரான், இடர் நீங்க
மல் இயலும் திரள்தோள் எம் ஆதி, வலஞ்சுழி மாநகரே
புல்கிய வேந்தனைப் புல்கி ஏத்தி இருப்பவர் புண்ணியரே.

Siva bent the rocky Mount Meru into a bow and with it
smote the three blameworthy walled-citadels.
Flame-like in His form. He whose arms display skill
in boxing, is entempled in the great city of Valanchuli.
They that are attached to Him—the Sovereign Ruler—,
who is attached to His servitors, are the truly holy. 7

1163. வெஞ்சின வாள் அரக்கன், வரையை விறலால் எடுத்தான், தோள்-
அஞ்சும்ஒருஆறுஇரு-நான்கும் ஒன்றும் அடர்த்தார்; அழகுஆய
நஞ்சுஇருள் கண்டத்து நாதர்; என்றும் நணுகும் இடம்போலும்--
மஞ்சு உலவும் பொழில் வண்டு கெண்டும் வலஞ்சுழி மா நகரே.

When the bright and fiercely wrathful Asura durst uproot His Mount,
impelled by his prowess, Siva crushed his twenty arms.
He, the Handsome One, is the Lord whose throat wears
a patch of blue venom.
He is enetempled in joy at the great city of Valanchuli
girt with cloud-vaulting gardens where bees
kindle the buds and the blossoms. 8

1164. ஏடு இயல் நான்முகன், சீர் நெடுமால், என நின்றவர் காணார்,
கூடிய கூர் எரிஆய் நிமிர்ந்த குழகர்; உலகு ஏத்த
வாடிய வெண்தலை கையில் ஏந்தி; வலஞ்சுழி மேய எம்மான்--
பாடிய நால்மறையாளர்--செய்யும் சரிதை பலபலவே!
When Brahma seated on the petalled Lotus and Vishnu,
the tall and glorious, that scaled the sky,
went in quest of Siva, He stood as a humongous
and tapering flame unbeholdable by them.

Siva carries in His hand a faded and white skull
    as His begging-bowl.
He, our God, is entempled in Valanchuli; He is
    euologized by those well versed in the four Vedas.
Innumerable, indeed, are His divine *lilās*.
9

1165. குண்டரும் புத்தரும், கூறை இன்றிக் குழுவார், உரை நீத்து,
தொண்டரும் தன் தொழில் பேண நின்ற கழலான்; அழல்ஆடி--
வண்டு அமரும் பொழில் மல்கு பொன்னி வலஞ்சுழிவாணன்; எம்மான்
பண்டு ஒரு வேள்வி முனிந்து செற்ற பரிசே பகர்வோமே.

The obdurate and adipose Samaṇas who roam about
    nude and the Buddhists blabber balderdash.
Siva's servitors ignore these and remain poised in servitorship.
With anklets fastened to His feet He dances in the fire.
He is entempled in Valanchuli where the Kāviri curves right
    and flows. Here thrive gardens—the habitat of bees.
Let us celebrate His wrathful devastation of
    Daksha's sacrifice, in the distant past.
10

1166. வாழி எம்மான், எனக்கு எந்தை, மேய வலஞ்சுழி மா நகர்மேல்,
காழியுள் ஞானசம்பந்தன் சொன்ன கருத்தின் தமிழ்மாலை,
ஆழி இவ் வையகத்து ஏத்த வல்லார் அவர்க்கும் தமருக்கும்
ஊழி ஒரு பெரும் இன்பம் ஓர்க்கும்; உருவும் உயர்வு ஆமே.

Hailing the goodly city of Siva's Valanchuli who is our Chief
    and our Sire, Gnānasambandhan of Sikāli, has sung this
    garland of Tamil hymns gravid with excellent import.

They that are valiant in these psalms and their kin
will flourish in bliss in this orbis terrarum.
Even during the Grand Dissolution they will remain
firmly poised in the glory of immense excellence. 11

107. திரு நாரையூர்

பழம்பஞ்சுரம்

1167. கடல்இடை வெங்கடுநஞ்சம் உண்ட கடவுள், விடைஏறி,
உடல்இடையின் பொடிப் பூச வல்லான், உமையோடு ஒருபாகன்,
அடல்இடையில் சிலை தாங்கி எய்த அம்மான், அடியார்மேல்
நடலை வினைத்தொகை தீர்த்து உகந்தான், இடம்--நாரையூர்தானே.

107. TIRUNĀRAIYŪR

Pal͟ampanjuram

God Siva quaffed the fierce and deadly venom
that uprose when the sea was churned.
His mount is the Bull. His body is bedaubed with the holy ash.
He is concorporate with Uma, His Consort.
During His fight with the Asuras of the three walled-citadels
He wielded His Mountain-Bow.
He, our God, rejoices to annul the thronging evil deeds 1
of His devotees. He is willingly entempled in Nāraiyūr.

1168. "விண்ணின் மின் நேர் மதி, துத்தி நாகம், விரிபூமலர்க்கொன்றை,
பெண்ணின் முன்னே மிக வைத்து உகந்த பெருமான்; எரிஆடி--
நண்ணிய தன் அடியார்களோடும் திரு நாரையூரான்" என்று
எண்ணுமின்! நும் வினை போகும் வண்ணம் இறைஞ்சும்! நிறைவு ஆமே.

Siva sports on His matted crest the fulgurant moon
of the sky, the snake of speckled hood and blossoming
konr̲ai flowers that face the Ganga, and rejoices.
He, our God, dances in the fire. He abides at Tirunāraiyūr.

Contemplate Him companied with His adoring servitors.
So adore Him that your evil karma absolutely vamooses.
You will, by His grace, come by fulfilment. 2

1169. தோடு ஒரு காது, ஒரு காது சேர்ந்த குழையான், இழை தோன்றும்
பீடு ஒரு கால் பிரியாது நின்ற பிறையான், மறைஓதி,
நாடு ஒரு காலமும் சேர நின்ற திரு நாரையூரானைப்
பாடுமின், நீர் பழி போகும் வண்ணம்! பயிலும்! உயர்வு ஆமே.

Siva wears a *todu* in one ear and a *kul̲ai* in the other.
His chest is adorned with the sacred thread.
His glory is everlasting. He wears the crescent on His crest.
He is the Reciter of the Vedas. He is entempled in Nāraiyūr
where gather His devotees during the divisions of the day
when *puja* is performed to Siva.
So hymn Him and adore Him without interruption, that your
blame will quit you. You are bound to thrive loftily. 3

1170. வெண்நிலவு அம் சடை சேர வைத்து, விளங்கும் தலை ஏந்தி,
பெண்ணில் அமர்ந்து ஒருகூறு அதுஆய பெருமான்; அருள் ஆர்ந்த
அண்ணல்; மன்னி உறை கோயில் ஆகும் அணி நாரையூர்தன்னை
நண்ணல் அமர்ந்து, உறவு ஆக்குமின்கள்! நடலைகரிசு அறுமே.

Siva wears on His beauteous matted crest the white-rayed
crescent. He totes the splendorous skull of Brahma's.
He, our God, is concorporate with His Consort. He is, indeed,
the Great One abounding in grace.
He is eternally entempled in the ornate Nāraiyūr.
Reach it and totally dedicate your love to Him.
All your troubles will vanish tracelessly. 4

1171. வான், அமர் தீ, வளி, நீர், நிலன்ஆய், வழங்கும் பழி ஆகும்
ஊன் அமர் இன் உயிர் தீங்கு குற்றம் உறைவால், பிறிது இன்றி,
நான் அமரும் பொருள்ஆகி நின்றான்--திரு நாரையூர் எந்தை,
கோன்; அவனைக் குறுகக் குறுகா, கொடுவல்வினைதானே.

This body is a product of the pentad of elements namely
space, fire, air, water and earth; sweet life abides
in this tabernacle of flesh prone to commit offences
which are blameworthy.
To gain redemption the only loveable Palladium is our
God and Sire who is entempled in Nāraiyūr.
If refuge in Him is gained, fierce and cruel karma
will not afflict us at all. 5

1172. கொக்குஇறகும், குளிர் சென்னி, மத்தம் குலாய மலர் சூடி,
அக்கு அரவோடு அரை ஆர்த்து, உகந்த அழகன்; குழகுஆக
நக்கு அமரும் திருமேனியாளன்; திரு நாரையூர் மேவிப்
புக்கு அமரும் மனத்தோர்கள் தம்மைப் புணரும், புகல்தானே.

Siva is decked with the feather of the Heron and *ūmattham*
flowers—cool and splendorous. He is the Handsome One
whose waist is cinctured with bones and an adder.
The ever-young One of divine body remains nude.
He is entempled in Nāraiyūr. If we reach it and adore
Him with all our soul, He will be our eternal Refuge. 6

1173. ஊழியும் இன்பமும் காலம்ஆகி, உயரும் தவம்ஆகி,
ஏழ்இசையின் பொருள், வாழும் வாழ்க்கை வினையின் புணர்ப்புஆகி,
நாழிகையும் பலஞாயிறு ஆகி, நளிர் நாரையூர் தன்னில்
வாழியர், மேதகு மைந்தர், செய்யும் வகையின் விளைவு ஆமே.

Siva is the Resolver of cosmos; He is sheer sweetness as well as
the division of time. He is, indeed, the lofty *tapas*.
He is the fruit of the sevenfold music. He links the kārmic
consequences with the doers of deeds.
He constitutes the small units of time as well as the many
days of living. These are all the outcome of the *lilās*
of Siva who is entempled in the cool Nāraiyūr. 7

1174. கூசம் இலாது அரக்கன் வரையைக் குலுங்க எடுத்தான் தோள்
நாசம்அதுஆகி இற அடர்த்த விரலான், கரவாதார்
பேச வியப்பொடு பேண நின்ற பெரியோன், இடம்போலும்--
தேசம் உறப் புகழ் செம்மை பெற்ற திரு நாரையூர்தானே.
When the shameless Asura durst uproot His Mount
and shook it, Siva pressed His Mount with His toe
and crushed his shoulders which grew languid.

He is the Great One who is wondrously lauded
and contemplated by those who knew nought of deception.
He is entempled in Nāraiyūr of ubiquitous renown.
8

1175. பூமகனும்(ம்), அவனைப் பயந்த புயல் ஆர் நிறத்தானும்,
ஆம் அளவம் திரிந்து ஏத்திக் காண்டல் அறிதற்கு அரியான்ஊர்--
பா மருவும் குணத்தோர்கள் ஈண்டிப் பலவும் பணி செய்யும்,
தேம் மருவும் திகழ் சோலை சூழ்ந்த, திரு நாரையூர்தானே.

When Brahma whose seat is the Lotus and his Sire—Vishnu,
the nimbus-hued—, roamed in quest of Him, as far
as it lay in their power, all in vain, they adored Him who
stood unbeholdable by them.
He is entempled in Tirunāraiyūr girt with melis-fragrant
gardens. Here gather those that are well versed in many
an ethical and didactic opus, to render unto Him
service in multitudinous ways.
9

1176. வெற்று அரை ஆகிய வேடம் காட்டித் திரிவார், துவர்ஆடை
உற்ற(அ)ரையோர்கள், உரைக்கும் சொல்லை உணராது, எழுமின்கள்--
குற்றம் இலாதது ஓர் கொள்கை எம்மான், குழகன், தொழில் ஆரப்-
பெற்று அரவு ஆட்டி வரும் பெருமான், திரு நாரையூர் சேரவே!

Ignore the utterances of the Samaṇas who roam about
utterly nude and the Buddhists shrouded in ochre-robes.
Siva is the ever-young One; He is our Chief absolutely unflawed.
He is ever minded to shower grace on His devotees.
He is Siva who is adorned with a dancng adder.

He is entempled in Nāraiyūr. Reach His delubrum
in all celerity and hail Him.
10

1177. பாடு இயலும் திரை சூழ் புகலித் திருஞானசம்பந்தன்,
சேடு இயலும் புகழ் ஓங்கு செம்மைத் திரு நாரையூரான்மேல்,
பாடிய தண் தமிழ்மாலைபத்தும் பரவித் திரிந்து, ஆக
ஆடிய சிந்தையினார்க்கு நீங்கும், அவலக்கடல்தானே.

Gnānasambandhan of Pukali close to the sea the waves
of which are tuneful, has sung these hymns on
the God of the salvific Nāraiyūr whose lofty glory
pervades the heavens.
The sea-like misery of those who are valiant in these
ten garlands of cool psalms with which they hail Siva
and who were grieving hitherto with their sorrowing
chinta, will perish altogether.
11

108. திரு ஆலவாய்

நாலடிமேல் வைப்பு **பழம்பஞ்சுரம்**

1178. வேதவேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம்இ(ல்)லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருஉள்ளமே?
பாதி மாது உடன்ஆய பரமனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

108. TIRUĀLAVĀI

Nālaṭimēlvaippu

Paḻampanjuram

O God whose left half is Your Consort! To vanquish in
disputation the base Samanas and the Buddhists
who roam about denigrating the Vedas and sacrifices,
I invoke You. Does it square with Your divine will?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 1

1179. வைதிகத்தின்வழி ஒழுகாத அக்
கைதவம்(ம்) உடைக் கார்அமண்தேரரை
எய்தி, வாதுசெயத் திருஉள்ளமே?
மை திகழ் தரு மா மணிகண்டனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O Great and blue-throated God! To vanquish in
disputation the deceitful and dark-hearted Samaṇas
and the Buddhists who follow not the Vedic way, I invoke
You. Does this square with Your divine will?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 2

1180. மறை வழக்கம் இலாத மா பாவிகள்--
பறி தலைக் கையர், பாய் உடுப்பார்களை--
முறிய, வாதுசெயத் திருஉள்ளமே?
மறி உலாம் கையில் மா மழுவாளனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O God whose hands hold the fawn and the great *malu!*
To defeat in disputation the great sinful trichotillomaniacs who
tote mats and do not follow the Vedic way, I invoke You.
Does this square with Your divine will?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 3

1181. அறுத்த அங்கம்ஆறு ஆயின நீர்மையைக்
கறுத்து வாழ் அமண்கையர்கள்தம்மொடும்
செறுத்து, வாதுசெயத் திருஉள்ளமே?
முறித்த வாள்மதிக்கண்ணி முதல்வனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O the Primal God who wears a slice of the moon!
To quell in the heated disputation the Samaṇas who denigrate
the well-formed and merciful Angās six, I invoke You.
Does this square with Your divine will?
O our Primal Ens entempled in the Southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 4

1182. அந்தணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த, வாதுசெயத் திருஉள்ளமே?
வெந்தநீறுஅது அணியும் விகிர்தனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O *Vikirta* who wears the baked ash! To shatter into
smithereens, in disputation, the dexterity of the Samaṇas
who ignore the rituals of the rare Vedas performed by Brahmins,
I invoke You. Does this square with Your divine will?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 5

1183. வேட்டு வேள்வி செயும் பொருளை விளி
மூட்டு சிந்தை முருட்டு அமண்குண்டரை
ஓட்டி, வாதுசெயத் திருஉள்ளமே?
காட்டில் ஆனை உரித்த எம் கள்வனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O our irate Thief who peeled off the skin of the sylvan Tusker!
To defeat in disputation, the obdurate and adipose Samaṇas
who denigrate the Vedic sacrifices,
I invoke You. Does this square with Your divine will?
Our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 6

1184. அழல் அது ஓம்பும் அருமறையோர் திறம்
விழல்அது என்னும் அருகர் திறத்திறம்
கழல, வாதுசெயத் திருஉள்ளமே?
தழல்இலங்கு திருஉருச் சைவனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O Saivite of divine form thriving in fire! To quell in
disputation the Samaṇas skilled in manifold gramarye
and who denigrate the greatness of the Vedic fire-
sacrifices, I seek Your divine approval.
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 7

1185. நீற்று மேனியர் ஆயினர்மேல் உற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி, வாதுசெயத் திருஉள்ளமே?
ஆற்ற வாள் அரக்கற்கும் அருளினாய்!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

You graced even the Asura, the wielder of the bright sword!
To quell in disputation the Samaṇas who would not stand in the place
where the wind touching the ash-adorned persons, wafts.
For this I invoke You. Does this square with Your divine will?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 8

1186. நீல மேனி அமணர் திறத்து நின்
சீலம் வாதுசெயத் திருஉள்ளமே?
மாலும் நான்முகனும் காண்பு அரியது ஓர்
கோலம் மேனிஅது ஆகிய குன்றமே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

O Siva, You soared up and up as a splendorous mountain
of fire unbeholdable by Vishnu and the Four-faced.
To establish Your greatness, I am to indulge in a disputation
with the blue-bodied Samaṇas. Do You approve of this?
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 9

1187. அன்று முப்புரம் செற்ற அழக! நின்
துன்று பொன்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெயத் திருஉள்ளமே?
கன்று சாக்கியர் காணாத் தலைவனே!--
ஞாலம் நின் புகழே மிக வேண்டும், தென்-
ஆலவாயில் உறையும் எம் ஆதியே!

Of yore, O Handsome One, You smote the three walled-citadels!
To quell in disputation the Samaṇas who adore not Your
auric ankleted feet, I invoke You. Do You approve of this?
You are the Chief God imperceivable by the angry Buddhists.
O our Primal Ens entempled in the southern Ālavāi!
The whole world should be pervaded by Your glory. 10

1188. கூடல் ஆலவாய்க்கோனை விடைகொண்டு,
வாடல் மேனி அமணரை வாட்டிட,
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கியவாளரே.

Adoring the Sovereign of Kūtal Ālavai who gave leave
to Gnānasambandhan of Kāli dight with mansions,
to vanquish in disputation the emaciated Samaṇas,
has sung these worthy hymns. They that are valiant
in these psalms, are the truly fortunate ones. 11

109. திருக் கயிலாயமும் திரு ஆனைக்காவும் திரு மயேந்திரமும் திரு ஆரூரும்

பழம்பஞ்சுரம்

கூடற்சதுக்கம்

1189. மண் அது உண்ட(அ)ரி மலரோன் காணா--
வெண்நாவல்--விரும்பு மயேந்திரரும்,
கண்ணது ஓங்கிய கயிலையாரும்,
அண்ணல் ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

109. TIRUKKAYILĀYAMUṀ – TIRUVĀṈAIKKĀVUM TIRUMAYĒNTIRAMUM – TIRUVĀRŪRUM

Kūtal Sathukkam **Paṇ: Palampanjuram**

Siva who is unbeholdable by Vishnu who devoured the earth
and Brahma seated on the Lotus, is entempled in
Mount Mayēntira.
He of the splendorous Mount Kailās, is the Noble God of Ārūr
and Āṉaikka where He is seated under the white *Nāval* tree. 1

1190. வந்து மால் அயன் அவர் காண்பு அரியார்,
வெந்தவெண் நீறு அணி மயேந்திரரும்;
கந்த வார்சடை உடைக் கயிலையாரும்;
அம் தண் ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Siva who is unbeholdable by Vishnu and Brahma, is the One
who is bedaubed with the baked white ash. He is the God
of Mount Mayēntira. He, of the fragrant matted crest,
is the God of the Mount Kailās, the cool Ārūr
and the hoary Āṉaikka.
2

1191. மால் அயன் தேடிய மயேந்திரரும்,
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்,
வேலைஅது ஓங்கும் வெண்நாவலாரும்,
ஆலை ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Vishnu and Brahma went in quest of Siva, in vain.
He kicked Death to death. He is of the Mount Kailās.
He is the God seated under the white *Nāval* tree
in the well-watered Āṉaikka and Mount Mayēntira.
He abides in Ārūr abounding in sugarcane-presses. 3

1192. கருடனை ஏறு அரி, அயனார், காணார்
வெருள் விடை ஏறிய மயேந்திரரும்;
கருள் தரு கண்டத்து எம் கயிலையாரும்;
அருளன் ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Siva is unbeholdable by Vishnu whose mount is Garuda,
and also Brahma. Siva's mount is the Bull that scares foes.
He is the God of the Mount Mayēntira. He whose throat
bears a black patch, is our God of the Mount Kailās. 4
He, the dispenser of grace, is the God of Ārūr and the hoary Āṉaikka.

1193. மதுசூதனன் நான்முகன் வணங்க(அ)ரியார்
மதிஅது சொல்லிய மயேந்திரரும்,
கதிர்முலை புல்கிய கயிலையாரும்,
அதியன் ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Vishnu, the killer of Mathu and the Four-faced were disabled
from adoring Siva. Seated on the Mount Mayēntira,
Siva inculcated the Saivāgamas. He abides at the Mount
Kailās embraced by His Consort of bright breasts.
Siva who exceeds all, is the God of Ārūr and the hoary Āṉaikka. 5

1194. சக்கரம் வேண்டும் மால் பிரமன் காணா
மிக்கவர் கயிலை மயேந்திரரும்,
தக்கனைத் தலை அரி தழல் உருவர்,
அக்கு அணியவர் ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Vishnu who coveted the Disc of Siva and Brahma could not see
Siva who exceeds all. He is the God of the Mount Kailās
and the Mount Mayēntira.
He who cut off the head of Daksha, is flame-hued.
He who wears the garland of *rudrāksha* beads
is the God of Ārūr and Āṉaikka. 6

1195. கண்ணனும், நான்முகன், காண்பு அரியார்--
வெண்நாவல்--விரும்பு மயேந்திரரும்,
கண்ணப்பர்க்கு அருள்செய்த கயிலை எங்கள்
அண்ணல், ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Siva is unbeholdable by Vishnu and the Four-faced.
He who loves to sit under the white Naval of the hoary
Āṉaikka, is the God of the Mayēntira.
He, of the Mount Kailās, blessed Kaṇṇappar.
He, the Great One is also the God of Ārur.
7

1196. கடல்வண்ணன் நான்முகன் காண்பு அரியார்,
தடவரை அரக்கனைத் தலை நெரித்தார்;
விடம் அது உண்ட எம் மயேந்திரரும்;
அடல் விடை ஆரூர்--ஆதி ஆனைக்காவே.

Siva is unbeholdable by the sea-hued Vishnu and the Four-faced.
He crushed the heads of the Asura beneath the extensive Kailās.
He who quaffed the oceanic venom is the God of the Mount
Mayēntira. He rides the pugnacious Bull.
He, the Primal Ens, is our Sire who is the God
of Ārūr as well as Āṉaikka. 8

1197. ஆதி, மால் அயன் அவர் காண்பு அரியார்,
வேதங்கள் துதிசெயும் மயேந்திரரும்;
காதில் ஓர் குழை உடைக் கயிலையாரும்;
ஆதி ஆரூர்--எந்தை ஆனைக்காவே.

Siva is unbeholdable by the ancient Vishnu and Brahma.
He who is hailed by the Vedas is the God of the Mount Mayēntira.
He who wears a kuḻai in His ear is the God of the Mount Kailās. 9
He, our Sire, is the God of the hoary Ārūr and Āṉaikka.

1198. அறிவு இல் அமண்புத்தர் அறிவு கொள்ளேல்!
வெறிய மான் கரத்து ஆரூர் மயேந்திரரும்,
மறிகடலோன் அயன் தேடத் தானும்
அறிவுஅரு கயிலையோன்--ஆனைக்காவே.

Take not into account the utterances of the brainless
Samaṇas and the Buddhists. He of Ārūr who holds in His hand
the deer whose eyes roll bewitchingly, is entempled
in the Mount Mayēntira.
He is the God of Kailās and Āṉaikka. 10

1199. ஏனம்மால் அயன் அவர் காண்பு அரியார்,
கானம் ஆர் கயிலை நல் மயேந்திரரும்,
ஆன ஆரூர், ஆதி ஆனைக்காவை
ஞானசம்பந்தன் தமிழ் சொல்லுமே!

Siva is unbeholdable by Vishnu who assumed the form
of the Boar and Brahma. He abides at Kailās girt
with sylvan gardens and also at the Mount Mayēntira
as well as the hoary Ārur and Āṉaikka.
The hymns of Tamiḻ Gnānasambandhan celebrate Him. 11

110. திருப் பிரமபுரம்

பழம்பஞ்சுரம்

ஈரடி

1200. வரம் அதே கொளா, உரம்அதே செயும் புரம் எரித்தவன்--பிரமநல்புரத்து
அரன்-நன்நாமமே பரவுவார்கள் சீர் விரவும், நீள் புவியே.

110. TIRUPPIRAMAPURAM

Eerati

Paṇ: Paḻampanjuram

Siva burnt the three walled-citadels of those who
having obtained boons lived abusing them.
The glory of those who hail and adore the God of
Piramapuram will envelop the extensive world. 1

1201. சேண் உலாம் மதில் வேணு மண்உளோர் காண மன்றில் ஆர்
வேணுநல்புரத்
தாணுவின் கழல் பேணுகின்றவர் ஆணி ஒத்தவரே.

The sky-high walls of Vēṇupuram serve as ladders for the Devas
to descend down on earth. They that hail and adore
the ankleted feet of Stānu entempled in the goodly
Vēṇupuram are like unto the lynch-pin. 2

1202. அகலம் ஆர் தரைப் புகலும் நால்மறைக்கு இகல்இலோர்கள் வாழ் புகலி
மா நகர்,
பகல் செய்வோன் எதிர்ச் சகல சேகரன் அகிலநாயகனே.

The God of Pukali, the great city, where flourish successful polemists,
versed in the four Vedas well-renowned in this wide world,
wears on His crest the moon of a few digits, unlike 3
the Day Star, is the Chief par excellence of the cosmos.

1203. துங்க மாகரி பங்கமா அடும் செங் கையான் நிகழ் வெங்குருத் திகழ்
அங்கணான் அடி தம் கையால்-தொழ, தங்குமோ, வினையே?

Siva smote with His beauteous, ruddy hands the great
and lofty Tusker in whose skin He is mantled.
He is entempled in Veṅkuru. The karma of those that
with their hands adore His feet, will perish. 4

1204. "காணி, ஒண் பொருள், கற்றவர்க்கு ஈகை உடைமையோர் அவர்
காதல் செய்யும் நல்-
தோணிவண்புரத்து ஆணி" என்பவர் தூ மதியினரே.

They that gift their lands and well-earned goods
to the learned and love Siva as the lynch-pin
of the generous Toṇipuram, are the ones who
are blessed with pure and virtuous minds. 5

1205. ஏந்து அரா எதிர் வாய்ந்த நுண்இடைப் பூந் தண் ஓதியாள் சேர்ந்த
பங்கினன்
பூந்தராய் தொழும் மாந்தர் மேனிமேல் சேர்ந்து இரா, வினையே.

Siva is concorporate with Her whose waist is narrow,
whose coiffure is decked with flowers and whose forelap
is like the cobric hood. Karma will not afflict them
who hail and adore the God of Pūntharāi. 6

1206. "சுரபுரத்தினைத் துயர்செய் தாருகன் துஞ்ச, வெஞ்சினக் காளியைத்
தரும்
சிரபுரத்து உளான்" என்ன வல்லவர் சித்தி பெற்றவரே.

Tarakāsura sore distressed the dwellers of the ethereal world.
Siva caused the cruelly fierce Kāli—an aspect of Uma—,
to materialise and kill him. They that hail Siva of
Sirapuram as the Omnipotent, will gain occult powers. 7

1207. "உறவும்ஆகி, அற்றவர்களுக்கு மா நெதி கொடுத்து, நீள் புவி இலங்கு சீர்ப்
புறவ மா நகர்க்கு இறைவனே!" என, தெறகிலா, வினையே.

The altruistic ones bestow immense wealth on the poor and treat
them as their kin. In this extensive world, such people abide
in the glorious Puṟavam and hail its God in bhakti.
Cruel karma will not afflict such adoring devotees. 8

1208. பண்பு சேர் இலங்கைக்கு நாதன் நல்ல முடிகள்பத்தையும் கெட
நெரித்தவன்,
சண்பை ஆதியைத் தொழுமவர்களைச் சாதியா, வினையே.

Siva crushed the ten mighty heads of Ravaṇa,
the king of Lanka abounding in virtues.
Siva, the Primal Ens, is entempled in Saṇpai. Karma
will not afflict those who adore Siva in this shrine. 9

1209. ஆழி அங்கையில் கொண்ட மால், அயன், அறிவு ஒணாதது ஓர் வடிவு
கொண்டவன்--
காழி மா நகர்க் கடவுள்--நாமமே கற்றல் நல்-தவமே.

Siva assumed the humongous form of flame and stood
unbeholdable by the discigerous Vishnu and Brahma.

He is entempled in the great city of Kāli. Karma will not
afflict those who adore Siva in this delubrum. 10

1210. விச்சை ஒன்று இலாச் சமணர் சாக்கியப்பிச்சர்தங்களைக் கரிசு அறுத்தவன்
கொச்சை மா நகர்க்கு அன்பு செய்பவர் குணங்கள் கூறுமினே!

The Samaṇas and the Buddhists are unacquainted with wisdom;
Siva did away with the evils of these demented ones.
He is entempled in the great city of Kocchaivayam.
Eulogise the qualities of those that love this delubrum. 11

1211. கழுமலத்தினுள் கடவுள் பாதமே கருது ஞானசம்பந்தன் இன்தமிழ்
முழுவதும் வல்லவர்க்கு இன்பமே தரும், முக்கண் எம் இறையே.

Gnānasambandhan, for ever, contemplates the feet of
the God of Kalumalam. He is the author of these hymns.
On them that are absolutely valiant in these Tamill psalms
the triple-eyed God will shower nothing but bliss. 12

111. திரு வீழிமிழலை

ஈரடி பழம்பஞ்சுரம்

1212. வேலின் நேர் தரு கண்ணினாள்உமை பங்கன்-அங்கணன், மிழலை மா நகர்
ஆல நீழலில் மேவினான்--அடிக்கு அன்பர் துன்பு இலரே.

111. TIRUVEEL̲IMIL̲ALAI

EERATI

Paṇ: Pal̲ampanjuram

Siva is concorporate with Uma whose eyes are spear-sharp;
He is entempled in the great city of Veel̲imil̲alai.
They that are the *bhaktas* of Him who was seated under
the Banyan Tree, stand freed from misery. 1

1213. விளங்கும் நால்மறை வல்ல வேதியர் மல்கு சீர் வளர் மிழலையான் அடி
உளம்கொள்வார் தமை உளம்கொள் வார் வினை ஒல்லை ஆசுஅறுமே.

Siva is entempled in Veel̲imil̲alai where thrive the Brahmins
well versed in the four splendorous Vedas.
The contemplators of Siva's feet are the true *bhaktas;*
the karma of those that adore these, will quit forthwith. 2

1214. விசையினோடு எழு பசையும் நஞ்சினை அசைவு செய்தவன், மிழலை மா நகர்
இசையும் ஈசனை நசையின் மேவினால், மிசைசெயா, வினையே.

Siva quaffed the murderous venom in all celerity;
He is entempled in the great city of Veel̲imil̲alai.
The karma of the loving ones who seek Him of great renown
and adore Him, will not affect them at all. 3

1215. வென்றி சேர் கொடி மூடு மா மதில் மிழலை மா நகர் மேவி, நாள்தொறும்,
நின்ற ஆதிதன் அடி நினைப்பவர் துன்பம் ஒன்று இலரே.

The triumphant flags of Siva's walled-Veel̲imil̲alai,
the great city, envelop the heavens.

They that daily meditate on the Primal Ens,
here entempled, will never suffer even a jot of misery. 4

1216. போதகம்தனை உரிசெய்தோன், புயல் நேர் வரும் பொழில் மிழலை மா நகர்
ஆதரம் செய்த அடிகள், பாதம்அலால் ஓர் பற்று இலமே.

Siva who peeled off the skin of the Tusker, is entempled in
Veelimilalai girt with gardens over which rest clouds.
We have support none other than the adorable feet
of the Great God, here entempled. 5

1217. தக்கன் வேள்வியைச் சாடினார், மணி தொக்க மாளிகை மிழலை மேவிய
நக்கனார், அடி தொழுவர்மேல் வினை நாள்தொறும் கெடுமே.

Siva devastated Daksha's sacrifice; He is the nude God
who is entempled in Veelimilalai dight with
gem-inlaid mansions. Unto those who daily adore Him
in bhakti, no karma will accrue. 6

1218. போர் அணாவு முப்புரம் எரித்தவன், பொழில்கள் சூழ்தரு மிழலை மாநகர்ச்
சேரும் ஈசனைச் சிந்தைசெய்பவர் தீவினை கெடுமே.

Siva burnt the triad of walled-citadels, the habitat
of belligerent Asuras. He is entempled in the great city
of Veelimilalai girt with gardens. The evil deeds
of those who gain and meditate on Him, will perish. 7

1219. இரக்கம் இல்-தொழில் அரக்கனார் உடல் நெருக்கினான், மிகு
மிழலையான், அடி
சிரக் கொள் பூ என ஒருக்கினார் புகழ் பரக்கும், நீள் புவியே.

Siva crushed the body of the merciless Ravaṇa under His
Mount. He is entempled in the uberous Mil̲alai.
The fame of those that wear His feet on their heads
and live controlling their senses, will pervade the world. 8

1220. துன்று பூமகன், பன்றிஆனவன், ஒன்றும் ஓர் கிலா மிழலையான், அடி
சென்று பூம்புனல் நின்று தூவினார் நன்று சேர்பவரே.

Siva stood unbeholdable by Brahma seated on the Lotus
and Vishnu, the Boar. He is entempled in Veel̲imil̲alai.
They that hail and adore Him with fragrant flowers
and holy water, will thrive in weal and welfare. 9

1221. புத்தர், கைச் சமண்பித்தர், பொய்க் குவை வைத்த வித்தகன் மிழலை மா நகர்
சித்தம்வைத்தவர் இத் தலத்தினுள் மெய்த் தவத்தவரே.

Siva who is *Vittaka* debunked the heaps of the pseudo-tenets
propagated by the frenzied Buddhists and the Samaṇas.
He abides in the great city of Mil̲alai. They that meditate 10
on Him and adore Him are the true *tapaswis* of this world.

1222. சந்தம் ஆர் பொழில் மிழலை ஈசனைச் சண்பை ஞானசம்பந்தன் வாய் நவில்
பந்தம் ஆர் தமிழ்பத்தும் வல்லவர் பத்தர் ஆகுவரே.

On the God of Mil̲alai girt with the gardens of sandalwood,
Gnānasambandhan of Saṇpai has sung these hymns.
They that are valiant in these ten Tamil̲ psalms, linked
with divine grace, will emerge as true bhaktas. 11

112. திருப் பல்லவனீச்சுரம்

ஈரடி **பழம்பஞ்சுரம்**

1223. பரசு பாணியர், பாடல் வீணையர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
அரசு பேணி நின்றார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

112. TIRUPPALLAVANEECCHURAM

EERAṬI **Paṇ: Pal̲ampanjuram**

Siva wields an axe in His hand; He plays on the Viṇa;
He is the Sovereign of Pallavaneecchuram
situate in Kāvirippūmpaṭṭin̲am.
Who, indeed, can know of His nature? 1

1224. பட்டம் நெற்றியர், நட்டம்ஆடுவர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
இட்டம்ஆய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

Siva bears the royal band on His forehead.
He is the Dancer who willingly abides at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭin̲am.
Who can, indeed, know of His nature? 2

1225. பவளமேனியர், திகழும் நீற்றினர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
அழகராய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

His body is coralline; He is bedaubed with
the splendorous holy ash. He, the Handsome One,
abides at Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
Who can ever know of His nature at all? 3

1226. பண்ணில் யாழினர், பயிலும் மொந்தையர், பட்டினத்து உறை
பல்லவனீச்சுரத்து
அண்ணலாய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

He plays on the tuneful *yāḻ*. Eke he plays on the *gatam*.
He , the Handsome One, abides at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
Who can ever know of His nature at all? 4

1227. பல்இல்ஓட்டினர், பலி கொண்டு உண்பவர், பட்டினத்து உறை
பல்லவனீச்சுரத்து
எல்லி ஆட்டு உகந்தார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

Siva totes a toothless skull. He receives alms which He eats.
He abides at Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
He rejoices to enact His dance during night. 5
Who can know of His nature at all?

1228. பச்சை மேனியர், பிச்சை கொள்பவர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
இச்சை ஆய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

Siva's body is ever fresh; He pursues mendicancy.
He is willingly entempled in Pallavaneecchuram
situate in Kāvirippūmpattinam.
Who can ever know of His nature at all? 6

1229. பைங்கண் ஏற்றினர், திங்கள் சூடுவர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
எங்கும்ஆய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?
Fresh are the eyes of Siva's Bull; He wears the crescent
on His crest; He who is omnipresent, abides at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam..
Who can ever know of His nature? 7

1230. பாதம் கைதொழ வேதம் ஓதுவர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
ஆதியாய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

Siva whose feet are adored with hands, recites the Vedas.
He, indeed, is the Primal Ens abiding at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
Who can ever know of His nature? 8

1231. படி கொள் மேனியர், கடி கொள் கொன்றையர், பட்டினத்து உறை பல்லவனீச்சுரத்து
அடிகளாய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

The whole cosmos forms His body. He is decked with fragrant
konṟai flowers. He is the Noble One abiding at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
Who can ever know of His nature? 9

1232. பறை கொள் பாணியர், பிறை கொள் சென்னியர், பட்டினத்து உறை
பல்லவனீச்சுரத்து
இறைவராய் இருப்பார்,--இவர் தன்மை அறிவார் ஆர்?

Siva holds a *damaruka* in His hand; He wears the crescent
on His crest. He is the Lord-God abiding at
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam.
Who can know of His nature at all? 10

1233. வானம் ஆள்வதற்கு ஊனம் ஒன்று இலை--மாதர் பல்லவனீச்சுரத்தானை
ஞானசம்பந்தன் நல்-தமிழ் சொல்ல வல்லவர் நல்லவரே.

For those who are valiant in the hymns of goodly Tamiḻ sung by
Gnānasambandhan on the God of the beautiful
Pallavaneecchuram in Kāvirippūmpaṭṭiṉam,
nought can bar their rulership of the supernal world. 11

113. திருக் கழுமலம்

திரு இயமகம்

பழம்பஞ்சுரம்

1234. உற்று உமை சேர்வது மெய்யினையே; உணர்வதும் நின் அருள்
மெய்யினையே;
கற்றவர் காய்வது காமனையே; கனல் விழி காய்வது காமனையே;
அற்றம் மறைப்பதும் உன் பணியே; அமரர்கள் செய்வதும் உன் பணியே;
பெற்று முகந்தது கந்தனையே; பிரமபுரத்தை உகந்தனையே.

113. TIRUKKAḺUMALAM

TIRUVIYAMAKAM

Paṇ:Paḻampanjuram

O Siva, Your body is concorporate with Uma; Your grace,
O Siva, is hailed by the Siva-conscious.
The learned, O Siva, abhor Manmata; O Siva, Your fiery
eye smote Manmata.
Your snake, O Siva, conceals Your loins; the immortals, O Siva,
perform Your service.
O Siva, You bore Muruka and rejoiced; it is in Piramapuram,
O Siva, You are entempled in delight great. 1

1235. சதி மிக வந்த சலந்தரனே தடி சிரம் நேர் கொள் சலம் தரனே!
அதிர் ஒளி சேர் திகிரிப்படையால் அமர்ந்தனர் உம்பர், துதிப்பு அடையால்;
மதி தவழ் வெற்புஅது கைச் சிலையே; மரு விடம் ஏற்பது கைச்சிலையே--
விதியினில் இட்டு அவிரும் பரனே! வேணுபுரத்தை விரும்பு அரனே!

Jalandara is a committer of ruses; it is, O Siva who wears
the Ganga on Your crest, that slaughtered that Asura.
As You sliced that Asura's body with Your bright procket wheel,
the Devas hailed You and rejoiced.
You bent the Mount Meru brushing the moon into a bow and held
it in Your hand. You abhorred not the venom You quaffed.
O Great God, You desire that all should follow the ordained way.
O Hara, You are willingly entempled in Vēṇupuram. 2

1236. காது அமரத் திகழ் தோடினனே; கானவனாய்க் கடிது ஓடினனே;
பாதம்அதால் கூற்று உதைத்தனனே; பார்த்தன் உடல் அம்பு தைத்தனனே;
தாது அவிழ் கொன்றை தரித்தனனே; சார்ந்த வினைஅது அரித்தனனே--
போதம் அமரும் உரைப் பொருளே, புகலி அமர்ந்த பரம்பொருளே.

You wear a splendorous *todu* in one ear. O Siva, You became
a hunter and waded fast through the forest.
O Siva, with Your foot You kicked Yama. You covered
the body of Arjuna with Your arrows.
O Siva, You wear *konṟai* flowers laden with pollen. You do away
with the karma afflicting Your devotees.
You are, O Siva, the import of the enlightening opuses.
You are the Ens entium entempled in Pukali. 3

1237. மைத் திகழ் நஞ்சு உமிழ் மாசுணமே மகிழ்ந்து அரை சேர்வதும்;
மாசு(ண்)ணமே
மெய்த்து உடல் பூசுவர்; மேல் மதியே; வேதம்அது ஓதுவர், மேல்மதியே;
பொய்த் தலைஓடு உறும், அத்தம்அதே; புரிசடை வைத்தது, மத்தம்அதே;
வித்தகர் ஆகிய எம் குருவே விரும்பி அமர்ந்தனர், வெங்குருவே.

The cobra spits the dark venom. O Siva, You gladly get cinctured
in Your waist with such a serpent.
You who wear the crescent on Your crest, bedaub Your body
with the ash. You recite the Vedas of great wisdom.
The head that spake falsely is now the skull held in Your hand.
You adorn Your plaited matted hair with *ūmattham* flowers.
You, O Siva, are our revered Guru; You, the Vittaka,
are entempled in Veṅkuru. 4

1238. உடன் பயில்கின்றனன், மாதவனே, உறு பொறி காய்ந்து இசை மா தவனே;
திடம் பட மாமறை கண்டனனே, திரிகுணம் மேவிய கண்டனனே;
படம் கொள் அரவு அரை செய்தனனே; பகடு உரிகொண்டு
அரைசெய்தனனே;
தொடர்ந்த துயர்க்கு ஒரு நஞ்சு இவனே, தோணிபுரத்து உறை நம் சிவனே.

O Siva, Vishnu occupies Your left half; You are the great *tapaswi*
    that keeps under perfect control the pentad of senses.
You are the Author of the great unassailable Vedas.
    It is You who condemn those fettered by the three *gunas*.
O Siva, You wear in Your waist the hooded snake. You peeled off
    the skin of the Tusker and mantled Yourself in its skin.
For the pursuing troubles, You Siva, act as poison.
    You are our dear Siva entempled in Tōṇipuram. 5

1239. திகழ் கையதும் புகை தங்கு அழலே; தேவர் தொழுவதும் தம் கழலே;
இகழ்பவர்தாம் ஒரு மான் இடமே; இருந் தனுவோடு எழில் மானிடமே;
மிக வரும் நீர் கொளும் மஞ்சு அடையே, மின் நிகர்கின்றதும், அம் சடையே;
தக இரதம் கொள் வசுந்தரரே, தக்க தராய் உறை சுந்தரரே.

Your splendorous palm, O Siva, holds the fire and its smoke;
    Devas worship, O Siva, Your ankleted feet.
You hold the deer that uprose from the sacrifice of Tāruka munis.
    You appear in the splendorous human form to bless the devotees.
O Siva, You bear in Your beauteous crest the flood of Ganga;
    Your beautiful matted hair is fulgurantly bright.
O Handsome Siva, You fulfil wondrous vows.
    You are entempled becomingly in Tharāi. 6

1240. ஓர்வு அரு கண்கள் இணைக்க(அ)யலே; உமையவள் கண்கள் இணைக் கயலே;
ஏர் மருவும் கழல் நாகம்அதே; எழில் கொள் உதாசனன், ஆகம்அதே;
நீர் வரு கொந்துஅளகம் கையதே, நெடுஞ்சடை மேவிய கங்கையதே;-
சேர்வு அரு யோக தியம்பகனே! சிரபுரம் மேய தி அம்பு அகனே!

The eyes that gain not the *darshan* of Siva and His servitors
form not the part of body. Uma's eyes are a pair of *kayals*.
Siva's beautiful feet are fastened with serpents.
His divine body blazes like fire.
His moist tresses of matted hair are in due order.
His long matted crest bears the Ganga.
Siva, the triple-eyed God, is poised in yoga.
He who wields an arrow is entempled in Sirapuram. 7

1241. ஈண்டு துயில் அமர் அப்பினனே இருங் கண் இடந்து அடி அப்பினனே;
தீண்டல் அரும் பரிசு அக் கரமே திகழ்ந்து ஒளி சேர்வது சக்கரமே;
வேண்டி வருந்த நகைத் தலையே மிகைத்து அவரோடு நகைத்தலையே
பூண்டனர்; சேரலும் மா பதியே, புறவம் அமர்ந்த உமாபதியே.

Vishnu who slumbers on the sea, gouged his large eye
and with it performed his *pūja* to Siva.
Siva's hand is out of bounds for any one's touch;
He holds in that hand the splendorous Disc.
A white skull came laughing from a sacrifice, targeting Him.
He wears that laughing skull as His garland.
Siva abides in the hearts of unexcellable devotees.
In Pur̲avam, Siva with His Consort, is entempled. 8

1242. நின் மணி வாயது நீழலையே நேசம்அது ஆனவர் நீழலையே;
உன்னி, மனத்து, எழு சங்கம்அதே ஒளிஅதனோடு உறு சங்கம்அதே;
கன்னியரைக் கவரும் க(ள்)ளனே! கடல்விடம் உண்ட கருங் களனே;
மன்னி வரைப் பதி, சண்பு ஐயதே வாரி வயல் மலி சண்பைஅதே.

A bell hangs in Your shrine casting its shade, O Siva.
In its salvific shade thrive Your servitors from whom
You never part. The assembly of Your servitors, for ever,
meditate on You. Divine light envelops such assembly.
O Siva, You enchant and purloin the damsels' hearts.
Your throat is dark with the deadly venom, You quaffed.
You are eternally entempled in Saṇpai covered with
saṇpai grass, rich in the wealth of sea and land. 9

1243. இலங்கை அரக்கர்தமக்கு இறையே இடந்து கயிலை எடுக்க, இறையே,
புலன்கள் கெட உடன் பாடினனே; பொறிகள் கெட உடன்பாடினனே;
இலங்கிய மேனி இரா வணனே எய்து பெயரும் இராவணனே;
கலந்து அருள் பெற்றதும் மா வசியே; காழி அரன் அடி மா வசியே.

O Siva, You crushed the Asura king of Lanka who in
his hauteur, durst uproot Your Mount.
When his sense-organs grew effete, He rued and hailed You.
Thus did he regain his strength, through hymning the Sāma Veda.
He of the murky body, came to be known as Ravaṇa.
Yes, Ravaṇa, the one, who wailed aloud.
Blessed by Your grace, he gained the sharp sword.
Your feet, O God of Kaḻi are bewitching and enchanting. 10

1244. கண் நிகழ் புண்டரிகத்தினனே, கலந்து இரி புண் தரி கத்தினனே,
மண் நிகழும் பரிசு ஏனம்அதே, வானகம் ஏய் வகை சேனம்அதே,
நண்ணி அடிமுடி எய்தலரே; நளிர் மலி சோலையில் எய்து அலரே
பண் இயல் கொச்சை பசுபதியே, பசு மிக ஊர்வர், பசுபதியே.

The lotus-eyed Vishnu and Brahma who is
ensconced on the Lotus, as Boar and Eagle,
burrowed the earth and winged in the sky in
quest of Your feet and head, O Siva, in vain.
You are entempled in Kocchaivayam girt with cool gardens
where abound blossoms which are fit offerings to You.
O Siva, You are indeed the God of all souls. You are
the Lord-God that rides the Bull, Your mount. 11

1245. பரு மதில் மதுரை மன் அவை எதிரே பதிகம்அது எழுதுஇலை அவை எதிரே
வரு நதிஇடை மிசை வரு கரனே! வசையொடும் அலர் கெட அருகு அரனே!
கருதல் இல் இசை முரல் தரும் மருளே, கழுமலம் அமர் இறை தரும் அருளே;
மருவிய தமிழ்விரகன மொழியே வல்லவர்தம் இடர், திடம், ஒழியே.

In the presence of the king of the walled-Madurai, the divine
decad was indited on palm-leaves and thrown into the river.
They ran against the current thanks to Your hand that blessed them.
You quelled the Samaṇas who connected blame and calumny
with Saivism. You wrought the inconceivably great miracle
by which the glory of Saivism pervades again the whole world.
You abide in Kaḻumalam in grace. Gnānasambandhan—
the Adept in Tamiḻ, is the Author of these hymns.
The troubles of those that are valiant in these psalms 12
will, it is certain, perish altogether.

[Note. The verses of this decad are cast in the genre of Tiruviyamakam. These abound in many a paronomasia. Many terms are gravid with parrhesia. Terms and pharses have to be split with due care and circumspection. Even an adept in Tamil̲ has to wrestle hard with the vocables whose flow suffers neither let nor hindrance. Obviously, the message is not floating on the surface. Much tunneling into the passages which is taxing and exhausting has to be undertaken by the translator who can, at best, provide only fugitive glimpses.]

114. திரு ஏகம்பம்

திரு இயமகம்

பழம்பஞ்சுரம்

1246. பாயும் மால்விடைமேல் ஒரு பாகனே; பாவை தன்உருமேல் ஒரு பாகனே;
தூய வானவர் வேதத் துவனியே; சோதி மால் எரி வேதத்து வ(ன்)னியே;
ஆயும் நன்பொருள் நுண்பொருள் ஆதியே ஆலநீழல் அரும்பொருள் ஆதியே;
காய, வில் மதன் பட்டது கம்பமே; கண்நுதல் பரமற்கு இடம் கம்பமே.

114. TIRUVĒKAMPAM

TIRUVIYAMAKAM

Paṇ: Pal̲ampanjram

O Siva, You are the Rider of the great galloping Bull;
Your body is concorporate with Your Consort.
You are the *dvani* of the Vedas hailed by the Devas.
You are the radiant and fierce fire of the sacrifice.
You are the import of all the subtly analysed concepts.
You are the Primal Explicator seated under the Banyan tree.
Manmata quaked when he came with his bow targeting You.
O triple-eyed God, You are entempled in Yēkampam. 1

1247. சடை அணிந்ததும் வெண்டு அலைமாலையே; தம் உடம்பிலும்
வெண்தலைமாலையே;
படையில் அம் கையில் சூல் அம் அதுஎன்பதே; பரந்து இலங்கு ஐயில்
சூலம்அதுஎன்பதே;
புடை பரப்பன, பூதகணங்களே; போற்றுஇசைப்பன, பூதகணங்களே;
கடைகள்தோறும் இரப்பதும் மிச்சையே; கம்பம் மேவி இருப்பதும்
இச்சையே.

You sport on Your matted crest the garland of a white skull.
On Your person too, You wear the garland of a white skull.
O Siva, You wield in Your beauteous hand a spear; it is the eye
of Vishnu which He gouged and made it an offering to You.
O Siva, You are encircled by Your hailing Bhūta-Hosts.
The self-same Bhūtas hail You in hymn and song and solemn strain.
O Siva, You solicit alms standing in every threshold.
Borne by love You are entempled in Yēkampam. 2

1248. வெள் எருக்கொடு தும்பை மிலைச்சியே; ஏறு முன் செலத் தும்பை
மிலைச்சியே!
அள்ளி நீறு அது பூசுவ தாகமே; ஆன மாசுணம் மூசுவது ஆகமே;
புள்ளி ஆடை உடுப்பது கத்துமே; போன, ஊழி, உடுப்பது உகத்துமே;
கள் உலாம் மலர்க் கம்பம் இருப்பதே காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பு அதே.

O Siva, You are adorned with white madar and *tumpai*.
You have tethered Your Bull with a rope.
Your body is bedaubed with abundant ash.
With serpents You have covered Your body.

In every *yuga*, You are clad in the dotted skin of the deer;
    at the end of Dissolution, You harbour all in You.
You are *Sthānu* adorned with melliferous flowers.
    You are entempled in the great city of Yēkampam. 3

1249. முற்றல்ஆமை அணிந்த முதல்வரே; முரி ஆமை அணிந்த முதல்வரே;
பற்றி வாள் அரவு ஆட்டும் பரிசரே; பாலும் நெய் உகந்து ஆட்டும் பரிசரே;
வற்றல்ஓடு கலம், பலி தேர்வதே; வானினோடு கலம், பலி, தேர்வதே;
கற்றிலா மனம் கம்பம் இருப்பதே; காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே.

You, the Primal Ens, O Siva, are adorned with a carapace.
    You are the Rider of the decorated Bull.
O Siva, You display the dancing snake on Your person.
    You rejoice to have Your ablutions in milk and ghee.
You solicit alms in a faded skull—Your begging-bowl.
    Devas and holy ones make offerings to You.
They that do not cultivate You are but pillars of iron.
    You are entempled in the great city of Yēkampam. 4

1250. வேடன் ஆகி விசையற்கு அருளியே; வேலை நஞ்சம் மிசையல் கருளியே;
ஆடுபாம்பு அரை ஆர்த்தது உடைஅதே; அஞ்சுபூதமும் ஆர்த்தது உடையதே;
கோடு வான்மதிக்கண்ணி அழகிதே; குற்றம் இல் மதிக் கண்ணி அழகிதே;
காடு வாழ் பதி ஆவதும் உ(ம்)மது; ஏகம்பம் மா பதி ஆவதும் உ(ம்)மதே.

Assuming the form of a hunter O Siva, You blessed Arjuna.
    Your throat is dark as You quaffed the oceanic venom.
A dancing snake girds Your waist over which You wear a clothing.
    You resolved the world of five elements during Dissolution.

You wear as Your comely chaplet the curved crescent of the sky.
Charming is the gin set up by the unflawed to trap You.
Yours is the crematory where You dwell.
Your beloved delubrum is the great Yēkampam. 5

1251. இரும் புகைக்கொடி தங்கு அழல் கையதே; இமயமாமகள், தம் கழல், கையதே;
அரும்பு மொய்த்த மலர்ப் பொறை தாங்கியே; ஆழியான்தன் மலர்ப் பொறை தாங்கியே;
பெருங் பகல் நடம் ஆடுதல் செய்துமே, பேதைமார் மனம் வாடுதல் செய்துமே,
கரும்பு மொய்த்து எழு கம்பம் இருப்பதே, காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்புஅதே.

Your palm holds the fire whence soars up the great smoke, liana-like.
Your feet are gently massaged by the hands of Himavant's Daughter.
You bear with joy the buds and flowers galore strewn by devotees.
You bear the skeleton of the discigerous Vishnu.
During the broad day, You danced before the *Rishi-patnis*.
You caused the *manams* of women to languish.
Lo, in Yēkampam sweetcanes grow like clubs. 6
You are entempled in the great city of Yēkampam.

1252. முதிரம் மங்கை தவம் செய்த காலமே, முன்பும், அம் கைதவம் செய்த காலமே,
வெதிர்களோடு அகில் சந்தம் முருட்டியே, வேழம் ஓடகில்சந்தம் உருட்டியே,

அதிர ஆறு வரத்து அழுவத்தொடே, ஆன்ஐஆடுவரத் தழுவத்தொடே,
கதிர் கொள் பூண் முலைக் கம்பம் இருப்பதே; காஞ்சி மா நகர்க் கம்பம் இருப்பதே.

Uma, the nimbus-hued, of yore, performed *tapas* to gain Siva.
Much later, She prepared pūja to His idol in the Kampa river.
It was then the river flowed fast dinsomely rolling in its
current bamboos, sandalwood and eaglewood trees and other
rugged trees as also elephants and other beasts.
To save Her Idol, She hugged It so hard that Siva who
delights to have His ablutions in the five products of the kine,
bears the impression of Her radiant and bejewelled breasts
on His chest. Siva is entempled in the great city of Yēkampam. 7

1253. பண்டு அரக்கன் எடுத்த பலத்தையே பாய்ந்து அரக்கன் எடுத்த (அ) பலத்தையே
கொண்டு, அரக்கியதும் கால்விரலையே; கோள் அரக்கியதும் கால்வு இரலையே;
உண்டு உழன்றதும் முண்டத் தலையிலே; உடுபதிக்கு இடம் உண்டு, அத் தலையிலே;
கண்டம் நஞ்சம் அடக்கினை கம்பமே; கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே.

Of yore, when the Asura Ravaṇa durst uproot His Mount,
Siva pressed it with His toe and enfeebled him absolutely.

When the deer that uprose from the sacrifice, targeted Him
He snatched it and held it in His fingers.
He roamed about soliciting alms in His begging-bowl, the skull,
and ate it. His crest wears a garland of skull and the moon.
He who is Sthāṇu retains in His throat the venom He quaffed.
O God Siva, You are entempled in Yēkampam.
8

1254. தூணி ஆன சுடர்விடு சோதியே சுத்தம்ஆன சுடர்விடு சோதியே;
பேணி ஓடு பிரமப் பறவையே பித்தன் ஆன பிரமப் பறவையே,
சேணினோடு, கீழ், ஊழி திரிந்துமே, சித்தமோடு கீழ், ஊழி திரிந்துமே,
காண நின்றனர் உற்றது கம்பமே; கடவுள் நீ இடம் உற்றது கம்பமே.

Your eye of fire is like the blazing quiver of radiant darts.
O Siva, You are the pure flame of sheer effulgence.
When Brahma as a swan and Vishnu as a boar went up and down
in quest of Your base and top for a whole era what they met
with was Your form of the unbeholdable column of fire.
O God Siva, You are entempled in Yēkampam.
9

1255. ஓர் உடம்பினை ஈர் உரு ஆகவே, உன் பொருள்-திறம் ஈர் உரு ஆகவே,
ஆரும் மெய்தன் கரிது பெரிதுமே; ஆற்ற எய்தற்கு அரிது, பெரிதுமே;
தேரரும அறியாது திகைப்பரே; சித்தமும் மறியா, துதி கைப்பரே;
கார்நிறத்து அமணர்க்கு ஒரு கம்பமே; கடவுள் நீ இடம் கொண்டது கம்பமே.

O Siva, Your single form is androgynic;
Your nature as Siva and Sakti, is twofold.
Great indeed is Your inaccessibility;
great and immeasurable is Your skill.

The Buddhists stand flabbergasted unable to assess You;
their brains get muddled in tohubohu.
The dark Samaṇas quake when they hear of You.
O God, You are entempled in Yēkampam. 10

1256. கந்தம் ஆர் பொழில் சூழ்தரு கம்பமே காதல் செய்பவர் தீர்த்திடு உகு அம்பமே;
புந்திசெய்வது விரும்பிப் புகலியே பூசுரன்தன் விரும்பிப் புகலியே
அந்தம் இல் பொருள் ஆயின கொண்டுமே, அண்ணலின் பொருள்
ஆயின கொண்டுமே,
பந்தன் இன்இயல் பாடிய பத்துமே பாட வல்லவர் ஆயின, பத்துமே.

Yēkampam is girt with suaveolent gardens.
Loving devotees' troubles are annulled by Yēkampam.
Gnanasambandhan hails from the loveable Pukali.
He seeks You, O Siva, as his refuge.
Comprehending You, the Ens infinite,
and Your nature, O Noble One,
He has hymned these ten verses. They that are valiant
in these psalms will ever be poised in bhakti. 11

115. திரு ஆலவாய்

திரு இயமகம் பழம்பஞ்சுரம்

1257. ஆலநீழல் உகந்து இருக்கையே; ஆன பாடல் உகந்தது இருக்கையே;
பாலின் நேர் மொழியாள் ஒருபங்கனே; பாதம் ஓதலர் சேர் புர பங்கனே;
கோலம் நீறு அணி மே தகு பூதனே; கோதுஇலார் மனம் மேவிய பூதனே;
ஆலநஞ்சு அமுதுஉண்ட களத்தனே--ஆலவாய் உறை அண்டர்கள் அத்தனே.

115. TIRU ĀLAVĀI

TIRUVIYAMAKAM

Paṇ: Palampanjuram

O Siva, You covet as Your seat the shade of the Banyan tree.
It is the hymns of the Vedas that delight You.
You share Your body with Her whose words are sweet like milk.
You smote Tiripura whose Asuras hailed not Your feet.
The ash-bedaubed *Bhūtas* are Your great Hosts.
You are the Life animating the *manams* of the unflawed.
Your throat retains the Halāhala You quaffed.
You, the Sire of the supernals, are entempled in Ālavāi. 1

1258. பாதிஆய் உடன்கொண்டது மாலையே; பம்பு தார் மலர்க்கொன்றை நல்மாலையே;
கோது இல் நீறுஅது பூசிடும் ஆகனே; கொண்ட நன் கையில் மான் இடம் ஆகனே;
நாதன் நாள்தொறும் ஆடுவது ஆன்ஐயே; நாடி அன்று உரிசெய்ததும் ஆனையே;
வேதநூல் பயில்கின்றது வாயிலே; விகிர்தன் ஊர் திரு ஆலநல்வாயிலே.

Vishnu occupies the left half of Your body.
Snakes and konrai blossoms form your goodly garlands.
Your chest is coated with the flawless ash.
Your lovely left hand displays a deer.
Your daily ablutions are made up of the cow's milk.
Of yore, You were mantled in the Tusker's skin You excoriated.
Your lips articulate the opuses of the Vedas. 2
You, the *Vikirta,* abide in the goodly Tiruālavāi.

1259. காடு நீடது உறப் பல கத்தனே; காதலால் நினைவார்தம் அகத்தனே;
பாடு பேயொடு பூதம் மசிக்கவே, பல்பிணத் தசை நாடி அசிக்கவே,
நீடும் மாநடம்ஆட விருப்பனே; நின் அடித் தொழ நாளும் இருப்பனே;
ஆடல் நீள்சடை மேவிய அப்பனே--ஆலவாயினில் மேவிய அப்பனே.

O Siva, You lord it over the extensive crematorium.
You abide in the hearts of Your loving devotees.
You are companied with the singing ghouls and the Bhūta-Hosts.
These thrive feeding on the carcases.
You rejoice to enact the great and ecstatic dance.
You bestow grace on them that daily hail Your feet.
In Your matted crest abides the swaying Ganga.
You are our Sire entempled in Ālavāi. 3

1260. பண்டு அயன்தலை ஒன்றும் அறுத்தியே; பாதம் ஓதினர் பாவம் மறுத்தியே;
துண்டவெண்பிறை சென்னி இருத்தியே; தூய வெள்எருது ஏறி
இருத்தியே;
கண்டு காமனை வேவ விழித்தியே; காதல் இல்லவர்தம்மை இழித்தியே--
அண்டநாயகனே! மிகு கண்டனே! ஆலவாயினில் மேவிய (அ) கண்டனே!

Of yore, You clipped a head of Brahma's;
You snap the Karma of those that hail Your feet.
You wear on Your head a slice of the white moon.
You ride the white Bull which is stainless.
You stared Manmata to get baked in fire.
You condemn those that are without love.
You are the God of the Devas; You remove all blemishes. 4
You, the limitless One, abide at Ālavāi.

1261. சென்று தாதை உகுத்தனன் பாலையே சீறி, அன்பு செகுத்தனன்பால் ஐயே
வென்றி சேர் மழுக்கொண்டு, முன்காலையே, வீட வெட்டிடக் கண்டு,
முன்காலையே,
நின்ற மாணியை, ஓடின கங்கையால் நிலவ மல்கி உதித்து, அனகம் கையால்,
அன்று, நின் உருஆகத் தடவியே! ஆலவாய். அரன் நாகத்து அடவியே.

When his father spilt the milk reserved for Your ablutions
his son grew wroth and with a stick that metamorphosed
into a triumphant *ma͟lu*, chopped off his feet.
At this, O Sire, You blessed the Brahmachāri manifesting
before him in Your form decked with the Ganga.
You forgave his patricide, pressed him gently with Your hand
and made his form like unto Yours.
You that so blessed him, are entempled in Ālavāi. 5

1262. நக்கம் ஏகுவர், நாடும் ஓர் ஊருமே; நாதன் மேனியில் மாசுணம் ஊருமே;
தக்க பூ, மனைச் சுற்ற; கருளொடே, தாரம், உய்த்தது, பாணற்கு, அருளொடே;
மிக்க தென்னவன் தேவிக்கு அணியையே மெல்ல நல்கிய தொண்டர்க்கு
அணியையே;
அக்கினார் அமுது உண்கலன் ஓடுமே; ஆலவாய், அரனார் உமையோடுமே.

You, O Siva, roam about in countries and polises!
On Your body, O Siva, crawls the serpent.
You bade Your servitors invite Pānar from his lovely home.
When he hailed You in hymns, You provided a seat for his *yā͟l*.
You blessed the Queen of the Pāndya with jewels divine
O Siva, You are ever close to Your servitors.
You are adorned with bones; Your begging-bowl is a skull. 6
With Uma, Your Consort, You abide at Ālavāi.

1263. வெய்யவன் பல் உகுத்தது குட்டியே; வெங்கண் மாசுணம், கையது, குட்டியே;
ஐயனே! அனல்ஆடிய மெய்யனே! அன்பினால் நினைவார்க்கு அருள்
மெய்யனே!
வையம் உய்ய அன்று உண்டது காளமே; வள்ளல் கையது மேவு கங்காளமே;
ஐயம் ஏற்பது உரைப்பது வீண், ஐயே! ஆலவாய் அரன் கையது வீணையே.

O Siva, You clouted Sūrya and knocked off his teeth.
Your hand holds a fierce-eyed and young snake.
O Siva, You, the Great One, are our Chief that dances in fire.
You, the True Ens, grace them that ever think on You.
Of yore, to save the cosmos, You quaffed the Halāhala.
You, the munificent One, hold in Your hand a skeleton.
It is unbecoming to describe Him as a mendicant.
O Hara of ĀlavāI, Your hand holds a *Vina*. 7

1264. தோள்கள்பத்தொடுபத்தும் அயக்கியே, தொக்க தேவர் செருக்கை
மயக்கியே,
வாள் அரக்கன் நிலத்துக் களித்துமே, வந்து அ(ம்)மால்வரை கண்டு
உகளித்துமே,
நீள்பொருப்பை எடுத்த உன்மத்தனே, நின் விரல்-தலையால் மதம் மத்தனே!
ஆளும் ஆதி முறித்தது மெய்கொலோ? ஆலவாய் அரன் உய்த்ததும்
மெய்கொலோ?

The sword-wielding Asura whose arms are twenty, quelled
the throngs of Devas who confronted him, revelled in
hauteur and rejoiced. When the Mount Kailās blocked
the passage of his chariot, He durst uproot it.

For sure, he is a demented Asura. You pressed Your toe
on Your Mount and crushed the prowess out of him.
You, the governing Primal Ens, cracked his body. Is this not true?
O God of ĀlavāI, You redeemed him later. Is this not true? 8

1265. பங்கயத்து உள நான்முகன், மாலொடே, பாதம் நீள் முடி நேடிட, மாலொடே,
துங்க நல்-தழலின் உருஆயுமே; தூய பாடல் பயின்றது, வாயுமே;
செங்கயல்கணினார் இடு பிச்சையே சென்று கொண்டு, உரைசெய்வது பிச்சு, ஐயே!
அங்கியைத் திகழ்விப்பது இடக்கையே; ஆலவாய், அரனாரது இடக் கையே.

When the Four-faced seated on the Lotus and Vishnu went in
quest of Your long crest and feet, O Siva, You caused
them to suffer utter bewilderment, as You grew into
an unbeholdable, lofty and raging flame.
At this, the two hailed You in perfect hymns, with their lips.
The women of ruddy *kayal*-like eyes, gave You, O Siva, alms.
Then You spoke to them words that inebriated them.
Your left palm causes the fire held in it to thrive wondrously. 9
You Hara, are firmly entempled in Ālavāi.

1266. தேரரோடு அமணர்க்கு நல்கானையே, தேவர் நாள்தொறும் சேர்வது கானையே;
கோரம் அட்டது புண்டரிகத்தையே; கொண்ட, நீள் கழல் புண்டரிகத்தையே;
நேர் இல் ஊர்கள் அழித்தது நாகமே; நீள்சடைத் திகழ்கின்றது நாகமே;
ஆரம் ஆக உகந்ததும் என்பு அதே; ஆலவாய், அரனார் இடம்என்பதே.

You do not bless the Buddhists and the Samaṇas who do not
adore You. Devas daily arrived at Katampa forest to adore You.
O Siva, Your fierce nature caused the death of the tiger.
Vishnu adored Your ankleted feet with his gouged lotus-eye.
Your Mountain-Bow smote the hostile Tiripura.
A snake thrives on Your long matted hair.
O Siva, You wear a garland of bones.
It is at ĀlavāI, O Hara, You are entempled. 10

1267. ஈன ஞானிகள்தம்மொடு விரகனே!-- ஏறு பல்பொருள் முத்தமிழ்விரகனே,
ஆன காழியுள் ஞானசம்பந்தனே--ஆலவாயினில் மேய சம்பந்தனே!
ஆன வானவர் வாயின் உளத்தனே! அன்பர் ஆனவர் வாயினுள் அத்தனே!
நான் உரைத்தன செந்தமிழ்பத்துமே வல்லவர்க்கு, இவைநற்று அமிழ் பத்துமே.
O Siva, You are the Chief of gods, adored by Devas.
You pervade sweetly the hearts of Your devotees.
O Siva, You do not mingle with men of pseudo-wisdom.
Gnānasambandhan of *Kāli* is the adept of
the threefold Tamil gravid with manifold message.
He has an ineluctable nexus with the God of Ālavāi.
These are his ten goodly hymns cast in classical Tamil.
They that are valiant in these stand blessed. 11

116. திரு வீழிமிழலை

திருஇயமகம் பழம்பஞ்சுரம்

1268. துன்று கொன்றை நம் சடையதே; தூய கண்டம் நஞ்சு அடையதே;
கன்றின்மான் இடக் கையதே; கல்லின் மான் இடக்கைஅதே;
என்றும் ஏறுவது இடவமே; என்இடைப் பலி இட வ(ம்)மே!
நின்றதும் மிழலையுள்ளுமே; நீர் எனைச் சிறிதும் உள்ளுமே!

116. TIRUVEEḺIMIḺALAI

TIRUVIYAMAKAM

Paḻampanjuram

You wear the dense koṉṟai flowers on Your matted crest.
Your clean throat wears a patch of murky venom.
In Your left hand You hold a fawn.
In Your left half abides Himavant's Daughter.
You for ever ride the Bull, O Siva.
May You, O Siva, approach me for Your alms.
You, O Siva, are entempled in Veeḻimiḻalai.
Deign to think of abiding in me too. 1

1269. ஓதி வாயதும் மறைகளே; உரைப்பதும் பலமறைகளே;
பாதி கொண்டதும் மாதையே; பணிகின்றேன், மிகும் மாதையே;
காது சேர் கனம் குழையரே; காதலார் கனம் குழையரே;
வீதிவாய் மிகும் வேதியா; மிழலை மேவிய வேதியா!

O Siva, You are pleased to recite the Vedas;
whatsoever You articulate are the Vedas.
Your Consort is, indeed Your half.
I adore this, Your splendorous form.
In one ear You wear the comely kuḻai.
You abide in the hearts of Your melting devotees.
You, the Author of the Vedas, do pass through the streets. 2
In Miḻalai, You, the Vedic God, are entempled.

1270. பாடுகின்ற பண் தாரமே; பத்தர் அன்ன பண்டாரமே;
சூடுகின்றது மத்தமே; தொழுத என்னை உன்மத்தமே
நீடு செய்வதும் தக்கதே? நின் அரைத் திகழ்ந்தது அக்குஅதே;
நாடு சேர் மிழலை, ஊருமே; நாகம் நஞ்சு அழலை ஊருமே.

During the Dissolution You sing hymns cast in the *pann* of *tāram*.
You, O Siva, are truly the treasure-trove of Your devotees.
O Sire, You wear the flowers of *ūmattham*.
You involve them in frenzy who worship You.
You cause me meditate on You constantly.
O Siva, Your waist is covered by bones.
You are entempled in Mil̲alai of the realm of Veel̲imil̲alai;
venom marks Your throat; fire blazes in Your hand. 3

1271. கட்டுகின்ற கழல் நாகமே; காய்ந்ததும் மதனன் ஆகமே;
இட்டம் ஆவது இசை பாடலே; இசைந்த நூலின் அமர்பு ஆடலே;
கொட்டுவான் முழவம், வாணனே; குலாய சீர் மிழலைவாணனே!
நட்டம்ஆடுவது சந்தியே; நான் உய்தற்கு இரவு சந்தியே!

Your ankleted feet are fastened with serpents.
You, O Siva, burnt the body of Manmata.
You rejoice in songs married to dulcet music.
You dance to the singing of the scriptural hymns.
It is Bāṇa who kept time with his drum for Your dance.
You are the God of the splendorously glorious Mil̲alai.
You dance during the junction of the day and the night. 4
O Siva, bless me with peace and redeem me.

1272. ஓவுஇலாது இடும் கரணமே, உன்னும் என்னுடைக் கரணமே;
ஏவு சேர்வும் நின் ஆணையே; அருளில் நின்ன பொற்று ஆணையே;
பாவியாது உரை மெய் இலே; பயின்ற நின் அடி மெய்யிலே
மேவினான் விறல் கண்ணனே--மிழலை மேய முக்கண்ணனே!

You dance the various *karanas*, ignoring none of them.
My senses are ever concentrated on You.
Manmata's darts hurt me only at Your behest.
I'll get redeemed only by the grace of Your auric feet.
Words unprompted by You, are only falsehoods.
O Siva, Your practised feet are poised in truth.
The puissant Vishnu took refuge in You.
You, the triple-eyed, are entempled in Mil̲alai. 5

1273. வாய்ந்த மேனி எரிவண்ணமே; மகிழ்ந்து பாடுவது வண்ணமே;
காய்ந்து வீழ்ந்தவன் காலனே; கடு நடம்செயும் காலனே;
போந்தது எம்இடை இரவிலே; உம்இடைக் கள்வம் இரவிலே;
ஏய்ந்ததும் மிழலைஎன்பதே; விரும்பியே அணிவது என்புஅதே.

Your divine body, O Siva, blazes like fire.
You sing in joy in innumerable airs.
O Siva, Yama fell down dead kicked by You.
It is You that enact the grand dance.
You, O Siva, sought our company during night.
It is during night You purloined our muliebrity.
You, O Siva, rejoice in wearing bones galore. 6
It is in Mil̲alai You are entempled.

1274. அப்பு இயன்ற கண் அயனுமே, அமரர்கோமகனும், அயனுமே,
ஒப்பு இல் இன்று, அமரர், தருவதே, ஒண் கையால் அமரர் தருஅதே;
மெய்ப் பயின்றவர், இருக்கையே, மிழலைஊர் உமது இருக்கையே;
செப்புமின்(ன்), எருது மேயுமே! சேர்வு உமக்கு எருதும் ஏயுமே.

As Your peerless hand bestows boons on Vishnu of comely eyes
who slumbers on the sea, for him and Indira, the lord
of the ethereal world and Brahma, You are indeed
the wish-yielding tree of Karpaka.
You abide in the hearts of those that are Siva-conscious.
It is Vilimilalai which is Your delubrum.
Tell me, O Siva, if it spells good if your Bull grazes
my love for You. Come to me riding it and redeem me. 7

1275. தானவக்குலம் விளக்கியே, தாரகைச் செலவு இளக்கியே,
வான் அடர்த்த கயில்ஆயமே, வந்து மேவு கயிலாயமே
தான் எடுத்த வல் அரக்கனே, தட முடித்திரள் அரக்கனே,
மேல் நடைச் செல இருப்பனே; மிழலை நன் பதி விருப்பனே.

You Siva made it plain that the hostile Asuras will perish.
Your light dims the light of the stars and the like.
You crushed the fierce Ravaṇa's great heads, who durst
uproot Your Mount Kailas vaulting the heavens.
You rejoice, O Siva, to beg alms in every house.
You are entempled in the goodly urbs of Milalai. 8

1276. காயம் மிக்கது ஒரு பன்றியே, கலந்த நின்ன உருபு அன்றியே,
ஏய இப் புவி மயங்கவே, இருவர்தாம் மனம் அயங்கவே,
தூய மெய்த்திரள் அகண்டனே! தோன்றி நின்ற மணிகண்டனே!
மேய இத் துயில் விலக்கு, அ(ண்)ணா! மிழலை மேவிய இலக்கணா!

When Vishnu assumed the immense form of a boar
and Brahma went in quest of You, You stood
unbeholdable by them causing them to stand
bewildered in their *manams,* on this earth.
You, the True Ens, stood as a limitless column of flame.
Your throat wears a sapphirine patch.
O Siva, I pine for You sleeplessly; do cure me. You, the Handsome
and inaccessible God, abide at Mil̲alai. 9

1277. கஞ்சியைக் குலவு கையரே, கலக்கம் ஆர் அமணர்கையரே,
அஞ்ச, வாதில் அருள் செய்ய நீ, அணைந்திடும் பரிசு செய்ய, நீ
வஞ்சனே! வரவும் வல்லையே, மதித்து, எனைச் சிறிதும் வல்லையே?
வெஞ்சல் இன்றி வரு இவ் தகா--மிழலை சேரும் விறல் வித்தகா!

O Siva, You blessed to vanquish in disputation, the Samaṇas
and the Buddhists who quaff conjee. They but stood scared.
You also know of the ruses of others. You make Your advent
to annul the misery of Your devotees; yet You mind not
even a jot of my misery which You must annul.
I cannot withstand the onslaught of crowding sorrows. 10
O the dexterous *Vittaka* abiding in Mil̲alai, do save me.

1278. மேய செஞ்சடையின் அப்பனே! மிழலை மேவிய என் அப்பனே!
ஏயுமா செய இருப்பனே! இசைந்தவா செய விருப்பனே!
காய வர்க்க (அ)சம்பந்தனே! காழி ஞானசம்பந்தனே
வாய் உரைத்த தமிழ்பத்துமே வல்லவர்க்கும் இவை பத்துமே.

O Siva, You sport in Your ruddy matted crest the Ganga.
You are my Sire entempled in Mil̲alai.
You take no account of them that act according to their will.
However, You are dear to Your adoring devotees.
Gnānasambandhan of Kāl̲i has sung these ten hymns
on You, O Siva. These constitute the ten steps of
ascension unto those who are valiant in these psalms. 11

117. சீகாழி

திரு மாலைமாற்று கௌசிகம்

1279. யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா,
யாம் ஆமா? நீ ஆம் ஆம்; மாயாழீ! காமா! காண் நாகா!
காணா காமா! காழீயா! மா மாயா! நீ, மா மாயா!

117. SEEKĀL̲I

Palindronic Verses Paṇ: Kausikam

யாம்	:	If souls are said to be God,
ஆமா	:	Will it be meaningful?
நீ	:	If it is affirmed that You are the God,
ஆம் ஆம்	:	that is absolutely true.
மா யாழ்	:	You play on the great *yāl̲*

காமா	O Handsome One loved by every one
காண் நாகா	You caused Kāma to get destroyed with his hands, legs and other organs.
காழீ யா	You abide at Kāḻi.
மாமா ய	You also manifest as the Consort of Lakshmi.
மாமாய	From the dark Māya and other *malas,*
நீ	may You free us.

1

1280. யாகாயாழீ காயாகா தாயாராரா தாயாயா
யாயாதாரா ராயாதா காயாகாழீ யாகாயா,
யாகா! யாழீ! காயா! காதா! யார் ஆர் ஆ தாய் ஆயாய்!
ஆயா! தார் ஆர் ஆயா! தாக ஆயா! காழீயா! கா, யா!

யாகா	You are of the form of *Yāga.*
யாழீ	You play on the *yāḻ*
காயா	You assume a form for the sake of Your devotees.
காதா	O God of the great Dissolution!
யாத ஆர்	unto each and every one
ஆ	You are the appropriate
தாய் ஆவாய்	One namely the mother.
ஆயா	You are beyond ratiocination.
தார்ஆர் ஆயா	Atthi flowers constitute Your garland.
தா கா	To them who seek You in love,
ஆயா	You are like the throng of *Rishi-Patnis.*
காழீயா	You are entempled in Kāḻi.
யா	From all types of troubles 2
கா	free us and save us.

1281. தாவாமூவா தாசாகா ழீ நாதாநீ யாமாமா
மாமாயாநீ தாநாழீ காசாதாவா மூவாதா,
தாவா மூவா தாசா! காழீ நாதா! நீ யாமா! மா!
மா மா யா நீ! தானஆழீ! காசா! தா! வா! மூ வாதா!

தாவா : You are deathless;

மூவா : You never change.

தாசா : You are gained through *Dasa-Kārya.*

காழீ நாதா : You are the God of Kāḻi

நீ யாமா : You dance during the dead of night

மா : You are great.

மாமா : The great Tusker Ayiravanam,

யா நீ : You have as Your mount.

தான ஆழி : You are munificent as the sea.

காசா : You blaze like gems.

மூ : You are all things which came to be.

வாதா : You are of the form of the five elements.

வா : Deign to appear before us.

தா : Bless us with boons we covet. 3

1282. நீவாவாயா காயாழீ காவாவாணோ வாராமே
மேராவாணோ வாவாகா ழீயாகாயா வாவாநீ,
நீவா வாயா! கா யாழீ! கா, வா, வான் நோ வாராமே!
மேரா, வான் நோவாவா! காழீயா! காயா! வா வா, நீ!

நீ வா : You are changeless.

வா யா : You are the True Ens.

கா : You bear

யாழீ : the *yāḻ*.
வான் நேர் வாரமே : From the cruel embodiment,
வா கா : may You free and protect us.
வான் நோவா ஆ : To annul the troubles of Devas
மேரா : You wielded the Meru as Your bow.
காழீயா : You abide at Kāḻi.
காயா : Your form is of the space.
வாவா நீ : Come in all celerity to grace us. 4

1283. யாகாலாமே யாகாழீ யாமேதாவீ தாயாவீ
வீயாதாவீ தாமேயா ழீகாயாமே லாகாயா,
யா காலா! மேயா! காழீயா! மேதாவீ! தாய், ஆவீ!
வீயாதா! வீ தாம் மே யாழீ! கா, யாம் மேல் ஆகு ஆயா!

யா : Unto all things and beings
காயா : You are the ultimate absorber.
மேயா : You indwell every thing and being.
காழியா : You are entempled in Kāḻi.
மேதா வீ : Par excellence in Your intellect.
தாய் ஆ வீ : You are our Mother and soul.
வீ யா தா : You are athanasic.
வீ தாம் : Birds like *kinnara*
மே : willingly approach You
யாழீ : that play on the *yāḻ*.
யாம் : We, the servitors,
மேல் ஆடு ஆயா : should not be assailed further by future troubles. 5
கா : Protect us.

1284. மேலாபோகா மேதேழீ காலாலேகா லானாயே
யேனாலாகா லேலாகா ழீதேமேகா போலேமே,
மேலே போகாமே, தேழீ, காலாலே கால் ஆனாயே!
ஏல் நால் ஆகி ஆல் ஏலா! காழீ தே! மேகா! போலேமே?

மேலே பேகா மே	:	Preventing assault on Mārkandēya
தேழீ	:	You frightened with Your fierce voice, Yama
காலாலே	:	and kicked him to death.
கால் ஆனாயே	:	You were the Yama of Yama.
ஏய் நால் ஆகி	:	You were the Guru unto the Four.
ஆய் ஏலா	:	You were seated under the Banyan tree.
காழீ தே	:	You are the God of Kāli.
மேகா	:	You transmogrified Vishnu into a cloud and made it Your mount.
போலா மே	:	Are we not like unto that Vishnu? 6

1285. நீயாமாநீ யேயாமா தாவேழீகா நீதானே
நேதாநீகா ழீவேதா மாயாயேநீ மாயாநீ,
நீயா மாணீ! ஏயா மாதா! ஏழீ! கா, நீ தானே!
நே தாநீ! காழீ வேதா! மாயாயே நீ, மாய் ஆநீ?

நீ யாமா. . . .	:	Never parting from You,
மாணீ	:	Uma forms part of Yourself.
ஏயா	:	You are the peerless
மாதா	:	Mother.
ஏழீ	:	You are of the form of sevenfold music.
கா நீ தானே	:	You, on Your own accord, save me.

நே	For love
தா நீ	You are the abode.
காழீ வேதா	You are the Vedic God of Kāli.
மாய்	Harrowing are our
ஆ நீ [வறா நீ]	grievances.
நீ	Will You, our God
மாயா யே	not annul them?

7

1286. நேணவராவிழ யாசைழியே வேகதளேரிய ளாயுழிகா
காழியுளாயரி ளேதகவே யேழிசையாழவி ராவணனே,
நே(அ)ணவர் ஆ விழ யா (ஆ)சை இழியே! வேக (அ)தள் ஏரி!
அளாயஉழி கா!
காழிஉளாய்! அரு இளவு ஏது அ(ஃ)கவே; ஏழ்இசை யாழ இராவணனே.

நே ஆணவர் ஆ	The entia that in love, are at one with Your feet.
விழ	We fall down fettered.
யா ஆசை	The fettering rope our desire,
இழியே	You should untie.
வேக அதன ஏரி	You are clad in the skin of the swift running deer.
அனயா உழி கா	Protect us when troubles surround us.
காழி உளாய்	You are entempled in Kāli;
அரு ஏது	unpardonable sins
இளவு	are wrought by our baseness; (therefore)
அ(ஃ)கவே	they are fit to be forgiven.
ஏழிசை இராவணனே	Ravaṇa, the adept in sevenfold music became eligible for forgiveness. (So it is illative that the mercy that forgave the crimes committed in pride, must also forgive the crimes of baseness.) 8
யாழ்	a gap-filler.

1287. காலேமேலே காணீகா ழீகாலேமா லேமேபூ
பூமேலேமா லேகாழீ காணீகாலே மேலேகா.
காலே மேலே காண் நீ காழீ! காலே! மாலே! மே பூ
பூமேல்ஏ(ய்), மாலே, காழீ! காண்! ஏ காலே! மேலே கா!

காலே	:	As wind You pervade everywhere.
மாலே	:	You enchant everything.
மே	:	Great
பூ	:	blowing blossom!
பூ மேல் ஏய்	:	Brahma of the Lotus (and)
மாலே	:	Vishnu

காலே மேலே காண் நீ	:	You prevented their beholding Your feet and head.
காழி	:	You abide at Kāḻi.
காழீ	:	You are like unto adamant.
காண்	:	Cast Your merciful look on us.
காயே ஏ	:	Bless us to adore Your feet.
மேலே கா	:	Like Your protecting us so far, protect us in future also. 9

1288. வேரியுமேணவ காழியொயே யேனைநிணேமட ளோகரதே
தேரகளோடம ணேநினையே யேயொழிகாவண மேயுரீவே.
வேரியும் ஏண் நவ காழியொயே! ஏனை நீள் நேம் அடு அள் ஓகரதே;
தேர(ர்)களோடு அமணே நினை ஏ ஏய் ஒழி! கா வணமே உரீவே.

வேரியும்	:	Fragrance
ஏண்	:	glory (and)

நவம் : novelty (mark You).
காழீயொயே : O God of Kāli
ஏனை : Other troubles
நீள் நேம் : much love
அரு : destroying (and)
அன் : taking hold
ஓகாது ஏ : (are) the deeds of yogis.

[Yogis in love forfend and destroy the trouble of others. They take care to foster goodness.]

தேரர் : The utterances of the Buddhists,
அமணே : the utterances of the Samaṇas.

[Ignore the utterances of the Buddhists, and the Samaṇas and their commandments.]

ஏவுதலையும் : Commandments
ஏய் : agreeing with them
ஒழி : quit.
காவணமே : Protecting the *manam* unflawed
உரிவே : is Your duty.

1289. நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே.
நேர் அகழ் ஆம் இதய ஆசு அழி! தாய் ஏல் நன் நீயே; நன் நீள்! ஆய் உழி கா!
காழிஉளான் இன் நையே நினையே, தாழ் இசையா, தமிழ்ஆகரனே.

நேர் அகழ் ஆம் : Burrowing and uprooting righteousness
இதய ஆக : and the surfacing up of passion and the like
ஆழி : You are valiant to destroy.

தாய் ஏல் நன் நீயே : You are the Great One to be reckoned as the merciful Mother of cosmos.
ஆய் உழி கா : When we wilt and flag, protect us.
தமிழ் ஆகரனே : Gnānasambandhan, the source of Tamil wisdom (has sung on)
காழி உளான் : the God of Kāli.
இன் : (These hymns are) sweet;
நையே : they cause the melting (of listeners).
நினையே : (When these are) remembered and sung,

தாழ்வு : blemishes
இசையா : cannot survive. 11

[Note: Readers are requested to read pages 173 to 176 of T.V.Gopala Iyer's Tēvāram: Āyvutthunai, published by the French Institute of Indology, Pondicherry (1991).]

118. திருக் கழுமலம் புறநீர்மை

1290. மடல் மலி கொன்றை, துன்று வாள்எருக்கும், வன்னியும், மத்தமும், சடைமேல்
படல் ஒலி திரைகள் மோதிய கங்கைத் தலைவனார்தம் இடம் பகரில்,--
விடல் ஒலி பரந்த வெண்திரை முத்தம் இப்பிகள் கொணர்ந்து, வெள் அருவிக்
கடல் ஒலி ஓதம் மோத, வந்து அலைக்கும்--கழுமலநகர் எனல் ஆமே.

118. TIRUKKAL̲UMALAM

Puraneermai

His matted crest is adorned with the garlands of
the densely-petalled *kon̲r̲ai* flowers, the white madar,
the leaves of *van̲n̲i* and *ūmattham* blossoms
and also the Ganga of dashing billows.
If it is asked where Siva abides, it is at the city
Kal̲umalam close to which the waves of the main
carry pearls and shells galore. 1

1291. மின்னிய அரவும், வெறிமலர்பலவும், விரும்பிய திங்களும், தங்கு
சென்னிஅது உடையான், தேவர்தம் பெருமான், சேயிழையொடும்
உறைவுஇடம்ஆம்--
பொன் இயல் மணியும், முரி கரிமருப்பும், சந்தமும், உந்து வன் திரைகள்
கன்னியர் ஆட, கடல் ஒலி மலியும்--கழுமலநகர் எனல் ஆமே.

Siva is the God of the Devas. On His matted crest, He bears
a fulgurant serpent, fragrant flowers aplenty
and the crescent that willingly took refuge in Him.
With His bejewelled Consort, He is entempled in the city
of Kal̲umalam close to which the strong billows
of the main dashingly carry, gold, gems and the curved
tusks of tuskers and sandalwood. 2
Here do gambol virgins in the beach.

1292. சீர் உறு தொண்டர், கொண்டு அடி போற்ற, செழு மலர் புனலொடு தூபம்;
தார் உறு கொன்றை தம் முடி வைத்த சைவனார் தங்கு இடம்--எங்கும்
ஊர் உறு பதிகள் உலகுஉடன் பொங்கி ஒலிபுனல் கொள, உடன்மிதந்த,
கார் உறு செம்மை நன்மையால் மிக்க--கழுமலநகர் எனல் ஆமே.

Here do His renowned devotees hail His feet strewing
splendorous flowers soaked in water and eke
do they hail Him with fragrant smoke.
Siva, the God of Saivism is entempled in the city of
Kal̲umalam fecundated by the unfailing rainfall.
During the Great Dissolution, when the dinsome seas
drown all the shrines in this world, it is
Kal̲umalam alone that remains natable intact. 3

1293. மண்ணினார் ஏத்த, வான்உளார் பரச, அந்தரத்து அமரர்கள் போற்ற,
பண்ணினார் எல்லாம்; பலபல வேடம் உடையவர்; பயில்வு இடம்--எங்கும்
எண்ணினால் மிக்கார், இயல்பினால் நிறைந்தார், ஏந்திழையவரொடு மைந்தர்
கண்ணினால் இன்பம் கண்டு, ஒளி பரக்கும்--கழுமலநகர் எனல் ஆமே.

The terrestrials adore Him; the celestials worship Him
and gods like Vishnu and Brahma hail Him.
He is the Creator of all. His forms are many many.
He is entempled in Kal̲umalam where abound the great ones
who ever remember to hail His feet.

The bejewelled women and their husbands gather here
and get soused in bliss when they gain His *darshan*.
Indeed this, His delubrum, showers lustrous and pervading grace. 4

1294. சுருதியான் தலையும், நாமகள் மூக்கும், சுடரவன் கரமும், முன் இயங்கு
பருதியான் பல்லும், இறுத்து, அவர்க்கு அருளும் பரமனார் பயின்று
இனிது இருக்கை--
விருதின் நால்மறையும், அங்கம்ஓர்ஆறும் வேள்வியும் வேட்டவர், ஞானம்
கருதினார், உலகில் கருத்து உடையார், சேர்--கழுமலநகர் எனல் ஆமே.

Siva, of yore, clipped a head of Brahma's. Eke He damaged
the nose of Saraswati, the hand of Agni and the teeth
of Sūrya. Later He graced them all.
Siva, the supreme God, abides at the city of Kaḻumalam
where abound those of traditional lineage that pass
on intact the recitation of the four Vedas and their
six Angas, and the way to perform the Vedic sacrifices,
from generation to generation.
Here also thrive those who thirst for Gnosis and those
who long to gain the great beatitude while yet alive. 5

1295. புற்றில் வாள்அரவும் ஆமையும் பூண்ட புனிதனார், பனிமலர்க் கொன்றை
பற்றி வான்மதியம் சடை இடை வைத்த படிறனார், பயின்று இனிது
இருக்கை--
செற்று வன் திரைகள் ஒன்றொடு ஒன்று ஓடிச் செயிர்த்து, வண்
சங்கொடு வங்கம்
கல்-துறை வரை கொள் கரைக்கு வந்து உரைக்கும்--கழுமலநகர் எனல்
ஆமே.

The holy Siva is adorned with snakes which dwell
in the deserted ant-hills and a carapace.
Along with the moist *konrai* flowers, He wears on His
matted crest the crescent of the heavens.
Siva, the Strategist, joyously abides in Kalumalam
close to the sea. The strong billows of the main
contending with each other, push to the shore
rich chanks and the hill-like barkentines. 6

1296. அலை புனல் கங்கை தங்கிய சடையார், அடல் நெடுமதில்ஒருமூன்றும்
கொலைஇடைச் செந்தீ வெந்து அறக் கண்ட குழகனார், கோயிலது
என்பர்--
மலையின் மிக்கு உயர்ந்த மரக்கலம் சரக்கு மற்றுமற்று இடைஇடை எங்கும்
கலை களித்து ஏறிக் கானலில் வாழும்--கழுமலநகர் எனல் ஆமே.

Siva bears on His matted crest the Ganga rich in waves;
He gutted with ruddy fire the triad of the evil
and murderous walled-citadels.
He is ever young. He is entempled in the city of Kalumalam
near whose shore are anchored merchantmen—more huge
than hills—, loaded with commodities.
Here in the foreshore region, deer gambol in delight great. 7

1297. ஒருக்க முன் நினையாத் தக்கன் தன் வேள்வி உடைதர உழறிய படையார்,
அரக்கனை வரையால் ஆற்றல் அன்று அழித்த அழகனார், அமர்ந்து
உறை கோயில்--
பரக்கும் வண்புகழார் பழிஅவை பார்த்துப் பலபல அறங்களே பயிற்றி,
கரக்கும் ஆறு அறியா வண்மையால் வாழும்--கழுமலநகர் எனல் ஆமே.

Siva who, of yore, wholly devastated the sacrifice of
Daksha, is the Lord of His Bhūta-Hosts.
He is the Handsome One who gently pressed His Mount
with His toe and crushed the prowess of Ravaṇa.
He is happily entempled in Kaḻumalam where thrive
the great ones of true and spreading renown, those
who to forfend the advent of blemishes, practise *dharma*
as is possible for them, those that are munificent patrons
who even in their dreams conceal not their eelymosynary
disposition and other pursuers of the salvific way. 8

1298. அரு வரை பொறுத்த ஆற்றலினானும், அணி கிளர் தாமரையானும்,
இருவரும் ஏத்த, எரி உரு ஆன இறைவனார் உறைவுஇடம் வினவில்,--
ஒருவர் இவ் உலகில் வாழ்கிலா வண்ணம் ஒலிபுனல்வெள்ளம் முன் பரப்ப,
கருவரை சூழ்ந்த கடல்இடை மிதக்கும்--கழுமலநகர் எனல் ஆமே.

When Siva soared up and up as an immeasurable column of
flame, Vishnu of great prowess, who lifted up
the Mount Govardana and caused it to serve as a shielding
umbrella and Brahma whose seat is the great and bright
Lotus, paid Him obeisance in all sincerity.
He is entempled in the city of Kaḻumalam which remained
intact and natable when occurred the dinsome
and the Great Dissolution which spared not even
a single being, drowning all the mountains in orbis terrarum. 9

1299. உரிந்து உயர் உருவில் உடை தவிர்ந்தாரும், அத் துகில் போர்த்து
உழல்வாரும்,
தெரிந்து புன் மொழிகள் செப்பின கேளாச் செம்மையார் நன்மையால்
உறைவுஆம்--
குருந்து, உயர் கோங்கு, கொடிவிடு முல்லை, மல்லிகை, சண்பகம், வேங்கை,
கருந்தடங்கண்ணின் மங்கைமார் கொய்யும்--கழுமலநகர் எனல் ஆமே.

The Samaṇas cast away, for ever, their clothes from their huge bodies;
the Buddhists are shrouded in flowing robes;
these are unendowed with ratiocinating brains;
they denigrate with base words the pursuers of
the salvific way. We do not listen to these back-biters.
Siva blesses with weal those that pursue the Godly way.
He is entempled in the city of Kal̲umalam where the dark
and broad-eyed damsels pluck the flowers of *kuruntu*,
kōṅku, mullai, mallikai, sanpakam and vēṅkai.
These they strew at His feet and adore Him. 10

1300. கானல் அம் கழனி ஓதம் வந்து உலவும் கழுமலநகர் உறைவார்மேல்
ஞானசம்பந்தன் நல்-தமிழ்மாலை நன்மையால் உரைசெய்து நவில்வார்
ஊன சம்பந்தத்து உறு பிணி நீங்கி, உள்ளமும் ஒருவழிக் கொண்டு,
வான் இடை வாழ்வர்; மண்மிசைப் பிறவார்; மற்று இதற்கு ஆணையும்
நமதே.

On the God of Kal̲umalam city whose fields are
fecundated by the spring-water of the foreshore gardens,
Gnānasambandhan has composed these garlands of Tamil̲.

They that, prompted by goodness, hail these hymns,
will stand cured of their bodily maladies; their hearts
will be suffused with Siva-consciousness.
They will dwell in the ethereal world; they will not be reborn at all.
Lo, I proclaim this as my fiat. 11

119. திரு வீழிமிழலை புறநீர்மை

1301. "புள்ளித்தோல் ஆடை; பூண்பது நாகம்; பூசு சாந்தம் பொடி-நீறு;
கொள்ளித்தீ விளக்கு; கூளிகள் கூட்டம்; காளியைக் குணம் செய் கூத்து
உடையோன்--
அள்ளல் கார்ஆமை அகடு வான்மதியம் ஏய்க்க, முள்-தாழைகள் ஆனை
வெள்ளைக்கொம்பு ஈனும் விரி பொழில்--வீழிமிழலையான்" என,
வினை கெடுமே.

119. TIRUVEEḺIMIḺALAI Paṇ: Puraneermai

Siva is clad in the skin of a tiger; He wears the snake
as His ornament. He is coated with the ash—His sandal-paste.
Surrounded by His Bhūta-Hosts He dances with Kāli,
the leader of the small-sized female ghouls,
in the crematory whose pyres serve Him with light.
He is entempled in Veeḻimiḻalai girt with gardens
over which the moon like unto the maw of miry
tortoise, sails; here abound thorny cacti
like unto the tusks of elephants. 1
The evil karma of those that chant His name, will perish.

1302. "இசைந்தஆறு அடியார் இடு துவல், வானோர் இழுகு சந்தனத்து
இளங் கமலப்
பசும்பொன் வாசிகைமேல் பரப்புவாய்; கரப்பாய், பத்தி செய்யாதவர்
பக்கல்;--
அசும்பு பாய் கழனி அலர் கயல் முதலோடு அடுத்து அரிந்து எடுத்த
வான் சும்மை
விசும்பு தூர்ப்பன போல் விம்மிய வீழிமிழலையான்!" என, வினை கெடுமே.

Siva blesses His devotees who in exceeding *bhakti*,
strew flowers on Him and hail Him. He graces
the Devas who adorn Him with garlands of fragrant flowers.
He remains concealed unto them who do not adore Him in *bhakti*.
He is entempled in the uberous Veelimilalai whose flowery fields
are fed by the spring-water; in them *kayals* flourish.
Here when the grains of the severed stalks are winnowed
they float abundantly and cover the sky.
The karma of those that hail the God of Veelimilalai
fritter and fade away. 2

1303. "நிருத்தன், ஆறுஅங்கன், நீற்றன், நால்மறையன், நீலம் ஆர் மிடற்றன்,
நெற்றிக்கண்.
ஒருத்தன், மற்று எல்லாஉயிர்கட்கும் உயிர்ஆய் உளன், இலன், கேடு
இலி, உமைகோன்--
திருத்தம்ஆய் நாளும் ஆடு நீர்ப் பொய்கை, சிறியவர் அறிவினின் மிக்க
விருத்தரை அடி வீழ்ந்து இடம் புகும்--வீழிமிழலையான்" என, வினை
கெடுமே.

Siva is a dancer; He is the Author of the six Vedic Angas;
He is adorned with ash; He is the import of the Vedas.
He is the Peerless One who is triple-eyed; He is the Life animating
all lives; His presence is not felt by those that are
unendowed with Gnosis.
He, the blemishless, annuls all blemishes. He has His
daily ablutions in the water of *poikai*.
He is entempled in Veel̲imil̲alai where the young fall at
the feet of the aged who abound in learning.
Karma will perish, if He, the God, is hailed. 3

1304. "தாங்க(அ)ருங் காலம் தவிர வந்து இருவர் தம்மொடும் கூடினார் அங்கம்
பாங்கினால்-தரித்துப் பண்டு போல் எல்லாம் பண்ணிய கண்நுதல் பரமர்--
தேம் கொள் பூங் கமுகு, தெங்கு, இளங் கொடி, மா, செண்பகம், வண்
பலா, இலுப்பை,
வேங்கை, பூ மகிழால், வெயில் புகா--வீழிமிழலையான்" என, வினை
கெடுமே.

At the Great Dissolution, He splendorously wears
the skeletons of Vishnu and Brahma and later commences
His work of Creation, as of yore.
He is the supreme God who is triple-eyed.
He is entempled in Veel̲imil̲alai girt with the gardens
of green trees of areca nut, coconut, mango,
champak, jack, *illuppai*, *vēṅkai, makil̲*, banyan
and the like that are unpierced by the rays of the sun.
Karma will perish, if He, the God, is hailed and adored. 4

1305. “சூசு மா மயானம் கோயில் வாயில்கண் குடவயிற்றன சிலபூதம்,
பூசு மா சாந்தம் பூதி, மெல்லோதி பாதி, நன் பொங்கு அரவு அரையோன்--
வாசம் ஆம் புன்னை, மௌவல், செங்கழுநீர், மலர் அணைந்து எழுந்த
வான்தென்றல்
வீசு மாம்பொழில்-தேன் துவலை சேர்--வீழிமிழலையான்” என, வினை
கெடுமே.

The great crematory whose pyres dazzle human eyes, is His
shrine which is surrounded by a few ghouls.
He is coated with the ash—His sandal-paste.
A moiety of His body is the soft-haired Uma’s.
He is adorned with a raging serpent in His waist.
He is entempled in Veelimilalai girt with gardens
where thrive the fragrant *punnai, mauval*
and the blossoms of *seṅkaluneer* through which
the southerly passes scattering droplets of melis.
Karma will perish, if He, the God, is hailed and adored. 5

1306. “பாதி ஓர் மாதர், மாலும் ஓர் பாகர், பங்கயத்து அயனும் ஓர் பாலர்,
ஆதிஆய், நடுஆய் அந்தம்ஆய் நின்ற அடிகளார், அமரர்கட்கு அமரர்,
போது சேர் சென்னிப் புரூரவாப் பணி செய்--பூசுரர், பூமகன் அனைய
வேதியர், வேதத்து ஒலி அறா--வீழிமிழலையான்” என, வினை கெடுமே.

Siva has His Consort in a part of His body; so too He keeps
Vishnu and Brahma in a part of His body.
The Noble One is the beginning, the middle and the end.
He is the God of the celestials; He is entempled in
Veelimilalai renovated by Pururava whose head
is bedecked with beautiful blossoms.

Here thrive Brahmins like unto Brahma on the Lotus;
their Vedic recitation continues without interruption.
Karma'll perish, if He, the God, is hailed and adored. 6

1307. "தன் தவம் பெரிய சலந்தரன் உடலம் தடிந்த சக்கரம் எனக்கு அருள்!" என்று
அன்று அரி வழிபட்டு இழிச்சிய விமானத்து இறையவன், பிறை அணி சடையன்--
நின்ற நாள் காலை, இருந்த நாள் மாலை, கிடந்த மண்மேல் வரு கலியை
வென்ற வேதியர்கள் விழா அறா--வீழிமிழலையான்' என, வினை கெடுமே.

To gain the grace of Siva and gain the procket-wheel
with which Siva slew Jalandara, Vishnu wrought the Vimāna
in the Heaven and set it on Siva's shrine here and adored Siva.
Siva wears the crescent on His matted crest.
He is entempled in Veelimilalai where thrive Vedic Brahmins
who have conquered *Kali* that assails the terrestrials,
by offering fresh flowers in their Siva-pūja,
performed in the morn and eventide.
Here in Veelimilalai fetes and festivals never cease.
Karma will perish, if He, the God, is hailed and adored. 7

1308. "கடுத்த வாள் அரக்கன் கயிலை அன்று எடுத்த கரம்உரம்சிரம் நெரிந்து அலற,
அடர்த்தது ஓர்விரலால், அஞ்சுஎழுத்து உரைக்க அருளினன், தட மிகு நெடுவாள்;--
படித்த நால்மறை கேட்டு இருந்த பைங்கிளிகள் பதங்களை ஓத, பாடு இருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில்--வீழிமிழலையான்" என, வினை கெடுமே.

Of yore, when the irate and sworded-Asura, durst uproot
the Mount Kailās, Siva pressed with His toe His Mount
and crushed his arms and heads at which he wailed aloud.
Then when he rued and duly chanted the mystic pentad of letters
as ordained, Siva gifted to him a long broad-sword.
Siva is entempled in Veel̲imil̲alai girt with extensive gardens
where the green parakeets listening well to the chanting
of the four Vedas indulge in such chanting hearing which
the kine accustom their ears to listen to it.
Karma'll perish, if He, the God, is hailed and adored. 8

1309. "அளவுஇடல்உற்ற அயனொடு மாலும் அண்டம் மண் கிண்டியும் காணா
முளை எரி ஆய மூர்த்தியை, தீர்த்த முக்கண் எம் முதல்வனை, முத்தை,-
தளை அவிழ் கமலத்தவிசின்மேல் அன்னம் தன் இளம்பெடையொடும் புல்கி,
விளை கதிர்க்கவரி வீச, வீற்றிருக்கும்--மிழலையான்" என, வினை கெடுமே.
Of yore, when Brahma and Vishnu, in quest of the base
and the crest of the triple-eyed Siva, flew beyond
the vault of heaven and burrowed the earth deeper and deeper,
Siva soared up and up as an unbeholdable column of flame.
He is, indeed, entempled in Veel̲imil̲alai where the cob
and his pen lie imparadised in the petalled lotus.
In its fields, stalks with grains waft like *kavaris*.
Karma'll perish, if He, the God, is hailed and adored. 9

1310. "கஞ்சிப் போது உடையார், கையில் கோசாரக் கலதிகள், கட்டுரை விட்டு,
அஞ்சித் தேவு இரிய எழுந்த நஞ்சுஅதனை உண்டு அமரர்க்கு அமுது அருளி--
இஞ்சிக்கே கதலிக்கனி விழ, கமுகின்குலையொடும் பழம் விழ, தெங்கின்
மிஞ்சுக்கே மஞ்சு சேர் பொழில்--வீழிமிழலையான்" என, வினை கெடுமே.

Listen not to the base utterances of the Buddhists who
receive conjee in their begging-bowls and of
the Samaṇas who are the ill-fated trichotillomaniacs.
When the Halāhala uprose and affrighted the Devas,
Siva quaffed it and enabled them to partake of nectar.
Siva is entempled in Veeḻimiḻalai girt with gardens
where, when the areca-nut-bunches fall on banana
trees, their bunches fall on the protecting wall.
Here, on the lofty tops of coconut trees clouds do rest.
Karma'll perish, if He, the God, is hailed and adored. 10

1311. வேந்தர் வந்து இறைஞ்ச, வேதியர் வீழிமிழலையுள், விண்இழி விமானத்து,
ஏய்ந்த தன் தேவியோடு உறைகின்ற ஈசனை, எம்பெருமானை,
தோய்ந்த நீர்த் தோணிபுரத்து உறை மறையோன்--தூ மொழி
ஞானசம்பந்தன்--
வாய்ந்த பாமாலை வாய் நவில்வாரை வானவர் வழிபடுவாரே.

The God of Veeḻimiḻalai is adored by monarchs; here
dwell Brahmins well versed in the Vedas.
With His Consort, Siva abides in the temple the Vimāna
of which descended from the very Heaven.
On Him, Gnānasambandhan of Tōṇipuram endowed with
the wealth of water, the one versed in the Vedas and who ever
uses pure words, has sung this garland of verses.
They that cultivate these psalms and hail Siva with them
will be welcomed by the adoring supernals. 11

120. திரு ஆலவாய்

புறநீர்மை

1312. மங்கையர்க்கு அரசி--வளவர்கோன் பாவை, வரி வளைக் கைம் மடமானி,
பங்கயச்செல்வி, பாண்டிமாதேவி--பணி செய்து நாள்தொறும் பரவ,
பொங்கு அழல்உருவன், பூதநாயகன், நால்வேதமும் பொருள்களும் அருளி,
அம் கயல்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய்ஆவதும் இதுவே.

120. TIRU ĀLAVĀI

Paṇ: Puraneermai

Mangkayarkkarasi is the daughter of the Cho*l*a King;
she is Māni who wears striped bangles in her hands.
She is like Lakshmi seated on the Lotus; She is the great queen
of the Pāndya. She hails and serves daily Siva
whose body blazes like flame.
Siva is the God of all entia; He is the Author of the four
Vedas wḥich He himself explicated.
With His Consort whose eyes roll like beautiful *kayals,*
He is entempled in Ālavāi. Behold it! 1

1313. வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன், வெள்ளை நீறு அணியும்--
கொற்றவன் தனக்கு மந்திரி ஆய--குலச்சிறை குலாவி நின்று ஏத்தும்
ஒற்றை வெள்விடையன், உம்பரார்தலைவன், உலகினில் இயற்கையை ஒழிந்திட்டு
அற்றவர்க்கு அற்ற சிவன், உறைகின்ற ஆலவாய்ஆவதும் இதுவே.

His heart is unattached. When he beholds the servitors
of Siva, he falls at their feet in love and adores them.
He is the Chief Minister of the triumphant Pāndya.
He is yclept Kulacchiṟai who adores Siva in joy.
Siva is the Rider of the white and peerless Bull; He is the God
of gods; He loves those who have given up their attachment
to the phenomenal things and are solely attached to Him.
He who is Siva, is entempled in Ālavāi. Behold it! 2

1314. செந்துவர்வாயாள்--சேல் அன கண்ணாள், சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்து அணை விரலாள்--பாண்டிமாதேவி பணி செய, பார்இடை நிலவும்
சந்தம் ஆர் தரளம், பாம்பு, நீர், மத்தம், தண் எருக்கம்மலர், வன்னி,
அந்தி வான்மதி, சேர் சடைமுடி அண்ணல் ஆலவாய்ஆவதும் இதுவே.

Her lips are rubicund like coral; Her eyes are like *cēls;*
She fosters accrescent love for Siva's holy ash. She is
the great queen of the Pāndya and her fingers sport a flowery
ball. She always serves Siva and causes the world to thrive.
Siva wears on His matted crest the splendorous pearls,
a snake, the Ganga, *ūmattham* flowers, leaves of *vaṉṉi*
and the crepuscular crescent. He, the great Lord,
is entempled in Ālavāi. Behold it! 3

1315. கணங்கள்ஆய் வரினும், தமியராய் வரினும், அடியவர் தங்களைக்
கண்டால்,
குணம்கொடு பணியும், குலச்சிறை பரவும் கோபுரம் சூழ் மணிக் கோயில்--
மணம் கமழ் கொன்றை, வாள்அரா, மதியம், வன்னி, வண் கூவிளமாலை,
அணங்கு, வீற்றிருந்த சடைமுடி அண்ணல்--ஆலவாய்ஆவதும் இதுவே.

When he beholds the advent of Siva's servitors in throngs
        or as single individuals, he bows to them impelled by good
        feelings. Such indeed is Kulacchir̲ai. He ever adores
        ĀlavāI, the delubrum with splendorous towers.
Siva wears on His matted crest the fragrant *kon̲r̲ais*,
        a snake, the crescent, the leaves of *van̲n̲i* and *vilvam*
        and also the Ganga. He is entempled in Ālavāi. Behold it! 4

1316. செய்யதாமரைமேல் அன்னமே அனைய சேயிழை--திருநுதல் செல்வி,
பைஅரவுஅல்குல் பாண்டிமாதேவி--நாள்தொறும் பணிந்து இனிது ஏத்த,
வெய்ய வேல், சூலம், பாசம், அங்குசம், மான், விரி கதிர் மழுஉடன் தரித்த
ஐயனார் உமையோடு இன்புஉறுகின்ற ஆலவாய்ஆவதும் இதுவே.

She who is swan-like is comely like Lakshmi on the Lotus.
She is a bejewelled damsel with a charming forehead.
She whose forelap is like the hood of a cobra of venomous sacs,
        is the great queen of the Pāndya. She duly hails Siva daily
        and serves Him in *bhakti*.
Siva holds a fierce trident, a *pāsam*, a fawn
        and a *mal̲u* of spreading effulgence.
He is our Sire who with His Consort Uma, is happily
        entempled in Ālavāi. Behold it! 5

1317. நலம் இலர் ஆக, நலம்அது உண்டு ஆக, நாடவர் நாடு அறிகின்ற
குலம் இலர் ஆக, குலம்அது உண்டு ஆக, தவம் பணி குலச்சிறை பரவும்--
கலை மலி கரத்தன், மூஇலைவேலன், கரிஉரி மூடிய கண்டன்,
அலை மலி புனல் சேர் சடைமுடி அண்ணல்,--ஆலவாய்ஆவதும் இதுவே.

They may be endowed with good virtues or be without them;
they may belong to any country; they may hail from
a lofty clan well-renowned in the world; their lineage
may not be great! If they are the servitors of Siva,
Kulacchiṟai deems it as his *tapas* to adore them.
Kulacchiṟai is the servitor of servitors. His God is Siva who holds
an antlered deer and a three-leaved spear.
Siva's throat wears a dark patch of venom.
He is mantled in the skin of the Tusker. He is the Great
One whose matted crest holds the Ganga full of waves.
He is entempled in Ālavāi. Behold it! 6

1318. முத்தின் தாழ்வடமும் சந்தனக்குழம்பும் நீறும் தன் மார்பினில் முயங்க,
பத்தி ஆர்கின்ற பாண்டிமாதேவி பாங்கொடு பணிசெய, நின்ற
சுத்தம் ஆர் பளிங்கின் பெருமலைஉடனே சுடர் மரகதம் அடுத்தால் போல்,
அத்தனார் உமையோடு இன்புஉறுகின்ற ஆலவாய்ஆவதும் இதுவே.

The great queen of the Pāndya decked herself with
a dangling margaritaceous garland; she coated
her breasts with the holy ash as her sandal-paste,
and thus adored and hailed Siva, as ordained.
Siva is like a crystal hill juxtaposed with His blissful
Consort who is like a lustrous and emeraldine liana.
He is entempled with Uma in Ālavāi. Behold it! 7

1319. நா அணங்கு இயல்பு ஆம் அஞ்சுஎழுத்து ஓதி, நல்லராய் நல் இயல்பு ஆகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்,-தொழுது எழு குலச்சிறை போற்ற,-
ஏ அணங்கு இயல்பு ஆம் இராவணன் திண்தோள் இருபதும் நெரிதர ஊன்றி,
ஆவணம் கொண்ட சடைமுடி அண்ணல்--ஆலவாய்ஆவதும் இதுவே.

At the advent of the servitors of Siva who chant the mystic
pentad of letters and thus beautify their lips, who
by nature, are holy and who wearer *kovanams*, the beads
of *rudrāksha* and the holy ash which are
symbolic of the Saivite splendour,
Kulacchir̲ai would fall prostrate at their feet
and thus celebrate them and Siva.
Siva, of yore, crushed, by pressing His toe on His Mount,
the twenty arms of Ravaṇa who was proof against
the arrows of his foes. Then when he rued,
Siva, the Great, relented and blessed him.
Siva, indeed, is entempled in Ālavāi. Behold it! 8

1320. மண்எலாம் நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச்சோழன்தன் மகள் ஆம்
பண்ணின் நேர் மொழியாள்--பாண்டிமாதேவி--பாங்கினால் பணி
செய்து பரவ,
விண் உளார் இருவர் கீழொடு மேலும் அளப்பு அரிதுஆம் வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புஉறுகின்ற ஆலவாய் ஆவதும் இதுவே.

She is the daughter of the Chol̲a acknowledged by the world
as the crowned monarch. Her words are tuneful like *paṇ*.
She is the great queen of the Pāndya. She ever hails and adores Siva.
Siva rose up and up as an unbeholdable column of flame
when Vishnu and Brahma went down and up in quest
of Him—all in vain.
The Noble God is entempled with His blissful Uma in Ālavāi. Behold it! 9

1321. தொண்டராய் உள்ளார் திசைதிசைதோறும் தொழுது தன் குணத்தினைக் குலாவக்
கண்டு, நாள்தோறும் இன்புஉறுகின்ற குலச்சிறை கருதி நின்று ஏத்த,
குண்டராய்உள்ளார் சாக்கியர் தங்கள் குறியின்கண் நெறிஇடை வாரா
அண்டநாயகன்தான் அமர்ந்து வீற்றிருந்த ஆலவாய்ஆவதும் இதுவே.

Hearkening to the eulogies of Siva—the God of virtuous
splendour—, by the adoring devotees in all directions,
Kulacchiṟai revels in delight and hails Siva in *bhakti*.
Siva is the God of the cosmos who is beyond the ken of
comprehension of the adipose and obdurate Samaṇas
and the Buddhists that pursue not the true way.
Siva is majestically entempled in Ālavāi. Behold it! 10

1322. பல்-நலம் புணரும் பாண்டிமாதேவி, குலச்சிறை, எனும் இவர் பணியும்
அந் நலம் பெறு சீர் ஆலவாய் ஈசன் திருவடி ஆங்குஅவை போற்றி,
கன்னல் அம் பெரிய காழியுள் ஞானசம்பந்தன் செந்தமிழ் இவை கொண்டு,
இன் நலம் பாட வல்லவர், இமையோர் ஏத்த, வீற்றிருப்பவர், இனிதே.

The two, namely the Pāndyā's great queen blessed with
manifold virtues and Kulacchiṟai, serve Siva becomingly.
Siva of Ālavāī approves of their adorable deeds.
Hailing His divine feet, Gnānasambandhan of the great Kāḻi
dight with sugarcane plantations, has sung in
salvific Tamiḻ these hymns that confer goodly weal.
They that are valiant in these psalms, will abide majestically
in the ethereal world, hailed and adored by Devas. 11

121. திருப் பந்தணைநல்லூர்

புறநீர்மை

1323. இடறினார், கூற்றை பொடிசெய்தார், மதிலை; இவை சொல்லி உலகு
எழுந்து ஏத்த,
கடறினார் ஆவர்; காற்று உளார் ஆவர்; காதலித்து உறைதரு கோயில்
கொடிறனார்; யாதும் குறைவு இலார்; தாம் போய்க் கோவணம்
கொண்டு கூத்துஆடும்
படிறனார் போலும்!--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

121. PANTHAṆAINALLŪR

Paṇ:Puraneermai

Siva kicked to death Yama; He pulverized the hostile walled-citadels.
He is hailed by the world for His glorious deeds.
He abides in the forest; like wind He pervades all.
He is entempled in the beloved Panthaṇainallūr.
He is ever firm; He lacks nothing; clad in a loin-cloh
He goes about dancing. He is a strategist.
He is our Pasupati (the God of souls). 1

1324. “கழி உளார்” எனவும், “கடல் உளார்” எனவும், “காட்டு உளார்”,
“நாட்டு உளார்” எனவும்,
“வழி உளார்” எனவும், “மலை உளார்” எனவும், “மண் உளார்”, “விண்
உளார்” எனவும்,
“சுழி உளார்” எனவும், சுவடு தாம் அறியார், தொண்டர் வாய் வந்தன
சொல்லும்
பழி உளார் போலும்!--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

He is present in the creek; He pervades the main;
He is on earth; He dwells in the ethereal world; in eddies
also He abides; His presence, however, leaves no trace.
His servitors speak of Him as they like.
This, indeed, is His glory as well as blame.
Our Pasupati is entempled in Panthaṇainallūr. 2

1325. "காட்டினார்" எனவும், "நாட்டினார்" எனவும், "கடுந் தொழில்
காலனைக் காலால்
வீட்டினார்" எனவும்," சாந்தவெண்நீறு பூசி, ஓர் வெண்மதி சடைமேல்
சூட்டினார்" எனவும், சுவடு தாம் அறியார், சொல் உள சொல்லும்
நால்வேதப்-
பாட்டினார்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

He is described as a dweller in a jungle, as a country-dweller,
and as the One who kicked to death Yama of fierce deeds.
He is hailed as the One bedaubed with the fragrant white ash,
and as the One of matted crest that sports the white crescent.
Even though He is hailed in multitudinous ways
by the hymns of the four Vedas of which He is the Author,
His identity is not all traceable.
He is our Pasupati entempled in Panthaṇainallūr. 3

1326. முருகின் ஆர் பொழில் சூழ் உலகினார் ஏத்த, மொய்த்த பல்கணங்களின்
துயர் கண்டு,
உருகினார்ஆகி, உறுதி போந்து, உள்ளம் ஒண்மையால், ஒளி திகழ் மேனி
கருகினார் எல்லாம் கைதொழுது ஏத்த, கடலுள் நஞ்சு அமுதமா வாங்கிப்
பருகினார்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

Siva is hailed and adored by the denizens of the world
dotted with splendorous gardens.
Vishnu and other Devas shed tears of compassion, witnessing
the plight of the crowded entia.
Their strong and bright bodies turned murky; these appealed
to Siva—the while their hands folded in adoration—,
to save them and the other sufferers.
At this He quaffed the venom as though it were ambrosia.
He, our Pasupati, is entempled in Panthaṇainallūr. 4

1327. பொன்னின் ஆர் கொன்றை இரு வடம் கிடந்து பொறி கிளர் பூணநூல் புரள,
மின்னின் ஆர் உருவின், மிளிர்வது ஓர் அரவம், மேவு வெண்நீறு மெய் பூசி,
துன்னினார் நால்வர்க்கு அறம் அமர்ந்து அருளி, தொன்மை ஆர்
தோற்றமும் கேடும்
பன்னினார் போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

Siva wears on His chest the garlands woven of huge and auric
kon̲r̲ai flowers in which lie cradled bees that bombilate.
Strands of the sacred thread roll on His chest.
He is adorned with a fulgurant adder; He is coated with
the powder of the white ash.
He taught the sages that approached Him seeking His
explication of the principles of *dharma*. Ancient is His
stature. He evolves and resolves the cosmos now and again.
He, our Pasupati, is entempled in Panthaṇainallūr. 5

1328. "ஒண் பொனார் அனைய அண்ணல் வாழ்க!" எனவும் "உமையவள் கணவன் வாழ்க!" எனவும்,
அண்பினார், பிரியார் அல்லும் நண்பகலும் அடியவர் அடிஇணை தொழவே,
நண்பினார்எல்லாம், "நல்லர்!" என்று ஏத்த, அல்லவர், "தீயர்!" என்று ஏத்தும்
பண்பினார்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

Devotees hail Him thus: "O Chief dazzling like gold, praise be!"
They also praise Him thus: "O the Consort of Uma, praise be!"
Gaining His presence devotees hail His feet twain,
day and night, never parting from them.
The friendly ones hail His goodness; the hostile ones
deem Him evil. Such is the nature of these.
He, indeed, is our Pasupati entempled in Panthaṇainallūr. 6

1329. எற்றினார், ஏதும் இடைகொள்வார் இல்லை, இருநிலம் வான்உலகு எல்லை
தெற்றினார்தங்கள் காரணம்ஆகச் செரு மலைந்து, அடிஇணை சேர்வான்,
முற்றினார் வாழும் மும்மதில் வேவ, மூஇலைச்சூலமும் மழுவும்
பற்றினார்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

The Asuras of the three walled-citadels did away with
the Devas that did no harm to them and also the people on earth.
Only three among them had wrought *tapas* par excellence
and were fit to gain at-one-ment with Siva's feet.
These were spared by Siva who gutted with fire Tripura.
Siva is armed with a three-leaved spear and a *maḻu.*
He is our Pasupati entempled in Panthaṇainallūr. 7

1330. ஒலிசெய்த குழலின் முழவம்அது இயம்ப, ஓசையால் ஆடல் அறாத
கலி செய்த பூதம் கையினால் இடவே, காலினால் பாய்தலும், அரக்கன்
வலி கொள்வர்; புலியின்உரி கொள்வர்; ஏனை வாழ்வு நன்றானும்
ஓர் தலையில்

பலி கொள்வர்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

To uproot the Mount Kailās where dancing takes place
unceasingly, in harmony with the fluten music to which
time is kept by drums, when Ravaṇa placed
his hands beneath the Mount, Siva pressed
His toe on the Mount and crushed the prowess out of Ravaṇa.
Siva is clad in the skin of a tiger; though He is fabulously
opulent, He totes a skull of Brahma's to receive alms.
He is our Pasupati entempled in Panthaṇainallūr. 8

1331. சேற்றின் ஆர் பொய்கைத் தாமரையானும், செங்கண்மால், இவர் இருகூறாத்
தோற்றினார், தோற்றத் தொன்மையை அறியார், துணைமையும்
பெருமையும் தம்மில்
சாற்றினார், சாற்றி, "ஆற்றலோம்" என்ன, சரண் கொடுத்து, அவர்
செய்த பாவம்

பாற்றினார்போலும்--பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியாரே.

Brahma seated on the Lotus growing from the miry *poikai*
and the red-eyed Vishnu, contended for supremacy,
blind to Siva's beginningless manifestation to provide
aid and assistance, and respectively assuming the forms
of a swan and a boar, flew up and up and burrowed
deeper and deeper in quest of Siva's head and feet, all in vain.

Then they took refuge in Siva and confessed their sin.
At this, Siva forgave them.
He, our Pasupati, is entempled in Panthaṇainallur. 9

1332. The Tamil original is not traceable. 10

1333. கல் இசை பூணக் கலை ஒலி ஓவாக் கழுமலமுதுபதிதன்னில்
நல் இசையாளன், புல் இசை கேளா நல்-தமிழ் ஞானசம்பந்தன்,
பல் இசை பகுவாய்ப் படுதலைஏந்தி மேவிய பந்தணைநல்லூர்
சொல் இசைப்பாடல்பத்தும் வல்லவர்மேல், தொல்வினை சூழகிலாவே.

Gnānasambandhan versed in goodly Tamil, hails from the hoary urbs
Kalumalam where the sound of scholars who practise learning
and the sound of practising arts never cease at all.
He whose renown is great, does not listen to futile words.
He has sung these hymns on the God who totes a broken skull
and is entempled in Panthaṇainallūr.
The hoary karma of those that are valiant in these
psalms, will flee away. 11

122. திரு ஓமமாம்புலியூர்

புறநீர்மை

1334. பூங்கொடிமடவாள்உமை ஒருபாகம் புரிதரு சடைமுடி அடிகள்,
வீங்கு இருள் நட்டம்ஆடும் எம் விகிர்தர், விருப்பொடும் உறைவுஇடம் வினவில்--
தேம் கமழ் பொழிலில் செழு மலர் கோதிச் செறிதரு வண்டு இசை பாடும்
ஓங்கிய புகழ் ஆர்--ஓமமாம்புலியூர் உடையவர், வடதளி அதுவே.

122. TIRUŌMAMĀMPULIYŪR

Paṇ: Puraneermai

Siva is concorporate with His Consort who is like a flowery liana;
He is our *Vikirta* of twisted strands of matted hair;
He enacts His dance during dense darkness.
If it be asked where may His beloved shrine be, it is
Vaṭathaḷi hailed and adored by Devas, at the loftily-
renowned Ōmamāmpuliyūr girt with honey-fragrant
gardens where swarm bees that kindle the splendorous
blossoms and sweetly bombilate. 1

1335. சம்பரற்கு அருளி, சலந்தரன் வீயத் தழல் உமிழ் சக்கரம் படைத்த
எம்பெருமானார், இமையவர் ஏத்த, இனிதின் அங்கு உறைவுஇடம்
வினவில்--
அம்பரம் ஆகி அழல் உமிழ் புகையின் ஆகுதியால் மழை பொழியும்,
உம்பர்கள் ஏத்தும்--ஓமமாம்புலியூர் உடையவர், வடதளிஅதுவே.

Siva graced the Asura hight Sambara; He crafted
the fire-spitting procket wheel with which He killed Jaladara.
If it be asked where may His beloved shrine be, it is
Vaṭathaḷi hailed and adored by Devas, at Ōmamāmpuliyūr
where the smoke arising from the sacrificial fire,
fed with oblations, forms clouds whence pours down rain. 2
Here gather the supernals to pay obeisance to Siva.

1336. பாங்கு உடைத் தவத்துப் பகீரதற்கு அருளிப் படர்சடைக் கரந்த
நீர்க்கங்கை
தாங்குதல் தவிர்த்து, தராதலத்து இழித்த தத்துவன் உறைவுஇடம்
வினவில்--
ஆங்கு எரிமூன்றும் அமர்ந்து உடன் இருந்த அம் கையால் ஆகுதி வேட்கும்
ஓங்கிய மறையோர்--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அதுவே.

For the sake of the tapaswi Bhagirata, Siva was pleased
to permit a modicum of the Ganga's flood held
in His matted crest to descend down on the earth.
Siva indeed is the Truth. If it is asked where may
His shrine be, it is Vaṭathaḷi in Ōmamāmpuliyūr
where the loftily-renowned Vedic Brahmins thrive,
foster the three fires and perform the ordained
sacrifices offering into their fire-pits,
with their beauteous hands, *havis* galore. 3

1337. புற்று அரவு அணிந்து, நீறு மெய் பூசி, பூதங்கள் சூழ்தர, ஊர்ஊர்,
பெற்றம் ஒன்று ஏறிப் பெய் பலி கொள்ளும் பிரான் அவன் உறைவு
இடம் வினவில்--
கற்ற நால்வேதம் அங்கம்ஓர்ஆறும் கருத்தினார் அருத்தியால்-தெரியும்
உற்ற பல்புகழார்--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளிஅதுவே.

God Siva is adorned with the serpent that dwells in
the deserted ant-hill; His body is coated with the ash.
Encircled by His Bhūtas and riding His Bull, He goes
forth soliciting and receiving alms in every urbs.

If it be asked where may His shrine be, it is at Vaṭathaḷi
in Ōmamāmpuliyūr where thrive the Vedic Brahmins
who are famous and who are valiant to actualise
the import of the four Vedas and their Angas. 4

1338. நிலத்தவர், வானம் ஆள்பவர், கீழோர், துயர் கெட, நெடிய மாற்கு அருளால்,
அலைத்த வல் அசுரர் ஆசு அற, ஆழி அளித்தவன் உறைவுஇடம் வினவில்--
சலத்தினால் பொருள்கள் வேண்டுதல் செய்யாத் தன்மையார்,
நன்மையால் மிக்க
உலப்பு இல் பல்புகழார்,--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளிஅதுவே.

It is Siva who gifted His procket wheel to Vishnu so that
he could destroy the fierce Asuras who caused
troubles to the dwellers of the earth, of the ethereal world
and of the nethermost world.
If it be asked where may His shrine be, it is Vaṭathaḷi
in Ōmamāmpuliyūr where thrive the ones of good deportment
who seek not aught through deception and who
abound in auspicious foison and are of fadeless glory. 5

1339. மணம் திகழ் திசைகள்எட்டும், ஏழ்இசையும், மலியும் ஆறுஅங்கம் ஐவேள்வி,
இணைந்த நால்வேதம், மூன்றுஎரி, இரண்டுபிறப்பு, என ஒருமையால்
உணரும்
குணங்களும், அவற்றின் கொள் பொருள் குற்றம் மற்று அவை உற்றதும்,
எல்லாம்
உணர்ந்தவர் வாழும் ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அதுவே.

Siva is entempled in Vaṭathaḷi at Ōmamāmpuliyūr where
flourish the great ones whose glory pervades the eight
directions and the sevenfold music.
Eke are they the cultivators of the six Angas, of the five
sacrifices of the four Vedas and the three fires.
These are the twice-born who by their single-minded
concentration have gained the knowledge of good and evil. 6

1340. The original Tamil verse is not extant. 7

1341. தலைஒருபத்தும் தடக்கைஅது இரட்டி தான் உடை அரக்கன் ஒண்கயிலை
அலைவது செய்த அவன் திறல் கெடுத்த ஆதியார் உறைவுஇடம் வினவில்--
மலை என ஓங்கும் மாளிகை நிலவும் மா மதில் மாற்றலர் என்றும்
உலவு பல்புகழ் ஆர்--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளிஅதுவே.
Siva crushed the ten heads and the twenty broad arms
of the Asura who durst uproot the radiant Mount Kailās,
and thus did away with his prowess.
If it be asked where may the shrine of the Primal Ens be,
it is at Vaṭathaḷi in Ōmamāmpuliyūr dight with
hill-like and lofty mansions and girt with huge walls.
Here do flourish the great ones of undiminishing
opulence, whose glories are multitudinous. 8

1342. கள் அவிழ் மலர்மேல் இருந்தவன், கரியோன், என்று இவர் காண்பு அரிதுஆய
ஒள்எரி உருவர் உமையவளோடும் உகந்து இனிது உறைவுஇடம் வினவில்--
பள்ள நீர் வாளை பாய்தரு கழனி, பனிமலர்ச்சோலை சூழ் ஆலை,
ஒள்ளிய புகழ் ஆர்--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அதுவே.

Siva stood as the unbeholdable and effulgent column
of flame unto Brahma seated on the melliferous Lotus
and the dark-complexioned Vishnu.
If it be asked where may the shrine of Siva who is
concorporate with Uma,be, it is in Vaṭathaḷi at Ōmamāmpuliyūr
rich in the wealth of down-flowing water that feeds
the fields where thrive the leaping *vāḷais;* eke is it
girt with cool and flowery gardens. Here are sugarcane presses.
Here flourish great ones robed in radiant glory. 9

1343. தெள்ளியர் அல்லாத் தேரரொடு அமணர், தடுக்கொடு சீவரம் உடுக்கும்
கள்ளம் ஆர் மனத்துக் கலதிகட்கு அருளாக் கடவுளார் உறைவுஇடம்
வினவில்--
நள்இருள் யாமம் நால்மறை தெரிந்து, நலம் திகழ் மூன்று எரி ஓம்பும்
ஒள்ளியார் வாழும்--ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அதுவே.

The Buddhists whose brains are not lucid, are
shrouded in ochre-robes; the Samaṇas are clad in mats.
These are the base whose *manams* are furtive. Siva graces them not.
If it be asked where may the shrine of Siva be, it is in
Vaṭathaḷi at Ōmamāmpuliyūr where dwell the Vedic Brahmins
well versed in the four Vedas who chant the divine mantras
as ordained during midnight and other junctions of the day.
These of pellucid and radiant *manams* foster the weal-conferring triad
of fires. 10

1344. விளைதரு வயலுள் வெயில் செறி பவளம் மேதிகள் மேய்புலத்து இடறி
ஒளிதர மல்கும் ஓமமாம்புலியூர் உடையவர் வடதளி அரனை,
களி தரு நிவப்பின் காண்தகு செல்வக் காழியுள் ஞானசம்பந்தன்,
அளிதரு பாடல்பத்தும் வல்லார்கள், அமரலோகத்து இருப்பாரே.

In its well-yielding fields are corals aplenty that
blaze like the sun's rays. Here the grazing buffaloes get tripped.
Radiant is Ōmamāmpuliyūr; here is Hara's Vaṭathaḷi.
On Him, Gnānasambandhan of Kāḻi the opulence of
which enchants its beholders, has sung these hymns
suffused with grace. They that are valiant in these
psalms will inhabit the ethereal world. 11

123. திருக் கோணமலை புறநீர்மை

1345. நிரை கழல் அரவம் சிலம்புஒலி அலம்பும் நிமலர், நீறு அணி திருமேனி
வரை கெழு மகள் ஓர்பாகமாப் புணர்ந்த வடிவினர், கொடி அணி
விடையர்--
கரை கெழு சந்தும் கார் அகில் பிளவும் அளப்ப(அ)ருங் கன மணி வரன்றி,
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே.

123. TIRUKKŌṆAMALAI Paṇ:Puraneermai

Siva's *kaḻal* and *cilampu* tinkle and jingle; He is
adorned with a snake; He is *Nimala* whose divine body
is bedaubed with the holy ash.
He is concorporate with the Daughter of Himavant. His flag
sports the signum of the Bull—His mount.

He is entempled in the great Kōṇamāmalai to whose shore
the roaring waves of the main push sandalwood,
broken eaglewood, gems galore and pearls. 1

1346. கடிதுஎன வந்த கரிதனை உரித்து அவ் உரி மேனிமேல் போர்ப்பர்,
பிடி அன நடையாள் பெய் வளை மடந்தை பிறைநுதலவளொடும்
உடன்ஆய--
"கொடிது" எனக் கதறும் குரைகடல் சூழ்ந்து கொள்ள, முன் நித்திலம் சுமந்து,
குடிதனை நெருங்கிப் பெருக்கம்ஆய்த் தோன்றும்--கோணமாமலை
அமர்ந்தாரே.

Siva tore the skin of the Tusker that, in all celerity, confronted
Him, and mantled His body with that skin.
He is concorporate with His Consort whose gait is
like unto the she-elephant's; She is bebangled and Her
forehead is like unto the (curved) crescent.
He is entempled in the great Kōṇamāmalai to which,
the raging waves deemed dreadful, carry pearls
to the shore, that are gathered by the citizens. 2

1347. பனித்த இளந்திங்கள் பைந்தலை நாகம் படர்சடைமுடிஇடை வைத்தார்,
கனித்து இளந் துவர்வாய்க் காரிகை பாகம்ஆக முன் கலந்தவர், மதில்மேல்
தனித்த பேர் உருவ விழித் தழல் நாகம் தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்தது ஓர் வில்லார்--குரைகடல் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே.

On His spreading matted hair, Siva bears the moist
and young moon and the snake of bright hood.

Siva is concorporate with His Consort whose lips
are rubicund like the ripe fruit.
With the strong Mount Mēru as His bent bow,
and the serpent Vāsuki as its string and the Agni-tipt
arrow, He gutted with fire the three walled-citadels.
He is entempled in the great Kōṇamāmalai-upon-the roaring sea. 3

1348. பழித்த இளங் கங்கை சடை இடை வைத்து, பாங்கு உடை மதனனைப் பொடியா
விழித்து, அவன்தேவி வேண்ட, முன் கொடுத்த விமலனார்; கமலம் ஆர் பாதர்--
தெழித்து முன் அரற்றும் செழுங் கடல்-தரளம் செம்பொனும் இப்பியும் சுமந்து,
கொழித்து, வன் திரைகள் கரைஇடைச் சேர்க்கும் கோணமாமலைஅமர்ந்தாரே.

To put to shame the Ganga that descended amain,
Siva received it and held it in His matted hair.
He stared to death the handsome Manmata; then when his wife
implored Him He recussitated him and made
him visible only to her.
He is entempled in the great Kōṇamāmalai to whose shore
the dinsome waves of the main carry splendorous pearls,
ruddy gold, shells and the like in abundance. 4

1349. "தாயினும் நல்ல தலைவர்!" என்று அடியார் தம் அடி போற்று இசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்று அகலா மாண்பினர், காண் பலவேடர்,
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர்--ஞாலம்
கோயிலும் சுனையும் கடல்உடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே.

Siva's servitors hymn Him as the Chief of gods who is
more merciful than one's own mother.
He, the Noble One, does not part from the lips and the *manams*
of His devotees. He is the Saviour who averruncates
the maladies and the fetters of His worshippers.
He wears on His chest the sacred thread.
In orbis terrarum He is entempled in the great
Kōṇamāmalai upon-the main dight with springs. 5

1350. பரிந்து நல் மனத்தால் வழிபடும் மாணிதன் உயிர்மேல் வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்து, அவற்கு அருளும் செம்மையார்; நம்மை
ஆள்உடையார்--
விரிந்து உயர் மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண் செருந்தி,
செண்பகத்தின்,
குருந்தொடு, முல்லை, கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலைஅமர்ந்தாரே.

In unison with the dictum which says that Kārmic consequences
cannot assail the true adorers, Siva kicked to death Yama
who strode forth to snatch the life of Mārkandēya, the great
worshipper whose *manam* was firmly poised in profound
bhakti. Thus did Siva, the God of rectitude, bless him.
He is our Ruler who is entempled in the great Kōṇamāmalai
girt with gardens where thrive the trees and plants of
the spreading and lofty *mauval. mātavi, punnai, vēnkai,*
the liberal *serunti, champak, kuruntu*
as well as the liana of *mullai.* 6

7

1351. The Tamil original is not extant.

1352. எடுத்தவன் தருக்கை இழித்தவர், விரலால்; ஏத்திட ஆத்தம் ஆம் பேறு
தொடுத்தவர்; செல்வம் தோன்றிய பிறப்பும் இறப்பு அறியாதவர்; வேள்வி
தடுத்தவர்; வனப்பால் வைத்தது ஓர் கருணை தன் அருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர்; விரும்பும் பெரும் புகழாளர்--கோணமாமலை அமர்ந்தாரே.

Siva crushed the hauteur of Ravaṇa who durst uproot
His Mount Kailās, by pressing His toe on the Mount.
Then when he rued, He blessed him.
He is the Opulent One who is without birth and death.
He devastated the (sinful) sacrifice of Daksha.
He is concorporate with His pulchritudinous Consort.
Borne by mercy, He blessed His devotees with the goodly
life suffused with His glorious grace.
Great, indeed, is His renown, hailed by one and all.
He is entempled in the great Kōṇamāmalai. 8

1353. அருவராது ஒரு கை வெண்தலை ஏந்தி; அகம்தொறும் பலிஉடன் புக்க
பெருவராய் உறையும் நீர்மையர்; சீர்மைப் பெருங்கடல்வண்ணனும், பிரமன்,
இருவரும் அறியா வண்ணம் ஒள்எரிஆய் உயர்ந்தவர்; பெயர்ந்த நல் மாற்கும்
குருவராய் நின்றார், குரைகழல் வணங்க;--கோணமாமலை அமர்ந்தாரே.

Siva's glory consists in His toting, without abhorrence,
the white skull of Brahma's receiving alms in it
in every house and eating it.
When Vishnu who slumbers on the splendorous sea
and Brahma went in quest of Him, He soared up and up
as a blazing column of flame unbeholdable by them.

When Vishnu gouged His eye and offered it to Siva,
in lieu of a flower, He bcame the very guru of Vishnu.
He is entempled in the great Kōṇamāmalai for His bhaktas'
adoration of His feet fastened with summoning anklets. 9

1354. நின்று உணும் சமணும், இருந்து, உணும் தேரும், நெறிஅலாதன புறம்கூற,
வென்று நஞ்சு உண்ணும் பரிசினர்; ஒருபால் மெல்லியலொடும் உடன்ஆகி--
துன்றும் ஒண் பௌவம் மவ்வலும் சூழ்ந்து தாழ்ந்து உறு திரைபல மோதிக்
குன்றும் ஒண் கானல் வாசம் வந்து உலவும் கோணமாமலை அமர்ந்தாரே.

The Samanas eat standing; the Buddhists eat seated.
These backbite Siva using unbecoming words. Siva is the glorious
God who quaffed the oceanic venom and saved the Devas.
He is concorporate with His Woman of soft mien.
He is entempled in the great Kōṇamāmalai girt with *mallikai* gardens.
From its foreshore gardens laved by the water of the main,
wafts the gentle gale laden with suaveolence. 10

1355. குற்றம்இலாதார் குரைகடல் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரை,
கற்று உணர் கேள்விக் காழியர்பெருமான்--கருத்து உடை ஞானசம்பந்தன்--
உற்ற செந்தமிழ் ஆர் மாலைஈர்-ஐந்தும் உரைப்பவர், கேட்பவர், உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்; தோன்றுவர், வான்இடைப்
பொலிந்தே.

On the God of the great Kōṇamāmalai-upon-the roaring sea
where dwell blemishless devotees, Gnānasambandhan,
the Prince of Kaḻi, the one blessed with the knowledge
of scriptures and gnosis, has sung these ten
garlands of hymns in chaste Tamiḻ.

They that recite these psalms and they that listen to such
recitation are, in truth, the lofty ones.
As they have become the kin of Siva, hoary karma
will not touch them at all.
They will, it is certes, gain ascension to the supernal world
and thither abide for ever in wondrous splendour. 11

124. திருக் குருகாவூர் வெள்ளடை அந்தாளிக்குறிஞ்சி

1356. சுண்ணவெண் நீறு அணி மார்பில்-தோல் புனைந்து
எண்ண (அ)ரும் பல்கணம் ஏத்த, நின்று ஆடுவர்--
விண் அமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண் அமர் மேனி எம் பிஞ்ஞகனாரே.

124. TIRUKKURUKĀVŪR VĒḶḶAṬAI Anthālikkuṟinchi

Siva's chest is adorned with the powder of white holy ash;
His chest is covered by skin; He is surrounded by
Bhūtas galore; it is thus He enacts His dance.
He is Pinggnaka; He is concorporate with His Woman.
He is entempled in Veḷḷaṭai girt with sky-vaulting
and cool gardens abounding in suaveolence. 1

1357. திரை புல்கு கங்கை திகழ் சடை வைத்து,
வரைமகளோடு உடன்ஆடுதிர்--மல்கு
விரை கமழ் தண்பொழில் வெள்ளடை மேவிய
அரை மல்கு வாள்அரவு ஆட்டு உகந்தீரே!

O God entempled in Veḷḷaṭai girt with cool
and fragrant gardens! You rejoice to cause
the bright snake that cinctures Your waist, to dance.
Bearing the billowy Ganga on Your radiant matted crest
You dance with Her—the Daughter of Himavant. 2

1358. அடையலர் தொல்-நகர்மூன்று எரித்து, அன்ன-
நடை மடமங்கை ஓர் பாகம் நயந்து,
விடை உகந்து ஏறுதிர்--வெள்ளடை மேவிய
சடை அமர் வெண்பிறைச் சங்கரனீரே!

O Siva, You gutted with fire the three hostile
and hoary, walled-citadels.
You are happily concorporate with Your Woman
whose gait is like unto the pen's.
You ride in joy the Bull—Your mount.
You Sankara whose matted hair displays the white
crescent, are entempled in Veḷḷaṭai. 3

1359. வளம் கிளர் கங்கைமடவரலோடு
களம் பட ஆடுதிர், காடு அரங்குஆக;--
விளங்கிய தண்பொழில் வெள்ளடை மேவிய
இளம்பிறை சேர் சடை எம்பெருமானே!
Adorned with the uberous and splendorous Ganga on Your crest,
You enact Your dance in the crematory—Your forum.
O God of matted hair! Your crest sports the young
moon; You are entempled in Veḷḷaṭai 4
girt with cool and splendorous gardens.

1360. கரிகுழல் நல்ல துடியிடையோடு
பொரி புல்கு காட்டுஇடை ஆடுதிர், பொங்க;--
விரிதரு பைம்பொழில் வெள்ளடை மேவிய
எரி மழுவாள்படை எந்தைபிரானே!

O our Sire and God, Your weapon is the blazing *malu*.
With Your Consort whose coiffure is curly and whose waist
is *tudi*-like, You dance in the singed crematory.
You are entempled Kurukāvur's Veḷḷaṭai girt with
ever-green and extensive gardens. 5

1361. காவிஅம்கண்மடவாளொடும் காட்டுஇடைத்
தீஅகல் ஏந்தி நின்று ஆடுதிர்--தேன்மலர்
மேவிய தண்பொழில் வெள்ளடை மேவிய
ஆவினில்ஐந்துகொண்டு ஆட்டு உகந்தீரே!

O Siva, You rejoice in Your ablutions made up
of the five products of kine.
Holding fire in a bowl, You dance with Your bashful
Woman whose eyes are blue lilies, in the crematory.
You are entempled in Veḷḷaṭai girt with cool gardens
abounding in melliferous blossoms. 6

[The Tamil verses following the above verse are not extant.]

125. திரு நல்லூர்ப்பெருமணம் அந்தாளிக்குறிஞ்சி

1362. கல் ஊர்ப் பெரு மணம் வேண்டா--கழுமலம்
பல்ஊர்ப் பெரு.மணம் பாட்டு மெய் ஆய்த்தில!--
சொல் ஊர்ப் பெரு மணம் சூடலரே! தொண்டர்
நல்லூர்ப்பெருமணம் மேய நம்பானே!

125. TIRUNALLŪRPPERUMAṆAM Anthālikkurinchi

O the most desirable God of Nallūrpperumaṇam!
I desire not the grand wedding in which the bridegroom
holding the foot of his bride, causes her take
seven steps on the grinding stone.
The songs I have sung so far in Kaḻumalam
and other places, will, alas, stand falsified.
They will no longer be hailed by Your servitors. 1

1363. தரு மணல் ஓதம் சேர் தண்கடல் நித்திலம்
பரு மணலாக் கொண்டு, பாவைநல்லார்கள்
வரும் மணம் கூட்டி, மணம் செயும் நல்லூர்ப்-
பெருமணத்தான் பெண் ஓர்பாகம் கொண்டானே!

With pearls heaped on the sand-dunes by the waves
of the sea, doll-like girls build toy-houses
and celebrate imaginary connubia, in the foreshore
of Nallūrpperumaṇam. 2
The God of Nallūr is concorporate with His Consort.

1364. அன்புஉறு சிந்தையராகி, அடியவர்
நன்புஉறு நல்லூர்ப்பெருமணம் மேவி நின்று,
இன்புஉறும் எந்தை இணை அடி ஏத்துவார்
துன்புஉறுவார்அல்லர்; தொண்டு செய்வாரே.

By reason of their Siva bhakti, His righteous devotees
are linked with all entia in an ineluctable sodality.
These always hail the feet twain of Siva—our God.
These will never be troubled at all; these but render
service to Siva and His servitors. 3

1365. வல்லியந்தோல் உடை ஆர்ப்பது; போர்ப்பது
கொல் இயல் வேழத்து உரி; விரி கோவணம்--
நல் இயலார் தொழு நல்லூர்ப்பெருமணம்
புல்கிய வாழ்க்கை எம் புண்ணியனார்க்கே.

Siva is clad in the skin of a fierce tiger; He is mantled
in the peeled-off skin of a murderous Tusker;
He wears a broad loin-cloth.
He is entempled in Nallūrpperumaṇam for the adoration
of His devotees whose nature is compact of sheer goodness.
Siva, the holy God, is the role-model unto His devotees. 4

1366. ஏறு உகந்தீர்; இடுகாட்டு எரிஆடி, வெண்-
நீறு உகந்தீர்; நிரை ஆர் விரி தேன்கொன்றை
நாறு உகந்தீர்--திரு நல்லூர்ப்பெருமணம்
வேறு உகந்தீர்! உமை கூறு உகந்தீரே!

